53% 8:23 PM
https://drive.google.com/file

பாகம் - 22

தன் மனைவியை அழைத்து வர வேண்டும்.... இன்றே அவளுடனான தன்னுடைய இல்லற வாழ்க்கையைத் துவங்கி விட வேண்டும் என்ற உறுதியோடு அதி வேகமாகக் காரை செலுத்தியவன் வழக்கத்தை விட விரைவாகக் கடலூரை அடைந்தவன் திவ்யாவின் வீட்டு விலாசத்தைக் கேட்க வினோத்திற்கு அழைத்தான்...

வினோத்தின் அலை பேசியில் அர்ஜூனின் எண் ஒளிர்வதைப் பார்த்த வினோத்திற்கு ஒரு பக்கம் "மஹாவைப் பற்றிப் பேச அழைத்திருப்பாரோ அத்தான்??" என்ற எண்ணம் அவனின் மனதில் அதிகப்பட்ச திகிலை உருவாக்கினாலும், "ஒரு வேளை அது திவ்யா சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்து அவளைத் தன்னுடன் அவர் அழைத்துச் செல்வதற்கான அழைப்பாக இருந்தால் எத்தனை சந்தோஷம்" என்ற நிம்மதி உணர்வும் வரவே செய்தது...

அழைப்பை எடுத்தவனுக்கு அவன் எதிர்பார்த்தது போல் பூரிப்பு ஏற்படுத்தும் விதத்தில் அர்ஜூன் தான் கடலூருக்கு வந்திருப்பதாகவும் அவர்கள் வீட்டிற்கு வரப் போவதாகவும் தெரிவித்தவன், அவர்களின் வீட்டிற்கு வழியைக் கேட்க, அது வரை அவர்களை எப்படிச் சேர்த்து வைப்பது என்று குழப்பத்தில் இருந்து வந்த வினோத்திற்கு மனம் தணிந் ஏதோ சுமை இறங்கியது போன்று இருந்தது...

அர்ஜூன் திவ்யாவை தேடி வந்திருப்பதை அறிந்ததும்...

COPYRIGHTED

53% 8:24 PM
https://drive.google.com/file

ஆனால் திவ்யாவின் நேரம் அவள் தன் வீட்டில் இல்லாமல் தங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள அவர்களின் அத்தை வீட்டில் இருக்கிறாள் என்றும் வினோத் கூற, "ஏன்? எதற்கு அங்கு இருக்கிறாள்?" என்று கேள்விகள் அர்ஜூனின் மனதில் குடைய,

"ஏன் வினோத்? உங்கள் விட்டில் ஏதாவது பிரச்சனையா??" என்றான் குழப்பத்துடன்...

ஒவ்வொரு முறை தான் வெளியூருக்குச் செல்லும் பொழுது வாயிலில் நின்றவாறே தன் கார் அவளின் கண்களில் இருந்து மறையும் வரையிலு விழிகளில் நீர் கோர்த்திருக்க, உதிர்க்க விரும்பிய வார்த்தைகளை உதிர்க்காமலே மனதிற்குள் பூட்டி வைத்து, குமுறிக் கொண்டிருந்த இதயத்தை மௌனமான அலறலுடன் அடக்கி வைத்து, தன் கணவன் தன்னிடம் திரும்பி வந்துவிட மாட்டானா என்று அமைதியற்று அவனுடன் செல்ல துடிக்கும் கால்களைக் கட்டுப்படுத்தி அவள் நின்று இருக்கும் விதமே அர்ஜூனிற்கு உணர்த்தியிருந்தது தன்னவளுக்குத் தன்னைப் பிரியும் வலியை....

தற்காலிக பிரிவையே தாங்க முடியாமல் இதயம் சுக்கள் சுக்களாக உடைந்து ஊமையாக அழும் தன் மனைவி, தான் அவளை விவாகரத்துச் செய்யப் போவதாகக் கூறியதும் அழுத விழிகளுடனே கடிதத்தையும் எழுதி வைத்துவிட்டு வந்தவள் ஒரு வேளை மனதை அழுத்தியிருந்த உளைச்சல் தாங்காமல் வேறு ஏதேனும் முடிவு எடுக்க முயன்றிருந்தால்?

அதனால் தான் அவளை அவர்கள் வீட்டில் தங்க வைக்காமல் வேறு எங்கேயோ வைத்திருக்கிறார்களோ என்று அந்தச் சில நிமிடங்களிலேயே அர்ஜூனின் மனதில் ஆயிரம் கலவரங்கள்...

COPYRIGHTED

8:24 PM 53%
https://drive.google.com/file

ஆனால் அவன் உள்ளத்தின் கலவரங்களை அடக்கி, அதற்குப்பதில் மனம் முழுவதும் உஷ்ணத்தையே கிளப்பியது அர்ஜுனின் கேள்விக்கு வினோ சொன்ன பதில்....

"இல்லை அத்தான்... எங்க அத்தை வீட்டில் இன்று ஒரு சின்ன விஷேஷம்... அதனால் திவ்யா அம்மாவோட அங்க போயிருக்கா"

"அவள் வீட்டை விட்டு வெளியே சென்றதில் இருந்து வீட்டில் எத்தனை பிரச்சனைகள்... அவள் லெட்டரைப் படிச்சுட்டு ஹார்ட் அட்டாக் வந்து மா ஹாஸ்பிட்டலில் அட்மிட் ஆகிருக்காங்க... நான் அப்படி அநாகரிகமாக நடந்துக்கிட்டதனால, கடுமையான வார்த்தைகளைப் பேசி அவளைக் காயப்படுத்தி இருந்ததனால வேறு ஏதாவது தப்பான முடிவுக்குப் போயிருவாளோன்னு எனக்கு எவ்வளவு கலக்கம்... அவளை ஒரு நாள் கூடப் பிரிஞ்சிருக்க முடியாமல் எல்லா வேலைகளையும் விட்டுட்டு வாழ்க்கையில் முதல் முறையா ஒரு பெண்ணைத் தேடி வந்திருக்கேன்.. ஆனால் இவள் என்னவென்றால் விஷேஷத்திற்குப் போயிருக்கிறாளாமே?" என்று மனம் கொந்தளிக்க,

"ஒரு வேளை நான் அவசரப்பட்டு அவளைக் கூப்பிட வந்துட்டேனோ? எனக்கு இருப்பது போல் அவளுக்கு அப்படி ஒன்னும் என்னைப் பிரிஞ்சிருக்கிற கவலை இல்லையோ?" என்று நினைத்தவனுக்குப் பேசாமல் சென்னைக்குத் திரும்பி விடுவோமா என்ற எண்ணம் கூட வந்தது...

அர்ஜுனின் மௌனம் வினோத்திற்கு எதனையோ உணர்த்த சட்டென்று சுதாரித்தவன்....

"அத்தான் நீங்க இப்போ எங்க இருக்கீங்கன்னு சொல்லுங்க, நானே அங்க வருகிறேன்.... நீங்க என்னை ஃபாலோ பண்ணி இங்க வீட்டுக்கு வரலாம்" என்க,

COPYRIGHTED

53% 8:24 PM
https://drive.google.com/file

சரி என்றவன் தான் இருக்கும் இடத்தைச் சொல்லி வினோத்திற்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்...

காத்திருக்கும் ஒவ்வொரு நொடியும் திவ்யாவின் மேல் சீற்றத்தையும் மனதில் கடுமையுமே கிளறிக் கொண்டிருந்தது...

தன் அன்னை இவ்வாறு உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருக்கும் பொழுது மனைவியைத் தேடி தான் இவ்வளவு தூரம் வந்திருப்பது என்னவோ அந்த நிமிடம் மனதிற்கு உறுத்தலாக இருக்க, மானசீகமாகத் தன்னைத் திட்டிக் கொண்டவனின் கண்களில் அவன் காருக்கு அருகிலே இருந்த ஒளி பிரதி கடை தென்பட்டது...

சில நிமிடங்கள் எதனையோ யோசித்தவன் முகத்தில் இள முறுவலுடன் சட்டென்று காரில் இருந்து இறங்கி கடையில் உள்ளே சென்றவன் எதனையோ அச்சடிக்கச் சொல்லி முடித்தவுடன் அதனைத் தன் சட்டையின் உள்ளே சொருகியபடி காரில் வந்து அமர்ந்தவனின் முகத்தில் அத்தனை பரிகாசம்...

அதற்குள் அர்ஜூனின் காரை கண்டுப்பிடித்த வினோ தன் வண்டியை காருக்கு அருகில் நிறுத்தி அவனின் நலன் விசாரித்த பிறகு தன்னைப் பி
தொடர சொல்ல, வினோத்தின் வாகனத்தைப் பார்த்த அர்ஜூன்,

"வினோத், நீங்க வேண்டுமோனால் என்னோட கார்ல வாங்களேன்.... பிறகு நீங்க உங்க வண்டிய எடுத்துக்கங்க" என்றான்...

ஏனெனில் வினோத்தின் வண்டி அப்படி ஒரு பழைய வண்டி... அர்ஜூனுக்கு எப்படி அந்த வண்டியை தொடர்ந்து, அதுவும் இந்தக் குறுகளான தெருக்களில் செல்வது என்று இருந்தது.

COPYRIGHTED

53% 8:24 PM
https://drive.google.com/file

அது வரை அர்ஜூனின் காரை வெளியில் இருந்தே பார்த்து ஏங்கியிருந்த வினோத்திற்கு அர்ஜூன் தன்னைத் தன் காரில் வரச் சொன்னதும் மனம் குதூகலிக்க உடனே சரி என்றவன், காரில் ஏறி அமர காரின் உள் பக்கத்தைப் பார்த்தவன் அந்த நொடியே காதலில் விழுந்துவிட்டான் அந்தக் காரின் மேல்...

சில நிமிடங்கள் எதுவும் பேசாமல் இருந்த வினோத்தைப் பார்த்த அர்ஜூன் "ஷேல் வி கோ?" என்க,

அப்பொழுது தான் அர்ஜூனை கவனித்தான் வினோத்...

வெளிர் நீல நிற முழுக்கை சட்டை அணிந்து... ஏதோ மீட்டிங்கில் இருந்து நேரே வந்திருப்பார் போல... கட்டியிருந்த டையை லூசாக இறக்கி விட்டிருந்தவன் சட்டையின் மேல் பட்டனை கழட்டி விட்டு, முழுக்கை சட்டையைக் கை முட்டி வரை மேலேற்றிக் கம்பீரமாக இருந்தவனின் இடது கையில் ரோலக்ஸ் கைக் கடிகாரம், வலது கையில் ப்ளாட்டின ப்ரேஸ்லட், Gucci ப்ராண்ட் ஸன் க்ளாஸ் என்று ஆளை அசத்த, அந்தச் சூழ்நிலையிலும் தன் தங்கையை நினைத்து வினோத்திற்குப் பெருமையாகவே இருந்தது....

"அப்பா முருகா, எப்படியாவது திவ்யாவிற்கும் அத்தானுக்கும் இடையில் உள்ள பிரச்சனையைத் தீர்த்து வச்சு அவர்களை ஒன்னு சேர்த்து வைப்பா என்று மனது உருக தன் அன்பு தங்கைக்காக வேண்டிக் கொண்டான்.

காரை கிளப்பி வினோத் சொல்லும் பாதையில் பயணிக்க, அர்ஜூனிற்குச் சில நிமிடங்களுக்கு ஒரு முறை அலை பேசியில் அழைப்பு வந்து கொண்டிருந்தது...

COPYRIGHTED

8:24 PM
https://drive.google.com/file

அவற்றை எல்லாம் காரின் டேஷ்போர்டில் ஒளிர்ந்த எண்களில் இருந்து யாரென்று கணித்து அழைப்புகளை எடுக்காமல் வந்த அர்ஜூன், ஒரே ஒரு அழைப்பை மட்டும் எடுத்தான்.....

மறு முனையில் சொன்ன தகவலைக் கேட்டுக் கோபம் தலைக்கு ஏற, வேறு ஒரு எண்ணிற்கு அழைத்தவன்...

"என்ன மிஸ்டர் மாதவன்? இந்த வருஷம் காண்ட்ராக்ட அந்தப் பார்டிக்கிட்ட க்ளோஸ் பண்ணியிருக்கீங்க போல?? அதுவும் வெறும் பதினெட்டு கோடி வித்தியாசத்தில? என்ன பத்தி நல்லா தெரியும்... இதனால உங்களுக்கு என்ன இழப்பு நேரிடும்னு உங்களுக்கு நல்லாவே தெரியும்... தெரிஞ்சும் திரும்பத் திரும்ப ஏன் என் பாதையில் க்ராஸ் பண்ணுறீங்க? நான் எப்போதும் போல ஒரே மாதிரி இருக்க மாட்டேன் மிஸ்டர் மாதவன்.... எலெக்ஷன் நேரம் வேற நெருங்குது... அப்புறம் இது வேண்டும் அது வேண்டும்னு என்னோட ஆபிஸில் வந்து நின்னீங்கன்னா மினிஸ்டர்னு கூடப் பார்க்க மாட்டேன்... பின்னாடி வருத்த படாதீங்க" என்று மென்மையாக ஆனால் அதே சமயம் அழுத்தமான குரலில் எச்சரிப்பதைப் போல் கூற,

அர்ஜூனின் குரலில் தெரிந்த மென்மையும் அவனின் இதழ்களில் நெளிந்த இகழ்ச்சி புன்னகையும் ஆனால் அவனின் கண்களில் தெரிந்த ரௌத்திரத்தையும் கண்ட வினோத் அரண்டுவிட்டான்...

ஒருவர் முகத்தில் ஒரே நேரத்தில் இத்தனை உணர்வுகளை வெளிப்படுத்த முடியுமா?

"அதுவும் ஒரு மினிஸ்டரையே இந்த அளவுக்கு மிரட்டுகிறார் என்றால் இவர் எவ்வளவு பெரிய ஆள்??" என்று நினைத்தவனுக்குச் சப்த நாடியும் அடங்கி ஒடுங்கியது....

COPYRIGHTED

53% 8:25 PM
https://drive.google.com/file

மீண்டும் தன் ப்ரோக்கரை அழைத்த அர்ஜூன்...

"மணி, அவன் நூற்றியென்பது கோடிக்கு காண்ட்ராக்ட முடிக்கிறான் அப்படின்னா நீங்க இருநூறு கோடிக்கு ஏற்றி முடிக்க வேண்டியது தானே இதற்குத் தான் உங்களுக்கு இவ்வளவு கமிஷன் கொடுக்கறது" என்று அலட்சியமாய்ச் சொன்ன அர்ஜூனின் வசதியும் அந்தஸ்தும் வினோத்திற்கு ஒரு உண்மையை மண்டையில் அடித்துப் புரிய வைத்தது.

அது மஹாவிற்கும் தனக்குமான தூரம் எத்தனை என்பதனை....

திவ்யாவின் விட்டிற்குச் சென்ற பொழுதெல்லாம், அவர்களின் வசதியை பார்த்த பொழுதெல்லாம் வராத ஞானம், அர்ஜுனின் அருகில், அவனின் மிரட்டலில், அதுவும் கோடிகளை வெகு சாதாரனமாகப் பேசும் அவனின் பேச்சில் வந்தது...

மஹாவைத் தான் இழந்துவிடுவோமோ? என்ற எண்ணம் வேறு வர, அவனுடைய கவனம் அங்கில்லை என்று உணர்ந்த அர்ஜூன் தன்னுடைய பேச்சு அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது என்று உணர்ந்து பேச்சை மாற்றினான்....

"என்ன வினோத், பயந்துட்டீங்களா? வேற வழியில்லை வினோத்.... பிஸினஸில் இப்படி இருந்தால் தான் பிழைக்க முடியும்... எந்த நிமிடமும் எச்சரிக்கையாவே இருக்கனும்.... இரண்டு நாளா கொஞ்சம் கேர்லஸா இருந்ததால வந்த பிரச்சனை... வாய்ஸ ரெய்ஸ் பண்ணலைன்னாலோ, நாம யாருன்னு அப்பப்போ காட்டாம இருந்தாலோ இவனுங்கெல்லாம் துளிர் விட்டுப் போய்விடும்... அப்புறம் நம்மை ஏறி மிதிச்சுட்டு போய்ட்டே இருப்பாங்க" என்றான் சிரிப்புடன்... தன்னைக் கண்டு திகிலடைந்து இருந் வினோத்தின் முகத்தில் தெரிந்த இறுக்கத்தை மாற்ற.....

8:25 PM 53%
https://drive.google.com/file

அர்ஜூனின் முகத்தைத் திரும்பி பார்த்த வினோத்திற்கு மட்டும் சக்தி இருந்திருந்தால் அந்த இடத்தில் இருந்த மாயமாய் மறைந்துப் போயிருப்பான்... அந்த அளவிற்கு அர்ஜூனின் ஆளுமையும் நிமிடத்திற்கு நிமிடம் மாறும் அவனின் முகப் பாவனையும் அவனின் அதிகாரமும் வினொத்தின் நெஞ்சை கலங்க செய்திருந்தது....

ஒரு மனிதனால் இந்தளவிற்கு உள்ளத்தில் கோபமும் ஆனால் அதனை வெளிகாட்டாது முகத்தில் மென்மையையும் காட்ட முடியுமா... ஒரு வேளை இதில் தான் திவ்யா தவறிவிட்டாளோ... அவரின் உள்ளத்தில் இருப்பதை அவர் வெளிக்காட்டாமல் இவரின் கோபத்தையும் ஆளுமையையும் பார்த்து பயந்திருப்பாளோ...

தன் அத்தானிற்கும் திவ்யாவிற்கும் இடையில் இருக்கும் குழப்பமும் அதனால் விளைந்து கொண்டிருக்கும் சிக்கல்களும் அவனுக்குப் புரிவது போல் இருந்தது...

ஆனால் இதற்கான தீர்வு தான் என்ன என்பது அவனுக்குப் புலப்படவில்லை...

அர்ஜூன் பேசவும் அவனைத் திரும்பி பார்த்தவனின் முகத்தில் தோன்றியிருந்த கலக்கம் மறையாது ஒரு புன் சிரிப்பை மட்டுமே உதிர்த்தவன் அதற்குப் பின் வழி மட்டும் சொல்லிக் கொண்டு வர சிறிது தூரத்திலேயே அர்ஜூனின் கண்களில் பட்டது தனக்கும் திவ்யாவிற்கும் திருமணம் நடந்த மண்டபம்...

தன்னையும் அறியாமல் காரை சடாரென்று ப்ரேக் போட்டு நிறுத்தியவன் வினோத்திடம் திரும்பி...

COPYRIGHTED

"வினோத்... இது தானே எனக்கும் திவ்யாவுக்கும் மேரேஜ் நடந்த மண்டபம்?" என்க...

தன்னுடைய ரௌத்திரத்தினாலும், இகழ்ச்சியான புன்னகையாலும், மினிஸ்டரையே அதிகாரம் செய்கிற தன்னுடைய ஆளுமையான பேச்சினாலும், வினோத்தை கதி கலங்க செய்திருந்த அர்ஜூன், தனக்குப் பிடித்தம் இல்லாத திருமணம் ஆக இருந்தாலும் இன்றும் தன்னுடைய திருமணம் நடந்தேறிய மண்டபத்தை நியாபகத்தில் வைத்துச் சரியாக வினோத்திடம் கேட்கவும், தன் அத்தானிற்குத் தன் தங்கையின் மேல் இருந்த பற்றை நினைத்து மனம் இலகுவானது வினோத்திற்கு....

இவர் வெளியிலும் தொழிலும் மற்றவர்களுக்குச் சிம்மசொப்பனமாக இருந்தாலும் நிச்சயம் திவ்யாவை கண்கலங்க விடமாட்டார் என்று தோன்ற அர்ஜூனின் மேல் இருந்த மதிப்பு பன்மடங்கு அதிகரித்தது....

மண்டபத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்த அர்ஜூனின் மனதிலோ திருமணம் அன்று திவ்யா தன் காரில் ஏற தடுமாறி நின்றதும் தன் அன்னை அவளைத் தனக்கு அருகில் அமரச் சொல்லவும் அவள் நடுநடுங்கி போய்த் தன் அன்னையின் அருகில் அமர்ந்ததும் நியாபகம் வந்தது....

ஏனெனில் அன்று எந்த இடத்தில் தன் காரை நிறுத்தி இருந்தானோ இன்றும், இந்த நிமிடமும் அவனின் கார் அதே இடத்தில் தான் நின்றிருந்தது...

ஆனால் அவனின் அன்றைய மனநிலைக்கும் இன்றைய மனநிலைக்கும் எத்தனை வித்தியாசங்கள்...

COPYRIGHTED

8:25 PM 53%

https://drive.google.com/file

இதற்கு மேல் தன்னவளை சந்திப்பதற்கு ஒரு நிமிடம் கூடத் தாமதிக்கக் கூடாது என்று இதயம் துள்ள வினோத்திடம் மேற்கொண்டு வழியைச் சொல்ல சொன்னவன் அடுத்த முக்கால் மணி நேர பயனத்திற்குப் பிறகு அந்தக் கிராமத்திற்குள் நுழைய, பல குறுகிய சந்துகளைத் தாண்டி ஒரு வழியாகத் திவ்யாவின் அத்தை வீட்டை அடைந்தார்கள்...

இரண்டு மாடிகள் கொண்ட வீடு அது... கிட்டத்தட்ட அக் கிராமத்தில் இருந்த பெரிய வீடு அதுவாகத் தான் இருக்கும்....

அர்ஜூன் காரை வாசலில் நிறுத்த, காரில் இருந்து இறங்கிய வினோத் வீட்டிற்குள் அவசரமாகச் சென்றவன் அர்ஜூனின் வரவை தன் தந்தையிடம் சொல்ல, வேகமாக வெளியே வந்த சிவசுப்ரமணியத்திற்கு அர்ஜூனைப் பார்த்தவுடன் மகிழ்ச்சிக்கு பதிலாகக் கிலியே வந்தது.....

"மாப்பிள்ளையே நம் ஊருக்கு வந்திருக்கிறார் என்றால் பிரச்சனை பெரித போல்" என்று நினைத்தவருக்கு மகளை மேலும் மேலும் வருத்தப்படுத்த கூடாது என்று அங்கு நடந்த பிரச்சனைகளைப் பற்றிக் கேட்காமல் விட்டது எவ்வளவு பெரிய முட்டாள் தனம் என்று தோன்றியது....

அர்ஜூனை வரவேற்றவர் வீட்டிற்குள் அழைத்துச் செல்ல முற்பட, அதற்குள் அவன் வந்த விஷயம் வீட்டில் உள்ள அனைவருக்கும் பரவ, வீட்டில் விஷேஷத்திற்காகக் கூடி இருந்த ஏகப்பட்ட சொந்த பந்தங்கள் வாசலுக்கே வந்துவிட்டார்கள் அவனை வரவேற்க....

பிறந்தது முதல் நகரத்திலேயே வாழ்ந்து வந்தவனுக்கு அவர்களின் நடவடிக்கை, வீட்டின் வாசலுக்கே வந்து விருந்தினரை வரவேற்பது, அவர்களின் அன்னியோன்யம் அனைத்தும் வித்தியாசமாகப் பட, சங்கோஜப்பட்டவனின் கண்கள் ஆர்வத்துடனும் ஏக்கத்துடனும் அவனவளை தேட ஆரம்பித்தது....

COPYRIGHTED

53% 8:25 PM
https://drive.google.com/file

வீட்டிற்குள் அவனை அழைத்துச் சொன்றவர்கள் ஹாலில் போடப்பட்டிருந்த சேரில் அமர சொல்ல, வழக்கம் போல் கால் மேல் கால் போட்டுக் கம்பீரமாக அமர்ந்தவன் வினோத்தைப் பார்க்க, அவனின் பார்வையை உணர்ந்தவன்,

"இதோ அத்தான், திவ்யாவை கூப்பிட்டுட்டு வரேன்" என்றவன் அவளைத் தேடி மாடி செல்ல,

அங்கு திவ்யா அன்று தான் சடங்கு செய்து முடித்திருந்த தன் அத்தை மகளுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.... கலகலப்பு குரலிலும் சிரிப்பு வெறும் உதடுகளிலும் மட்டுமே இருந்தது....

தன் கணவனின் பிரிவைப் பற்றிய சிந்தனை மனம் முழுவதும் ஓடிக் கொண்டிருந்ததால் முகத்தில் பிரம்மையும், உள்ளம் ஏமாற்றத்தாலும் வேதனையினாலும் சிதைக்கப்பட்டிருந்ததால் கண்களில் சோகமும்,

தன்னவனின் பிளவினால் இதயத்தில் விளைந்த காயமும் நிறைந்து இருந்தவளின் சிரிப்பில் வலியை தவிர வேறு எதுவும் இல்லை...

வேகமாக மாடி ஏறிய வினோத் அங்குப் பேசிக் கொண்டிருந்த திவ்யாவைப் பார்த்தவன்,

"என்ன திவ்யா, அத்தான் வந்திருக்காங்க... கீழே வீடே அல்லோகல பட்டுட்டு இருக்கு... நீ என்னடான்னா இங்கு உட்கார்ந்து பேசிட்டு இருக்க?" என்று சொல்ல,

அவனின் வார்த்தைகளைக் கேட்டு சில நொடிகள் திகைத்த திவ்யா ஒரு வேளை என் காதில் தான் தவறாக விழுந்துவிட்டதோ என்று கலக்கத்துடன் வினோத்தை ஏக்கமாகப் பார்க்க...

COPYRIGHTED

அர்ஜுன் தன்னை அழைத்தத்தை அவனே நம்ப முடியாமல் சில விநாடிகள் திகைத்து இருந்தது வினோத்தின் நியாபகத்திற்கு வர, இவளே அடிப்பட்டு மனம் சிதைந்துப் போய் வந்திருக்கிறாள்... அவளிடம் திடீரென்று உன் கணவன் வந்திருக்கிறார் என்றால்?

அவளின் உள்ளுணர்வுகளைப் புரிந்துக் கொண்டவன் கனிவுடன் மென்மையாகச் சிரித்து ...

"என்ன திவ்யா இப்படி நம்பாம பார்க்கிற? அத்தான் உன்னைய பார்க்கத் தான் வந்திருக்காங்க... சீக்கிரம் வா, கீழே உட்கார்ந்து இருக்காங்க" என்றவன் அவளைக் கைப் பிடித்து அழைத்துச் சென்றான்...

அவள் கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு வந்து இன்றோடு கிட்டத்தட்ட இரண்டு நாட்கள் ஆகியிருந்தது... நான் எங்கு இருக்கிறேன்? எப்படி இருக்கிறேன்? என்று ஒரு வார்த்தைக் கூட இதுவரை அவர் கேட்கவில்லை...

அப்படியே நான் கடலூர் வந்துவிட்டது தெரிந்திருந்தாலும் சொல்லாமல் வீட்டை விட்டு வந்துவிட்டதில் நிச்சயம் என் மீது இருக்கும் வெறுப்பும் கோபமும் இன்னும் அதிகரித்துத் தான் இருக்குமே தவிரக் குறைந்திருக்க வாய்ப்பில்ல... அப்படி இருக்க அவர் என்னைத் தேடி வருவதா?

உலகமே இரண்டு பட்டாலும், யார் எக்கேடு கெட்டாலும் அவர் தன்னிடத்தில் இருந்து இறங்கி வரவே மாட்டார் என்று தன் மனதில் ஆழ பதிந்து இருந்ததால், அர்ஜுன் அவளைத் தேடி வந்திருப்பதை இன்னமும் நம்பாமல் திருதிருவென்று முழித்தவளின் கைப் பற்றி வினோத் அழைத்துச் செல்ல,

COPYRIGHTED

53% 8:26 PM
https://drive.google.com/file

அவன் பின்னயே குழப்பத்துடனும் கலக்கத்துடனும் சென்றவள் அங்குக் கம்பீரமாக நடு நாயகமாக அமர்ந்திருந்த கணவனைப் பார்த்தவளின் மனதில் அந்த நொடி தோன்றிய உணர்வுகளை வார்த்தைகளில் வடிக்க ஒருவராலும் இயலாது....

ஆண் என்ற நினைவில் திமிராய், கர்வமாய், சிம்ம சொப்பனமாய் வலம் வந்த அர்ஜூனை தனது மென்மையான காதலில் கட்டி போட்ட பெருமை இந்தப் புள்ளி மானிற்கே சேரும் என்று உணராதவளாய் அவனை அதே அச்சத்துடனும் நடுக்கத்துடனும் பார்த்திருந்தாள் அந்தப் பேதை....

கனவிலும் நினையாதவிதமாய்த் தன்னைத் தானாகத் தேடி வந்திருக்கும் கணவனை அங்கு எதிர்பாராமல் சந்திக்க, இரு கண்களிலும் கண்ணீர் துளிகள் ததும்பி பளபளக்க அவனை ஏறெடுத்து நோக்கியவளின் நிலையையும், தன்னைக் கண்டதும் துடிக்கும் அவளின் இதயத்தைப் படம் பிடித்துக் காட்டும் விழிகளின் ஏக்கத்தையும் கண்ட அர்ஜூனின் கண்கள் ஒரு நொடி சுருங்கி விரிந்தது.

தன்னவளைத் தேடி மனதிற்குள் மலையைப் போன்ற காதலை சுமந்து கிளம்பியவனுக்கு, அவள் தன்னைப் போல் தவித்து இருக்கவில்லை என் உணர்ந்த விநாடி, இழக்க கூடாததை இழந்ததைப் போல் துடிதுடித்துப் போனவனுக்கு, அவளின் இந்த முகமும் ஏக்கம் நிறைந்த கண்களும் பறைசாற்றியது அவனவளின் தவிப்பையும் காதலையும்...

அவளை அந்த விநாடியே அதிரடியாகத் தூக்கி சென்று விட மாட்டோமா என்று தோன்ற கட்டுப்பாடில்லாமல் தறிகெட்டு அலையும் மனதை அடக் வழி தெரியாமல் அமர்ந்திருந்தவன் அவளை உற்று நோக்க, அவனின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் வழக்கம் போல் தன் நீர் ததும்பிய விழிகளை நிலத்தில் தாழ்த்த, தன் முகத்தில் இன்ப ரேகையைப் படறவிட்டு சட்டென்று எழுந்தவன்...

COPYRIGHTED

8:26 PM
https://drive.google.com/file

"அப்போ நாங்க கிளம்புகிறோம்" என்றான்....

அவனின் அந்த அதிரடி செயலில் விலுக்கென்று தலை நிமிர்ந்து பார்த்தவள் புரியாமல் அவனையே பார்த்திருக்க, கலா இடையில் புகுந்தார்....

"மாப்பிள்ளை இப்பதான் வந்திருக்கீங்க.... சாப்பிட்டுட்டுப் போகலாம் இருங்க" கலக்கத்துடன் கலா கூற....

"இல்லை.... திடீர்னு கிளம்பியதால் நிறைய வேலைகள் பெண்டிங்ல இருக்கு..... இப்போ கிளம்பினா தான் சரியா இருக்கும்" என்றான் விடாமல்...

"மாப்பிள்ளை கல்யாணம் ஆனதில் இருந்து இப்போ தான் முதன் முறை வந்திருக்கீங்க.... கொஞ்சம் காபியாவது சாப்பிட்டுட்டுப் போகலாம்" என்று கலா மீண்டும் கூற.....

மறுக்க இயலாமல் திவ்யாவைப் திரும்பி பார்த்தவன் அவளின் பார்வையில் என்ன கண்டானோ அமைதியாக அமர,

கலாவிற்கு மருமகன் தன் பேச்சை கேட்டதில் ஏதோ இனம் புரியாத நிம்மதி படர்ந்தது....

அதே தோரனையில் அவன் மீண்டும் கம்பீரமாக அமர்ந்திருக்க, அவனின் அமைதியும் பணிவும் திவ்யாவிற்குக் கலக்கத்தையே அதிகரிக்கச் செய்ய தன் கணவனைக் கண் இமைக்காமல் பார்த்திருந்தவளின் மேல் தன் ஆழ்ந்த பார்வையை வீசியவன் அவளை அங்குலம் அங்குலமாக விழுங்கிவிடுவது போல் ரசிக்க. அவனின் பார்வையின் வீரியத்தைத் தாங்காத திவ்யா கூச்சத்தில் நெளிந்தாள்....

COPYRIGHTED

8:26 PM 52%

https://drive.google.com/file

"ஐயோ! இத்தனை பேர் இருக்கும் போது இது என்ன இப்படி ஒரு பார்வை இவருக்குக் கொஞ்சம் கூடப் பயம் என்பதே இல்லையா?" என்று நினைக்க அவனுக்கும் பயத்திற்கும் எவ்வளவு தூரம் என்பது நமக்குத் தானே தெரியும்.

கா:பி வந்தவுடன் அதனைப் பருகியவன் கிளம்ப நினைக்க அப்பொழுது தான் வந்தார் திவ்யா, வினோத்தின் மாமா... "மலேஷியா மாமா" என்று அனைவராலும் செல்லமாக (எரிச்சலாகவும்) அழைக்கப்படுபவர்...

அவர் மலேஷியாவில் பதினைந்து வருடங்களாக வேலைப் பார்ப்பவர்... அந்தக் கிராமத்திலேயே கொஞ்சம் வசதியானவர் வேறு...

விடுமுறைக்கு வந்தவருக்குத் திவ்யாவின் திருமணம் பற்றித் தெரிய வர, அவளின் கணவனைச் சந்திக்க ஆர்வமாக இருந்தவருக்கு இப்படி ஒரு வாய்ப்பு எதிர்பாராமல் வந்தது சந்தோஷமாக இருந்தது....

தன்னை விட அந்தக் கிராமத்தில் யாரும் வசதியாக இருக்கக் கூடாது என்று நினைப்பவர்.... ஆனால் பாவம் அர்ஜூனைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்.....

அர்ஜூன் வந்திருப்பதை அறிந்து அங்கு வந்தவர்,

"வாங்க தம்பி... நீங்க வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்.... அதான் நேர்ல ஒரு தடவை உங்களைப் பார்த்துட்டு போயிடலாம்னு வந்தேன்.... ஏனா அடிக்கடி மலேஷியாவில் இருந்து வர முடியாது பாருங்க" என்றார் வாயெல்லாம் பல்லாகப் பெரிய சிரிப்புடன்......

COPYRIGHTED

52% 8:26 PM
https://drive.google.com/file

அவர் மலேஷியாவில் இருக்கிறார் என்று தெரிய வேண்டுமாம்...

அவரைக் கண்டதுமே திவ்யாவிற்கும் வினோத்திற்கும் ஐய்யோ! என்றிருந்தது என்றால் இப்பொழுது அர்ஜூனிடம் அவர் பேச்சுக் கொடுப்பது திக்கென்று இருந்தது. ...

ஏனெனில் "நான் வீட்டை விட்டு வந்ததே அவரது ரௌத்திரத்தினால் தான்.... இதில் அவர் இத்தனை நேரம் அமைதியாக அமர்ந்திருப்பதே பெரிய விஷயம்.... இதில் இவர் வேறா?" என்று தலையில் மானசீகமாக அடித்துக் கொண்டவள் வினோத்தை திரும்பி பார்க்க...

அவனுக்கோ முகமே வெளிறிப் போயிருந்தது... ஏனெனில் அவனும் இப்பொழுது தானே சில நிமிடங்களுக்கு முன் அர்ஜூனின் ஆங்காரத்தை பார்த்திருந்தான்...

இந்த நேரத்தில் இந்த மாமா வேற... ஏதாவது கேட்டு அவரிடம் வாங்கிக் கட்டிக்கொள்ளப் போகிறார் என்று நினைக்க,

அவர்கள் நினைத்தது போல் அவனின் எதிரில் கால் மேல் கால் போட்டுக் சட்டமாக அமர்ந்தவர் அவனிடம் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்...

"நீங்க ஏதோ பிஸினஸ் பண்றீங்கன்னு கேள்விப்பட்டேன்... என்ன பிஸினஸ் தம்பி? ஏன்னா திவ்யா கல்யாணம் எப்படி நடந்தது என்று கேள்விப்பட்டேன்... கலாவும் சிவாவும் ரொம்ப வெள்ளந்தியானவர்கள்... எதையும் தீர விசாரிக்க மாட்டார்கள்... அதனால் தான் அந்தப் பையன சரியாக விசாரிக்காமல் அவ்வளவு குழப்பம் வந்திருக்கு... அதானால் தான் கேட்கிறேன்.... என்ன பிஸினஸ் பண்றீங்க? எவ்வளவு ஆண்டு வருமானம் வரும்?" என்று அடுக்கடுக்காக நேர்முகத்தேர்வு போல் கேள்விகள் கேட்க,

COPYRIGHTED

52% 8:27 PM
https://drive.google.com/file

வினோத்திற்கு அப்படியே அவரை அலேக்காகச் சேரோடு தூக்கி சென்று தூர எறிந்து விட வேண்டும் போல் இருந்தது என்றால், திவ்யாவிற்கு எங்காவது சுவற்றில் போய் முட்டிக்கொள்ளலாமா என்று இருந்தது...

அர்ஜூனின் உணர்ச்சியெதுவும் தோன்றாத முகத்தைப் பார்த்த சிவசுப்ரமணியம் இந்தப் பேச்சை இப்படியே வளர்க்க விடக்கூடாது என்று நினைத்து இடையில் புகுந்தார்...

"மச்சான், எதுக்கு இந்தப் பேச்சு? கலா, மச்சானுக்குச் சாப்பிட ஏதாவது எடுத்து வை... நீங்க வாங்க மச்சான், நாம கிட்ச்சன்ல போய்ச் சாப்பிடலாம்"

"அட இருங்க சிவா, இப்பத் தான் தம்பிய பார்க்கிறேன்... இதெல்லாம் தெரிஞ்சுக்கிட்டாதான நம்ம பொண்ணு சௌகர்யமாக இருக்கிறாளா என்று பார்க்க முடியும்"

அவர் தன் பிடியில் விடாமல் இருக்கச் சிவ சுப்ரமணியத்திற்கு மாமாவின் பேச்சு நல்ல விதமாக முடியும் என்று தோன்றவில்லை...

வலது கையைச் சேரின் கைப்பிடியில் ஊன்றி, முட்டியை தன் முகவாயில் கொடுத்து அமர்ந்திருந்த அர்ஜூன் எதுவும் பேசாமல் கண்களை மட்டும் உயர்த்தித் திவ்யாவைப் பார்க்க, அவனின் பார்வையை எதிர் கொண்டவளின் விழிகள் "ப்ளீஸ் எனக்காக" என்று கெஞ்சுவது போல் இருந்தது....

தன்னவளுக்காக, அவளின் முகத்தில் படர்ந்திருந்த கலக்கத்திற்கு ஆறுதலாகத் தன்னை வெகுவாகக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக அமர்ந்து இருந்தவனின் பொறுமையை மேலும் சோதித்தார் மலேஷியா மாமா...

COPYRIGHTED

52% 8:27 PM
https://drive.google.com/file

"என்ன தம்பி கேட்டுட்டே இருக்கிறேன்.... சொல்லிக்கிற மாதிரி வருமான இருந்தா சட்டுன்னு சொல்ல வேண்டியதுதானே"

அர்ஜூனின் அமைதியால் அவரின் குரலில் எரிச்சல் தெரிந்ததோ...

"ஐயோ! தூங்கும் சிங்கத்தைத் தட்டி எழுப்பறாரே இந்த மாமா" என்று மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்ட வினோ திவ்யாவைப் பார்க்க,

இதற்கு மேல் இதனை விட்டால் பெரிய பிரச்சனையில் முடியும் என்பது போல் திவ்யா வினோத்தைப் பார்க்க, சட்டென்று...

"உங்களுக்கு எ.கே க்ரூப் ஆ.:.ப் கம்பெனிஸ் பத்தி தெரியுமா மாமா?" என்றான் வினோத்...

"ஹான் தெரியுமே... .:.பார்ச்சூன் 500 கம்பெனிஸ் லிஸ்ட்ல அதுவும் ஒரு கம்பெனியாச்சே.... அவங்களுக்கு ஏகப்பட்ட பிஸினஸ்ப்பா.... அதுல அவங்க வச்சிருக்கிற கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியில தான் என் மருமகனோட தம்பி பெரிய பதவியில இருக்கான்.... தம்பி, நீங்க அவங்களோட கம்பெனியில எதுலயாவது வேலைப் பார்க்கிறீங்களா? என்று மீண்டும் அர்ஜூனிடமே தன்னுடைய கேள்விக் கணைகளைத் தொடுத்தவரிடம்...

அவரின் நொய்நொயென்ற கேள்வியில் கடுப்பாகிப் போன வினோத் இவரை இத்துடன் விடக்கூடாது என்று...

"அவங்க கம்பெனியோட டேர்ன் ஓவர் தெரியுமா மாமா?" என்றான்.....

COPYRIGHTED

52% 8:27 PM
https://drive.google.com/file

"அது எப்படியும் ஆயிரம் கோடி பெறும்" என்று அவர் கூற அது வரை வாய்த் திறக்காமல் அமர்ந்து இருந்த அர்ஜூன்....

"டு தௌஸண்ட் நைன் ஹண்ட்ரெட் அண்ட் ஃபார்டி க்ரோர்ஸ்" என்று மட்டும் சொன்னான்...

"அவங்க கம்பெனி டேர்ன் ஓவர் பத்தி இப்ப என்ன?" என்பது போல் மாமா அர்ஜூனை பார்க்க, வினோத்...

"மாமா எ.கே க்ரூப் ஆ:ப் கம்பெனிஸோட MD அர்ஜூன் கிருஷ்ணா இவர் தான் மாமா" என்றானே பார்க்கலாம்,

அடித்துப் பிடித்து அவர் எழுந்த விதத்தில் அந்த வீடே அலறியது....

"சார்.... உங்க கிட்ட போய் என்ன பிஸினஸ் பண்றேன்னு கேட்டேனே... தெரியாம கேட்டுட்டேன் சார்.... என்ன மன்னிச்சுக்கங்க சார்"" என்று அர்ஜீனின் காலில் விழாத குறையாக அவர் கேட்க,

எதுவும் பேசாமல் எழுந்தவன் கண்களாலேயே போலாமா என்று திவ்யாவிடம் கேட்க வெடவெடத்துப் போனாள் அவனின் மனைவி....

அவளின் அச்சத்தை அவளின் விழிகள் அழகாகப் படம்பிடித்துக் காட்ட மனதிற்குள் சிரித்துக் கொண்டவன் நகர எத்தனிக்க...

"மாப்பிள்ளை வந்தது தான் வந்தீங்க... ஒரு தடவை நம்ம வீட்டிற்குப் போய்ட்டுப் போலாம்.... வாங்க" என்ற கலா திவ்யாவைப் பார்த்து,

COPYRIGHTED

8:28 PM
https://drive.google.com/file

"மாப்பிள்ளையை வீட்டிற்குக் கூட்டிட்டு போ திவ்யா.... நாங்க கொஞ்ச நேரத்தில் வந்திருவோம்" என்றார்...

ஏனெனில் அவருக்குத் தெரியும்... தன் மகளுக்கும் மருமகனிற்கும் இடையில் இருக்கும் பிரச்சனையில் திவ்யா நிச்சயம் அவர் அழைத்தவுடன் போக மாட்டாள் என்று...

அதே சமயம் இத்தனை தூரம் தன் மகளைத் தானாகத் தேடி வந்திருக்கும் தன் மருமகனின் குணமும் புரியும்....

ஆதலால் அவள் எதுவும் சொல்லும் முன் அவரே முந்திக் கொள்ள அர்ஜூனிற்குமே தன் மனைவியிடம் மனம் விட்டு பேச ஒரு இடம் கிடைத்ததே என்றிருந்தது....

ஆனால் திவ்யாவிற்குத் தான் பெரிதும் சங்கடமாகிப் போனது.... ஏனெனில் அர்ஜூன் இதற்கு முன் திவ்யாவின் வீட்டிற்கு வந்ததில்லை...

ஏற்கனவே தன்னை வேலைக்காரியாக இருக்கத் தான் தகுதியுள்ளவள் என்று ஏசியிருப்பவர்... இப்பொழுது தன்னுடைய குடும்பத்தினுடைய, தன் பெற்றோருடைய ஏழ்மை நிலைமையைக் கண்டால் இன்னும் என்னைப் பற்றிக் கேவலமாக நினைத்துக் கொண்டால் என்ன செய்வது என்று குழும்பியவாறே நிற்க...

விழிகளில் கலக்கமும், முகத்தில் பரிதாபமும், உடலில் நடுக்கமும் என்று பலவித உணர்ச்சிகளைக் கலவையாக வெளிப்படுத்திக் கவலைப் படர்ந்த மலைத்து தயங்கி நின்ற தன்னவளை திரும்பி பார்த்தவனின் மனம் பாகாய் உருகியது...

COPYRIGHTED

8:28 PM 52%
https://drive.google.com/file

அவளைக் கூர்ந்து பார்த்தவன் "வா" என்பது போல் தலை அசைத்துச் சைகை செய்து முன்னால் நடக்க, வேறு வழியில்லாது அவனைப் பின் தொடர்ந்தவளுக்குப் பயத்தில் இதயம் தன் துடிப்பை அதிகரித்து இறுதியில் தாங்காமல் வெடித்துச் சிதறிவிடுமோ என்று இருந்தது...

வெளியே வந்த அர்ஜூன் காரை நோக்கி செல்ல, அவன் பின்னையே வந் மலேஷிய மாமா,

"அடடா முன் வாசல் வழியாக வந்திருந்தால், இந்தக் காரைப் பார்த்திருந்தேனால், அவரிடம் இப்படிப் பேசியிருக்க மாட்டேனே!! இப்போ மருமகனோட தம்பி வேலை காலி" என்று மனதிற்குள் புலம்ப ஆரம்பித்தார்...

காரின் அருகில் வந்தவன் திவ்யாவிற்காகக் காரின் முன் பக்க கதவை திறந்து அவள் ஏறும் வரை காத்திருந்து பின் அவள் ஏறியதும் கதவை சாத்த முற்பட, திவ்யாவின் புடவை முந்தானை காருக்கு வெளியில் தொங்கிக் கொண்டிருந்ததைக் கவனித்தவன் முந்தானையைக் குனிந்து எடுத்து அவளின் மடியில் போட்டுவிட்டுப் பின் தன் இருக்கைக்கு வந்து அமர, கலாவிற்கும், சிவ சுப்ரமணியத்திற்கும், வினோத்திற்கும் தங்கள் வீட்டு பெண்ணின் பிரச்சனை எப்படியும் சுமூகமாக முடியும் என்று தோன்றி ஒரு பெருத்த நிம்மதி பெருமூச்சை விட வைத்தது.

"வீட்டிற்கு அவரை எப்படி அழைத்துச் செல்வது? ஏற்கனவே என் மீது வெறுப்புடன் இருந்தவர்... இப்பொழுது அங்கு வீட்டில் என்ன செய்யக் காத்திருக்கிறாரோ?" என்று மூளைக் குழும்பும் அளவிற்குச் சிந்தனையில் இருந்தவளுக்குத் தன் கணவன் காரின் கதவைத் தனக்காகத் திறந்து வைத்துக் காத்திருக்கிறான் என்பதும், வெளியில் தொங்கிய தன் புடவையை எடுத்து தன் மடி மீது போட்டுவிட்டு கதவை சாத்துகிறான் என்ற சுய உணர்வுக் கூட இல்லை....

COPYRIGHTED

https://drive.google.com/file

காரில் ஏறியதில் இருந்து அவள் எதுவும் பேசாமல் மௌனமாக வர, அவளின் முகத்தைத் திரும்பி பார்த்தவன் அவள் இன்னும் தன்னைச் சுழற்றி அடித்துக் கொண்டிருக்கும் சிந்தனையில் இருந்து வெளிவரவில்லை என்பதை அறிந்து, அவளின் குழப்பத்திற்குக் காரணமு தான் அவளை எதுவும் செய்துவிடுவோமோ என்ற அச்சமே என்பதினால் தான், தான் அவளைத் திரும்பி பார்ப்பது கூடத் தெரியாமல் மலைத்து அமர்ந்திருக்கிறாள் என்பது புரிய அவனையும் அறியாமல் புன் முறுவல் இதழில் படற வழக்கம் போல் தலைக் குனிந்து தன் சிரிப்பை அடக்கியவன் சட்டென்று....

"இப்படி பேசாம அமைதியா வந்தா எனக்கு எப்படி வழி தெரியும்?" என்றான்....

அதுவரை இந்த உலகத்திலேயே இல்லாதவள் அவனின் திடீர் பேச்சில் திக்கென்று இருக்கத் தூக்கிவாரிப்போட்டு அவனைத் திரும்பி பார்க்க, சட்டென்று தன் உணர்ச்சிகளை மறைத்தவன் அவளைத் திரும்பியும் பார்க்காமல் சாலையில் கண்களைப் பதிக்க...

உணர்ச்சிகள் வெளிப்படுத்தாத அவன் முகத்தில் இருந்து எதனையும் கண்டு பிடிக்க முடியாமல் தவித்தவள் தன் வீட்டிற்கு வழி சொல்ல...

சில நிமிடங்கள் அமைதிக்கு பிறகு தயங்கியவாறே அவன் முகத்தைப் பார்த்து மெல்லிய குரலில்...

"எங்க வீடு ரொம்பச் சின்னது" என்றாள்...

அவளை திரும்பி பார்த்தவன் மீண்டும் சாலையில் கண் பதிக்க, நேரடியா அவன் விழிகளை நோக்கினாலே அவளால் அவன் பார்வையின் அர்த்தங்களைக் கண்டு பிடிக்க முடியாது...

COPYRIGHTED

52% 8:28 PM
https://drive.google.com/file 17

இதில் இன்று அவன் ஸன்க்ளாஸ் வேறு அணிந்து இருக்கும் பொழுது கருப்பு கண்ணாடிக்குள் அவனின் பார்வையின் பொருளை எங்கனம் அறியப் போகிறாள்?

சிறிது தூரத்திலேயே அவர்களின் வீடு வர, இப்போது அவளுக்கு ஏண்டா அவரை இங்குக் கூட்டி வந்தோம் என்று இருந்தது..

ஆனால் அவனுக்கு அப்படி ஒன்றும் தோன்றவில்லை போலும்...

அவன் மனமெல்லாம் உண்மையில் மகிழ்ச்சியில் துள்ளிக் கொண்டிருந்த; அவளுக்கு எப்படித் தெரியும்...

தன் குடும்பத்தினர் அனைவருக்கு முன் அவளின் கன்னத்தில் அறைந்து, அவளை வேலைக்காரி என்று கேவலமாகப் பேசி, விவாகரத்து பண்ணப் போவதாகச் சொல்லி அவளைக் கலங்கடித்து, அவள் வீட்டை விட்டு வெளியே வர தூண்டியவன்...

ஆனால் இதுவரை தான் செய்த செயல்கள் ஒன்றுக்கும் அவன் விளக்கம் கொடுக்கவோ அல்லது மன்னிப்போ கேட்கவோ இல்லை... (அப்படியே அவன் கேட்டுட்டாலும்!!!!!)

அப்படி இருக்க, இதயத்தில் அத்தனை வேதனைகளைச் சுமந்து கொண்டு ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் தன் தாய் வீட்டிற்கு அனாதைப் போன்று வந்தவளிடம் அவன் இந்த அளவு பொறுமையை எதிர் பார்க்கவில்லை...

ஆனால் அது தானே திவ்யா....

COPYRIGHTED

52% 8:28 PM
https://drive.google.com/file

ஒரு வழியாக வீட்டை அடைய, அந்தக் குறுகிய சந்தில் தன் காரை எங்கு நிறுத்துவது என்று அவன் சுற்றிமுற்றிப் பார்க்க, அவர்களின் தெரு முனையில் இருந்த காலி இடத்தைக் காட்டியவள்...

"அங்க நிறுத்தலாம்... யாரும் ஒன்றும் சொல்லமாட்டங்க" என்க...

சரி என்றவன் அவளை இறக்கிவிட்டு காரையும் நிறுத்திவிட்டு திரும்பி வீட்டை நோக்கி நடக்க...

அவனைப் பார்த்தவாறே நின்றிருந்தவளுக்குத் தன் கணவனின் ஆண்மைக் கலந்த அழகும், அவனின் உயரமும், கம்பீரமும், அவனின் ஸ்டைலிலான நடையும் மதி மயக்கிய போதே அவளின் உள்ளுணர்வு...

"இன்னும் சில நிமிடங்களில் உனக்கு இருக்கு திவ்யா" என்று உணர்த்த...

சடக்கென்று தன் முகப் பாவத்தை மாற்றியவள் அவன் தன் அருகில் வந்ததும் வீட்டின் கதவை திறந்து...

"தலையைக் குனிஞ்சு வாங்க" என்றாள்....

ஏனெனில் அவனின் நெடு நெடு உயரத்திற்கு அவள் வீட்டின் நிலை மிகச் சிறியது...

அவள் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்ததையும் பார்த்தவனுக்கு, தான் அவளை நெருங்கியதும் வெடுக்கென்று தலைக் கவிழ்ந்து தன் உணர்வுகளை மறைத்ததையும் பார்த்தவனுக்கு அவளை

COPYRIGHTED

52% 8:28 PM
https://drive.google.com/file

அப்படியே அலேக்காகப் படுக்கைக்குத் தூக்கி செல்லமாட்டோமா என்று இருந்தது....

"எல்லாம் இன்னும் கொஞ்ச நேரம் தாண்டி... அப்புறம் என்ன பண்ணுவன்னு பார்ப்போம்" என்று நினைத்துக் கொண்டவன் மனதிற்குள்ளே சிரித்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைய அது மூன்று சிறு அறைகள், சமையல் அறை, குளியல் அறை மற்றும் ஒரு ஹால் உள்ள சிறிய வீடு...

அவன் வீட்டை சுற்றிப் பார்க்கவும், உள்ளம் குமுற, உணர்ச்சி ததும்ப, முகத்தில் வேறு அளவிற்கடங்கா அச்சத்தைத் தேக்கி வைத்து மிகவும் சன்னமான குரலில்...

"வாங்க.. உட்காருங்க" என்றாள்...

சில விநாடிகள் தயங்கியவன் தொண்டையைச் செறுமிக் கொண்டு...

"உனக்குன்னு ரூம் எதுவும் இருக்கா??" என்க...

"இருக்கு" என்றவளை உறுத்து பார்த்தவன்...

"அப்போ அங்க போ" என்றானே பார்க்கலாம்....

அவன் "உனக்குன்னு ரூம் எதுவும் இருக்கா?" என்று கேட்ட பொழுதே பக்கென்றதில் இதயம் தாறுமாறாகத் துடித்து வெளியே வந்து விழுந்துவிடுவது போல் ஒரு உணர்வுத் தோன்ற, இதில் இப்பொழுது "அங்குப் போ" என்று அவன் கூறியதும் பயத்தில் தடதடக்க உச்சி முதல் கால்வரை உதறல் எடுக்க...

COPYRIGHTED

52% 8:29 PM
https://drive.google.com/file

"ஏ... ஏ... எதுக்கு?" என்று தடுமாறினாள்...

மீண்டும் "போ" என்று மட்டும் சொன்னவன் அவளையே பார்த்திருக்க,

"நாம் தொலைஞ்சோம்... திவ்யா... சொல்லாமல் கொல்லாமல் வீட்டை விட்டு வந்ததுக்கு நிச்சயம் உனக்கு இருக்குடி... அத்தனை பேருக்கு முன்னாடியே அவ்வளவு கோபமாகப் பேசினவர்.... இப்போ இங்க ஒருத்தரும் இல்லை... செத்த நீ" என்று தனக்குள்ளே புலம்பியவள் மெதுவாக அவனைத் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே நடக்க...

மனதிற்குள் கிளம்பிய சிரிப்பை அடக்கி கொண்டு அவளைப் பின் தொடர்ந்தவன், அவளின் அறையில் அவள் நுழைந்தவுடன் தானும் உள்ளே சென்று கதவை தாளிட்டான்.

அவன் கதவை சாத்திய சத்தத்தில் திடுக்கென்று இருக்கத் திரும்பி பார்த்தவளுக்கு மனம் முழுவதும் கிலி படர தன் மனதை ஊடுருவி விழுங்கிவிட்டிருந்தவளை தன்னை மறந்து ரசித்துத் தன் பார்வையால் விழுங்கியவன் கதவை தாளிட்டு சட்டையின் உள்ளே வைத்திருந்த அந்த காகிதங்களை அவளிடம் நீட்டி.....

"கையெழுத்து போடு" என்றான்...

அவன் நீட்டிய காகிதங்களையே சில நொடிகள் பார்த்தவள் அது என்னவென்று புரியாமல் விழிக்க,

COPYRIGHTED

https://drive.google.com/file

"நீ தானே சொன்ன... எப்ப சொன்னாலும் டிவோர்ஸ் பேப்பர்ஸில் கையெழுத்துப் போடுறேன்னு... அதான் பேப்பர்ஸை நானே கொண்டு வந்துட்டேன்..... சீக்கிரம் போடு, நான் கிளம்பனும்" என்றான்...

ஏற்கனவே அச்சத்தின் பிடியில் சுழன்று சிக்குண்டிருந்தவளுக்கு, மனமும் உடலும் அவனின் வெறுப்பினால் துவண்டு போயிருந்தவளுக்கு, மிதமிஞ்சிய திகிலினால் இதயம் தடதடக்க நின்றிருந்தவளுக்கு அவன் வாயில் இருந்து உதிர்த்த வார்த்தைகள் அதிர்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு சென்றது....

சில விநாடிகள் அவளையே பார்த்திருந்தவன் அவன் கொடுத்த அதிர்ச்சியில் அவள் இன்னமும் உறைந்திருக்க அவளின் முகம் முன் சொடக்கு போட்டவன்,

"என்ன போடுறியா?" என்றான்...

ஆக இதற்குத் தான் இவ்வளவு தூரம் வந்திருக்கிறார்.... மாமா எத்தனை பேசியும் பொறுமையாக இருந்ததற்குக் காரணம் எப்படியாவது என்னிடம் கையெழுத்து வாங்கி விட வேண்டும் என்றுதான் என்று எண்ணியவள் விழிகளில் நீர் கோர்க்க அசையாது கலங்கிப் போய் நிற்க,

சுற்று முற்றும் பார்த்தவன் அங்கு அருகில் இருந்த டேபிளில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருட்களில் பேனாவைப் எடுத்தவன்...

"ம்ம், போடு" என்றான்...

வாழ்க்கையில் இதற்கு முன் எந்தப் பத்திரங்களையும் பார்த்திராத சின்ன பெண்... விவாகரத்துப் பத்திரம் எப்படி இருக்கும் என்று கூடத் தெரியாதவள்... அவன் நீட்டிய காகிதங்களை வாங்கிப் பார்த்தவள் அதில்

COPYRIGHTED

8:29 PM 52%
https://drive.google.com/file

விவாகரத்துப் பத்திரம் என்று பெரிதாக எழுதப்பட்டிருக்க நீர் திரண்டு ததும்பி நிற்கும் விழிகளுடன் அவனை ஏறெடுத்து நோக்கினாள்...

ஆனால் அவள் தன்னை விட்டு வந்ததினால் இருந்த கோபமும், தன் ஒட்டுமொத்த குடும்பமும் அங்கு மருத்துவமனையில் கதி கலங்க இருக்க இங்கு இவள் எதுவுமே நடக்காதது போல் விஷேஷத்திற்குப் போனதினா வருத்தமும் வர, அவளைச் சீண்டுவதற்காகவே அதை ஸெராக்ஸ் கடையில் சாதாரணக் காகிதத்தில் அங்கிருந்தவனை விட்டுக் கணினியில் டைப் பண்ணி அதனை அச்சடித்து எடுத்து வந்திருக்கிறான் என்று அவளுக்கு எப்படித் தெரியும்...

"என்ன பார்க்கிற? டிவோர்ஸுக்கு "முழுச் சம்மதம்" தெரிவிக்கிறேன்னு தான லெட்டர்ல எழுதியிருந்த? அப்புறம் என்ன தயக்கம்?" என்று "முழுச் சம்மதம்" என்ற வார்த்தைகளில் அழுத்தத்தைக் கூட்டி சொல்ல,

மீண்டும் அந்தக் காகிதங்களைப் பார்த்தவளுக்கு இதயமே சுக்கு நூறாக உடைந்தது போல் இருந்தது...

"சொல்லுடி.... இதுக்கு உனக்குச் சம்மதம் தானே?" என்று மீண்டும் கேட்டவனின் உள்ளம் உள்ளுக்குள் உருகி மருகி துடித்துக் கொண்டிருந்தது "எங்கே அவள் சம்மதம்" என்று சொல்லி விடுவாளோ என்று....

கேள்வியைக் கேட்டவனே ஆராய்ச்சி பார்வையை அவள் மீது செலுத்தியவாறே அவளின் பதிலையும் ஏக்கத்துடனமும், ஆவலுடனும் எதிர்பார்த்து அவளின் முகத்தையே பார்த்திருக்க,

அவன் மனமுழுவதும் ஆசையயும், இதயம் முழுவதும் காதலையும், உள்ளம் முழுவதும் தாபத்தையும் பூக்கச் செய்திருந்த அவனின்

COPYRIGHTED

மனையாள் தன் கணவனின் நெஞ்சம் குளிரும் வகையில் தலை கவிழ்ந்தவாறே "இல்லை" என்று தலை அசைத்தாள்...

மனதிற்குள் சாதித்துவிட்ட பெருமை பொங்க இருந்தாலும் உடனே அவளை ஏற்றுக் கொண்டால் அவன் அர்ஜூன் இல்லையே.... அதனால்,

"உனக்கு பிடிக்குதோ பிடிக்கலையோ... எனக்கு இனி மேல் பொறுமை இல்லை... முதல்ல கையெழுத்து போடு" என்று கூற...

வேறு வழியில்லாமல் அவனிடம் இருந்து பேனாவை வாங்கியவள் ஒவ்வொரு எழுத்தையும் எழுதும் பொழுது அப்படியே அந்த விநாடியே பூமியைப் பிளந்து உள்ளுக்குள் போய் விட மாட்டோமா என்று துடித்து, கலங்கிய மனதுடன் நடுங்கும் விரல்களுடன் அவன் நீட்டிய காகதிகங்களில் தன் கையெழுத்தைப் போட்டாள்...

சற்று முன் தன் கணவன் அவனாகத் தன்னைத் தேடி வந்திருக்கிறானே என்று எண்ணி ஆர்ப்பரித்த மனமும், சொர்க்கமாக இருந்த நிலையும், இப்பொழுது தனலாக மாறி விட, நெஞ்சுக்குள் இருக்கும் இந்த இறுக்கம் தாளாமல் வெடித்துக் கொண்டு வந்த அழுகையைத் தொண்டையிலே அடக்கி வைத்தவள் கையெழுத்து விட்டு நிமிர்ந்து பார்க்க,

அது வரையிலும் குனிந்து கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தவளை அடங்கா காதலுடனும், அவளுடன் கூடத் துடித்துக் கொண்டு தறிக்கெட்டு அலையும் மனதுடனும், மோகமும் காமமும் போட்டிப் போட்டுக்கொண்டு திறையிட்டிருந்த கண்களுடனும் பார்த்திருந்தவன் அவள் நிமிர்ந்து பார்ப்பதை அறிந்ததும் சட்டென்று தன் முகபாவத்தை மாற்றினான்.

அவளிடம் இருந்த காகிதங்களை வாங்கியவன் அவளைக் கூர்ந்து பார்த்தவாறே...

COPYRIGHTED

52% 8:30 PM
https://drive.google.com/file

"சரி, கிளம்பு" என்றான்...

கிளம்புவதா? கையெழுத்து தானே வாங்க வந்ததாகச் சொன்னார்... இப்பொழுது எங்குக் கிளம்பச் சொல்கிறார் என்று குழம்பியவள் அவனை ஏறெடுத்து பார்க்க,

"டிவோர்ஸ் கிடைக்க எப்படியும் கொஞ்ச நாள் ஆகும்... அது வரைக்கும் பேசாம எனக்கு வைஃப்பா இருந்துட்டு போயிடு.... என்ன?" என்றான் அவளின் கலங்கிய விழிகளில் தன் விஷம விழிகளைப் படறவிட்டவாறே...

புரிய ஒரு சில விநாடிகள் ஆனாலும் புரிந்த அந்த விநாடி இடியென அவன் சொன்னதின் அர்த்தம் அவளின் உணர்வில் இறங்க அதிர்ந்தவளி இதயம் பெரு வேகத்தில் அடித்துக் கொள்ள, தன்னையும் அறியாமல் சட்டென்று பின்னால் நகர்ந்தாள்...

அவள் பின்னால் நகரவும் அவன் அவளை நோக்கி முன்னால் நகர, இரண்டு அடி எடுத்து வைத்தவள் சுவற்றில் இடித்து நிற்க,

அவளின் தோள்களை உரசியபடி இரண்டு பக்கங்களிலும் சுவற்றில் கைகளை ஊன்றியவன்,

"என்ன ரெடியா?" என்றான்...

உள்ளத்தில் கடல் அலைப் போல் ஆர்ப்பரித்த தன் மனையாளின் மேல் உள்ள காதலை அவளிடம் சொல்லாமல், தன்னை இத்தனை நாட்கள் புறந்தள்ளியதற்கு, இத்தனை இரவுகள் தவிக்க வைத்ததற்கு, இரண்டு

COPYRIGHTED

8:30 PM 52%
https://drive.google.com/file

முறை தன்னை எதிர்பார்க்க வைத்து ஏமாற்றியதற்கு முதலில் அவளைச் கொஞ்ச நேரம் சீண்டிவிட்டுப் பின் தன் பானியில் அவளிடம் தன் காதலைச் சொல்லலாம் என்று அவன் இருக்க,

சில நிமிடங்களுக்கு முன் அவன் விவாகரத்துப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கியதில் மனம் சிதைந்து சுழற்றி அடிக்கப் பட்டிருந்தாலும், வீட்டை விட்டு தான் வெளியேறியதற்கு அவனின் கரத்தினால் பட்ட அடியை விட கொடிய வார்த்தைகளினால் பட்ட அடியின் வலியே காரணம் என்று மனம் உணர்ந்திருந்தாலும், அவளுடன் தனிமையில் இருக்கும் இந்த நிமிடங்கள் கூடத் தனது அராஜகச் செயல்களுக்கு அவன் மன்னிப்போ அல்லது வருத்தமோ தெரிவிக்கவில்லை என்பதனை புத்தி எடுத்துரைத்திருந்தாலும் திவ்யாவின் ஆழ் மனதில் அவன் மேல் இருந்த ஆழமான தூய காதல் அவளைத் தடுமாறச் செய்தது....

திருமண நாளில் இருந்து தன் கணவன் வாய் திறந்து தன் மனதில் குடியிருந்த காதலை வெளிப்படுத்தி இருக்கவில்லை.... பார்வையில் வீசிய காதலையும், தொடுகையும் உணர்த்திய தாபத்தையும், அன்று மழை நாளில் தன்னை இறுக்கி அணைத்து கொடுத்த பாதுகாப்பையும் மட்டுமே உணர்ந்திருந்தாளே தவிர உள்ளத்தில் இருந்த காதலை அவனாக அவளுக்குச் சொல்லியிருக்கவில்லை..

தன் இதயத்தை அமிலம் போன்ற வார்த்தைகளால் அவன் சிதைத்து சின்னாபின்னமாக்கின போது கணவனின் பார்வையை, தொடுகையை, அணைப்பை காதலென்று ஏற்றுக்கொள்ள மறுத்த மனது, இன்று விவாகரத்துப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிய பொழுது துடித்துக் குமுறி வெடித்த இதயம் இந்த நிமிடம் அவனின் நெருக்கத்தில் சகல வேதனைகளையும் மறந்து தன் உள்ளத்தில் பொதிந்து இருக்கும், தன் மனதில் உறைந்து இருக்கும், தனது உன்னதமான காதலை திரண்டெழுந்து வெளிக்கொணற தன் கணவனின் நெருக்கத்தில், ஸ்பரிசத்தில், தொடுகையில் முதல் முறை ஒரு மனைவியாய் உருகி கசிந்து நின்றாள்.

COPYRIGHTED

இரண்டாவது தடவையாகத் தன் கணவனை இத்தனை நெருக்கமாக உணரவும் உடலில் இன்ப அலைகள் படர்ந்து உடல் முழுவதும் பாய்ந்து, உணர்ச்சிகளின் பிரவாகத்தால் இதயம் படபடத்து வேகமாகத் துடித்ததில் முகம் செந்தனலாய் மாற, இருந்தும் வழக்கமாக வரும் அச்சத்தினாலும் கலக்கத்தினாலும் அவன் முகம் பார்க்க முடியாமல் அவள் தலை கவிழ..

அவளின் சிவந்த முகத்தையும், தன் உடல் உரசியதும் அவளின் பூவுடல் நடுங்கியதையும், தன் விரசம் வழியும் கண்களைச் சந்தித்த அவளின் அச்சம் படர்ந்திருந்த விழிகளில் தன் பார்வையின் தாக்கத்தைத் தாங்காமல் நிலத்தை நோக்கி தாழ்த்தியதையும் கண்டவன் அந்த நிமிடமே தன் இதயத்தில் ஆழ புதைத்திருந்த தன்னவளின் மேல் பூத்திருந்த தன் உன்னதமான காதலை சொல்ல விரும்பினான்...

ஆனால் ஏனோ சொல்லாமல் அவளின் முகத்தைத் தன் இரு கரங்களால் ஏந்தியவன்...

"திவ்யா... என்ன பாரு" என்று கரகரத்த குரலில் கிசுகிசுப்பாகக் கூற...

அவன் குரலில் இருந்த ஏக்கமோ அல்லது மோகமோ அவள் அவன் முக நோக்கி நிமிர்ந்து பார்க்க அவளின் அபாரமான அழகு விழிகளில் தன் வேட்கை விழிகளைப் படறவிட்டவன் அவளின் நெற்றியில் தன் முதல் முத்த முத்திரையைப் பதித்தான்...

அவன் முகத்தின் ஸ்பரிசத்தைத் தன் முகத்தில் உணர்ந்தவள் அவனின் மூச்சுக் காத்து தன் மீது பட்டுத் தன்னைத் தகிக்க வைத்தாலும் அச்சமும் கலக்கமும் போட்டி போட...

"வேண்டாங்க" என்றாள் தனக்கே கேட்காத மெல்லிய குரலில்...

COPYRIGHTED

8:30 PM
https://drive.google.com/file

"என்ன வேண்டாம்?" என்று வார்த்தைகளை மெல்ல உதித்தவன் அவளின் இரு கண்களிலும் தனது இரண்டாவது மூன்றாவது இதழ் முத்திரைகளை பதிக்க....

"அம்மா வந்துருவாங்க இப்போ" என்றாள்..

"வந்தா வரட்டும்" என்றவன் மென்மையாக அவளின் பட்டுக் கன்னங்களி தனது நான்காவது ஐந்தாவது முத்திரைகளைப் பதிக்க...

"பயமா இருக்குங்க" என்றாள்...

"எதுக்கு?" என்றவன் ஒற்றைக் கல்லானாலும் பளபளத்து ஜொலிக்கும் அவளின் மூக்குத்தியில் மிருதுவாகத் தன் ஆறாவது முத்திரையைப் பதிக்க...

அதற்கு மேலும் தாங்காதவளாய் தளிர் மேனியவளின் உணர்ச்சிகள் கிளர்ந்து உடல் முழுவதும் பாய்ந்ததால் வெட்க அலைகளில் அகப்பட்டுத் தத்தளித்தவளின் செந்நிற உதடுகள் லேசாகப் பிரிந்து துடிக்க,

"ப்ளீஸ் வேண்...." என்று அவள் முடிக்கவில்லை....

அவள் உதடுகளை உரசும் அளவிற்கு வெகு அருகில் தன் உதடுகளைக் கொண்டு சென்றவன் ஒரு நொடி அவள் உதடுகளின் துடிப்பை ரசித்துப் பின் தாங்கமாட்டாதவனாய் மலரினும் மெல்லியவளின் மென்மையான இதழை தன் முரட்டு இதழால் சிறை செய்தான்....

ஏழாவது முத்திரை...

COPYRIGHTED

8:31 PM

https://drive.google.com/file

ஆனால் நீண்ட ஆழமான அழுத்தமான முத்திரை....

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

COPYRIGHTED

8:31 PM 51%
https://drive.google.com/file

மலரினும் மெல்லியவள்!

பாகம் 23

வார்த்தைகளில் தன் காதலை சொல்லாவிட்டாலும் உன் மேல் மனதில் எந்த அளவிற்கு ஆசை வைச்சிருக்கிறேன் பாருடி என்று காட்டுவதுப் போல் இருந்தது அர்ஜூனின் ஆழ்ந்த முத்தம்...

அந்த கணம் அவன் தன் அந்தஸ்தை பற்றி யோசிக்கவில்லை.. தன் வசதி பற்றி நினைக்கவில்லை... அவளின் படிப்போ, ஏழ்மை நிலையோ அவன் முன் தோன்றவில்லை....

அவனின் நினைவில் இருந்ததெல்லாம் அவள், அவள், அவள் மட்டுமே.

பத்தொன்பது வயதே ஆன அந்த சின்னஞ்சிறு சிட்டு அவனின் விவாகரத்து விஷயத்தில் அதிர்ச்சி அடைந்திருந்தாலும், அவனின் மென்மையான இதழ் முற்றுகையில் உடல் துவள, அவளின் தளிர் மேனியில் அவனின் ஸ்பரிசத்தால் எழுந்த சிலிர்ப்பை உணர்ந்தவன் இத்தனை நாளாய் தான் இழந்தது என்ன என்பதை உணர்ந்தான்...

நீண்ட நேரம் நீடித்த அந்த முதல் இதழ் முத்தத்தில் அவளுக்கு மூச்சிறைக்க, அவளின் திண்டாட்டத்தை உணர்ந்தவன் அவளது இதழ்களை தனது இதழ்களிடம் இருந்து விடுவித்தவன் அவளது கழுத்திற்கு இறங்கவும், அவனின் கைகள் அவளின் இடையை அழுத்தமாக பிடித்து தன்னுடன் இறுக்கி அணைத்ததில் அவளின் மார்பு அவன் நெஞ்சில் அழுத்தவும் தனது சுயநிலையை அடியோடு இழந்தான் அர்ஜூன்....

COPYRIGHTED

9:35 PM 75%
https://drive.google.com/file

தீனமான குரலில் "வேண்டாம்" என்று அவள் கெஞ்சினாலும் திமிறாமல் தனக்குள் அடங்கியிருந்த தன் மனையாளுக்கு தன் காதலையும் அதன் வேகத்தையும் இன்றே உணர்த்திவிடும் எண்ணத்தில் அர்ஜூனின் கரங்கள் அத்துமீற துவங்க, அவள் கழுத்திற்குள் ஆழ புதைந்திருந்த அவனின் இதழ்கள் கீழிறங்குவதை மேலும் தொடர, அவனின் தொடுகையும், அவனின் முரட்டு இதழ்களின் ஸ்பரிசமும் அவளை திக்குமுக்காட வைத்த அதே நேரத்தில் வீட்டின் முன் பக்க கதவு தட்டப்பட்டது....

ஒற்றை இதழொற்றலிலும், சில நிமிடங்கள் ஸ்பரிசத்திலும் அடங்கி விடக் கூடியதா அவனின் தாபமும் மோகமும்????

மேலும் மேலும் அவளில் மூழ்க துடிக்க இத்தனை நாள் இளம் மனைவி அருகில் இருந்தும் அவளை அடையாத ஏக்கம் அவனில் வெறியைக் கூட்ட, கதவு தட்டப்படும் ஓசைக் கூட அவனின் செவிகளில் இறங்கிவில்லை...

ஆனால் அவளோ அவனின் உடல் வலிமையில் புள்ளி மான் வேட்டைக்காரனிடம் அடங்கியிருப்பது போல் அடங்கி அவனை தள்ள இயலாதவளாக நிற்க, மேலும் கதவு தட்டப்பட தவித்தவள் தடுமாறியவாறே மெல்லிய குரலில்...

"எ... என்னங்க, அம்மா வந்துட்டாங்க போல... ப்ளீஸ் விடுங்க... கதவை திறக்கனும்" என்றாள்...

அவளின் வார்த்தைகள் காதலிலும் மோகத்திலும் கட்டுண்டு இருந்த அவனின் செவிகளுக்கு எட்டினால் தானே...

COPYRIGHTED

9:36 PM
https://drive.google.com/file

கணவனின் கரங்கள் மேலும் மேலும் இறுக்கியதில் தன்னை விடுவிக்கும் எண்ணமே அவனுக்கு இல்லை என்பதை உணர்ந்தவள் மீண்டும் தைரியத்தை வர வழைத்துக் கொண்டு...

"ஏங்க, ப்ளீஸ்ங்க... விடுங்க" என்று கூறி அவள் விலக முயற்சிக்க,

இதுவரை தன்னுடைய வலுவான அணைப்பிற்கு அடங்கி திமிறாமல் இருந்தவள் இப்பொழுது அவனை விட்டு விலகுவதை அறிந்து பல நாட்கள் எதிர்பார்த்து காத்திருந்த ஒரு பொருள் கிட்டத்தட்ட கைகூடும் நேரத்தில் நம்மிடம் இருந்து பிடுங்கப்படும் பொழுது வருமே ஒரு கோபம்...

அதேப் போன்றதொரு கோபமும்...

தாபம் வழிந்தோடும் உடலின் உணர்வுகள் சட்டென்று தடைப்பட்டு அறுந்ததில் ஆண் மகன்களுக்கே ஆன தன் உரிமை பறிக்கப்பட்டதும் வரும் எரிச்சலும் தோன்ற...

வேட்கை வழியும் பார்வையில் தன்னவளின் அழகின் பரிணாமங்களை உணர்ந்திட துடித்த தன்னுடைய தவிப்பையும் மனையாளுக்கு உணர்த்தும் வகையில் அவளை ஏறிட்டு பார்த்தவன் என்ன நினைத்தானோ சட்டென்று விலகினான்...

என்னதான் முதலில் தான் அவனை விட்டு விலக முயற்சித்து இருந்தாலும் அவளின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டு அவன் விருட்டென்று விலகியதில் அவளின் அலங்கோல நிலை அப்பட்டமாக வெட்ட வெளிச்சமாக தென்பட,

COPYRIGHTED

75% 9:36 PM
https://drive.google.com/file

தன் மனையாளை அந்த தோற்றத்தில் கண்டவன் உணர்ச்சிகளுக்கு மீண்டும் அடிமையாக, தத்தளித்து தவித்த தன் மனதை இறுக்கி பிடித்து கட்டுப்படுத்த முயற்சி செய்தவன்

அவளை விட்டு இரண்டு அடிகள் தள்ளி நிற்க,

அவனின் விழிகள் தன் பூவுடலில் படிந்திருக்கும் இடத்தினைக் கண்டவள் சட்டென்று தன் புடவையை இழுத்து தன் மார்பை மூட, அவளின் அவசரத்தில் புன் முறுவலை தவழவிட்டவன்...

"முடியையும் அட்ஜஸ்ட் பண்ணு" என்றானே பார்க்கலாம்...

முகம் முழுவதும் பூரிப்புடன் அவன் சொன்னதும், சட்டென்று தலை முடியையும் சரி செய்தவளின் கண்கள் வெட்கத்துடன் அவன் கண்களை சந்திக்க, தன் விரல்களால் அவளின் பட்டுக் கன்னனங்களை தடவியவன்...

"போ.. போய் கதவத் திற" என்க...

அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் வெட்கம் பிடுங்கி திங்க,

வேகமாக தன் அறைக் கதவை திறந்தவள் வெளியே செல்லவும் தன் தலையை அழுந்த கோதி தன்னிலையை அடக்கியவன் அவளைப் பின் தொடர்ந்தான்.

கதவை தட்டி இவ்வளவு நேரம் மகள் கதவை திறக்காததில் இருந்தே ஊகித்து இருந்த கலா "சே சிவ பூஜையில் கரடி மாதிரி

COPYRIGHTED

75% 9:37 PM
https://drive.google.com/file

வந்திட்டோம் போல" என்று கணவரின் காதுகளில் சொல்ல, திவ்யா கதவைத் திறந்தாள்...

கணவனுடனான மனத்தாங்களினால் வீட்டை விட்டு வந்திருந்த இந்த இரண்டு நாட்களும் அழுது கரைந்திருந்த மகளின் முகத்தில் இப்பொழுது தோன்றும் இந்த வெட்கமும், நாணத்தால் செந்நிறமாய் சிவந்திருந்த அவளின் முகமும் கணவன் மனைவிக்குள் நடந்தேறிய சல்லாப விளையாட்டுக்களை பெரியோர்களுக்கு உணர்த்த,

தங்களின் வரவால் தம்பதியினரின் பொன்னான நேரங்கள் தடைப்பட்டதை உணர்ந்தவர்கள் குற்ற உணர்வுடன் அவளைப் பார்த்தவாறே வீட்டிற்குள் நுழைந்து...

"திவ்யா... மாப்பிள்ளைக்கு சாப்பிட எதுனா கொடுத்தியா?" என்று அர்ஜூனைப் பார்த்துக் கொண்டே கேட்க,

தன் மனையாளைப் பார்த்தவாறே....

"இல்லை ஆண்டி... நாங்க சீக்கிரம் கிளம்பனும்" என்றான்...

அவன் கஷ்டம் அவனுக்கு...

இத்தனை நாட்கள் தன்னை ஏக்கத்துடன் காத்திருக்க வைத்த தன் மனையாள், தான் இவ்வளவு கடுஞ்சொற்கள் பேசி அவளை தூற்றி அவமானப்படுத்தியும் தன்னை ஒரு சொல் கூட கேட்காது தன்னை எதிர்க்கவும் செய்யாது தனக்குள் அடங்கியிருந்தவளைக் கண்டவன்....

COPYRIGHTED

9:37 PM

https://drive.google.com/file

தான் அவளுக்குள் அடங்கும் நேரத்தை எதிர்பார்த்து தங்கள் விட்டிற்கு எப்பொழுது செல்வோம் என்று காத்திருக்க, இதில் உணவு முக்கியமா? என்ன?...

அவன் கூறியதும் சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தவளுக்கு சற்று நேரத்திற்கு முன் அவன் தன்னிடம் வாங்கியிருந்த கையெழுத்து நியாபகம் வர, அது மட்டும் அல்லாமல் அவளை தன்னுடன் அழைத்துப் போக அவன் கூறிய காரணமும் புத்தியில் அடித்தது போல் கண்முன் தோன்ற,

மீண்டும் தன்னையும் அறியாமல் அச்சம் தொற்றிக் கொள்ள சிலைப் போல் தயங்கி நின்றவளின் அருகில் வந்த வினோத்...

"ஏன் திவ்யா, அதான் அத்தானே நேர உன்ன கூட்டிட்டு போக வந்திருக்கும் போது ஏன் இப்படி தயங்குற??" என்றான்...

திரும்பி தன் அண்ணனைப் பார்த்தவள் ஒன்றும் பேசாமல் நிற்க, அவள் அருகே வந்த சிவ சுப்ரமணியம்...

"திவ்யா, எந்த பிரச்சனையா இருந்தாலும் அத உங்களுக்குள்ளே தீர்த்துக்கனும்டா..... இப்படி வெளியே வரக் கூடாது, போ.... போய் கிளம்பு" என்றார்...

அவளின் உணர்வுகள் அர்ஜூனிற்கு நன்றாக புரிந்தது...

காதல் கொண்ட தன்னவளின் மனதிற்கு அணைப்பும் வேண்டும் அதே சமயம் காயம் கண்ட அவளது மனதிற்கு ஆறுதலும் வேண்டும்...

COPYRIGHTED

இரண்டுக்குமே மருந்து தான் தான் என்று அவனுக்கு தெரியாதா என்ன?

அவளின் அச்சத்தையும் கலக்கத்தையும் தவிப்பையும் போக்கும் பொருட்டு அவளின் வெகு அருகே நெருங்கி வந்தவன் காதிற்கறுகில் குனிந்து,

"இப்போ மட்டும் நீ என் கூட வரலை, உன்னை தூக்கி கார்ல போட்டுட்டு போய்ட்டே இருப்பேன்" என்றான்...

நிமிர்ந்துப் பார்த்தவளின் மனதில் சற்று முன் நடந்தது நினைவு வர, அவளின் முகத்தில் தெரிந்த மாற்றத்தைப் பார்த்தவன் மற்றவர்கள் அவளையேப் பார்ப்பதையும், ஒருவரும் தன்னைப் பார்க்காததையும் உறுதி செய்து கொண்டவன் அவளைப் பார்த்து கண் சிமிட்ட,

அதில் அவன் முகம் காண முடியாமல் அவள் சட்டென்று தலை குனிந்து நின்ற தோற்றம் அவனுக்கு சிரிப்பை வரவழைக்க,

"சரி அன்கில், அப்ப நாங்க கிளம்புகிறோம்" என்றான் இளம் முறுவலுடன்...

அவள் தன்னறைக்கு தன் பெட்டியை எடுக்க சென்றதும் அர்ஜூனின் அருகில் வந்த சிவ சுப்ரமணியம்....

"மாப்பிள்ளை, திவ்யா சின்ன பொண்ணு... வெளி உலகம் தெரியாதவள்.... பயந்த சுபாவம்.... ஆனால் ரொம்ப பொறுமைசாலி.... இதை

COPYRIGHTED

9:37 PM
https://drive.google.com/file

நான் அவ என் பொண்ணுங்கறதுக்காக சொல்லலை... அவள் அவங்க அம்மா மாதிரி.... என்ன சொன்னாலும் கேட்டுப்பா.... அவ ஏதாவது தப்பு பண்ணியிருந்தா நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்" என்று சொல்ல,

"ஆமாம், மாப்பிள்ளை.... அவள் வந்தவுடன் நான் ஸ்ரீயிடம் பேசுறேன்னு தான் சொன்னேன்.... அவ தான் விடாப்பிடியா கூடாதுன்னு சொல்லிட்டா.... ஸ்ரீயிடமும் நாங்க மன்னிப்பு கேட்டதா சொல்லுங்க" என்க...

அப்பொழுது தான் அர்ஜூனிற்கு புரிந்தது தன் அன்னை மருத்துவமனையில் இருப்பது இவர்கள் யாருக்கும் தெரியாது என்று...

அதனால் தான் திவ்யா தன்னிடம் தன் அன்னையைப் பற்றியும் விசாரிக்கவில்லையோ என்று தோன்ற இவர்களிடம் சொல்லலாமா என்று யோசித்தவன்...

"இப்பொழுது சொன்னால் திவ்யாவும் பயந்து விடுவாள்... அதனால் நாளைக்கு மாமை விட்டே இவங்கக் கிட்ட பேச சொல்லனும்" என்று நினைத்து கொண்டான்..

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே திவ்யா வர, பெற்றோரிடமும், தமையனிடமும் சொல்லிவிட்டு அவர்கள் காரை நோக்கி செல்ல, தன் அண்ணனை திரும்பி பார்க்கவும் அவளின் அருகில் வந்த வினோத் கண்கள் கலங்க...

"எனக்கு ஃபோன் பண்ணுடா" என்றான்...

COPYRIGHTED

அவர்களின் அன்பை பார்த்த அர்ஜூனிற்கு தான் எப்பொழுதும் மஹாவிடம் தன்னுடைய பாசத்தை வெளிக்காட்டியதே இல்லையே என்று நினைக்க,

தன் வாழ்க்கைக்குள் வந்த இந்த சின்ன பெண் எத்தனை மாற்றங்களை கொண்டு வந்திருக்கிறாள் என்று அவனால் உருகாமலும் இருக்க முடியவில்லை..

அவர்களின் கார் கண்களில் இருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் உள்ளே வந்ததும் சிவ சுப்ரமணியம்....

"மாப்பிள்ளை நல்ல வசதின்னு தெரியும்... ஆனால் இவ்வளவு பெரிய கோடீஸ்வரரா இருப்பார்னு நான் நினைச்சுக்கூட பார்க்கவில்லை கலா.... எனக்கு என்னமோ இன்னும் அதிகமா பயம் வந்திருக்கு.... திவ்யா எந்த குறையும் இல்லாமல் இருக்கனும்"

"ஏங்க, மாப்பிள்ளை நம்ம ஸ்ரீக்கும் பாலா அண்ணனுக்கும் பிறந்தவர்.... நிச்சயம் நம்ம பொண்ணா நல்லா வச்சுப்பாரு... இல்லைன்னா அவ இப்படி கிளம்பி வந்தாலும் அவரா வந்துக் கூட்டிக்கொண்டு போவாரா? என்றார்..

வினோத்திற்கோ...

"மஹாவை எப்படி நமக்கு திருமணம் செய்து கொடுப்பாங்க? நமக்கும் அவங்களுக்கும் மடுவுக்கும் மலைக்கும் உள்ள உயரம் ஆச்சே" என்று கலங்கிப் போய் இருந்தான்.

அவன் கவலை அவனுக்கு!!!!

9:38 PM
https://drive.google.com/file

தொழில் வட்டாரத்தில், வெளி உலகத்தில் எத்தனை எத்தனையோ போட்டிகளையும், இன்னல்களையும், வலிகளையும் சந்தித்திருந்த அர்ஜூனிற்கு, அவற்றில் எண்ணிலடங்கா ஏற்றங்களையும் வெற்றிகளையும் கண்டவனுக்கு அப்பொழுதெல்லாம் வராத அக்களிப்பு மீண்டும் பல நாட்களுக்கு பிறகு தன்னருகில் அமர்ந்திருக்கும் தன்னவளின் எழில் முகத்தை திரும்பி பார்த்ததும் வந்தது...

சாதிக்க முடியாத, முடியாது என்று நினைத்து மருங்கி ஒடுங்கி இருந்த ஒரு காரியத்தில் ஒருவரும் எதிர்பாராது திடீரென்று வெற்றி ஏற்படும் பொழுது வருமே ஒரு இறுமாப்பு... மகிழ்ச்சி... பூரிப்பு...

அதை போன்ற உணர்வுகளில் சிக்கி இருந்தான் அர்ஜூன்...

மதியம் அலுவலகத்தில் இருந்து கடலூருக்கு அவன் கிளம்பும் பொழுது கூட அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.... தன் மனைவி எந்தவித மறுப்பும் சொல்லாமல்,தன்னை எதிர்க்காமல் இப்படி தன்னுடன் திரும்பி வருவாள் என்று...

அவள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவளைத் தூக்கிக் கொண்டாவது வருவேன் என்று தன் மனதிற்குள் சூளுரைத்துக் கொண்டிருந்தவனுக்கு அவள் எதிர்ப்பைக் காட்டாது இவ்வாறு அமைதியாக வருவது மனதிற்கு அத்தனை இதமாக இருந்தது...

சில நேரங்களில் கிடைப்பதற்கரிய வைரங்கள் நமக்கு எந்த போராட்டமும் இல்லாமல் கிடைக்கும் பொழுது அதன் அருமை தெரியாமல் அதனை தூர எறிந்துவிடுவோம்....

COPYRIGHTED

9:38 PM
https://drive.google.com/file

அருமை தெரியவரும் பொழுது அது நம்மை விட்டு எட்ட முடியாத தூரம் போயிருக்கும்... அதை போன்ற சூழ்நிலைகளில் ஒரு வேளை நாமே எதிர்பார்க்காமல் அந்த வைரங்கள் நம்மிடம் திரும்பி வந்து சேர்ந்தால்?????

பாதியில் நின்றிருந்த தன் மனையாளுடனான காதல் களியாட்டத்தை தொடர அதிவேகமாக காரை செலுத்திக் கொண்டிருந்த அர்ஜூனின் மனதில் ஊர்ந்துக் கொண்டிருந்த குதூகலத்தை தடுப்பது போல் அலறியது அவனது அலை பேசி...

அழைத்தது கதிர் தான்...

அலுவல் விஷயமாக பேசிக் கொண்டே, வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வரும் மனைவியையும் ரசித்துக் கொண்டே வந்தவன் எதிர்பாராமல் பேச்சு பல நிமிடங்கள் தொடர திரும்பிப் பார்த்த பொழுது அவனது அழகிய மனையாள் சிறு பிள்ளைப் போல் காரின் கண்ணாடி ஜன்னலில் தலை சாய்த்து தேவதை போல் உறங்கிக் கொண்டிருந்தாள்...

பேச வேண்டிய விஷயங்களைப் பேசி முடித்தப் பின்...

"ஓகே கதிர், ஐ வில் ஸீ யூ டுமாரோ [I will see you tomorrow]"

என்று அழைப்பை துண்டித்தவனுக்கு தன்னவளுடன் தனித்து அதுவும் தூங்கும் அவளை இடையறாது ரசிக்க ஏதுவாக இருந்த இந்த நீண்ட முதல் பயணம் முத்தான பயணமாக அமைவது போல் இருந்தது காரினுள் வழிந்த அந்த இனிமையான இசையில் மறைந்த திரு. நா முத்துகுமார் அவர்கள் எழுதிய பாடல் ஒலித்த பொழுது....

COPYRIGHTED

அர்ஜுனின் மனதிற்கும் ஏக்கத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற மாதிரி இருந்த அந்த பாடல்.....

முழுமதி அவளது முகமாகும்

மல்லிகை அவளது மணமாகும்

மின்னல்கள் அவளது விழியாகும்

மௌனங்கள் அவளது மொழியாகும்

மார்கழி மாதத்து பனித்துளி அவளது குரலாகும்

மகரந்த காட்டில் மான்குட்டி அவளது நடையாகும்

அவளை ஒரு நாள் நான் பார்த்தேன்

இதயம் கொடு என வரம் கேட்டேன்

அதை கொடுத்தாள் உடனே எடுத்து சென்று விட்டாள்

கால்தடமே பதியாத கடல்தீவு அவள்தானே

அதன் வாசனை மணலில் பூச்செடியாக நினைத்தேன்

கேட்டதுமே மறக்காத மெல்லிசையும் அவள்தானே

அதன் பல்லவி சரணம் புரிந்தும் மௌனத்தில் நின்றேன்

ஒரு கரையாக அவள் இருக்க மறு கரையாக நான் இருக்க

இடையில் தனிமை தளும்புதே நதியாய்

கானல் நீரில் மீன் பிடிக்க கைகள் நினைத்தால் முடிந்திடுமா

நிகழ்காலம் நடுவில் வேடிக்கை பார்க்கிறதே

COPYRIGHTED

75% 9:38 PM
https://drive.google.com/file

அமைதியுடன் அவள் வந்தாள்

விரல்களை நான் பிடித்து கொண்டேன்

பல வானவில் பார்த்தே வழியில் தொடர்ந்தது பயணம்

உறக்கம் வந்தே தலைகோத மரத்தடியில் இளைப்பாறி

கண் திறந்தே அவளும் இல்லை கசந்தது நிமிடம்

அருகில் இருந்தாள் ஒரு நிமிடம்

தொலைவில் தெரிந்தாள் மறு நிமிடம்

கண்களில் மறையும் பொய்மான் போல ஓடுகிறாள்

அவளுக்கும் எனக்கும் நடுவினிலே திரை ஒன்று தெரிந்தது

எதிரினிலே முகமுடி அணிந்தால் முகங்கள் தெரிந்திடுமா

COPYRIGHTED

சுனாமி போன்று வாழ்க்கையில் எத்தனை பெரிய சம்பவங்களோ அல்லது சூழ்நிலைகளோ மனதை சுழற்றி அடித்து கொண்டிருந்தாலும், அமைதியான சூழலில், அதுவும் தன் மனதிற்கு நெருங்கியவர்கள் அருகில் இருக்க, இது போன்ற மெல்லிசையை கேட்பது உள்ளத்திற்கு அமைதியை அளிப்பது மட்டும் இல்லாமல் நம் உயிரின் வேர் வரை சென்று இதயத்தையும் பரவசப்படுத்தும்...

அதை போன்ற ஒரு உணர்வில் இருந்தான் அர்ஜூன்....

அருகருகே இருந்த போதும், மனம் கொள்ளா காதல் இருந்த போதும், உள்ளங்கள் இரண்டும் காதலை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை... ஆனால் வார்த்தைகளால் சொன்னால் தான் காதலா????....

கணவனைப் பிரிந்து வந்த இந்த இரண்டு இரவுகள் முழுவது
அழுகையில் கரைந்ததினால் வராத தூக்கத்தினாலோ, அல்லது தன் கனவனின் அருகாமை அளித்த நிம்மதியினாலோ, அல்லது சில மணித் துளிகளுக்கு முன் அவனின் இறுக்கிய அணைப்பினால் வந்த சுகத்தினாலோ என்னவோ தூக்கம் திவ்யாவை அழுத்த.

தன் தலையை கார் இருக்கையில் சாய்த்து தூங்க ஆரம்பித்தவள் சிறிது நேரத்தில் தன்னையும் அறியாமல் தன்னவனின் தோள் சாய்ந்தாள்.

அவள் தலை தன் தோளில் பட்டதும் திரும்பி பார்த்தவன், அந் இருட்டிலும் வெளியில் இருந்து வந்த சிறு வெளிச்சத்தில் அவளின் முக முழுமதி போல் தொன்ற அந்த பாடலின் வரிகளில் வருவது போல் முழுமதி அவளது முகமாகும், மல்லிகை அவளின் மனமாகும் என்பது போல் இருக்க மெதுவாக விசில் அடித்துக் கொண்டு காரை செலுத்தியவனுக்கு உலகமே அழகாக தெரிந்தது...

காரின் வேகத்தை அவன் மேலும் அதிகரிக்க அவள் தலை கீழே சாய்வது போல் இருக்க, சட்டென்று அவளை நெருங்கி அமர்ந்தவன் இடது கையை கியர் பாக்ஸிற்கும் அவளின் தலைக்கும் மாற்றி மாற்றிக் கொடுத்துக் கொண்டு காரை ஓட்டியவனின் மனம் மகிழ்ச்சியில் சிறகு விரித்து பறந்துக் கொன்டிருந்தது...

குடும்பத்தினருக்கும், தொழில் வட்டாரத்திலும், வெளி உலகத்தினருக்கும் தெரிந்த அர்ஜுன் தொழிலில் ஒரு அரக்கன்....

எதிராளியை மட்டும் அல்ல, அவனின் கிளைகளையும் கூட உருத் தெரியாமல் அழித்துவிடுபவன் என்று பேரெடுத்து இருப்பவன்... தன்னுடன் மோதும் எவரையும் அதிகாரத்துடனும் சாமர்த்தியத்தாலும் அஞ்சாமல் அடித்து வீழ்த்துபவன்....

74% 9:47 PM
https://drive.google.com/file

எந்த உணர்வுகளுக்கும் ஆட்படாத அந்த அஞ்சா நெஞ்சனின் நெஞ்சில் கூட காதலை சுரக்க செய்த தன் மனையாளுடனான இந்த பயணம் சுகமாக இருக்க, அவளை திரும்பி பார்த்தவன் அவளின் நெற்றியில் சிலும்பிய முடியை ஒதுக்கி மென்மையாக முத்தமிட்டான்...

மனம் இலகுவாக காரை வேறு விரைவாக செலுத்திக் கொண்டு வந்ததால் மருத்துவமனையை சீக்கிரம் அடைய, காரை நிறுத்தியவன் தன் தோளில் அழுந்த முகம் வைத்து உறங்கிக் கொண்டிருந்தவளை சில நொடிகள் ரசித்து பார்த்து பின்...

"திவ்யா" என்று அழைக்க,

அவள் விழித்தால் தானே...

அவன் அழைக்கவும் அந்த சத்தத்தில் தன் முகத்தை தன் கணவனின் தோளில் திருப்பி லேசாக தேய்த்துக் கொண்டவள் தன்னையும் அறியாமல் தனது இடது கரத்தை அவன் நெஞ்சில் வைத்து அவன் சட்டையை இறுக்கிப் பற்றி தன் தூக்கத்தை தொடற, மனம் தடுமாறிப் போனான் அர்ஜூன்...

தன்னவளின் அருகாமையில் குழந்தை தனமான அவளின் செயலில் கணவனாக கர்வம் கொண்டவன் மெல்ல அவளின் இடது கன்னத்தில் தனது வலது கையை வைத்து தன் கட்டை விரலால் அவளி மலரிதழ்களை மென்மையாக தடவ, அவனின் தொடுகையில் உதடுகள் கூச அத்தனை நேரம் அசந்து தூங்கிக் கொண்டு வந்தவள் கண் விழிக்கவும் அப்பொழுது தான் கவனித்தாள் தான் தன் கணவனின் தோளில் சாய்ந்து இருப்பதையும், அவனின் விரல்கள் தன் இதழ்களில் கவி பாடிக் கொண்டிருப்பதையும்....

COPYRIGHTED

74% 9:47 PM
https://drive.google.com/file

சட்டென்று நகர்ந்தவளின் முகத்தில் நாணம் படற அந்த இரவு நேரத்தின் இருட்டிலும் அவளின் வெட்கத்தில் சிவந்த முகத்தை பார்த்தவன் இதற்கு மேலும் தாமதிக்க முடியாது என்று தன் அன்னையை சந்தித்த பிறகு விரைவில் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று முடிவெடுத்து...

"இறங்கு" என்றான்...

இறங்கியவள் சுற்று முற்றும் பார்க்க சில விநாடிகள் கழித்தே புரிந்தது அவர்கள் இருப்பது மருத்துவமனை என்று...

இங்கு எதற்கு வந்திருக்கிறோம் என்று அவள் அவனைக் கேள்வியாகப் பார்த்தவள் மனம் படபடக்க,

"யாருக்கு? என்னாச்சுங்க? ஏன் இங்க வந்திருக்கிறோம்? என்று கேட்க,

ஒன்றும் பேசாமல் காரை பூட்டியவன் "வா" என்பது போல் தலையை அசைத்துவிட்டு நடக்க குழப்பத்துடன் அவனைப் பின் தொடர்ந்தாள்...

வாசலில் இருந்த காவலாளி...

"சார் மணி பதினொன்னாகுது... விசிட்டர்ஸ் டைம் முடிஞ்சுடுட்டுது.... நீங்க நாளைக்கு வாங்க" என்று சொல்ல,

COPYRIGHTED

அது வரை இருந்த ரம்மியமான மனநிலை மாறி அர்ஜூனின் கோபம் மீண்டும் தலை தூக்கியது...

அவரை முறைத்துப் பார்த்துக் கொண்டே மருத்துவமனையின் இயக்குனர் சுந்தருக்கு அழைத்தவன்,

"அன்கில்... கேன் யூ ஆஸ்க் தி செக்யூரிட்டி டு லெட் மி இன்? [Uncle... Can you ask the security to let me in?] " என்றான்...

அவர் மறுமுனையில் என்ன சொன்னாரோ அலை பேசியை காவலாளியிடம் நீட்ட, வாங்கி காதில் வைத்த காவலாளி "சரி சார்" என்றவன் அலை பேசியை அர்ஜூனின் கையில் திருப்பி கொடுத்து "சாரி சார்" என்று சொல்லிக் கொண்டே கதவை திறந்துவிட்டான்.

"இவர் என்ன செய்தாலும் மாறப் போவதில்லை... செக்யூரிட்டி அவர் வேலை செய்கிறார்... அதுக்கு ஏன் இவ்வளவு கோபம்?" என்று நினைத்துக் கொண்டே அவனைப் பின் தொடர்ந்தவள் அவன் சென்று நின்ற அறையை பார்த்ததும் அவனை நிமிர்ந்து பார்க்க...

"உள்ள போ" என்றான்...

என்ன? யாருக்கு? என்ன உடம்புக்கு? என்று பதற்றத்துடன் அவனை நோக்கியவாறே அறைக்குள் சென்றவள் அங்கு தன் மாமியாரை படுக்கையில் கண்டதும் அதிர்ச்சியில் அவரின் அருகில் ஓடியவள்...

"அத்த, என்னாச்சுத்த? என்க...

9:47 PM 74%
https://drive.google.com/file

திவ்யாவை அந்த நேரத்தில் எதிர்பார்க்காத ஸ்ரீக்கு அவளை விட அதிர்ச்சியாக இருந்தது...

"நீ எப்போ திவ்யா வந்த?"

"உங்களுக்கு என்னாச்சு அத்த? அத சொல்லுங்க முதல்ல"

அங்கு தூங்கிக் கொண்டிருந்த மஹாவும் திவ்யாவின் குரலில் எழுந்து விட, திவ்யாவை பின் தொடர்ந்து வந்த அர்ஜூனைப் பார்த்ததும் ஸ்ரீயின் குழப்பத்திற்கு விடை கிடைத்தது...

அர்ஜூன் தான் திவ்யாவை வர வழைத்து இருக்கிறான் என்று.

ஆனால் அர்ஜூன் நேரே சென்றது அவருக்கு தெரிய வழியில்லையே...

திவ்யா ஸ்ரீயிடம்...

"அத்த சொல்லுங்கத்த... என்னாச்சு உங்க உடம்புக்கு?" என்று கண்கள் கலங்க கேட்க,

"ஏம்மா வீட்ட விட்டு போன? அதுவும் என் கிட்ட கூட சொல்லாம லெட்டர் எழுதி வச்சுட்டு?" என்றார் பரிதவிப்புடன் குரலும் வார்த்தைகளும் நடுங்க...

கம்பீரமாக அத்தனை தொழிற்களையும் ஒற்றையாளாக, வழிகளில் எதிர்பட்ட ஒவ்வொரு எதிராளிகளையும் போட்டியாளர்களையும் எளிதில் வென்று வெற்றிக் கொடிய நாட்டிய தன்

COPYRIGHTED

74% 9:48 PM
https://drive.google.com/file

அன்னை இன்று தன் மனையாளைப் பார்த்ததும் விழிகள் கலங்க குரலிலும் நடுக்கம் தெரிய கலக்கத்துடன் அவள் கரங்களை இறுக்கப் பற்றி கேட்ட பொழுது அர்ஜூனிற்கு புரிந்து போனது தன்னவளின் மலரினும் மெல்லிய மனதின் அழகு...

தன் மாமியார் கலக்கத்துடன் கேட்டதும் தன்னையும் அறியாமல் தன் கணவனை திரும்பி பார்த்தவள் அவன் அவளையே வைத்தக் கண் வாங்காமல் பார்த்திருப்பதை கண்டு ஒன்றும் சொல்லாமல் தலை குனிய,

"அண்ணி, நீங்க வீட்டை விட்டு போனது தெரிஞ்சதும் அம்மாவிற்கு ஹார்ட் அட்டாக் வந்திடுச்சு... நல்ல வேளை உடனே கொண்டு வந்து ஹாஸ்பிட்டலில் சேர்த்துட்டாங்க" என்று மஹா கூறியதும் ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் உடலில் பாய்ந்தது போல் உணர்ந்து அதிர்ந்தாள் திவ்யா...

"ஐயோ! என்னாலயா? அத்த என்ன மன்னிச்சுடுங்க அத்த... நான் சத்தியமா இந்த மாதிரி நடக்கும்னு நினைச்சுக் கூட பார்க்கலை... தெரிஞ்சிருந்தா நிச்சயம் உங்கள விட்டுட்டு போயே இருக்க மாட்டேன்" என்று கண்களில் நீர் ஆறாக பெருக்கெடுக்க வெடித்து கதறினாள்...

அவளை இழுத்து தன்னருகில் அமர்த்திக் கொண்ட ஸ்ரீ,

"எந்த பிரச்சனையாக இருந்தாலும் வீட்டை விட்டு போகக் கூடாது திவ்யா... அது ரொம்ப தப்பு.... உன் பக்கமே நியாயம் இருக்கட்டும்... ஆனால் அத பேசித் தான் தீர்த்துக்கனுமே தவிர இப்படி எடுத்தோம் கவிழ்த்தோம்னு முடிவெடுக்க கூடாது.... அதுவும் ஒரு சின்ன பொண்ணு... ஊர் பேர் தெரியாத ஊர்ல இருந்து தனியா இப்படி வீட்டை விட்டு போறதெல்லாம் ரொம்ப தப்பு... ஏதாவது ஏடா கூடமா ஆனா என்ன பண்ணுவ? என்க,

COPYRIGHTED

"கடவுளே! இப்பொழுது கூட என்னால் தான் உடம்பு முடியாமல் போனதை நினைக்காமல் என்னைப் பத்தி கவலை படுறாங்க. அவங்களுக்கு போய் இவ்வளவு கஷ்டம் கொடுத்திட்டேனே" என்று மனமுருக உள்ளுக்குள் கதறியவள்...

"இனி உங்கள விட்டு எங்கேயும் போக மாட்டேன் அத்த" என்றாள்.

"சரி அது இருக்கட்டும்.... நீ எப்படி, எப்போ வந்த?"

அவரின் கேள்வியில் மீண்டும் தலை கவிழ்ந்தவள் மெல்லிய குரலில்....

"அவங்க தான் அத்த வந்து கூப்பிட்டுட்டு வந்தாங்க" என்றதும் ஸ்ரீயின் முகத்திலும் மஹாவின் முகத்திலும் ஆச்சரியம் டன் டன்னாக வழிந்தது...

என்னது? அர்ஜூன் போய் கூட்டிட்டு வந்தானா என்று ஸ்ரீ மஹாவைப் பார்க்க, சொன்னேன் இல்லையா அண்ணாவுக்கு அண்ணிய ரொம்ப பிடிக்கும் என்று, என்று உள்ளர்த்தத்துடன் மஹா ஸ்ரீயை பார்க்க, இவங்க ஆச்சரியப்படுவதைப் பார்த்தால் இப்போதைக்கு எங்களை விட மாட்டாங்க போல இருக்கே, இங்க இருந்து இப்போ இவளை எப்படி கூட்டிட்டு போறது? என்று அர்ஜூன் யோசனையில் ஆழ்ந்தான்...

ஆனால் அவன் அர்ஜூன் ஆயிற்றே!! இதற்கெல்லாம் கூச்ச படுபவனா என்ன?

COPYRIGHTED

9:48 PM 74%
https://drive.google.com/file

"ஓகே மாம், அப் அன்ட் டௌன் ட்ரைவிங் பண்ணியது எக்ஸ்ட்ரீம்லி டைர்டா [Ok Mom...Up and Down driving extremely tired] இருக்கு, வீ வில் கம் போக் டுமாரோ [We will come back tomorrow]" என்றவன் திவ்யாவைப் பார்த்து வா என்பது போல் தலை அசைக்க,

ஏற்கனவே இன்ப அதிர்ச்சியில் இருந்தவர்களுக்கு மேலும் மேலும் அவன் ஆச்சர்யத்தை கொடுக்க,

"போதும்டா அர்ஜூனா... ஏற்கனவே ஹார்ட் அட்டாக் வந்த உடம்பு... இதற்கு மேல் தாங்காது" என்பது போல் அவனைப் பார்த்தவர்...

"சரி நீங்க கிளம்புங்கப்பா... நாளைக்கு பார்க்கலாம்" என்றார்...

அவன் பாதி ஆங்கிலத்தில் சொன்னது புரியாமல் திவ்யா அமர்ந்திருக்க அவளை திரும்பி பார்த்தவன் தான் வா என்று தலை அசைத்தும் திருதிருவென்று முழித்தவளைப் பார்த்து புன்னகைத்தவன்...

"கிளம்பு" என்றான்...

ஆனால் திவ்யாவிற்கு தான் மனம் வரவில்லை... வீட்டிற்கு சென்றால் என்ன நடக்கும் என்பது அவளுக்கு நன்றாக தெரியும்...

இத்தனை தூரம் தன்னை வந்து அழைத்துக் கொண்டு வந்தவ நிச்சயம் கணவனின் உரிமையை தன்னிடம் எதிர்ப்பார்ப்பார்.

இனி அதை மறுக்க முடியாது... மறுத்தாலும் விடமாட்டார்... ஆனால் தன்னால் இப்படி இருதய நோய் வந்து அத்தை இருக்கும்

COPYRIGHTED

74% 9:48 PM
https://drive.google.com/file

பொழுது தான் மட்டும் சந்தோஷமாக இருப்பது பெரும் பாவம் இல்லையா? என்று யோசித்தவள்...

"நான் இன்னைக்கு நைட் இங்கேயே அத்தைக் கூட இருக்கேன்" என்றாள் தன் கணவன் என்ன சொல்வானோ என்ற பரிதவிப்புடன்...

ஆனால் ஸ்ரீக்கோ மனம் வரவில்லை... இத்தனை தடங்கள்களுக்கு பிறகு, மனஸ்தாபங்களுக்கு பிறகு சின்னஞ்சிறுசுகள் ஒன்று சேரப் போகிறார்கள்... இந்த நாளுக்காகத் தானே அவரும் காத்திருந்தது... அவர்களின் பொக்கிஷமான இரவை தன்னால் இழக்கப் போவதை உணர்ந்தவர்...

"இல்ல திவ்யா, அதான் மஹா இருக்கால்ல... நீ போய்ட்டு நாளைக்கு வா" என்க...

"எப்படி அத்தை இந்த நிலைமையில் உங்களைப் பார்த்திட்டு விட்டுட்டு போறது?" என்றாள்...

அவளின் இடத்தில் இருந்து பார்த்தால் அவள் சொல்வது சரியே...

மீண்டும் தன் கணவனை நிமிர்ந்து பார்த்தவளின் முக மாற்றங்களைப் கண்டவன் அவளின் எண்ணங்களையும் புரிந்துக் கொண்ட ஒரு நல்ல கணவனாக....

"ஓகே மாம், அப்ப நாளைக்கு வரேன்..." என்றான்...

COPYRIGHTED

9:48 PM
https://drive.google.com/file

பேசிக் கொள்ளாமலே ஒருவொருக்கொருவரின் எண்ணங்களை புரிந்துக் கொண்டவர்களைப் பார்த்த ஸ்ரீக்கு, இவர்களின் நேற்றைய பிரிவு இன்றைய மனம் ஒற்றுதலை கொடுத்திருக்கிறது என்று உணர்ந்தவராக..

"சரிப்பா, அப்போ எதுக்கு இரண்டு பேர் இங்க? நீ மஹாவக் கூட்டிட்டு போப்பா" என்றார்

சரி என்றவன் மஹாவுடன் கிளம்ப, என்ன தான் தான் வரவில்லை என்று கூறி விட்டாலும் அவனை பிரிவது மனதில் அழுத்தமான ஒரு வித வலியைக் கொடுக்க, அவனை நிமிர்ந்துப் பார்த்தவளின் கண்களில் தெரிந்த ஏக்கத்தைப் பார்த்தவனுக்கு உள்ளம் பூரித்து தான் போனது...

"நாம் ஒன்று சேர்வதற்கு இன்னும் ஒரு நாள் இருக்கு போல டி" என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவன் அவளைப் பார்த்து தலையை மட்டும் அசைத்து விடை பெற்று செல்ல, அவன் சென்ற பிறகும் வாயிலையே பார்த்திருந்த மருமகளை பார்த்தவர்...

"நாளை எப்படியும் இவர்களுக்கு நல்ல நாளாகவே விடிய வேண்டும்" என்று மனதிற்குள் பிராத்தனை செய்துக் கொண்டார்...

அர்ஜூன் திவ்யாவின் சங்கமத்திற்கு இன்னும் ஒரு நாள்... ஒரே ஒரு நாள் காத்திருப்போம்... (வாசகர்களாகிய நீங்கள் இன்னும் மூன்று நாட்கள் காத்திருங்கள் ப்ளீஸ்....)

மலரினும் மெல்லியவள்!

தொடரும்...

COPYRIGHTED

9:50 PM 73%
https://drive.google.com/file

மலரினும் மெல்லியவள்!

பாகம் 24

அர்ஜுன் சென்றவுடன் திவ்யா வாயிலையே சிறிது நேரம் பார்த்திருக்க, அவளின் கண்களில் தெரிந்த ஏக்கத்தைப் பார்த்த ஸ்ரீ அவளைத் தன் அருகில் அழைத்தவர்...

"திவ்யா... அர்ஜுன் உன்னிடம் ரொம்பக் கோபமா நடந்திக்கிட்டானா? உன்ன வருத்தப்படுத்திற மாதிரி ஏதாவது பேசினானா?" என்க...

அவரின் முகத்தில் தெரிந்த ஆர்வத்தையும், குரலில் தெரிந்த ஏக்கத்தையும் கண்டவள் அவரின் உடல் நிலையையும் கருத்தில் கொண்டு தன் கணவன் தன்னிடம் விவாகரத்துப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கியதைச் சொல்லாமல்...

"இல்லத்த... அவங்க எதுவும் கோபமா பேசலை" என்றாள் கனிவுடன்...

"வேற?" என்று அவர் இழுக்க, அவர் என்ன கேட்கிறார் என்று புரிந்துக் கொண்டவள் அதீத வெட்கத்துடன்

COPYRIGHTED

73% 9:50 PM
https://drive.google.com/file

தலை கவிழ ஸ்ரீக்கு தன் மகனின் மனமாற்றமும் ஏதோ ஒரு விதத்தில் தன் மனைவியிடம் தன் மனதில் உள்ளதை வெளிப்படுத்தியிருந்ததும் அத்தனை மகிழ்ச்சியைத் தந்தது...

திவ்யாவை அவன் பார்த்திருந்த விதமே பறை சாற்றியதே அவர்களின் ஊடல் முடிந்து கூடலின் நேரம் வந்துவிட்டது என்பதை...

தன் மனைவியின் மனதில் தோன்றி இருந்த குற்ற உணர்வில் உள்ளம் உருகி அவளை மேலும் காயப்படுத்தக் கூடாது என்று தான் அவளை இன்று இங்கு விட்டுச் சென்றிருக்கிறான் என்று...

மனதிற்குள் முடிவு செய்தார்.... நாளை எப்படியும் திவ்யாவை அர்ஜூனோடு வீட்டிற்கு அனுப்பி வைத்து விட வேண்டும் என்று....

அர்ஜூன் கொடுக்கச் சொன்னதாகச் செக்யூரிட்டி திவ்யாவின் பெட்டியைக் கொண்டு வந்து கொடுக்க, தன் கணவனின் கரிசனத்தில் மனம் சிலிர்த்தவள் அவனால் எவ்வாறு இப்படித் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிகிறது என்று வியந்துப் போனாள்...

COPYRIGHTED

தன் வீட்டில் தான் அவனை விட்டு விலக

9:50 PM 73%
https://drive.google.com/file

தன் வீட்டில் தான் அவனை விட்டு விலக முயற்சிக்கும் பொழுது தன்னை விடாமல் அவன் இறுக்கிப் பிடித்திருந்த விதத்திலேயே அவளுக்குத் தெரிந்ததே அவனின் தாபமும் வெறியும்...

தான் அவனை விட்டு விலகியதும், தன் அலங்கோல நிலையை ரசித்துப் பார்த்தவனின் கண்கள் அப்பட்டமாக எடுத்துக் காட்டியதே தன் கணவனின் ஒட்டுமொத்த தேடலையும் தவிப்பையும்...

அப்படி இருக்க அவனுக்குள்ளே அவன் போட்டுக் கொள்ளும் கட்டுப்பாடும், தன்னைச் சுற்றி அவன் கட்டிக்கொள்ளும் அரணும் அவளை அதிசயக்க வைத்தது என்று தான் சொல்ல வேண்டும்...

ஆனால் அது தானே அர்ஜுனின்...

"தன்னுணர்வுகளை அடக்கத் தெரிந்தவனே இந்த உலகத்தை வெல்பவன்... உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதாகும்" என்ற கூற்று அர்ஜுனிற்கு மிகவும் பொருந்தும்.

ஆனால் அப்படி இருந்த அர்ஜுனே தன் உணர்ச்சிகளைக் கட்டுபடுத்த முடியாமல் அள்ள

COPYRIGHTED

73% 9:50 PM
https://drive.google.com/file

முடியாத வார்த்தைகளைக் கொட்டி அதனால் தன் வாழ்வில் வசந்தமாக வந்து தன் இதயத்திலும் புத்தியிலும் உணர்வுகளிலும் கலந்து நிறைந்து இருக்கும் தன்னவளுக்கும்,

தன் உதிரத்தைக் கொடுத்த தன்னைப் பெற்று இன்று தொழில் உலகத்தில் தன்னை ஒரு முடி சூடா மன்னனாக வலம் வர பாதை அமைத்த கொடுத்த அன்னைக்கும் எத்தனை பெரிய கேட்டை செய்ய இருந்தான்...

தவறு செய்வது மனிதனின் இயல்பு தான்... அதனைத் திருத்திக் கொள்ளும் போது தான் அவன் தெய்வமாக மாறுகிறான்...

அதனை உணர்ந்ததாலோ என்னவோ உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் தன் மனைவியின் அருகாமையை அவளுடனான தாம்பத்தியத்தை, தன்னவளுடனான சங்கமத்தை கத்தி கூச்சல் போட்டு இறைஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தாலும், அவளின் உணர்வுகளை மதித்து அவளை விட்டுத் தனித்துச் சென்று இருக்கிறான் தன் இரவை கழிக்க...

COPYRIGHTED

9:50 PM
https://drive.google.com/file

வீட்டிற்குத் திரும்பி வந்த அர்ஜூனிற்கும், தன் மாமியாரின் படுக்கைக்கு அருகில் போட்டிருந்த கட்டிலில் படுத்த திவ்யாவிற்கும் மீண்டும் அந்த இரவு நீண்ட இரவாகிப் போனது...

ஆனால் மனம் முழுவதும் அக்களிப்பில், தன் துணையை நினைத்துத் தாபத்தில் அழகான விடியலுக்காகக் கத்திருக்கும் இரவாகக் கழிந்த இரவு அது...

மறு நாள் பாலா மஹாவுடனும் அருணுடமும் மருத்துவமனைக்கு வந்தவர் ஏற்கனவே நடந்ததை மஹாவின் மூலம் தெரிந்துக் கொண்டவர் ஒரு நிம்மதி பெருமூச்சுடன் ஸ்ரீயை காணச் சென்றார்...

மாமனாரிடம் மன்னிப்பு கேட்ட திவ்யா, அருணிடமும் மன்னிப்பு கேட்க, அன்றைய நாள் எல்லோருக்கும் நல்லதாகவே விடிந்தது போல் இருந்தது...

நேற்று திவ்யாவை அழைக்க அவள் ஊருக்கு சென்று விட்டதால் அங்கு அலுவலகத்தில் நேற்று மதியத்திற்கு மேல் தேங்கியிருந்த வேலைகளையும் சந்திப்புகளையும் மீட்டிங்குகளையும் அர்ஜூன் முடிப்பதற்குள் மணி மாலை ஆறாகி இருக்க அது

COPYRIGHTED

https://drive.google.com/file

வரை அவனால் தன் அன்னையைக் கூடச் சந்திக்க வர இயலவில்லை....

ஒரு வழியாக நெட்டி முறித்த வேலைகளை முடித்தவன் மருத்துவமனைக்குக் கிளம்பத் திவ்யாவின் முகமும் நேற்று அவளின் வீட்டில் தான் கொடுத்த இதழ் ஒற்றல்களும் அர்ஜூனின் நியாபகத்தில் வந்து இம்சை படுத்தியது....

மருத்துவமனைக்குக் கிளம்பியவன் எத்தனை விரைவாகக் காரை செலுத்தினாலும் சென்னையில் உள்ள வாகன நெரிச்சலில் அவனால் அவ்வளவு சீக்கிரம் மருத்துவமனையை அடைய முடியவில்லை...

"ஷிட்" என்று காரின் ஸ்டியரிங்கில் குத்தியவனின் மனசாட்சி....

"அவ உன்னுடனையே இருக்குறப்போ அவள திட்டி துரத்திவிட்டுட்ட... இப்போ அதை எல்லாம் மறந்து உன்னிடம் வந்து சேர்ந்துட்டா... அப்புறம் என்ன அவசரம்?? ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கவில்லையோ?" என்று நேரம் காலம் தெரியாமல் கேலியாய் சிரிக்க...

COPYRIGHTED

9:51 PM 73%
https://drive.google.com/file

"அதெல்லாம் எனக்குத் தெரியாது... ஆனால் அவள் எனக்கு இன்னைக்கு வேணும்... எனக்கு முழுசா வேணும்... என் வைஃப்பா...." என்று வாய்விட்டு கூறியவன் ரேஸ் கார் வேகத்தில் (அந்தச் சென்னை ட்ராஃபிக்கில் ;-)) காரை செலுத்திக் கொண்டு வந்தவன் ஒரு வழியாக மருத்துவமனையை அடைய....

வந்தவனுக்கு அங்குத் தன் குடும்பத்தினர் அனைவரும் இருக்கத் தன் மனைவியை மட்டும் காணாமல் தவித்துப் போனான்...

அவர்களின் கண்ணாமூச்சி ஆட்டத்திற்கு ஒரு முடிவே இல்லை என்பதைப் போல்...

வந்ததிலிருந்து ஏதோ சிந்தனையில் அமைதியற்றவன் போல் தங்கள் மகன் அமர்ந்திருப்பதைப் பார்த்த ஸ்ரீக்கு அவனின் தேடல் புரிய மெல்லிய புன்னகையுடன்,

"இங்க ஹாஸ்பிட்டலுக்குப் பக்கத்திலேயெ ஒரு கோவில் இருக்குதுப்பா, அங்க தான் திவ்யா போயிருக்கா? என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அறைக்குள் நுழைந்தாள் அவன் மனைவி...

COPYRIGHTED

9:51 PM 73%
https://drive.google.com/file

அடர்ந்த பர்கண்டி நிறத்தில் ஜார்ஜெட் புடவையில், முகத்தில் சிறிய கோடாகத் திருநீறும், நெற்றி வகிட்டில் குங்குமமும் வைத்துக் கோவிலில் இருந்து அம்பாளே வெளியே வந்துவிட்டாளோ! என்பது போல் இருந்தவளைக் கண்டவனுக்குத் தன்னையும் அறியாமல் உடலில் முதன் முதலில் ஒரு சிறு அதிர்வு தெரிய,

திவ்யா கோவிலுக்குச் சென்றிருக்கிறாள் என்று தன் அன்னை சொன்னது கூடக் காதில் விழாதது போல் தன்னவளைக் கண்டதும் பதில் சொல்லும் நிலையில் இல்லாதவனின் எண்ணங்கள் தன் மனைவியின் அழகில் லயித்து இருந்ததால் விபரீத நிலைக்குச் செல்ல,

முழுமதியையும் தோற்கடித்துவிடும் விதத்தில் இருந்த அவளின் அழகு முகத்தில் பிறை போன்ற நெற்றியில் துவங்கி நாணமும் அச்சமும் கலந்திருந்த கண்கள், பஞ்சுக் கன்னங்கள், கூர்மையான முக்கு, அதில் பளபளத்த மூக்குத்தி, கோவை இதழ்கள் என்று ஒவ்வொன்றிலும் அவன் நேற்று பதித்திருந்த இதழ் முத்திரைகளும் அவன் மனதில் தோன்ற கடுமையான சோதனைக்கு உள்ளானான் அர்ஜுன்...

COPYRIGHTED

மலரினும் மெல்லியவள்! ஜே பி நாவல் Malarinum Melliyaval!

9:51 PM 73%
https://drive.google.com/file

திவ்யா உள்ளே நுழைந்ததும் பிரம்மை பிடித்தது போல் வியந்து உருகி அமர்ந்திருந்த, சாதாரணமாக எந்த உணர்ச்சியையும் காட்டாத அர்ஜூனின் முகத்தில் இன்று உணர்ச்சிகள் அளவுக்கதிகமாகவே தாண்டவமாட....

"இவ்வளவு காதலை மனசுக்குள்ள வச்சுக்கிட்டு தன்னையும் இத்தனை நாள் வதைச்சுக்கிட்டு இந்தச் சின்னப் பெண்ணையும் வேதனைப் படுத்திக்கிட்டு" என்றே தோன்றியது...

அங்கு இருந்த அனைவருக்கும் மஹா அருண் உட்பட...

ஏனெனில் முதல் முறை தன்னையும் அறியாமல் அர்ஜூன் தண்ணுர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான் மற்றவர்களுக்கு...

சில நேரங்களில் சில மனிதர்கள் தங்களை மற்றவர்களுடன் இருந்து தனிமைப் படுத்தி வைத்துக்கொள்வார்கள்... பெற்றோர்களிடம் கூட இருந்து...

COPYRIGHTED

Message from +91 97891 88174 @ Crazy
https://drive.google.com/file

அதற்கு அவர்களால் ஒரு நல்ல விளக்கமோ காரணமோ கொடுக்க முடியாது... அவர்கள் அப்படித்தான்...

அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்க்கையில் ஒருவரைப் பிடித்துவிட்டால் அதுவும் அவர் தன் வாழ்க்கை துணையாக இருந்தால் அவர்களைத் தங்கள் உள்ளங்கைகளில் ஏந்தி தாங்குவார்கள்...

அர்ஜூனும் அதே போன்று தான்....

தன் கணவனின் வரவை காலையில் இருந்து எதிர்பார்த்திருந்த திவ்யா அறையின் வாயிலில் தன் செருப்பைக் கழட்டி வைக்கும் பொழுதே அவன் ஷூவைப் பார்த்தவள் உள்ளே நுழைந்ததும் அறையில் அமைதியாக வழக்கம் போல் கால் மேல் கால் போட்டு கம்பீரமாகத் தன்னையே உறுத்து பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டவளின் மனம் மதி மயங்க, அவனின் முகம் பார்த்தவளால் சில நொடிகள் மட்டுமே அவன் பார்வையோடு தன் பார்வையைக் கலக்க முடிந்தது...

அதற்கு மேல் தன்னால் இயலாததால் தன் மாமியாரைப் பார்த்தவள் மெல்ல அவரிடம் சென்று கையில் இருந்த திருநீறை கொடுத்து, பின் ஸ்ரீயுடன்

COPYRIGHTED

9:51 PM 73%
https://drive.google.com/file

கட்டிலில் அமர்ந்து இருந்த மஹாவிற்கும் கொடுத்தவள், அருகில் எதையோ கொறித்துக் கொண்டிருந்த அருணிடம் திருநீறை நீட்ட, தன் கையில் உணவாக இருக்கவும்...

"நீங்களே வச்சி விடுங்க அண்ணி" என்றான்....

அவன் நெற்றியில் திருநீறை வைத்தவள் கண்களில் திருநீற் விழுந்துவிடாது இருக்கத் தன் கையை அவனின் புருவங்கள் மீது எதார்த்தமாக வைத்து மீதி திருநீறை ஊதிவிட, அருகில் அமர்ந்திருந்த அர்ஜூனிற்க்கு என்னவோ காதில் புகை வராத குறை தான்....

எப்படியும் அடுத்துத் தன்னிடம் தான் வருவாள் என்று அவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கத் தன் கணவனுக்கும் கடவுளுக்கும் வெகு தூரம் என்பதனை ஏற்கனவே அறிந்திருந்தவள் அவனைத் தாண்டி தன் மாமானாரிடம் செல்ல....

நேற்று இரவில் இருந்து அவளைப் பிரிந்து இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் நெருப்பாய் உணர்ந்திருந்தவன், காலையில் கண் விழித்ததில் இருந்து தன்னவளை பார்க்க விழிகள் ஏங்கி இருந்தவன், ஏக்கத்தோடு அவளுக்காகக் காத்து

COPYRIGHTED

9:51 PM 73%
https://drive.google.com/file

இருக்க இப்பொழுது இந்த நிமிடம் அவளின் புறக்கணிப்பில் அவனது காதல் கொண்ட மனம் சடாரென்று அடிப்பட்டுப் போனது....

அவனின் இயற்கையான ஆங்காரம் வெகுண்டெழ ஏமாற்றமும் கோபமும் ஒன்று சேர விருட்டென்று எழுந்தவன், அடக்கப்பட்ட கோபத்துடன்....

"ஓகே மாம், அப்போ நாளைக்கு வரேன்" என்று கிளம்பியவன் அறையைவிட்டு வெளியே சென்றான்....

இவர்களின் விளையாட்டுக்களைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீக்கு "அட ராமா" என்று இருந்தது.

"இதுங்களைச் சேர்த்து வைக்கறதுக்குள்ள எனக்கு ஒரு அட்டாக்கில்ல, இரண்டு மூன்று நான்கு என்று தொடர்ந்து வந்தாலும் வரும்..." என்று நினைத்தவர் சட்டென்று அருணை பிடித்து இழுத்தவர் அவனின் காதில் ரகசியமாக எதுவோ சொல்ல, அவனும் வேகமாகத் தன் அண்ணனை பின் தொடர்ந்தான்...

விரைவாகப் பாலாவையும் மஹாவையும் ஒரு நிமிடம் வெளியே இருக்கச் சொன்ன ஸ்ரீ, திவ்யாவை

COPYRIGHTED

மலரினும் மெல்லியவள்! ஜே பி நாவல் Malarinum Melliyaval!

வேகமாக அருகில் அழைத்தவர் அவளைக் கடிந்து கொண்டார்...

"என்ன திவ்யா, அவனோட குணம் தெரிஞ்சும் இப்படிப் பண்ணிட்டே இருக்க..... இப்பப் பாரு எவ்வளவு கோபத்துடன் போறான்னு?"

அவன் சேரை விட்டு எழுந்த விதத்திலேயே அவனின் திடீர் கோபம் புரிந்து சகலமும் நடுங்க நின்றவளுக்குத் தன் மாமியாரின் கேள்வியும் கலக்கத்தை உண்டு பண்ண...

விழிகளில் நீர் கொட்டவா வேண்டாமா என்பது போல் திரண்டு இருக்கத் தயங்கிவாறே.....

"இ.... இல்லத்த, அவங்களுக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு தான் கொடுக்கலை" என்றாள்

"என்ன பண்றது திவ்யா? அவனுக்குப் பிடிக்குதோ பிடிக்கலையோ ஆனால் அவனுக்கு வேணுமான்னு கண்டிப்பா கேட்கனும்னு எதிர்பார்ப்பான்... அது தான் உன் புருஷனோட குணம்... சரி, நீ உடனே கீழே போ.... அருண் கிட்ட அர்ஜுனைப் பிடிச்சு வச்சிருக்கச் சொல்லி இருக்கேன், சீக்கிரம் போ" என்க....

COPYRIGHTED

கலங்கிய முகத்துடன் "சரி அத்த" என்றவளுக்கு அவன் வெளியே சென்ற வேகத்தை நினைக்கவே உள்ளுக்குள் குளிரெடுத்தது....

வேகமாக நடையை வைத்தவள் கீழே கார் நிறுத்தியிருக்கும் இடத்தில் அருணுடன் அர்ஜூன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டவுடன் கிட்டதட்ட ஓடிப் போய் அவனருகில் நிற்க,

"ஒகே அண்ணா... ஐ ஹேவ் சம்திங் டு டூ..... ஐ வில் கம் ஹோம் லேட் டுனைட் [I have something to do... I will come home late tonight] " என்ற அருண் புன்னகையுடன் அவர்களைத் தனியே விட்டு செல்ல...

அவளை திரும்பிப் பார்த்த அர்ஜூன் ஒன்றும் பேசாமல் காரில் ஏறினான்....

தன் கணவன் தன்னைக் கண்டும் ஒன்றும் சொல்லாமல் காரில் ஏறி அமர, சில நொடிகள் தயங்கியவள் அவன் காரைக் கிளப்பினதும் சட்டென்று தானும் காரில் ஏறியவள் அவனைத் திரும்பி பார்த்து குழந்தை தனமான முகத்துடனும், கண்களில் கலக்கத்துடனும் தன் கையில் இருந்த

COPYRIGHTED

Message from +94 75 735 1081 @ A/L ICT

https://drive.google.com/file

திருநீறை நீட்ட, அவளைப் பார்த்தவன் திருநீறை எடுக்காமல் காரை கிளப்பினான்...

என்ன செய்வதென்று புரியாமல் விழித்தவள் திருநீறை காகிதத்தில் மடித்து வைத்து விட்டு வழக்கம் போல் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்க்க, அவள் தன் பின்னரே ஓட்டமும் நடையுமாக வந்ததை நினைத்து மனதிற்குள் சிரித்துக் கொண்டவன் சிறிது தூரத்தில் சாலை போக்குவரத்து நெருக்கடியில் காரை நிறுத்த....

ஜன்னலுக்கு அருகில் வந்த ஒரு குட்டிப் பெண்...

"அண்ணா.... கடைசிப் போனி அண்ணா... பூ வாங்கிக்கங்க அண்ணா" என்றாள்.

திரும்பி திவ்யாவைப் பார்த்தவன் அவள் தலையில் பூ எதுவும் இல்லாததைப் பார்த்து ஜன்னலை திறந்தவன் இள நகையுடன் "எவ்வளவு?" என்றான்...

விலையைச் சொன்ன அந்தப் பெண்ணிடம் இருந்த மல்லிகைச் சரங்களை வாங்கியவன் சில நூறு ரூபாய்களைக் கொடுக்க அதை வாங்கியவள்...

COPYRIGHTED

"எதுக்குண்ணா இவ்வளவு பணம்?" என்க,

"பரவாயில்லை வச்சுக்க' என்று புன்னகைத்தவனைப் பார்த்தவள் அருகில் இருந்த ஒரு சின்னப் பையனை அழைத்து, அவனிடம் இருந்த மொத்த பூவையும் அர்ஜூனிடம் கொடுக்கச் சொன்னவள்....

"எங்க இரண்டு பேரோட பூவுக்கும் சேர்த்து நீங்க கொடுத்த பணம் அதிகம் அண்ணா.... நாங்க பிரிச்சு எடுத்துக்கறோம்" என்று முகம் கொள்ளா சிரிப்புடன் சென்றாள்.

புன்னைகையுடன் அந்தப் பெண்ணையே சில நொடிகள் பார்த்திருந்தவன் திரும்பி திவ்யாவிடம் மல்லிகைச் சரங்களைக் கொடுத்து....

"வச்சுக்கோ" என்றான்...

பூவையும் அவனையும் பார்த்தவள் ஏதோ யோசனையில் ஆழ, அவளைக் கூர்ந்துப் பார்த்தவன் புருவங்களை உயர்த்தி வேண்டுமென்றே...

"பூ வச்சுக்கப் பிடிக்குமில்ல" என்றான்....

COPYRIGHTED

ஏனெனில் அவனும் கவனித்திருக்கிறான்... திருமணம் ஆன நாளில் இருந்து திவ்யா எப்பொழுதும் தலையில் பூச்சூடி இருப்பதை... அவளுக்கு மல்லிகைப் பூக்கள் என்றால் மிகவும் பிரியம் என்று அவனுக்கும் புரிந்திருந்தது....

"இல்ல....பூப் பிடிக்கும்" என்று இழுத்தவள் தயங்கியவாறே மெல்லிய குரலில்....

"அத்தை ஆஸ்பத்திரியில் இருக்கும் போது எப்படிப் பூ வச்சுக்கிறது?" என்று கேட்க,

அதே சமயம் போக்குவரத்து நெரிசலும் சரியாகி விட...

"இப்போ நீ இருக்கிறது ஹாஸ்பிட்டல் இல்லை" என்றவன் அவளின் கரத்தைப் பிடித்து இழுத்து பூவை வைத்தவன் சாலையில் கண் பதித்தான்....

பூவைப் பார்த்தவள் "இவ்வளவுமா?" என்க...

காரை ஓட்டிபடியே "எவ்வளவு முடியுமோ அவ்வளவு வச்சுக்க" என்றான்....

COPYRIGHTED

சிறிதே தலையில் வைத்தவளை திரும்பி பார்த்தவன்...

"ஏன்? அதுக்கு மேல் உன் தலை தாங்காதா?" என்று கேட்க, அவனின் கேள்வியில் அமைதியாக மீதம் இருந்த பூவில் முடிந்த வரை வைத்தவளைப் பார்த்தவனின் இதழில் இள நகை விரிந்தது....

சிறிது தூரம் சென்றவன் மீண்டும் அவளைத் திரும்பி பார்க்கவும் ஏற்கனவே நிலைக்குலைந்திருந்தவனுக்கு அரைகுறையாக வந்த வெளிச்சத்தில் அவளின் அழகிய உடலின் அங்க லாவண்யங்களும் நிழல் போல் புடவைக்கு வெளியே திமிறிக் கொண்டு தெரிய, வலதுப் புறம் அமர்ந்திருந்த அவனின் கண்கள் இடது புறமாக அமர்ந்திருந்தவளை நோக்கியவாறே இருந்த அதே நொடிகளில் ஏஸிக் காற்றில் அவளின் புடவை மாராப்பு லேசாக விலகியதால் அவளின் அழகை பூர்ணமாக எடுத்துரைக்க,

இதில் காரில் நிறைந்திருந்த மல்லிகைப் பூவின் வாசமும் அவனின் ஆண்மையை வெறிக்கொள்ளச் செய்ய, விவாரணத்திற்கும் அப்பார்ப்பட்ட உணர்ச்சிகளில் சிக்கியிருந்தவனின் மனதின் வேகத்திற்கேற்ப காரின் வேகமும் அதிகரித்தது....

COPYRIGHTED

அதி விரைவாகவே வீட்டை அடைந்ததும் காரில் இருந்து இறங்கிய திவ்யாவின் கால்கள் சட்டென்று தடுமாறி நிற்க, தயங்கியவளை கண்டு திரும்பி பார்த்தவன் என்ன என்பது போல் தலை அசைக்கவும் அன்று நெஞ்சில் திமிறிய துக்கத்துடனும், இதயத்தைக் கீறிப்போட்ட வலியுடனும் இனி இந்த வீட்டிற்குத் திரும்பி வரமாட்டோம் என்று வெம்பி வெளியே விட்டுச் சென்றது நினைவில் வந்து மனதில் சுறுக்கென்று தைத்தது...

இன்றும் அதே வலியை உணர்ந்தவள் போல் முகம் கசங்க, இருந்தும் தன் கணவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை அறிந்து சட்டென்று தன் முகத்தை மாற்றிக் கொண்டவள் ஒன்றும் பேசாமல் அவனின் பின்னால் செல்ல, உள்ளே நுழைந்த அர்ஜூன் மேலே செல்ல எத்தனிக்கவும் மெல்லிய குரலில்.....

"சாப்பிட்டீங்களா?" என்றாள்....

இல்லை என்று அவன் தலை அசைக்கவும் தன் கணவனின் பசி அறிந்து கலங்கியவள்....

"நான் ஏதாவது டிஃபன் செய்யட்டுமா?" என்றாள்....

திருமணம் நடந்த மறுநாள் உணவு அருந்த வந்தவன் அவளின் காலிற்கருகில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் தட்டை விசிறி அடித்தது நியாபகத்தில் வர, ஆனால் அதற்குப் பின் இத்தனை மாதங்கள் அவள் கையால் பரிமாறி ருசிக் கண்டிருந்தவனுக்கு இந்த மூன்று நாட்களும் அவள் இல்லாமல் சரியாக உணவு கூட அருந்தாமல் இருந்ததை உணர்ந்து முகத்தில் சிறு புன்னகையுடன் சரி என்றான்....

முதல் முறையாக அவனைப் பார்த்து சிறிதே புன்னகைத்தவள் சமையல் அறைக்குள் செல்ல, தன் அறைக்குள் சென்றவன் சிறிது நேரத்திலேயே குளித்து முடித்துக் கீழே இறங்கி வர, அதற்குள் அவசர டிபனாகக் கிச்சடியை செய்து முடித்திருந்தவள் தன் மாமனாருக்கும், அருணிற்கும் ஹாட்பேக்கில் எடுத்து வைத்துவிட்டு தன் கணவனுக்குப் பரிமாற ஆரம்பித்தாள்...

அவள் இல்லாத வீடே ஏதோ வெறிச்சோடியிருக்க, இதில் தன் அன்னையும் இல்லாத வீட்டில் அவன் தங்கியது இரு இரவுகள் தான்... இப்பொழுது திவ்யாவும் வந்துவிட இன்று அவளைத் தன் அருகில்

COPYRIGHTED

பார்ப்பது மனதிற்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது அவனுக்கு...

தனக்கு வெகு அருகில் நின்று அவள் பரிமாறிக் கொண்டு இருக்க, அவளின் பட்டுக் கரங்களில் அழகாக அடுக்கிவைத்ததுப் போல் பளபளத்த வளையல்கள் சினுங்கி குலுங்க, அவளின் மலர் கரங்களின் எழிலால் கூட தன் ஆண்மையைத் தூண்ட முடியும் என்று உணர்ந்தவன் இன்னும் சில நிமிடங்கள் தானே இந்த தவிப்பும் ஏக்கமும், அதற்கு பின் பூர்த்தியாகப் போகும் தன் தாகத்தை நினைத்து அவள் கைகளில் முத்தம் பதிக்க திமிறிக் கொண்ட வந்த ஆவலை அடக்கியவன் உணவில் கவனம் செலுத்த முடியாமல் ஏனோ தானோ என்று கொறித்துவிட்டு....

"நீயும் சீக்கிரம் சாப்பிட்டுட்டு வா" என்க,

ஒற்றை வரியில் பயத்தையும் நடுக்கத்தையும் ஒருவருக்குக் கொடுக்க முடியும் என்றால் அது தன் கணவனால் மட்டுமே முடியும் என்று நினைத்தவள் திருதிருவென்று முழித்தவாறே நின்றிருக்க, அவளின் அச்சத்தை குறும்பாக ரசித்தவன்

மனதிற்குள் பொங்கி எழுந்த சிரிப்பை அடக்கி தன் அறைக்குச் சென்றான்....

COPYRIGHTED

9:53 PM
https://drive.google.com/file

விறுவிறுவென்று உண்டு முடித்தவளுக்கு அது வரை இருந்த கொஞ்ச நஞ்ச தைரியமும் தூரப் போயிருக்க, அங்குத் தன் கணவனின் பொறுமை எல்லை கடந்து கொண்டிருப்பதை அறியாமல் முடிந்த அளவு சமையல் அறையில் நேரத்தை கழிக்கவும், அதற்கு மேலும் பொறுக்கமாட்டாது தன் அறையை விட்டு வெளியே வந்தவன்...

"திவ்யா" என்று சத்தமாக அழைக்க...

அவன் குரலில் வீட்டில் இருந்த நிசப்தம் குலைந்து திக்கென்று இருந்தது திவ்யாவிற்கு.

சட்டென்று சமையல் அறையில் இருந்து வெளியே வந்தவளைப் பார்த்தவன்...

"இங்க ஃப்ரிட்ஜில் கோல்ட் (cold) வாட்டர் வரலை... கொஞ்சம் வாட்டர் எடுத்துட்டு வா" என்றவன் தன் அறைக்குள் நுழையும் முன் திரும்பி....

"இன்னும் டு மினிட்ஸ்ல நீ இங்க இருக்கனும்" என்றான்.

COPYRIGHTED

9:53 PM 72%
https://drive.google.com/file

அவன் சொன்ன தோரணையே இரண்டு நிமிஷத்தில நீ வரலை தொலைஞ்ச என்பது போல் இருக்க சரி என்று மெதுவே தலை அசைத்தவள் தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொண்டு அவனின் அறைக்குச் செல்ல, எத்தனை தான் மெல்ல படி ஏறினாலும் சீக்கிரமாகவே அவன் அறையை அடைந்து விட்டது போலவே இருந்தது...

அறை வாயில் வரை சென்றவளுக்குப் பழைய நினைவுகள் முட்டி மோதி அலைமோத, மனம் கசங்கி உள்ளம் துடித்ததில் தன்னிச்சையாகக் கால்கள் தடுமாற ஆரம்பிக்க....

"போச்சு, அன்னைக்கு போல இன்னைக்கும் அவர் மீது இதோ இந்த ஐஸ் தண்ணீரைக் கொட்ட போறேன்" என்று நினைத்தவள் கதவு திறந்திருப்பதைக் கண்டு அவளுக்காகவே அவன் கதவைத் திறந்து வைத்திருக்கிறான் என்று புரிந்து கொண்டு மெல்ல நுழைந்தாள்....

அங்கு கட்டிலில் தலையணையை நிமிர்த்தி வைத்து அதில் சாய்ந்தவாறே வலது கையைத் தலைக்குப் பின் கொடுத்து இடது கையில் தன் அலை பேசியைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தவன் மெல்லிய கொலுசுகளின் சத்தத்தில் நிமிர்ந்துப் பார்க்க...

COPYRIGHTED

9:53 PM 72%
https://drive.google.com/file

நாணமும் அச்சமும் கலக்கமும் என்று உணர்வுகள் போட்டிப் போட்டுக் கொண்டு உள்ளத்தில் பிரவாகித்ததில் முகம் சிவந்து நின்றவள் அவன் அருகே சென்று தலை கவிழ்ந்தவாறே தண்ணீர் பாட்டிலை நீட்டினாள்...

வழக்கமாக முதல் இரவில் பெண்கள் கணவருக்கு பால் கொண்டு வருவார்கள்.... இன்றைய நாகரிக வாழ்க்கையில் அவ்வாறு நடக்கிறதோ இல்லையோ தெரியவில்லை... ஆனால் அவள் பாலைக் காய்ச்சி, பின் அவனிடம் கொடுத்து, மிச்ச பாலை அவள் குடித்து..... இந்த சம்பிரதாயங்களை இன்று கடைப் பிடிப்பதற்கெல்லாம் அர்ஜுனிற்கு பொறுமை இல்லை....

அவள் உள்ளே நுழைந்த நொடியில் இருந்து அவளின் உச்சி முதல் உள்ளங்கால் வரை தாபத்துடனும் வேட்கை வழியும் விழிகளோடும் பார்த்துக் கொண்டிருந்தவன் அவள் தண்ணீரை நீட்டினாலும் வாங்காமல் அவளை ஆழ்ந்து பார்த்தவாறே எழுந்தவன் அறையின் கதவை தாழிட்டு விட்டு அழுத்தமான காலடிகளுடன் அவளருகில் நெருங்கி வர...

COPYRIGHTED

தலை குனிந்தவாறே நின்று இருந்தாலும் அவன் கதவை சாத்திய சத்தமும், அவனின் அழுத்தமான காலடி சத்தமும் கேட்டதில் அது வரை இழுத்து பிடித்து வைத்து இருந்த கொஞ்ச நெஞ்ச தைரியமும் ஒட்டு மொத்தமாக அவளிடம் இருந்து பறந்து போனது....

இதில் படபடக்கும் இதயத்தின் சத்தம் வேறு அவளின் செவிகளையே மந்தமாக்கும் அளவிற்கு வெளியே கேட்க, அவன் தன்னை நெருங்கி வந்ததும் தன்னிச்சையாக அவனிடம் இருந்து இரு அடிகள் பின் தள்ளி நின்றவள் மீண்டும் அவனிடம் பாட்டிலை நீட்டினாள்....

அவளின் தயக்கமும், தவிப்பும், அச்சமும் ஒரு கணவனாய் கர்வத்துடன் அர்ஜூனின் காம உணர்வுகளைச் சிலிர்த்து எழ செய்ய, இளம் புன்னகையை உதிர்த்தவன் அவளை உற்று நோக்கி கொண்டே பாட்டிலை வாங்கி நீரைப் பருகியவன், அவளிடம் இருந்த மூடியை வாங்கி அதனை மூடி அருகில் இருந்த மேஜையில் வைத்தான்...

அறைக்குள்ளே நுழைந்ததில் இருந்து தரையில் தலை புதைந்துவிடும் அளவிற்குக் குனிந்திருந்தவள் தன் கணவனின் ஒவ்வொரு செய்கையையும் உணர்ந்து இருந்தாலும், அவனுடன்

COPYRIGHTED

தனிமையில் இருக்கும் இந்த ஒவ்வொரு விநாடியும் உடலில் நடுக்கம் பரவி உதறெலுடுக்க, கைகள் வெளிப்படையாக நடுங்க துவங்க, அவளின் இதயத்துடிப்பை நூறு மடங்கு அதிகரிக்கச் செய்தது தன் மூச்சுக் காற்றுப் படும் அளவிற்கு அவன் அவளை மேலும் நெருங்கி நிற்கவும்....

அதற்கு மேலும் தாங்க மாட்டாதவளாய் அவனை விட்டு நகர எத்தனிக்க, அவளைச் சட்டென்று எட்டிப் பிடித்தவன் தான் தொட்டதும் அவள் பூ மேனி அதிர்ந்து ஒரு வித நடுக்கம் பரவுவதை உணர்ந்தவனின் வலுவான உடலிலும் மின்னல் போன்று உணர்ச்சிகளின் அலைகள் தாக்க,

தன் உடல் முழுவதும் அவள் மீது உரசுமாறு நின்றவன் அவளின் கழுத்தில் கை வைத்து முடிகளுக்குள் இரு கை விரல்களையும் நுழைத்தவன் குனிந்து அவளின் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான்....

கணவனின் முத்தத்தில் மெய்மறந்து சிலிர்த்தவள் தன்னையும் அறியாமல் அவன் நெஞ்சில் கை வைத்து அவன் சட்டையை இறுக்கி பற்றிக் கொள்ள அதில் அவன் மார்பு ரோமங்களும் இழுக்கப்பட்டதில் உணர்வுகள் சிலிர்த்தெழ, அவளின் செயலில் அவள் முகம் பார்த்தவன்

9:53 PM
https://drive.google.com/file

கண்களை இறுக்க மூடிக்கொண்டு முகம் செந்தனலாய் சிவக்க இதழ்கள் அச்சத்தால் துடிக்க நின்றவளைக் கண்டவனின் கட்டவிழ்ந்த காதல் மேலும் செயலில் இறங்க தூண்ட, அடுத்த நொடி அவளின் மெல்லிய இதழ் அவன் வசம் ஆனது....

கணவன் மனைவி இருவர் உள்ளத்திலும் இருந்து வந்த மென்மையான காதலோடு காட்டாற்று வெள்ளமான காமமும் ஒன்றித்துக் கலக்க, உயிர் போன்ற தன் நேசத்தைத் தன் மனைவியிடம் உணர்த்திவிடத் துடித்தவன் மென்மையான இதழொற்றலை வன்மையாக மாற்ற, நீண்ட முத்தத்தில் இருந்து வலுக்கட்டாயமாக தன் முகத்தைத் திருப்பியவள் மூச்சு வாங்க அவனைப் பார்த்திருக்க,

மூச்சிறைத்து நின்றவளின் அழகான தவிப்பையும் தத்தளிப்பையும் ஒரு ஆண்மகனாக உணர்ந்து தன் இதயத்திற்குள் வாங்கிக் கொண்டவனின் கைகள் அவள் இடையைப் பற்றித் தன்னை நோக்கி வேகமாக இழுத்ததில் பூப்பந்து போல் மெத்தன்று அவன் மேல் மோத, தன்னவளின் அழகை கண்களால் மட்டும் ரசித்துக் கொண்டிருந்தவன் இதழாலும் ரசிக்க முனைந்து அவளின் கழுத்தில் ஆழ முகம் புதைத்தான்....

COPYRIGHTED

9:53 PM 72%
https://drive.google.com/file

கணவனின் ஸ்பரிசத்தாலும் இதழ் முற்றுகையினாலும் தவித்துக் கொண்டிருந்தவளின் தளிர் மேனி சிலிர்க்க, தன்னவளின் சிலிர்ப்பை உணர்ந்தவன் கழுத்தில் ஆழ புதைந்திருந்த இதழ்களைக் கீழ் இறக்கியவன் அவளின் மார்பில் முகம் புதைக்க, பெண்களுக்கே உரிய அச்சமும் நாணமும் எல்லையைக் கடக்க, கலங்கியவளின் மனதில் படீரென்று அடித்தார் போன்று தோன்றியது விவாகரத்தை பற்றிய எண்ணம்...

தன் அணைப்பில் அடங்கியிருந்தவளின் உடலில் திடீரென்று ஏதோ நடுக்கம் பரவுவதை உணர்ந்தவன் போல் அவளை நிமிர்ந்து பார்க்க, கலக்கத்தைச் சுமந்த முகத்தோடு தனக்கே கேட்காத குரலில் உதடுகள் துடிக்க....

"விவாகரத்து பண்ணப் போறீங்கன்னு சொன்னீங்க" என்றாள்....

அவன் பதிலிற்காகத் தன் உயிரை கையில் பிடித்து வைத்திருந்தவளின் கண்களில் எப்பொழுது வேண்டுமானாலும் கொட்ட தயாராக நீர் கோர்த்துக் கொண்டிருக்க.....

COPYRIGHTED

72% 9:54 PM
https://drive.google.com/file

"அது..." என்று உண்மையைக் கூற வாய் திறந்தவன் என்ன நினைத்தானோ சொல்ல வந்த உண்மையைச் சொல்லாமல் அந்நேரத்திலும் அவளைச் சீண்டிப் பார்க்கும் எண்ணம் வர, மனதிற்குள் சிரித்துக் கொண்டவன் சிரமபட்டு முகப்பாவனையை மாற்றிக் கொண்டு....

"விவாகரத்து வரும் போது வரட்டும்..... அதுக்கென்ன இப்போ?" என்றான்...

தன் கணவன் ஒரு வேளை விவாகரத்துச் செய்யப் போவதில்லை என்ற சொல்வான் என்று ஆசையில் ஏக்கத்துடன் அவன் முகத்தை எதிர் நோக்கியிருந்தவளுக்கு அவன் பதில் உடல் முழுவதும் சாட்டையால் அடித்தது போல் இருக்க, தாங்க முடியாத வலியினால் உடலும் மனமும் சோர்வடைந்தது போல் நின்றிருந்தவளைக் கண்டவன் மனம் கசந்து இனியும் தன்னவளை தவிக்க விடக்கூடாது என்ற நோக்கத்தில்....

அவளின் வெற்றிடையில் இருந்த தன் கரத்தில் அழுத்தத்தைக் கூட்டியவன் மென்மையாக...

"நேத்திலிருந்து கிட்டத்தட்ட ஒன்பது முத்தம் கொடுத்துட்டேன்... அதில் இரண்டு நீ முச்சுக்கூட

COPYRIGHTED

9:54 PM 72%
https://drive.google.com/file

விடமுடியாத அளவுல உன்..." என்றவன் அவளின் இதழ்களைத் தடவி...

"உன்னை நான் கட்டிப்பிடிச்ச இறுக்கம் கூடச் சொல்லலையா உன்னோட கேள்விக்கு என்னோட உண்மையான பதிலை" என்றவன் அவளின் பதிலை எதிர்பார்த்தவாறே அவளை உற்று நோக்கியிருக்க,

அவனின் கூரிய பார்வையில் தலை குனிய போனவளின் தாடையைப் பற்றியவன் தன் முகத்தை நோக்கி நிறுத்தி...

"நான் உன்னை டிவோர்ஸ் பண்ணினால் நீ என்னை விட்டுட்டு இருந்துடுவியா?" என்று குரலில் தன் ஒட்டு மொத்த ஏக்கத்தையும் சுமந்து கேட்டான்....

அவனை விட்டு தான் வாழ்வதா? நினைக்கும் பொழுதே இதயத்தை யாரோ கூரிய கத்திக் கொண்டு இரண்டாக வெட்டிக் கிழித்ததுப் போல் வலித்தது....

அவனின் விழிகளைப் பார்த்தவாறே அவன் கேட்ட கேள்விக்கு இல்லை என்று தலை அசைக்க...

COPYRIGHTED

அவளின் தலை அசைவில் கண்களில் தேங்கியிருந்த விழி நீரில் ஒரு சொட்டு கீழே விழ, அவளது முகத்தைத் தாங்கியிருந்த கையின் கட்டை விரலில் அந்த விழி நீரை கீழே விழாமல் கன்னத்திலேயே தேக்கியவன்,

"அப்ப நீ இல்லாம நான் மட்டும் இருந்துடுவேன்னு நினைக்கிறியா?" என்றவனின் கண்களில் அத்தனை காதல் வழிந்தது.....

அவன் விவாகரத்து பண்ணப் போவதாக அன்று கூறியதில் இருந்து உள்ளம் முழுவதும் திகில் படர்ந்திருக்க, ஒவ்வொரு நாளும் நினைக்கும் பொழுதெல்லாம் தன் உடல் ஆன்மா இதயம் அனைத்தையும் வாள் கொண்டு அறுத்து கூறுப் போட்டுக் கொண்டிருந்த விவாகரத்துக்குத் தன் மனம் குளிரும் வகையில் முற்றுப் புள்ளி வைத்த கணவனைக் கண்டவளின் முகத்தில் தெரிந்த நிம்மதியைக் கண்டவன்...

"டௌட் எல்லாம் க்ளியர் ஆயாச்சா... இப்போ நான் என் வேலையைக் கண்டினியூ பண்ணலாமா?" என்று விஷமப் புன்னகையுடன் கேட்க,

COPYRIGHTED

கணவனின் பேச்சு சில நொடிகள் புரியாவிட்டாலும் புரிந்ததும் நாணம் எல்லையைக் கடக்க, அக்கினிப் பூவாய் முகம் சிவந்தவளை சட்டென்று முரட்டுத்தனமாக இழுத்தவனின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் தடுமாறியவள் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொள்ளத் தன்னை இழுத்தவனையே இறுக்கி பிடித்துக் கொண்டாள்.

மீண்டும் மீண்டும் அவளின் இதழின் சுவையில் மூழ்கியிருந்தவனின் முத்த யுத்தத்தில் தளிர் மேனி தளர்ந்து உருகி அவன் மீதே துவண்டு நிற்க, அதற்கு மேலும் தாமதிக்காது அவளை இருகைகளிலும் அள்ளியவன் கட்டிலில் கிடத்தி அவள் யோசிக்கும் முன் அவள் மீது படர்ந்து கிறக்கத்துடன் "திவி" என்று அழைத்தவனின் இதழ்களும் கைகளும் தாபத்துடன் அவளின் மேனியில் அத்து மீற ஆரம்பித்தது....

அவனின் அத்து மீறலில் அவளுக்குள் அடங்கியிருந்த அச்சம் வேகமாக மேலெழும்பி கிளம்ப, "வேண்டாம்" என்று போராடியவளை விட்டு விலகி அவளின் முகம் பார்க்க, அந்த இரவு விளக்கின் வெளிச்சத்தில் பயத்தில் அகல விரிந்திரிந்த கண்களைப் பார்த்தவன் அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல்

COPYRIGHTED

தன்னவளுக்குள் தொலைந்து தன் தேடலை துவங்கினான்.

தன் உடல் வலிமையால் அவளின் விலக்கல்களையும் போரட்டங்களையும் ஒரு நொடியில் சமாளித்தவன் மேலும் மூழ்க, அவளின் வயதிற்கே உரிய பயம் சில நேரங்களில் தலை தூக்கிய பொழுதெல்லாம் அவளை இறுக்க அணைத்து அச்சத்தைத் தெளிய வைத்து மென்மையாக அவளைக் கையாள, இதழ் ஒற்றல்களும், மெல்லிய முனகல்களுமாக அங்கு ஒரு அழகிய இல்லறம் அரங்கேறியது....

தாலி கட்டிய அன்றே விவாகரத்து வேண்டும் என்றவன்..... அவள் இருக்கும் இடத்தில் தான் இருக்கக் கூடாது என்று தூரம் சென்று விடத் துடித்தவன்.... அவளைத் தன் வாழ்க்கையை விட்டே விரைவில் அகற்ற வேண்டும் என்று நினைத்திருந்தவன்...

இன்று மலரினும் மெல்லிய தன் மனையாளின் மாசற்ற அன்பை உணர்ந்து, அவளின் ஈடு இணையில்லாத அழகான காதலை ருசித்து அவளுள் ஆழ மூழ்கி ஈருடல் ஒருயிராகக் கலக்க மனநிறைவுடன் கூடிய கூடல் இருவரின் உள்ளங்களிலும் பரவசத்தை ஏற்படுத்த, அவளும்

10:38 PM 65%
https://drive.google.com/file

அவனோடு ஒன்றியதில் காமத்தின் பிடியிலிலும் காதலின் வேகத்திலும் திளைத்திருந்தவன் விடியும் வரை தன் தேடலை நிறுத்தவில்லை...

மலரினும் மெல்லியவள்!

தொடரும்.....

COPYRIGHTED

10:45 PM
https://drive.google.com/file

பாகம் 25

மனநிறைவுடன் கூடிய கூடல் இருவரின் உள்ளங்களிலும் பரவசத்தை ஏற்படுத்த, அவளும் அவனோடு ஒன்ற, தன்னோடு அவளை இறுக அணைத்துக் கொண்டவனுக்கு விடிந்தப் பின்னும் அவளை விட மனம் வரவில்லை...

அவன் மனையாளும் கணவனின் இந்த எதிர்பாராத அனுசரணையாலும், மென்மையான அணுகுமுறையாலும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற பெண்ணிற்கே உரிய நான்கு குணங்களையும் தன் கணவனுக்காகத் தள்ளி வைத்தவள் அவனின் தேடலை பூர்த்திச் செய்ய, அவன் இத்தனை நாட்கள் பாதுகாத்திருந்த பிரம்மச்சரியம் அவனை விட்டு வெகு தூரம் போயிருந்தது...

களைத்து களைந்து போனவள் கணவனின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றி முடிக்கவும் அவன் அறையில் இருந்த கடிகாரம் மணி ஆறு என்பதைக் மெல்லிய ஒலியில் அடித்துக் காட்டவும் தன் கணவனை விட்டு வெட்க முகத்துடன் எழப் போனவளை அவன் சட்டென்று கரம் பற்றி இழுத்ததில் போர்வையை மட்டுமே ஆடையாகப் போர்த்தியிருந்தவளின் போர்வையும் முழுக்க விலக நாணத்தால் துடித்துப் போனவளை கண்டு வாய்விட்டு சிரித்தவன்...

COPYRIGHTED

10:46 PM 65%
https://drive.google.com/file

"எங்க போற?" என்றான்...

"லேட்டாகிடுச்சு... மாமாவுக்கு டிபன் செய்யனும்" என்று மெதுவாகக் கூற....

அவளை இழுத்து தன் நெஞ்சின் மேல் போட்டுக் கொண்டவன்....

"பரவாயில்லை, படு" என்று மேலும் அவளைத் தன்னுடன் இறுக்க, தன்னைக் களைத்தவனின் கைவளைவுக்குள் அகப்பட்டுக் கொண்டவள் அவனின் வெற்று மார்பில் தலை சாய்த்து முகம் புதைத்து தூங்கியும் போனாள்.

உடல் அசதியினால் வந்த உறக்கம் மட்டும் அல்ல அது...

திருமண நாளன்றிலிருந்து முன் பின் அறியாத இரு இளம் உள்ளங்களின் வாழ்க்கை பாதையை விதி தன் போக்கில் வளைத்து சூறாவளியாய் சுழற்றி அடித்ததில் துடித்துக் கசங்கி கலங்கி போன மனது மழை நாளில் மெல்லிய காற்று சில்லென்று முகத்தில் வீசும் பொழுது ஏற்படுமே ஒரு சிலிர்ப்பு அது போல் குளிர்ந்து அமைதியாய் உறங்கிய உறக்கம் அது...

தம்பதியர் இருவருக்குமே....

கணவனின் அணைப்பில், அவளை இனி ஒரு நொடி கூடப் பிரியக்கூடாது என்பது போல் அவளை இறுக்கியவாறே அவன்

COPYRIGHTED

10:46 PM 65%

https://drive.google.com/file

தூங்கிப் போக, உடல் மனக் களைப்பில் நன்றாக அசந்துத் தூங்கிக் கொண்டிருந்தவளுக்கு விழிப்பு வந்ததும் நேற்று நடந்த அழகிய சங்கமம் நியாபகத்தில் வர கண் விழித்தவள் படுத்திருப்பது தன் கணவனின் அணைப்பில், அவன் நெஞ்சில் என்று உணர்ந்து பூரிப்பில் புன்னகைத்தவள் மெல்ல எழுந்தாள் அவன் விழிக்காத வண்ணம்....

வெட்கத்துடன் தலையைத் தூக்கிப் பார்த்தவளுக்கு அங்குத் தன் கணவன் தன்னை இன்னமும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருக்க, மெதுவாக எழுந்து கட்டிலுக்குக் கீழே கிடந்த தன் துணிகளை எடுத்தவள் எங்கே அவன் முழித்து விடுவானோ என்று பயந்து விரைந்து குளியல் அறைக்குள் நுழைந்து புடவையை அணிந்து கொண்டு பின் மஹாவின் அறைக்குள் சென்றாள்...

குளித்து முடித்து விரைவாகக் கீழே வந்தவள் அங்குத் தெய்வானையும் அல்லியும் சமையல் அறையில் இருக்க,

"அக்கா, எப்படி இருக்கீங்க?" என்ற குரலில் திரும்பி பார்த்தவர்கள் சந்தோஷத்தில் அவளைக் கட்டி பிடித்துக் கொண்டார்கள்....

"என்னடா திவ்யா இப்படிப் பண்ணிட்ட? இப்படியா சொல்லாம கொல்லாமா போவ??" என்று தெய்வானை கேட்க,

அன்று நடந்த களேபரத்தைக் கண் கொண்டு பார்த்திருந்த அல்லிக்குத் திவ்யா திரும்பி வந்ததே பிரமிப்பாக இருக்க...

COPYRIGHTED

10:46 PM
https://drive.google.com/file

"விடுக்கா, திவ்யாம்மா வந்ததே சந்தோஷம்" என்று கூறியவளைக் கண்ட திவ்யாவிற்குத் தன் புகுந்த வீட்டில் மாமியார் முதல் சமையல் அறையில் வேலைப் பார்ப்பவர்கள் வரையில் அனைவருக்கும் தன் மேல் இத்தனை பாசமா என்று இருந்தது.....

இரு நாட்களுக்கு முன் வரை கணவனை மட்டும் அந்தப் பட்டியலில் சேர்க்காமல் இருந்திருந்தாள்....

ஆனால் அவனும் தன் காதலின் அளவை, தன் மனையாளின் மீது தான் வைத்திருந்த நேசத்தின் உச்சியைக் அவளுக்கு விடிய விடிய காட்டிவிட்டானே தன் ஆண்மையின் துடிப்போடு, ஆனால் வெறியில்லாத மென்மையான சங்கமத்திலும், இணக்கமான உறவிலும்....

காலை டி:ஃபனை செய்து முடித்தவர்கள் டைனிங் டேபிளில் உணவை வைக்க, தன் அறையில் இருந்து பாலாவும், அருணும் கீழ் இறங்கி வர, அவர்களுக்கு டி:ஃபனைப் பரிமாற ஆரம்பித்தவளை மாடியில் இருந்து ரசித்துக் கொண்டே படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தான் அர்ஜுன்...

அவனின் அரவத்தில் திரும்பிப் பார்த்தவளக் கண்ட அர்ஜுன் அவளைப் பார்த்து கண்ணடித்து, உதடுகள் குவித்துச் சைகையில் முத்தம் இட, அவனைப் பார்த்ததுமே கூச்சம் உடல் முழுவதும் பரவியிருக்க, இதில் அவனின் இந்தச் சைகைகள் அவளை நாணத்தின் உச்சிக்கே கொண்டு செல்ல, சட்டென்று செவ்வானமாய் முகம் சிவந்து தலைக் கவிழ்ந்தாள்...

COPYRIGHTED

64% 10:46 PM
https://drive.google.com/file

அவளின் செய்கையில் இதழ் விரித்துச் சிரித்தவன் தந்தைக்கும் தமையனுக்கும் காலை வணக்கம் சொன்னவன் தன் மனையாளின் அருகில் போடப்பட்டிருந்த சேரில் அமர, தன்னருகே நெருங்கி நின்றுப் பரிமாறத் துவங்கியவளின் புடவையைத் தன் பாதத்தினால் இறுக்கி பிடிக்க, சட்டென்று தன் புடவை கீழே இழுக்கப் படுவதைக் கண்டவளுக்கு வெட்கம் பிடுங்கி தின்றதில் கணவனை நிமிர்ந்து பார்த்து "ப்ளீஸ்" என்பது போல் கெஞ்சினாலும் அவன் விட்டால் தானே!!

நேற்று வரை அர்ஜூனின் அதிகாரத்தையும், ஆளுமையையும், கம்பீரத்தையும், கோபத்தையும் மட்டுமே பார்த்து பயந்திருந்தவளுக்கு அவனின் இந்தக் குறும்பு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்க, இதில் அவனை நிமிர்ந்துப் பார்க்க வெட்கம் தடைப் போட குனிந்தவாறே அவனுக்கும் பரிமாறிக் கொண்டிருந்தவளைப் பார்த்தவனின் முகத்தில் அவளின் வெட்கத்தின் அர்த்தம் புரிந்து புன்னகை படர்ந்தது..

உணவு அருந்திக் கொண்டிருந்த மாமனாரின் தட்டில் உணவு தீர்ந்துப் போனதைக் கண்டவள் தன் கணவன் அவன் காலால் தன் புடவையை இன்னும் பிடித்திருப்பதை மறந்து நகர முனைந்தவள் சேலை தடுக்கி தடுமாறச் சட்டென்று தனது இடது கையால் அவளின் இடையைப் பிடித்துக் கீழே விழாமல் நிற்க வைத்தவனுக்கு முகம் கொள்ளாத பூரிப்பு...

"பாத்துடா திவ்யா" என்ற பாலாவின் குரலில் அவளை விடுவித்தவன் புன்னகைத்துக் கொண்டே சாப்பிட்டவாறே தந்தையிடமும் அருணுடனும் பேச ஆரம்பிக்க உண்மையில்

COPYRIGHTED

அவனின் இணக்கமான இந்த முகமும், புன்னைகை தவழும் இதழ்களும் பாலாவிற்கும் அருணிற்குமே வியப்பாய் இருந்தது.

எப்பொழுதும் தொழில், தொழில் சம்பந்தப்பட்ட மீட்டிங்குகள், வாடிக்கையாளர்களைச் சந்திக்கும் கூட்டங்கள், தொழிற்சாலைகளைச் சந்திக்கும் பயணங்கள், தொழில் சம்பந்தமான வெளியூர் வெளிநாடு நீண்ட பிரயாணங்கள் என்று பரபரவென்று இருப்பவன், டைனின் டேபிளில் உணவருந்தும் பொழுது கூடக் கடுமையாகப் பேசும் மகனின் முகம் இன்று மகிழ்ச்சியில் திளைத்திருப்பதைக் கண்ட பாலாவிற்கு, மகனிற்கும் மருமகளிற்கும் இடையில் நடந்தேறியிருந்த சங்கமம் புரிந்தது....

ஸ்ரீயாவது இவர்களைப் பற்றிய தன் வேதனையை, கவலைகளை வாய்விட்டு சொல்லிவிடுவார்....

ஆனால் ஒரு ஆண்மகனாக, குடும்பத்தின் தலைவனாகத் தன் மனதில் இருக்கும் கவலையைச் சொல்லி மேலும் தன் மனைவியை வருத்தப்படுத்த விரும்பாமல் தனக்குள்ளே போட்டு பூட்டி வைத்திருந்தவாயிற்றே பாலா அத்தனை வருத்தங்களையும்....

இன்று இவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு ஒரு தகப்பனாக அவரும் உள்ளம் பூரித்துத் தான் போனார்...

மூவரும் உண்டு முடித்ததும் அர்ஜூன் நேரே ஹாலிற்குச் சென்றவன் டிவியை உயிர்பித்துப் பார்க்க துவங்கவும், வெளியே கிளம்பிய பாலா அவனைக் கண்டு அதிசயித்து....

10:46 PM
https://drive.google.com/file

"அர்ஜூன்... கிளம்பலையா?" என்க..

"நோ டாட்... நான் மாமை வந்து பார்த்துவிட்டு அப்புறம் ஆ.:.பிஸிற்குப் போறேன்... நீங்க கிளம்புங்க" என்றவன் கண்களைத் தொலைக்காட்சியில் செலுத்த மூன்று பிள்ளைகளைப் பெற்றவருக்குத் தெரியாதா ஏன் வேலை வேலை என்று எப்பொழுதும் காலில் வெந்நீர் ஊற்றியதைப் போல் பறந்து கொண்டிருந்த மகன் இன்று என்றும் இல்லாத அதிசயமாய் அலுவலகத்திற்குக் கிளம்பாமல் டிவி பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று...

புன்னகைத்தவர் அருணையும் அழைத்துக் கொண்டு கிளம்ப, அவர்கள் கிளம்பும் வரை காத்து இருந்தவன் "திவ்யா" என்று அழைக்க அவன் சத்தத்தைக் கேட்டு வேகமாக வந்தவளை அவள் சுதாரிக்கும் முன் தன் கைகளில் ஏந்தியவன் மாடி ஏறினான்...

சட்டென்று அவனின் இந்தச் செய்கையில் தடுமாறியவள் அவனின் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொள்ள...

"கவலைப் படாதே கீழே போட்டுற மாட்டேன்" என்றவன் சிரிக்க, எப்பொழுதும் அழுத்தமான முகத்துடனும் இறுக்கத்துடனும் இருப்பவன் இன்று மீண்டும் சத்தமாக சிரிக்க, அவனது சிரிப்பில் அசட்டுத்தனம் இல்லாது ஆண்மையோடு கம்பீரமும் கலந்து இருப்பதை கண்டு மனம் சிலிர்க்க ரசித்தவள், இருந்தும் பகலில் என்ன இது என்று....

COPYRIGHTED

10:46 PM 64%

https://drive.google.com/file

"ஐயோ! மாமா, அருண் அத்தான் யாராவது வரப் போறாங்க, கீழே இறக்கி விடுங்க" என்றாள் மெல்லிய குரலில்...

இலகுவாக அவளை இரு கரங்களிலும் சிறு பிள்ளையை தூக்குவதுப் போல் ஏந்தியவாறே மாடி படிகளில் ஏறியவன்,

"அவங்க யாரும் இல்லை... இருந்தாலும் என்ன, என் வை:.ப்ப நான் தூக்கறேன்" என்றான்...

வேகமாகப் படிகளில் ஏறி தன் அறைக்கு வந்தவன் அதே வேகத்தில் காலால் கதவை சாத்தியவன் அவளைப் படுக்கையில் கிடத்த, தயங்கியவாறே மெதுவாக....

"அத்தைக்குச் சாப்பாடு செஞ்சு ஹாஸ்பிட்டலுக்கு எடுத்துட்டு போகனும்" என்றாள்...

"அதெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம்" என்றவன் அவள் மேல் சரிய,

"இல்ல, மதிய சாப்பாடு செஞ்சுக் கொடுக்கிறேன்னு மாமாவிடம் சொல்லிட்டேன்" என்று இழுத்தவளை ரசித்துப் பார்த்தவன்....

"இப்படி பேசிட்டே இருக்கும் வாயை எப்படி அடைக்கறது" என்றவனின் பார்வை அழுத்தமாக அவளின் இதழில் படிய,

COPYRIGHTED

10:47 PM 64%
https://drive.google.com/file

அவன் என்ன செய்யப் போகிறான் என்று புரிந்து அவள் வெட்கத்தில் முகம் சிவக்க, கணவனின் உரிமையை மீண்டும் மீண்டும் நிலை நாட்ட ஆரம்பித்தவன் அவளை விடுவிக்கும் பொழுது மதிய உணவு நேரமே வந்துவிட்டது..

ஒரு வழியாக அவளின் அசதிப் புரிந்து அவளை விடுவிக்க, அவனை விடுத்து வேகமாகப் புடவையைச் சுற்றிக் கொண்டு வெளியே செல்ல முற்பட்டவளைத் தடுத்தவன்,

"திவ்யா, உன் ட்ரெஸ் எல்லாத்தையும் இந்த ரூமிற்கு மூவ் பண்ணிடு" என்றான்...

வெட்க சிரிப்போடு சரி என்பது போல் தலையாட்டியவள் மஹாவின் அறைக்குள் நுழைந்தாள்.

மீண்டும் குளித்து முடித்துக் கீழே வர, அங்குத் தெய்வானையும் அல்லியும் மதிய சமையலை முடித்திருந்தார்கள்.

சமையல் அறைக்குள் நுழைந்த அவளை விஷம புன்னகையுடன் பார்த்த அல்லி,

"என்ன திவ்யாம்மா, மாயமா மறைஞ்சுப் போயிட்டீங்க... வேற புடவை வேறக் கட்டிருக்கீங்க... மறுபடியும் தலை குளிச்சிருப்பீங்க போல இருக்கு" என்று கிண்டல் செய்ய,

COPYRIGHTED

10:48 PM
https://drive.google.com/file

அவளின் சிவந்த முகத்தைப் பார்த்த தெய்வானைக்குக் கூட "அப்பாடி" என்று இருந்தது...

"ஒரு வழியாக ஸ்ரீம்மா ஆசைப் பட்ட மாதிரி இரண்டு பேரும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள் போல" என்று மனம் மகிழ,

"அக்கா, அத்தைக்குச் சாப்பாடு எடுத்துட்டு போகனும்.... கொஞ்சம் உதவி பண்ணுறீங்களா?" என்றாள்...

மூவரும் சேர்ந்து மதிய உணவை கட்டி முடிக்கவும் அர்ஜூன் கீழே இறங்கி வரவும் சரியாக இருந்தது...

திவ்யாவிடம் வந்தவன்,

"நானே உன்னை ஹாஸ்பிட்டலில் ட்ராப் செய்து விடுகிறேன்... வா" என்றான்...

சரி என்றவள் அவனுடன் கிளம்பக் காரில் ஏறியதில் இருந்து தன் முகம் பார்க்க கூச்சப்பட்டுக் கொண்டு வெளியில் வேடிக்கை பார்க்கும் மனைவியைப் பார்த்தவன் காரில் நிலவிய அமைதியை கிழிப்பது போல்...

"கொஞ்சம் இந்தப் பக்கமும் பார்க்கறது" என்றான்...

அவனின் திடிர் பேச்சில் சட்டென்று அவனைப் பார்க்க, சிரித்தவன் அவளை இழுத்து தன் அருகில் அமர்த்திக் கொள்ளச்

COPYRIGHTED

10:48 PM
https://drive.google.com/file

சரியாக அந்த நிமிடம் அலை பேசியில் அர்ஜூனை அழைத்த கதிர் ஏதோ முக்கிய அலுவல் விஷயமாகப் பேசியவன் அர்ஜூனை உடனே வரச் சொல்லி அழைத்தான்....

மருத்துவமனை வாயிலில் காரை நிறுத்தியவன்...

"திவ்யா... நீ போ... எனக்கு ஒரு முக்கிய வேலை இருக்கு... நைட் வந்து மாம பாக்குறேன்னு சொல்லிடு" என்றவன் அவள் இறங்க முற்பட,

சட்டென்று அவளின் கைப் பிடித்து அருகே இழுத்தவன், காரின் டேஷ்போர்டில் இருந்து அவளுக்கு ஒரு சின்னப் பெட்டியை எடுத்துக் கொடுத்தான்...

என்ன என்று திருதிருவென்று விழித்தவளைப் பார்த்தவன்...

"பிரிச்சுப் பாரு" என்க..

அவனைப் பார்த்தவாறே அவளும் அதனைப் பிரிச்சுப் பார்க்க அங்கு ஒரு புத்தம் புதிய தற்போதைய மாடல் அலைபேசி இருந்தது...

"ஙே" என்று அவனை விழித்துப் பார்த்தவளை ரசித்துப் பார்த்தவன்....

COPYRIGHTED

10:48 PM 64%
https://drive.google.com/file

"அருண் வந்த பிறகு அவனிடம் இதை எப்படி ஆப்பரேட் பண்றதுன்னு கத்துக்க" என்றான்...

ஒரு மழை நாளில் அவளுக்கு முதல் முறை புடவை எடுத்த அன்று ஒரு கடையின் வாசலில் நிற்கச் சொன்னதே அவளுக்கு ஒரு அலை பேசி வாங்கித் தருவதற்காகத் தான்...

பின் ரிஷப்ஷன் அன்று அர்ஜூனின் அலை பேசிக்கு அழைத்த ஸ்ரீ, கோபத்தில் அவரின் அழைப்பை அவன் எடுக்காததைத் தெரிந்து திவ்யாவை அழைத்தவர் அர்ஜூனிடம் அவளின் அலை பேசியைக் கொடுக்கச் சொன்னாரே, அப்பொழுதே பார்த்திருந்தான் அது எவ்வளவு பழைய மாடல் அலை பேசியென்று...

அதனால் தான் மறுநாள் அவளுக்கு இந்தப் புது அலை பேசியை வாங்கியிருந்தான்...

ஒரு வேளை அவளின் புடவை அன்று நனைந்திருக்கவில்லை என்றால் அவளையும் கடைக்குள்ளே அழைத்துப் போய் வாங்கிக் கொடுத்திருப்பான்... அப்பொழுதாவது அவனின் அன்பைப் புரிந்து கொண்டு இருந்திருப்பாளோ...

எதற்கும் ஒரு நேரம் காலம் இருக்கிறது என்று விதி நினைத்துவிட்டால் அதனை மாற்றும் வல்லமை யாருக்கு இருக்கிறது இந்த உலகத்தில்....

COPYRIGHTED

"எதுக்குங்க இது.... என்கிட்ட தான் வேற போன் இருக்கே" என்று அவள் தயங்க...

"அது வேண்டாம்... இனி இதில் தான் நான் உன்னைக் கூப்பிடுவேன்" என்றவன் அவள் சரி என்று தலை அசைத்துவிட்டுக் காரில் இருந்து இறங்க முற்பட மீண்டும் அவளின் கரம் பற்றி இழுத்தவன்...

"திவ்யா.... இன்னையிலிருந்து நீ என் ரூமில் தான் தங்கனும்.... என் கூடத் தான் தூங்கனும்... ஆனால் நேத்து நைட் மாதிரி வெயிட் பண்ணிட்டு இருக்க மாட்டேன்.... வந்து தூக்கிட்டு போய் விடுவேன்" என்றான்...

விழிகளில் நாணம் படர்ந்திருக்க, சிறு புன்சிரிப்புடன் சரி என்று காரில் இருந்து இறங்கியவள் அவன் கார் கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தாள்....

அவனும் அவள் மறையும் வரை கார் ரியர் வியூ கண்ணாடியில் பார்த்திருந்தவனின் மனம் நிறைந்து இருந்தது... மகிழ்ச்சியில் திளைத்திருந்தது...

ஆனால் திவ்யாவிற்கோ என்ன தான் அவன் அவளை நேற்று முதல் காதலில் திக்கு முக்காட வைத்திருந்த போதிலும், மன நிறைவுடன் ஈருடல் ஓருயிராகக் கூடியிருந்த போதிலும், அவன் தன்னை விவாகரத்து பண்ணப் போவதில்லை என்று சொல்லியிருந்தாலும் விவாகரத்துப் பத்திரத்தில் அவளிடம் கையெழுத்து வாங்கியிருந்தது மனதில் இன்னமும் உறுத்திக்

கொண்டே இருக்க, உள்ளத்தில் சிறு கலக்கமும் வரத் தான் செய்தது...

"ஆனால் நிச்சயம் இனி அவர் என்னை விட்டு இருக்க மாட்டார்" என்றும் அவளின் ஆழ் மனதில் குரல் ஒன்று எழும்ப அதில் சிறிதே நிம்மதி அடைந்தவள் நேரே தன் மாமியாரின் அறைக்குள் நுழைந்தவாறே...

"மன்னிச்சிடுங்க அத்த, வர லேட்டாகிட்டுது" என்க,

அவளின் முகத்தை ஆராய்ச்சியுடன் பார்த்திருந்தது ஸ்ரீயின் கண்கள்...

அவரின் பார்வையைப் புரிந்து கொள்ளாமல் மதிய உணவை எடுத்து வைக்க ஆரம்பிக்க, அவளை அருகே அழைத்த ஸ்ரீ...

"திவ்யா, அர்ஜூன் நேத்து உன் கிட்ட கோபப் படலேயே?" என்றார்.

"அர்ஜூன்" என்றதும் அவளையும் அறியாமல் நேற்று நடந்ததை முகம் காட்டிக் கொடுக்க வெட்கத்தில் சிவந்த மருமகளின் முகத்தைப் பார்த்த ஸ்ரீயின் உள்ளம் குளிர்ந்தது...

அவளின் கரம் பற்றித் தன் அருகில் அமர்த்திக் கொண்டவர் சன்னமான குரலில்...

COPYRIGHTED

"திவ்யா... இது உங்க அம்மா கேட்க வேண்டியது... அவளுக்குப் பதிலா நான் கேட்குறேன்... அர்ஜூன் உன்னிடம் ரொம்ப முரட்டுத் தனமாய் நடந்து கொள்ளவில்லையே" என்று அவளின் முகத்தை ஆழ்ந்துப் பார்த்தவாறே கேட்க...

தன் மாமியார் என்ன கேட்க வருகிறார் என்பதைப் புரிந்துக் கொண்டவள் இளம் முறுவலுடனும் வெட்க முகத்துடனும் தலை கவிழ்ந்தவாறே "இல்லை" என்பது போல் மெதுவாகத் தலை அசைக்க...

ஒரு அன்னையாகத் தன் மகனின் பரிவில், மனையாளுடனான அவனின் அனுசரணையில் மனம் நிறைந்துப் போனவர்...

"அப்பா முருகா, சீக்கிரம் ஒரு பேரப் பிள்ளைய கொடுப்பா" என்று வேண்ட, முருகனோ,

"அடப் போம்மா, இதுங்க இரெண்டையும் சேர்த்து வைக்கிறதுகுள்ள எனக்கே மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கிடுச்சு... இதில நீ அதுக்குள்ள பேரப்பிள்ளை கேட்கிற" என்றார்...

அங்கு திவ்யாவை இறக்கி விட்டு தன் அலுவலகத்தில் நுழைந்த அர்ஜூனின் முகத்தில் என்றும் இல்லாத ஒரு மகிழ்ச்சியும் பூரிப்பும் தெரிய அவனின் முகம் மாற்றத்தை கண்டு வித்தியாசமாக உணர்ந்த அலுவலர்களும் அர்ஜூனின் செயலாளர்களும்

ஒருவருக்கொருவரின் முகத்தை திரும்பிப் பார்த்துக் கொள்ள அவர்களின் அறைக்குள் நுழைந்த கதிரைக் கண்டவர்கள்...

"என்ன சார்? இன்னைக்கு MD முகம் செம்ம க்ளோ [Glow] ஆகுது??" என்று நக்கல் அடித்தார்கள்...

சற்று நேரத்திற்கு முன் அர்ஜூனை அழைத்துப் பேசியிருந்த கதிருக்குக் கூட அவனின் குரலில் ஏதோ ஒரு இனம் புரியாத மகிழ்ச்சிக் கலந்திருந்ததாகவே பட்டிருந்தது... அதற்கு காரணம் இந்த இரண்டு நாட்களாக அர்ஜூனின் திட்டத்தின் படி தான் செய்து முடித்திருந்த வேலைகள் என்றே கதிர் நினைத்திருந்தான்...

ஏனெனில் அர்ஜூனின் காரியத்திட்டங்களும் அதனை செயல்படுத்திய முறைகளும் கதிருக்கே வியப்பையும் சிறிதே அச்சத்தையும் கொடுத்திருந்தது...

தன் MD-யின் அறைக்குள் அவனின் அனுமதிப் பெற்று கதிர் நுழைய, அங்கு கணினியில் ஆழ்ந்து வேலை செய்துக் கொண்டிருந்த அர்ஜூனைக் கண்டவனுக்கு "அப்பா, இந்த சின்ன வயசில் என்னா தைரியம் இவருக்கு?" என்றே தோன்ற,

அவனை "சார்" என்று அழைத்தவனை நிமிர்ந்து பார்த்த அர்ஜூன்..

COPYRIGHTED

10:48 PM
https://drive.google.com/file

"என்ன கதிர்... ப்ளான் படி எல்லாத்தையும் பெர்ஃபெக்டா முடிச்சிட்டீங்க போல" என்றான் இதழ்களில் வழியும் புன்னகையுடன் ஆனால் கண்களில் அதே கடுமை...

"ஆமாம் சார்... அநேகமாக இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களுக்கு அவன்கிட்ட இருந்து ஃபோன் வரும்" என்று அவன் சொல்லி முடிக்கவில்லை.... அர்ஜூனின் அலை பேசி அலறியது....

எடுத்து காதில் வைத்தவன் மௌனமாக இருக்க...

எதிர் முனையில் இருந்தவனின் உலைப் போல் கொதித்த மனம் மேலும் எரிமலையாக வெடிக்க துவங்க...

"என்ன அர்ஜூன்... நினைச்சதை செஞ்சு முடிச்சிட்டன்னு ரொம்ப சந்தோஷமா இருக்கப் பொல" என்றான் எதிர் முனையில் இருப்பவன் பல்லைக் கடித்துக் கொண்டு...

அர்ஜூனின் அலுவலகத்திற்கு வருமான வரிச் சோதனையின் காரணகர்த்தாவான ராம் இண்டஸ்ட்ரிஸின் வாரிசு சம்பத்...

அவன் காட்டுக் கூச்சல் போட்டும் சேரில் தணிவாக சாய்ந்து அமர்ந்திருந்த அர்ஜூன் மேலும் நன்றாக சாய்ந்து தன் தலை முடியை கோதிவிட்டுக் கொண்டே ஸ்டைலாக சிரிக்க...

COPYRIGHTED

10:49 PM
https://drive.google.com/file

அவனின் சிரிப்பில் அதிர்ந்தது சம்பத் மட்டும் அல்ல... கதிரும் கூடத் தான்...

அது ஒரு ஆர்ப்பாட்டமான சிரிப்பு அல்ல... ஆனால் எதிராளியின் நெஞ்சுக் கூட்டை சில்லிட வைக்கும் அழுத்தமான சிரிப்பு...

முகத்தில் சிரிப்பு படர்ந்திருந்தாலும் அர்ஜூனின் உள்ளத்தில் தெறித்துக் கொண்டிருந்த கோபத்தை எதிர்முனையில் இருந்த சம்பத் மட்டும் பார்த்திருந்தால் கதி கலங்கிப்போயிருப்பான்...

கோபத்தை முகத்திலேயோ அல்லது வார்த்தைகள் வழியாகவோ வெளிப்படுத்துவிடும் மனிதர்கள் சாதாரணமானவர்களே...

ஆனால் அத்தனைக் சினத்தையும் ஆங்காரத்தையும் மனதிற்குள் அடக்கி வைத்துக் கொண்டு முகத்தில் முறுவலை தவழவிட்டுக் கொண்டிருந்த அர்ஜூனைக் கண்டிருந்த கதிரின் மனதில் கூட இவரை எதிர்ப்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும் இல்லை எனில் அவர்கள் வீழ்ச்சியைக் காணக் கூட அவர்கள் இருக்க மாட்டார்கள் என்றே தோன்றியது...

தான் இத்தனை பேசியும் இன்னும் ஒரு வார்த்தைக் கூட பேசாத அர்ஜூனின் மௌனத்தையும், தன் கோபத்திற்கு பதிலாக வெறும் சிரிப்பை மட்டுமே உதிர்க்கும் அர்ஜூனின் ஆணவத்தையும் கண்டு மேலும் கொந்தளித்துப் போன சம்பத்...

64% 10:49 PM
https://drive.google.com/file

"அர்ஜூன்... நீ தைரியமானவனா இருந்தால் என்னுடன் நேரில் மோதியிருக்கனும்... அத விட்டுட்டு இப்படி கோழை மாதிரி எங்கள் முதுகில் குத்தியிருக்கக் கூடாது" என்று கொதிக்க...

மனதில் அலைமோதிக் கொண்டிருக்கும் கோபம் எப்பொழுதாவது தன் எல்லையைக் கடக்கும் பொழுது அதன் பிடியில் இருந்து வெளி வருவதற்காகவோ, அல்லது மன உளைச்சல்களிலிருந்து தன் உள்ளத்தை நிதானப்படுத்த முயற்சிக்கும் பொழுதோ, உடற்பயிற்ச்சிக்கு அடுத்து அர்ஜூன் தேர்ந்தெடுக்கும் வழி சதுரங்க விளையாட்டு...

அவன் அறையில் அவனுக்கு எதிராக இருக்கும் மேஜையில் எப்பொழுதும் சதுரங்க பலகை காய்களுடன் இருக்கும்...

தன்னைத் தானே எதிர்த்து விளையாடுவதில் அவனுக்கு அத்தனை விருப்பம்... நமது எதிரி நமக்கு எதிராக தன் ஆட்டத்தை துவங்கும் முன் அவனின் அடுத்த மூவ் (நடவடிக்கை) என்னவாக இருக்கும் என்பதை எதிரியின் இடத்தில் இருந்து நாம் பகுப்பாய்வு செய்யும் பொழுது அவனுக்கே தெரியாமல் அவனை அடித்து வீழ்த்துவது எளிது...

சாய்ந்து அமர்ந்திருந்த தன் சேரில் இருந்து லேசாக முன்னோக்கி சாய்ந்த அர்ஜூன் தன் மேஜையின் மீதிருந்த சதுரங்க பலகையில் [Chess Board] காய்களை நகர்த்தியவாறே பேசத் துவங்கினான்...

COPYRIGHTED

"சம்பத்... இதுவரைக்கும் உங்க அப்பா மட்டும் தான் அடி முட்டாளுன்னு நினைச்சிருந்தேன்... ஆனால் இப்ப தான் தெரியுது... உங்கள் குடும்பத்தில் மத்தவங்களைக் கம்பேர் பண்ணும் போது அவர் எவ்வளவோ புத்திசாலிப் போலருக்கே..." என்று சிரிக்க...

அர்ஜூனின் பதிலில் ஆத்திரத்தின் எல்லைக்கே சென்ற சம்பத் பேசத் துவங்கும் முன்...

"சம்பத்... நீ பேசிட்டு இருக்கும் போது நான் பேசாமக் கேட்டுக்கிட்டு தான் இருந்தேன்... ஸோ திஸ் இஸ் மை டேர்ன்... [So this my turn]" என்றவன் சதுரங்க பலகையில் அடுத்த காயை நகர்த்தியபடியே மேலும் தொடர்ந்தான்...

"டு யூ லைக் டு ப்ளே செஸ் சம்பத்? [Do you like to play Chess Sampath?] லை:.ப் இஸ் லைக் எ செஸ் கேம் [Life is like a chess game] செஸ்ஸில் ஒவ்வொரு மூவிற்கும் ஒரு காரணம் இருக்கு... அதேப் போல் நாம் கொஞ்சம் அசந்தோம்னா நாம் எடுக்க வேண்டிய முடிவுகளை நம் எதிராளி எடுத்துவிடுவான்... அது மாதிரி எதிராளியோட பார்வையில் நாம் செய்யப் போறது ஒரு விதமாக் தெரியனும்... ஆனால் நாம் செய்றது வேற விதமாக இருக்கானும்.. எதிராளிக்கே தெரியாமல் அவனுடைய பானில் [Pawn] இருந்து க்வீன் [Queen] வரை அழிக்கனும்... அப்போதான் கிங்க [King] நிராயுதாபானியா நிக்க வச்சு செக் வைக்க முடியும்... இப்போ நீ அந்த நிலையில் இருக்கன்னு உனக்கு தெரியும்னு நினைக்கிறேன்..." என்றவன் கதிரைப் பார்த்து புன்னகைத்தான்...

ஏனெனில் ராம் இண்டஸ்ட்ரீஸின் தொழிற்சாலைகளின் முக்கிய பகுதிகளை இரவோடு இரவாக தீக்கு இறையாக்கியதும்,

COPYRIGHTED

64% 10:49 PM
https://drive.google.com/file

வெளி மாநிலங்களில் இருந்து வந்துக் கொண்டிருந்த அவர்களின் கண்டெயினர்களில் முக்கியமானவைகளை விபத்துக்குள்ளாக்கியதும், இவை இரண்டு விபத்துக்களிலுருந்தும் அவர்கள் காப்பீட்டுத் தொகை வாங்கமுடியாத அளவிற்கு விபத்துக்களை காப்பீட்டுத் தொகைக்காக ராம் இண்டஸ்ட்ரீஸே செய்தது போல் அவர்களின் ஊழியர்களை வைத்தே சித்தரித்திருந்தது அர்ஜூன் என்றால் அதனை சாமார்த்தியமாக செயலாற்றியது கதிராயிற்றே.....

அதைப் போலவே தொழிற்களின் முதுகெலும்பான தொழிலாளர்களுக்குள்ளும், ஊழியர்களுக்குள்ளும் அவர்களின் யூனியன் தலைவரை வைத்தே மிகப்பெரிய பிரச்சனையை உருவாக்கி கிட்டத்தட்ட இன்னும் சில நாட்களில் ராம் இண்டஸ்ட்ரிஸின் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தையும் அர்ஜூன் ஏற்பாடு செய்திருக்க, தொழிற்சாலைகளும் கண்டெயினர்களின் விபத்துக்களை மட்டுமே அறிந்திருந்த சம்பத்திற்கு அவன் கம்பெனியின் உள்ளுக்குள்ளே சிலந்தி வலைப் போல தொழிலாளர்களை கொண்டு அர்ஜூன் பிண்ணியிருந்த அபாயகாரமான திட்டம் தெரியமல் போனது அவனின் கொடுமையே...

மீண்டும் தொண்டையைக் கனைத்தவன்..

"என்ன சம்பத் லைனில் தான் இருக்கியா? லாஸ்ட் பட் நாட் லீஸ்ட்... செஸ் விளையாடுறதுல இன்னும் ஒரு முக்கிய விஷயம் என்ன தெரியுமா??

என்ஜாய் யுவர்செ:.ப் [Enjoy yourself]... ஆண்ட் ஐ டு என் ஜாய் யுவர் டி:.பீட்... [And i do enjoy your defeat]" என்றவன் அலை பேசியை துண்டிக்க...

COPYRIGHTED

10:49 PM 64%
https://drive.google.com/file

எள்ளும் கொள்ளும் வெடித்த முகத்துடன் அமர்ந்திருந்த சம்பத்தின் அருகில் வந்த ராமச்சந்திரன்...

"சம்பத்... இதத் தான் நான் முன்னேயே சொன்னேன்.... அவனோட மோதுறது எரிமலையோட மோதுறதுன்னு... இத இப்படியே விட்டுட்டு முதல்ல அவனால ஏற்பட்ட பிரச்சனைகளை சரி பண்ணுவது எப்படின்னு யோசி.... அர்ஜூனை தொழில் ரீதியாக அடிக்க முடியுமான்னு பாரு... இல்லைன்னா இந்த பிரச்சனைகளை இதோடு விட்டுடு..." என்று அறிவுரைக் கூற...

அர்ஜூனின் இந்த அதிரடி ஆட்டங்களும் அதனால் ஏற்பட்ட நஷ்டங்களும் ஏற்கனவே சம்பத்தை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருந்ததால் இனி அர்ஜூனை எதிர்த்து எந்த பயனும் இல்லை, அவனை எதிர்க்கவும் தெம்பில்லை என்று முடிவுக்கே சம்பத்தும் வர வேண்டியதாக இருந்தது...

கதிரை திரும்பிப் பார்த்த அர்ஜூன்...

"இஸ் தேர் எனிதிங்க் எல்ஸ் கதிர்?" என்க...

"சார்... அமெரிக்க ஷிப்மெண்டும் கிளியராகிடுச்சு" என்றவன் சில நொடிகள் தயங்கி...

"சாரி சார்... நம்ம பசங்கக்கிட்ட எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கொஞ்சம் அதிகாகமாகவே காட்டிட்டாங்க

COPYRIGHTED

10:49 PM
https://drive.google.com/file

போலிருக்கு... ஒரே நாளில் ஷிப்மெண்ட் கிளியர் பண்ணியாச்சு..." என்க...

"இட்ஸ் ஓகே... கதிர்... தட்டுற எடுத்துல தட்டியே ஆகனும்..." என்றவன் அவன் செல்லலாம் என்பது போல் மீண்டும் கணினியில் கண்களைப் பதிக்க...

வெளியே செல்ல எத்தனித்த கதிரை...

"கதிர்... பட் கஸ்டம்ஸ் எல்லாம் ஒழுங்கா பே (Pay) பண்ணிட்டீங்கள்ள?"

"யெஸ் சார்... நாம் பே பண்ண வேண்டியதெல்லாம் கரெக்டா செட்டில்மண்ட் பண்ணியாச்சு"

"ஹான்... தென் பேங்களூர் விஷயம் என்னாச்சு?"

"சார், இன்னைக்கு ஈவ்னிங் நான் பேங்களூர் போறேன் சார்..." என்று இழுக்க...

"கதிர்.. நீங்க போக வேண்டாம்... நானே போறேன்... இத இன்னும் இழுக்கக் கூடாது" என்றவன் திவ்யாவிற்கு அழைத்தான்...

மாமியாருக்கு உணவு பரிமாறியவள் இரவு முழுவதும் சுத்தமாக உறக்கம் இல்லாததாலும் மதியம் வரை தன் கணவனின் வலுவான அணைப்பில் திணறி இருந்ததால் வந்த களைப்பிலும்

COPYRIGHTED

சிறிதே உறங்க முற்பட அர்ஜுன் வாங்கிக் கொடுத்திருந்த அலை பேசி சினுங்கியது...

அலை பேசியைப் பார்த்தவள் அதில் தன் கணவனின் எண் ஒளிரவும் சில நொடிகள் அதை எப்படி உபயோகப்படுத்துவது என்று தடுமாறி ஒரு வழியாக கண்டுப் பிடித்து, வெட்கத்துடன் பேச துவங்க மறுமுனையில் என்ன சொன்னானோ அவள் முகம் வாடியதை பார்த்த ஸ்ரீக்குப் திக்கென்றது...

அவள் பேசி முடித்ததும் என்ன என்று கேட்க,

"இல்லை அத்த, அவங்களுக்குத் திடீர்னு பெங்களூர் போகனுமாம்.... (மறுபடியுமாஆஆ? என்று வாசகர்கள் கேட்பது எனக்கும் கேட்கிறது... என்ன செய்ய பெரிய பிஸ்னஸ்மேனிற்கு இதெல்லாம் சகஜமப்பா.. ஆனால் இந்த முறை அவன் கோபத்தில் போகவில்லையே!!!!).... ஏதோ பிஸினஸ் விஷயமா... வர மூன்று நாளாகுமாம்" என்றவள் அலை பேஸியை அவரிடம் கொடுக்க, அவன் பேசியதை கேட்டவர்,

"சரிப்பா, நீ பத்திரமா போய்ட்டுவா" என்றார்...

அர்ஜுன் பெங்களூர் சென்றதும் தன் கணவன் இல்லாத வீட்டிற்க்கு போகப் பிடிக்காமல் திவ்யா ஸ்ரீயுடன் மருத்துவமனையிலேயே தங்கிவிட்டாள்.

COPYRIGHTED

10:49 PM 64%

https://drive.google.com/file

அவன் பெங்களூர் சென்ற மூன்று நாட்களுக்குள் ஸ்ரீக்கும் உடல் நிலை தேறியதால் அவரை மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்...

இதற்கிடையில் கலாவும் பேசி ஸ்ரீயின் உடல் நிலையை விசாரித்தவர், திவ்யாவின் செயலுக்கு மன்னிப்பு கேட்கவும் தவறவில்லை..

ஒரு வழியாக வீட்டிற்கு வந்த ஸ்ரீக்கு நிம்மதியாக இருக்க ஆனால் தன் கணவன் இல்லாமல் திவ்யாவிற்குத் தான் வீடே வெறிச்சோடி இருந்தது...

ஆனால் அவன் சொன்னது போல் முன்று நாட்களுக்குள் அவனின் வேலை முடியவில்லை...

அவர்கள் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்ததை அறிந்தவன் ஒர் இரவு ஸ்ரீயை அழைத்தவன் அவரின் நலம் விசாரித்த பிறகு திவ்யாவை கேட்க, திவ்யாவை அழைத்த ஸ்ரீ அலை பேசியைக் கொடுத்தவர்...

"உங்க ரூமிற்க்கு போய்ப் பேசும்மா" என்றார்...

தன் கணவனின் குரல் கேட்க ஆவலுடன் இருந்தவள் அலை பேசியை எடுத்துக் கொண்டு மாடி படிகளில் வேகமாக ஏற...

COPYRIGHTED

10:50 PM
https://drive.google.com/file

"பாத்து, அவன் லைனில் தான் இருப்பான்... மெதுவாகப் போ.... நீ விழுந்திடாத" என்று ஸ்ரீ சொல்ல,

சிரித்துக் கொண்டே அவனின் அறையை அடைந்தவள் கதவை சாத்திவிட்டுக் கட்டிலில் அமர்ந்து மெல்ல "என்னங்க" என்றாள்...

"சொல்லுங்க" என்று அவன் மறுமுனையில் கிண்டல் செய்ய, அவளுக்கும் வெட்கத்தில் அதற்கு மேல் பேச்சு வரவில்லை...

சிரித்தவன் "உன்னைப் பார்க்கனும் போல இருக்குடி... அதுவும் இப்பவே" என்க, அவள் ஏதும் பேசாமல் போகவே "திவி, லைன்ல இருக்கியா?" என்றான்...

கணவன் தன் பெயரை முதன் முறை திவி என்று சுருக்கி அழைத்ததில் மனதிலும் உடலிலும் சிலிர்ப்பு உண்டாக அவன் நெஞ்சில் அந்த நிமிடமே சாய்ந்து கொள்ள மனம் அவனைத் தேடியது...

ஆனால் அர்ஜூன் அன்று கூடலின் போதே அவளை அவ்வாறே அழைத்திருந்தான்... அதனை உணர்ந்து கொள்ளும் நிலையில் அவள் தான் இல்லை...

ஆனால் இன்றும் அதே போல் அழைக்க முதன்முறை அவனின் செல்ல அழைப்பைக் கேட்டு சிலிர்த்தவள் "ம்ம்ம், இருக்கேன்" என்றாள்...

COPYRIGHTED

64% 10:50 PM
https://drive.google.com/file

"மூன்று நாட்கள்ல முடியும்னு நினைச்ச வேலை முடிய இன்னும் த்ரீ ஃபோர் டேய்ஸ் ஆகும் போல இருக்குடி... எப்படா வருவேன்னு இருக்கு, உனக்கு?" என்று கேட்க, இதற்கு என்ன பதில் சொல்வது என்று தான் அவளுக்குத் தெரியவில்லை....

மனது முழுவதும் தன் கணவன் எப்பொழுது வருவான் என்று ஏங்கி கிடக்க, ஆனால் வெட்கத்தை விட்டு அவனிடம் அதை எப்படிச் சொல்வது என்று தடுமாறியவள் மீண்டும் அமைதியாக இருக்க, அது அவனுக்கு வருத்தைக் கொடுத்தது...

"என்னடி, எனக்கும் உங்களைப் பார்க்கனும் போல் இருக்குன்னு சொல்லுவன்னு எதிர் பார்த்தா ஒன்னுமே சொல்ல மாட்டேங்குற.... உனக்கு அப்படி எதுவும் இல்லையா என்ன?"

"ஐயோ! என்னங்க??" என்று அவள் அலற, சிரித்தவன் இந்த நிமிடம் அவள் முகம் எப்படி இருக்கும் என்று அவளின் முக மாற்றத்தை தன் கண் முன் கொண்டு வந்தவன், மனம் முழுவதும் தன் மனையாளின் முகமே நிரம்பியிருக்க, குதூகலத்துடன் சிறிது நேரம் பேசிவிட்டு அழைப்பை துண்டித்தான்.

ஒரு வழியாகச் சென்ற வேலை வெற்றிகரமாக முடிய சென்னை விமான நிலையத்திற்கு வந்து இறங்கியவனின் (ஹய்ய்ய், ஒரு வழியா திரும்பவும் வந்துட்டான்பா!) நினைவில் தன் மனையாளின் நினைவே இருக்க, அவளைப் பார்க்க ஆவலுடன் வீட்டிற்கு விரைந்து வந்தவன், அங்கு வீட்டில் எல்லோரும் ஒன்றாகக் கூடி இருக்க அவன் காத்திருந்த மனைவியுடனான தனிமை வெகு நேரம் கிடைக்கவே இல்லை...

COPYRIGHTED

10:50 PM 64%
https://drive.google.com/file 17

அவளும் முடிந்தவரை நாணத்தால் அவனைப் பார்ப்பதை தவிர்த்தவள் சமையல் அறையிலேயே முடங்கிக் கிடக்க, எப்படியும் இரவு ரூமிற்கு வந்து தானே ஆகனும் என்று நினைத்துக் கொண்டான்...

இரவு உணவு முடித்து, இன்னமும் திவ்யா மாடிக்குச் செல்லாமல் இருந்ததைப் பார்த்த ஸ்ரீ,

"என்னம்மா, இவ்வளவு நேரமாச்சு.... இன்னும் என்ன பண்ணிட்டு இருக்க... போ" என்க,

"தோ முடிச்சுட்டேன் அத்தே" என்றவள் இதற்கு மேலும் கீழே இருக்க வழியில்லை என்று நினைத்து மாடி ஏறினாள்...

அவளுக்காகக் காத்திருந்தவன் அவள் கதவை தட்டி விட்டு உள்ளே நுழைய, அங்குப் புன் சிரிப்புடன் கட்டிலில் சாய்ந்து படுத்திருந்த கணவனைப் பார்த்தவள் கூச்சத்தில் தலை கவிழ,

"அங்கேயே நின்னுட்டு இருந்தா எப்படி? இங்க வா" என்றான்...

அருகில் சென்றவள் நின்று கொண்டே இருக்க, அவன் அவளின் கையைப் பிடித்து இழுக்கவும் தடுமாறி அவனின் மேலே விழுந்தாள்...

COPYRIGHTED

https://drive.google.com/file

பூந்தளிர் மேனியவள் அவனின் மேல் மல்லிகைக் கொடி போல் படர்ந்திருக்க, ஒரு வாரம் அவளைப் பிரிந்திருந்த ஏக்கம் அவனின் தாபத்தைக் கட்டவிழ்க்க, கைகள் அவளின் இடையை இறுக்கமாகத் தழுவியது...

அவனின் செயலில் மனம் மயங்கியவளாய் அவளும் அவன் இழுத்த இழுப்பிற்கு உடன் பட, அவளைத் தூக்கியவன் கீழே சரித்து அவளின் மேலே படர்ந்தவன் தன்னுடைய ஒரு வாரப் பிரிவை, பிரிந்திருந்தால் தன் மனைவியுடனான கூடலை இழந்து தவித்து இருந்த மனதின் புழுக்கத்தைத் தீர்த்துக் கொள்ளும் வரை அவளை விடவில்லை...

நாட்கள் அதன் போக்கில் செல்ல அர்ஜூன் திவ்யாவின் இணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பார்த்திருந்த பெரியோர்களுக்கு அத்தனை பூரிப்பாகவும் நிம்மதியாகவும் இருந்தது....

வீட்டில் ஏற்கனவே இருந்திருந்த உற்சாகத்திற்கு மேலும் சந்தோஷம் கூட்டும் வகையில் மஹாவின் பிறந்த நாளும் வர, வழக்கமாகப் பிறந்த நாளை பெரிதாகக் கொண்டாடுவதெல்லாம் ஶ்ரீயிடம் செல்லாது என்றாலும் அன்று ஏனோ அவள் தன் தோழிகளுடன் சேர்ந்து கொண்டாட அனுமதி வழங்கியிருந்தார்...

தன் தோழிகளுடன் ஹோட்டலுக்கு அன்று இரவு செல்வதாகத் தன் அன்னையிடம் கேட்க எங்குச் சென்றாலும் இரவு சீக்கிரம் வர வேண்டும் என்றும், அதுவும் அர்ஜூன் வருவதற்கு முன் வீடு வந்து சேர வேண்டும் என்று ஶ்ரீ கட்டளை இட்டிருந்தார்...

COPYRIGHTED

சரி என்றவள் முதன் முறை தன் தோழிகளின் நச்சரிப்பால் உணவகம் [Restaurant], பார், நடன அரங்கம் என்ற அனைத்தும் உள்ள அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலிற்குள் நுழைய, மஹாவிற்கு வினோத்தின் மீது இருந்த காதலை தன் நெருங்கிய தோழிகளிடம் மட்டும் அவள் சொல்லியிருந்தாலும் அந்த விஷயம் எப்படியோ கோகுலின் காதுகளுக்குப் போக, உலையாகக் கொதித்துக் கொண்டிருந்தவன் தன் வேட்டையைத் துவங்க நேரம் பார்த்துக் காத்திருந்தவனுக்கு இன்று அவள் தன் தோழிகளுடன் இந்த ஹோட்டலிற்குச் செல்லப்போவதை அறிந்ததும் இன்றைய நாளையே குறித்திருந்தான் தன்னவளாக அவளை எடுத்துக் கொள்வதற்கு.....

இது தெரியாத மஹா தன் தோழிகளுடன் ஹோட்டலின் உணவகம் இருந்த பகுதிக்கு சென்றவள் அவர்களின் விருப்பம் போல் உணவு பதார்த்தங்களை ஆர்டர் செய்துவிட்டு கலகலவென்று பேசி சிரித்துக் கொண்டிருக்க, சிறிது நேரத்திலேயே அங்கு இருந்த நடன அரங்கில்/தளத்தில் [Dance Floor] நடனம் ஆட ஆரம்பித்து இருந்தார்கள்...

வசதி படைத்த மேல் தட்டு வர்க்க இளைஞர்களுக்குத் தன் தாய் தந்தை சேர்த்து வைத்த சொத்தை செலவழிக்க இது ஒரு பிடித்தமான வழி...

ஆரம்பத்தில் லேசாக ஆரம்பிக்கும் இசை நேரம் ஆக ஆகக் காதுகள் கிளிய அலற ஆரம்பிக்க, இளவட்டங்கள் அருந்தியிருந்த வெவ்வேறு வகையான வெளிநாட்டு மது,

10:50 PM 63%
https://drive.google.com/file

அவர்களின் ஒவ்வொரு நரம்பிலும் சூடேற்ற, வெறித்தனமான நடனம் ஆரம்பிக்கும்...

நாகரிகம் என்ற பெயரில் அளவுக்கதிகமான ஆபாச ஆடை அணிந்து, வாழ்க்கையில் நாளை என்ற ஒன்றே கிடையாது இன்றே முடியுமளவு அனுபவித்து விட வேண்டும் என்பது போல் ஆண் பெண் என்ற வித்தியாசம் இல்லாமல் கட்டிப் பிடித்துக் கொண்டு ஆட ஆரம்பிக்க முதன் முறையாக இது போன்ற இடத்திற்கு வந்திருந்த மஹாவிற்கு "ஏண்டா இங்கு வந்தோம்" என்று கதிகலங்கிப் போனது...

அத்தனை ஆபாசமாகவும், வெறித்தனத்தோடும், கத்திக் கூச்சல் போட்டுக் கொண்டு நடனம் என்ற பெயரில் உடல்கள் பிண்ணி பிணைந்து கொண்டு நடனத் தளத்தில் கூத்தடித்துக் கொண்டிருந்தார்கள் இளவட்டங்கள்...

நமது இந்தியாவின் வருங்காலத் தூண்களில் ஒரு பகுதி!!!!!

முகத்தைச் சுளிக்க வைக்கும் அவர்களின் நடன அசைவுகளும், குமட்டிக் கொண்டு வந்த மதுக்களின் வாடையும், காதே கிழியும் அளவிற்குக் கேட்டுக் கொண்டிருந்த இசையின் கூச்சலும் அவளுக்குத் தலைவலியை உண்டு பண்ண இப்படியா தன் பிறந்த நாளை கொண்டாட வேண்டும் என்று தலையில் மானசிகமாக அடித்துக் கொண்டவள் தன் அருகில் அமர்ந்து இருந்த தன் நெருங்கிய தோழியான நிருபமாவின் காதை கடித்தாள்....

COPYRIGHTED

10:50 PM 63%
https://drive.google.com/file

"நிரு, என்னடி இது? ஒழுங்கா எப்போவும் போற ஹோட்டலுக்குப் போய் இருக்கலாம் இல்ல... எனக்கு இங்க இருக்கக் கொஞ்சம் கூடப் பிடிக்கலைடி.... எங்க அம்மாவுக்கோ அல்ல அர்ஜூன் அண்ணாவுக்கோ இது தெரிஞ்சு நான் செத்தேண்டி"

"மஹா... ஜஸ்ட் ஒன் டே தானடி.... நீ சொல்லாட்டி எப்படி உங்க வீட்டில் இருப்பவர்களுக்குத் தெரியும்.... நான் தான உன்னை ட்ராப் பண்ணப் போறேன்.... கண்டிப்பா சீக்கிரம் உங்க அண்ணா வரதுக்குள்ள உன்னைக் கொண்டு விட்டுடறேன்" என்று நிருபமா அவளைச் சமாதானப்படுத்த முயல...

எத்தனை தான் அவளின் கலக்கத்தை அகற்றவும், அவளை அமைதிப் படுத்தவும் நிருபமா முயன்றாலும், அங்கு ஆடிக் கொண்டிருந்தவர்களின் கூத்தும் கும்மாளமும், கூட நடனம் ஆடிய பெண்களின் மேல் ஆண்களின் வரைமுறையற்ற அசிங்கமான தொடுகைகளும் அவளின் அச்சத்தை நொடிக்கொரு தடவை அதிகரிக்கச் செய்ய,

இதில் அவளின் உள்ளத்தில் மூலையில் இன்று ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப் போவதை போல் உள்ளுணர்வு உறுத்திக் கொண்டே இருக்க மஹாவின் மனதிலும் உடலிலும் உதறல் எடுக்க ஆரம்பித்தது....

ஆர்டர் செய்திருந்த உணவும் வந்துவிடத் தோழிகளுடன் சேர்ந்து அருந்த துவங்கியவளுக்கு உணவும் உள்ளே இறங்காமல் போக ஒவ்வொரு நிமிடமும் நெருப்பில் இருப்பது போல் மனம் உலையாகக் கொதித்து இருக்க, இதில் ஏற்கனவே எரியும் நெருப்பில் மேலும் எண்ணெய் ஊற்றி வெட்பட்தைப் பல மடங்கு

10:51 PM 63%
https://drive.google.com/file

அதிகரிக்க செய்வதுப் போல் டான்ஸ் ஃப்ளோரில் ஏறினான் கோகுல்...

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

COPYRIGHTED

63% 10:52 PM
https://drive.google.com/file

மலரினும் மெல்லியவள்!

பாகம் - 26

மஹாவின் உள்ளம் ஹோட்டலில் நடந்து கொண்டிருந்த நடனத்திலேயோ, உணவிலேயோ அல்லது தோழிகளின் அரட்டையிலேயோ ஈடுபடமுடியாமல் தவித்து அது வரை தோழிகளுக்காகத் தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு பொறுமையாக இருந்தவளுக்குத் திடீரென்று எதிர்பாராமல் அங்குக் கோகுலை கண்டதும் சப்த நாடியும் அடங்கி ஒடுங்கியது....

கடந்த சில நாட்களாகத் தான் எங்குச் சென்றாலும் அவன் தன்னைப் பின் தொடர்வதைப் போலவே உணர்ந்து இருந்தவளுக்கு இன்று தன் கண்முன்னே அதுவும் முதல் முறை இதைப் போன்ற ஹோட்டலிற்கு வந்திருந்ததைக் காக்காவிற்கு மூக்கில் வியர்த்தது போல் தெரிந்து கொண்டு வந்து தன் முன்னே நின்றவனைக் காணவும் இதயம் சில்லிட இனி இங்கு இருப்பதே ஆபத்து என்று உள்ளுணர்வு கூற,

"நிரு, ப்ளீஸ் கிளம்பலாம்டி" என்றாள் குரலிலும் நடுக்கத்தைக் கொண்டு வந்து...

அங்கு ஹோட்டலில் நடந்து கொண்டிருந்த கூத்தை முதன் முதலாகத் தானும் பார்ப்பதால் வாயைப் பிளந்து கொண்டு பார்த்திருந்த நிருபமாவின் காதில் இது விழுந்தால் தானே.

ஆனால் மஹாவிற்கே தெரியாத ஒன்றைக் கோகுல் செய்திருந்தான் அவளை வீழ்த்துவதற்கு...

COPYRIGHTED

10:52 PM 63%
https://drive.google.com/file

மஹா தன் தோழிகளுடன் வருவதற்கு முன்பே ஹோட்டலிற்கு வந்திருந்தவன் அவர்கள் அமர்வதற்கு முன் பதிவு செய்திருந்த மேஜையைத் தெரிந்து கொண்டு வெயிட்டரை அழைத்தவன் மஹாவின் புகைப் படத்தைக் காட்டி அவளுக்குப் பரிமாறப்படும் குளிர் பானத்தில் "டேட் ரேப் ட்ரக்" அல்லது "க்ளப் ட்ரக் எக்ஸ்டஸி" [club drug "ecstasy"] எனப்படும் பாலியல் வன்முறைகளுக்கென்றே கண்டுப்பிடிக்கப்பட்ட ஒரு மருந்தைக் கலக்க சொன்னான்...

அது குடிப்பவர்களை மெய்மறந்த நிலைக்குக் கொண்டு சென்று களிவெறிப் பரவசத்தில் ஆழ்த்தும் ஒரு வித கொடிய மருந்து...

கோகுலிடம் இருந்து வெயிட்டர் பெற்றுக் கொண்ட கத்தைப் பணம் சரியாக வேலை செய்ய எந்தப் பானத்திலும் கலக்கப்படக் கூடிய அதற்கென்று ஒரு தனி நிறமோ, வாசனையோ அல்லது சுவையோ எதுவும் இல்லாத அந்தக் கொடிய மருந்தை மஹா வரவழைத்திருந்த பானத்தில் கலந்த வெயிட்டர் அவளின் மேஜையில் வைக்கவும்,

மஹா அந்தப் பானத்தைக் குடிக்கக் கையில் எடுத்தவளுக்கு மனதில் ஏற்பட்டிருந்த கலக்கம் ஏனோ திடீரென்று அதிகரித்ததைப் போலத் தோன்ற, மெல்ல மேஜையில் பானத்தை வைத்தவளின் மனம் அந்த நிமிடம் உணவோ பானமோ எதுவும் அருந்தும் நிலையில் இல்லை...

டான்ஸ் ஃப்ளோரில் ஆட ஆரம்பித்திருந்த கோகுலின் கைகள் தன்னுடன் ஆடிக் கொண்டிருந்த இளம் பெண்ணின் மேல் படக்கூடாத இடத்தில் எல்லாம் அருவருப்பாகப் பட்டுக் கொண்டிருந்தாலும் அவனின் காமம் வழியும் வேட்கை மிகுந்த கண்கள் மஹாவிடமே நிலைத்து இருந்தது...

வெயிட்டர் பானத்தையும் உணவையும் அவளின் மேஜையில் வைத்ததில் இருந்தே அவளைக் கவனித்துக் கொண்டிருந்தவனுக்கு அவள் அந்தப் பானத்தைக் குடிப்பது போலவே தெரியவில்லை

COPYRIGHTED

63% 10:52 PM
https://drive.google.com/file

ஆதலால் எரிச்சல் அடைந்தவனுக்கு இன்று எப்படியும் அவளை அடைந்தே தீர வேண்டும் என்ற வெறிமட்டும் உடல் முழுவதும் ஊறிக் கொண்டிருந்தது...

சில நிமிடங்கள் பொறுத்துப் பார்த்தவனின் ஒவ்வொரு நரம்பிலும் அவன் குடித்திருந்த மதுவினால் போதை ஏறியிருக்க, அதற்கு மேல் தாங்கமாட்டாது ஒரு கையால் தன்னுடன் ஆடிய பெண்ணை அணைத்துக் கொண்டே மறு கையால் மஹாவைப் பார்த்து ஏதோ சைகை செய்தவன் அவள் தன்னைக் கண்டதும் விழிகளில் அச்சத்தைத் தேக்கி வைத்து தலை கவிழ்ந்ததைக் கண்டவனுக்கு வேட்டையாடும் புலியின் கண்களுக்குத் தெரியும் மானைப் போலவே தெரிந்தாள் மஹா...

அவனின் பார்வையில் அப்படி ஒரு வெறித் தெரிந்தது...

அதற்குப் பின் அவள் அவனை நிமிர்ந்தும் பார்க்காதைக் கண்டவன் கீழே இறங்கி அவளை நோக்கி நடந்து வர அவன் டேன்ஸ் ஃப்ளோரில் ஏறியதில் இருந்து தன்னை விழுங்கி விடுவதைப் போல் பார்த்திருந்ததைப் பார்த்திருந்தவளுக்கு அவன் தன்னை நோக்கி வருவது தெரிய, அச்சத்தில் நாக்கு உலற தன் தோழியின் கையை இறுக்கி பிடித்தவள்....

"நிரு... தயவு செய்து நான் சொல்றத கேளுடி.... ப்ளீஸ், வாடி போகலாம்" என்று கெஞ்சினாள்...

ஒரு வேளை இது பகலாக இருந்திருந்தாலோ அல்லது கல்லூரி போன்ற வெளியிடமாக இருந்திருந்தாலோ கூட அவள் இந்த அளவிற்குப் பயந்திருக்க மாட்டாள்... ஆனால் இப்பொழுது இருப்பதோ குடும்பப் பெண்கள் வரக் கூடாத நாகரிகம் என்ற பெயரில் மிருகங்களாக மாறி இருந்த இளவட்டங்கள் கூத்தடிக்கும் இடம்...

COPYRIGHTED

அவள் கெஞ்சியும் அவளின் தோழிகளின் காதுகளுக்கு அவளின் குரல் கேட்கவில்லை... அப்படி லயித்து இருந்தார்கள் அரட்டையிலும் நடனத்தை வேடிக்கைப் பார்ப்பதிலும்...

இதில் கோகுலின் அட்டகாசம் கல்லூரி முழுக்கப் பிரபலமாகி இருந்தும் ஏனோ மாணவிகளில் சிலருக்கு அவன் மேல் ஒரு க்ரேஸ் இருக்கத் தான் செய்தது...

அவனின் பணமோ இல்லை அவனுக்குக் கல்லூரியில் இருந்த பிரபலமோ எதுவோ ஒன்று அவன் மேல் அவர்களுக்கு ஒரு ஈடுபாடு வரச் செய்து இருந்தது...

அவன் தங்களை நோக்கி வருவதைப் பார்த்த தோழிகளில் ஒருத்தி,

"ஏய், கோகுல் இங்க தாண்டி வரான்" என்று ஜொள்ளுவிட, அவளை முறைத்த மஹா,

"நிரு இப்போ நீ என்ன கூட்டிட்டு போறியா இல்ல நானே ஏதாவது டேக்ஸி பிடித்துப் போகட்டுமா?" என்றாள்...

அவள் நிருபமாவிடம் கண்டித்துக் கூறவும் கோகுல் அவளை நெருங்கி வரவும் நேரம் சரியாக இருந்தது....

அது வரை கேலிப் பேச்சும் அரட்டையுமாக இருந்த நிருபமாவிற்கு அப்பொழுது தான் சுரீரென்று இருந்தது கோகுலைக் கண்டதும்... ஏனெனில் தோழிகளுடனான அரட்டையிலும் உணவு உண்பதில் இருந்த ஆர்வத்திலும் அவள் கண்களுக்குக் கோகுல் தென் படவே இல்லை...

10:52 PM 63%
https://drive.google.com/file

ஐயோ! இவன் எப்பொழுது இங்கு வந்தான்? என்று அவள் யோசிப்பதற்குள் மஹாவின் அருகில் வந்திருந்தவன்...

"வுட் யூ லைக் டு டேன்ஸ் வித் மி மஹா? ["Would you like to dance with me Maha?]" என்று கேட்க,

சுட்டெரித்துவிடுவது போல் அவளின் பார்வையைப் பார்த்தவன் மஹாவின் மேஜைக்குப் பக்கத்தில் இருந்த இன்னொரு மேஜையின் நாற்காலியை அவளுக்கு அருகில் இழுத்து போட்டு அமர்ந்தான்...

அவனின் நோக்கம் மஹாவை எப்படியாவது அந்தப் பானத்தை அருந்த செய்ய வேண்டும் என்பதே...

ஆனால் அவன் அத்தனை நெருக்கத்தில் அமரவும் அவன் மேல் இருந்து வந்த மது வாடை வேறு குமட்டிக் கொண்டு வர, சட்டென்று எழுந்தவள் தன்னையும் அறியாமல் "எக்ஸ்டஸி" மருந்து கலந்திருந்த அந்தப் பானத்தைத் தட்டிவிடத் தன் திட்டம் கீழே இவ்வாறு சிதறிக் கொண்டு இருப்பதைக் கண்ட கோகுலின் மனம் அடங்காத ஆங்காரத்தால் கொந்தளித்துக் கொண்டிருக்க,

பானம் தன் மேல் சிந்தியிருந்ததால்....

"நிரு, ஐ ஹேவ் டு கோ டு ரெஸ்ட் ரூம் [Niru, I have to go to restroom]" என்ற மஹா ரெஸ்ட் ரூமை நோக்கி நடக்க,

சட்டென்று சேரில் இருந்து எழுந்தவன் புள்ளி மானை வேட்டையாடும் வெறியோடு அவளைப் பின் தொடர்ந்தான்....

COPYRIGHTED

10:52 PM
https://drive.google.com/file

அவன் தன் பின்னால் தன்னைத் தொடர்ந்து வருவதை உணர்ந்தவள் வேகமாக நடக்க அவனும் தன் வேகத்தை அதிகரிக்க, ரெஸ்ட் ரூமிற்குள் நுழைந்தவள் தன் முட்டாள் தனத்தை நினைத்துத் தலையில் அடித்துக் கொண்டாள்...

"முதலில் இந்த மாதிரி ஹோட்டலுக்கு வந்ததே தப்பு.... இதுல அவன் என் பக்கதுல உட்கார்த்திட்டு இருக்கும் போது ஃப்ரெண்ட்ஸ் ஒருத்தியையும் கூட்டி வராமல் தனியாக ரெஸ்ட் ரூம் வந்தது அத விடப் பெரிய தப்பு... இப்போ அவன் வெளியில் தான் நிப்பான்... எப்படி அவன்கிட்ட இருந்து தப்பிகிறது" என்று சிந்தித்தவளுக்குக் கை கால்களில் நடுக்கம் எடுக்க என்ன செய்வது என்று தடுமாறி உள்ளேயே நின்றாள்...

மஹாவின் அதிர்ந்த முகத்தையும் தங்கள் அருகில் வந்து கோகுல் அமர்ந்ததையும், பின் தடுமாற்றத்தில் மஹா பானத்தைத் தட்டிவிட்டதையும் பார்த்திருந்த நிருபமாவிற்கு மஹா "ரெஸ்ட் ரூம் போகிறேன்" என்று சொல்லவும் அவனும் அவளைப் பின் தொடர்ந்து செல்வதைப் பார்த்ததும் பயம் அப்பிக் கொள்ள ஒருவேளை இதற்காகத் தான் மஹா போகலாம் என்று நச்சரித்துக் கொண்டிருந்தாளோ என்று வெகு தாமதாகப் புத்தியில் உரைக்கத் தன் தோழிகளிடம் சொல்லிவிட்டு வேகமாக ரெஸ்ட் ரூமை நோக்கி நடந்தாள்..

அங்கு மஹா வெளியே வர கழுகுக் கோழிக் குஞ்சை தனக்கு இறையாக்க காத்திருப்பது போல் ஒரு வித வெறிக் கண்களில் படற கோகுல் காத்திருக்கவும், அவன் அருகில் சென்றவள்...

"ஹாய் கோகுல்.... லேடிஸ் ரெஸ்ட் ரூமுக்கிட்ட என்ன பண்றீங்க?" என்று வேறு வழியில்லாமல் புன்னகைத்தவாறே கேட்க...

வெளியில் நிருபமாவின் பேச்சுக் குரல் கேட்டதும் சட்டென்று கதவை திறந்து வெளியில் வந்த மஹாவிற்கு நிருபமா அவளுக்காக

COPYRIGHTED

10:53 PM 63%
https://drive.google.com/file

வெளியில் காத்திருப்பதைப் பார்த்து சிறிது நிம்மதி வர, அவள் கையைப் பிடித்து இழுத்தவள் வேகமாக வெளியேற முனைந்தாள்...

ஆனால் இதற்கெல்லாம் அயர்ந்து போகுபவனா கோகுல்?

"ஏற்கனவே போட்டிருந்த திட்டம் தான் பழிக்கவில்லை... இப்பொழுது தனியாக வேறு மாட்டியிருக்கிறாள்.... இதைவிட ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது... எப்படியாவது இந்த நிருபமாவை இங்கு இருந்து அப்புறப் படுத்திவிட்டால் பின் மஹாவை அடைவது சுலபம்" என்று தப்புக் கணக்கு போட்டவன் வேகமாக மஹாவைத் தாண்டி சென்று அவளின் வழியில் குறுக்கே நின்றவன்,

"என்னடி, இன்னும் என் மனச புரிஞ்சிக்காத மாதிரி நடிக்கிற? இத்தனை மாசமா உன் பின்னாடி நாய் மாதிரி சுத்திக்கிட்டு இருக்கேன்... என்ன விட்டுட்டு எவனோ ஒரு கிராமத்தான லவ் பண்றியாமே? அப்படி என்னடி என் கிட்ட இல்லாதத அவன் கிட்ட பார்த்த?" என்று அசிங்கமாகக் கேட்க...

அவனின் கேள்வியில் அருவருப்பு அடைந்தவள்...

"கோகுல்... மைண்ட் யுவர் டங்க் [Gokul.. Mind your tongue] " என்று சத்தமாகக் கேட்டவளுக்கு அதற்கு மேல் அவனிடம் பேச விருப்பமில்லாமல் அந்த இடத்தை விட்டு நகரப் போக,

அவள் எதிர்பார்க்காத நேரம் அவளின் கையைப் பிடித்துச் சட்டென்று இழுத்தான் அந்த ஒநாய்...

அவன் திடீரென்று இழுத்ததும் நிலைத் தடுமாறியவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவன் கன்னத்தில் பளாரென்று அறைய, மஹாவின் அமைதியான குணத்தையும், எப்பொழுதும் தன் தோழிகளுடன் சிரித்த முகமாகவே இருப்பவளை மட்டுமே

COPYRIGHTED

63% 10:53 PM
https://drive.google.com/file

கண்டிருந்தவனுக்கு அவளின் இந்தப் புதிய முகம் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது...

அவளின் கோபத்தையும், அவள் இவ்வாறு தன்னை அறைவாள் என்பதனையும் கொஞ்சம் கூட எதிர்பார்க்காத கோகுல் அதிர்ந்தவன் உடலும் உள்ளமும் அனலாகக் கொதிக்க, முகத்திலும் அவனின் சீற்றம் தெரிய அவளை இன்னும் நெருங்கி....

"இத்தனை நாள் உன்ன சும்மா விட்டதே தப்பாப் போச்சுடி... அதுக்கு எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்" என்றவன் மஹாவின் கரத்தைப் பிடித்துத் தர தரவென்று இழுத்து போக,

அவனது வலுவான கரத்தை தன் பலம் கொண்ட மட்டும் வேகமாக உதறி தள்ளியவள் நிருபமாவுடன் சேர்ந்து மீண்டும் பளார் பளாரென்று அறைய, ஏற்கனவே மதுவின் தாக்கத்தால் தள்ளாடிக் கொண்டிருந்தவனை இப்பொழுது இரு பெண்களின் ஆக்ரோஷமான தாக்குதல்கள் வேறு நிலைகுலையச் செய்ய, கீழே விழப் போனவன் இருந்தும் தன்னைச் சமன் படுத்திக்கொண்டு நிமிர்ந்து பார்த்தவனின் முகம் அவமானத்தில் செக்கச் சிவந்து போயிருந்தது....

இவர்களின் கூச்சல் சத்தம் கேட்டு அதற்குள் ஹோட்டல் ஊழியர்கள் வேகமாக ஓடி வர ஆனால் அவர்களுக்குக் கோகுல் ஏற்கனவே நன்கு பரிச்சயமானவன் என்பதால் அவனை ஒன்றும் செய்ய இயலாமல் கையைப் பிசைந்தவாறு ஒருவொருக்கு ஒருவர் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்க,

அவர்களின் தடுமாற்றத்தைக் கண்டு சுதாரித்த நிருபமா பட்டென்று...

"இவ எ.கே க்ரூப் ஆஃப் கம்பெனிஸின் ஓனரோட தங்கை" என்று கத்தினாள்...

COPYRIGHTED

62% 10:53 PM
https://drive.google.com/file

எ.கே க்ரூப் ஆஃப் கம்பெனிஸ் என்ற பெயரைக் கேட்டவுடனே அதிர்ந்தவர்கள் வேகமாகக் கோகுலிடம் வந்து...

"சார், நீங்க இரண்டு பேருமே பெரிய இடம்... இப்போ என்ன நடந்தாலும் அது எங்க ஹோட்டல தான் பாதிக்கும்...... ப்ளீஸ் சார், அவங்களைப் போக விடுங்க சார்..." என்று அவளை விடச் சொல்லி கெஞ்ச....

கோகுலிடம் அவர்கள் கெஞ்சிக் கொண்டு இருக்கும் பொழுது அவன் கவனம் அவர்களிடம் இருக்க, அது தான் சமயம் என்று மஹாவின் கையைப் பிடித்து அவளைத் தன்னுடன் இழுத்த நிருபமா,

"சார், ப்ளீஸ் நீங்க எல்லோரும் எங்க கூடப் பார்க்கிங் வரைக்கும் வர முடியுமா?" என்றவள் ஒரு விநாடி கூடத் தாமதிக்காமல் ஓட்டமும் நடையுமாக ஊழியர்களுடன் சேர்ந்து கார் நிறுத்தும் இடத்திற்கு வந்தாள்..

ஊழியர்களுக்கு முன் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்த கோகுலிற்குப் பெண்களின் கைகளில் அடி வாங்கியதும், பின் தான் எப்பொழுதும் பந்தா விட்டு திரியும் ஹோட்டலின் ஊழியர்களுக்கு முன் இப்படி ஒரு அவமானம் நேர்ந்ததினாலேயும், சமயம் பார்த்து நிருபமா மஹாவை தன்னிடம் இருந்து பிரித்து இழுத்து சென்றதாலேயும் அளவிட முடியாத ஆத்திரம் கிளம்ப....

கோபத்தில் " ****** " என்று தகாத வார்த்தைகள் சொல்லி கத்தியவன் ஆங்காரமாக.....

"இருடி... ஒரு நாள் உன்னை நான் தூக்கறேண்டி... அப்புறம் தெரியும் இந்தக் கோகுல் யாரென்று" என்று தொண்டைக் கிழிய கர்ஜித்தான்....

COPYRIGHTED

62% 10:53 PM
https://drive.google.com/file

ஊழியர்களின் துணையுடன் கார் நிறுத்தும் இடத்திற்கு வந்த நிருபமா அவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு, இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளாத மஹாவை காரினுள் தள்ளியவள் காரை செலுத்திக் கொண்டே மற்ற தோழிகளுக்கு அழைத்து மஹாவிற்கு உடல் நிலை சரி இல்லை என்றும் அவளை வீட்டில் விடப்போவதாகவும் சொன்னவள் கோகுலின் பொறுக்கித் தனத்தைச் சொல்லாமல் மறைத்துவிட்டாள்....

ஒரு வழியாகப் போக்குவரத்து அதிகமாக இருந்த ஒரு பிரதான சாலைக்கு அவர்கள் வரவும், இனி கோகுல் தங்களைத் தொடர மாட்டான் என்று நம்பிக்கையில் இழுத்து பிடித்து வைத்திருந்த மூச்சை ஆழ விட்ட நிருபமா திரும்பி மஹாவைப் பார்க்க இன்னமும் உடலில் இருந்த படபடப்புக் குறையாமல் அவள் நடுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டவள் அவள் தோள் தொட்டு அழைக்க, அவளின் தொடுகையில் திடுக்கிட்டு தூக்கிவாரிப்போட ஐயோ என்று கத்தினாள் மஹா...

மஹாவிற்குக் கோகுலின் தகாத நடவடிக்கை அதிர்ச்சியாக இருந்தது என்றால் அவன் கடைசியாக "ஒரு நாள் உன்னை நான் தூக்கறேண்டி" என்று கர்ஜித்த வார்த்தைகள் அதை விடப் பேரதிர்ச்சியாக இருந்தது...

இதில் நிருபமா வேறு தப்பித்துக் கொள்ள வேறு வழியில்லாமல் எ.கெ க்ரூப் ஆஃப் கம்பெனிஸின் ஓனருடைய தங்கை என்று கூறிவிட்டாள்... இது அர்ஜூன் அண்ணா காதிற்குச் சென்றால் என்னவாகும் என்று கதிகலங்கி இருக்க அவளின் கலக்கத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் நிருபமா...

"மஹா, இத உன் அண்ணனிடம் சொல்லி ஏதாவது பண்ணச் சொல்லுடி... அவன் கத்தியத நினைச்சா எனக்குக் குலையே நடுங்குது.... ஏற்கனவே அவன் சரியான பொம்பளைப் பொறுக்கி.... இப்போ இதில் அவன் அடிப் பட்ட பாம்பு வேற... நிச்சயம் கடிக்காம விடமாட்டான்" என்றாள் அச்சத்துடன்....

COPYRIGHTED

நிருபமாவைத் திரும்பி பார்த்த மஹா....

"நிரு, ப்ளீஸ்.... இதை யாரிடமும் சொல்லாதடி.... எங்க வீட்டிற்கு இப்போ தெரிய வேண்டாம்... இப்போ தான் எங்க அண்ணா ஒரு பிரச்சனையில் இருந்து வெளி வந்திருக்காங்க... எங்க மாமும் இப்போ தான் குணமாகிட்டு வராங்க.... அதனால ஐ ஹேவ் டு கீப் கொயட் ஃபார் சம் டைம் [I have to keep quiet for sometime]" என்றாள் இன்னமும் நடுக்கம் குறையாத குரலில்....

ஏனெனில் மஹாவிற்கு நன்றாகத் தெரியும்... இந்த விஷயம் அர்ஜூனின் காதுகளுக்குப் போனால் அது நிச்சயம் கோகுலின் உயிருக்கே ஆபத்தாகத் தான் முடியும்...

"அது மட்டும் அல்ல... இப்பொழுது தான் அண்ணாவும் திவ்யா அண்ணியும் சந்தோஷமா இருக்கிறாங்க.... இது நானே இழுத்துவிட்டுக் கொண்ட பிரச்சனை.... இதில் அண்ணாவை இழுத்தால் அது அவருக்கும் ஏதாவது பிரச்சனைகளைக் கொண்டு வந்து சேர்த்தால் என்ன ஆவது" என்று நினைத்து மௌனமாக இருந்து விட முடிவு செய்ய.....

சில நேரங்களில் பிரச்சனைகளின் வீரியத்தையும் அதனால் விளையக்கூடிய விபரீதங்களையும் சரியாக ஆராயாமல் அதனை எதிர்கொள்வதைத் தவிர்க்க நாம் நமக்குத் தானே சில காரணங்களைக் கற்பித்துக் கொள்கிறோம்... ஆனால் பிரச்சினைகளைத் தவிர்த்தல் ஒரு தீய சுழற்சியை வழிவகுத்து அதன் பலனை, பாதையை மிகவும் கடினமாகக் கடக்கச் செய்கிறது....

ஒரு வேளை இதனை அன்றே மஹா உணர்ந்து தன் அன்னையிடமோ அல்லது அர்ஜூனிடமோ நடந்த அனைத்தையும் மறைக்காமல் சொல்லியிருந்தால் பின்னாலில் கோகுல் என்ற வெறிப் பிடித்த ஒநாயால், தனக்கு வேண்டும் பெண்களை எந்த எல்லைக்கும்

10:53 PM 62%

https://drive.google.com/file

சென்ற அடைய நினைக்கும் காமுகனால், தனக்கு மட்டும் அல்ல, தன் அண்ணியான திவ்யாவிற்கும் வரப் போகும் அசம்பாவிதங்களில் இருந்து தப்பித்திருக்கலாமோ!!!!

விதி யாரை தன் விளையாட்டில் இருந்து ஒதுக்கி இருக்கிறது!!!!

நாட்கள் அதன் போக்கில் நகர அர்ஜுனும் திவ்யாவும் ஒன்று சேர்ந்து இதற்குள் ஒரு மாதம் ஆகிறது...

இந்த ஒரு மாதமும் தன் மனையாளின் மென்மையான அரவணைப்பிலும், கணவனின் மனம் புரிந்து அவன் விரும்பும் நேரத்தில் அச்சமும், நாணமும் தவிர்த்த இணக்கமான தாம்பத்தியத்திலும், கணவனை உயிராக நேசித்து இருந்த அவளின் கரிசனத்திலும் திளைந்திருந்த அர்ஜுனின் மனம் முழுக்கத் தன் மனைவியே நிறைந்திருக்க, அவனுக்குத் தன் வாழ்க்கையே அழகிய பூங்காவனமாகத் தோன்றியது...

தொழில் தொழில் என்று புதைந்துப் போயிருந்தவன், குடும்பத்திற்கு என்று இது வரை தனியாக நேரம் ஒதுக்காதிருந்தவன் இன்று தன் மனைவிக்காகப் பொன்னான நேரத்தை ஒதுக்கி வைத்து அவளை மகிழ்ச்சியில் குளிப்பாட்ட, கணவனின் அழ்ந்த நெருக்கத்திலும், அவன் தன்னைத் தாங்கிய விதத்திலும் தன் மனதை, உடலை, ஆத்மாவை அவனின் பாதத்தில் சமர்பித்து இருந்தவளுக்கு, இருந்தும் மனதில் அடி மூலையில் ஒரு சிறு வருத்தம்...

என்ன தான் தன் கணவன் தன்னை விவாகரத்துச் செய்யப் போவத்தில்லை என்று கூறியிருந்தாலும், தன்னை அணைப்பாலும், முத்தத்தாலும், கரிசனத்தாலும் குளிப்பாட்டிருந்தாலும் அவ்வப்பொழுது வேண்டாத சிந்தனையாக அவன் கையெழுத்து வாங்கியிருந்த விவாகரத்துப் பத்திரத்தைப் பற்றிய எண்ணங்கள் அலைமோதும்...

COPYRIGHTED

10:54 PM
https://drive.google.com/file

பாவம் சின்னப் பெண்.... விவாகரத்தைப் பற்றிய ஞானம் எதுவுமே இல்லாதவள்....

"விவாகரத்துப் பண்ணப் போவதில்லை என்றால் பின் ஏன் என்னிடம் கையெழுத்து வாங்கினார்??" என்று சில சமயங்களில் நியாபகம் வரும் பொழுதெல்லாம் கலங்கிப் போனாலும் வாய்விட்டு தன் கணவனிடம் அதனைப் பற்றிக் கேள்வி கேட்கும் தைரியம் மட்டும் அவளுக்கு இன்னும் வரவில்லை...

"இத்தனை நாட்கள் என்னைக் காத்த முருகன் இனியும் என்னைக் கைவிட மாட்டார்" என்ற நம்பிக்கையில் தான் விரும்பி வணங்கும் முருகனின் பாதத்தில் தன் கவலையைப் போட்டுவிட்டவள் கணவனுடனான இல்லற வாழ்க்கையில் அவனுக்குக் குறையேதும் வைக்காமல் அவனைச் சந்தோஷத்தில் திக்குமுக்காடச் செய்திருந்தாள்...

அலுவலகத்திற்கு வந்த அர்ஜூன் வழக்கம் போல் அன்றைய வேலைகளில் மூழ்க, காலையில் இருந்தே கதிர் அர்ஜூனை சந்திக்க முயற்சி செய்ய, அர்ஜூனின் வேலை பளுவின் காரணமாக அவனைப் பிடிக்க முடியவில்லை...

ஒரு வழியாக MD ஐ சந்தித்த கதிர்..

"சார்... ஸவுத் இன்டியன் அஸோசியேஷன் ஆஃப் இன்டஸ்ட்ரீஸ் அன்ட் பிஸினஸஸ் ஒரு கெட் டு கெதர் மாதிரி அரேஞ்ச் பண்ணியிருக்காங்க சார்... சீஃப் கெஸ்டா உங்களைச் செலக்ட் பண்ணியிருக்காங்க.. உங்களிடம் பேச ட்ரை பண்ணிக்கிட்டே இருக்காங்க.... ஆனால் உங்கள ரீச் பண்ண முடியலைன்னு சொன்னாங்க" என்க...

அவனை நிமிர்ந்துப் பார்த்தவன்...

"சரி, நான் பேசிக்கிறேன்" என்று மறுபடியும் கணினியில் கண்களைப் பதித்தான்...

அர்ஜூனின் மேஜையில் விழாவின் அழைப்பிதழை வைத்துவிட்டு கதிர் வெளியேற மிகப் பெரிய தொழில் அதிபர்கள் அனைவரும் வருடம் ஒரு முறைக் கூடும் அந்த விழாவின் அழைப்பிதழைப் பார்த்தவன் அவர்களை அழைக்க, விழாவைப் பற்றியும் அது நடக்கவிருக்கும் நாளை பற்றியும் பேசியவர்கள் இறுதியில் அவன் மனைவியையும் விழாவிற்கு அழைத்து வரச் சொன்னார்கள்...

புன் முறுவலுடன் சரி என்றவன் திவ்யாவையும் தன்னுடன் விழாவிற்கு அழைத்துப் போக முடிவு செய்தான்...

வீட்டிற்குச் செல்லும் வழியில் அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு வந்தவனுக்குச் சட்டென்று அவளுக்குப் புடவை வாங்கும் ஆசை வர, நேரே தன்னுடைய நண்பனின் டெக்ஸ்டையில் ஷோரூமிற்குக் காரை செலுத்தியவன் கடைக்குள் நுழைந்ததும் அன்று திவ்யாவுடன் அதே கடையில் புடவை எடுத்த சம்பவம் நியாபகத்தில் வந்தது...

வாழ்க்கையில் முதன் முறை இத்தனை பெரிய துணிக் கடையைப் பார்த்தவள் பார்த்ததும் வியப்பில் வாய் பிளந்து சிலை போன்று நின்றது மனக் கண்ணின் முன் தோன்றி சிரிப்பை வரவழைக்க, நேரே டிசைனர் புடவைகள் விற்கும் இடத்தைத் தேடி சென்றான்....

அர்ஜூனிற்கு வாழ்க்கையில் இதற்கெல்லாம் நேரமோ அல்லது பொறுமையோ அல்லது விருப்பமோ இருந்ததில்லை.... ஆனால் இன்று முதல் முறை தனித்துப் புடவைக் கடைக்கு வந்தவன் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அலசி ஆராய்ந்து தன்

COPYRIGHTED

மனைவிக்குப் பொருத்தமாக அந்த விலை உயர்ந்த அழகான டிசைனர் புடவை எடுத்தான்...

வெள்ளை நிறத்தில் அடர்ந்த அரக்கு நிற கரையும், வெள்ளை நிற புடவையின் மேல் பாகத்தில் அரக்கு நிறத்தில் கற்களும், அரக்கு நிற கரையில் வெள்ளை முத்துக்களும் உடல் முழுவதும் அலங்கரிக்கக் கண்களைக் கவருவதாக இருந்தது அந்த அழகிய புடவை...

திவ்யாவிடம் புடவையைக் காட்டும் பொழுது அவள் அதிசயித்துக் கண்களை அகல விரித்து, வாய் பிளந்து பார்க்கும் தோரணையை மனக்கண் முன் கொண்டு வந்தவன் அதே நினைவில் வீட்டை அடைய, அங்குத் தன் அன்னையுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவளைத் தலை அசைத்து வா என்பது போல் அழைக்க...

"இப்பொழுது தான் வீட்டிற்கு வந்தார்... அதற்குள் என்னைத் தனியாக அழைக்கும் இவரை என்ன செய்வது?" என்று புரியாமல் பார்த்தவளின் அருகில் வந்தவன் தன் அன்னை தன்னையே பார்த்துக் கொண்டிருந்தைக் கூடச் சட்டை செய்யாமல்....

"இப்படி பார்த்துட்டே இருந்தா போதுமா? வா என் கூட" என்று அவள் கரம் பற்றித் தங்கள் அறைக்கு அழைத்துப் போனான்....

கணவனின் இந்த அடாவடிச் செயலில் தடுமாறி நாணத்துடன் தன் மாமியாரை திரும்பி பார்த்தவள் வேறு வழியின்றி அவன் இழுத்த இழுப்பிற்கு அவனைப் பின் தொடர....

தங்களின் அறைக்குள் நுழைந்தவன் கதவை சாத்தவும்...

கணவனின் கரத்தில் இருந்த தன் கரத்தை விடுவித்துக் கொண்டவள் அவன் நெஞ்சில் லேசாக அடித்து...

COPYRIGHTED

"ஏங்க இந்த மாதிரி பண்றீங்க? அத்த என்ன நினைப்பாங்க?" என்று கொஞ்சம் சத்தமாகவே கேட்க,

அவளின் இடைப் பற்றித் தன்னருகில் இழுத்தவன்...

"ம்ம்ம்... புதுசா கல்யாணம் ஆனவங்க ரூமுக்குள்ள என்ன பண்ணுவாங்களோ அதத் தான் நாம் இரெண்டு பேரும் பண்ணப் போறோம்னு நினைப்பாங்க" என்றவாறே அவளின் கழுத்தில் முகம் புதைக்க,

அவனைப் பிடித்துத் தள்ளியவள்...

"அதுக்கு எல்லாம் நேரம் காலம் இருக்கு" என்றாலும் கணவனின் கூற்றில், செயலில் முகம் செவ்வானமாய்ச் சிவந்து நின்றவளின் அருகில் வந்தவன் புடவை இருந்த பையைக் கொடுக்க, என்ன ஏது என்று பிரித்துப் பார்த்தவளின் கண்கள் அகன்று விரிந்தது....

அவன் கனவு கண்டிருந்ததைப் போல்.....

ஆசையோடு தன் கணவன் முதன் முதலாகத் தானாகச் சென்று எடுத்து வந்திருந்த கண்களைப் பறிக்கும் விதத்தில் அழகான முத்துக்களும் கற்களும் கோர்த்திருந்த புடவையைக் குழந்தையைப் போன்று தன் விரல்களால் தடவிப் பார்த்தவள் அதன் விலையைப் பார்க்க, அதே வெள்ளை மனதுடன்...

"ஐயோ! என்னங்க இது? எதுக்கு இவ்வளவு விலையில இப்ப புதுப் புடவை?" என்றாள்...

62% 10:54 PM
https://drive.google.com/file

அவளின் குழந்ததைத் தனமான பேச்சிலும் முகப் பாவத்திலும் மயங்கி சிரித்தவன் அவளின் இடைப்பற்றி இழுத்து தன்னுடன் இறுக்கி அணைத்தவாறே...

"அடுத்த வாரம் ஒரு ஃபங்ஷன் இருக்கு... பெரிய பெரிய இன்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ், பிஸினஸ்மென் எல்லாம் வருவாங்க..... நீயும் என் கூட வர.... வரும் போது இத கட்டிட்டு வர" என்றான்...

"ஐயோ! நானா? உங்க கூடவா? நான் எதுக்குங்க அந்த மாதிரி இடத்துக்கெல்லாம்... நீங்க எல்லாம் இங்கிலீஷ்ல பேசிக்குவீங்க... எனக்கு ஒன்னும் புரியாது... அப்புறம் உங்களுக்குத் தான் கஷ்டம்" என்றவளின் கழுத்தில் அழுந்த முகம் புதைத்து அவளின் வாசத்தை ஆழ சுவாசித்தவன்....

"திவி.... யார் என்ன சொன்னாலும் நீ என்னோட வைஃப்... அதனால நீ என் கூட வர..." என்றான்.

விழா நாளும் வர, மஹா திவ்யாவை அவர்கள் திருமண வரவேற்பு அன்று அலங்கரித்தது போல் அலங்கரிக்க, அர்ஜூன் எடுத்து கொடுத்த புடவையில் தேவதை போல் இருந்த அண்ணியை கட்டி அணைத்து முத்தம் கொடுத்தவள்,

"எனக்கே உங்கள பார்க்கும் பொழுது என்னென்னவோ பண்ணனும்னு தோனுது... அண்ணன் என்ன பண்ணப் போறாரோ?" என்றாள் கொஞ்சலுடன்...

அத்தனைப் பாந்தமாக இருந்தாள் திவ்யா அந்தப் புடவையில்....

டிசைனர் புடவை என்பதால் மஹா முந்தானையை மடிப்பு வைத்துக் கட்டாமல் தளர்த்தி [Free] விட்டவாறு புடவையை அணியச்

COPYRIGHTED

மலரினும் மெல்லியவள்! ஜே பி நாவல் Malarinum Melliyaval!

சொல்ல திவ்யாவிற்கு அப்படிப் புடவைக் கட்டி பழக்கம் இல்லாததாலும், அதிலும் டிசைனர் புடவை என்பதால் மிகவும் மெல்லியதாகவும் இருக்க, கூச்சத்தில் நெளிய ஆரம்பித்தவள் விடாப்பிடியாக வேண்டாம் என்று மறுக்க, வேறு வழியில்லாமல் அர்ஜனை அழைத்த மஹாவை அதிர்ச்சியுடன் பார்த்த திவ்யா...

"ஐயோ! அண்ணி.... இப்ப எதுக்கு அவங்களைக் கூப்புடுறீங்க?" என்று அலறினாள்...

தன் மனைவியின் வரவிற்காகக் கீழே ஹாலில் அமர்ந்துக் காத்திருந்தவன் மஹாவின் அழைப்பில் என்ன என்பது போல் மேலே பார்க்க, மஹா....

"அண்ணா, இங்க கொஞ்சம் வாங்களேன்" என்றாள்...

"நான் எதுக்கு?" என்று கேட்டுக் கொண்டே அவன் இரண்டு இரண்டு படிகளாகத் தாவி மேலே ஏறி வரவும்...

"இங்க பாருங்கண்ணா... இந்த ஸாரிய இப்படித் தான் கட்டனும்னு சொன்னா அண்ணி கேட்க மாட்டேங்கிறாங்க" என்று போட்டுக் கொடுக்க,

என்ன தான் தன் கணவனுடன் இத்தனை நாட்கள் இல்லற வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் இயற்கையில் பெண்களுக்கே உரிய வெட்கம் தோன்ற, தன்னிச்சையாக மஹாவிற்குப் பின் மறைந்துக் கொண்டவளைக் கண்டவனுக்குத் தன் மனைவியின் நாணம் அத்தனை இன்பமாக இருக்க இளம் முறுவலித்தவாறே அறைக்குள் நுழைந்தவனுக்குத் தனிமை கொடுத்து வெளியே சென்றாள் மஹா...

வெள்ளையும் அரக்கு நிறமுமாகக் கற்களும் முத்துக்களும் பதித்த புடவையில் அழகுற ஜொலித்த தன்னவளை ஆர்வத்துடன்

COPYRIGHTED

பார்க்க, என்றும் இருப்பது போல் இல்லாமல் மஹா அவளின் தலை முடியை நேராக்கி தளர்த்தி விட்டிருந்தவள், ஒரு கேட்ச் க்ளிப் மட்டும் போட்டு விரித்து விட்டிருக்க...

அவளின் அருகே வந்தவன் மலர்ந்த முகத்துடன்...

"வாவ், பியூட்டிஃபுல்" என்க....

அவனின் பேச்சில் தலை கவிழ்ந்தவளை தன் ஒற்றை விரலைக் கொண்டு நிமிர்த்தியவன்....

"சொல்லு, என்ன பிரச்சனை? நல்லா தான இருக்கு?" என்றான்...

"இல்ல, இப்படிப் புடவை முந்தானைய கீழே விட்டு எனக்குப் பழக்கம் இல்லை. அதான்" முகத்தில் கூச்சத்தைச் சுமந்து அவள் சொல்ல....

அவளைக் கூர்ந்து பார்த்தவன்....

"அதனால என்ன?" என்க..

வெட்கமும் அச்சமும் போட்டிப் போட்டுக் கொண்டு வர சன்னமான குரலில்...

"புடவை ரொம்ப மெலிசா இருக்கு" என்றாள் தயங்கியவாறே....

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரிந்தவன், இருந்தும் புரியாதது போல் அவளின் மார்பை உற்றுப் பார்த்து....

"எனக்கு ஒன்னும் தெரியலையே... இன்னும் சொல்லப் போனால் சூப்பராகத் தான் இருக்கு" என்று அவளின் இடையில் இரு கரங்களையும் கொடுத்துத் தன்னை நோக்கி இழுக்க....

தன் கணவனின் சில்மிஷம் புரிந்தவள்,

"பாத்தீங்களா, உங்களுக்கே தெரியுது... அசிங்கமா இருக்குதுன்னு" என்று கலங்கினாள்...

சிரித்தவன்....

"ப்ராமிஸா ஒன்னும் தெரியலை... உத்துப் பார்த்தா தான் தெரியுது?" என்று கண் சிமிட்ட,

"அப்ப, உத்துப் பார்த்தா தெரியுதா?" என்று பதறிய மனைவியை மேலும் இறுக்கியவன்...

"என் வைஃப்ப உத்துப் பார்க்க எவனுக்குடி இங்க தைரியம் இருக்கு..... அப்படி உத்துப் பார்த்தான்னா என்ன நடக்கும்ன்னு எல்லாருக்கும் தெரியும்" என்று அழுத்தமாகச் சொன்னவன்,

குனிந்து அவளின் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டு,

"ட்ரெஸ்ஸிங் எல்லாம் முடிஞ்சதுன்னா வா..... ஐ ஹாவ் சம்திங் ஃபார் யூ [I have something for you] " என்றான்..

"ஙே" என்று விழித்தவளைப் பார்த்து புன்னகைத்து கொண்டவன், வா என்று அவளின் கைப் பிடித்து அவர்களின்

62% 10:56 PM
https://drive.google.com/file

அறைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஆளுயர கண்ணாடிக்கு முன் அவளை நிறுத்தியவன் பீரோவில் இருந்து அவளுக்காக அவன் அமெரிக்காவில் இருந்து வாங்கி வந்த வைர கற்களும் ரூபியும் பதித்த அந்த நகை செட்டை எடுத்தான்...

எப்பொழுதோ கொடுக்க வேண்டிய காதல் பரிசு.... இத்தனை கஷ்டங்களுக்குப் பிறகு ஆனால் இந்தச் சந்தோஷமான சூழ்நிலையில் கொடுப்பதிலும் அவனுக்கு மகிழ்ச்சியே...

விழிகளை அகல விரித்து ஆச்சர்யத்துடன் நகைகளைப் பார்த்துக் கொண்டிருந்தவளின் முதுகின் புறம் வந்து முடியை ஒதுக்கி அவனே அவளுக்கு நெக்லஸை அணிவித்து விட்டான்...

வளையல்களையும் மோதிரத்தையும் அணிவித்து விட்டவன், தோடுகளைப் போட சொல்ல, அவள் அணிந்ததும் கண்ணாடியில் இருவரையும் பார்த்தவன்...

"வி லுக் லைக் வி ஆர் மேட் ஃபார் ஈச் அதர் திவி, ரைட்? [We look like we are made for each other Dhivi... Right?]" என்றான்...

பெரியவர்களால் ஜாதகம் பார்த்து ஆடம்பரமாக நடந்தேறிய திருமணங்களாகட்டும் அல்லது எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாத காதல் திருமணங்கள் ஆகட்டும்...

திருமணத்தில் இணையும் இரு உள்ளங்களின் மனம் ஒற்றுதலைப் பொறுத்து தான் அவர்களின் வாழ்க்கை வெற்றி பெரும்...

முன் பின் அறியாத அர்ஜூனும் திவ்யாவும் விதி வசத்தால் ஒரே இடத்தில் சந்திக்க நேர்ந்திட பெரியோர்களின் கட்டளைக்காகத் திருமணம் என்ற பந்தத்தில் இணைந்திருந்தாலும், அவர்களுக்குள்

COPYRIGHTED

10:57 PM
https://drive.google.com/file

ஒரு புரிதல் வரும் முன் எத்தனை எத்தனையோ இன்னல்களையும் சிக்கல்களையும் சந்தித்திருந்தாலும் இதோ இன்று மனம் ஒத்த தம்பதியர்களாக வாழும் இவர்களின் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒரு பாடமே...

திவ்யா உடுத்தியிருந்த புடவையின் நிறங்களும் அவள் அணிந்திருந்த நகைகளின் நிறமும் ஒத்தது போல் இருக்க, "இது எப்ப வாங்குனீங்க" என்று ஆச்சர்யத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டே இருக்க....

மனைவியின் காதல் வழியும் விழிகளை ரசித்தவன்....

"அத அப்புறம் சொல்றேன்... இப்ப வா, டைம் ஆச்சு" என்றவன் அழைத்துச் சென்றது சென்னையிலேயே மிகப் பெரிய அந்த நட்சத்திர ஹோட்டலிற்கு...

அங்கு தான் பார்ட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக் காரில் இருந்து அர்ஜூன் இறங்கியதும் அவனைத் தொடர்ந்து திவ்யாவும் இறங்க, அங்கு நின்றிருந்த வேலட்டிடம் காரின் சாவியைக் கொடுக்கவும் அவர் காரை நிறுத்துமிடத்திற்கு எடுத்து சென்றார்....

காரை விட்டு இறங்கிய திவ்யாவிற்கு அந்த நட்சத்திர ஹோட்டலை பார்த்தவுடனேயே திக்கென்று இருந்தது....

ஜகஜ்ஜோதியாய் அலங்கார விளக்குகள் பளிச்சிட ஹோட்டலின் வாயிலில் இருந்தே பணக்கார தோரணையுடன் ஆண்களும் பெண்களும் குழுமியிருக்க, தான் ஏதோ வரக் கூடாத இடத்திற்கு வந்துவிட்டதைப் போன்று உணர்ந்தவள் திரும்பி தன் கணவனைப் பார்க்க...

COPYRIGHTED

10:57 PM
https://drive.google.com/file

அவளின் கலக்கத்தையும், அச்சத்துடன் தன்னை நோக்கி பரிதாபமாகப் பார்ப்பதையும் கண்ட அர்ஜுன் அவள் அருகில் சென்றவன் இடைப் பிடித்து அழைத்துச் செல்ல, அவளின் இடையைப் பிடிக்கும் பொழுதே அவள் உடலில் ஓடிய சிறு நடுக்கத்தில் இருந்து தெரிந்தது அவள் எத்தனை பயந்திருக்கிறாள் என்று...

காதிற்கருகில் குனிந்தவன்...

"என்ன திவி, பயமா இருக்கா?" என்க, ஆமாம் என்பது போல் தலை அசைத்தவளை இன்னும் இறுக்கப் பற்றியவன்....

"அதான் நான் உன் கூடவே இருக்கேன்ல... அப்புறம் என்ன பயம்?" என்றான்...

ஆனால் அவர்கள் உள்ளே நுழைந்த அந்த நிமிடமே அவனைச் சுற்றி மற்ற தொழிலதிபர்கள் அனைவரும் கூடி விட, கூட்டத்தில் அர்ஜுனின் கரம் திவ்யாவின் இடையில் இருந்த மெல்ல அகல, அந்த நொடியே தான் தனித்து விடப்பட்டதைப் போல உணர்ந்த திவ்யாவின் முகத்தில் தோன்றிய கலக்கத்தை அத்தனை கூட்டத்திற்கும் இடையில் கண்டு கொண்டவன் அவளைச் சட்டென்று எட்டி பிடித்து அவளை மீண்டும் இழுத்து தன் அருகே வைத்துக் கொண்டு அனைவரிடமும் அறிமுகப்படுத்த, திவ்யாவிற்குத் தான் தயக்கமாக இருந்தது...

பார்ட்டி கலைக் கட்ட துவங்க மாம்பழத்தை மொய்க்கும் ஈக்களைப் போல அர்ஜுனை ஏகப்பட்ட இளம் பெண்கள் சூழ்ந்து கொள்ளத் திவ்யாவிற்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வர தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வெகு பிரயாசைப் பட்டவள் அமைதியாகத் தனியே ஒரு சேரில் போய் அமர்ந்தவளின் இதயத்திற்குள் தன்னையும் அறியாமல் பயம் படற ஆரம்பித்தது...

நுனி நாக்கு ஆங்கிலம், அபாயகரமான உடைகள், பளிங்கு போல் மேனி, அடர்த்தியான மேக்கப், அனைவரின் கைகளிலும் ஏதோ

COPYRIGHTED

62% 10:57 PM
https://drive.google.com/file

ஒரு மதுக் கோப்பை என்று தன் கணவனைச் சுற்றியே இளம் பெண்களின் கூட்டம் இருக்க,

பெண்களுக்கே உரிய "என் புருஷன் எனக்கு மட்டும் தான்" என்ற உணர்வு மேலிட, தன் கண்களை அவனை விட்டு ஒரு நொடி கூடத் திருப்பாமல் அமர்ந்திருந்தவளை விட்டுத் தன்னைச் சுற்றிக் குழுமியிருந்த தொழில் அதிபர்களிடமும், மற்றவர்களிடம் சகஜமாகப் பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்த அர்ஜூனின் கண்கள் மறந்தும் ஒரு விநாடி கூட அகலவில்லை...

"முருகா, இந்தப் பெண்களிடம் இருந்து என் கணவனைக் காப்பாத்து... அவர் எனக்கு மட்டுமே சொந்தம்" என்று முருகனிடம் விழிகள் கலங்க, மனம் உருக வேண்டிக் கொண்டிருந்தாலும், அந்த அடர் நீல நிற கோட் சூட்டில் உயரமாக, வட நாட்டு இளைஞன் போல் சிவந்த நிறத்துடன், கம்பீரமாக, எல்லோரையும் வசீகரித்த தன் கணவனைக் கர்வத்துடனே பார்த்துக் கொண்டிருந்தாள் அவன் மனையாள்...

அவன் ஆங்கிலத்தில் உரையாற்றிய பொழுது அவன் பேசிய பேச்சுப் புரியாவிட்டாலும் அவனின் ஒவ்வொரு பேச்சிற்கும் கூடியிருந்தவர்கள் கைத் தட்டுவது இவன் என் கணவன், எனக்கு மட்டுமே உரியவன் என்ற கர்வத்தைக் கொடுத்தது...

என்ன தான் தன் எதிரில் அமர்ந்திருப்பவர்களை நோக்கி பேசிக் கொண்டிருந்தாலும், அர்ஜூனின் கண்கள் அவ்வப்பொழுது தன்னவளின் மேலேயே மொய்த்துக் கொண்டிருக்க அத்தனை தூரத்தில் இருந்து தன்னவளின் விழிகள் கலங்கியிருப்பது அவனுக்குத் தெரியாவிட்டாலும், அவள் முகம் கலங்கியிருப்பதைக் கண்டவனுக்கு அப்பொழுதே அவளை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது...

அவளின் அமைதியும், அவள் தனித்து அமர்ந்திருப்பதையும் பார்ப்பதற்கு மனதிற்குள் என்னவோ செய்ய, அவளின்

COPYRIGHTED

10:57 PM 62%
https://drive.google.com/file

உணர்வுகளைப் புரிந்துக் கொண்டவனாகத் தன்னுடைய உரையை வெகுவாக முடித்துவிட்டு அவளிடம் வந்தவன் "போகலாமா?" என்றான்...

இந்த இடத்தில் இருந்து எப்பொழுதடா கிளம்புவோம் என்று திவ்யாவிற்கு இருந்தாலும் தன் கணவன் இன்னும் சாப்பிடவில்லை என்பதை உணர்ந்தவள்...

"நீங்க ஒன்னும் சாப்பிடலேயே" என்றாள் தயங்கியாவாறே...

சிரித்தவன் "சரி வா" என்று அவளையும் உணவு வைத்திருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று உணவை எடுத்துக் கொள்ள உதவி செய்தான்...

வழக்கம் போல் "பஃபே" அமைப்பில் அங்கு உணவு பதார்த்தங்கள் அடுக்கி வைக்கப்பட்டு இருக்க, இதில் எல்லாம் பழக்கம் இல்லாதவள் இத்தனை வகைப் பதார்த்தங்களையும், அதனை நாமே எடுத்து வைத்துக் கொண்டு உண்ண வேண்டிய நாகரிக முறையும் கண்டவள் அசந்து போனாள்...

விழி விரிய உணவு வகைகளை வியந்து பார்த்திருந்தவளை கண்டவன் புன் முறுவலுடன் முகம் சுளிக்காமல் அவளுக்கு உதவி செய்தவன், அவளுக்கு ஸ்பூனில் எடுத்து சாப்பிட வரவில்லை என்பதால் கையிலேயே எடுத்து சாப்பிடு என்றான்...

ஒரு ஆறு ஏழு மாதங்களிற்கு முன் உள்ள அர்ஜூன் என்றால் திவ்யாவைப் போன்ற பெண்களை இப்படிப் பார்த்திருந்தால் "இதுங்களை எல்லாம் யார் இந்த மாதிரி பார்ட்டிக்கு வரச் சொன்னது?" என்று கடிந்து இருப்பான்... இன்னும் சொல்ல போனால் "இவளை போன்றவர்கள் ஹோட்டலுக்கு உள்ளேயே அனுமதிக்கப் படக்கூடாது" என்று தாம் தூம் என்று குதித்திருப்பான்...

COPYRIGHTED

10:57 PM
https://drive.google.com/file

ஆனால் ஒரு சின்னப் பெண்ணின் தூய, மென்மையான, அழகான காதல் அவனைத் தலை கீழாக மாற்றிவிட்டிருந்தது...

அவனின் இதயத்தை காதல் என்று நுண்ணுர்வால் இன்பமாய் மூழ்கடித்து இருந்தது... ஆனால் அவனுக்குமே இந்த மாற்றம் மிகவும் பிடித்துத் தான் இருந்தது...

ஏனோ தானோ என்று கொறித்துவிட்டு அவர்கள் கிளம்ப, மீண்டும் பெண்கள் கூட்டம் அவனை மொய்த்துக் கொள்ள ஒரு வழியாக அவர்களிடம் இருந்து தப்பித்து வந்தவனுக்கு மனைவியின் கலங்கிய முகம் பறை சாற்றியது அவளின் மனதில் தோன்றியிருக்கும் கலக்கத்தை...

வேலட்டிடம் காரை எடுத்துக் கொண்டு வர சொன்னவன் கார் வந்ததும் அவளை அந்த இடத்தில் இருந்து விரைவாகக் கூட்டி செல்ல வேண்டும் என்று எண்ணத்தில் காரை வேகமாகச் செலுத்தியவன் சிறிது தூரம் வரை எதுவும் பேசவில்லை...

ஏற்கனவே விவாகரத்துப் பத்திரத்தில் அவன் கையெழுத்து வாங்கியிருப்பதை நினைத்து அவ்வப்பொழுது அஞ்சிக் கொண்டிருந்தவளுக்கு அவனின் இந்த மேல்தட்டு இளம் பெண்களின் நட்பு அதிக அச்சத்தைக் கொடுக்க, அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தவளுக்குக் காரில் இருந்த அமைதி உறுத்தவில்லை..

ஆனால் அவளின் மௌனமே கலக்கத்தினால் வந்தது தான் என்பதை உணர்ந்தவன் காரை ஒரு ஓரமாக ஆள் அரவமற்ற இடமாகப் பார்த்து நிறுத்த சட்டென்று கார் நிறுத்தப்பட்டதில் சுய நினைவிற்க்கு வந்து அவனைத் திரும்பி பார்த்தவளை முகத்தில் சிறு புன்சிரிப்புடன் பார்த்திருந்தவன் என்ன? என்பது போல் புருவத்தை உயர்த்திக் கேட்க, ஒன்றும் இல்லை என்று தலை அசைத்தவள் தலையைக் கவிழ்ந்துக் கொண்டாள்.

COPYRIGHTED

62% 10:57 PM
https://drive.google.com/file

அவள் அருகில் நெருங்கி அமர்ந்தவன் அவளின் வருத்தம் புரிந்தவனாக அவளின் கைப் பிடித்து..

"திவி.... இன்னைக்குத் தான் நீ வாழ்க்கையில் இந்த மாதிரி பார்ட்டிய பார்த்திருக்கிற.... ஆனால் நான் என்னோட டீன் ஏஜிலேயே இதெல்லாம் பார்க்க ஆரம்பிச்சிட்டேன்..... அந்த இளம் வயதிலேயே எனக்குப் பெண்களோட பழகுவதற்கு நிறையா சேன்ஸஸ் இருந்தது..... அது மட்டும் இல்ல நான் என்னோட மாஸ்டர்ஸ் பண்ணினது லண்டனில்... எத்தனையோ பெண்கள் என் வழியில் க்ராஸ் பண்ணியிருக்காங்க... ஆனால் எல்லோரிடமும் நட்பு மட்டும் தான்... எங்கேயும் எப்போதும் நான் என்னோட செல்ஃப் கண்ட்ரோல்ல இழந்தது இல்ல... எந்த நேரமும் என் லிமிட் என்னன்னு எனக்குத் தெரியும்..." என்றவன் முகத்தில் பூரிப்புடன், இதழ்களில் இள முறுவலுடன் தொடர்ந்தான்....

"ஆனால், நான் விரும்பிய முதல் பெண் நீ தான்... நான் தொட்ட, கடைசியா தொடப் போற பொண்ணும் நீ தான்... நீ மட்டும் தாண்டி எனக்கு வேணும்... புரியுதா?" என்க...

கணவனின் கூற்றில் நிம்மதி அடைந்தவள் சிறிதே புன்னகைக்க, தான் இத்தனை எடுத்துச் சொல்லியும் அவளின் முகத்தில் தெளிவில்லாததைப் பார்த்தவன் அவளின் கலக்கத்தைப் போக்கும் விதமாக அவள் முகம் நோக்கி குனிந்தவன் அவளின் இதழ்களைத் தன் இதழ்களுக்குள் அழுத்தமாகச் சிறை செய்ய,

அவளுக்கும் அந்த இதழொற்றல் அந்த நிமிடம் தேவையாக இருந்ததோ என்னவோ தன்னையும் அறியாமல் தன் கணவனின் கழுத்தைப் பிடித்துத் தன் அருகில் இழுக்க, அவளின் உணர்வுகள் புரிந்தவன் தன்னுடைய முத்தத்தை அவளின் இதழில் வன்மையாக ஆரம்பிக்க, கணவனின் அழுத்தமான நீண்ட முத்தம் அவளின் அப்போதைய மன நிலைக்கு மருந்தாகவே ஆனது...

COPYRIGHTED

10:57 PM
https://drive.google.com/file

எத்தனை நேரம் இதழ்களுக்குள் இதழ்களைப் புதைத்து தன்னிலை மறந்து இதழ்களின் சுவையில் மூழ்கி இருந்தார்களோ, முதலில் அர்ஜுன் தான் தன் நிலைக்கு வந்து சுதாரித்து அவளை விடுவித்தான்...

தான் எப்போது நெருங்கினாலும் வெட்கப்பட்டுக் கொண்டு தன்னை விலக்குவதிலேயே குறியாக இருப்பவள் இன்று இத்தனை நேரம் தனக்குள் மூழ்கி இருப்பது, தான் அவளுக்கு மட்டும் தான் என்று உணர்த்தவே என்று புரிந்தவன் மென்னகையுடன் காரை கிளப்ப, வழக்கம் போல் அவனின் முகம் பார்க்க கூச்சப்பட்டுக் கொண்டு போல் வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள் அவனின் மனையாள்.

வீட்டிற்கு வந்தவர்கள் அனைவரும் உறங்கி இருப்பத்தைக் கண்டு நேரே தங்களின் அறைக்குச் செல்ல, அவன் அவளுக்கு அணிவித்திருந்த நெக்லஸை அவள் கழட்டப் போக, அவளின் பின் வந்து நின்றவன் அவளின் தோளில் கை வைத்து அவள் மென் கழுத்தில் மென்மையாக முத்தமிட்டான்...

கணவனின் மென்மையான முத்தத்தில் மனம் கிறங்கினாலும் மௌனமாக இருக்கும் மனைவியைத் தன்னை நோக்கி திருப்பிப் பார்த்தவன் அவளின் கண்களில் இன்னும் தென்பட்டிருந்த கலக்கத்தைக் கண்டு குழம்பியவனாகப் புருவத்தைச் சுருக்கி கூர்ந்துப் பார்த்தவன் ஒரு நல்ல கணவனாய் மனைவியின் முகமாறுதல்களை வைத்தே அவளின் மனதில் தோன்றியிருக்கும் கவலையை யூகித்து....

"திவி..... என்ன கேட்கனுமோ அத கேளு... மனசுக்குள்ளயே எதையும் வச்சுக்காத" என்றான்...

தயக்கத்துடன் மெல்லிய குரலில்...

COPYRIGHTED

"நான் ஒன்னு கேட்கட்டுமா?" என்க...

"ம்ம்ம்" என்றவன் அவளின் விழிகளையே ஆழ நோக்கியிருக்க, தடுமாறும் குரலில் விழிகளில் நீர் ததும்பி இருக்க...

"நீங்க என்னை விவாகரத்து பண்ண மாட்டேன்னு சொல்லியிருக்கீங்க.... எனக்குத் தெரியும்... ஆனா அப்ப ஏன் அன்னைக்கு என்கிட்ட எங்க வீட்டுல கையெழுத்து வங்கினீங்க" என்றாள் தன் ஒட்டு மொத்த தைரியத்தையும் வரவழைத்து..

அவளின் தயக்கத்தையும் தடுமாற்றத்தையும் ரசித்தவன் தன்னை முழுவதுமாக வெளிபடுத்துவிடும் நோக்கத்தில் அவளின் தோள்களைப் பிடித்தவாறே....

"திவி..... இந்த ஜ்வெல்ஸ் செட்டை நான் எங்க, எப்ப வாங்கினேன் தெரியுமா? என்றான்....

தெரியாது என்பது போல் அவள் தலை அசைக்க அவளின் தோள்களைப் பற்றியிருந்த தன் கரங்களில் இறுக்கத்தைக் கூட்டியவாறே....

"யூ எஸ் ஸில்" என்றான்...

அதிர்ச்சியும் ஆச்சர்யமுமாகக் கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தவளின் கண்களுக்குள் ஊடுருவி பார்த்தவன்...

"இப்போ புரியுதா என்னோட லவ்????" என்றான் இளம் முறுவலுடன்...

COPYRIGHTED

10:58 PM 61%
https://drive.google.com/file 17

"யூ எஸ் ஸில் இருந்து வரும் பொழுது எல்லோருக்கும் ஏதோ வாங்கியிருந்தேன்... உனக்கு மட்டும் என்ன வாங்குறதுன்னே தெரியலை... மஹாவை கூப்பிட்டு கேட்டா, அவளுக்கும் உனக்கு என்ன பிடிக்கும் பிடிக்காதுன்னு தெரியலை... பட் நான் என்ன வாங்கிட்டு வந்தாலும் நீ ரொம்பச் சந்தோஷப் படுவன்னு மட்டும் சொன்னாள்... அதனால் அவளிடம் இந்த விஷயத்தைப் பற்றி எதுவும் உன்னிடம் சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டேன்... இந்த ஜ்வெல்ஸ் செட்டை பார்த்த உடனேயே எனக்கு ரொம்பப் பிடிச்சது... நிச்சயம் உனக்கும் பிடிக்கும்னு எனக்குத் தெரியும்.... ஆனால் சர்ப்ரைஸா இருக்கட்டும்னு தான் உனக்குச் சொல்லலை...." என்றவன் அவளின் முகத்தைத் தன் கரங்களில் ஏந்தி...

"தாலி பெருக்கன்னைக்கே இத நான் உனக்குக் கிஃப்டா கொடுக்கனும்னு நினைச்சிருந்தேண்டி...... ஆனால் எல்லொருக்கும் முன்னாடி கொடுக்கப் பிடிக்கலை..... உன் கழுத்தில் இதை நானே போட்டுவிடனும்னு தான் அன்னைக்கு உன்னை நம்ம ரூமுக்கு வரச் சொன்னேன்... அதுக்குப் பிறகு தான் உன்னை என்னோட வைஃப்பா எடுத்துக்கனும்னு ஆசைப்பட்டேன்...." என்றவன் சில விநாடிகள் தயங்கி...

"ஆனால் நீ அன்னைக்கு என்ன ரொம்ப ஏமாத்திட்ட... பட் நிச்சயமா உன்னை மட்டும் குறை சொல்ல முடியாது... நிறையத் தப்பு என் மேலேயும் இருக்கு... ஒழுங்கா என் மனசில் இருப்பதைச் சொல்லாமல் சட்டென்று கட்டி பிடிச்சு ரூமிற்க்கு வான்னு சொன்னவுடனே நீ பயந்திருப்ப... அது எனக்குப் புரியறதுக்குள்ள ஆஃபிஸில் ரெய்ட், வேற வேற பிரச்சனைகள்னு வந்திருச்சு... அந்தக் கோபத்தை எல்லாம் உன்னிடம் காட்டிட்டேன்" என்றான் முதன் முறை தன் மனையாளிடம் தன் மனம் திறந்து......

தன் கணவனுக்கு எப்பொழுதோ தன் மீது காதல் வந்திருக்கிறது... ஆனால் அவரின் இயற்கையான, இயல்பான, யாரிடமும் மனம் விட்டுப் பழகாத குணம் அவர் காதலையும் வெளிப்படுத்த விடவில்லை...

61% 10:58 PM
https://drive.google.com/file

அதற்குத் தானும் அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்திருக்கவில்லை என்று குற்ற உணர்வு வர, அவனின் நெஞ்சில் சாய்ந்துக் கொண்டவள்....

"அப்புறம் ஏன் என்னிடம் விவாகரத்துப் பத்திரத்தில் கையெழுத்து வாங்குனீங்க?" என்றாள்....

வெள்ளை உள்ளத்துடனும் குழந்தை மனதுடனும், இன்னும் கலக்கம் மாறாத குரலுடனும் அவள் மீண்டும் அதனைப் பற்றியே கேட்டதும் சத்தமாகச் சிரித்தவன்,

"அது ஒரிஜினல் பேப்பர்ஸ் இல்லைடி... உன்னைப் பார்க்கறதுக்காக உங்க ஊருக்கு வந்தப்ப உன்னைச் சும்மா மிரட்டுறதுக்காக அங்க இருந்த ஒரு கடையில் ப்ரிண்ட் பண்ணினது" என்றான்...

சட்டென்று அவன் நெஞ்சில் இருந்து முகத்தை நிமிர்த்தி அவனின் விழிகளோடு தன் விழிகளைக் கலந்து...

"அப்போ அது நிஜம் இல்லையே??" என்று தவிப்புடன் மீண்டும் கேட்க,

"ஏண்டி.... இன்னுமா என் மேல சந்தேகம்?? அப்போ இன்னைக்கே சந்தேகத்தை நல்லா க்ளியர் பண்ணிட வேண்டியது தான்" என்றவன் அவளை இரு கரங்களில் தூக்கி அணைத்துக் கட்டிலில் கிடத்தி சடுதியில் அவள் மேல் படர்ந்து தன் மனையாளின் சந்தேகத்தைத் தீர்ப்பதற்கான முயற்சியில் முழு மூச்சாக இறங்கினான்...

COPYRIGHTED

10:58 PM
https://drive.google.com/file

என்ன தான் கணவனுடன் இத்தனை நாள் தாம்பத்தியத்தில் ஈடுபட்டிருந்தாலும், அவன் தன் மனதில் உள்ள காதலை தன்னிடம் வெளிப்படுத்திய பின் கூடும் கூடல் இது...

ஒவ்வொரு முறையும் அவனின் தொடுகையில் மனமும் உடலும் சிலிர்த்து கிறங்கி இருந்தாலும், அவனோடு ஈருடல் ஒருயிராகத் தாம்பத்தியத்தில் உருகி இணைந்து இழைந்திருந்தாலும், அவளின் ஆழ்மனதில் மெல்லியதாக ஒரு குரல் அவனுடைய அந்தஸ்தையும், அவன் அன்று கூறிய "வேலைக்காரியா வச்சுக்க வேண்டியவ" போன்ற வார்த்தைகளையும் அவ்வப்பொழுது எழுப்பிக் கொண்டே இருக்கும்...

பல நாட்களில் தன்னுடைய மென்மையான அனுகுமுறையாலும், சில நாட்களில் தன்னுடைய வன்மையான கூடலாலும் தன்னவளை அவன் காதலினால் திக்குமுக்காட செய்திருந்தாலும் ஆழ் மனதில் தன் கணவனுடைய வார்த்தைகளால் காயப்பட்டிருந்தவளுக்குச் சில நேரங்களில் தன்னையும் அறியாமல் தாம்பத்தியத்தின் சொர்க்கத்தை முழுவதுமாக அனுபவிக்க விடாமல் அந்தக் கொடிய வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டே இருக்கும்...

ஆனால் இன்று தன்னுள் ஆழப் புதைத்திருந்த தன் காதலை வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருந்த தன் கணவனின் செயலில், தன்னை மறந்து மனம் நெகிழ்ந்துப் போய் முழு மனதோடு தன்னை ஒப்புவித்தாள்.

பல மணி நேரங்கள் நீடித்து நடந்து முடிந்த கூடலின் விளைவால் அவள் களைத்துப் போய் அசதியில் படுத்திருக்க, அவளின் இடைப் பற்றித் தூக்கியவன் அவளைத் தன் மேல் போட்டுக் கொண்டு....

"திவி.... நீ மேற் கொண்டு படிக்கிறியா?" என்றான்...

COPYRIGHTED

61% 10:59 PM
https://drive.google.com/file

அந்தக் காலத்தில் சினிமாக்களில் வருமே.... பறவைகள் வானத்தில் பறந்து கொண்டிருக்கும்... திடீரென்று ஏதோ அதிர்வான காட்சி திரைப்படத்தில் தோன்ற பறவைகள் அப்படியே ஸ்டில்லாக நின்று விடும்...

அதே போல் கடலைகளும், புயல் காற்றினால் விசிறி அடித்துக் கொண்டிருக்கும் மரங்களும், ரசித்து ருசித்து இலை தழைகளைத் தின்று கொண்டிருக்கும் மாடுகளும் அப்படியே ப்ரீஸாகி விடும்...

அது போல் தன்னைப் படிக்கிறயா என்று கணவன் கேட்டதும், மூளையும் உணர்வுகளும் உறைந்துப் போய் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருக்கும் மனைவியை லேசாக மேலே தூக்கியவன் தன் முகத்தின் மேல் அவளின் முகத்தை வைத்து, அவளின் செவ்விதழ்களில் மென்மையாகத் தன் இதழை ஒற்றி எடுத்தவன் மேலே சொன்ன வார்த்தைகளில் அந்த இளம் தளிரின் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது....

"திவி.... ரியல் டிவோர்ஸ் பேப்பருக்கும் பொய்யா நான் விளையாட்டுக்குத் தயாரித்த ஃபேக் பேப்பர்ஸுக்கும் வித்தியாசம் கூடத் தெரியாமல் இத்தனை நாட்கள் மனசில போட்டு புழுங்கிக்கிட்டு இருந்திருக்க.... இது ரொம்பத் தப்பு... சொல்லு... படிக்கிறியா? சரின்னா நம்ம மஹாவோட காலேஜிலேயே உன்னைச் சேர்த்துவிடுறேன்" என்க...

தன் கணவனின் மேல் தன் உடல் முழுவதும் படர்ந்திருக்குமாறு படுத்திருந்தவள் தன் மனதைக் கட்டுப்படுத்தும் வழித் தெரியாமல் அவன் கழுத்தில் தன் இதழ்களை ஆழ புதைக்க,

தன் மனையாளின் மனதில் ஏற்பட்டிருந்த பிரம்மையை, பிரமிப்பைத் தனக்கு வெளிப்படுத்தவே அவள் தன்னுடன் இழைகிறாள் என்பதைனை புரிந்துக் கொண்டவன் தன் மேல் கொடி போல் கிடந்தவளை இறுக்க அணைத்தவாறே...

COPYRIGHTED

61% 10:59 PM
https://drive.google.com/file

"திவி" என்க,

கணவனின் கழுத்தில் புதைத்திருந்த தன் இதழ்களை எடுக்காமலே அவனுக்குள் மேலும் புதைந்தவள் "ம்ம்ம்" என்று மட்டும் சொல்ல,

அவளின் முகத்தைத் தன்னை நோக்கி நிமிர்த்தியவன் முதல் முறை தாபமும் மோகமும் போட்டிப் போட்டு வழியும் தன் மனையாளின் விழிகளில் தன் காதல் கொண்ட விழிகளைப் படறவிட்டவன் மெல்லிய குரலில்....

"ஐ லவ் யூ திவி... ஐ லவ் யூ சோஓஓஓ மச்டி [I love you dhivi... I love you sooooooo much di] " என்றான்....

முதன் முறை வாய் விட்டு தன் மனைவியிடம் காதலை சொன்ன அர்ஜூனின் குரல் காதலும் காமும் விரசமும் தாபமும் கலந்து கிசுகிசுப்பாக ஒலிக்க...

விழிகள் கலங்க கணவனின் காதல் வார்த்தைகளில் தன்னை மறந்து லயித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளைக் கண்டு இதழ் விரித்துச் சிரித்தவன்...

"ம்ஹூம்.... இதுக்கு மேல என்னால பொறுக்க முடியாது" என்றவன் அவளைக் கீழே சரித்து வார்த்தைகளில் சொன்ன தன் காதலை மீண்டும் மீண்டும் செயலில் நிருபிக்கத் துவங்கினான்...

கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருந்தால் விதியின் கரங்களும் அவர்களை அரவணைத்துக் கொள்ளும்...

COPYRIGHTED

https://drive.google.com/file

அது செய்யும் காரியங்களில் நல்லதும் இருக்கும், தீயதும் இருக்கும்.....

விதி விட்ட வழி என்று அமைதியாக இருந்துவிடுவதை விட நம் மனதின் எண்ணங்களுக்கு ஏற்ப தான் விதியின் பாதைகளும் பலன்களும் இருக்கும் என்று நம்ப வேண்டும்....

நம்பினால் நம் குணங்களைப் பொறுத்து அது நல்ல வினையாகவும் மாறும் தீய வினையாகவும் மாறும்... அர்ஜூன் திவ்யாவின் தாம்பத்தியத்தைப் போல...

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

COPYRIGHTED

11:00 PM
https://drive.google.com/file

மலரினும் மெல்லியவள்!!

பாகம் 27

இரவு திவ்யாவிடம் அவளின் மேற்படிப்பைத் தொடர்வதற்குச் சம்மதம் பெற்ற அர்ஜூன் மறுநாள் காலையில் உணவு அருந்தும் வேலையில் குடும்பத்தினர் அனைவரும் கூடியிருக்க, அதனைப் பற்றிப் பேசத் துவங்கவும் ஏற்கனவே மற்றவர்களுக்கும் அதே கருத்து இருந்ததால் உடனடியாக ஒத்துக் கொள்ள...

"ஆனா அண்ணா, இயர் எண்ட் ஆல்ரெடி வந்துட்டதுனால அண்ணிய அடுத்த வருஷம் தான் காலேஜில் சேர்க்க முடியும்... அதுவும் இல்லாம இது என்னோட ஸீனியர் இயர்ங்கறதனால அண்ணி தனியாத் தான் போகனும்" என்று மஹா கூற,

இந்த சென்னையில் காலேஜிற்குத் தனித்துப் போவதா என்று பக்கென்று இருந்தது திவ்யாவிற்கு... தடுமாறியவாறே..

"இ.. இல்ல, அப்ப நான் காலேஜிற்குப் போகல" என்று அச்சத்துடன் கூறியவளை சட்டென்று திரும்பி பார்த்த அர்ஜூனின் கூர்ய பார்வையில் தன் கணவனை அதே பழைய அச்சத்துடன் பார்த்தவாறே நடுங்கி நிற்க அவளின் பயத்தை அதிகரிக்கும் வகையில்...

"ஏன் போகலை?" என்றான் கடினமான குரலில்...

COPYRIGHTED

11:00 PM 61%
https://drive.google.com/file

"இல்லை.... எனக்குத் தனியா போகப் பயமாருக்கு"

"ஏன்? மஹா இல்லன்னா உன்னைய காலேஜில் யாரும் கடிச்சு தின்னப் போறாங்களா என்ன?"

கணவனின் கோபம் தெறிக்கும் குரலில் சகலமும் நடுங்கி தலைக் கவிழ்ந்தவளைக் கண்டதும் அவளின் பயத்தைப் புரிந்துக் கொண்டவனாக மனம் இளகி அவளின் கரத்தை மென்மையாக பற்றிக் கனிவுடன்...

"திவி... நானே உன்னைக் காலேஜில் கொண்டு போய் ட்ராப் பண்ணிட்டு ஈவ்னிங் பிக்கப் பண்றேன்... இன் கேஸ் என்னால முடியலைன்னா ட்ரைவர் முருகனோ அல்லது அருணோ உன்னைப் பார்த்துப்பாங்க..." என்றவன் அத்துடன் இந்தப் பேச்சை முடித்துக் கொள்ளலாம் என்பது போல் எழுந்து கைக் கழுவ செல்ல,

திவ்யாவிற்குக் கணவனை எதிர்த்துப் பேச நாவெழவில்லை... அதே திகிலான மன நிலையுடன் தன் மாமியாரைத் திரும்பி பார்க்க அவர் புன்னகையுடன்...

"திவ்யா... நாங்க எல்லாம் இருக்கோம்ல.. அப்புறம் ஏன் இந்தப் பயம்? போகப் போகப் பழகிடும்டா... என்ன?" என்று ஆறுதலாகக் கூற,

படிப்பில் மிகுந்த ஆர்வம் இருந்தும் வசதியற்ற காரணத்தால் தன் அன்னை தன்னைக் கல்லூரிக்கு அனுப்ப இயலாது என்று கூறிய அன்றிலிருந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வரை வீட்டில்

COPYRIGHTED

11:00 PM 61%

https://drive.google.com/file

இருப்பவர்கள் ஒருவருக்கும் தெரியாமல் தனிமையில் அழுது கரைந்தது அவளின் நியாபகத்திற்கு வர இத்தனை அன்பான கணவனும், புகுந்த வீட்டாரும் தன்னைச் சுற்றி வளையம் போல் பாதுகாப்பாக இருப்பதில் இனி என்ன கவலை என்றே தோன்ற சரி என்பது போல் இளமுறுவலுடன் தலை அசைத்தாள்...

அங்கு அலுவலகத்திற்கு வந்து வேலைகளில் புதைந்துப் போன அர்ஜூனிற்கோ காலையில் தனது கோபத்தில் அஞ்சி நடுங்கி நின்ற மனைவியைப் பார்த்ததும் பழைய திவ்யாவைப் பார்த்தது போலவே இருக்க, மனம் உருகியவன் தன்னை மூழ்கடித்திருந்த வேலைகளை விரைவில் முடித்து மாலை வீட்டிற்குத் திரும்ப,

கணவன் வந்தும் அவனைச் சட்டை செய்யாமல் சமையல் அறையே கதி என்று கிடந்த மனைவியின் கோபம் புரிந்தவன் உணவு அருந்தும் பொழுது அவளின் முகத்தையே பார்த்திருக்க, ஆனால் அவள் அவனை நிமிர்ந்துப் பார்த்தால் தானே...

எப்படியும் அறைக்கு வந்து தானே ஆக வேண்டும் என்று சிரித்துக் கொண்டவன், இரவு அவளின் வருகைக்காக தங்களின் கட்டிலில் சாய்ந்து காத்திருந்தவன் தொலைக் காட்சியில் ஒவ்வொரு அலைவரிசையாக மாற்றியவாறே எந்த நிகழ்ச்சியிலும் மனதை செலுத்த முடியாமல் இறுதியில் தனது மடி கணினியை எடுத்து வைத்துக் கொண்டு அலுவலக வேலையைத் தொடர, நீண்ட நேரம் கணவனைக் காத்திருக்க வைத்தவள் ஒரு வழியாக அறைக்குள் நுழைய,

கணவனின் முகத்தை நிமிர்ந்தும் பார்க்காமல் அவனுக்கு முதுகு காட்டிப் படுத்திருந்தவளை கண்டு புன்னகைத்தவன்

11:00 PM 61%

https://drive.google.com/file

கணினியை அருகில் இருந்த மேஜையில் வைத்து விட்டு அவளின் முதுகு புறமாக நெருங்கிப் படுத்து, அவளின் கூந்தலை ஒதுக்கி தனது இதழ்களை அவளின் கழுத்தில் பொறுத்த, வெடுக்கென்று எழுந்தவள் அவனின் கண்களை உறுத்துப் பார்த்து...

"எனக்கு இன்னைக்குத் தூக்கம் வருது" என்றாள்...

அவளின் கோபத்திலும், அவள் தன்னைப் பார்த்திருந்த விதத்திலும் குழந்தைத் தனத்தையே கண்டவன் அடக்க மாட்டாமல் சிரித்தவாறே..

"சரி தூங்கு... எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கு... முடிச்சுட்டு உன்னை எழுப்பிவிடறேன்...என்ன?" என்றான் கண் சிமிட்டியாவாறே கல்மிஷத்துடனும் விஷமம் வழியும் கண்களுடனும்...

மீண்டும் மௌனியானவள் ஒருக்களித்துப் படுக்க, மடி கணினியை எடுத்து வைத்துக் கொண்டவன் வேலையில் மூழ்க, கணவனிடம் தன்னைத் தொட தடை விதித்தவளின் மனமோ தன்னையும் அறியாமல் அவனின் அருகாமையை, அணைப்பைத் தேட, அவனின் புறம் திரும்பிப் படுத்தவளைக் கணினியில் கண்களைப் பதித்துக் கொண்டே உணர்ந்தவன் இள நகையுடன் தன் வேலையைத் தொடர...

"எனக்கு இந்த வெளிச்சத்தில் தூங்க முடியலை" என்று செல்லமாகச் சினுங்கியவளைக் கண்டவனிற்கு அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் போகவும் வாய் விட்டு

COPYRIGHTED

11:01 PM

https://drive.google.com/file

சிரித்தவன் கணினியை தூர வைத்து அவளைத் தன் அருகில் இழுத்தவன் அவளின் பூந்தளிர் மேனி முழுவதும் தன் வலுவான உடல் படருமாறு சரிய,

தன்னால் இயன்ற அளவிற்கு அவனைத் தள்ள முயன்றவளின் போராட்டங்களைச் சடுதியில் அடக்கியவன் அவளுக்குள் மூழ்க துவங்க,

கணவனின் முரட்டு இதழ் ஒற்றல்களிலும், வன்மையான அத்து மீறல்களிலும் அவளின் பெண்மையும் சிலிர்த்து எழ, கட்டவிழ்ந்த தாபம் சீறிக் கொண்டு வெளி வந்ததில் தனது வலிமையான அணைப்பால், தனது மென்மையற்ற தொடுகையால் தன் மனையாளின் உணர்வுகளும் கிளர்ந்தெழுந்தததில் அவளின் கோபம் வெகு தூரம் சென்று விட்டதை அறிந்தவனுக்கு ஏனோ இன்று மிருதுவான தாம்பத்தியத்தில் விருப்பம் இல்லாது போனது...

கணவனின் எதிர்பார்ப்புகளை, தேடல்களைப் புரிந்துக் கொண்டவளுக்கு அவனின் நெகிழ்வற்ற செய்கைகளும் உடல் கன்னிப்போகும் அளவிற்கு அவனின் வலிமையான பிடியும் தன் மலர் போன்ற உடலை வலிக்கச் செய்தாலும் அந்த வலியும் இன்ப அவஸ்தையாக இருக்க,

உணர்ச்சிகள் தடுமாறி இருந்தவள் தன்னை தன் கணவனிடம் அடியோடு இழக்க, ஊடலிற்கு பின் வரும் கூடலின் சுவையையும் தன் மனையாளுக்கு காட்டினான் அவளின் காதல் கணவன்...

COPYRIGHTED

11:01 PM
https://drive.google.com/file

அர்ஜூனும் திவ்யாவும் காதலோடு கூடிய கூடலும் மகிழ்ச்சியுமாகக் கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகிய நிலையில் ஒரு நாள் காலையில் இருந்தே திவ்யாவிற்குத் தலை சுற்றுவது போல் இருந்தது....

ஒரு வேளை காலை டி:பன் உண்டால் சரியாகி விடும் போல் என்று நினைத்தவள் அனைவரும் அவரவர் வேலையாக வெளியே செல்ல, தன் மாமியாருடன் சேர்ந்து அமர்ந்து சாப்பிட விரும்ப ஆனால் அவரோ அவளை உண்ணச் சொன்னவர் தனக்குக் கொஞ்சம் அல்லியிடம் கா:பி மட்டும் போட்டுக் கொடுக்கச் சொல்ல, சரி என்றவள் தானே காபி போட்டுக் கொண்டு வந்தாள்...

காபியை அவரிடம் கொடுத்துவிட்டு திரும்பியவளுக்கு மீண்டும் தலை சுற்றுவது போல் இருக்க ஸ்ரீயின் அருகிலேயே சட்டென்று தலையைப் பிடித்துக் கொண்டே அமர்ந்துவிட்டவளைப் பார்த்தவர் என்னவென்று கேட்க,

"கொஞ்சம் தலை சுத்தற மாதிரி இருக்கு அத்தை.... பசியா என்னன்னு தெரியலை" என்க,

அவளை எழுப்பியவர் டைனிங் டேபிளில் அவளை அமர வைத்து பரிமாற ஆரம்பித்தார்...

ஒரு வாய் உணவை எடுத்து வைத்தவளுக்குக் குமட்டிக் கொண்டு வர, வாயை மூடிக் கொண்டே பின்கட்டிற்கு ஓடியவளை தொடர்ந்து அவள் பின்னேயே ஓடிய ஸ்ரீக்கு எதுவோ புரிவது போல் இருந்தது...

COPYRIGHTED

11:01 PM
https://drive.google.com/file

சில நாட்களாகவே திவ்யாவிடம் ஒரு அசதி தெரிந்திருந்தது....

முகத்தில் ஏதோ களைப்பும் சோர்வும் படர்ந்திருக்க ஒரு வேளை "அதுவாக" இருக்குமோ என்று சில நேரங்களில் ஸ்ரீக்கும் தோன்றியிருந்தாலும் அர்ஜூனும் திவ்யாவும் மனம் ஒத்து வாழ துவங்கியே கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் தான் ஆகியிருந்ததால் அதற்குள் அர்ஜூன் இதற்குத் தயாராக இருப்பானா என்ற குழப்பமும் இருந்து வந்தது...

ஆனால் இன்று திவ்யாவின் மயக்கமும், களைப்பும், நிலையும் கிட்டத்தட்ட அவர் நினைத்திருந்ததை உறுதிப் படுத்த படபடக்கும் நெஞ்சத்துடன் மனதிற்குள் "முருகா... இது நான் எதிர்பார்க்கிற விஷயமாத் தான் இருக்கனும்" என்று மனம் உருக வேண்டிக் கொண்டு தவிப்புடன்....

"திவ்யா, நாள் எதுவும் தவறிப் போச்சா? என்றார்....

அவரின் கேள்வியில் சட்டென்று அவரை நிமிர்ந்துப் பார்த்தவளின் முகத்தில் யோசனையும் எதிர்பார்ப்பும் போட்டிப் போட...

"போன மாசம் பீரியட்ஸ் ஆகலை அத்தை.... இந்த மாதம் இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கழிந்தால் தான் தெரியும்" என்றாள் தளர்ந்த குரலில்...

COPYRIGHTED

11:01 PM
https://drive.google.com/file

மருமகளின் பதிலில் ஸ்ரீயின் வயிற்றில் பால் வார்த்தது போல் இருக்க, உள்ளமும் மகிழ்ச்சியில் திளைக்க, அவரின் முகம் அக மகிழ்ந்து பூரித்துப் போனது...

மனமொத்த ஆத்மார்த்தமான நட்பு கொண்டிருந்த இரு தோழிகள் இருவரும் ஒரே நேரத்தில் பாட்டி ஆனால்?

அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அவளின் கரம் பற்றி அவள் எழ உதவி செய்தவர்...

"சரி திவ்யா, கிளம்பு... டாக்டரிடம் போகலாம்..." என்றார்.....

"வேண்டாம் அத்தை... இன்னும் இரண்டு மூன்று நாள் கழிச்சுப் போகலாமே" என்று தயங்கியவளை மீண்டும் வற்புறுத்தி அழைக்க, அவரின் பேச்சை மறுக்க முடியாமல் கிளம்பியவள் தெய்வானையிடமும் அல்லியிடமும் எதுவும் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாள்...

அவர்கள் இருவரும் சென்றது அவர்களின் குடும்ப மருத்துவரின் மருத்துவமனைக்கு... அவரின் மனைவி சென்னையிலேயே மிகப் பிரபலமான பெண்கள் மருத்துவர்...

மருத்துவமனையை அடைந்ததில் இருந்து திவ்யாவின் மனதில் ஏதோ கலக்கமாக இருக்க, நெஞ்சுத் துடிப்பும் அதிகரிக்க, அவளின் படபடப்பு அவள் முகத்திலும் அப்பட்டமாகத் தெரிய, மாமியாரை திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு வந்தவளை

COPYRIGHTED

11:01 PM
https://drive.google.com/file

ஆறுதல் படுத்திக் கொண்டே சென்றவரின் மனதில் அப்படி ஒரு சந்தோஷம்...

திவ்யாவை பரிசோதித்த மருத்துவர் மாமியார் மருமகளின் மனம் குளிரும் வகையில் அவள் பொன்னான வயிற்றில் அவர்களின் வாரிசு உதித்திருக்கும் அந்தச் சந்தோசச் செய்தியைச் சொன்னவர் அவள் ஏழு வார கர்ப்பமாக இருப்பதை உறுதிப் படுத்த, உலகமே தன் கைக்குள் வந்துவிட்ட பூரிப்பில் ஆட்கொள்ளப்பட்ட திவ்யாவிற்கு அந்த நிமிடமே அர்ஜுனைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது...

முதல் முறை கர்ப்பம் தரித்திருப்பதாலும், பத்தொன்பது வயதே ஆனவள் என்பதாலும் செய்ய வேண்டியது, செய்யக் கூடாதது என்று அறிவுரைகள் வழங்கிய மருத்துவர், ஊட்டசத்து மாத்திரைகள், அவளுடைய மாதாந்திர பரிசோதனைகளைப் பற்றியும் எடுத்துக் கூறினார்.

ஒரு வழியாக அனைத்துப் பரிசோதனைகளையும் முடித்து வெளியே இருவரும் வர, திவ்யா தயங்கியவாறே தன் மாமியாரைப் பார்த்தவள்....

"அத்தை, இந்த விஷயத்தை யாரிடமும் இப்போ சொல்ல வேண்டாம்..... தெய்வானைக்கா, அல்லியக்காவிடம் கூடச் சொல்ல வேண்டாம்" என்று கூற, ஏன் என்பது போல் ஸ்ரீ பார்க்க,

"இல்லத்த... எனக்கு இந்த விஷயத்தை முதல்ல அவங்கக் கிட்ட தான் சொல்லனும்னு ஆசையா இருக்கு... அதுவும் :.போன்ல

60% 11:01 PM
https://drive.google.com/file

இல்லை... அவங்க இன்னைக்கு நைட் வீட்டிற்கு வந்தவுடன் நேரில் சொல்லனும் போல் இருக்கு" என்றாள் முகத்தில் அத்தனை நாணத்தைச் சுமந்து...

எந்த ஒரு பெண்ணிற்குமே தான் கர்ப்பமாயிருப்பதைத் தன் கணவனிடம் தானே முதன் முதலாகச் சொல்ல ஆசைப்படுவாள், "சரிம்மா" என்றவர் மனம் முழுக்கத் தங்கள் வீட்டில் விடி வெள்ளி போல் இன்னும் எட்டு மாதங்களில் தோன்ற போகும் குலக் கொழுந்தின் மீதே இருந்தது.

அன்று முழுவதும் தன் கணவன் எப்பொழுது வருவான் என்று திவ்யா ஏங்கி கொண்டிருக்க, ஸ்ரீயோ தன் கணவருக்கும், கலாவிற்கும் மற்ற அனைவருக்கும் இந்த மகிழ்ச்சியான செய்தியை எப்பொழுது சொல்வது என்று காத்துக் கொண்டிருந்தார்...

உள்ளம் முழுவதும் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்க, கோவிலுக்குச் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டவள் தன் மாமியாரிடம் கேட்க, அவளைத் தனியாக அனுப்ப யோசித்தவர் அவளைத் தடுக்காமல் மஹாவையும் துணைக்கு அனுப்பினார்...

இன்று அதி காலையிலேயே தங்களின் தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதற்கென்று சென்ற அர்ஜூனிற்கு மதிய உணவு அருந்த கூட நேரம் கிடைக்காது சுற்றிக் கொண்டிருந்தவன், அலுவலகத்திலும் வேலைகள் தேங்கி இருப்பதை அறிந்து மதியத்திற்கு மேல் அலுவலகம் சென்றவனை வேலை கழுத்தை நெறிக்க, மனமும் உடலும் அசந்துப் போனதில் அந்த நிமிடமே திவ்யாவைக் காண வேண்டும் என்று தோன்ற வீட்டிற்குச் செல்ல முனைந்தவன் கதிரை அழைத்தான்....

COPYRIGHTED

"கதிர், வேறு ஏதாவது இன்னைக்கே முடிக்க வேண்டிய வொர்க்ஸ் பெண்டிங்கில இருக்க?"

"இல்ல சார்... மீதியை நாளைக்கு பார்த்துக்கலாம் "

"ஓகே கதிர்... தென் லெட் மி லீவ் [Ok, then let me leave]" என்றவன் கிளம்பியதும் வீட்டிற்கு வரும் வழியில் திவ்யாவை அழைக்க, கணவனின் அழைப்பைக் கண்டவளுக்கு அவனின் நெஞ்சில் சாய்ந்து அவன் தந்தையாகப் போகும் தித்திப்பான செய்தியை சொல்ல மனமும் நாவும் துடித்தது....

ஆனால் இந்தப் பொன்னான செய்தியை நேரில் தான் சொல்ல வேண்டும், சொல்லும் பொழுது தன் கணவனின் முகத்தில் தோன்றும் மாறுதல்களைக் கண் கொண்டு பார்த்து ரசிக்க வேண்டும் என்று விரும்பியவள் தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு தான் மஹாவுடன் அஷ்டலெட்சுமி கோவிலில் இருப்பதாகக் கூறினாள்...

ஏனோ அர்ஜூனின் மனதில் அப்பொழுதே அவளைக் காண வேண்டும் போல் ஆவலாக இருக்க, அவன் உடலும் உள்ளமும் மனையாளின் அருகாமையைத் தேடித் தவித்து இருந்தது....

"கோவில் இருந்து வர எவ்வளவு நேரம் ஆகும்?" ....

"இப்போ தான் வந்தோம்ங்க.... இன்னும் அர்ச்சனையே செய்யலையே"

COPYRIGHTED

11:02 PM
https://drive.google.com/file

அர்ஜூனிற்கும் கடவுளுக்கும் எவ்வளவு தொலைவு என்பது அனைவருக்கும் தெரியும்... ஆனால் அவன் மனையாளோ கணவனுக்கு நேரெதிராக வாரத்தில் ஏழு நாட்களும் கோவிலுக்குச் செல்ல முடியாதா என்று ஏங்குபவள்...

வாழ்நாளில் எந்தக் கோவிலின் வாயிலையும் மிதிக்காதவன்..... விவரம் தெரிந்த நாளில் இருந்தே எவ்வளவு பெரிய சோதனைகளாகட்டும், எதிர்ப்புகளாகட்டும், அல்லது பிரச்சனைகளாகட்டும், அனைத்தையும் தனியாளாக எதிர்த்து நின்ற சமயங்களில் கூட அவன் தன்னுடைய புத்திக் கூர்மையையும், சாமர்த்தியத்தையும், அஞ்சா நெஞ்சத்தையும் மட்டுமே நம்பினானே ஒழிய, கடவுளின் பக்கம் மனதால் கூட ஒரு அடி எடுத்து வைத்ததில்லை...

அப்பேற்பட்ட அர்ஜூன் இன்று தன் மனையாள் கோவிலில் இருப்பது தெரிந்ததும் அவளைக் காண்பதற்கு இதற்கு மேலும் காத்திருக்க முடியாமல் கோவிலிலுக்கே சென்று அவளைச் சந்திப்பதாக முடிவெடுத்தவன் தான் வருவதாக அவளிடம் சொல்வதைத் தவிர்க்க...

கணவன் மனைவி இருவரின் மனமும் எத்தனை ஆழமான அழுத்தமான காதலை, அன்பை, நேசத்தைச் சுமந்திருந்தால் வார்த்தைகளால் தங்களின் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்திக் கொள்ளாமலே மனதோடு மனம் பேசிக் கொண்டதைப் போல் ஒரே முடிவை எடுத்திருந்தார்கள்....

COPYRIGHTED

தன் மனையாளை சந்திக்கும் ஆசையில் விரைவாகக் காரை செலுத்தியவன் அடுத்த அரை மணி நேரத்தில் கோவிலை அடைய, மீண்டும் தன்னை அழைத்த கணவனிடம் தானும் மஹாவும் மஹாலெட்சுமி சன்னதியில் இருப்பதாகச் சொல்ல, முதன் முறையாகத் கோவிலிற்குள் நுழைந்தான் "தி க்ரேட் இண்டஸ்ட்ரியலிஸ்ட்" அர்ஜூன்...

கோவிலுக்குள் நுழைந்தவனுக்கு அங்கிருந்த கூட்டத்தைப் பார்த்ததும் வழக்கமான பாணியில்...

"இங்க வந்து இப்படி மொய்க்கிறதுக்குப் பதில் பேசாமல் அவங்க செய்ய வேண்டிய வேலைகளை சரியா செய்தாலே போதும்... எல்லாம் ஒழுங்காக நடக்கும்" என்று நினைக்கத் தோன்ற, ஏனோ தன் சிந்தனையை மாற்றிவிட்டுத் திவ்யா கூறிய சன்னதியை தேட....

கருப்பு நிறத்தில் முழுக்கை சட்டையும், வெளிர் சந்தன நிறத்தில் ஜீன்ஸும் அணிந்திருந்தவன், சட்டையை முட்டி வரை மடித்துவிட்டு, சன் க்ளாஸ் அணிந்து கம்பீரமாக நடக்க, திவ்யா இருந்த சன்னதிக்கு அருகிலேயே இருந்த ஒரு மண்டபத்தில் அமர்ந்திருந்த நான்கு கல்லூரி மாணவிகள் இவனைப் பார்த்ததும் இவன் அழகில் மயங்கி வாயைப் பிளந்தவாறே...

"வாவ் அங்க பாருங்கடி... செம்மையா ஒருத்தன் வரான்" என்றார்கள்....

COPYRIGHTED

11:02 PM

https://drive.google.com/file

அதே நேரம் அவர்களைப் பார்த்திருந்தவன் அவர்களை நோக்கி நடக்க அவன் அழகில் லயித்து இருந்தவர்கள் அவன் சட்டென்று தங்களை நோக்கி நடக்கவும் வியந்தவர்கள் மகிழ்ச்சியில்....

"ஹேய்! அவன் இங்க தாண்டி வருகிறான்... ஓகே.... ஒரு டீல்.... யாரைப் பார்த்து அவன் முதல்ல பேசுகிறானோ, அவளுக்குத் தான் அவன்" என்று வெகுளித்தனமாக அவர்களுக்குள்ளாகவே முடிவெடுக்க,

அவர்களின் அருகே வந்தவன் "எக்ஸ்கக்யூஸ் மீ.... மஹாலெட்சுமி சன்னதி எங்கிருக்கு?" என்றான்...

ஆனால் ஜொள்ளு விட்டு அவனையே பார்த்திருந்தவர்களின் செவிகளைச் சென்று அவன் கேள்வி அடையவில்லை...

தலையைக் குனிந்து சிரித்துக் கொண்டவன் சிறு புன்னகையுடன் நிமிர்ந்து,

"கேன் யூ கேர்ள்ஸ் கம் பேக் டு திஸ் இயர்த் ஃபார் அ மினிட் [Can you girls come back to this earth for a minute]" என்றான்...

அவனின் சிரிப்பில், பேச்சில் சுதாரித்தவர்கள் அசடு வழிந்து கொண்டே...

COPYRIGHTED

"நாங்களும் இந்த உலகத்திற்குத் திரும்பி வரனும்னு தான் பார்க்கிறோம்... ஆனால் நீங்க தான் வர விட மாட்டேங்கிறீங்களே" என்று சலித்துக் கொள்வது போல் கூறிக் கொண்டு ஒருவருக்கொருவர் பார்த்துக் கண் சிமிட்ட,

அவர்களின் விஷமம் புரிந்தவன் மீண்டும் சிரித்துக் கொண்டே....

"சரி, மஹாலெட்சுமி சன்னதி எங்கிருக்குன்னு சொல்லுங்க" என்றான்...

"சொல்றது என்னா? கூட்டிட்டே போறோம் வாங்க" என்றவர்கள் அவனுக்கு முன் செல்ல, புன் முறுவலுடன் தலையைக் கோதி விட்டுக் கொண்டவன், அவர்களைப் பின் தொடர்ந்தான்...

சன்னதியை அடைந்ததும்...

"இது தான் நீங்க கேட்ட சன்னதி" என்க...

அங்கு மஹா கூட்டத்தில் நிற்பதையும் அவளுக்கு அருகில் அடர்ந்த பாக்கு நிறத்தில் சன்னமான கரைப் போட்ட பட்டுப் புடவையில் தேவதையைப் போல் அழகு மிளிற நின்று கொண்டிருந்த தன் மனையாளின் எழில் அழகில் மயங்கியவன், அவள் இறுக்கத் தன் கண்களை மூடி வேண்டிக் கொண்டு இருப்பதைப் பார்க்கவும் அவள் நிச்சயம் தனக்காகத் தான் வேண்டிக் கொண்டிருப்பாள் என்று புரிய சிறு புன்னகையுடன் கல்லூரிப் பெண்களிடம் திரும்பியவன் "தேங்ஸ்" எனவும்...

COPYRIGHTED

"வேறு எங்கேயும் போக வேண்டுமா?" என்று அவர்கள் கிண்டலாகக் கேட்க,

"அதை என் வைஃப்பிடம் கேட்டு சொல்றேனே" என்றான்...

அவன் வைஃப் என்றதும் அவர்களின் முகம் மாறுவதைப் புன்னகையுடன் இரசித்தவன் கூட்டத்திற்கு இடையில் புகுந்து திவ்யாவின் அருகில் சென்று அவளை உரசியது போல் நிற்க,

அவனின் திடீர் ஸ்பரிசத்தில் திடுக்கிட்டு சட்டென்று கண்களைத் திறந்தவளுக்குத் தன் கணவன் தன் அருகில் நிற்பதைக் கண்டதும் இது கனவா அல்லது நினைவா? என்றே தோன்றியது....

கோவில் என்றாலோ அல்லது பூஜை என்றாலோ தாம்தூமென்று குதிப்பவரா இன்று கோவிலுக்கு வந்திருக்கிறார் என்று ஆச்சர்யப்பட்டவளின் அகன்ற விழிகளைப் பார்த்தவன் அவளின் கண்களுக்குள் தன்னைத் தொலைத்தவனாக அவளின் காதுகளுக்கருகில் குனிந்து....

"சாமியைப் பாருடி" என்று சிரித்துக் கொண்டே சொல்ல, புன்னகைத்தவள் மஹாவிடம் அவன் வந்திருப்பதைச் சொல்ல...

அவள் சொல்வதை நம்பாமல் மஹா எட்டி அவனைப் பார்க்க, தன் தங்கையைப் பார்த்து புன்னகைத்தவன்...

COPYRIGHTED

11:03 PM
https://drive.google.com/file

"இப்போ இரண்டு பேரும் சாமியக் கும்பிடப் போறீங்களா?, இல்லை என்னையவே பார்த்துட்டு இருக்கப் போறீங்களா?" என்றான்.

தன் அருகில் தன் கணவன் இருப்பது அதுவும் கோவிலில் என்று நினைத்தவளுக்கு அவனின் மார்புக்குள் புதைந்து அந்த நிமிடமே அவன் அப்பா ஆகப் போவதை சொல்லமாட்டோமா என்று ஏக்கமாக இருந்தது...

திருமணம் நடந்த நாளில் இருந்து இவர்கள் இருவரும் ஒன்றாக இணைவார்களா என்று அனைவரும் அஞ்சிக் காத்துக் கொண்டிருக்க, தன்னைப் போல் ஒரு ஏழைப் பெண்ணைத் தன் கணவன் தன் மனைவியாக ஏற்றுக் கொள்ள வழியே இல்லை என்று அவள் உள்ளம் தவித்துக் கொண்டிருக்க, இதோ அவளைத் தன் மனைவியாக ஏற்றுக் கொண்டது மட்டும் இல்லாமல், தன் காதலினால் அவளைத் திக்கு முக்காட செய்த கணவன் இன்று அவனின் வாரிசையே அவளுக்குப் பரிசாகக் கொடுத்திருக்கிறான்...

அகம் மகிழ மன நிறைவுடன் கண்களை மூடி தன் கணவனுக்காகவும், தான் பெறப் போகும் தங்களுடைய குழந்தைக்காகவும் மனதார வேண்டிக் கொண்டவள் மறுபடியும் தலை சுற்றுவது போல் உணர்ந்தாள்...

தான் கீழே விழுந்துவிடாமல் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளத் தன்னையும் அறியாமல் அர்ஜூனின் கரத்தைப் பற்ற, திரும்பி பார்த்தவனுக்கு ஏதோ சரியில்லை என்று புரிய....

COPYRIGHTED

11:03 PM
https://drive.google.com/file

"திவ்யா, ஆர் யூ ஆல்ரைட்?" என்றான்...

"இல்லைங்க... ஒன்னும் இல்லை" என்று சொன்னவளுக்குத் தலை சுற்றல் மேலும் அதிகரிக்கத் தன்னிலை இழந்து அவனின் மேல் லேசாகச் சாய்ந்தவளைக் கண்டு பதறிப் போனவன்...

"என்னாச்சு, திவி?" என்று பதறியவாறு மீண்டும் கேட்க,

அவன் சத்தத்தைக் கேட்டு மஹாவும் திரும்பி பார்க்க, திவ்யாவை தன் தோளிலேயே சாய்த்துக் கொண்டவன் அப்படியே அவளை நடத்தி அழைத்து வந்தான் அந்தக் கல்லூரி பெண்கள் அமர்ந்திருந்த அதே மண்டபத்திற்கு...

அவளை தன் தோளில் தாங்கியவாறே மரத்தின் கீழ் அந்த மண்டபத்தில் அமர செய்தவன் தானும் அவளின் அருகிலேயே அமர, முதன் முறையாக இவ்வாறு தரையில் தன் அண்ணன் அமர்வதைப் பார்த்த மஹாவிற்குக் கிட்டத்தட்ட மயக்கமே வந்தது.....

விழி விரிய அவனைப் பார்த்தவள் மீண்டும் திவ்யாவை நோக்க, அர்ஜூனின் தோளில் சாய்ந்திருந்தவளுக்கு இன்னமும் தன் தலையை நிமிர்த்த முடியாமல் போக அவளின் நிலைக் குறித்து அஞ்சியவனாக அவளின் முகத்தைத் தன்னை நோக்கி நிமிர்த்தி...

"திவி.... என்ன பண்ணுது?? சொல்லுடி" என்று மீண்டும் பரிதவிப்புடன் கேட்க,

COPYRIGHTED

https://drive.google.com/file

திவ்யாவிற்கு மறுபடியும் குமட்டிக் கொண்டு வந்தது...

இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு வயதான பாட்டி தன் அனுபவத்தால் அவளின் நிலைமையை உணர்ந்து அவளின் அருகே நெருங்கி வந்தவர்...

"என்னம்மா, ரொம்ப மசக்கையா இருக்கா? எத்தனையாவது மாசம்மா??" என்றார்...

அவரின் கேள்வி அர்ஜூனிற்கும் மஹாவிற்கும் புரிய ஒரு சில விநாடிகள் பிடித்தது...

புரிந்ததும் சட்டென்று திவ்யாவை நோக்கி குனிந்தவன் முகத்திலும் மனதிலும் அத்தனை ஆவலையும் எதிர்பார்ப்பையும் தாங்கி....

"திவி" என்றான்...

தன் கணவன் தன்னை நோக்கி குனிந்து தன் முகம் பார்க்கவும், அவனின் எதிர்ப்பார்ப்புடனான குரலிலும் நாணம் அடைந்தவளின் முகம் செவ்வானமாய்ச் சிவக்க கணவனின் தோளில் சாய்ந்திருந்தவள் அவனைப் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டு மேலும் அவன் நெஞ்சில் முகத்தை ஆழ புதைக்க, இங்கு நடந்து கொண்டிருக்கும் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த கல்லூரி மாணவிகளுக்கு இது ஏதோ சினிமாவில் நடக்கும் காட்சியைப் போல் தோன்றியது....

COPYRIGHTED

11:04 PM
https://drive.google.com/file

தன்னவளின் நாணத்தில், தன் மேல் புதைந்து இருக்கும் அவளின் செய்கையில் சிலிர்த்தவன் மீண்டும் தன் வலது கையால் அவளின் முகத்தைத் தன்னை நோக்கி நிமிர்த்தி....

"என்னடி, கேட்டுட்டே இருக்கேன்... ஒன்னுமே சொல்ல மாட்டேங்கிற" என்று ஆசையுடன் வினவ....

இன்னமும் கூச்சம் விலகாத முகத்துடனும் புன்னைகையுடனும் தன் கணவனின் காதிற்கு அருகில் எம்பி மெல்லிய குரலில்....

"ம்ம், நீங்க அப்பா ஆகப் போறீங்க" என்றாள்...

தன் காதல் மனைவியின் வாயில் இருந்து வந்த "அப்பா ஆகப் போறீங்க" என்ற வார்த்தைகளில் உடலும் உள்ளமும் சிலிர்த்தவனுக்குப் பெருமகிழ்ச்சியும் பிரமிப்பும் போட்டிப் போட, தங்களின் காதலுக்கு, அன்னியோன்யமான தாம்பத்தியத்திற்குச் சாட்சியாகத் தன் பிள்ளை தன் மனைவியின் மணி வயிற்றில் உதித்திருக்கிறான் என்ற கர்வம் தோன்ற, சுற்றம் பார்க்காமல் தனக்குத் தந்தையென்ற ஸ்தானத்தை அளிக்கப் போகும் தன்னவளின் நெற்றியில் அழுத்தமாக முத்தம் பதித்தான் அந்தக் காதல் கணவன்...

ஏற்கனவே சினிமா காட்சி போல் அங்கு நடப்பதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த அந்தக் கல்லூரி மாணவிகளுக்கு இந்தக் காட்சி இன்னும் உற்சாகத்தைக் கொடுக்க,

COPYRIGHTED

11:04 PM
https://drive.google.com/file

"ஸோஓஓஓஓ ஸ்வீட்... திஸ் பியூட்டி:ஃபுல் மொமண்ட்ஸ் நீட் டு பி கேப்ச்சர்ட் [Sooooo sweet.... this beautiful moment needs to be captured] " என்றவர்கள்,

அர்ஜூன் திவ்யாவின் நெற்றியில் முத்தமிடுவதையும், அதனால் அவள் வெட்கத்தால் முகம் சிவந்து மீண்டும் அவனின் நெஞ்சிற்குள் ஆழ தன் முகத்தைப் புதைப்பதையும் அழகாகத் தங்களின் அலை பேசியில் படம் பிடித்துக் கொண்டார்கள்....

வழக்கமாகத் தன்னை இவ்வாறு புகைப் படம் எடுப்பவர்களை உண்டு இல்லை என்று செய்துவிடுபவன் இன்றைய நாள் தன் வாழ்நாளில் ஒரு பொன்னான நாள் என்பதாலும் மனமுழுவதும் மகிழ்ச்சி நிரம்பி வழிந்ததாலும் அவர்களின் செயலில் சிரித்தவன் இந்த வாண்டுகள் இதற்கு மேல் எதுவும் செய்வதற்குள் இங்கிருந்து கிளம்பிட வேண்டும் என்று எண்ணி....

"கார் வரைக்கும் நடக்க முடியுமா திவி?" என்றான்...

"ம்ம்" என்றவளை மெல்ல எழுப்பித் தன்னுடைய தோள் வளைவிற்குள் வைத்துக் கொண்டவன் கோயிலின் வாயிலை நோக்கி நடக்க, கணவனின் இந்த உரிமையான ஆனால் கோவில் என்று கூடப் பாராமல் தன்னைத் தன்னருகில் வைத்துக் கொண்டு நடக்கும் செயலில் சங்கோஜப்பட்டவள் அவனை விட்டு மெல்ல நகர..

"ஏன், இப்ப என்ன? திரும்பியும் கீழே விழறதுக்கா... பேசாம இப்படியே நட" என்றான் வார்த்தைகளில் அழுத்தத்தைக் கூட்டி...

அதில் கோபம் தெரியவில்லை... அவனுடையை அக்கறை தான் தெரிந்தது...

மௌனமாக அவனுடன் சேர்ந்து நடக்க ஆரம்பிக்க, அந்தக் கல்லூரி பெண்களிடம் தன் அலை பேசி என்னைக் கொடுத்து அர்ஜூனையும் திவ்யாவையும் அவர்கள் எடுத்த அந்த அழகிய புகைப் படத்தைத் தன்னுடைய அலை பேசிக்கு அனுப்பச் சொன்னாள் மஹா.

வாழ்க்கையில் சில நிமிடங்கள் பதிக்கப் படுவதற்குரியது அல்லவா!!!!!

கோவிலை விட்டு வெளியே வந்தவர்கள் நேரே தங்கள் காருக்கு செல்ல, அர்ஜூன் டிரைவர் முருகனை வீட்டிற்குப் போகச் சொன்னவன் மஹாவையும் திவ்யாவையும் தன் காரில் ஏறச் சொல்ல, அவர்களுக்குத் தனிமை கொடுக்க விரும்பிய மஹா...

"அண்ணா... நான் முருகன் அண்ணாவுடம் போறேன்... நீங்களும் அண்ணியும் ஒன்னா வாங்க" என்க..

அவளைத் திரும்பிப் பார்த்தவன்....

"ஏன்? நீயும் என் கூடவே வா" என்றான்...

COPYRIGHTED

11:05 PM 59%
https://drive.google.com/file

அவன் வார்த்தைகளை மறுக்க முடியாமல் திவ்யாவை அர்ஜூனிற்கு அருகில் காரின் முன் பக்க இருக்கையில் அமரச் சொன்ன மஹா பின் பக்க இருக்கையில் அமர,

"திவி... நீ மஹா கூட உட்காரு" என்றவன் திவ்யா காரில் ஏறியதும் அவளின் பக்கக் கதவை சாத்தியவன் தான் ஏறி காரை கிளப்ப, ஏறியதில் இருந்து வீட்டிற்கு வரும் வழி முழுவதும் தன் கணவனின் கண்கள் ரியர் வியூ கண்ணாடி வழியாகத் தன் மேலேயே படர்ந்திருந்ததைக் கண்ட திவ்யாவிற்கு வெட்கம் பிடுங்கி தின்றது..

இது என்ன தங்கை கூட இருக்கும் போதே இந்தப் பார்வை என்று நினைத்தவள் தலை குனிய, வாழ்க்கையில் எத்தனையோ வெற்றிகளைக் வென்றிருந்தாலும், எவ்வளவு மிகப் பெரிய பதவியில் வகித்து இருந்தாலும், முதல் முறை தந்தை என்ற அற்புதமான அழகான பதவியைத் தனக்குத் தந்த தன் மனைவியைப் பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்தவனின் விழிகளில் காதலும் கர்வமுமே வழிந்து கொண்டிருந்தது....

இவர்களின் பார்வை பறிமாற்றங்களைப் கண்டும் காணாதது போல் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த மஹாவிற்குத் தன்னையும் மீறி தன் இதயத்தில் குடியிருந்த, ஆனால் தன்னுடைய அவசரத்தினால் அவளின் மனதைக் காயப்படுத்தியிருந்த வினோத்தின் நியாபக வந்தது...

COPYRIGHTED

11:05 PM
https://drive.google.com/file

அன்று மொட்டை மாடியில் அவளை முத்தமிட்டு தன் காதலை சொன்னவன் அதற்குப் பிறகு அவளிடம் பேச கூட முயற்சிக்கவில்லை..

மறு நாள் அவன் தங்கள் ஊருக்கு திரும்பி செல்லும் பொழுது எவ்வளவு ஆர்வத்துடன் தன்னை எதிர்பார்த்திருப்பான் என்று தெரிந்தும் தான் அவனைப் பார்க்க கீழே இறங்கி வராததில் அவனுக்கு நிச்சயம் தன் மீது கோபமும் வருத்தமும் இருக்கும்...

ஆனால் அதற்காக இத்தனை நாட்களில் ஒரு முறைக் கூடத் தன்னை அழைக்கவோ அல்லது ஒரு குறுந்தகவல் கூட அனுப்பவோ அவன் முயற்சிக்கவில்லையே என்று கலங்கியிருந்தவளுக்கு ஒரு பெண்ணாகத் தானே வழியச் சென்று அவனிடம் பேசவும் தைரியம் வரவில்லை....

ஆனால் அவளுக்கு எங்குத் தெரியும்? வினோ தன் மனம் கவர்ந்தவளை, தன் இதயத்தில் வீற்றிருக்கும் தன்னவளைப் பார்ப்பதற்கு ஒவ்வொரு நிமிடமும் தவியாய் தவித்துக் கொண்டிருப்பதும்,

ஆனால் அர்ஜூனின் அந்தஸ்திற்கு முன்னும், அவனின் அதிகாரத்திற்கு முன்னும் தங்களின் காதல் ஒரு செல்லாத காசாகத் தான் கருதப்படும் என்று கலங்கிக் கொணடிருப்பதும்....

தன் மனதில் பூத்திருக்கும் காதல் ஒரு வேளை அர்ஜூனிற்குத் தெரிய நேர்ந்தால் நிச்சயம் அவன் எதிர்ப்புப் பலமாக இருக்கும்... அவனின் கோபாவேஷத்தில் இப்பொழுது தான் அரும்பியிருக்கும்

COPYRIGHTED

https://drive.google.com/file

தன் காதல் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு விடுமோ என்று பயந்து தான் அவன் மஹாவின் அலை பேசி என்னைக் கூடத் திவ்யாவிடம் இருந்து வாங்கவில்லை என்பதும்...

ஏனெனில் அர்ஜுன் ஊருக்கு வந்த பொழுது அவன் வினோத்தின் வாகனத்தைப் பார்த்த பார்வையும், அதைத் தொடர்ந்து தன் காரை செலுத்த முடியாது என்று தன் காரில் ஏறச் சொன்னதும் வினோத்திற்கு உரைக்க வைத்தது...

தங்கள் வீட்டு இளவரசியை அவன் நிச்சயம் தன்னைப் போல் ஒரு ஏழையின் கரங்களில் ஒப்படைக்கவே மாட்டான் என்று...

காரில் இருந்த மூவரும் ஒவ்வொரு மனநிலையில் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் திகைப்பையும் கர்வத்தையும் சுமந்து கொண்டு வர, வீட்டிற்கு நுழைந்தவர்களை அதிசயத்தோடு பார்த்த ஸ்ரீ..

"நீ எங்க இவங்களைப் பார்த்த அர்ஜூன்?" என்று கேட்க,

அர்ஜூன் பதில் சொல்வதற்குள் ஓடிச் சென்று தன் அன்னையை இறுக்க அணைத்துக் கொண்ட மஹா....

"என்ன மாம்? எவ்வளவு பெரிய விஷயத்தை இப்படி மறைச்சிட்டீங்களே???" என்றாள்...

COPYRIGHTED

11:05 PM 59%

https://drive.google.com/file

மஹாவின் சந்தோஷ அலறல் திவ்யாவிற்குக் கூச்சத்தையே கொடுக்க அர்ஜுனோடு சேர்ந்து வீட்டிற்குள் நுழைந்தவள் தன்னையும் அறியாமல் அவனுக்குப் பின்னால் மறைந்து கொள்ள,

வரும் வழியில் திவ்யா மஹாவிடம் சொல்வதைப் போல் அர்ஜூனிடம் தானும் ஸ்ரீயும் காலையில் மருத்துவமனை போனது, பின் பரிசோதனை செய்தது என்று அனைத்தையும் கூறி இருந்தாலும்....

காலையிலேயே தெரிந்த இந்த இனிப்பான செய்தியை திவ்யா ஏன் இத்தனை நேரம் தன்னிடம் இருந்து மறைத்திருந்தாள் என்ற அர்ஜூனின் குழப்பத்திற்கு விடையளிக்கும் வகையில்...

"என்னங்க... நம்ம திவ்யா கன்ஸீவ் ஆகியிருக்கா.... இன்னைக்குக் காலையில தான் செக் பண்ணிட்டு வந்தோம்... அர்ஜூன் கிட்ட தான் முதல்ல சொல்லனும், அதுவும் அவன் வந்த பிறகு அவளே அவனிடம் நேரில் சொல்லனும்... அது வரைக்கும் யாருக்கிட்டேயும் சொல்லாதீங்கன்னு சொல்லியிருந்தா... அதனால் தான் நான் உங்கக்கிட்ட கூடச் சொல்லலை" என்றார் கணவனிற்குப் பின் வெட்கப்பட்டு மறைந்து கொண்டிருக்கும் மருமகளைப் பார்த்தவாறே......

இப்பொழுது அர்ஜூனிற்குப் புரிந்து போனது தன் மனைவி ஏன் காலையிலேயே இந்த மகிழ்ச்சிகரமான விஷயத்தைத் தன்னிடம் தெரிவிக்கவில்லை என்று...

COPYRIGHTED

59% 11:05 PM
https://drive.google.com/file

தன் பின்னால் தன் முதுகினை பிடித்தவாறு மறைந்து நிற்கும் அழகு மனைவியைத் திரும்பி பாத்தவன் தன் வலதுக் கரத்தைக் கொண்டு அவளைத் தன்னருகில் இழுக்க, அவனின் செய்கையில் மேலும் நாணம் அடைந்தவள் அவனை நிமிர்ந்து பார்க்க, பார்வையாலே தன்னை விழுங்கி விடுவது போல் பார்த்திருக்கும் கணவனைக் கண்டவள் சட்டென்று ஓடி தன் மாமியாரின் அருகில் நின்றுக் கொண்டாள்...

அந்த இல்லமே மகிழ்ச்சியில் திளைத்திருந்தது....

திவ்யாவின் அருகில் வந்த பாலா அவளின் தலையைக் கோதிவிட்டவர்,

"ரொம்பச் சந்தோஷமா இருக்கும்மா" என்று கனிவுடன் கூற,

அவளின் கையைக் குலுக்கிய அருண் "கங்கிராட்ஸ் அண்ணி" என்றான்...

இவர்களின் மகிழ்ச்சியைப் பார்த்த அர்ஜூனின் உள்ளம் பெருமையாலும் சந்தோஷத்தாலும் திணறிக் கொண்டிருந்தாலும் ஒருவரும் தன்னைக் கவனியாததைக் கண்டவன் அருணின் பக்கம் திரும்பி சிறு புன் முறுவலுடன்...

"ஸோ கங்கிராட்ஸ் எல்லாம் உன் அண்ணிக்கு மட்டும் தானா?" என்றான்...

COPYRIGHTED

11:05 PM
https://drive.google.com/file

முதல் முறையாகத் தன் மனம் விட்டு பேசும் அண்ணனைக் கண்டவன் மனமெல்லாம் பூரிப்புடன் அவன் அருகில் வந்து அவனைக் கட்டி அணைத்துக் கொண்டவன்...

"இரண்டு பேருக்கும் தான் அண்ணா" என்றான்...

அந்த வீட்டின் குட்டி வாரிசை, அடுத்தத் தலைமுறையின் முதல் கொளுந்தை ஆர்ப்பாட்டமாக வரவேற்க அந்த வீட்டில் இருந்த அனைவரும் ஆத்மார்த்தமாகத் தயாராகிவிட்டிருந்தனர்....

ஆனால் ஒருவரும் எதிர்பார்க்காத வகையில் தங்களின் வாரிசு இந்தப் பூவுலகில் தோன்றப் போகும் நாளில் தன் மனைவியின் கதறலைக் கேட்க தான் அருகில் இருக்கப் போவதில்லை என்று அர்ஜூனிற்கோ அல்லது தங்களின் குலக் கொளுந்து பிறக்கப் போகும் நேரத்தில் தங்கள் வீட்டு மருமகள் உயிர் போகும் வலியில் தனித்துத் துடித்து இருப்பாள் என்று மற்றவகளுக்கோ இல்லை இதற்கெல்லாம் காரணம் தான் தன் குடும்பத்திடம் இருந்த மறைத்த அந்த ஒற்றை விஷயமே என்று மஹாவிற்கோ தெரிந்திருந்தாலோ பின்னாளில் நடக்க இருக்கும் அசம்பாவிதத்தைத் தடுத்து இருக்கலாமோ?????

"திவ்யா, நீ உங்க அம்மா அப்பாக்கிட்ட ஃபோன் செய்து சொல்லுமா.." என்று ஸ்ரீ சொல்ல,

"இல்லத்த.... நீங்களே சொல்லுங்க" என்றாள்.

COPYRIGHTED

11:06 PM
https://drive.google.com/file

சோபாவில் அமர்ந்த ஸ்ரீ கலாவின் அலை பேசிக்கு அழைக்க, அவர்களின் எதிரில் அர்ஜூன் அமர, ஸ்ரீயின் அருகிலேயே அமர்ந்த திவ்யா மறந்தும் தன் கணவனை ஏறெடுத்து பார்க்கவில்லை...

ஸ்ரீயின் அழைப்பை எடுத்த கலாவிடம் நலம் விசாரித்தவர் பின் அந்த மகிழ்ச்சிகரமான விஷயத்தைச் சொல்ல துவங்கினார்.....

"கலா, நாம் இரண்டு பேரும் பாட்டி ஆகப் போறோம் டீ..."

ஸ்ரீயின் கூற்றில் மகிழ்ச்சியில் உறைந்துப் போன கலாவிற்குச் சந்தோஷ மிகுதியால் கண்களில் நீரே வந்துவிட...

"நிஜமாவாடி... ஸ்ரீ என்னால சந்தோஷத்தில பேசவே முடியலைடி... டாக்டரிடம் போனீங்களா?"

"ஆமாம் கலா.... காலையில் நானும் திவ்யாவும் ரெண்டு பேரும் தான் போனோம்... ஏழு வாரம்னு சொன்னாங்க கலா"

"ஸ்ரீ... நான் திவ்யாக்கிட்ட பேசனும்... கொஞ்சம் அவகிட்ட ஃபோன கொடுக்கிறியா?"

சரி என்றவர் திவ்யாவிடம் தொலை பேசியைக் கொடுக்க...

கருத்தரித்திருக்கும் தங்களின் செல்ல மகளை இந்த நிமிடமே பார்க்க வேண்டும் என்று ஆர்வம் மேலிட.....

COPYRIGHTED

"திவ்யா, ரொம்பச் சந்தோஷமா இருக்கும்மா.... எனக்கு இப்போவே உன்ன பார்க்கனும்னு போல இருக்கு" என்றார் கலா...

ஸோ:.பாவில் தன் எதிரே தன் அன்னைக்கு அருகில் ஒண்டிக் கொண்டு அமர்ந்திருக்கும் தன் மனைவியின் முகத்தில் தெரிந்த சந்தோஷத்தையும் பூரிப்பையும், அங்கு இருந்த அனைவரும் அவளையே பார்த்திருப்பதை உணர்ந்து அவளின் முகித்தில் படர்ந்திருந்த வெட்கத்தையும் கண்ட அர்ஜூனிற்கு அவளைத் தனிமையில் தங்கள் அறையில் எப்பொழுதடா சந்திப்போம் என்று இருந்தது...

சிரிப்பும் கலகலப்புமாக நேரம் செல்ல மதியம் வேறு அவன் உணவு அருந்தாததில் பசியில் உயிர் போகத் தன் அன்னையைப் பார்த்தவன்...

"மாம்... டின்னர் ரெடியா... லஞ்ச் வேற சாப்பிடலை" என்று கூறி முடிக்கும் முன்னரே வெடுக்கென்று எழுந்த மருமகளைப் பார்த்த ஸ்ரீ...

"என்ன திவ்யா... ஏன் இப்படி வெடுக்குனு எழுந்திரிக்கிற... இனி இந்த மாதிரியெல்லாம் செய்யக் கூடாது" என்று பரிவுடன் கூற...

தன் கணவனின் களைத்த முகத்தைப் பார்த்தவள்...

"இல்லைத்தா... அவங்க மதியம் சாப்பிடலைன்னு சொன்னாங்களே.... அது தான் சாப்பாடு எடுத்து வைக்கலாம்னு" என்று அவள் கூறியதில் தன் குழந்தைக்குத் தாயாகும் முன்னரே

COPYRIGHTED

தனக்குத் தாயாக மாறியிருந்த தன் மனையாளை நினைத்து அர்ஜூனின் மனம் சிலிர்த்தது...

அவளுடன் எழுந்தவன் டைனிங் டேபிளை நோக்கி நடக்கத் துவங்க அவனைப் பின் தொடர்ந்தவள் அவன் அமர்ந்ததும் சமையல் அறையில் இருந்து உணவு பதார்த்தங்களை எடுத்து வந்து பரிமாறத் துவங்க அவளின் கரம் பற்றியவன் பின் திரும்பி தங்களை ஒருவரும் கவனிக்கவில்லை என்பதை அறிந்து கொண்டு அவளின் பஞ்சு போன்ற கரத்தில் மென்மையாக முத்தமிட்டான்....

தன் கணவனின் முத்தத்தில் சிலிர்த்தவள் இனிமையாகப் புன் முறுவலிக்க,

"திவி... நீயும் உட்காரு... என் கூடச் சேர்ந்து சாப்பிடு" என்றான்....

"இல்ல.... நான் அத்தக்கூடச் சேர்ந்து சாப்பிடுறேன்... நீங்க சாப்பிடுங்க" என்றவுடன் விருட்டென்று எழப் போனவனின் கரத்தைப் பற்றி இழுத்தவள் அவனின் கோபம் புரிந்து...

"அப்பா, எதுக்கு இப்ப இவ்வளவு கோபம்?" என்றவாறே தானும் அவனுடன் அமர....

அவளுக்குத் தட்டை எடுத்து வைத்தவன் தானே முதல் முறை அவளுக்குப் பரிமாறினான்...

கணவன் மனைவி இருவரின் மனமும் நிறைந்திருந்தினாலோ என்னவோ உணவு சரியாக இறங்காமல் ஏனோதானோ என்று கொறித்துவிட்டு எழுந்தவன் அவளின் கரம் பற்றி...

"சீக்கிரம் ரூமிற்கு வா திவி" என்று விட்டு மாடி ஏறினான்...

சரி என்று தலை அசைத்தவள் மற்றவர்களும் உணவு அருந்தி முடிக்கவும் தங்களின் அறைக்குச் செல்ல, தன்னவளுடனான தனிமையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கட்டிலில் படுத்திருந்த அர்ஜூன் அவளைக் கண்டவுடன் எழுந்து அவளை நோக்கி வந்தவன் இறுக்கக் கட்டி அணைத்து...

"திவி... எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?" என்றவனின் குரலில் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது.

கணவனின் அணைப்பிற்குள் அடங்கி இருந்தவளுக்குக் காலையில் மருத்துவர் தான் தாயாகப் போவதை உறுதி செய்யும் பொழுது வந்த சந்தோஷத்தை விட, தான் தந்தையாகப் போவதை அறிந்ததில் இருந்து என்றுமே உணர்வுகளை வெளிக்கொணறாத அர்ஜூன் இன்று தன்னையும் அறியாமல் வெளிப்படுத்திக் கொண்டிருந்த மகிழ்ச்சி அவளுக்குப் பேரின்பத்தைக் கொடுக்க, அவனின் நெஞ்சில் ஆழ புதைந்துக் கொண்டவளின் முகத்தைத் தன் ஒற்றை விரலால் தன்னை நோக்கி நிமிர்த்தியவன்....

"காலையிலேயே சொல்லியிருந்தா நானும் உங்க கூட டாக்டரிடம் வந்திருப்பேனே" என்று ஏக்கத்துடன் கூற.

59% 11:06 PM
https://drive.google.com/file

"இல்லங்க, எனக்குச் சரியா தெரியலை.... அதான் டாக்டர் உறுதியா சொன்னவுடனே சொல்லலாம்ன்னு அத்தக் கிட்ட சொல்லிட்டேன்" என்றாள்.

அவளின் கரம் பற்றி அழைத்துச் சென்று கட்டிலில் அமர்ந்தவன் அவளைத் தன் கால்களுக்கு இடையில் நிற்க வைத்து அவளின் மாராப்பு சேலையை விலக்கி அவளின் வயிற்றில் முகம் புதைக்க, அவனின் ஸ்பரிசத்தில், செய்கையில் சிலிர்த்தவள் அவனின் தலை முடியை கோத,

மென்மையாகத் தன்னவளின் வயிற்றில் முத்தமிட்டவன் தன் முகத்தை எடுக்காமலே..

"திவி ஏழு வாரம்ன்னு சொன்னா ஒரு வேளை அன்று பார்ட்டி முடிந்ததும் உன் கிட்ட என்னோட லவ்வ சொன்னேனே, அன்று தான் இருக்குமா? என்றான் குரலில் கிரக்கத்தையும் களிப்பையும் கூட்டி....

கணவனின் கேள்வியில் நாணத்தின் உச்சிக்கே சென்றவள் இது என்ன கேள்வி என்பது போல் பதில் சொல்லாது இருக்க, கேள்வி கேட்டவன் பதில் வராமல் போகவே நிமிர்ந்து அவளின் முகம் பார்க்க, அவளுக்குத் தான் அவனின் பார்வையில் வெட்கம் பிடுங்கி தின்றது...

அவன் தன்னை நிமிர்ந்து பார்க்கவும் கூச்சத்தில் அவனிடம் இருந்து அவள் விலக முற்பட அவளை இழுத்து தன் மேல் சரித்துக் கொண்டவனின் மனமெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்திருந்தது...

COPYRIGHTED

11:07 PM 59%
https://drive.google.com/file

அவனின் மேல் சாய்ந்திருந்தவளை மெல்ல தூக்கியவன் கட்டிலில் படுக்க வைத்து அவளை இறுக்கி அணைத்துக் கொண்டு...

"டுடேய் இஸ் தி மோஸ்ட் ஹாப்பியஸ்ட் டே இன் மை லை:.ப் திவி [Today is the most happiest day in my life Dhivi]" என்றான்...

எந்த ஒரு ஆண்மகனுக்கும் தான் தந்தையாகப் போவது ஆணாக ஒரு கர்வத்தைக் கொடுக்கும்...

சில சமயங்களில் தோன்றும் கர்வமும் பெருமை தான்...

மீண்டும் அவளின் வயிற்றில் கை வைத்தவன்...

"வேற என்ன சொன்னாங்க டாக்டர்?" என்றான்...

"கார்ல வரும் போது சொன்னேனே அதான்.... மத்த படி செக்கப் வருவது பத்தி சொன்னாங்க" என்றவளுக்கு அவன் என்ன கேட்க வருகிறான் என்று புரியவில்லை...

"இல்ல, வேற ஏதாவது சொன்னாங்களா?" என்று மீண்டும் கேட்க,

அவனை நிமிர்ந்து பார்த்து "ஙே" என்று திருதிருவென்று விழித்தவளைக் கண்டவன் புன் சிரிப்புடன்...

59% 11:07 PM
https://drive.google.com/file

"ம்ம்ம், ஒரு சின்னப் பொண்ண என் கழுத்தில் கட்டி வச்சு படுத்திறாங்கப்பா" என்றவன்,

அவளின் வயிற்றில் வைத்த தன் கையை மேலும் முன்னேற்ற கணவனின் அத்து மீறலை உணர்ந்தவளின் உணர்வுகளும் தாபத்தில் சிலிர்த்து எழ ஏற்கனவே அவன் மேல் படுத்திருந்தவள் மேலும் அவனுடன் ஒன்ற...

"இதத் தாண்டி கேட்டேன்...." என்றான் தவிப்புடனும் இளம் மனைவியின் அருகாமை தந்த கிளர்ச்சியுடனும்...

இப்பொழுது கணவனின் கேள்வியின் அர்த்தம் புரிந்தவளாக நாணத்துடன் அவனைப் பார்த்தவாறே...

"தெரியலைங்க, டாக்டர் ஒன்னும் சொல்லலையே.. ஒரு வேளை அத்தைக் கிட்ட எதுவும் சொல்லியிருப்பாங்களோ" என்று குழந்தைத் தனமாகக் கேட்ட தன் மனையாளைக் கண்டு புன்னகைத்தவன் அவளைத் தன் கை வளைவுக்குள் கொண்டு வந்து...

"சரி, நீ தூங்கு" என்றான்.

அவனின் அணைப்பைத் தேடி அவனுடன் ஒண்டிக் கொண்டிருந்தவளுக்கு அவன் தூங்கச் சொல்லவும் ஏமாற்றமும் பரிதவிப்பும் போட்டிபோட சில நிமிடங்கள் வரை அமைதியாகப் படுத்திருந்தவள் மேலும் பொறுக்க முடியாமல் சன்னமான குரலில்...

COPYRIGHTED

59% 11:07 PM
https://drive.google.com/file

"எனக்குத் தூக்கம் வரலையே" எனக் கூற...

மனைவியின் ஏக்கமும் எதிர்பார்ப்பும் புரிந்திருந்தவன் அவளின் முகத்தை நிமிர்த்தி...

"திவி... இது நமக்கு ஃபர்ஸ்ட் டைம் ப்ரெக்னன்ஸி... முதல்ல நான் எப்படி உன் கிட்ட நடந்துக்கனும், உன்னை எப்படிப் பார்த்துக்கனும் அப்படின்னு எனக்குத் தெரியனும்... அதுக்கு நான் நாளைக்கே டாக்டர் ஆன்டிக்கு கால் பண்ணி விசாரிச்சுக்கிறேன்... அப்புறம் பார்க்கலாம்" என்று சொன்னவன்,

அவளை மேலும் இறுக்கி அணைத்துக் கொண்டு கண்களை மூட,

தன் மேல் தன் கணவனுக்கு இருந்த கரிசனத்தில் விழிகளில் கண்ணீர் துளிகள் பனிக்க, அவன் முகத்தை நோக்கி எம்பியவள் முதன் முறை தானாகத் தன்னவனின் இதழ்களில் மென்மையாக முத்தம் பதித்தாள்....

தன்னவளின் முதல் இதழொற்றலில் சிலிர்த்தவனின் உடல் உணர்ச்சிகளின் பிரவாகத்தால் துடிக்க, தாபத்தைத் தட்டி எழுப்பும் தன் மனையாளின் எழில் முகத்தைத் தன் கரங்களில் ஏந்தியவன் மென் குரலில்....

"ப்ளீஸ்டி, என்ன ரொம்பச் சோதிக்காதடி" என்றான்...

COPYRIGHTED

அப்பொழுது தான் தான் செய்த செயலை உணர்ந்தவள் சட்டென முகம் சிவக்க அவனை விட்டு விலகப் போக, அவளைத் தன் பக்கம் இழுத்தவன் அவளை மூச்சு முட்ட இறுகக் கட்டி பிடித்துப் பின் விடுவிக்க மனமில்லாமல் விடுவித்துத் தூங்க சொன்னவன் அவளைத் தன் கையணைப்பிலேயே வைத்துக் கொண்டு சடுதியில் தூங்கிப் போனான்.

கணவனின் அரவணைப்பில் படுத்து இருந்தவளுக்கு ஏனோ சந்தோஷத்தில் உறக்கம் வரவில்லை...

அவனின் இடது கையை எடுத்து தன் வயிற்றில் வைத்துக் கொண்டு இன்னும் அவனை நெருங்கி படுத்தவளின் மனம் முழுக்க வரப் போகும் அந்தக் குட்டி பொக்கிஷத்தின் நினைவிலேயே இருந்தது... மனம் மகிழ்ச்சியில் நிரம்பி வழிந்தது...

மலரினும் மெல்லியவள்!!

தொடரும்!

COPYRIGHTED

11:08 PM

https://drive.google.com/file

மலரினும் மெல்லியவள்!

பாகம் - 28

திவ்யாவிடம் இருந்து வந்த சந்தோஷ செய்தியை கேட்டு கிட்டத்தட்ட இரண்டு வாரங்களிற்கும் மேல் ஆக ஒரு அன்னையாகத் தன் மகளைக் காணாமல் கலாவிற்குக் கடலூரில் இருப்பு கொள்ளவில்லை...

தன் கணவனையும் வினோத்தையும் நச்சரித்து ஒரு வழியாக ஒரு விடியற்காலை கடலூரில் இருந்து சென்னை வரும் "சென்னை எக்ஸ்ப்ரெசில்" பயணிக்க, ரயிலில் ஏறியதில் இருந்து வழி எல்லாம் தங்கள் மகளின் வளைகாப்பு, பேறு காலம், என்ன குழந்தை என்பது பற்றியே கலா பேசி வர,

பெற்றோர்களின் மனம் மகிழ்ச்சியில் பூரித்திருந்தாலும் வினோத்திற்கோ எண்ணங்கள் வேறு விதத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தது...

ஒரு பக்கம் தன் செல்லத் தங்கை தாயாகப் போவதை நினைத்து மகிழ்ந்திருந்தாலும் மறு பக்கம் தன்னவளைப் காணப் போகிறோம் என்று உள்ளம் சந்தோஷத்தில் நிறைந்து வழிந்திருந்தாலும், தான் செய்த தவறினால் கோபம் கொண்டிருந்தவளின் மனதைப் பற்றி இன்னமும் முழுமையாக அறிய முடியாமல் குழம்பிப் போய் இருக்க,

ஒரு வேளை அவள் தன் காதலை நிராகரித்துவிட்டால் என்ற பயம் வேறு உள்ளத்தைக் கவ்வி இருக்க, வெவ்வேறு உணர்வுகளின் பிடியில் ஆழ்ந்திருந்தவனுக்குச் சென்னைக்கு வந்து சேர்ந்ததே தெரியவில்லை...

COPYRIGHTED

58% 11:08 PM
https://drive.google.com/file

ரயில் நிலையத்தில் தங்களுக்காகக் காத்திருந்த ட்ரைவர் முருகனைக் கண்டவர்கள் ஓட்டமும் நடையுமாகக் காரை நோக்கி நடக்க, அவர்களின் அவசரம் புரிந்த முருகனும் விரைவாகக் காரை செலுத்த, வீட்டை அடைந்தவர்களை வரவேற்ற

ஸ்ரீ திவ்யாவை அழைக்கவும், தன் அறையில் இருந்தவளுக்குத் தன் மாமியாரின் குரல் கேட்டதும் கீழே பார்த்தவளின் முகம் தன் அன்னையையும், தந்தையையும், தமையனையும் பார்த்ததில் மகிழ்ச்சியில் ஆழ ...

அவர்களைக் கண்ட சந்தோஷத்தில் மாடிப் படிகளில் வேகமாக இறங்கி வந்து கொண்டிருந்தவளின் நடையைத் தடுத்து நிறுத்தியது அவள் கணவனின் குரல்....

"திவ்யா, உனக்கு எத்தனை தடவை சொல்றது... கேட்க மாட்டியா? எதுக்கு இப்ப இவ்வளவு வேகமா படி இறங்கற" என்று கத்தினான் அர்ஜூன்...

அவனின் சத்தத்தைக் கேட்டு திரும்பிப் பார்த்த திவ்யாவிற்கு அப்பொழுது தான் தெரிந்தது அவன் அவளைப் பின் தொடர்ந்து வந்தது...

"ஸாரிங்க" என்றவள் தன் அன்னையிடம் சென்று அவரைக் கட்டி அணைத்துக் கொள்ள, அவளின் நெற்றியில் முத்தமிட்டவர்...

"மாப்பிள்ளை சொல்றாரு இல்ல திவ்யா... இந்த மாதிரி சமயத்தில் இப்படி வேகமாக ஓடி வரவோ, மாடி படியில் இப்படி வேகமாக ஏறவோ இறங்க கூடாது" என்றவர்...

COPYRIGHTED

11:08 PM
https://drive.google.com/file

"டாக்டர் என்ன சொன்னாங்க திவ்யா?" என்று விசாரிக்க ஆரம்பித்தார்..

சிவ சுப்ரமணியத்திற்கோ தன் மகளே ஒரு குழந்தை, அவளுக்கு ஒரு குழந்தையா என்று இருக்க இவர்களின் பின்னரே வீட்டிற்குள் நுழைந்திருந்த வினோத்தின் கண்கள் தன் செல்ல தங்கையைக் கண்டதும் பூரிப்பில் வியந்தது...

அத்தனை அழகா இருந்தாள் திவ்யா...

கர்ப்பம் தரித்திருந்ததை அறிந்த நாளில் இருந்து கணவனின் காதல் மழையின் வேகம் அதிகரித்தத்தினாலோ அல்லது அவனின் வாரிசை தான் சுமந்திருப்பதை நினைத்து உள்ளம் முழுவதும் பெருமை உணர்ச்சியினால் நிறைந்திருந்ததினாலேயோ, அவளின் முக அழகும் பல மடங்கு அதிகரித்து இருந்தது...

அவளை நெருங்கியவன் அவளின் கரம் பற்றி, தன் கரங்களுக்குள் வைத்துக் கொண்டு..

"திவ்யா.... அம்மா சொன்னதில் இருந்து உன்னைப் பார்க்கனும் போல் இருந்துச்சு... ரொம்பச் சந்தோஷமா இருக்கு திவ்யா" என்று மனதார சொல்ல, தன் அண்ணனைப் பார்த்தவளுக்குக் கணவனின் கொடிய வார்த்தைகளால் மனமுடைந்து தன்னந்தனியே தன் வீட்டிற்குத் திரும்பிச் சென்ற அன்று அவன் நெஞ்சில் புதைந்து கதறி அழுதது நினைவிற்கு வந்தது...

அன்றில் இருந்து இன்றைய நாள் வரை தன் வாழ்வில் எத்தனை எத்தனை மாற்றங்கள்...

COPYRIGHTED

11:08 PM
https://drive.google.com/file

ஒவ்வொரு நிமிடமும் காதலில், அரவணைப்பில் திக்குமுக்காடச் செய்யும் கணவன், பகல் நேரங்களில் தன் உள்ளம் மலரச் செய்யும் வகையில் தன்னை அக்கரையுடன் கவனித்துக் கொள்வதில் பிரமிக்க வைக்கிறான் என்றால் இரவு நேரங்களில் தன் மனையாளிடம் தன்னை இழக்கும் வேளையில், உணர்ச்சிகளின் பிடியில் அவனின் ஒவ்வொரு அணுவும் சிக்கி இருந்தாலும், உணர்ச்சிகளின் பெருக்கால் கொந்தளிப்பால் தன்னவளே தடுமாறி சில சமயங்களில் தன் கணவனின் மென்மையற்ற தாம்பத்தியத்தை எதிர்பார்த்திருந்தாலும், அவளின் தற்போதைய உடல் நிலையைக் கருத்தில் கொண்டு, தங்களின் மகவை மனதில் நிறுத்தி, உணர்ச்சி பெருக்கால் அதிகமாக எல்லையைத் தொட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் கூடத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு கூடலில் மென்மையிலும் மென்மையாக அவளைக் கையாள்வதும் என்று தன் மனைவியை அவன் மெய் சிலிர்க்க வைத்திருந்தான்...

தங்கையின் மகிழ்ச்சியில் தானும் பங்கு கொண்ட வினோத், அர்ஜூனிடம் வாழ்த்துக்களைத் தெரிவித்துச் சில நிமிடங்கள் மற்ற விஷயங்கள் பேசிவிட்டுச் சுற்றம் பார்க்க, அவன் கண்கள் தன்னவளை தேடித் தேடி சளைத்துப் போக...

"நாங்க எல்லாரும் வருவது தெரிஞ்சும் என்னைப் பார்க்கும் ஆர்வம் இருந்திருந்தால் நிச்சயம் அந்த ரௌடி ஏதாவது சாக்கு போக்கு சொல்லி எனக்காகக் கல்லூரிக்கு மட்டம் அடிச்சு வீட்டில் இருந்திருப்பாள்... ஒரு வேளை அவளுக்கு என் மேல் இன்னும் கோபம் போகவில்லையோ?" என்று நினைத்தவன் கவலையுடன் அவள் வரும் நேரத்தை எதிர்ப்பார்த்திருந்தான்...

கலாவும் அவர் வீட்டினரும் வருவதாக ஸ்ரீ அனைவருக்கும் தெரியப் படுத்தியிருக்கத் தன்னவனைப் பார்க்க போகிறோம் என்ற ஆசை மஹாவிற்கு இருந்தாலும், அவளிடம் அவன் நடந்து கொண்ட விதம் இன்னும் மனதில் உள்ள கோபத்தை முற்றும் அழிக்கவில்லை...

COPYRIGHTED

கல்லூரியை மட்டம் போடுவது என்பது அவளுக்கு ஒன்றும் புதிதில்லை என்றாலும் தன்னைத் தேடி அவன் களைத்து போக வேண்டும், அப்பொழுது அவனுக்கு முன் தான் வந்து நிற்க வேண்டும்... அந்த நிமிடம் அவனின் கண்களில்

தெரியும் காதலை இரசிக்க வேண்டும் என்று எண்ணியவள் மாலை நேரம் வரை வீட்டிற்கு வரவில்லை.

ஸ்ரீயின் குடும்பத்தினரும், கலாவின் குடும்பத்தினரும் ஹாலில் அமர்ந்துப் பேசிக் கொண்டிருக்க மஹாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துத் தவித்துச் சலித்துப் போயிருந்த வினோத்தின் முகம் இருளைடைந்த அறையில் விளக்கைப் போட்டதும் சட்டென்று வெளிச்சம் பரவியது போல் பளிரென்று மாறியது அவனின் அழகான ராட்சஷியின் தரிசனத்தில்...

வந்தவள் அனைவரையும் வரவேற்றுவிட்டு அவர்களுடன் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, ஆனால் தன் எதிரில் டண் டண்ணாகக் காதலையும், அதே சமயத்தில் அவளின் புறக்கணிப்பால் வந்த அச்சத்தையும் தேக்கி வைத்து தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த தன் மனம் கவர்ந்தவனைக் கண்டும் காணாதது போல் அமர்ந்திருந்தவளைப் பார்த்த வினோத்திற்கு மனம் குமுற துவங்கியது....

"ஒரு வேளை அவள் உன்மையில் தன்னை நேசிக்கவில்லையோ? நான் தான் தப்புக் கணக்கு போட்டுவிட்டு என் மனசில் நிறைவேராத ஆசையை வீனாக வளர்த்துக் கொண்டேனோ? கண்ணெதிரே இருந்தும் தான் ஒருவன் அங்கு இருப்பது

போல் அவள் கொஞ்சம் கூடக் காட்டிக் கொள்ளவில்லையே" என்று யோசித்துக் கொண்டிருந்தவனுக்கு மனதில் சுருக்கென்று ஒரு வலி தோன்றியது போல் இருக்க....

அதற்கு மேல் அங்கு அமர்ந்திருக்கப் பிடிக்காமல் ஸோஃபாவில் இருந்து எழுந்தவன் அவர்கள் தங்கியிருந்த அறைக்குச் சென்று கதவை வேகமாகச் சாத்தினான்.

ஹாலில் அமர்ந்து இன்னமும் மற்றவர்களுடன் பேசிக் கொண்டிருந்தவளுக்கு அவனின் கோபமும் ஆங்காரமும் கொஞ்சம் அச்சத்தையே கொடுத்திருந்தாலும், அவனை விட்டுப் பிடிக்க நினைத்தவளுக்கு அவனின் ஆத்திரத்திலும் ஒரு சின்ன மகிழ்ச்சியே தெரிந்தது...

ஏனேனில் இத்தனை நாட்கள் அவன் தன்னை அழைக்காததையும், ஒரு குறுந்தகவல் கூட அனுப்பாததையும் கண்டு ஒரு வேளை அவன் தன் செயலால் தன்னை வெறுத்துவிட்டானோ என்று பயந்திருந்தவளுக்கு இன்று அவனின் செய்கை

நிம்மதியையும், பெருமையையுமே கொடுத்தது...

அங்கு அறைக்குள் சென்று கட்டிலில் அமர்ந்த வினோத்திற்கோ மனம் ஒரு நிலையில் இல்லை...

என்ன தான் மஹா தன்னைத் திரும்பியும் பார்க்கவில்லை என்றாலும், அவள் தன்னை ஒதுக்குவது போல் தோன்றினாலும் மனம் என்னவோ அவளையே சுற்றி வர எதற்கும் ஊருக்கு திரும்பி செல்வதற்குள் அவளிடம் மீண்டும் ஒரு முறை மன்னிப்புக் கேட்டுவிட்டு அவள் மனதில் தன்னைப் பற்றி இருக்கும் அபிப்ராயங்களைத் தெரிந்துக்

11:09 PM
https://drive.google.com/file

கொண்டுவிடுவது நல்லது என்று நினைத்திருந்த வினோத் இரவு உணவு அருந்த அனைவருடன் சேர்ந்து தானும் டைனிங் டேபிளில் அமர,

மஹாவை எதிர்பார்த்துக் காத்திருந்தவனுக்குத் திக்கென்று இருந்தது தன் அருகில் இருந்த சேரில் அர்ஜூன் அமரவும்...

அவனிடம் குடிக் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச தைரியமும் ஒட்டு மொத்தமாக அவனை விட்டுத் தூரம் செல்ல உள்ளுக்குள் உதறலெடுக்கத் துவங்க, ஒயிலாக நடந்து வந்து தன் தந்தைக்கு அருகில் அமர்ந்த மஹாவை அவள் வந்தது தெரிந்தும் அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான் இல்லை...

அனைவரும் அமர்ந்ததும் பரிமாறத் துவங்கிய திவ்யாவின் கை பிடித்துத் தன் அருகே அமரச் செய்த அர்ஜூன்,

"அதான் பரிமாற இத்தனை பேர் இருக்காங்கல்ல.. நீ உட்கார்ந்து சாப்பிடு" என்றான்...

"இல்லைங்க நானும்...." என்று இழுத்த படியே அவள் எழ, திவ்யாவின் அருகில் நின்றிருந்த கலா,

"நீ உட்காரு திவ்யா... நான் பரிமாறுகிறேன்" என்றார்...

அவளை நிமிர்ந்து பார்த்த அர்ஜூன் "இப்போ உட்காறியா?" என்று கேட்க, வேறு வழியில்லாமல் அவனுக்கு அருகில் அமர்ந்தவள் உண்ண துவங்க, தங்களின் மகள் மேல் மருமகன் கொண்டிருக்கும் அக்கறையைப் பார்த்த கலாவிற்கும் சிவசுப்ரமணியத்திற்கும் மனம் நிம்மதியில் திளைத்தது...

COPYRIGHTED

11:09 PM
https://drive.google.com/file

அங்கு அமர்ந்திருந்த அனைவருடைய முகத்திலும் மகிழ்ச்சியின் களைத் தாண்டவமாடியது.... ஒருவனைத் தவிர...

தன் தந்தைக்கு அருகில் அமர்ந்து உணவு அருந்த ஆரம்பித்தவள் சகஜமாகக் கலாவிடமும் திவ்யாவிடமும் பேசிக் கொண்டே சாப்பிட...

"இருடி.... இருக்குடி உனக்கு..... பார்த்தும் பார்க்காதது மாதிரியா நடந்திக்கிற..." என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவன் ஒரு வழியாக ஏதோ பெயருக்கு உணாவு அருந்திவிட்டு ஹாலில் சென்று டிவி பார்க்க ஆரம்பித்தான்...

அவனின் பார்வை, கோபத்தில் மாறிய முகம், சரியாக உண்ணாமல் வேகமாக எழுந்த விதம் என்று அவனின் ஒவ்வொரு செயற்களையும் கவனித்து வந்தவளுக்குத் தான் அவனை ரொம்பச் சீண்டுகிறோமோ என்று இருந்தது...

அண்ணனுக்குத் தப்பாத தங்கை...

ஒரு வழியாக அனைவரும் உணவு அருந்திவிட்டு அவரவர் அறைகளுக்குச் செல்ல, தன் மனையாளை எதிர்பார்த்திருந்த அர்ஜூனிற்கு அவள் இப்பொழுதைக்கு வருவது போல் தெரியாததால் தன் அறையை விட்டு வெளியே வந்தவன்

"திவ்யா" என்று சிறிது சத்தமாகவே அழைக்க,

தன் அன்னையுடன் அமர்ந்து அவர்களின் அறையில் பேசிக் கொண்டிருந்தவளுக்குத் தன் கணவன் தன்னைச் சத்தமாக அழைத்தது

11:09 PM 58%
https://drive.google.com/file

சிறிதே அதிர்ச்சியைக் கொடுக்கவும் விருட்டென்று எழுந்தவள் திரும்பி தன் அன்னையின் முகத்தைப் பார்க்க...

"நீ போம்மா, நாளைக்குப் பேசிக்கலாம்" என்று அவர் அமைதிப் படுத்தவும் வேகமாக அடிகள் எடுத்து வைத்து மாடி ஏற..

அவளின் வேகத்தைத் தங்களின் அறை வாயிலில் இருந்து பார்த்துச் சலித்துக் கொண்டவன்..

"ம்ப்ச்... மெதுவா..." என்றபடியே தங்கள் அறைக்குள் நுழைந்தான்...

திவ்யாவிடம் அவளின் கர்ப்பத்தைப் பற்றியும், பரிசோதனைகளைப் பற்றியும் கலா பேசிக் கொண்டிருந்ததால் கணவனிடம் சொல்லாமல் மணி இரவு பதினொன்றைத் தாண்டியும் தங்களின் அறைக்குத் திரும்பாமல் கீழேயே தங்கிவிட்டதால்,

தன்னை எதிர்பார்த்து ஏமாந்துப் போகவும் தான் அவனுக்கு இந்தக் கோபம் என்பதை அறிந்தவள் "கொஞ்ச நேரம் எங்க அம்மா அப்பாக்கிட்ட பேசிட்டு இருந்தா அதுக்குள்ள இவ்வளவு கோபம்" என்று சன்னமான குரலில் வாய்விட்டு கூறியவள் தங்களின் அறைக்குள் நுழைந்து கதவை சாத்த...

கட்டிலில் படுத்து தன்னையே பார்த்திருந்த கணவனின் முகத்தில் ஏனோ ஒரு பரிதவிப்பு தெரிவது போல் இருந்தது...

"என்ன? உங்க அம்மா அப்பாவைப் பார்த்ததும் ஹஸ்பண்ட் ஞாபகமே இல்லை போலருக்கு??" என்றவனின் கோபத்தைக் கண்டு மனம் கனிந்தவள் சிறு புன்னகையுடன் அவன் அருகில் அமர்ந்து....

COPYRIGHTED

"இல்லங்க.... அப்படி எல்லாம் ஒன்னும் இல்லை... சும்மா தான் அம்மாக்கிட்ட பேசிட்டு இருந்தேன்" என்க,

வழக்கமாகக் காதலும் தாபமும் கோபமும் மட்டுமே நிறைந்திருக்கும் தன் கணவனின் பார்வையில் இன்று விவரிக்க முடியாத ஏக்கமும் எதிர்பார்ப்பும் வழிய,

அவன் தலை முடியைக் கோதியவாறே...

"என்னங்க? ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?" என்றவளைக் கூர்ந்து பார்த்தவன்...

"திவி... ஐ நோ உனக்கு உங்க அம்மாவைப் பார்த்ததும் சந்தோஷமா இருக்கும்... அவங்கக்கிட்ட உன் ப்ரெக்னென்ஸி பத்தி பேசனும்னு ஆசையா இருக்கும்... ஐ அண்டர்ஸ்டாண்ட்.... நீ அவங்க கூட டைம் ஸ்பெண்ட் பண்ண வேணாம்னு சொல்லலை..." என்றவன் சில நொடிகள் தயங்கி பின் தொடர்ந்தான்...

"நான் இங்க இல்லாத போது எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அவர்களுடன் ஸ்பெண்ட் பண்ணு... ஐ ஹாவ் நோ ப்ராப்ளம்.. [I have no problem]... நான் இங்க வீட்டில் இருக்கும் போது நீ என் கூடவே, என் பக்கத்திலேயே இருக்கனும்னு தோனுதுடி.... ப்ளீஸ்..." என்று தன்னவளின் விழிகளுக்குள் ஊடுவுறும் தன் ஏக்கம் வழியும் கண்களைக் கலக்க விட,

தன் கணவனின் தோள் சாய்ந்தவள், அவனின் அக்கரையில், "தனக்கு மட்டுமே அவள்" என்ற உரிமையில் கர்வம் கொண்டவளாய் மனம் சிலிர்த்தவள் அவனை நெருங்கிப் படுக்க, அவளின் மார்பின் மென்மையில் முகம் புதைத்தவனின் எதிர்ப்பார்ப்பையும் தேடலையும் ஒரு

11:10 PM
https://drive.google.com/file

மனைவியாகப் புரிந்துக் கொண்டவளுக்குத் தன்னை இறுக்கி பிடித்திருக்கும் அவனின் வலுவான கரங்களின் இறுக்கத்தில் அவனின் மனதில் ஓடும் எண்ணங்களும் புரிபட்டது...

அவனின் முகத்தைத் தன்னை நோக்கி நிமிர்த்தியவள்...

"இனி நான் எப்ப்ப்ப்ப்ப்பவும் உங்களோட தான் இருப்பேன்" என்று அழுத்தமாகக் கூறிய மனைவியின் வெள்ளை மனதில், "எப்பவும்" என்று சொல்லின் போது உதடுகளைக் குவித்து அழுத்தி சொன்ன விதத்தில் மதி மயங்கி புன்னகைத்தவன்,

மீண்டும் அவளின் மார்பில் ஆழ முகம் புதைக்க, கணவனின் ஸ்பரிசத்தில் என்றும் போல் மனம் லயித்தவள் கண் மூடி மோகனத்தில் ஆழ மார்புக் குழியில் துவங்கிய முத்தங்கள் அத்து மீறவும், தாங்க இயலாதவளாய் தன் கணவனை ஆரத்தழுவிக்கொண்டவளுக்குப் புரிந்தது...

தன் கணவனின் பரிதவிப்பும், கோபமும், தேடுதலும் என்னவள் எனக்கு மட்டுமே சொந்தம் என்ற உரிமையின் வெளிப்பாடே என்று....

ஆனால் அவள் வாயிலிருந்து உதிர்த்த "எப்பவும்" என்ற வார்த்தையில் இருந்த அழுத்தமும் உண்மையும் நிஜத்திலும் நிலைத்து நிற்குமா? என்ற கேள்விக்குக் காலம் என்ன விடை வைத்துக் காத்திருக்கிறது என்பதனைக் காலம் தான் சொல்ல வேண்டும்..

அங்குக் கீழே தனக்கு என்று ஒதுக்கப்பட்ட அறையில் படுத்திருந்த வினோத்திற்கோ தன்னவளின் ஒதுக்கமும், பாராமுகமும் அவளுக்குத் தன் மேல் இருந்த கோபத்தை மட்டும் விளக்கவில்லை... தன் மீது அவளுக்கு இருக்கும் அக்கறையின்மையையும் தானே தெளிவுப்படுத்தியது...

COPYRIGHTED

அவளின் இந்த ஒதுக்க, புறக்கணிப்பு தன் மீது இல்லாத காதலையும், தனக்குள் இருக்கும் தவிப்பு அவளுக்குள் துளி அளவு கூட இல்லை என்பதனைத் தானே வெளிப்படுத்திக் கொண்டிருந்தது என்ற சிந்தனையில் உழன்றுக் கொண்டிருந்தவனுக்குத் தூக்கம் எட்டாத தூரத்திற்குப் போய் இருந்தது...

"உணமையில் என்னை மறந்துவிட்டாளா? அல்லது மறந்தது போல் நடிக்கிறாளா? நான் இன்று வருகிறேன் என்று தெரிந்து இருந்தும் காலேஜில் இருந்து மிகவும் லேட்டாகத் தான் வந்தாள்... சரி அதற்குக் கூட வேறு காரணங்கள் இருந்திருக்கலாம்... ஆனால் அவள் வீட்டிற்கு வரும் பொழுது அனைவருடன் சேர்ந்து நானும் தானே ஹாலில் அமர்ந்திருந்தேன்... என் அம்மாவை அப்பாவைப் பார்த்து வாயெல்லாம் பல்லாகச் சிரித்தவள் மறந்துக் கூட என்னைத் திரும்பி பார்க்கவில்லையே?? அதன் பின்னரும் நான் ஒருவன் அங்கு இருப்பது போலவே காட்டிக்கொள்ளவும் இல்லையே.... சரி அட் லீஸ்ட் சாப்பிடும் பொழுதாவது என்னைப் பார்த்திருக்கலாமே.. ஒரு பார்வைக் கூடப் பார்க்காத அளவிற்கு என் மேல் கோபமா?..."

குழம்பித் தவித்தவனின் மனது இதற்கு விடைத் தெரியாமல் இந்த வீட்டில் இருந்து கிளம்பப் போவதில்லை என்று முடிவெடுக்க,

மறு நாள் காலையில் வீட்டில் உள்ள அனைவரும் தோட்டத்தில் அமர்ந்துப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு மஹாவைத் தேட, அழகிய பூந்தோட்டத்திற்கு நடுவில் ரோஜாப்பூச் செடிகளுக்கு இடையில் அன்று அலர்ந்த மலராக அமர்ந்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவளை கண்டவனின் இதயத்தில் அவனையும் அறியாமல் மீண்டும் காதல் துள்ளி துளிர்த்தெழுந்தது...

COPYRIGHTED

11:10 PM
https://drive.google.com/file

வினோ தங்களுக்கு இடையில் வந்து அமரவும், சட்டென்று எழுந்த மஹா வீட்டை நோக்கி நடக்கவும் ஒருவரும் தங்களைக் கவனியாததை உறுதிப் படுத்திக் கொண்டவன் அவளைப் பின் தொடற, அவள் அவர்கள் தங்கியிருந்த அறைக்கு அருகில் செல்லும் பொழுது வெடுக்கென்று அவளைத் தங்களின் அறைக்குள் இழுத்தவன், இழுத்த வேகத்தில் கதவையும் சாத்தினான்....

அவன் தன்னை இழுத்த வேகத்தையும், படீரென்று கதவை சாத்திய வேகத்தையும் கண்டவள் தன்னையும் அறியாமல் பயத்தில் "ஐயோ!" என்று அலற....

அவளின் அலறலில் திடுக்கிட்டவன் அவள் வாயை இறுகப் பொத்தியவாறு அவளை ஆழ்ந்துப் பார்க்க, பயத்தில் கண்களை அகல விரித்துத் தன்னைப் பார்த்திருப்பவளைக் கண்டவனுக்குத் தான் எடுத்திருந்த உறுதி சிறிது சிறிதாகக் குலைவது போல் இருந்தது...

ஏனெனில் அவளுக்குத் தன் மேல் காதல் இருக்கிறதா இல்லையா என்பதை மட்டுமே அவளிடம் பேச நினைத்தவனிற்கு அச்சத்தில் உறைந்து விழிகளில் திகிலை தேக்கி வைத்து தன் வாயை மூடியிருந்த அவனின் கரத்தில் மேல் தன் இரண்டு பஞ்சு கைகளையும் வைத்துக் கொண்டு தன்னைப் பார்த்திருக்கும் தன் அழகிய ராட்சசியைக் கண்டவனின் உணர்ச்சிகள் மீண்டும் கட்டவிழ்க்க, தன் மனதினை கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறியவனின் நிலையைக் கண்டவள் "ம்ம்ம் ம்ம்ம்" என்று பேச முயற்சிக்க,

தன்னிலை இழுத்துப் பிடித்துத் தன்னை வெகுவாகக் கட்டுப் படுத்திக் கொண்டவன் கிசுகிசுப்பான குரலில்...

11:10 PM
https://drive.google.com/file

"ஏண்டி இப்படிக் கத்துற? நான் உன்னை ஒன்னும் பண்ணமாட்டேன்... ஒரே ஒரு நிமிஷம் உன்கிட்ட பேசிட்டு போயிடுறேன்" என்றான் அவளின் வாயை மூடியிருந்த தன் கரத்தை மெல்ல எடுத்தவாறே....

அவன் கரத்தை தன் முகத்தில் இருந்து எடுத்ததைக் கூட உணராமல் பேயறைந்ததைப் போல் இருந்தவள் சில விநாடிகளில் தன்னிலைக்கு வந்து மெல்லிய குரலில்...

"வீட்டுல எல்லாரும் இருக்கிறாங்க... யார் கண்ணிலையாவது பட்டா என்ன நடக்கும்னு தெரியும்ல" என்றாள் இன்னும் அச்சம் விலகா முகத்துடன்....

"தெரியும்... ஆனால் உன் மனசில் என்ன இருக்குன்னு தெரியாம நான் அன்னைக்கு நடந்துக்கிட்டதுக்கு மன்னிப்பு கேட்கனும் தான் உன்னைத் தேடி வந்தேன்... வேற எதுக்கும் இல்லை" என்றான் தன் மனதில் அடங்காமல் தவித்துக் கொண்டிருக்கும் தன்னவளின் மேல் உள்ள காதலை மறைத்து...

ஏனெனில் நேற்றில் இருந்தே அவளின் செய்கைகள் அவளுக்குத் தன் மேல் காதல் இல்லை என்ற சந்தேகத்தைக் கிளறிவிட்டு இருந்தது.... இருந்தும் மனம் கேட்காமல் அவளிடம் நேரில் பேசித் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்ததினால் தான் அவன் அவளைப் பின் தொடர்ந்து வந்து தன் அறைக்குள் இழுத்தது...

ஆனால் தான் இழுத்ததும், அவள் சத்தம் போட்டுக் கத்தியது மட்டும் இல்லாமல் இதோ விழிகளில் நீர் கோர்த்து அஞ்சியவாறே தன்னைப் பார்த்துக் கொண்டு நிற்பவளைக் கண்டதும் அவனது சந்தேகம் நிவர்த்தியானது....

COPYRIGHTED

என் மேல் காதல் கொண்டு இருந்தால் நிச்சயம் இப்படிக் கத்தியிருக்கமாட்டாள்... இப்படிச் சத்தமாகக் கத்தினால் யார் காதிலேயாவது விழுந்து பெரிய பிரச்சனையாகி விடும் என்று கூடத் தெரியாதவளா என்ன? என்று மனதில் தோன்ற,

இதற்கு மேலும் தன் காதலை வளர்க்க விரும்பாதவன்...

"மன்னிச்சுட்டேன் சொல்லு மஹா... ப்ளீஸ்... அதுக்கப்புறம் உன்னைய நான் தொந்தரவு பண்ண மாட்டேன்..." என்றவன் அவள் பதில் எதுவும் பேசாததைக் கண்டு மேலும் கலங்கியவன்...

"சரி... இனி நான் உன் லை∴பில் க்ராஸ் பண்ண மாட்டேன்" என்றவன் கதவைத் திறக்க எத்தனிக்க... அவனின் கலங்கிய முகமும், கலக்கத்தைச் சுமந்திருந்த விழிகளும் பறைசாற்றியது தனது பாராமுகத்தால் அவனது இதயத்தில் ஏற்பட்டிருந்த காயத்தின் வடுவை....

அவன் வலியை தன் வலி போல் உணர்ந்தவள் மெல்லிய குரலில் தலை கவிழ்ந்தவாறே தன்னவனின் இதயமும் மனமும் சிலிர்க்கும் வகையில்...

"பிடிக்காமத் தான் நீங்க நடந்துக்கிட்டதைத் திவ்யா அண்ணிக் கிட்ட கூடச் சொல்லாம இருந்தேனா?" என்றாள் அவனின் அழகிய ரௌடி....

தன்னவளின் வார்த்தைகளில் குளிர்ந்து சிலிர்த்தவன் அவளைத் திரும்பிப் பார்க்க, அவனின் பார்வையில் செவ்வானமாக முகம் சிவந்தவள் மறுபடியும் தலை கவிழ, அவளின் வெட்கத்தில் காதலனாகக் கர்வம் கொண்டவன் அவளை நெருங்க மொட்டை மாடியில் அவன் தன்னிடம் நடந்து கொண்டது கண்முன் தோன்றியதில் சட்டென்று கதவை நோக்கி நகர முனைந்தவளால் ஒரு இன்ச் கூட நகர முடியவில்லை...

11:10 PM
https://drive.google.com/file

அவ்வளவு இறுக்கிப் பிடித்திருந்தான் அந்தக் கள்வன்...

விட்டில் இத்தனை பேர் இருக்கும் போது இதென்ன இப்படி நடந்துக்கிறாங்க என்று கதிகலங்கியவள் மெதுவாக...

"யாராவது வந்திரப் போறாங்க, ப்ளீஸ் விடுங்க" என்று கூற,

அவளை உறுத்து பார்த்தவன் தன் பிடியை மேலும் இறுக்கி,

"இவ்வளவு ஆசை மனதில் இருக்கும் போது அது என்ன என்னைப் பார்த்தும் பார்க்காதது மாதிரி போறதும்... இப்படி ஒரு ஜீவன் இருக்கிற மாதிரியே காட்டிக்காததும்" என்க...

தலைக் கவிழ்ந்தவாறே இளம் புன்னகையைச் சிந்தியவளைக் கண்டவனுக்கு நேற்றில் இருந்து என்னை எப்படித் தவிக்கவிட்டாள்... நாமும் கொஞ்ச நேரம் விளையாடிப் பார்க்கலாமே என்று குறும்பாகத் தோன்ற அவளைச் சீண்டுவதற்காக...

"சரி, ஒரே ஒரு டவுட் எனக்கு... அத மட்டும் க்ளியர் பண்ண ஹெல்ப் பண்ணு... அப்புறம் உன்னை விட்டுடறேன்" என்றான்....

என்ன என்பது போல் மெல்ல அவனை நிமிர்ந்துப் பார்க்க, அவளின் நாணப் பார்வையில் தன் குறும்புப் பார்வையைக் கலக்கவிட்டவன்...

"அது ஒன்னும் இல்லை... என்னோட காலேஜ் ஜூனியர் ஒருத்தி என்னை ரொம்ப லவ் பண்றதா தொல்லை பண்றா... ஆனால் எனக்கு

COPYRIGHTED

11:11 PM
https://drive.google.com/file

என்ன பதில் சொல்றதுன்னு தெரியலை... ஏன்னா, அன்னைக்கு உன்னைக் கிஸ் பண்ணினதுக்கு அப்புறம்

நீ எதுவும் பேசல... ஊருக்கு கிளம்பும் போதும் கூட ரொம்ப எதிர்ப்பார்த்திருந்தேன், நீ ஏதாவது சொல்லுவன்னு... பட் நீ வெளியே வரவே இல்லை... அ.:.ப்கோர்ஸ் இப்ப உன மசில என்ன இருக்குன்னு சொல்லிட்ட... பட் நீ இன்னும் அத ப்ரூவ் பண்ணலையே... அதனால் இப்ப உனக்கு ஓகே சொல்றதா இல்ல அவளுக்கு ஓகே சொல்றதான்னு ஒரே கன்.:.ப்யூஷனா இருக்கு?" என்க...

அது வரை தன்னவனின் நெருக்கத்தில், அவனின் ஸ்பரிசத்தில் உடல் கூச உணர்ச்சிவசப்பட்டு நடுங்கி கொண்டிருந்தவள், அவனின் பேச்சில் சிலிர்த்து எழுந்தாள்...

"டேய், என்னடா நினைச்சிக்கிட்டிருக்க உன் மனசில... நீ பாட்டுக்கு வருவ... யாருக்கும் தெரியாம கிஸ் பண்ணுவ... அப்புறம் உன்னைய எனக்குப் பிடிச்சிருக்குன்னு சொல்லுவ... பின்னால யாரோ ஜூனியர் லவ் பண்றான்னு சொல்லுவ...

கேட்கறதுக்கு நான் என்ன கேனச்சியா" என்று தன்னையும் அறியாமல் பொங்கி எழ...

அவளின் இந்த அதிரடித்தனத்தைக் கொஞ்சமும் எதிர்ப்பார்க்காதவன்...

"ட ரௌடி.. ஏண்டி நீயே இப்படிக் கத்தி காட்டிக் கொடுத்துருவ போல இருக்கு... சத்தம் போடாதடி" என்றான் முகத்தில் அத்தனை பூரிப்புடன் அவளின் பொறாமையை இரசித்தவாறே...

COPYRIGHTED

58% 11:11 PM
https://drive.google.com/file

தன்னையும் அறியாமல் சத்தமாகக் கத்தியதை அப்பொழுது தான் உணர்ந்தவளுக்கு எங்கே தாங்கள் இருவரும் தனி அறையில் இருப்பதை யாராவது பார்த்துவிடப் போகிறார்களோ என்று பயம் கவ்வ,

தன் கண்களை அகல விரித்து அவனைப் பார்க்கவும், உதட்டில் நெளிந்த புன்னகையைத் தனக்குள் அடக்கியவனுக்கு அவள் கோபத்தில் தன்னை டேய் என்று அழைத்தது சட்டென்று தோன்ற...

"அதுக்குன்னு இப்படிச் சட்டுன்னு மரியாதை இல்லாம டேய்னு சொல்லிட்டியேடி" என்றான் முகத்தில் போலியான சோகத்தைத் தாங்கி...

கோபத்தில் தான் அப்படி அழைத்ததை அது வரையிலும் உணராதவள் அவன் கூறியதும் நாக்கை கடித்து வெட்கப்பட, அவளின் வெட்கத்தில் கவிழ்ந்தவன் மேலும் அவளை நெருங்க, அன்றைப் போல் இன்றும் அவன் நெஞ்சில் கை வைத்து தள்ளியவளை இழுத்து சுவற்றில் சாய்த்தவன் தன்னவளின் மேல் படறவும்,

மூச்சுக் காற்று முகத்தில் படும் அளவிற்குத் தன் மீது சாய்ந்திருந்தவனைக் கண்டவளின் இதயம் தாளம் தப்ப துவங்கியது...

"ஐயோ! என்ன பண்றீங்க... எல்லோரும் இங்க தான் இருக்காங்க... தெரியும் இல்லை?" என்று கலக்கத்துடன் கூறியவளைக் கண்டவனின் மன உறுதி கொஞ்சம் கொஞ்சமாக உடைய அவளை அணு அணுவாக ரசிக்க ஆரம்பித்தவனுக்கு

அர்ஜூனின் கோபம், அவனின் அந்தஸ்து, தன்னுடைய ஏழ்மை நிலைமை, தங்கள் இருவரின் எதார்த்தம் அனைத்தும் மறந்து போனது...

COPYRIGHTED

11:11 PM
https://drive.google.com/file

அவனின் பார்வையின் வீரியத்தைத் தாங்காதவளுக்கு ஏற்கனவே அவனின் வலிமையான இதழ் அணைப்பை உணர்ந்திருந்தவளுக்கு அச்சமும் நாணமும் கிளர்ந்தெழுந்ததில் கண்கள் தானாக இறுக்கி மூட, தன்னவளின் முகத்தில் தோன்றிய

உணர்வுகளை ஆழ்ந்து படித்தவன் அவள் மெல்லிடையை இறுக்கிய வண்ணம் காட்டாற்று வெள்ளமாகப் பாய்ந்த மனதை அடக்கத் தெரியாமல் அவள் இதழ் நோக்கி குனிந்தவன் அன்றை விட இன்று அதிகமான முரட்டுத்தனத்தோடு தன்னவளின் இதழ்களைத் தன் இதழ்களுக்குள் புதைத்துக் கொண்டான்...

அன்று தன் மனதில் குடிக் கொண்டிருந்தவளின் உள்ளத்தில் தன் மீது காதல் இருக்கிறதா இல்லையா என்பதை அறியாமல் முதல் முறை புடவையில் அவளைக் கண்டதும் அவளில் எழிலில் மயங்கி தாபத்தாலும் விரகத்தாலும் கொடுத்த இதழொற்றல் அது...

ஆனால் இன்றோ தன்னவளின் இதயத்தில் தான் காதலனாக ஆழ குடிக்கொண்டிருப்பதை அறிந்து தன் காதலியாக, தனக்கு மட்டுமே உரியவளாக எண்ணிய உரிமையின் பெருமையில் ஏற்பட்ட பிரமிப்பில் காதல் வழிய கொடுக்கும் இதழொற்றல் இது....

தன்னவனின் ஆழ்ந்த முத்தத்தில் உணர்வுகள் சிலிர்த்து பூவுடல் நடுங்க அவனின் வலுவான பரந்த உடலிற்குள் பாந்தமாக அடங்கியிருந்தவளைக் கண்டவன் மேலும் முன்னேறத் துவங்க அவளின் பூ இதழ்களை இறுக்க மூடியிருந்த தன்

முரட்டு இதழ்களைக் கழுத்திற்கு இறக்கியவன் தன்னைக் கட்டுப்படுத்தும் வழித் தெரியாமல் மேலும் இறங்க....

COPYRIGHTED

57% 11:11 PM
https://drive.google.com/file

பெண்ணவளின் பெண்மை விழித்துக் கொண்டது...

"ப்ளீஸ்ங்க, இது சரியில்லை, கல்யாணத்திற்கு முன்னாடி இது ரொம்பத் தப்புங்க... விடுங்க" என்று தவிப்புடன் கூறியவளின் வார்த்தைகள் காதலிலும் மோகத்திலும் மூழ்கியிருந்தவனின் காதுகளில் எட்டினால் தானே...

"ஐயோ! விடுங்க" என்று கூறியவள் தன் பலம் கொண்ட மட்டும் அவனைத் தள்ள சுய நினைவிற்கு வந்தவன்...

தனக்கு முழுவதுமாக உரிமையாகதவளை இந்தளவிற்கு நெருங்கியதே தவறு என்பது புத்தியில் உரைக்க, சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளின் நெற்றியில் சிலும்பி படர்ந்திருந்த தலை முடியை ஒதுக்கியவன் கள்ளச்

சிரிப்புடன் குறும்பாக....

"இதுக்கே இப்படின்னா, இன்னும் என்னென்னவோ இருக்கே... அதுவும் தினமும்" என்றான்...

"அதெல்லாம் கல்யாணத்திற்கு அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்... முதல்ல என்னைய விடுங்க... யாராவது பார்த்துடப் போறாங்க" என்றவள் நாணத்துடன் அவனைத் தள்ளி விட்டு கதவை திறக்க முயல,

சிரித்துக் கொண்டே அவளுக்கு வழி விட்டவன் அறைக்கு வெளியில் தலைக் கவிழ்ந்தவாறே ஓடியவளின் பின்னயே தொடர்ந்து தானும் சிரித்துக் கொண்டே போக, அவர்கள் இருவரின் கெட்ட நேரமோ என்னவோ தன் அறையில் இருந்து

COPYRIGHTED

வெளியே வந்த அர்ஜூனின் கண்களில் பட்டனர் இருவரும்.

மலரினும் மெல்லியவள்!

தொடரும்.....

COPYRIGHTED

57% 11:12 PM
https://drive.google.com/file

பாகம் - 29

கீழே விருந்தினர் அறையில் இருந்து சிவந்த முகத்துடன் மஹா வெளியே வருவதையும், சிரித்துக் கொண்டே வினோத் அவளின் பின் வருவதையும் கண்ட அர்ஜுனிற்கு எதுவோ சரியில்லை என்று உணர்த்த, படிகளில் இறங்கிய படியே ஒன்றும் பேசாமல் தங்களைக் கூர்ந்துப் பார்த்தபடியே வரும் அண்ணனை பார்த்த மஹாவிற்கு நெஞ்சுக் கூட்டில் குளிரெடுத்தது....

வேகமாக அறையை விட்டு ஓடிய மஹா சட்டென்று நின்றதும், அவளின் பார்வை போன இடத்தைப் பார்த்த வினோத்திற்குச் சப்த நாடியும் ஒடுங்கிப் போனது தங்களயே ஆழ்ந்தப் பார்வைப் பார்த்துக் கொண்டு படிகளில் இறங்கிக் கொண்டிருந்த அர்ஜுனைக் கண்டதும்...

தன்னையும் அறியாமல் மஹாவைத் திரும்பிப் பார்த்தவன் அவள் விழிகளில் தெரிந்த அச்சத்தையும் கலக்கத்தையும் கண்டவனுக்குத் தன்னவளின் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த திகிலிற்கு நாம் தானே காரணம் என்று குற்ற உணர்வு வர, திரும்பி அர்ஜுனின் பார்வையை எதிர் கொண்டவன் மஹாவிற்கு அருகில் சென்று நிற்க, அவர்களைப் பார்த்தவாறே ஒன்றும் பேசாமல் தன் மனைவியைத் தேடித் தோட்டத்திற்குச் சென்றான் அர்ஜுன் ..

தோட்டத்தில் அமர்ந்திருந்த கலா திவ்யாவின் கரத்தைப் பற்றித் தன் மடி மீது வைத்துக் கொண்டவர் ஸ்ரீயிடம்...

COPYRIGHTED

11:12 PM
https://drive.google.com/file

ஸ்ரீ, எனக்குத் திவ்யாவ ஒரு வாரம் எங்க வீட்டுல வச்சுக்கனும்னு ஆசையாக இருக்குடி... நீ மாப்பிள்ளையிடம் பேசிட்டு சொல்றியா? நானே வந்து அவளை அழைச்சுட்டு போறேன்" என்க...

தன் தோழியின் ஏக்கம் புரிந்தாலும் அர்ஜூன் திவ்யாவை எங்கும் வெளியில் விடாது தன் பாதுகாப்பிற்குள்ளேயே வைத்திருப்பதை அறிந்திருந்ததால்...

"கலா, அர்ஜூன் இப்போ திவ்யாவை வெளியே கோவிலுக்குக் கூட விட ரொம்ப யோசிக்கிறான்... அவ எங்க வெளியே போகனும்னாலும் அவன் தான் கூட்டிட்டுப் போறான்... இப்போ அவனிடம் திவ்யாவை ஒரு வாரத்திற்கு அனுப்ப சொன்னா நிச்சயம் அனுப்ப மாட்டான்... அதனால் கொஞ்சம் நாளாகட்டும்... அதற்கப்புறம் பேசுறேனே?" என்றார்.

தங்கள் மகளைத் தங்களுடன் சில நாட்களாவது வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைபட்டவருக்குத் தங்கள் மருமகனின் மனசும் புரிந்து தான் இருந்தது.... நேற்றில் இருந்து அவரும் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறாரே அவன் தன் மனைவியைத் தலையில் வைத்து தாங்குவதை....

சரி என்றவர் மேலும் சில விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க, வீட்டில் இருந்து மஹா வினோத்தைப் பற்றிய யோசனையுடன் தோட்டத்திற்கு வந்த அர்ஜூன் திவ்யாவைப் பார்த்தவன்...

COPYRIGHTED

https://drive.google.com/file

"திவி.... நான் கிளம்பறேன்... வெளியில் எங்கேயும் போகனும்னா சொல்லு, நான் வந்து கூட்டிட்டு போறேன்" என்றான்...

கலாவை திரும்பி பார்த்த ஸ்ரீ சொன்னேன் அல்லவா என்பது போல் பார்க்க, அவரும் புரிந்தது என்பது போல் புன்னகைத்தார்...

"சரிங்க" என்ற திவ்யா அர்ஜூனைப் பின் தொடர...

"நீ பேசிட்டு இரு, நான் கிளம்பறேன்" என்றான்...

"இல்லை பரவாயில்லை" என்றவள் அவனுடன் சேர்ந்து நடக்க, உள்ளே வந்த அர்ஜூன் இன்னும் வினோத்தும் மஹாவும் ஒன்றாக நிற்பதை பார்க்கவும் ஒன்றும் பேசாமல் மௌனமாக வீட்டின் வாயிலை நோக்கி நடக்க, அர்ஜூனின் அருகில் வந்த மஹா தயங்கிவாறே..

"அண்ணா, உங்க கிட்ட கொஞ்சம் பேசனும்" என்றாள்..

அதற்கும் பதில் பேசாது புருவங்களைச் சுருக்கி பார்த்தவனின் அனல் கக்கும் பார்வையில் அவனின் உள்ளத்தில் இருந்த கட்டுக் கடங்காத கோபம் தெரிய எரி நெருப்பில் விழுந்த விட்டில் பூச்சி போல் மனதிற்குள் துடிதுடித்துப் போனவளுக்குப் புரிந்து போனது இனி அடுத்து நடக்கவிருப்பது....

"கடவுளே! இது எங்க போய் முடியும்னு தெரியலையே..." என்று உச்சி முதல் உள்ளங்கால் வரை வெளிப்படையாக நடுங்க,

11:12 PM
https://drive.google.com/file

உள்ளங்கைகள் இரண்டும் வேர்த்து விருவிருக்க, கைகளைப் பிசைந்தவாறே அர்ஜூனின் கனல் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தலைக் குனிந்தவளைக் கண்டவன் அதற்கு மேலும் அங்கு நிற்கப் பிடிக்காதவன் போல் விருட்டென்று வெளியே செல்ல,

கணவனுடன் வீட்டிற்குள் நுழைந்தவுடனேயே தன் அண்ணனும் மஹாவும் நெருங்கி நிற்பது கண்களில் பட்டவுடன் "ஏன் இவங்க ரெண்டு பேரும் இவ்வளவு நெருங்கி நிற்கிறாங்க?" என்று யோசித்துக் கொண்டிருந்த திவ்யாவிற்கு இப்பொழுது மஹாவின் பேச்சும், அதற்குத் தன் கணவனின் கோபப் பார்வையும் எதுவோ சரியில்லை என்பதை உணர்த்தியது....

ஆனால் தன் கணவனிடம் அதனைப் பற்றிக் கேட்கும் தைரியம் மட்டும் அவளுக்கு வரவில்லை, அவளுக்கும் மட்டும் என்ன? அங்கு யாருக்குமே இருந்ததில்லையே...

வெளியே வந்தவள் யோசனையுடன் அர்ஜூனைப் பின் தொடர்ந்து நடக்க, அவள் அமைதியாக வருவதை உணர்ந்தவன் சட்டென்று நிற்கவும் அவனுக்கு மிக அருகில் வந்து கொண்டிருந்தவள் அவன் நின்றதை உணராமல் அவன் மீது மோதி தடுமாறி கீழே விழப் போனாள்...

அவள் கீழே விழாதவாறு அவளின் இடையைத் தாங்கி பிடித்தவன்....

"என்ன திவி இது? எந்த உலகத்தில இருக்க? இந்நேரம் கீழ விழுந்திருந்தின்னா என்ன ஆவது? என்று வெடித்தான்...

COPYRIGHTED

57% 11:12 PM
https://drive.google.com/file

அர்ஜூனிற்கே வினோத் மஹாவின் செயல் அதிர்ச்சியாகத் தான் இருந்தது என்றால் திவ்யாவிற்குச் சொல்லவா வேண்டும்...

அவள் ஏற்கனவே தானே இந்த வீட்டிற்கு மருமகளாகவும், அர்ஜூனிற்கு மனைவியாகவும் வர தகுதி இல்லாதவளோ என்று இன்னமும் அவ்வப்பொழுது நினைத்துக் கொண்டிருக்கிறாள் (அர்ஜூனின் மனதில் அப்படி ஒரு எண்ணம் சிறிதளவும் இல்லை என்றாலும் இவள் எப்பொழுதாவது சில சமயங்களில் தனக்குள் நினைத்துக் கொள்வது உண்டு)...

அப்படி இருக்க மஹா இந்த வீட்டின் செல்லம்... தன் அண்ணனிற்கும் அவளுக்கும் உள்ளது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் என்பதிலே அவளின் எண்ணங்கள் சுழன்றுக் கொண்டிருந்ததால் தான் அர்ஜூன் சட்டென்று நின்றதும் அவனைக் கவனிக்காமல் அவன் மீது மோதிக் கீழே விழப் பார்த்தது...

கணவனின் கோபப் பேச்சில் திக்கென்று இருக்க, அவனையே கண் இமைகளைக் கூடச் சிமிட்டாமல் பார்த்தவளைக் கண்டவனுக்கு அவளின் யோசனை இப்பொழுது எங்கு இருக்கிறது என்பதும் புரிய தனது சத்தத்தால் அவளின் முகத்தில் தெரிந்த அச்சத்தில் கனிவடைந்தவன் அவளின் இடையைப் பிடித்திருந்த கரத்தில் அழுத்தத்தைக் கூட்டி இன்னும் தன்னருகில் அவளை இழுத்து...

"திவி, இங்க இந்த வீட்டில் உன்னோட வேலை உன் உடம்பப் பாத்துக்கிறதும், உன் ஹஸ்பண்டைப் பார்த்துகிறதும், உன் வயித்துல இருக்கிற நம்ம குழந்தையைப் பாத்துக்கிறதும் மட்டும் தான்...

COPYRIGHTED

யோசனை எல்லாம் என் மீதும், நம் குழந்தையின் மீதும் மட்டுமே தான் இருக்கனும்.. வேற எதைப் பத்தியும் நீ கவலைப்படுறது எனக்குப் பிடிக்காது.... புரியுதா?" என்று அவளின் கன்னத்தைத் தட்ட...

"சரி" என்பது போல் தலை அசைத்தவளைக் கண்டவனுக்கு அவள் இன்னமும் யோசனையில் இருந்த விடுபடவில்லை என்பது புரிபட, மேலும் அவளைத் தன்னை நோக்கி இழுத்தவன்...

"ஹே... திவி.... என்ன நான் சொல்றது புரியுதா? என்று கேட்க...

ஏதோ கனவுலகத்தில் இருந்து திரும்பி வந்தவள் போல் புன்னகைத்தவள்...

"புரியுது" என்றாள்....

சுற்றும் முற்றும் பார்த்தவன் குனிந்த தன்னவளின் பட்டுக் கன்னத்தில் மென்மையாக முத்தம் இட்டவன் போய் வருகிறேன் என்பது போல் தலை அசைத்து தன் காரில் ஏற அவன் தன் கண்களில் இருந்து மறையும் வரை அந்த இடத்திலேயே நின்றவள் வீட்டிற்குள் நுழைந்ததும் தன் அண்ணனைத் தேட, அதற்குள் தோட்டத்தில் இருந்த அனைவரும் வீட்டிற்குள் நுழையவும் இப்பொழுது அண்ணனிடம் பேசுவது முறையல்ல என்று எண்ணியவள் அமைதியாக இருந்துவிட்டாள்....

ஆனால் அர்ஜூன் தன்னையும், மஹாவையும் சுட்டுப் பொசுக்குவது போல் பார்த்த பார்வையைக் கண்ட வினோத்திற்கு மனம் அடங்கவில்லை...

COPYRIGHTED

தங்கள் இருவரையும் அந்த நிலைமையில் எதிர்பாராமல் பார்த்தது நிச்சயம் அத்தானிற்குக் கோபத்தைக் கிளறியிருக்கும்... இருந்தும் அவர் ஒன்றும் சொல்லாமல் செல்வதைப் பார்த்தால் நிச்சயம் ஏதாவது பிரச்சனை வெடிக்கும் போல் தெரிகிறது... இதனால் மஹாவிற்கு மட்டும் அல்ல, திவ்யாவிற்கும் அத்தானிற்கும் இடையிலும் பிரச்சனை வர வாய்பிருக்கிறது... அதற்குள் தான் இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று நினைத்தவன் தன் அன்னையிடம் சென்று...

"அம்மா, எனக்கு வெளியில ஒரு முக்கிய வேலை ஒன்னு இருக்கு..... ரயில்வே ஸ்டேஷனுக்கு நீங்க கிளம்புறதுக்கு முன் நான் வந்திடுறேன்" என்றான்.

சென்னையில் அவனுக்கு என்ன வேலை என்று யோசித்தவர் அவனிடமே கேட்க,

"என் வேலை விஷயமாம்மா... சீக்கிரம் வந்திடுறேன்" என்றவன் கிளம்பிப் செல்கையில் மஹாவைப் திரும்பி பார்த்தவன் தலையை மட்டும் ஆட்டிவிட்டு செல்ல, அவன் எங்குப் போகிறான் என்று ஏற்கனவே தெரிந்திருந்ததால்...

"இன்னைக்கு ஒரு பூகம்பம் வெடிக்கப் போவுது... அர்ஜூன் அண்ணா ஏற்கனவே எரிமலை மாதிரி கோபத்தில் இருக்காரு... இதில் இவருக்குக் கொஞ்சம் கூடப் பயம் என்பதே இல்லை... இரண்டு பேரும் சேர்ந்து என்ன பண்ணி கலங்கடிக்கப் போறாங்களோ தெரியலையே" என்று நினைத்த மஹாவிற்கு வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்து இருந்தது.

அவள் எதிர்பார்த்தது போலவே வீட்டை விட்டு வெளியே வந்த வினோத் சென்றது நேரே சென்னையின் நடுநாயகமாக அமைந்திருந்த அந்தப் பதினொரு அடுக்கு மாடிக் கட்டிடத்திற்கு...

அது எ.கே க்ரூப் ஆ.:ப் கம்பெனிஸின் தலைமை அலுவலகம்...

அந்த மிகப் பெரிய அடுக்கு மாடிக் கட்டிடத்தைப் பார்த்தவனுக்கு உண்மையில் மஹா அவ்வளவு உயரத்திலும் தான் தரையிலும் இருப்பது போல் தோன்ற, இருந்தும் தேவதையைப் போன்று தன் இதயத்தில் ஆழ புகுந்திருக்கும் தன் உயிரின் வேர் வரை சென்று தன் உணர்ச்சிகளில் கலந்து இருக்கும் தன்னவளை எதற்காகவும் யாருக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது என்ற பிடிவாதத்தினால் அர்ஜூனைப் பார்க்க கட்டிடத்திற்குள் நுழைந்தவன் நுழைந்த விநாடி அப்படியே பிரமித்துப் போய் நின்றான் அலுவலகத்தின் உட்புற பிரமாண்ட அமைப்பில்...

சென்னையில் இத்தனை உயரத்திற்கு, அதுவும் இவ்வளவு பெரிய கட்டிடம்..... அதிலும் கட்டிடத்தின் உட்புறம் (இண்டீரியர்) மிகவும் அழகாகவும் பிரமாண்டமாகவும் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

கட்டிடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பணம் விளையாடி இருக்க அர்ஜூனின் வீடே அத்தனை அழகு என்றால் அவனின் அலுவலகம் அதை விடக் கொள்ளை அழகு.

11:13 PM
https://drive.google.com/file

சில நிமிடங்கள் பிரமிப்பில் ஆழ்ந்து சிலைப் போல் நின்றவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு ரிஷப்ஷனில் தான் அர்ஜூனைப் பார்ப்பதற்காக வந்திருப்பதாகச் சொல்ல,

"டு யூ ஹேவ் என் அப்பாயிண்ட்மெண்ட் வித் அவர் எம் டி சார்? [Do you have an appointment with our M D sir?" என்றாள் ரிஷப்ஷனிஸ்ட்டில் ஒருத்தி..

"இல்லை, ஆனால் வினோத் வந்திருப்பதாகச் சொல்லுங்கள்" [Please let him know this is Vinoth] " என்று அவன் ஆங்கலத்தில் பகரவும் சரி என்றவள் யோசனையுடன் அவனின் முகத்தைப் பார்த்தவாறே கதிரை அழைத்தாள்..

ஏனெனில் வினோத்திற்கும் அர்ஜூனுடனான தன் உறவு முறையைச் சொல்லி அவனைச் சந்திப்பதில் விருப்பம் இல்லை...

அதனைப் போல் தங்கள் MD-க்கும் முன்னறிவுப்பு இல்லாமல் ஒருவரும் தன்னைச் சந்திப்பது பிடிக்காது...

ரிஷப்ஷனிஸ்ட் கதிருக்கு அழைக்க ஆனால் அவனுக்கும் வினோத் யாரென்று தெரியவில்லையாதாலால் அவனே அர்ஜூனை அழைத்து வினோத் என்பவர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார் என்று கூற, ஒரு விநாடி யோசித்த அர்ஜூன்...

"ஒகே, லெட் ஹிம் கம் [Let him come]" என்றான்...

COPYRIGHTED

தன்னை என்ன ஏது என்று கூடக் கேட்காமல் கதிர் அழைத்துச் செல்லவும் அவனுடன் சேர்ந்து நடந்த வினோத்திற்கு ஒரு பக்கம் அர்ஜூனின் கோபத்தை நினைத்துக் கலக்கமாகவும் மறுபக்கம் திவ்யாவை நினைத்து தயக்கமாகவும் இருந்தது....

ஆனால் அதே சமயம் அவனால் எந்தக் காரணத்திற்காகவும் மஹாவை விட்டுக் கொடுக்க முடியாது.

கதிருடன் நடந்தவன் Managing Director Arjun Krishna என்று பொறிக்கப்பட்ட அறைக்கு வெளியே நின்ற கதிர் கதவைத் தட்டவும்...

"யெஸ் கமின்" என்ற அர்ஜூனின் கம்பீரக்குரலில் தன் உடம்பில் ஒட்டியிருந்த தைரியத்தில் பாதி வெளியே ஓடிச் சென்றது என்றால் அவன் பணித்ததற்குப் பிறகு அறையில் நுழைந்தவனுக்கு அர்ஜூன் அமர்ந்திருந்த தோரணையும், அவன் தன்னை நிமிர்ந்தும் பார்க்காமல் கணினியில் முகம் புதைந்திருந்ததில் தெரிந்த அவனின் ஆணவமும் மீதி தைரியத்தை வெகு தூரத்திற்குப் பறக்கச் செய்திருந்தது...

தன்னை அடியோடு வசீகரிக்கும் தன்னவளின் எழில் முகமும், தான் வீட்டை விட்டு கிளம்பும் பொழுது தன்னைப் பார்த்திருந்த அவளின் அழகிய கண்களில் தெரிந்த சஞ்சலமும், அதே சமயம் இங்குச் சிம்ம சொப்பனம் போல் கம்பீரமாக அதிகாரத்துடன் அமர்ந்திருக்கும் அர்ஜூனின் அந்தஸ்தும் வினோத்தின் மூளையை வேலை செய்ய விடாமல் மரத்துப் போகச் செய்ய, உள்ளே நுழைந்ததில் இருந்து அசையாமல் தன்னையே பார்த்துக்

COPYRIGHTED

57% 11:13 PM
https://drive.google.com/file

கொண்டிருக்கும் தன் மச்சினனின் தடுமாற்றத்தை அவனை நிமிர்ந்துப் பார்க்காமலே மனதில் குறித்துக் கொண்ட அர்ஜூன்...

"கம் இன் வினோத்" என்று கூற,

அவர்களைத் தனிமையில் விட்டு வெளியே சென்ற கதிருக்கு, தன் M D முன்னறிவிப்பில்லாமல் வந்த வினோத்தை சந்திப்பது அதிசயமாக இருந்தது என்றால் அதிலும் தன் அறைக்கே உடனடியாக அழைத்து வரச் சொன்னது வியப்பில் ஆழ்த்தியது.

"ஹேவ் எ ஸீட் வினோத் [Have a seat Vinoth] " என்று அர்ஜூன் கூறவும்,

அமர்ந்த வினோத் எதுவும் பேசாமல் தலை குனிந்தவாறே அமர்ந்து இருப்பதைக் கண்டு இன்னமும் கணினியில் இருந்து தன் தலையை நிமிர்த்தாமலே,

"பேசறதுக்குன்னு வந்துட்டு இப்போ பேசலைன்னா எப்படி? என்றான் தன் கம்பீர குரலில்...

அவன் அவ்வாறு சொன்னதும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தவனுக்கு இன்னும் தன்னால் அர்ஜூனைக் கண்ட பிரம்மையில் இருந்து வெளி வர முடியாது போக...

இருந்தும் சில விநாடிகளில் தன்னைத் திடப்படுத்திக் கொண்டவன் தன் தொண்டையைச் செறுமிக் கொண்டு,

COPYRIGHTED

"உங்கள பிஸியான நேரத்தில் டிஸ்டர்ப் பண்ணிட்டேன் நினைக்கிறேன்" என்று தயங்கவும் அவனை நிமிர்ந்துப் பார்த்த அர்ஜூன்...

"இட்ஸ் ஓகே... சொல்லுங்க" என்று அவனை ஆழ்ந்துப் பார்த்தவாறே கூற மெல்ல பேச துவங்கினான் வினோத்...

"என் மேலே நிச்சயம் உங்களுக்குக் கோபம் இருக்கும் அத்தான்... உங்க கோபமும் நியாயமானது தான்... உங்க வசதியும் அந்தஸ்தும் எனக்குத் தெரியும்... அதே மாதிரி என்னோட தகுதி என்னன்னும் எனக்குத் தெரியும்...." என்றவன் சிறிது தயங்கி...

"திவ்யாவோட அண்ணனா நான் இப்போ உங்களோட பேச வரலை.... அந்த உரிமையோட நான் நிச்சயம் மஹாவ எனக்குக் கேட்க மாட்டேன்" என்றான் அழுத்தமாக....

வினோத் பேசத் துவங்கியதும் சேரில் ஊன்றியிருந்த தன் வலக் கையை முகவாயில் கொடுத்து கூர்மையான கண்களோட அவனையே அர்ஜூன் பார்த்திருக்க, அவனின் கழுகுப் பார்வையில் உள்ளுக்குள் சகலமும் நடுங்கிப் போயிருந்த வினோத்திற்குத் தான் பேச வந்ததை முழுவதுமாகப் பேசி விடுவோமா?? என்ற சந்தேகம் தான் தோன்றியது...

தன்னை சில விநாடிகள் பார்த்திருந்த வினோத் மேலே பேசுவதற்குத் தயங்குவது போல் அர்ஜூனிற்குத் தெரிய,

57% 11:13 PM
https://drive.google.com/file

"ம்ம்ம், சொல்ல வந்தத முழுசா சொல்லுங்க" என்று கூறவும், தன் தயக்கத்தைச் சடுதியில் உதறிய வினோத் சடசடவென்று பேசி முடித்தான்...

"இந்த வருஷம் என்னோட காலேஜ் முடியுது அத்தான்... காலேஜ்ல நான் டிஸ்டிங்ஷன்னு உங்களுக்குத் தெரியும்னு நினைக்கிறேன்... காலேஜ் கேம்பஸ் இண்டெர்வியூவில ஏற்கனவே செல்க்ட் ஆகிட்டேன்... எந்த இடத்தில் ட்ரெய்னிங், எத்தனை மாசம் என்று எல்லா டீட்டெய்ல்ஸும் கூடிய சீக்கிரம் சொல்லிடுவாங்க... ட்ரெய்னிங் முடிஞ்சதும் ஒரு மூனு வருஷமாவது வேலைப் பார்க்கனும், எங்க அம்மா அப்பாவோட கடன அடைக்கனும்... அப்புறம் தான் என்னோட மேரேஜ்ன்னு ப்ளான் பண்ணியிருந்தேன்... ஆனால் நிச்சயம் மஹா மாதிரி ஒரு பெண்ணைப் பார்ப்பேன், அவள விரும்புவேன்னு நான் கனவிலயும் நினைச்சுப் பார்த்ததில்லை... எங்க வீட்டுக் கஷ்டம் உணர்ந்து காதல் மட்டும் இல்லை, வேற எந்தத் தேவையில்லாத பழக்கமும் நான் வச்சிக்கல... படிப்பில் மட்டும் தான் என்னுடைய முழுக் கவனமும் இருக்கனும் அப்படிங்கறதல ரொம்பத் தீவிரமா இருந்தேன்.... " என்றவன் சில விநாடிகள் தயங்கி...

"ஆனால் மஹாவப் பார்த்ததும் நான் எனக்குள்ள போட்டுக்கிட்ட கட்டுபாடு என்னை அறியாம உடைஞ்சிடுச்சு... இதுக்கு நிச்சயம் உங்க வசதியோ, திவ்யா என்னோட தங்கைங்கிற உரிமையோ இல்ல, சத்தியமா இல்லை... எனக்கு நல்லாவே தெரியும்... நீங்க மஹாவிற்கு எந்த மாதிரி மாப்பிள்ளை பார்ப்பீங்கன்னு... அந்த மாப்பிள்ளைங்க பக்கத்தில நிக்கிற தகுதிக் கூட எனக்கில்லைன்னு தெரியும்... ஆனால் இரண்டு விஷயத்தில் நான் உங்களுக்கு உறுதி கொடுக்க முடியும்... ஒன்னு நீங்க எல்லாரும் சம்மதிச்சா மட்டும் தான் நான் அவள என்னவளா

COPYRIGHTED

எடுத்துப்பேன்.... இரண்டாவது உங்க அளவுக்கு இல்லைன்னாலும் என்னால எவ்வளவு முடியுமோ அவ்வளவு சந்தோஷமா நான் மாஹாவை வச்சிப்பேன்" என்று அழுத்தமாகக் கூறி முடித்தான்...

அவன் பேசி முடித்தும் ஒன்றும் சொல்லாமல் மௌனமாகத் தன் விழிகளை நேருக்கு நேர் பார்த்திருந்த அர்ஜூனைக் கண்ட வினோத்திற்கு இதற்கு மேல் என்ன சொல்வதென்றெ தெரியவில்லை.

ஆனால் அவனின் அடி மனதில் எங்கே அர்ஜூன் தனக்கு மஹாவைத் தர இயலாது என்று கூறுவிடுவானோ என்று பயம் கவ்வியிருக்கத் தன்னிலைக்கு விளக்கம் கொடுப்பதற்காக மேலும் தொடர்ந்தவன்...

"இத வச்சு மஹாவை எனக்குக் கொடுங்கன்னு கேட்கிறது எந்த விதத்திலேயும் நியாயம் இல்லை தான்... ஆனால் நான் வாழ்க்கையில் ரொம்ப நல்லா வருவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு... கடினமா உழைச்சு எங்க அம்மா அப்பா மட்டும் இல்ல எனக்கு மனைவியா வரப் போறவளையும் நல்லா காப்பாத்தனும் அப்படிங்கிற வெறியில் தான் நான் நல்லா படிச்சுக்கிட்டு இருக்கேன்... என் மேல் நம்பிக்கை இருந்தா நீங்க எனக்கு மஹாவ கொடுங்க" என்றவனின் குரலில் அழுத்தமும், தன்னம்பிக்கையும் அதிகமாக இருந்ததே ஒழிய, எந்தப் பிசிறோ தடுமாற்றமோ கடுகளவும் இல்லை...

தன் எதிரில் அமர்ந்ததும் வினோத்தின் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும், அவனின் கண்களில் தெரிந்த ஒரு வித பிரமிப்பையும் கண்டிருந்த அர்ஜூனிற்கு அவன் மஹாவைப் பற்றிப்

COPYRIGHTED

11:13 PM
https://drive.google.com/file

பேசத் துவங்கியதும் அவனின் விழிகளில் தெரிந்த உறுதியும், குரலில் தெரிந்த தெளிவும் அவன் மேல் ஒரு நல்ல மதிப்பையே உருவாக்கியிருந்தது.... இவன் திவ்யாவைப் போன்று பயந்தவனில்லை என்றாலும், அவளைப் போன்ற நல்ல மனம் உள்ளவனாகவே தெரிந்தான்...

இருந்தும் இன்று காலையில் மஹாவுடன் ஒரே அறையில் இருந்து அவன் வெளி வந்ததை ஏனோ அர்ஜூனால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை...

தான் பேச வந்த அனைத்தையும் பேசி முடித்தும் பதில் எதுவும் பேசாத அர்ஜூனைப் பார்த்தவனுக்கு அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்று தோன்ற,

அவனின் மன நிலையைப் புரிந்து கொண்ட அர்ஜூன் நிமிர்ந்து உட்கார்ந்தவன் தன் முகத்திலோ வார்த்தைகளிலோ எந்த உணர்ச்சியையும் காட்டாமல் தனக்கு முன் இருந்த சதுரங்க பலகையில் காய்களை நகர்த்தியவாறே..

"நீங்க எப்போ மஹாவை லவ் பண்ண ஆரம்பிச்சீங்க?" என்றான்...

போச்சுடா... உள்ளுக்குள்ள இருக்கிற அடங்காத கோபம் தறிகெட்டு வெளியே வராமல் தன்னைக் கட்டுப்படுத்த தான் அவன் சதுரங்கமே விளையாடுவான்.... அப்பொழுது அவனின் கண்கானாத, அவன் பார்வையில் பட முடியாத தொலைவான இடத்தில் இருக்கும் எதிராளியின் நிலைமையே அந்தோ பரிதாபமாக

COPYRIGHTED

57% 11:14 PM
https://drive.google.com/file

இருக்கும் பொழுது இப்பொழுது அவனுக்கு எதிரிலே நேரெதிராக அமர்ந்திருக்கும் வினோத்தின் நிலைமை?????

தான் தனது காதலிற்கு இவ்வளவு விளக்கம் கொடுத்தும் தனது முடிவைச் சொல்லாது, அவனின் கண்களுக்கு எதிரிலேயே தான் இவ்வளவு நெருக்கமாக அமர்ந்திருந்தும் தன் முகம் நோக்காமல் சதுரங்க பலகையில் காய்களை நகர்த்தியவாறே தன்னிடம் தங்களின் காதல் தோன்றிய விதத்தைப் பற்றிக் கேள்விக் கேட்கும் அர்ஜுனைப் புரிந்து கொள்ள முடியாது, அவனின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தயங்கிய வினோத்திற்கு நன்றாகத் தெரிந்து போனது...

இப்பொழுது அர்ஜுனின் கேள்விக்குத் தான் கூறும் எந்தப் பதிலாலும் மஹாவுடனான தன் காதல் அவளின் வசதியையோ அந்தஸ்தையோ பார்த்து வரவில்லை என்பதை நிருபிக்க முடியாது என்று...

அதனைப் போன்று அவன் தன்னைத் தானே எதிர்த்து அமைதியாகவும், நிதானமாகவும் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருக்கும் விதத்தில், அழகில் மதி மயங்கியவனிற்குத் தெரியும் இவ்வாறு விளையாடுபவர்களின் குணாதிசியங்கள்...

அவர்கள் தங்களைத் தானே எதிர்ப்பதன் மூலம் எதிராளிகளின் பலவீனத்தை அறிந்து அவர்களை எப்படி எந்தக் கோணத்தில் இருந்து தாக்குவது என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று..... மற்றும் இரு பக்கங்களின் இருந்தும் அவர்களே விளையாடுவதால் வாழ்க்கையில் அவர்களை எதிர்க்கும்

COPYRIGHTED

எதிராளிகளே இருக்கக் கூடாது என்பதும் அவர்களின் குறிக்கோள் என்று....

தன்னைக் கேள்விக் கேட்டும் தான் இன்னும் பதில் சொல்லவிட்டாலும் தன்னை நிமிர்ந்தும் பார்க்காமல் ஒவ்வொரு காயாக நகர்த்தும் தன் தங்கையின் கணவனைப் பார்க்கவும் உள்ளுக்குள் பதட்டமாக, இதயம் வேறு தாறுமாறாகத் துடிக்க, இருந்தும் தன் மனதில் உள்ள உண்மையை மட்டுமே கூறுவது என்று முடிவெடுத்தவன்....

"உங்க வீட்டிற்கு முதன் முதலா வந்திருந்தப்போ தான் அத்தான்" என்றவன் சட்டென்று தன்னையும் அறியாமல் குரலில் பதற்றத்தை வெளிப்படுத்தி....

"அத்தான், திவ்யாவிற்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை" என்றான்...

அவனுக்கு எங்கே தன்னால் தன் தங்கையின் வாழ்க்கையில் ஏதாவது பிரச்சனை வந்துவிடுமோ என்று பயம்...

அவனின் பதற்றத்தைக் கவனித்த அர்ஜூன் தன் சதுரங்க விளையாட்டை நிறுத்தி வினோத்தை நிமிர்ந்துப் பார்த்தவன்....

"வினோத், என் வைஃபை பத்தி எனக்குத் தெரியும்... நீங்க இவ்வளவு பதற வேண்டியது இல்லை" என்றவன் மேலும் தன் சேரில் சாய்ந்து அமர்ந்தவனாக...

11:14 PM
https://drive.google.com/file

"ஆக முதல்ல மேரேஜ் ஆன எங்களுக்குள்ள லவ் வருவதற்கு முன்னாடியே உங்களுக்கு வந்திடுச்சு??" என்றான்......

வினோத்தால் அர்ஜூனின் முகப் பாவத்தில் இருந்து "என் தங்கையை உனக்குக் கொடுப்பதா என்ற கோபத்தில் பேசிகிறாரா? அல்லது போயும் போயும் உன்னைப் போல ஒருத்தனை என் தங்கை விரும்புகிறாளே என்ற எரிச்சலில் பேசிகிறாரா? அல்லது திவ்யாவிற்காக இவ்வளவு பொறுமையைக் கடைப் பிடிக்க வேண்டியுள்ளதே என்ற சலிப்பில் பேசுகிறாரா?" என்று சுத்தமாகக் கணிக்க முடியவில்லை...

இதற்கு மேல் அர்ஜூனின் விருப்பம் என்னவோ அதுவே தான் நடக்கும் என்று மனதிற்குள் குமுறியவன் கலக்கத்துடன் தவித்து அமர்ந்திருக்க இருக்க...

அவனது தவிப்பையும், தன் பதிலை ஏக்கத்துடன் எதிர்பார்த்து தன் முகத்தையே பார்த்திருப்பதையும் கண்ட அர்ஜூன் ஒரு அண்ணனாகப் பேச துவங்கினான்.....

"வினோத்.... ஒரு வேளை திவ்யாவை பத்தி நான் முழுசும் புரிஞ்சிக்கிறதுக்கு முன் உங்க காதல் பத்தி தெரிந்திருந்ததுன்னா, நான் நிச்சயம் இதுக்குப் பெரிய எதிர்ப்ப தெரிவிச்சு இருப்பேன்..... ஆனால் இப்போ திவ்யா எனக்கு எவ்வளவு முக்கியம்னு உங்களுக்குத் தெரியும்... காலையில் உங்க இரண்டு பேரையும் பார்த்தப்பவே அவ முகத்தில உள்ள பயத்த நான் பார்த்தேன்...... எங்கே உங்களிடம் நான் பிரச்சனை பண்ணிடுவோன்னு பயந்து கலங்கிப் போய் இருந்தாள்... நிச்சயம் அவ மனசு கஷ்டப்படுற

COPYRIGHTED

11:14 PM
https://drive.google.com/file

மாதிரி நான் எதுவும் செய்ய மாட்டேன்...." என்றவன் வினோத்தை ஆழந்து பார்த்தவாறே..

"ஆனால் அதுக்காக என் தங்கையோட வாழ்க்கையும் எனக்கு ரொம்ப முக்கியம்" என்று ஒவ்வொரு வார்த்தையாக அழுத்தம் திருத்தமாகச் சொன்னவன், சில விநாடிகளுக்குப் பிறகு தன் சேரில் இருந்த எழுந்திருக்க,

அவன் எழவும் வினோத்தும் அவனுடன் சேர்ந்து எழுந்திருக்க, "உட்காருங்க" என்பது போல் சைகை செய்தவன்...

"வினோத்... எனக்கு நீங்க சில கியாரண்டிஸ் (உத்தரவாதங்கள்) கொடுக்கனும்" என்றான்...

அவன் கேட்ட தோரணையே ஏதோ பெரிதாகக் கேட்கப் போகிறான் என்று தெரிந்தது... ஆனால் இவர் இந்த அளவிற்குப் பொறுமையாகப் பேசியதே பெரிது என்று நினைத்த வினோத் வேறு வழியின்றிச் சரி என்று தலை அசைக்க....

"நீங்க சொன்ன மாதிரி காலேஜ் முடிஞ்சு த்ரீ இயர்ஸுக்குள்ல நல்ல வேலையில் செட்டில் ஆகிடுங்க... நான் நிச்சயம் நீங்க எங்க லெவலுக்கு இருக்கனும்னு எதிர் பார்க்கமாட்டேன்... ஆனால் அதே சமயம் எனக்குத் திருப்தி படற மாதிரி இருக்கனும் உங்க வளர்ச்சி... இரெண்டாவது, அது வரைக்கும் நீங்க மஹாவ பார்க்கவோ அவளிடம் பழகவோ கூடாது" என்றான் நிதானமாக ஆனால் அழுத்தமான குரலில்......

COPYRIGHTED

https://drive.google.com/file

தன்னுடைய முதல் நிபந்தனையைச் சொன்ன பொழுது வினோத்தின் முகத்தில் தெரிந்த பெருமையையும், இரண்டாவது நிபந்தனையைச் சொன்ன பொழுது அவன் முகத்தில் தெரிந்த கலவரத்தையும் கண்ட அர்ஜூனிற்கு வினோத்தின் காதல் கொண்ட மனம் புரிந்தது...

தன் மனமுழுவதும் உறைந்திருந்த, தன் இதயத்தில் ஆழப் புதைந்திருந்த, புதிதாக அரும்பியிருந்த தன் மனைவியின் மீதான காதலைத் தான் அவளிடம் மனம் திறந்து சொல்வதற்கு முன் அவளிடம் கட்டுக்கடங்காத தன் கோபத்தைக் காட்ட, அதனால் துடிதுடித்துப் போனவள் கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு போன அந்த இரு இரவுகளும் தான் எவ்வளவு மனம் தவித்துப் போனோம் என்று அர்ஜூனிற்குத் தெரியும்...

அதற்கு முன் திருமணம் ஆன நாளில் இருந்து ஒரு நாள் கூடத் தான் மனம் விட்டு அவளிடம் காதலை வெளிப்படுத்தி இருந்ததில்லை... தன் மனையாளின் மீது இருந்த ஆசையை வார்த்தைகளால் அவளுடன் பகிர்ந்து கொண்டு இருக்கவில்லை... அப்படி இருக்க அவள் பிரிந்து சென்ற இரண்டு நாட்களும் ஏனோ பல நாள் தன்னுடன் ஒன்றி வாழ்ந்தவளைப் பிரிந்தது போலத் தானே மனம் வலித்தது...

அவள் இல்லாது அதற்கு மேலும் ஒரு நாள் கூட இருக்க முடியாமல் முக்கிய வேலைகளை எல்லாம் கூட ஒதுக்கி வைத்து விட்டு அவளைக் காண, தானே அவள் ஊருக்குச் சென்றது நியாபத்திற்கு வந்தது....

56% 11:14 PM
https://drive.google.com/file

அப்படி இருக்க, காலையில் இவர்கள் இருவரும் ஒரே அறையில் இருந்து வந்ததைப் பார்த்தால், அதுவும் மஹாவின் முகத்தில் தெரிந்த வெட்கமும் சிரிப்பும் சொன்னதே இவர்களின் காதலை...

ஆகையால் இவர்களிடம் ஒருவொருக்கொருவர் பார்க்கவும் கூடாது, பேசவும் கூடாது, அதுவும் மூன்று வருடங்களுக்கு என்று சொல்வது திரைப்படத்திற்கு வேண்டுமானால் பொருந்தலாம்... நிஜ வாழ்க்கையில் அது சரிப்பட்டு வராது என்பது அர்ஜூனிற்குத் தெரியும்...

ஆனால் அதே சமயம் அவனுக்கு வினோத்தை பற்றி ஒரு நம்பிக்கை வர வேண்டும்..

அவன் திவ்யாவின் அண்ணன் தான், திவ்யாவைப் போல் நல்லவன் தான்..... இருந்தும் தன் தங்கையின் வாழ்க்கையில் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று முடிவெடுக்கக் கூடாது என்று தான் அவன் இந்த நிபந்தனைகளைப் போட்டது.

வினோ தன் காதலைப் பற்றிச் சொல்லும் பொழுது அர்ஜூனின் மனதில் இத்தனை எண்ணங்கள் ஓடியிருந்ததென்றால் இப்பொழுது அவனது நிபந்தனைகளைக் கேட்ட வினோத்திற்கோ...

"இவர் என் வளர்ச்சியைப் பற்றி எதிர்ப்பார்ப்பது சரியே என்றாலும், மஹாவைப் பார்க்காமல் அவளுடன் பேசாமல் மூன்று வருடங்களா?" என்று குழம்பியவனின் மனம் இருதலை கொள்ளி எறும்பாகத் தவித்தது....

COPYRIGHTED

11:14 PM
https://drive.google.com/file

அவனுக்கு மஹாவை தன் மனைவியாக ஏற்றுக் கொள்ள அர்ஜூனின் சம்மதமும் வேண்டும் அதே சமயம் தன்னவளைப் பாராமல் அவளுடன் பேசாமல் மூன்று நீண்ட வருடங்கள் எப்படி இருப்பது என்பதை அர்ஜூனிடம் கேட்கும் தைரியமும் இல்லை...

காதலை சுமந்திருந்த இதயத்தில் இருந்து, அழகிய கவிதைப் போல் தன் கருத்தில் குடிக் கொண்டிருந்தவளை, மலர் கொடி போல் தன் மீது இன்று காலை முழுவதுமாகப் படர்ந்திருந்தவளை அர்ஜூன் தன்னிடம் இருந்து வலியப் பிடுங்கியது போல் வலித்தது வினோத்திற்கு...

ஆனால் அதே சமயம் அர்ஜூனை எதிர்க்கவோ அவருடைய நிபந்தனைகளை மறுப்பதற்க்கோ தன்னிடம் என்ன சக்தி இருக்கிறது என்று உணர்ந்தவன், "சரி அத்தான்" என்றான் சன்னமான குரலில்....

"சரி வினோத், நீங்க கிளம்புங்க... நான் மாம் அண்ட டாட் கிட்ட பேசுறேன்" என்று சொன்ன அர்ஜூனைப் பார்த்து ஒரு சிறு புன்னகையையே சிந்தியவன் மனம் முழுவதும் குழப்பத்துடன் வெளியேற...

"உங்க மேல எனக்கு இருக்கிற நம்பிக்கையால தான் வினோத் நான் இந்தக் கண்டிஷன்களையே போட்டேன்... ஐ ஹோப் யூ கீப் அப் யுவர் வேர்ட்ஸ் [I hope you keep up your words]... நீங்க உங்க வார்த்தைகளைக் காப்பாத்துவதில் தான் இருக்கு நான் மஹாவை உங்களுக்குக் கொடுப்பதும் கொடுக்காமல் போவதும்" என்று என்ன தான் வினோ தன் மனைவியின் அண்ணனாக இருந்தாலும்,

COPYRIGHTED

https://drive.google.com/file

மஹாவின் அண்ணனாக அவள் வாழ்க்கையின் நலன்கள் கருதியே அர்ஜூன் இந்த முடிவை எடுத்திருந்தான்....

அர்ஜூனின் அறையை விட்டு வெளியில் வந்த வினோத்திற்குக் கிட்டதட்ட மூச்சே அடைத்துவிடும் போல் இருந்தது....

"அப்பா, ஒரு அரை மணி நேரம் இவர் கூட இருப்பதற்கே எனக்கு இப்படி மூச்சு முட்டுதே... எப்படித் தான் திவ்யா இவரைச் சமாளிக்கிறாளோ?" என்று எண்ணியவனுக்கு எங்குத் தெரியப் போகிறது??

வெளி உலகத்திற்கும் தன் குடும்பத்தில் திவ்யாவைத் தவிர மற்றவர்ளுக்கு மட்டும் தான் அவன் சிம்ம சொப்பனம்...

அவன் மனையாளைப் பொறுத்தவரை அவளின் முகத்தில் ஒரு சிறு கலக்கமுமோ, அவளின் விழிகளில் ஏதேனும் சிறு ஏக்கமுமோ தெரிந்தாலும் கூட அவளின் மேல் அடங்காத காதல் கொண்டுள்ள அவன் இதயம் பதறி துடித்துவிடும் என்பது....

அர்ஜூனின் தலைமை அலுவலகத்தை விட்டு வெளியில் வந்த வினோத்தின் மனதில்....

"அத்தானின் கண்டிஷன்களை மஹா எப்படி எடுத்துக் கொள்வாளோ தெரியவில்லையே.... என்னை மூனு வருஷம் பார்க்கக் கூடாது, என்னிடம் பேச கூடக் கூடாதுன்னு சொன்னா என்ன சொல்வாளோ" என்று யோசித்தவனுக்கு "அத்தான் இந்த

COPYRIGHTED

11:15 PM
https://drive.google.com/file

அளவிற்கு இறங்கி பேசுவார்னு நினைச்சுக் கூடப் பார்க்கவில்லை... அது வரைக்கும் நல்லது" என்ற நிம்மதியும் படர்ந்தது...

நேரே வீட்டிற்கு வந்தவன் தன் அன்னையும் தந்தையும் பிரயாணத்திற்குத் தயாராக இருக்க, தான் வீட்டிற்குள் நுழைந்ததும் கலக்கமும் ஆர்வமுமாகத் தன் முகத்தையே பார்த்திருந்த மஹாவை திரும்பியும் பார்க்காமல் பயணத்திற்குத் தானும் தயாராக,

அவன் வந்ததில் இருந்து அவனையே பாத்திருந்த மஹாவிற்குத் தன்னவனின் பாரா முகத்தைக் கண்டு அச்சத்திலும் வேதனையிலும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

சிறிது நேரத்திலேயே அவர்கள் அனைவரும் ஊருக்குக் கிளம்பத் திவ்யாவின் கரங்களைத் தன் கரங்களுக்குள் வைத்துக் கொண்ட கலா....

"திவ்யா, உடம்பப் பார்த்துக்கமா.... ஸ்ரீயும், மாப்பிள்ளையும் சொல்ற மாதிரி நடந்துக்க என்ன?" என்றவர் விழிகளில் நீர் ததும்பி நிற்க கிளம்பினார்.

அன்னையும் தந்தையும் முதலில் வெளியே செல்ல, வீட்டிற்குத் திரும்பி வந்ததில் இருந்து வினோத்தின் முகம் வேறு சரியில்லாததக் கவனித்து வந்த திவ்யாவிற்கு ஏதோ நடந்து இருக்கிறது என்று புரிய, அவனிடம் நெருங்கி நின்றவள் வாய் வரை வந்த வார்த்தைகளை உதிர்க்காமலே விட்டாள்...

COPYRIGHTED

56% 11:15 PM
https://drive.google.com/file

அவளின் தவிப்பு புரிந்த வினோத் நிச்சயம் அத்தான் இவளிடம் எல்லாவற்றையும் விளக்கிச் சொல்லுவார் என்று நம்பிக்கையில் அவளின் தலையைக் கோதியவன்...

"சரி திவ்யா... உடம்பப் பாத்துக்க... அடிக்கடி ஃபோன் பண்ணு, என்ன?" என்றவன் வீட்டை விட்டு வெளியில் செல்லும் வரை மஹாவை திரும்பியும் பார்த்தான் இல்லை...

அவர்கள் அனைவரும் கிளம்பவும், காலையில் நடந்த சம்பவம் மீண்டும் திவ்யாவின் நியாபகத்திற்கு வந்து அவளைக் கலக்கத்தில் வதைத்தது என்றால் காலையில் தன்னைச் சுட்டெறிக்கும் சூரியனைப் போன்று பார்வைப் பார்த்துவிட்டு சென்ற தன் அண்ணனை திகிலுடன் எதிர்பார்த்திருந்த மஹாவிற்கோ அவன் வருவதற்குத் தாமதம் ஆக ஆக இதயம் துடிப்பதை பல மடங்கு அதிகரித்துக் கொண்டே போனது..

இரவு வெகு நேரம் சென்று வீடு திரும்பிய அர்ஜூன் தன் அறைக்குச் சென்று குளித்து முடித்து இரவு உணவிற்காகக் கீழ் இறங்கி வந்தவன் டைனிங் டேபிளில் அமர, அவன் வந்ததில் இருந்து ஒரு வார்த்தைக் கூட அவனிடம் பேசாமல் உணவு பரிமாறிய தன் மனைவியைப் நிமிர்ந்து பார்த்தவனிற்கு அவளின் முகத்தில் இருந்த கலக்கத்தின் காரணம் புரிந்தது...

கடலூருக்கு அவளை அழைக்கப் போகும் பொழுது திவ்யாவின் மேல் வினோத்திற்கு இருந்த பாசத்தைத் தான் கண்கூடாகப் பார்த்திருந்தானே...

COPYRIGHTED

அவனும் அவளைக் கண்டு கொள்ளாதது போல உணவு அருந்த, தன் அண்ணனின் அருகில் அமர்ந்து உணவு அருந்திக் கொண்டிருந்த மஹா அவனை நிமிர்ந்துப் பார்த்தால் தானே....

ஒரு வழியாக உண்டு முடிதது எழுந்தவன் தன் தலை தட்டில் புதைந்தது போல் குனிந்து உண்டு கொண்டிருந்த மஹாவைப் பார்த்து....

"மஹா உன் கூடக் கொஞ்சம் பேசனும்.... என் ரூமிற்கு வா..." என்றவன் அவளின் பதிலை கூட எதிர்பார்க்காமல் சென்றுவிட்டான்.

அர்ஜூன் தனியாகத் தன்னை அழைத்ததும் உலகத்தில் உள்ள அத்தனை கடவுள்களிடமும் வேண்டிக் கொண்டவள் அச்சத்துடனும் கலக்கத்துடனும் அவன் பின் செல்ல, அவள் அறைக்குள் நுழைந்தவுடன்....

"கதவை சாத்து" என்றான்.

தன் கட்டிலுக்கு அருகில் சேரை இழுத்துப் போட்டவன் அவளை அமர செய்து அவள் கண்களைக் கூர்ந்து பார்த்தவாறே..

"ஏன் வினோத்தை சூஸ் பண்ணின மஹா? என்றான் அதிரடியாக...

கண்கள் கலங்க அவனைப் பார்த்தவள், சன்னமான குரலில்....

COPYRIGHTED

11:15 PM
https://drive.google.com/file

"திவ்யா அண்ணி மாதிரி அவரும் ரொம்ப நல்லவர்ண்ணா" என்றாள்.

தலை குனிந்து தன் இடது கை விரல்களால் தன் நெற்றியை அழுந்தித் தேய்த்துக் கொண்டவாறே சத்தம் வராமல் மெல்லியதாகப் புன்னகைத்து கொண்டவன், நிமிர்ந்து....

"அது எனக்குத் தெரியும்... ஆனால் அது மட்டும் போதுமா மஹா லை:.பில? சரி நீயும் வினோத்தும் என்ன முடிவு பண்ணியிருக்கீங்க?" என்றான்.

அவன் கேட்கும் கேள்வி புரியாமல் அவனையே பார்க்க,

"மார்னிங் வினோத் என்னைய பார்க்க வந்தது தெரியும் இல்லையா?" என்றான்.

ஆமாம் என்று தலையாட்டிவள் மீண்டும் அமைதியாக இருக்க,

"வினோத் எதுவும் உன் கிட்ட சொல்லவில்லையா?" என்று மேலும் கேட்க,

அவள் இல்லை என்பது போல் தலை அசைக்கவும், எப்படி வாயடிப்பவள் இப்படி அமைதியாக இருப்பதைப் பார்த்து காதல் என்ற உணர்வு இதயத்தில் ஊடுறுவிவிட்டால் எவரையும் எப்படியும் மாற்றும் சக்தியாக அது மேலெழுந்து புத்தியையும் சித்தத்தையும் கலங்கடித்து ஒரு மனதினை அடியோடு மாற்றிவிடுகறது என்று

COPYRIGHTED

11:15 PM 56%
https://drive.google.com/file

நினைத்தவனின் விழிகளின் முன் திவ்யாவின் அழகு முகம் படற, புன்னகைத்துக் கொண்டவன் காலையில் அவனுக்கும் வினோத்திற்கும் இடையில் நடந்ததை முழுவதுமாக எடுத்துரைத்தான்....

"மஹா.... உனக்கு இதற்குச் சம்மதம்மா?

"எப்படி அண்ணா அவர பார்க்காம பேசாம அவ்வளவு நாள் இருக்கிறது?"

"மஹா எனக்கு இது வெறும் இன்பாக்ஷூவேஷன் இல்லைன்னு தெரியனும்... அத நீங்க தான் ப்ரூவ் பண்ணனும்... அதுக்காகத் தான் இந்தக் கண்டிஷன்ஸே"

"சரின்னா... நிச்சயம் நாங்க ப்ரூவ் பண்ணுவோம்.... ஆனால் ப்ளீஸ்ண்ணா, எங்கள சேர்த்து மட்டும் வச்சிடுங்க" என்று விழிகளில் நீர் தளும்பி நிற்க கலங்கியவளின் முன் குனிந்தவன் வாழ்க்கையில் முதல் முறை தன் தங்கையின் தலை முடியை ஆறுதலாகத் தடவிக் கொடுத்து,

"நான் என்னைக்காவது சொன்ன சொல் தவறி இருக்கேனா மஹா?" என்று கேட்க,

இல்லை என்பது போல் தலையை அசைத்தவளைக் கண்டவன்...

COPYRIGHTED

"அப்புறம் ஏன் இந்தக் கலக்கம்? நான் சொன்னதை நீங்க செஞ்சா நானும் என் வார்த்தையைக் காப்பாத்துவேன்... சரி நீ போய்த் திவ்யாவை அனுப்பு" என்றவன் மடி கணினியை எடுத்து வைத்துக் கொண்டு தன் வேலையைத் தொடர, இன்னும் குழப்பம் விலகாத முகத்துடன் கீழ் இறங்கி சென்றவளை நிமிர்ந்துப் பார்த்தவன் அடுத்து தன் மனைவியை என்ன சொல்லி சமாதானாப் படுத்துவது என்று யோசனையில் ஆழ்ந்தவாறே அவளின் வரவிற்காகக் காத்திருந்தான்...

தன் கணவன் மஹாவைத் தனியாகப் பேச அழைத்ததிலேயே கலங்கி போய் இருந்த திவ்யா, சிறிது நேரத்தில் குழம்பிய முகத்துடன் தங்கள் அறையில் இருந்து வெளியே வந்தவளைப் பார்த்தவள் வேகமாக அவளின் அருகில் செல்ல....

"அண்ணி, அண்ணா உங்களை வரச் சொல்றாங்க" என்று விட்டு சட்டென்று தன் அறைக்குள் மறைய திவ்யாவின் வயிற்றுக்குள் ஒரு பெரிய உருளை உருள துவங்கியது....

என்ன தான் தன் கணவன் தன்னைத் தங்க தாம்பாலத்தில் வைத்து தாங்கிக் கொண்டிருந்தாலும் அவனின் இயற்கைக் குணங்களான கோபம், பிடிவாதாம் ஆணவம், அதிகாரம் அனைத்தும் அவனை விட்டு இன்னும் செல்லவில்லையே....

கூடப் பிறந்த தமக்கையான மஹாவிற்கே இந்த நிலைமை என்றால் வினோத்தின் நிலைமையை எண்ணி அடி வயிறு கலங்க மெல்ல தங்கள் அறைக்குள் வந்தவள் அவன் கட்டிலில் அமர்ந்து தான் வருவதும் தெரிந்தும் தன்னை நிமிர்ந்தும் பார்க்காமல்

கணினியிலேயே கண்களைப் பதித்திருப்பதைக் கண்டவளுக்கு இன்று ஒரு பூகம்பம் வெடிக்கப் போகிறது என்றே தோன்றியது...

மெல்ல கட்டிலில் ஏறி அவன் அருகில் படுத்தவள் ஒன்றும் பேசாமல் அமைதியாக அவனையே பார்த்திருக்க, அவளின் மௌனத்தின் காரணம் புரிந்திருந்ததால் மனதிற்குள் சிரித்துக் கொண்டவன் கணினியில் பதித்திருந்த விழிகளை எடுக்காமல் சில நிமிடங்கள் பேசாதிருக்க....

அவனின் மேல் நிலைத்திருந்த பார்வையை வேறு எந்தப் பக்கமும் திருப்பாமல் அவனையே கண் கொண்டு பார்த்திருக்க, இதற்கு மேலும் தன்னவளின் பொறுமையைச் சோதிக்காமல்...

"இன்னைக்குக் காலையில வினோத் என் ஆ.:.பீஸிக்கு வந்தார்" என்றான் அதிரடியாக.....

அவன் திடீரென்று அவ்வாறு சொன்னதும் திக்கென்று இருக்க அரண்டவள் வெடுக்கென்று எழ..

அவள் அப்படி அலறி துடித்து எழுந்ததும் பதறியவன்...

"என்ன திவ்யா? இது மாதிரி அவசரப்பட்டு எழுந்திருக்கக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்றது" என்று சலிப்புடன் கூறியவன் அவளின் குணம் தெரிந்தும் தான் இவ்வாறு அவளைச் சோதிப்பது போல் அமைதியாக இருந்துவிட்டு இப்பொழுது திடுதிப்பென்று பேசியது தன் தவறே என்று வருந்தியவன் மடி

COPYRIGHTED

11:16 PM 56%
https://drive.google.com/file

கணினையை அருகில் இருந்து மேஜையில் வைத்துவிட்டு அவளின் அருகில் நகர்ந்து அமர...

"அண்ணா எதுக்கு வந்தாங்க?" என்றால் கண்களில் அச்சத்தைத் தேக்கி வைத்து......

அவளின் பயத்தைப் பார்த்தவனுக்குத் தன் மனையாளின் மேல் மேலும் கனிவு வர அவளைத் தன் மேல் சரித்துக் கொண்டவன்...

"ம்ப்ச்.... இப்போ எதுக்கு இவ்வளவு பயம்?" என்றான்...

"என்னங்க, அண்ணன்ட்ட நீங்க கோபம் எதுவும் படலையே?"...

"எதுக்கு?"

"எதுக்குன்னு உங்களுக்கே தெரியும்... என் அண்ணா ரொம்ப நல்லவருங்க... ஆனால் அவர் இப்படிப் பண்ணுவார்ன்னு நான் நினைச்சுக்கூடப் பார்க்கலை?" என்றவளின் விழிநீர் அவனின் சட்டைக்கு இடையில் தெரிந்த வெற்று மார்பில் பட,

அவளின் முகத்தைத் தன்னை நோக்கி நிமிர்த்தியவன்....

"நான் காலையில என்ன சொன்னேன்.... உன் கவலை எல்லாம் உன் உடம்பை பத்தியும், என்ன பத்தியும், நம்ம குழந்தையைப் பத்தியும் மட்டும் தான் இருக்கனும்னு... திரும்பவும் ஏன் இவ்வளவு கவலைப்படுற?" என்று கேட்டான் கரிசனத்துடன்....

COPYRIGHTED

11:16 PM
https://drive.google.com/file

இருந்தும் அவளின் முகத்தில் தெளிவில்லாததைப் பார்த்தவன், காலையில் தனக்கும் வினோத்திற்கும் இடையில் நடந்த உரையாடல்களைச் சொல்ல, அவனை நம்பாமல் வழக்கம் போல் கண்களை அகல விரித்து மருண்டப் பார்வைப் பார்க்கவும்,

கருத்தரித்த விஷயத்தைக் கேள்விப்பட்ட நாளில் இருந்து அவளின் மனதில் பூத்திருந்த பூரிப்பின் சாயல் அவள் முகத்திலும் படிந்திருந்ததால், அவளின் அழகு எங்கும் பல மடங்கு பரிமளித்துத் தேவதையைப் போல் காட்சியளித்தவளை கண்டவனின் பார்வையில் இருந்து இதுவரை தெரிந்த கனிவும் இரக்கமும் மாயமாய்ப் பறந்து அந்த இடத்தைத் தாபமும் விரசமும் ஆட்கொண்டது...

முகத்தை மட்டும் தன்னை நோக்கி அன்னாந்துப் பார்த்தவாறு தனது நெஞ்சில் படுத்திருக்க அவளின் செவ்விதழ்கள் வேறு அவனின் முகத்திற்கு வெகு அருகில் இருக்க, மார்பகத்தை மறைத்தோடியிருந்த சேலையும் சிறிதே விலகியிருந்ததில் கண்ணைக் கவரும் சித்திரம் போல் தன் மேல் படர்ந்திருந்தவளைக் கண்டவனுக்கு, மருத்துவர் தாம்பத்தியத்திற்குக் கருத்தரிப்பு தடையில்லை என்று சொல்லியிருந்தாலும் தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு தன்னவளிடம் தன் மென்மையான பக்கத்தையே கடந்த சில நாட்களாகக் காட்டியிருந்தவனிற்குள் அடங்கியிருந்த தாபம் உத்தஸ்தாயிக்கு சென்று அவனின் உறுதியை உடைத்தெறிந்தது...

11:16 PM

https://drive.google.com/file

தன்னவளின் முகத்தை இன்னும் தன்னை நோக்கி நிமிர்த்தியவன் அவளின் முகத்தில் சிதறியிருந்த ஓரிரு முடிகளை விரல்களால் ஒதிக்கியவாறே...

"இப்படி பார்க்க பார்க்க தான் எனக்கு என்னென்னமோ பண்ணனும் தோனுதுடி" என்றவன் அவளின் இதழ் நோக்கி குனிய,

அவனை விட்டு சட்டென்று விலகியவள்..

"என்னங்க.... எவ்வளவு முக்கியமான விஷயம் பத்தி பேசிட்டு இருக்கோம், இப்ப போய்..." என்று இழுக்கக் கடுப்பானவன்...

"சரி... அதுக்காக இப்படித் தள்ளிப் படுத்தே பேச சொல்றியா? என்றான் தாபம் சட்டென்று அறுப்பட்ட கோபத்தில்....

அவனின் கோபத்தைக் கண்டு புன்னகைத்தவள் மீண்டும் அவன் நெஞ்சில் படுத்தவாறே

"இல்லை.... இப்படிப் படுத்தும் பேசலாம்... ஆனால் நீங்க பேசனும்... வேற எதுவும் செய்யக் கூடாது... " என்றவள் அவனின் விழிகளில் தன் விழிகளைப் படறவிட்டு ஆச்சரியத்துடன்...

"நிஜமாவே மஹா அண்ணிய எங்க அண்ணனுக்குக் கொடுப்பீங்களா?" என்றாள்......

COPYRIGHTED

11:16 PM
https://drive.google.com/file

உடலில் உள்ள ஒவ்வொரு நரம்பும் மனைவியுடனான தாம்பாத்தியத்தைக் யாசித்துக் கொண்டிருக்கும் அந்த வேளையில் கூடத் தன்னிலையில் இருந்து இறங்காதவன் விடாப்பிடியாக....

"நான் சொன்ன கண்டிஷன்களை அவங்க இரண்டு பேரும் மீறாமல் இருந்தால்!!" என்றான் அழுத்தமாக...

காதலிக்கறவங்க ஒருத்தருக்கொருத்தர் எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும் என்று அவள் மீண்டும் தன் யோசனை உலகத்திற்குச் செல்ல, அவளை இறுக்கி அணைத்தவன்.....

"திவி, அவங்க பிரச்சனையை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.... முதல்ல என்ன கவனிடி" என்று கூறியவன் அவளுள் மூழ்க துவங்க...

அவனின் அத்து மீறல்களில் கூடக் கவனம் செலுத்தாமல்...

"என்னங்க, நீங்க சொல்ற மாதிரி நிச்சயம் இரண்டு பேரும் இருப்பாங்க.... எனக்கு இரண்டு பேரையும் பத்தி நல்லா தெரியும்.. அது மட்டும் இல்ல, எங்க அண்ணன் நிச்சயம் மஹா அண்ணிய தங்க தட்டுல வச்சு தாங்குவாங்க பாருங்களேன்" என்று அவள் விடாமல் அதேயே பேச,

அவளின் இதகழ்களை விரலால் வருடிவிட்டபடியே....

COPYRIGHTED

11:16 PM
https://drive.google.com/file

"திவி, நீ எப்போ என் லை:ஃபில் வந்தியோ அப்பவே, உன் வீட்டில் இருக்கிறவங்களும் என் லைப்பில் ஒருத்தராகிட்டாங்க... நான் இந்தக் கண்டிஷன்ஸ போட்டதே அவங்க அவங்களோட லவ்வை, லை:ஃப்பை சீரியஸாக எடுத்துக்கனும்னு தான்... வினோத் நல்ல எக்ஸ்பீரியன்ஸ் கெயின் பண்ணட்டும், அவருக்கு நம்ம ஐ டி கம்பெனியில் மேனேஜ்மெண்ட் போஸ்ட் தந்துவிடுகிறேன்" என்றவன்,

"அது சரி... அதென்ன உங்க அண்ணா மட்டும் தான் அவர் வை:ஃப்ப தங்க தட்டுல வச்சு தாங்குவாரா? ஏன் நாங்கெல்லாம் தாங்கலையா?" என்று கேட்டவனின் பார்வை கூர்மையாக அவளின் இதழ்களில் படிய, அவனின் எண்ணம் புரிந்தவள் நாணத்தில் முகம் விகசிக்கத் தன் உதடு மடித்துத் தலைக் கவிழப் போனவளின் மென் இதழ்களைச் சரேலென வெளிவந்த தாபத்தின் பிரவாகத்தினால் சட்டென்று முரட்டுத்தனமாக முற்றுகையிட,

தனது கணவனின் வன்மையான தாம்பத்திய சாகஸங்களுக்கு அவளின் தளிர் மேனி தானாக இளக தன்னவனுக்குள் புதையத் துவங்கியவள் விடியும் வரை வெளி வரவில்லை....

ஆத்மார்த்தமான காதலுடன் கூடிய காமம் அர்ஜூன் திவ்யா தம்பதியரின் இரவை இனிமையான நீண்ட உறங்கா இரவாக மாற்றியது என்றால் காதலில் முதல் அடி எடுத்து வைத்து அதற்குள் வேலிகளையும் கடுமையான சோதனைகளையும் சந்தித்திருந்த இளம் உள்ளங்கள் வினோத் மஹாவிற்கு அந்த இரவு கலக்கத்தையும், அச்சத்தையும், தவிப்பையும் சுமந்த உறங்கா இரவாக மாறிப்போனது....

ஆனால் இது விடியாத இரவு அல்லவே.... அவர்களின் காதல் பயணத்தில் ஏற்றங்களையும் இறக்கங்களையும் சோதனைகளையும் வெற்றிகளையும் மாற்றி மாற்றிச் சுமந்து வரப் போகும் அழகான விடியலை தாங்கி வந்த இரவே அது...

அது காதலில் தத்தளித்துக் கொண்டிருக்கும், மனம் பாரத்துடன் தவித்து இருக்கும் இந்த இளம் காதலர்களுக்குப் புரியுமா?

மலரினும் மெல்லியவள்!

தொடரும்...

COPYRIGHTED

மலரினும் மெல்லியவள்!

பாகம் - 30

வினோத்திடம் தான் கலந்துரையாடி இருந்த விஷயங்களையும், நிபந்தனைகளையும் அவன் நிச்சயம் மஹாவிடம் கூறியிருப்பான் என்று நினைத்திருந்த அர்ஜூனிற்கு அவன் தங்களுக்குள் நடந்ததை மஹாவிடம் மட்டும் அல்ல, திவ்யாவிடம் கூடக் கூறாமல் சென்றுவிட்டிருந்தது வினோத்தின் மீது அர்ஜூனிற்கு ஒரு நல்ல மதிப்பையே கொடுத்தது…

கட்டளை இட்ட முதல் நாளே அவன் அதனைக் கடைப்பிடிக்கத் துவங்கியிருந்தை நினைத்து முறுவலித்தவனுக்கு ஏனோ வினோத் இறுதிவரை தன்னுடைய நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பான் என்று தோன்ற மறு நாள் தன் பெற்றோரிடமும், அருணிடமும் இதனைப் பற்றிப் பேசி அவர்களின் சம்மதமும் பெற்றவன் தன் அன்னையை விட்டு தன் மாமனார் மாமியாரிடமும் பேச சொன்னான்…

திவ்யாவிற்கு ஒரு பக்கம் தன் அண்ணனுக்கு மஹாவை திருமணம் செய்யத் தன் கணவன் சம்மதித்தது, மறு பக்கம் அவனின் எதிர்காலத்திற்கு வழி செய்வதாகச் சொன்னது என்று சந்தோஷம் தாங்கவில்லை...

தன் மனைவியின் மகிழ்ச்சியான முகத்தைப் பார்த்தவனுக்கு "உனக்காக என்ன வேண்டும் என்றாலும் செய்வேண்டி" என்றே தோன்றியது...

நாட்கள் அதன் போக்கில் நகரத் திவ்யாவின் உடலிலும் மாற்றம் வர, நிறமும் களையும் கூடி, மேலெழும்பியிருந்த வயிற்றுடன் கர்ப்பிணிப் பெண்களுக்கே உரிய பூரிப்புடன் இருந்த மனைவியைப் பார்ப்பதற்கு அத்தனை உவகையாக இருந்தது அர்ஜூனிற்கு...

திவ்யாவிற்கு ஏழாம் மாதத்தில் வளைகாப்புச் செய்வது என்றும், அதுவும் அர்ஜூனின் வீட்டிலேயே வளைகாப்பு என்றும், அன்றே பிரசவம் எங்கு வைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானிப்பது என்றும் முடிவாகி இருக்க அந்த அழகிய நாளும் வந்தது...

வளைகாப்பு அன்று திருமணப் பட்டுப்புடவை அணிவதே ஸ்ரீயின் குடும்பத்தினரின் வழக்கம் என்றாலும் திவ்யாவிற்குத் தான் முதன் முதலில் எடுத்துக் கொடுத்த மெஜந்தா நிறப் பட்டுப் புடவையயே அவள் அன்று அணிய வேண்டும் என்று அர்ஜூன் சொல்லியிருந்ததால் புடவையை அணிவதற்காக அதனைப் பீரோவில் இருந்து வெளியில் எடுத்தவளுக்கு அந்தப் புடவையை வாங்கிய நாளும், அன்று மழையில் நனைந்திருந்த தன்னைக் கணவன் பார்த்திருந்த விதமும் நியாபகத்தில் வர தன்னையும் அறியாமல் களுக்கென்று சிரித்து வைத்தாள்...

வளைக்காப்பிற்க்காக கிளம்பி பால்கணியில் நின்று அலை பேசியில் பேசிக் கொண்டிருந்தவனுக்குத் திவ்யாவின் சிரிப்புச் சத்தம் கேட்க அழைப்பைத் துண்டித்துவிட்டு உள்ளே வரவும், அங்கு ஏழாம் மாதக் கர்ப்பத்திற்குரிய மேடிட்டு வயறுடன் இணையற்ற எழிலையும் கர்ப்பத்தின் களையையும் முகத்தில் சுமந்து, தன் கையில் புடவையை வைத்துக் கொண்டு எதனையோ யோசித்தபடியே தடவி கொண்டு இருந்த தன் மனையாளைக் கண்டவனுக்குக் கணவனாய், பிறக்கப் போகும் தன் வாரிசின் தகப்பனாய் கர்வம் தோன்ற, அவளின் அருகே முதுகு புறமாக நெருங்கி நின்றவன் பின் கழுத்தில் ஆழ முகம் புதைக்க,

கணவனின் இந்த எதிர்பாராத செயலில் சட்டென்று திரும்பியவள் பிரமித்துப் போனாள்...

எப்பொழுதுமே ஃபார்மல் உடையிலேயோ அல்லது டி ஷர்ட் ஜீன்ஸிலேயோ பார்த்திருந்த தன் கணவனை முதன் முதலாகப் பட்டு வேஷ்டி, சட்டையில் பார்க்கவும்,

தன் கணவனின் நெடிய அழகிய வலிமையான உருவமும், ஆண்களுக்கே இலக்கணமான கம்பீரத்துடன் கவர்ச்சியையும் ஆளுமையையும் கலந்து ஆணழகனாகவும், தன்னுடன் அவன் சங்கமித்த முதல் நாளில் அவன் விழிகளில் வழிந்த ஆசையைவிட இன்று அதிகமாகக் காதலை கலக்கவிட்டு இருந்தவனின் புன்னைகைப் பூத்த முகமும் திவ்யாவின் மனதிற்குள் சில்லென்ற காற்றைப் போல் ஊடுருவிச் செல்ல, தன்னைக் கண்டதும் கண் சிமிட்ட மறந்து சிலை என நின்ற தன் மனையாளைக் கண்டு பெருமை பொங்க பார்த்தவன்,

"என்னடி அப்படிப் பார்க்கிற?" என்றான் இள முறுவலுடன்...

அவனின் கேள்வியில் சட்டென்று சுய நினைவிற்கு வந்தவள்...

"வேஷ்டி சட்டையில் ரொம்ம்ம்ம்ம்ப அழகா இருக்கீங்க... அதுவும் பட்டு வேஷ்டியும், மெரூன் கலரில் சட்டையும், செம்ம சூப்பர் போங்க" என்றால் தன் கணவன் இவன் என்ற கர்வம் முகத்தில் வழிய....

அவளின் இடைப் பிடித்துத் தன்னை நோக்கி இழுத்தவன் வயிறு இடிக்க, மீண்டும் அவளின் முதுகுப் புறம் வந்தவன் கழுத்தில் முகம் புதைத்து தன்னவளின் பிரத்தியோக வாசனையை முகர்ந்தவாறே...

"நீ என்னைய முழுங்கி விடற மாதிரி பார்த்த பார்வையிலேயே தெரிஞ்சுதே நான் சூப்பரா இருக்கேன்னு" என்று சிரிக்க...

முரட்டு இதழ்கள் கழுத்தில் ஆழப் புதைந்திருந்ததில் அவன் பேசவும், உதடுகள் விரிந்து சுருங்கியதில் கழுத்தில் கூச, உடல் நெளிந்தவள்...

"ம்ப்ச்… விடுங்க…. நான் ட்ரெஸ் பண்ணனும்" என்றாள்….

Likes:Niranjanadevi, Priayamadhavan, sabeenaibu and 36 others

Jelineusa
JB

Apr 5, 2018
#42

"சரி, நீ இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடியே சிரிச்சியே… எதுக்குச் சிரிச்ச?" என்று அவளின் சிரிப்பின் அர்த்தம் புரிந்திருந்தும் புரியாதது போல் கேட்க,

பதில் சொல்ல முடியாமல் வெட்கப்பட்டவள் அவனை விட்டு விலக முயற்சிக்க, அவளின் உடலை சுற்றியிருந்த தன் கரங்களில் அழுத்தத்தைக் கூட்டியவன் கழுத்தில் புதைத்திருந்த முகத்தை விலக்காமலே…

"திவி… ஏன் சிரிச்ச? இந்தப் புடவை எடுத்தது பத்தி நினைச்சியா?" என்றான் விடாமல்….

புடவை எடுத்த அன்று தான் மழையில் முழுவதுமாக நனைந்து இருந்ததையும், தன்னைக் கண்டதும் தன் கணவனின் விழிகளில் வழிந்த ஆர்வத்தையும், தாபத்தையும் நினைவில் கொண்டு வந்தவள்,

பின் இருவரும் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் தான் அறைக் கதவை தாழிடாமல் புடவை மாற்றத் துவங்க, அவன் திடீரென்று கதவைத் திறக்கவும் பதற்றத்தில் மார்பை மறைக்கக் கட்டிலில் இருந்த புடவையை எட்டி எடுக்க, அது நேரம் காலம் தெரியாமல் கீழே விழுந்து விட. பதறிப் போய் மீண்டும் அவன் முன் குனிந்து புடவையை எடுத்து தன் மார்பை மறைப்பதற்குள் தவியாய் தவித்துப் போனதை நினைத்தவளுக்கு இன்று தன் கணவனின் வாரிசை தன் வயிற்றில் சுமந்திருந்தாலும் பெண்களுக்கு இயற்கையின் பரிசான வெட்கமும் கூச்சமும் இன்றும் தோன்ற, முகம் சிவந்தவள் தலைக் கவிழ்ந்து நின்றாள்...

அவளின் மனதில் ஓடிய எண்ணங்களை அன்னியோன்யமான கணவனாகத் தானும் உணர்ந்தவனுக்குத் தன் மனையாளைத் தான் முதன் முதலில் புடைவை இல்லாமல் பார்த்தது இன்றும் அவனின் ஆண்மையைத் தட்டி எழுப்ப கழுத்தில் புதைத்திருந்த முகத்தில் இன்னும் அழுத்தத்தைக் கூட்டியவன் பின் இதழ்களை மெதுவாக அவளின் காதுகளுக்கு இடம் பெயர்ந்து ஏதோ ரகசியம் பேச...

"ஐயோ! என்னங்க இது காலங் காத்தாலேயே? எல்லோரும் நமக்காகக் கீழ காத்துட்டு இருக்காங்க.... கொஞ்சம் நீங்க வெளியே போறீங்களா? நான் ட்ரெஸ் பண்ணனும்" என்று பதறினாள் அவனின் செல்ல மனையாள்....

அவளின் பதற்றத்தையும் ரசித்தவன் ஏற்கனவே தன் மீது முழுவதுமாகச் சாய்ந்திருந்தவளை மேலும் இறுக்கியவாறே...

"ஏண்டி... இப்போ நான் காதுல என்ன சொன்னேன்? நீ என்ன பண்ண சொல்ற?" என்று கிறக்கமான குரலில் கிசுகிசுக்க...

தன் கணவனுக்குத் தன்னை விடும் எண்ணமே இல்லை என்று உணர்ந்தவள்...

"என்னங்க... வேண்டாங்க... ப்ளீஸ்... நேரம் ஆனால் அத்த திட்டுவாங்க... அப்புறம் நல்ல நேரம் தாண்டிடும்" என்று கெஞ்ச...

அவளின் தவிப்பைக் கண்டு சிரித்தவன் இருந்தும் தன் விருப்பத்தை அவள் பூர்த்திச் செய்யாமல் தான் விடப் போவதில்லை என்பது போல் தன் தேவையை அவளுக்கு உணர்த்தும் உறுதியோடு...

"சரி, நான் ஒன்னும் பண்ணலை... ஆனால் நீ, நான் சொன்ன மாதிரி செய்... நான் பேசாம பார்த்திட்டே இருக்கேன்" என்றான்...

காலங்கார்த்தால அதுவும் இத்தனை பேர் கீழே விஷேஷத்திற்கு வந்து நமக்காகக் காத்திருக்கும் பொழுதும் இது என்ன பேச்சு என்று வெட்கத்தின் உச்சிக்கே சென்றவள் அவன் பக்கம் திரும்பி அவனின் மார்பில் கை வைத்து தள்ள முயல,

பிஞ்சுக் கரங்களால் ஆண்மையின் சுயரூபமாக நின்றவனை ஒரு இஞ்ச் கூடத் தள்ள இயலாதவளாய்ப் பரிதாபமாக அவன் முகத்தை நோக்கிப் பார்க்க, அவளின் தவிப்பை கண்டு வாய்விட்டு சிரித்தவன் முகத்தை இறுக்கப் பற்றி, அவளின் மெல்லிய இதழ்களைச் சிறை செய்ய முயற்சிக்க,

இது தான் சமயம் என்பது போல் அவன் நெஞ்சில் இருந்த கரங்களில் அழுத்தத்தைக் கூட்டி அவனைத் தள்ளிவிட்டு குளியல் அறை நோக்கி ஓடினாள் சினுங்கி சிரித்தவாறே அவனின் ஆசை மனைவி...

அவளின் வேகத்தைக் கண்டவன் பதறிப் போய்...

"ஏய் மெதுவாடி... வழுக்கி விழுந்திரப் போகிற" என்று கத்த, கண்டு கொள்ளாது குளியல் அறைக்குள் நுழைந்தவளைக் கண்டவன்....

"திவி, பாத்ரூம் ஃப்ளோர் ஈரமாயிருக்கு... நான் வேனா பால்கணிக்கு போறேன்... இங்க வந்து ட்ரெஸ் பண்ணு" என்றவன் சொன்னது போல் வெளியே சென்றான்...

சில நிமிடங்கள் அறையில் எந்த அரவமும் இல்லாது இருக்க, மெதுவாகத் தலையை நீட்டி வெளியே எட்டிப் பார்த்தவள் தன் கணவன் அறையில் இல்லை என்பதனை உறுதி செய்து புடவையை உடுத்தியவள் தலை சீவி சடைப் பின்னி அடுக்கி தொடுத்திருந்த மல்லிகைச் சரத்தை சூடி என்ன நகை அணியலாம் என்று சந்தேகம் வரவும் அர்ஜூனை உள்ளே அழைக்க...

அறைக்குள் நுழைந்தவனுக்கு அடர்ந்த மெஜந்தா நிறத்தில் தங்க ஜரிகை கரைப் போட்ட பட்டு புடவையில் நகைகள் ஒன்றும் அணியாமலே எளிதான அலங்காரத்தில் கழுத்தின் இருபுறமும் மார்பு வரை நீண்ட மல்லிகைச் சரங்கள் தொங்க சிற்பம் போல் நின்றிருந்த தன் மனையாளைப் பார்த்தவனுக்குச் சிறிது நேரத்திற்கு முன் அடக்கிய மோகம் சீறிக் கொண்டு வெளிவர அடுத்தக் கணம் கணவனின் இறுக்கிய அணைப்பில் இருந்தாள் திவ்யா...

Likes:Niranjanadevi, Priayamadhavan, sabeenaibu and 37 others

Jelineusa

JB

Apr 5, 2018

#43

அது வரை தனது உணர்ச்சிகளை அடக்கி வைத்திருந்தவளுக்குக் கணவனின் அணைப்பு மோகத்தைத் தூண்ட, அவன் முதுகில் வைத்து இருந்த கரங்களில் மேலும் அழுத்தத்தைக் கூட்டியவள் அவனின் உடலை தன் உடலோடு அழுந்திக் கொள்ள, மனையாளின் உணர்வுகளைப் புரிந்துக் கொண்டவனாய் அவள் இதழ்கள் நோக்கி குனிந்தவன் வன்மையாகச் சிறை செய்ய...

நீண்ட நேரம் நீடித்த முத்தத்தைக் கர்ப்பிணி பெண்ணால் தாங்க இயலவில்லை....

மனையாளின் மூச்சுப் போராட்டம் புரியாதவனாய் தாபத்தோடு அவளுக்குள் மேலும் மூழ்க துவங்க, அதற்கு மேலும் தாங்க மாட்டாதவளாய் கணவனிடம் இருந்து தன்னை வலுக்கட்டாயமாகப் பிரித்துக் கொண்டவள் மூச்சு வாங்க அவனை நிமிர்ந்துப் பார்க்க...

அப்பொழுது தான் அவளின் தினறலைக் கவனித்தவன் பதறிப் போனான்...

"ஏண்டி, தினறுதுன்னு சொல்லலாம் இல்லை?"

"ம்ம்ம்... எங்க? சொல்லவிட்டால் தானே?" என்றாள்

மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க...

சிரித்துக் கொண்டவன் "சரி வா" என்று அவளின் தோளை பிடித்துத் தன்னோடு அணைத்தவாறே நடக்க..

"என்னங்க? எனக்கு என்ன நகைப் போடுறதுன்னு தெரியலை" எனவும் அவர்களின் அறைக் கதவு தட்டப்படவும் நேரம் சரியாக இருந்தது...

அறைக்கு வெளியே நின்றிருந்த ஸ்ரீ, திவ்யா கதவைத் திறக்கவும், அவளிடம் தங்களின் பரம்பரை நகையான "ஆண்டிக் ஜ்வெல்லரி" போல் இருக்கும் நகைகளைத் தந்தவர்..

"திவ்யா, இது எங்க பாட்டியுடையது.... எங்க அம்மா எனக்குக் கொடுத்தது... தங்கமும், நவரத்தின கற்களும் பதித்த செட்... இந்தக் குடும்பத்து முதல் வாரிச நீ சுமந்திட்டு இருக்க... அதான் உனக்குக் கொடுக்கலாம்னு கொண்டு வந்தேன்" என்றார்....

தன் மாமியாரின் கரிசனத்தையும் பாசத்தையும் லட்சமாவது தடவையாகப் பார்த்திருந்தவளுக்கு மீண்டும் உள்ளம் குளிர...

"அத்த பாட்டி உங்க அம்மாவிற்குக் கொடுத்ததுன்னா கண்டிப்பாக நீங்க இத மஹா அண்ணிக்கு தான் கொடுக்கனும்" என்று சொல்ல, தன் மருமகளின் பெருந்தன்மையைப் பார்த்தவருக்கு மனம் பெருமையால் நிறைந்தது...

"திவ்யா... மஹாவிற்கும், அருணுக்கு மனைவியா வரப் போறவளுக்கும் வேற செட்ஸ் வச்சிருக்கேன்... மஹா இன்னைக்கு அதத் தான் போட்டுக்கப் போறா... ஆனால் இது எனக்கு ரொம்ப ஸ்பெஷலானது... அர்ஜூனிற்கு வைஃப்பா வரப் போறவளுக்குத் மட்டும் தான் இதக் கொடுக்கனும்னு நான் ஏற்கனவே முடிவு பண்ணியிருந்தேன்... இத இப்ப உனக்குக் கொடுக்கறதுல எனக்கு ரொம்பச் சந்தோஷம்" என்றவர் அவளின் கரம் பற்றி நகைகளைக் கொடுக்க...

யோசனையுடன் அர்ஜூனை நோக்கி பார்த்தவளைக் கண்டவன் வாங்கிக் கொள் என்பது போல் தலை அசைத்தான்...

கண்களில் நீர் தளும்ப அதை வாங்கியவள் ஸ்ரீயிடம்...

"நீங்களே போட்டு விடுங்க அத்த.." என்று கூற,

அவள் கைகளில் இருந்து நகைகளை வாங்கிய

அர்ஜுன் அருகில் இருந்த மேஜையில் அதை வைத்து அதில் இருந்த நெக்லஸை தானே எடுத்து அவளின் கழுத்தில் போட துவங்க ஸ்ரீ புன்னகையுடன் அங்கிருந்து நகர்ந்தார்...

"என்னங்க, அத்த முன்னாடி என்ன இது?" என்று வெட்கப்பட்ட மனையாளைக் கண்டவன் புன்முறுவலுடன்,

"ஏன்? நான் என் வைஃபுக்கு போடுறேன்,... இதில் என்னடி இருக்கு?" என்று கூறியவன் நகைகளைப் போட்டவுடன் அவளைத் தன்னை நோக்கித் திருப்ப, நகைகள் அற்ற எளிமையான அலங்காரத்திலேயே தன்னை மயக்கியவள் இப்பொழுது தங்கமும் நவரத்தினங்களும் கலந்து இழைந்தோடிய நகைகளில் மேலும் அழகுற ஜொலித்தவள் எழிலின் விளிம்பைத் தொட்டிருக்க, அவளின் முகம் நோக்கி குனிந்தவன் பட்டுக் கன்னத்தில் தன் உதடுகளைப் புதைத்த வண்ணம்....

"நான் கேட்டதை நீ கொடுக்காத வரை இன்னைக்கு உன்னை நான் தூங்க விடமாட்டேன்... மறந்திடாத" என்றான் காமம் வழியும் குரலில்...

அவனின் மென் முத்தத்தில் சிலிர்த்தவள் அவன் கரத்தைப் பற்றி இழுத்து அறைக்கு வெளியே கூட்டிச்

செல்ல, மாடியில் இருந்து கணவன் மனைவி இருவரும் ஒன்றாகக் கீழிறங்கி வரவும் திவ்யாவின் கொலுசு சத்தத்தில் அவர்களை நிமிர்ந்து பார்த்த விருந்தினர்களும் பெற்றோர்களும் அசந்து போனார்கள்...

Likes:Niranjanadevi, Priayamadhavan, sabeenaibu and 35 others

Jelineusa
JB

Apr 5, 2018
#44

கொள்ளை அழகுடனும் தாய்மையின் பூரிப்புடனும் பட்டுப் புடவையில் திவ்யா தேவதைப் போல் இறங்கி வர, அவளைத் தன்னுடன் அணைத்தவாறே அவளின் தோள் பிடித்து அர்ஜூன் அழைத்து வர, பார்ப்பவர்கள் அனைவரின் கண்களும் கொள்ளைப் போனது...

பட்டுப் புடவையிலும் நவரத்தின மாலையிலும் திவ்யா பேரழகியாகத் தெரிந்தாள் என்றால், முதன் முறையாகப் பட்டு வேஷ்டி சட்டையில் அசத்தலான கம்பீரத்துடனும் கவர்ச்சியான ஆளுமையுடன் இருந்தான் அர்ஜூன்...

அனைவரையும் பார்த்து சிரித்த வண்ணம் இளையவர்கள் படிகளில் இறங்கி வர, இவர்கள் இருவரும் ஒன்று சேர்வார்களா என்று கதி கலங்கிக் கொண்டிருந்த பெரியவர்களுக்குச் சின்னவர்களின் ஒற்றுமையும், அதுவும் அர்ஜூன் தன் மனையாளை அணைத்தவாறே அவளின் வேகத்திற்கு ஏற்றவாறு

பொறுமையாக அவளுடன் இணைந்து படிகளில் இறங்கிவரும் அழகும் அத்தனை பூரிப்பை கொண்டு வந்திருந்தது…

கூடி இருந்த அனைவரின் மனமும் மகிழ்ச்சியில் குதூகலித்துக் கொண்டிருக்க, இரண்டு உள்ளங்கள் மட்டும் இத்தனை கூட்டத்திலும் தனித்து விடப்பட்டது போல் கலங்கித் தவித்து இருந்தது…

தங்கையின் வளைக்காப்பிற்குத் தன் பெற்றோருடன் சேர்ந்து அன்று காலையில் தான் சென்னை வந்திருந்த வினோத் வீட்டில் நுழைந்ததில் இருந்து மறந்தும் மஹாவை நிமிர்ந்து பார்க்கவில்லை…

அடர்ந்த வயலட் நிறத்தில் சன்னமான தங்க சரிகை கரைப் போட்டு நெய்திருந்த பட்டுப் புடவையில், தன் அன்னைக் கொடுத்திருந்த நகைகளை அணிந்து முடியை தளரப் பின்னி திவ்யாவைப் போன்று கழுத்தின் இருபக்கமும் மார்பு வரை தொங்கும் மல்லிகைச் சரங்களைச் சூடியிருந்தவள் தன்னவனை ஏக்கத்துடன் பார்த்தவாறே இருக்க,

பார்ப்பவர்களைக் கண்ட விநாடியே அடியோட அசத்தி வீழ்த்தும் பளிங்கு நிற மேனியவளைப் பார்த்தும் அவன் பார்க்காதது போல் இருக்க, அவனின் புறக்கனிப்பின் காரணம் முழுமையாகப் புரிந்திருந்தாலும், காதல்

கொண்ட பூ மனம் ஏற்றுக் கொள்ள மறுத்து வேதனையில் வெடித்து மௌனமாய்க் கதறியது…

ஹாலில் மற்ற விருந்தினர்களுடன் சேர்ந்து அமர்ந்துப் பேசிக் கொண்டிருந்த வினோத் மஹா தன் அறையில் இருந்த வெளி வந்த நிமிடம் தன்னையும் அறியாமல் நிமிர்ந்துப் பார்க்க, அழகான சிற்பம் போல் தன்னை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே படிகளில் இறங்கிக் கொண்டிருக்கும் தன் தேவதையின் அழகு கூட அவன் கண்களை இழுக்காமல் அவளைப் பார்த்த அந்த விநாடியே தன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்….

அவனின் எண்ணம் முழுவதும் எப்பாடுப் பட்டாவது அவளைத் தன் மனைவியாக அடைய வேண்டும்…

அதற்கு இது போல் எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் தன்னால் தாங்கிக் கொள்ள இயலும் என்று தன் மனதினைச் சுற்றிக் கற்பாறையினால் கட்டப்பட்ட கோட்டைச் சுவற்றை எழுப்பிக் கொள்ள, இவர்களின் ஏக்கமும் போராட்டமும் அர்ஜூனின் கண்களில் இருந்தும் தப்பவில்லை…

திவ்யாவுடன் வீட்டின் ஹாலிற்கு வந்த அர்ஜூன் அனைவரையும் வரவேற்றுவிட்டு வினோத்தின் அருகே சென்று அமர, ஏற்கனவே தன் மீது தப்பித் தவறி

கூடப் பார்வையைச் செலுத்தாத வினோத்தைக் கண்டவளுக்கு "கிழிஞ்சது போ" என்பது போல் இருந்தது...

ஹாலில் நடுவில் போடப்பட்டிருந்த நாற்காலிக்கு முன், ஒரு கலசத்தில் தண்ணீரும், மாமர இலைகளும், புற்களும் தேங்காயும் வைக்கப்பட்டிருக்க, ஹாலிற்கு வந்த திவ்யா கூடியிருந்த அனைவரையும் இரு கரங்கள் கூப்பி வரவேற்க, அவளை நாற்காலியில் அமரச் செய்தவர்கள் அழகாக இறுக்கித் தொடுத்திருந்த ரோஜா மலர் மாலையை அவள் கழுத்தில் அணிவித்து நலுங்கைத் துவங்க,

திவ்யாவின் அருகில் நின்றிருந்த மஹாவின் கரங்களில் ஏந்தியிருந்த தட்டில் மஞ்சளும், குங்குமம், வெத்தலையும் பாக்குக்கும் வகையாகப் பிரித்து வைக்கப் பட்டிருக்க, அதன் நடுவில் அழகாகச் சிகப்பு நிறத்திலும், பச்சை நிறத்திலும் கலந்து அடுக்கி வைக்கப்பட்டிருந்த வளையல்களைப் பெண்கள் ஒவ்வொருவராக வந்து திவ்யாவிற்கு அணிவிக்கத் துவங்க, வளையல் போடும் முன் அவளின் கைகளிலும் கன்னத்திலும் சந்தனம் பூசவும்,

வீடே மங்கலகரமான வாசனையிலும், கலகலப்பான சிரிப்பிலும், உள்ளங்கள் அனைத்தும் மகிழ்ச்சியிலும் மூழ்கியிருந்தது என்றால் தன் மனையாளை நாற்காலில் அமர வைத்து நலுங்கு செய்யத் துவங்கிய

நிமிடத்தில் இருந்து விழுங்கிவிடுவது போல் பார்த்திருந்த அர்ஜூனின் இதயத்தை அவளின் கொள்ளை அழகு எப்பொழுதோ கொள்ளை அடித்துவிட்டு சென்று இருந்தது...

தன்னவளின் அழகில் மதி மயங்கி இருந்தவன், அவள் நாற்காலியில் அமர முடியாமல் மேடிட்ட வயிற்றுடன் அமர்ந்திருக்க, கணவனாகக் கர்வம் கொண்டவனின் முகத்தில் பெருமையின் சாயல் அப்பட்டமாகத் தெரிய,

அவளை அங்கு அமர வைத்தில் இருந்தே கண்கள் வழியாகவே விழுங்கிவிடுவது போல் பார்த்திருந்தவனுக்கு, ஒவ்வொருவரும் வளையல் அணிவிக்கும் பொழுது அவர்களைப் பார்த்து முகம் செம்மையுற பூரிப்புடன் மென்மையாகச் சிரித்துக் கொண்டிருந்தவளை கண்டிருந்தவனுக்கு அப்படியே அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல் இருக்க,

அவள் தன்னை நிமிர்ந்து பார்த்ததும் கண் சிமிட்டியவனைக் கண்டவளுக்கு வெட்கத்தில் முகம் அந்திவானமாய்ச் சிவந்து போனது...

வந்திருந்த பெண்கள் ஒருவர் பின் வளையல்களை அணிந்து முடிக்கவும், இறுதியில் அர்ஜூனை வரச் சொல்ல, அவன் எழுந்ததும் திவ்யாவிற்குச் சட்டென்று அவன் தாலிப் பெருக்கென்று செய்த குறும்பு

நியாபகத்தில் வர ஏற்கனவே செவ்வானமாய்ச் சிவந்திருந்தது முகம், இதில் நாணத்தில் விளிம்பைத் தொட்டதால் உடல் சிலிர்க்க,

அவனையே நிமிர்ந்துப் பார்த்திருந்தவளின் அருகில் வந்தவன் அவள் பட்டுக் கன்னத்தில் மென்மையாகச் சந்தனத்தை எடுத்து பூசியவாறே காதிற்கருகில் குனிந்து...

"ரொம்ப அழகா இருக்கத் திவி.... இப்பவே அப்படியே தூக்கிட்டு போயிடனும் போல இருக்குடி" என்று கிசுகிசுத்தான்...

அவனின் கிசுகிசுப்பான குரலில் மனம் கிறங்கியவள், இருந்தும் இத்தனை பேர் சுற்றி இருக்கும் பொழுது இது என்ன என்று வெட்கத்தில் தலை கவிழ, இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீக்கும் கலாவிற்கும் இந்த நாளுக்காகத் தான் இத்தனை வருடங்கள் தோழிகள் இருவரும் பிரிந்திருந்தோமோ என்றே தோன்றியது...

மனையாளின் மென் கன்னத்தில் அதைவிட மென்மையாகச் சந்தனத்தைப் பூசி முடித்தவன் மஹாவைப் திரும்பி பார்த்து தலை அசைக்க, சரி என்றவள் தன் அருகில் வைத்திருந்த அந்த நகைப் பெட்டியை அவனிடம் தந்தாள்...

திரும்பி தன் அன்னையைப் பார்த்து "இதனையும் போடவா?" என்றவனின் கைகளில் பார்ப்பவர்களின் கண்களைப் பறிப்பது போல் அத்தனை அழகுடன் இரு ஜோடி வைர வளையல்கள் இருந்தது...

கணவனையே பார்த்துக் கொண்டிருந்த திவ்யாவிற்கு இப்போ எதுக்கு இவ்வளவு விலை உயர்ந்த வளையல்கள் என்று தோன்ற, அவனின் முகத்தையே கண்கள் இமைக்காமல் பார்த்திருந்தவளைக் கண்டவனுக்கு அவள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது புரிய, புன்னகைத்தவாறே தன் அன்னையை மீண்டும் திரும்பிப் பார்க்க...

திவ்யாவின் கைகளில் இருந்த வளையல்களைக் கணக்கு பார்த்தவர் அவன் இரு ஜோடி வைத்திருப்பதைப் பார்த்து சரி....

"கண்ணாடி வளையல்கள் ஒரு ஜோடியும் போடுப்பா.... அப்போ தான் கணக்கு சரியா வரும்" என்றார்...

தன்னவளின் மலர் கரங்களுக்கு வலிக்குமோ என்பது போல் மெல்ல பற்றியவன் கண்ணாடி வளையல்களை அணிவித்துவிட்டு வைர வளையல்களை அணிவிக்க, அவன் முகத்தில் இருந்து தன் பார்வையை எடுக்காதவாறே தயக்கத்துடன் மெல்லிய அவனுக்கு

மட்டுமே கேட்குமான குரலில்....

"இது எதுக்குங்க?" என்றாள்...

ஆனால் என்று அர்ஜுன் சுற்றி இருப்பவர்களைப் பார்த்து தன் இயல்பை மாற்றியிருக்கிறான்...

அவள் மெதுவாகக் கேட்டாலும் அவன் சிறிது சத்தமாகவே...

"இது எனக்காக, என்னைய மட்டுமே நினைச்சுக்கிட்டு இருக்கிற என் வைஃப்புக்கு" என்று கூற,

அங்கிருந்தவர்கள் அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி பொங்க, திவ்யாவிற்குத் தன் கணவனின் கூற்றில் அவனுடன் சேர்ந்து ஒன்று கொள்ள வேண்டும் போல் என்று இருந்தது...

Likes:Niranjanadevi, Priayamadhavan, sabeenaibu and 39 others

Jelineusa

JB

Apr 5, 2018

#45

வளைக்காப்பு முடிந்து அனைவரும் விருந்து உண்ண செல்லவும், வினோத்திடம் தனிமையில் பேச ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று தவித்த மஹாவிற்கு

அவனின் போக்கும் பார்வையும் நிச்சயம் தன்னிடம் பேச மாட்டான் என்பதனை உணர்த்த என்ன நடந்தாலும் சரி என்று முடிவெடுத்தவள் ஹாலில் அமர்ந்து திவ்யாவுடன் பேசிக் கொண்டிருந்த அர்ஜூனின் அருகில் சென்றவள் மௌனமாக நிற்க,

அவளை நிமிர்ந்து பார்த்தவன் அவளின் முகத்தில் தெரிந்த கலக்கத்தைக் கண்டதும்....

"யெஸ் மஹா?" என்றான்....

மஹாவிற்கு அவன் கேட்ட தோரணையிலேயே தெரிந்து போனது தன் அண்ணனின் பதில் என்னவாக இருக்கும் என்று.... அர்ஜூனிற்கும் தெரியும் தன் தங்கை என்ன பேசப் போகிறாள் என்று...

தயங்கியவாறே அவன் அருகில் அமர்ந்தவள், மெல்லிய குரலில்...

"அண்ணா எனக்கு வினோத்திடம் கொஞ்சம் பேசனும்... நீங்க சொன்னதினால் அவர் என் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டேங்கிறாரு... ப்ளீஸ் அண்ணா... இந்த ஒரு தடவை அண்ணா.... அப்புறம் ப்ராமிஸா நீங்க சொல்ற வரைக்கும் நான் அவர்கிட்ட பேசவே மாட்டேன்" என்று அழுதுவிடுபவள் போல் கெஞ்ச,

அர்ஜூனின் அருகில் இருந்த திவ்யாவிற்கு மஹாவின் நிலைமையைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது...

ஏதோ சொல்ல வந்த தன் கணவனின் கையைப் பிடித்தவள் அவனைக் கலக்கத்தோடு பார்த்திருக்க, மனையாளைத் திரும்பி பார்த்தவன், மீண்டும் மஹாவைத் திரும்பி பார்த்து அருகில் இருந்த சேரைக் காட்டி உட்கார் என்றான்...

அர்ஜூனின் இறுகிய முகமும், தன்னைப் பார்த்திருந்த கூர்மையான பார்வையையுமே மஹாவிற்கு வெளிப்படுத்தியிருந்தது நிச்சயம் தன் அண்ணன் தன் விருப்பத்திற்குச் சம்மதிக்க மாட்டார் என்று....

மனைவிக்கு வளைக்காப்பு... இவர்கள் இருவரின் மனம் முழுவதும் இன்னும் இரு மாதங்களில் பிறக்கப் போகும் தங்களின் வாரிசை நினைத்து மகிழ்சியில் திளைத்திருக்கிறது......

இது ஒரு ஆண்மகனிற்கு அவன் வாழ்நாளில் எத்தனை மகிழ்ச்சியான தருணம்.... ஆனால் இன்று கூட எப்பொழுதும் இருப்பது போல் அதே கடினம், அழுத்தம் என்று நினைத்தவள் அமைதியாக அமர்ந்தாள்...

அவளை ஆழ்ந்துப் பார்த்தவாறே அவள் முன் குனிந்து அவளின் கரம் பற்றி, தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டவன்,

'மஹா.... நான் சொன்ன வார்த்தைகளை வினோத் காப்பாத்தறாரு.... காலையில் இருந்து நானும் வாட்ச் பண்ணிட்டு இருக்கேன்.... அவர் மனசில உன் மேல் எத்தனை ஆசையிருக்குன்னு நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை.... இருந்தும் அவர் தன்னக் கட்டுப்படுத்திக் கொண்டு உன்னைப் பார்க்காம கூட இருக்காருன்னா அவரோட லவ்வ நீ புரிஞ்சுக்கனும்... உன்னைய விட்டுக் கொடுத்திடக் கூடாதுன்னு தான் தன்னைத் தானே கஷ்டப்படுத்திக்கிட்டு இருக்காரு.... ஆனால் நீ என் தங்கை... நீயே நான் போட்ட கண்டிஷன்ஸை காப்பத்தலைன்னா அவர் என்ன நினைப்பார்? ஏதோ பெரிய இது மாதிரி கண்டிஷன் எல்லாம் போட்டான், ஆனால் அவன் தங்கையாலேயே அத காப்பாத்த முடியலைன்னு நினைக்கமாட்டாரா? என்றான் நிதானமாக ஆனால் அழுத்தமான குரலில்...

அர்ஜூனின் கூற்றில் தலை கவிழ்ந்தவாறே மஹா அமர்ந்திருக்கவும், அவளின் உள்ள உணர்வுகளை ஒரு பெண்ணாக உணர்ந்து கொண்ட திவ்யாவிற்கு மனம் வலித்தது...

வினோத் எதுவும் நினைக்கமாட்டாரா என்ற தன் கணவனின் கேள்விக்குத் தன் அண்ணனின் குணத்தை எடுத்துக் கூறும் வகையில்...

"இல்ல... எங்க அண்ணன் அப்படி எல்லாம் நினைக்க மாட்டார்" என்று மெதுவாகக் கூற,

அவளைச் சட்டென்று திரும்பி பார்த்த அர்ஜூனின் கூரிய ஆழமான பார்வையில் நெஞ்சு கூடு பயத்தில் நடுங்க, சப்த நாடியும் அடங்கி ஒடுங்கியதில் தலைக் கவிழ்ந்தவள் அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் அமைதியாகிப் போனாள்...

மீண்டும் மஹாவைத் திரும்பி பார்த்தவன்...

"உங்க ஃபீலிங்ஸ் எனக்குப் புரியுது மஹா... ஆனால் நீங்க இரண்டு பேருமே இன்னும் காலேஜ் கூட முடிக்கலை... இப்போ உங்க இரண்டு பேரோட கவனமும் படிப்புல மட்டும் தான் இருக்கனும்... அதுவும் வினோத்தோட நிலைமையைப் பாரு... இப்போ லவ் அப்படி இப்படின்னு அலைஞ்சா நிச்சயம் அவர் மனம் தடுமாறும்... அப்புறம் உங்க இரண்டு பேராலயும் ஒரு நல்ல லைஃப் அமைச்சுக்க முடியாது... என்னால எல்லா உதவியும் செய்ய முடியும், ஆனால் என்ன விட உனக்கு வினோத்தைப் பத்தி நல்லா தெரியும்... நிச்சயம் அவர் தன் காலில் தான் நிற்கனும்னு நினைப்பாரு... அஸ் அ

லவ்வர் அண்ட் அப் பியான்ஸி [As a lover and a Fiancee] நீ தான் அவருக்கு உறுதுணையாக இருக்கனும்... அவரோட வளர்ச்சிக்கும் நீ தடையா இருக்கக் கூடாது" என்றான் அழுத்தம் திருத்தமாக...

தன் அண்ணனின் அறிவுறையில் உள்ள உண்மை புரிந்ததனால் மட்டும் அல்ல...

ஏற்கனவே இரண்டு முறைகள் வினோ தன் கட்டுப்பாட்டை இழந்து தன்னிடம் நடந்து கொண்ட முறையையும் யோசித்தவள் அவன் மிகவும் உணர்ச்சி வசப்படுகிறவனாக இருக்கிறான்... இந்த நேரத்தில் அவன் மனம் தடுமாற நாமே காரணம் ஆகக்கூடாது என்று முடிவெடுத்தாள்...

"சரிண்ணா" என்றவள் புன்னகையுடன் கிளம்பினாலும் அவள் எவ்வளவு வருத்தத்தில் இருக்கிறாள் என்று திவ்யாவிற்குப் புரிந்தது,

புரிந்து என்ன பயன்? எப்பொழுது யாருக்கு அவள் கணவனை எதிர்த்து பேச தைரியம் இருந்திருக்கிறது!!!

Likes:Niranjanadevi, Priayamadhavan, sabeenaibu and 40 others

Jelineusa
JB

Apr 5, 2018
#46

வளைக்காப்பு முடிந்து விருந்தினர் அனைவரும் கிளம்ப, ஹாலில் குடும்பத்தினர் மட்டுமே அமர்ந்திருந்தனர்...

திவ்யாவை தன் தோள் வளைவுக்குள் வைத்திருந்த படியே அர்ஜூன் அமர்ந்திருக்க, ஏதேதோ விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவர்களைக் குறுக்கிட்ட கலா தயங்கிவாறே மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார்...

"மாப்பிள்ளை.. வழக்கமாக முதல் பிரசவம் தாய் வீட்டில் தான் பார்க்க வேண்டும்ன்னு உங்களுக்குத் தெரியும்... ஆனால் நிச்சயம் நீங்க திவ்யாவ எங்க வீட்டிற்கு விடப் போவது இல்லைன்னும் தெரியும்... ஆனால பெத்தவளா எனக்கும் ரொம்ப ஆசையா இருக்கு மாப்பிள்ளை... நான் திவ்யாவ கூட்டிட்டு போகவா?... ரொம்ப நாள் இல்லை.. சும்மா ஒரு இரண்டு வாரமாவாவது அவளை என் கூட வச்சு பார்க்கனும்னு ஆசையா இருக்கு" என்றார்...

அர்ஜூன் நிச்சயமாக இதற்குச் சம்மதிக்க மாட்டான் என்று தெரியும்... திவ்யா தாய்மை அடைந்திருந்த விஷயம் கேள்விப்பட்டதை அறிந்த நாளில் இருந்தே அவள் எங்குச் செல்ல வேண்டும் என்றாலும் தான் எத்தனை முக்கிய வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவனே வந்து கூட்டி செல்வதை வழக்கமாக வைத்து இருந்தான்...

ஒரு வேளை தன்னால் வர இயலவில்லை என்றால் திவ்யாவை அவன் எங்கும் வெளியில் செல்ல அனுமதித்ததில்லை....

இருந்தும் முதன் முறைக் கருத்தரித்திருக்கும் தங்களின் ஒரே செல்ல மகள் தங்களோடு சில நாட்களாவது இருக்க வேண்டும் என்றும் அவளின் அன்னை ஆசைப் படுவதிலும் தவறில்லையே...

அது வரை வேறு ஏதோ பேசிக் கொண்டிருந்தவன், அவரின் கேள்வியில் விருட்டென்று அவரைத் திரும்பி பார்க்க, அந்தக் கூர்மையான, ஆழமான, புருவங்களைச் சுருக்கிய ஒற்றைப் பார்வையிலே தெரிந்து போனது தன் மாமியாரின் கேள்விக்கு அவன் சொல்லப் போகும் பதில் என்னெவென்று...

ஆனால் கலாவின் ஆசையும் நியாயமானது தானே? ஸ்ரீக்கு அர்ஜூன் சொல்ல வருவது என்னவென்று தெரிந்திருந்தாலும் அதனை எப்படிச் சொல்லப் போகிறானோ? யார் மனதையும் புன்படுத்தாமல் சொல்ல வேண்டுமே என்று கலக்கமாக இருக்க,

சிறிதும் தயக்கம் இல்லாமல் கம்பீரமான அழுத்தமான குரலில்....

"எனக்குப் புரியுது உங்க ஆசை... அதே சமயம் நீங்களும் ஒன்னு புரிஞ்சுக்கனும்.. இன்னும் டூ மன்த்ஸ் தான் இருக்கு இவளோடு டெலிவரிக்கு... ஃபர்ஸ்ட் ஆஃப் ஆல், நான் இவள அவ்வளவு தூரம் ட்ரேவல் பண்ண விட முடியாது... இவள் இங்க எங்கேயாவது போறதுன்னாக் கூட முடிந்த வரை நான் தான் கூட்டிட்டு போறேன்... இதுல அவ்வளவு தூரம், நோ சேன்ஸ்... அப்புறம் இங்க இருக்கிற வசதி நிச்சயம் அங்க கிடையாது... நான் உங்க வீட்டப் பத்தியோ வேற எதைப் பத்தியோ பேசலை... இவ பிறந்து வளர்ந்த வீடு அது...அதனால் அங்க இருப்பது நிச்சயம் இவளுக்குக் கஷ்டமா இருக்காது... ஆனால் அங்க ஹாஸ்பிட்டல் வசதி அவ்வளவா இல்லை... ஏதாவது எமெர்ஜென்ஸின்னா என்னா பண்ணுவீங்க? இவள அங்க விட்டுட்டு இங்க என்னால ஒவ்வொரு நிமிஷமும் பயந்துக்கிட்டு இருக்க முடியாது... " என்றவன்...

கலாவின் முகத்தில் தெரிந்த கலக்கத்தையும் ஏமாற்றத்தையும் கண்டவன் தன் மனையாளை திரும்பி பார்த்துப் பின் தன் மாமியாரை நோக்கியவன்...

"அதுக்குப் பதில் நீங்க இங்க இவ கூடத் தங்கிடுங்களேன்... திவிக்கும் சந்தோஷமா இருக்கும்" என்றவனின் தோரணை இதுனுடன் இந்தப் பேச்சை முடித்துக் கொண்டால் நல்லது என்பது போல் இருந்தது...

தன் செல்ல மனைவி கர்ப்பம் தரித்ததில் இருந்து, தன் முதல் வாரிசைச் சுமந்திருப்பதை அறிந்ததில் இருந்து அவளைத் தனித்து விடாமல் தன் அன்னையோ அல்லது வேறு ஒருவரோ எப்பொழுதும் அவளுடன் துணையாக இருக்குமாறுப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு,

தன் மனைவியின் அம்மா வீட்டிற்கு அனுப்பினால் தினந்தோறும், ஒவ்வொரு நிமிடமும் அவள் எப்படி இருக்கின்றாள்? அவளுக்கு ஏதாவது ஆகிவிடுமோ? என்று அஞ்சி அவளைத் அவள் பெற்றோர் வீட்டிற்குக் கூட அனுப்பாமல் அவளைத் தன் கண்களில் சுமந்து பார்த்துக் கொண்டவனுக்கு எங்குத் தெரியப் போகிறது அவனின் மனையாள் பிரசவ வலி எடுக்கும் பொழுதும், அவள் வலியால் துடித்துக் கதறி தன் அருகாமையைத் தேடும் பொழுதும், தான் அவள் அருகில் இருக்கப் போவதில்லை என்று!!

தரையில் அவளின் பட்டுக் கால்கள் படாமல் அவளைத் தாங்கிக் கொண்டிருந்தவனுக்கு, மனைவியின் முகம் சுனங்காமல் விழிகளில் சிறிதேனும் அச்சத்தையும், சஞ்சலத்தையும், கலக்கத்தையும் அவள் சுமந்திருந்தாலும் தன் இதயத்தில் வலி ஏற்படுவது போல் உணர்ந்து அவளைத் தன் நெஞ்சிலேயே சுமந்திருந்தவனுக்கு, அவளின் வயிற்றுப் பாரத்தைத் தவிர அவள் மனதிலோ உடலிலோ வேறு ஏதும் பாரங்கள் சுமக்காமல் அவளைத் தன் தலையில் வைத்து தாங்கிக் கொண்டிருந்தவனுக்கு,

எங்குத் தெரியப் போகிறது அவள் தன் வயிற்றின் பாரத்தை இந்தப் பூமியில் இறக்கி வைக்கும் நேரம் நெருங்கும் பொழுது தானில்லாத இடத்தில் தனித்துக் கட்டாந்தரையில் அலறித் துடித்துத் தனிமையில் அழுது கதறப் போகிறாள் என்று?

விதியின் விளையாட்டு ஒவ்வொருவர் வாழ்க்கையில் பெரும் பங்கு ஆகிற்றே??

இது தெரியாமல் இதோ தன் மாமியார் தன் மனைவியைத் தங்களுடன் அழைத்துச் செல்லவா என்ற கேள்வியே பிடிக்காதது போல் தன்னவளைத் தன் தோள் வளைவுக்குள் வைத்திருந்தவன் அவளைத் தன்னை நோக்கி இன்னும் இழுத்து கோழி தன் குஞ்சைக் காப்பது போல் தன் சிறகுகளுக்குள் வைத்துக் கொண்டான் அந்தக் காதல் கணவன்!!!!!

மலரினும் மெல்லியவள்!

தொடரும்...

Likes:Niranjanadevi, Priayamadhavan, umahera and 68 others

Jelineusa
JB

Apr 5, 2018

#47
ப்ரெண்ட்ஸ்,

மலரினும் மெல்லியவள் அத்தியாயம் முப்பதைப் பதிவு செய்திருக்கிறேன்... நமது தளம் புதுப்பொலிவோடு தூள் கிளப்புது... அதனால் என்னுடைய வழக்கமான விதத்திலேயே இந்த அத்தியாயத்தைப் பதிவு செய்திருக்கிறேன்..

இதுப் போன்று நான் போடுவது உங்களுக்கு பிடித்திருக்கிறதா அல்லது கூகுல் லிங் வேணுமான்னு சொல்லுங்க...

ஒகே. இப்போ கதைக்கு வருவோம்..

அர்ஜூன் திவ்யா திருமணத்தில் துவங்கிய அவர்களின் வாழ்வோடு இணைந்த நாமும் இப்பொழுது திவ்யாவின் வளைகாப்பு வரை வந்தாச்சு.. அவர்களின் மகிழ்ச்சியில் நாமும் இன்று பங்கெடுப்போம்

படிச்சுட்டு உங்கள் கருத்துக்களை சொல்லுங்கள் ப்ளீஸ்...

ஆவலுடனும் எதிர்பார்ப்புடனும்

ஜே.பி

Likes:Sengasaravanan, sabeenaibu, shanbagavalli and 51 others

Jelineusa
JB

Apr 6, 2018
#48
மலரினும் மெல்லியவள்!!!

பாகம் - 31

அர்ஜூன் தன் மாமியாரிடம் தன் மனைவியை எங்கும் விடமாட்டேன் என்று உறுதியாகப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே தனது அரவணைப்பிற்குள் அவளை மேலும் இழுத்து, அவளின் தோளில்போட்டிருந்த கையில் கொடுத்த அழுத்தத்தை வைத்தே திவ்யாவால் தன் கணவனின் உள்ள உணர்வுகளை உணர முடிந்தது.....

நிச்சயம் இவர் என்னை எக்காரணத்தைக் கொண்டும் என் அம்மா வீட்டிற்கு அனுப்ப போவதில்லை என்று...

அதே போல் கலாவிற்கும் திவ்யாவுடன் சென்னையிலேயே தங்கி அவளைப் பார்த்துக் கொள்ளக் கொள்ளை ஆசை தான்.... ஆனால் அவரின் இப்பொழுதையே குடும்பச் சூழ்நிலைப்படி அவர் வேலைக்குப் போயே ஆக வேண்டும்...

அதே போல் வினோத்திற்கும், தன் கணவருக்கும் தன்னுடைய தேவை இருப்பதால் அவரால் அதற்கு மேலும் வேறு எதுவும் பேச முடியவில்லை...

அப்படியே பேசினாலும் அவர் மருமகன் கேட்டுவிட்டாலும்....

ஸ்ரீயின் அண்ணன் மகன் சுந்தரேசன் தன்னைக் காதலிப்பதாகத் தெரிந்ததும் அவர் தந்தை ருத்ரமூர்த்தி ஆடிய ருத்ரதாண்டவத்தில் அப்பாவியான கலா அந்த ஊரைவிட்டே சென்றது இப்பொழுது அவரின் ஞயாபகத்திற்கு வர, இன்று அவரையே உரித்து வைத்தது போல் பிறந்திருக்கும் அவரின் பேரன்

அர்ஜூன் தன்னைச் சில நிமிடங்களுக்கு முன் சடாரென்று திரும்பிப் பார்த்த ஒற்றைக் கூரியப் பார்வையில் ருத்ரமூர்த்தியே மீண்டும் மண்ணில் உதித்துவிட்டாரோ என்று தோன்றியதில் கலங்கிப் போனவருக்கு இனி தன் மருமகனை எதிர்த்துக் கேள்விக் கேட்கும் தைரியம் வருமா???

ஆனால் இத்தனையிலும் அர்ஜூன் திவ்யாவை தன் உயிராக நேசித்து, காதலுடன் அவளைத் தன் கரங்களில் தாங்கிக் கொண்டு இருப்பதைக் கண்டு கொண்டு இருக்கிறாரே....

அவன் பார்வை எந்த நிமிடமும் தன் மனையாளை விட்டு அகலாமல் அவளையே பின் தொடர்ந்து சென்று கொண்டிருப்பதைக் கண்டவருக்குத் தன்னை விடத் தன் மருமகன் அவர் மனைவியை நன்றாகக் கவனித்துக் கொள்வார் என்றும் நிம்மதி படற அன்று இரவே கலாவும் வீட்டாரும் கிளம்ப,

திவ்யாவின் அருகில் வந்த கலா அவளை இறுக்க அணைத்து விடைப் பெற, காலையில் வந்ததில் இருந்து ஒரு முறையேனும் தன்னைப் பார்க்க மாட்டானா, ஒவ்வொரு முறை அவனைக் கடந்து செல்லும் பொழுதும், அருகில் நின்று அவனுக்கு உரிமையுடன் உணவு பறிமாறும் பொழுதும் ஒரே ஒரு முறை தன்னைக் கண்டு புன்னைகைக்க மாட்டானா என்று வினோத்தையே வைத்த கண் வாங்காமல் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த மஹாவிற்கு அவனின் பாரா முகம் இதயத்தில் அத்தனை வலியை கொண்டு வந்தது...

நிபந்தனைகளை விதித்தது என்னவோ அவள்

அண்ணன்... ஆனால் கோபம் எல்லாம் தன்னவனிடமே...

வினோத்தின் பிடிவாதத்தைக் கண்டு அதிர்ந்தாலும் அவனின் உறுதியைக் கண்டு வியந்தவளுக்கு அவன் கிளம்பும் போதும் கூடத் தன்னைக் காணாதது கண்டு அவளின் பூ மனம் வேதனையில் சுழல மனம் கணக்க கண்ணீரோடு தன்னவனையே பார்த்திருந்தவளின் இதயம் குளிரும் வகையில் காரில் ஏறும் பொழுது ஒரு முறை திரும்பிப் பார்த்தவன் கண்களாலேயே விடைப் பெற்றுச் சென்றான்...

சொந்த பந்தங்கள் அனைவரும் விடைப் பெற்று செல்ல, தனித்து விடப்பட்ட குடும்பத்தினர் மட்டும் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, முன்னரே அர்ஜூன் தன் அறைக்குச் சென்றிருந்ததால் திவ்யாவைப் பார்த்த ஸ்ரீ...

"திவ்யா... நீ ரொம்ப டயர்டா தெரியரடா.... போ... போய்ப் படு" என்க,

அன்று முழுவதும் கிட்டதட்ட ஒரே இடத்தில் அமர்ந்திருந்ததினாலும், பின் விருந்தினர் அனைவரும் சென்றதும் அல்லி தெய்வானையுடன் சேர்ந்து தன் மாமியார் எவ்வளவு சொல்லியும் கேளாமல் சமையல் அறையைச் சுத்த படுத்தியதாலும் இடுப்பெல்லாம் ஒரே வலியாகவும் உடல் முழுவதும் அடித்துப் போட்டது போல் அசதியாகவும் இருக்க, இரவு தங்கள் அறைக்கு மெல்ல அசைந்து அசைந்து நடந்து வந்த மனைவியைப் பார்த்த அர்ஜூனின் கண்கள் அவளை விட்டு அகலவில்லை...

அறைக்குள் வந்தவள் கணவன் கட்டிலில் படுத்திருப்பதைக் கண்டு, இரவு உடையை எடுத்துக் கொண்டு குளியல் அறையை நோக்கி நடக்க,

"திவி, நான் வேணா பார்க்கலை... நீ இங்கேயே புடவை மாத்து... பாத்ரூமில் தான் மாத்தனும்னு அவசியமில்லை" என்று குறும்பாகச் சிரித்தவனைத் திரும்பிப் பார்த்தவள் அவனின் விழிகளில் வழியும் கல்மிஷத்தையும் உதட்டில் நெளியும் விஷமப் புன்னகையையும் கண்டு அவனின் எண்ணம் புரிந்தவளாய் மீண்டும் குளியல் அறைக்குள் நுழைய முற்பட,

"ம்ப்ச்" என்று சலித்துக் கொண்டவன் "திவி, நான் தான் சொல்றேன்லடி.... அப்புறம் என்னை மீறிப் போனா என்ன அர்த்தம்?" என்று சலிப்புடன் செல்ல,

அவளுக்கு இருந்த அசதியிலும் களைப்பிலும் அவனுடன் விதண்டாவாதம் செய்ய விரும்பாமல், அப்படியே செய்தாலும் அவன் ஏற்கனவே காலையில் தன் காதில் கிசுகிசுத்தது நினைவில் வர, தான் எதிர்பார்த்ததை இன்று தன்னிடம் இருந்து பெறாமல் அவன் விடப் போவதில்லை என்பதை அவளை அவன் பார்த்திருந்த விதத்திலேயே தெரிந்திருந்ததால்,

அவனுக்கு முதுகு காட்டி, கட்டியிருந்த புடவையை அகற்றி இரவு உடையை அணிய, ஏழு மாத வயிற்றுடன் களைத்த முகமாக இருந்தாலும் கர்ப்பத்தின் அழகோடு மூச்சு வாங்க கீழே கிடந்த புடவையை எடுத்து மடித்துக் கொண்டிருந்தவளை தன் வலது கரத்தை தலைக்கு முட்டுக் கொடுத்து ஒருக்களித்துப் படுத்தவாறே பார்த்துக் கொண்டிருந்தவனின் கழுகு பார்வையை

நன்கு அறிந்தவள் அவனைத் திரும்பியும் பாராது ஆனால் புன்னகையுடன்...

"யாரோ நான் பார்க்கமாட்டேன்... நீ இங்கேயே புடவை மாத்துன்னு சொன்னாங்களே.... அவங்க எங்க?" என்றாள்.....

அது வரை அவள் சொன்னது போல் கண்களை இமைக்காமல் அவளையே விழிங்கிவிடுவது போல் பார்த்திருந்தவன் வாய் விட்டு சிரிக்க....

கட்டிலில் மெல்ல ஏறி அவன் அருகில் படுத்தவள் அவனை முகத்தை நோக்கவும்...

"நான் என் வைஃப பார்க்குறேன்... உனக்கு என்னடி வந்துச்சு?" என்றான்...

அவனின் கூற்றில் தன் இதழ்களைப் பிரித்துச் சிரித்தவள் அவனை மேலும் நெருங்கி படுக்க, அவளை இறுக்கி அணைக்க முற்பட்டவனை மேடிட்ட வயிறு தடுக்க, வழக்கம் போல் சிரித்தவாறே திரும்பி படுத்தவளை முதுகு புறமாக அணைத்தவன் தன் மனையாளின் மேல் இன்னமும் சந்தன வாசமும், காலையில் இருந்து அவள் அணிந்திருந்த மாலையில் தொடுத்திருந்த பன்னீர் ரோஜாவின் மனமும் கலந்து நறுமனம் வீசியதில் சொக்கிப் போனவன், மேலும் நெருங்கி அவளின் பொன் கழுத்தில ஆழ முகம் புதைத்தான்...

அன்று காலையில் இருந்து அவ்வளவு பெரிய வீட்டில் இங்கும் அங்கும் நடந்ததினாலும், வேலைகளைத் தேவை இல்லாமல் இழுத்துப் போட்டுக் கொண்டு

செய்திருந்ததாலும் உடல் முழுவதும் ஒவ்வொரு பாகமும் அசந்து, களைத்துப் போய்த் துவண்டிருந்தது...

இருந்தாலும் கணவனின் இறுக்கிய அரவணைப்பு அவளின் களைப்புக்கு மருந்து போல் இருக்கத் தன் உடலை சிறிதே பின்னுக்குத் தள்ளியவள் அவன் மார்புடன் தன் முதுகை அழுத்தி அவனுடன் ஒன்றிப் படுக்க, அவளின் கழுத்தில் புதைத்திருந்த தன் முரட்டு இதழ்களை எடுக்காமலே...

"திவி... ஐ நோ யூ ஆர் வெரி டயர்ட் **[I know you are very tired]** பட் ஐ கேண்ட் ரெஸிஸ்ட் டி... **[But i cant resist di...]** எனக்கு இன்னைக்கு நீ வேணும்... ப்ளீஸ்டி " என்று கிசுகிசுத்தான்....

அவன் பேச்சிற்கு மறு பேச்சுப் பேசாமல் மௌனமாகப் படுத்திருந்தவளைக் கண்டவனுக்குத் தான் அவளைத் தொந்தரவு செய்கிறோமோ என்று தோன்ற, அவளின் சோர்வு புரிந்து...

"சாரிடி... ஓகே நீ தூங்கு" என்றவாறே தள்ளிப் படுக்க முயல...

"எனக்கும் நீங்க வேணும்" என்றாள் மெல்லிய குரலில் அர்ஜூனின் மனம் கவர்ந்த அவனின் செல்ல மனையாள்...

Likes:Niranjanadevi, Priayamadhavan, shanbagavalli and 51 others

Jelineusa
JB

Apr 6, 2018
#49

அவளின் பதிலில் சிலிர்த்தவன் மீண்டும் நெருங்கிப் படுத்து...

"உனக்கு ஓகேவா... நீ ரொம்ப டயர்டா தெரியற" என்று தயங்க, அவனுக்கு வலது புறமாகப் படுத்திருந்தவள் அவனின் இடது கரத்தை எடுத்து தன் மார்பை சுற்றிப் போட்டுக் கொள்ள, கிளர்ந்தெழுந்தவன் முதுகில் துவங்கிய தன் முத்த ஊர்வலத்தை மேலும் முன்னேற்ற,

தன் கணவனின் இறுகிய அணைப்பில், மென்மையான இதழொற்றல்களில் தளிர் மேனியும் உள்ளமும் சிலிர்த்தெழுந்ததினால் தன் பூ உடலை கணவனின் தொடுகைகளுக்கும், செய்கைகளுக்கும் ஏற்றவாறு நெகிழ்த்தியவள் அவனுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தவாறே மதி மயங்கியிருந்தவளின் மனதில் ஏனோ திடிரென்று மஹாவின் முகம் காட்சி போல் விரிய...

தன்னைக் கட்டுப்படுத்த இயலாமல் மெல்லிய குரலில்...

"ஆனாலும் நீங்க இவ்வளவு கெடு பிடியா இருக்கக் கூடாதுங்க" என்றாள்...

தாபத்திலும் மோகத்திலும் மூழ்கி உணர்ச்சிகள் பிரவாகித்ததில் அடிமையாகி இந்த உலகத்தை மறக்க துவங்கியிருந்தவன் அவளின் பேச்சில் உணர்வுகள் அறுபட, அவளின் கழுத்தில் இருந்து தன் முகத்தை எடுத்தவன்...

"எதைச் சொல்ற?" என்றான்...

ஏனெனில் தன் மாமியார் திவ்யாவை தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கேட்ட பொழுது அவன் திவ்யாவின் விருப்பத்தைக் கேட்கவில்லை… அவளைத் தனித்து எங்கும் விட முடியாது என்று தானாகவே முடிவெடுத்திருந்தான்…

இதில் நிச்சயம் அவளுக்கு வருத்தம் இருக்கும் என்று அவனின் உள்மனது உறுத்திக் கொண்டே இருக்க இப்பொழுது அவளைத் தான் இவ்வளவு இறுக்கி அணைத்தும் தன் விருப்பத்திற்கு ஏற்றவாறு அவளும் நெகிழ்ந்தவள் தனக்கு உடன்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதே திடீரென்று இவ்வாறு கேட்கவும் அவளை விட்டு நகர்ந்து யோசனையுடன் அவள் முகம் பார்த்திருக்க…

மெல்ல உடலைப் புரட்டி மல்லாந்துப் படுத்தவள் முகத்தை மட்டும் அவனை நோக்கி திருப்பி,

"ஒரு தடவையாவது மஹா அண்ணியையும், அண்ணனையும் பேச விட்டுருக்கலாம்" என்றாள் குழந்தைத் தனத்துடனும் கவலை தோய்ந்த முகத்துடனும்…

அவளை அவள் தாய் வீட்டிற்கு அனுப்பாததை நினைத்து தன் மேல் அவளுக்கு நிச்சயம் வருத்தமும் கோபமும் இருக்கும் என்று அவன் எதிர்பார்த்திருக்க, அவள் மஹாவையும் வினோத்தையும் பற்றிப் பேச, மனம் நிம்மதியில் ஆழ்ந்து பெருமூச்சுவிட்டவன் விட்ட இடத்தில் இருந்து தன் வேலையைத் தொடர்வதற்கு அவளை மேலும் நெருங்கி அவளின் இதழ்களைச் சிறை செய்ய முனைய,

"இருந்தாலும் நீங்க...." என்று மீண்டும் அதே பேச்சை துவங்கியவளின் முகத்தைப் பார்த்தவன்...

"திவி... அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்... என்னை முதல்ல கவனிடி..." என்றவன் அவளின் செவ்விதழ்களைச் சிறை செய்யக் கணவனின் ஆழ்ந்த முத்தத்தில் பேசும் சக்தியை இழந்தவள் அவனின் உணர்ச்சிகளுக்குத் தன் உணர்ச்சிகளை வடிகாலாக இழைந்துக் கொடுக்க, தன்னவளுக்குள் மூழ்க துவங்கியவனின் மனம் ஏனோ ஒன்றாமல் மெல்ல எழுந்து அவளின் முகம் நோக்கி...

"திவி" என்றான்...

இப்பொழுது தடைப் பட்டது அவளின் உணர்வுகள்... கண்களை மூடி படுத்திருந்தவள் கணவனின் விலகலினாலும், அவனின் அழைப்பினாலும் தன்னிலைக்கு வந்தவள் என்ன என்பது போல் பார்க்க,

"திவி... உங்க வீட்டிற்கு உன்ன நான் விடலைன்னு உனக்குக் கோபம் இல்லையா?" என்றான்...

அவனின் குரலில் இருந்த ஏக்கமும், அவன் கேட்ட தோரணையுமே சொல்லாமல் சொல்லியது தன் கணவனின் மனதில் இருக்கும் எண்ணங்களை...

அவன் கரங்களை எடுத்து தன் கன்னத்தில் வைத்துக் கொண்டவள் அவனின் உள்ளங்கையில் மென்மையாக முத்திமிட்டு,

"நிச்சயம் இல்லைங்க... எனக்கும் எங்க அம்மா கூட இருக்கனும் ஆசையா தான் இருக்கு... ஆனால் அதுக்காக நீங்க என் பக்கத்தில் இல்லாம நிச்சயம்

என்னால ஒரு நாள் கூட இருக்க முடியாது" என்ற மனைவியைக் கண்டவனின் இதயத்தில் அவள் மீது இருந்த காதல் பல மடங்கு பெருகி வழிய,

அவளின் கர்ப்பத்தைக் கூட மறந்தவனாய் தன் மகிழ்ச்சியைக் காட்டும் பொருட்டு அவளைத் தன்னுடன் இறுக்கி அணைக்க, அவனின் கையணைவில் இருந்த அழுத்தத்தில் உள்ளே இருந்த குட்டி அர்ஜூன் கடுப்பானதைப் போல் ஒரு உதை விட்டான்...

குழந்தை உதைத்ததை அவளின் மீது இருந்த தன் கரத்தில் தெரிந்த அதிர்வில் உணர்ந்த அர்ஜூன் ஒரு தந்தையாக மனம் சிலிர்க்க, ஒரு அன்னையாகப் பூரித்துப் போனவள்...

"பாருங்க உங்க பையன் உங்களுக்கு மேல் இருப்பான் போலிருக்குது... நீங்க இறுக்கி பிடிச்சதுக் கூடப் பிடிக்கலை போல... உங்கள பார்த்து பயப்படாத ஆளு இவன் ஒருத்தனாத் தான் இருக்கும்" என்றாள் முகம் கொள்ளப் புன்னகையுடன்...

எழுந்தவன் கட்டிலில் தலையனையைச் சாய்வாக வைத்து அதனில் தலைசாய்த்துப் படுத்தவன் அவளை மெல்ல எழுப்பித் தன் மார்பில் போட்டுக் கொண்டு அவளின் தலையில் மென்மையாகத் தன் தலையைப் பதித்து...

"அதெல்லாம் சும்மா, ஏற்கனவே ஒருத்தருக்கு என் மேலே பயம் போயிடுச்சு" என்றான்...

யாருக்கு என்பது போல் அவன் மார்பில் இருந்த தன்

தலையை உயர்த்தி அவனை நோக்கி அண்ணாந்துப் பார்க்க,

"கல்யாணம் ஆன புதுசுல ஒருத்தருக்கு என்ன பார்த்தா அவ்வளவு பயம்... என் முகத்தை நிமிர்ந்துக் கூடப் பார்க்க மாட்டாங்க.... ஆனால் அவங்களுக்கு இப்போ அந்தப் பயம் இருக்கிற மாதிரியே தெரியலையே" என்றான் குறும்பு சிரிப்புடன்....

அவளுக்கு இப்பொழுது புரிந்தது தன் கணவன் யாரைக் குறிப்பிடுகிறான் என்று...

அவன் மார்பில் மீண்டும் தலை சாய்த்துப் படுத்தவள் அவனின் மார்பு ரோமங்களைத் தன் விரலால் பிடித்துத் தன் விரலைச் சுற்றி சுழற்றியவாறே...

"அப்படி எல்லாம் இல்லை... இன்னமும் எனக்கு உங்களைப் பார்த்தா பயம் தான்... ஏன்? இன்னைக்குக் கூட மஹா அண்ணிக்கிட்ட நீங்க பேசிட்டு இருக்கும் போது நான் எங்க அண்ணன் அந்த மாதிரி இல்லைன்னு சொன்னப்போ திரும்பி ஒரு பார்வைப் பார்த்தீங்களே... அப்பா!! என்னா பார்வை?? அப்படியே என்னைச் சுட்டெறிச்சிடற மாதிரி.... அப்போ எனக்கு எப்படி இருந்துச்சு தெரியுமா? அப்படியே நடுங்கி போய்ட்டேன்... அப்புறம் எங்க அம்மா என்னைய அவங்க கூடக் கூட்டிட்டு போகட்டுமான்னு கேட்டப்போ அவங்கள டக்குன்னு திரும்பி பார்த்தீங்களே.... அப்போ எங்க அம்மாவ எதுவும் சொல்லிடுவீங்களோன்னு எப்படிப் பயந்திட்டு இருந்தேன் தெரியுமா"" என்க...

ஆழ்ந்த பெருமூச்சு விட்டவன்...

"திவி... சின்ன வயசில் இருந்தே நான் இப்படித் தான்... நான் என் தாத்தா ருத்ரமூர்த்தி மாதிரி எப்பவும் ருத்ரத்தோடேயே இருக்கிறதா மாம் சொல்லுவாங்க... அது என்னோட இயற்கையான குணம்... அது மட்டும் இல்லை... எப்போ எங்க குடும்பா பிஸ்னஸ்கள் எல்லாத்தையும் என் கையில் எடுத்தோனோ அப்பவே இன்னும் ரொம்ப ஹார்டா (Hard) மாறிட்டேன்... ஆனால் உன்மைய சொல்லனும்னா நான் இந்த அளவிற்கு இறங்கி வரதே உன் கிட்ட மட்டும் தான்"

அவன் கூற்றும் உண்மை தானே...

தொழில் வட்டரத்திலும், வெளி உலகிலும், ஏன் தன் குடும்பத்தாருக்கும் கூட அவன் ஒரு சிம்ம சொப்பனம்...

அவன் இருக்கும் இடத்தில் ஒரு குண்டூசி கீழே விழுந்தால் கூடச் சப்தம் கேட்கும் அளவிற்கு அங்கு அமைதி நிலவும்...

தொழிற் சம்பந்தமான கூட்டங்களுக்கோ அல்லது வேறு ஏதாவது மீட்டிங்களுக்கோ அவன் சென்றால் அனைவரையும் அலட்சியமாகப் பார்த்துவிட்டு அவன் முன் சென்று கம்பீரமாக அமரும் பொழுது சிங்கத்தின் குகைக்குள் மாட்டிக் கொண்டவர்களைப் போல் அங்குக் கூடியிருக்கும் அனைவருக்குமே கதி கலங்கும்...

அவன் வருவதற்கு முன் வரை, மூடாமல் பேசிக் கொண்டிருந்த அவர்களின் வாய் அர்ஜூன் அந்த அறையில் இருந்து அகலும் வரை திறந்ததில்லை...

அப்படிப்பட்ட, ஒருவராலும் எளிதாக அண்ட முடியாத,

வெளி உலகத்தில் தன் சாணக்கியத் தந்திரத்தாலும்· எதிராளிகளைத் தன் அரக்கத் தனமான அடக்குதல்களாலேயும்· தொழில் வட்டாரத்தில் அனைவரும் எட்டமுடியாத உயரத்தில் அசைக்க முடியாத பிம்பமாக இருக்கும் அவன் தன் மனைவியிடம் மட்டும் அடங்கிப் போவதைப் பார்க்கும் யாவருமே ஆச்சரியத்தில் மூக்கில் விரல் வைப்பார்கள்...

அவனைப் பற்றி அவன் கூறுவது உண்மை தான் என்றாலும் இருந்தும் கலக்கத்துடன்...

"எனக்கென்னமோ எப்பவும் நீங்க சிங்கம் புலி மாதிரி இருக்கறது போலத் தான் தெரியுது" என்று கூற,

சத்தமாகச் சிரித்தவன்...

"அப்போ புலி எப்படி வேட்டையாடும்னு காட்டட்டா?" என்று அவளைத் தன் மேல் இருந்து புரட்டி கீழே சாய்த்து அவளின் கழுத்தில் தன் உதடுகளை அழுத்தமாகப் பதிக்க,

"ஐயோ! வேண்டாம்... உங்க வேகத்தை என்னால தாங்கிக்க முடியும்... ஆனால் இந்தக் குட்டி புலி தாங்காது" என்று அவள் கத்த, அழுத்தமாகத் தன் இதழ்களைப் பதித்திருந்தவன் அதனை அப்படியே ஒத்தடமாக மாற்ற, ஒத்தடங்கள் கழுத்தோடு நிற்கவில்லை...

அவள் கைகளில் அணிந்திருந்த கண்ணாடி வளையல்கள் வெகு நேரம் சிணுங்கி கொண்டே

இருந்ததில் அந்த அறையையே மெல்லிய கீர்த்தனைகளால் மூழ்கித் திளைத்தது....

Likes:Niranjanadevi, Priayamadhavan, sabeenaibu and 55 others

Jelineusa
JB

Apr 6, 2018
#50

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்த அர்ஜூன் ஏதோ முக்கிய விஷயமாக அலுவலகம் சென்று விட, வெகு நேரம் சென்றே எழுந்தவள் உடல் அலுப்பு தீர குளித்து முடித்தவள் கீழே இறங்கி வந்து அல்லிக்கு தெய்வானைக்கும் தன்னால் முடிந்த அளவு உதவி செய்ய, மதியம் உணவு அருந்தியவளை அவள் அறைக்கு சென்று ஓய்வெடுக்க சொன்னார் ஸ்ரீ...

முதல் நாள் வளைகாப்பு விஷேஷத்தினால் ஏற்பட்டிருந்த களைப்பினாலும், உடல் அசதியினாலும் மாமியார் சொன்னது போல் சிறிது ஓய்வெடுக்க நினைத்தவள், தங்கள் அறையில் படுத்திருக்க, தன் அருகில் இருந்த அலை பேசி சினுங்கவும் எடுத்துப் பார்த்தவள் கணவனின் எண்ணை கண்டதும் இதழ்கள் முறுவலிக்க "ஹலோ" என்க...

"திவி... கிளம்பி ரெடியா இரு... சிக்ஸோ (Six) க்ளாக் போல் உன்னைப் பிக்கப் பண்ண வரேன்" என்று திடீரென்று சொல்லவும், எதற்கு என்று குழம்பியவள்...

"எங்கங்க போறோம்?" என்க...

"உனக்கு ஒரு ஸர்ப்ரைஸ் இருக்கு... நீ கிளம்பி ரெடியா இரு... நான் வந்து கூட்டிட்டு போறேன்" என்றான்...

"ம்ப்ச்... ஸர்ப்ரைஸ் எல்லாம் வெண்டாம்... ப்ளீஸ் சொல்லுங்க..."

"ஏண்டி... ஸர்ப்ரைஸ்ன்னு சொன்னா என்ன ஸர்ப்ரைஸ்ன்னு கேட்டா என்ன அர்த்தம்... அதான் ஸர்ப்ரைஸ்... ஓகே.... சிக்ஸோ க்ளாக்... மறந்துறாத" என்றவன் அழைப்பை துண்டிக்க...

அதான இவர் வாயில் இருந்து விஷயத்தை வாங்கிட்டாலும் என்று நினைத்தவள் தனக்கு இருந்த உடல் அசதியையும் மறந்து கணவனுக்காகக் கிளம்ப, சரியாக ஆறு மணிக்கு அர்ஜூனின் கார் வீட்டின் வாயிலில் நின்றது...

வரும் போதே "திவி" என்று அழைத்தவாறே உள்ளே நுழைந்தவனைக் கண்ட ஶ்ரீ அவள் அவர்களின் அறையில் இருப்பதாகச் சொல்ல, இரண்டு இரண்டு படிகளாகத் தாவி மாடி ஏறியவன் மூடியிருந்த அறைக் கதவைத் தட்ட அர்ஜூனிற்குப் பிடித்த, ஒரு மழை நாளன்று அணிந்திருந்த அதே வெளிர் ரோஜா நிற ஷிஃபான் புடவையில் தேவதையென எழிலோடு கதவைத் திறந்தவளைக் கண்டவன் மலைத்துப் போனான்...

அன்றைக்கும் இன்றைக்கும் என்னென்ன வித்தியாசங்கள், மாற்றங்கள்...

அன்று தன்னைக் கண்டதும் நாணத்தில் துடித்து, தவித்து, கலங்கி நின்றவள் இன்று தன் குழந்தையை வயிற்றில் சுமந்து உலகின் அழகெல்லாம் திரண்டு ஒரே உருவத்தில் நிற்பது போல் தன் கண்களின் எதிரில் நிற்க, குழந்தைத்தனமான முகத்துடனும்,

தன்னைப் பார்த்ததும் செவ்விதழ்கள் விரித்து புன்னகைத்ததில் குழிவிழும் கன்னங்களுடனும், மலரினும் மெல்லிய தன் மனையாள் ரோஜா நிறத்தில் புடவை உடுத்தி ரோஜாப் பூவைப் போன்று மலர்ந்து நிற்கும் காட்சியைக் கண்டவனிற்கு மனம் பூரித்துப் போக,

தான் இன்னும் அறை வாயிலிலேயே நிற்பது கூட மறந்து அவளின் கழுத்தின் இரு பக்கங்களிலும் தன் இரு கரங்களையும் வைத்தவன் முகத்தைத் தன்னை நோக்கி உயர்த்தி இதழை சிறை செய்ய முற்பட, விரித்திருந்த இதழ்களை மேலும் விரித்துச் சிரித்தவள்…

"கதவு திறந்திருக்கு" என்றாள்…

அப்பொழுது தான் தான் இன்னும் அறை வாயிலிலேயே நிற்கிறோம் என்பதை உணர்ந்தவன் சிரித்தவாறே அறைக்குள் நுழைய அடி எடுத்து வைக்க…

"ஹான்… எனக்கு ஸர்ப்ரைஸுன்னு சொல்லிட்டு இப்படி இங்கேயே இருந்தா எப்படி?" என்று வாய் விட்டு சிரித்தவள் அவன் மார்பில் கை வைத்து அறைக்கு வெளியே தள்ள, அவளுடன் சேர்ந்து தானும் சிரித்தவன் அவளின் தோள் பற்றி அழைத்துச் சென்றான் தங்களின் காருக்கு….

அர்ஜுனின் மாசராட்டி க்வாட்ரெபோர்ட் (Maserati Quattroporte) நான்கு பயணிகள் அமரக் கூடிய வகையில் இருந்தாலும் அது கிட்டத்தட்ட ஒரு ஸ்போர்ட்ஸ் மாடல் காரைப் போன்றது…

ஏழு மாத கர்ப்பத்தோடு அதில் ஏற முடியாமல் அவள் ஏறவும் புன்னகைத்துக் கொண்டவன் அவள் அமர்வதற்கு உதவி செய்ய.....

"நா இப்படி வயிற வச்சுக்கிட்டு கார்ல ஏறக் கஷ்டப்படுறது உங்களுக்குச் சிரிப்பா இருக்கு... என்ன?" என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டவள் அவன் காரை கிளப்பியதும் வழி முழுவதும் என்ன ஸ்ர்ப்ரைஸ், எங்குப் போகிறோம் என்று அவனைக் குடைந்தெடுத்தாலும் அவன் வாயில் இருந்த ஒரு வார்த்தை வாங்க முடியாது சளைத்தவள் அவனை விடுத்து வேடிக்கைப் பார்க்க துவங்க...

அவளைத் திரும்பிப் பார்த்தவன் முறுவலோடு காரை செலுத்த குழந்தைப் போல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வந்தவளை அவ்வப் பொழுது திரும்பிப் பார்த்து ரசித்துக் கொண்டே வந்தவன் காரை நிறுத்தியது லேண்ட் ரோவர் கார் டீலர்ஷிப்பில்...

காரை விட்டு இறங்கியவன் அவளின் புறம் வந்து கதவைத் திறக்க, வாழ்க்கையில் முதன் முதலாக இத்தகையைப் பெரிய பிரமாண்டமான கார்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு வந்தவள் மௌனராகம் திரைப்படத்தில் தாஜ்மஹாலைப் பார்த்த ரேவதி வாயைப் பிளந்து கொண்டு நிற்பாறே அதே போல் ஆடாமல் அசையாமல் நிற்க, அவளின் தோளில் கைப் போட்டு அணைவாக கடைக்குள் அழைத்துச் சென்றவனைச் சட்டென்று விற்பனையாளர்கள் மொய்த்துக் கொள்ள, அவர்களைப் பார்த்து புன்னகைத்தவன்...

"திஸ் இஸ் ஷி [This is she]... இவங்களுக்குத் தான் அந்தக் கிஃப்ட்" என்றான்...

அவளைக் கண்டு முறுவலித்தவாறே "ப்ளீஸ் மேம் [Please mam]" என்றவர்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்தை நோக்கி கைக் காட்டியவர்கள் முன்னே செல்ல, அர்ஜூனின் முகத்தை அண்ணாந்துப் பார்த்தவளைக் கண்டு இதமாகச் சிரித்தவன் "வா" என்று அழைத்துச் செல்ல, அவர்கள் சென்று நின்றது அந்தப் புத்தம் புதிய அடர் சிகப்பு வண்ண லேண்ட் ரோவர் ரேஞ் ரோவருக்கு அருகில் [Range Rover LWB]...

அவளிடம் காரின் (SUV) சாவியை நீட்டிய விற்பனையாளரை வித்தியாசமாகப் பார்த்தவள் மீண்டும் திரும்பி தன் கணவனைப் பார்க்க, வெகுளித்தனமாக அவள் திருதிருவென்று விழித்துக் கொண்டிருப்பதைக் கண்டவன் சாவியை வாங்கிக் காரைத் திறந்தவன் அவளை அமரச் சொல்ல, மெல்ல காரில் ஏறியவளுக்கு உதவி செய்தவன் தானும் ஏறி ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து...

"என்ன திவி... பிடிச்சிருக்கா என் ஸ்ர்ப்ரைஸ்?" என்ற கணவனைக் கண்டவளின் விழிகளில் நீர் திரையிட்டு இருந்ததில் அவன் முகம் கூட மங்கலாகத் தெரிந்தது...

"ஆமாம்" என்பது போல் மெல்ல தலை அசைத்தவளின் அழகில் மயங்கி அவளின் கரம் பற்றியவன் மென்மையாக முத்தம் பதிக்க, வழக்கமாக இவ்வாறு பொது இடங்களில் தன் கணவன் தன்னைக் கொஞ்சம் நெருங்கி வந்தாளே நாணத்தில் முகம் சிவந்து அவனை விட்டு விலகி நிற்பவள் இன்று விற்பனையாளர்களும், மேலாளரும் காருக்கு

வெளியில் நின்று தங்களைப் பார்த்திருப்பது தெரிந்தும் அவனின் முத்தத்தில் சிலிர்த்தவளைக் கண்டவன்...

"என்னோட கார் நான் எனக்குன்னு வாங்குனது... பட் இப்போ நீ அதுல ஏறுவதுக்குக் கூட இவ்வளவு கஷ்டப்படுற... இன்ஃபேக்ட் நான் முன்னாடியே இதை வாங்கியிருக்கனும்... உனக்கு மட்டும் இல்லை.... நம்ம குழந்தையோட ட்ராவல் பண்ணும் போதும் இது ரொம்பக் கம்ஃபர்ட்டபிளா இருக்கும்" என்றவன் கண் இமைக்க மறந்து தன்னையே பார்த்துக் கொண்டிருந்தவளின் விழிகளில் கலந்து தன்னைத் தொலைத்தவன் பிடித்திருந்த அவளின் கரத்தில் அழுத்தத்தைக் கூட்டி...

"சரி இதுலேயே இப்ப போகலாம்" என்றவன் விற்பனையாளரிடம் திரும்பி...

"என்னுடைய கார் வெளிய நிற்குது... ஐ வில் கம் அன்ட் கெட் இட் [I will come and get it].... அதுவரைக்கும் அதை யாரும் டச் பண்ணாமப் பார்த்துக்கங்க... இத நான் இப்ப எடுத்துட்டு போறேன்... வேறா ஏதாவது பேப்பர்ஸ் சைன் பண்ண வேண்டியது இருக்கா?"

"நோ சார்... எல்லாம் கம்ப்ளீட் பண்ணியாச்சு... நீங்க காரை எடுத்துட்டுப் போகலாம்"

புத்தம் புதுக் காரை செலுத்திக் கொண்டு வெளியே வந்தவன் அவள் இன்னும் தன்னுடைய பிரமிப்பில், பிரம்மையில், வியப்பில் இருந்து மீளவில்லை என்பதை அறிந்து புன்னகைத்துக் கொண்டவன்....

"திவி... ரெஸ்டாரண்டுக்கு போய் டின்னர்

[redacted]

தன் கணவன் தனக்குப் புடவையோ, நகைளோ வாங்கிக் கொடுத்த பொழுது கூட அவை அனைத்தும் தன் மேல் உள்ள காதலினால் தான், நேசத்தினால் தான் பரிசளித்திருக்கிறான் என்று உணர்ந்திருந்தவள், அவன் ஒவ்வொரு விஷயத்திலும் தன்னை அணுஅணுவாகக் கவனித்து, தனது இன்பத்தையும், துன்பத்தையும் கண்கொண்டு கண்காணித்து, இன்று தன்னுடையை உடல் நிலையைக்
கருத்தில் கொண்டு தனக்கு ஏற்றவாறு, தான் பயணிப்பதற்கு ஏதுவாக பெரிய காரை வாங்கியிருந்த கரிசனத்தில் மெய் சிலிர்த்தவளின் இதயம் பெருமையில் பொங்கி வழிந்ததால் பேச்சுத் தடைப் பட்டுப் போனது...

அவன் வழக்கமாகச் செல்லும் அந்த நட்சத்திர ஹோட்டலின் வாயிலில் காரை நிறுத்தியவன் "இறங்கு" என்றவன் அவள் இறங்கியதும் அவளின் இடைப் பிடிக்க அப்பொழுது தான் தன் சுயநினைவிற்கு வந்தவள் போல் சட்டென்று தன் இடைப் பிடித்திருந்த அவன் கரத்தை விலக்க முயற்சிக்க, சிரித்தவன்...

"வெல்கம் பேக் [Welcome Back]" என்றான்...

புரியாமல் பார்த்தவளைக் கண்டு...

"இல்ல.... காரப் பார்த்ததுல இருந்து மேடம் ஏதோ கனவுலகத்துக்குப் போயிட்ட மாதிரி இருந்துச்சு... இப்போதான் திரும்பி வந்திருக்கீங்க... அதான்" என்று வாய் விட்டு சிரிக்க,

தன் கணவனின் குறும்பில், கிண்டலில் வெட்கம் அடைந்து செந்நிறமாய் முகம் சிவந்தவள் தன்னையும் அறியாமல் அவனோடு இழைந்தவாறே நடக்கவும், அவளின் இணக்கத்தில் சித்தம் தடுமாற இடைப் பிடித்திருந்த தன் கரத்தில் அழுத்தத்தைக் கூட்டி கண் சிமிட்டியவன்...

"பேசாம வீட்டுக்கு போயிடுவோமா" என்றான் தாபம் வழியும் கண்களுடன் விஷமப் புன்னகையுடன்...

"பசிக்குதே" என்றவளைக் கண்டு சட்டென்று தன் மன நிலையை மாற்றி உள்ளே அழைத்துச் செல்ல, அவன் வழக்கமாக அமரும் இடத்தில் அமர்ந்தவன் வெயிட்டரிடம் உணவு பதார்த்தங்களைக் கொண்டு வரச் சொல்ல, வெயிட்டர் தங்களிடம் இருந்து அகன்றதும் அவளுக்கு நேரெதிரில் அமர்ந்திருந்தவன் அவளுக்கு அருகில் சென்று அமர்ந்து அவளின் விரல்களுக்குள் தன் விரல்களை நுழைக்க...

"என்னங்க இது... எல்லாரும் பார்க்கறாங்க" என்று நாணமுற்று அவனிடம் இருந்து தன் விரல்களைப் பிரித்து எடுக்க...

"அப்பா... இப்ப தான் நி என் பழைய திவ்யா" என்று

சிரித்தவனைக் கண்டு குழப்பமாகப் பார்க்க..

"எப்பவும் நான் கட்டிப் பிடிச்சா இல்ல கிஸ் பண்ணினா வெட்கப் பட்டுக்கிட்டு ஓடிடுவ... ஆனால் இன்னைக்குக் கார் டீலர்ஷிப்பில் உன் கையைப் பிடிச்சுக் கிஸ் பண்ணும் போது நீ மலைச்சுப் போய் எதுவும் செய்யாமல் இருந்த.... அது எனக்குப் பிடிச்சது... பட் நான் தொட்டவுடன் நீ வெட்கப்பட்டு என் கிட்ட இருந்து ஓடுறதும், நான் உன்னை இழுத்து வச்சுக் கிஸ் பண்றதிலயும் இருக்கிற கிக் அதுல இல்லடி" என்ற கணவனைக் கண்டவளுக்கு நாணம் எல்லையைக் கடக்க...

மனைவியின் வெட்கத்தில், கூச்சத்தில் கணவனாகக் கர்வம் கொண்டவன் அவளை மேலும் நெருங்கி அமரவும் சுற்றும் முற்றும் பார்த்தவள் ஒருவரும் தங்களை கவனிக்கவில்லை என்று உறுதிப் படுத்திக் கொண்டு ஒரு நிமிடம் தன் அச்சத்தை, நாணத்தை ஒதுக்கி வைத்து தன் கணவனைத் தன் வெகு அருகில் இழுத்தவள் அவன் கழுத்தைப் பிடித்து அவனைத் தன்னை நோக்கி குனிய வைத்து, அவன் கன்னத்தில் அழுத்தி முத்தமிட...

"ம்ம்ம்... பாவம் பொண்ணு ப்ரெக்னென்டா இருக்காளே.. நேத்து தான் தூங்க விடாம ரொம்ப டிஸ்டர்ப் பண்ணிட்டோம்... இனி தொந்தரவு செய்யக் கூடாதுன்னு நினைச்சேன்... ஆனா என்னை நல்லவனா இருக்க விட மாட்டா போலருக்கே" என்று வாய் விட்டு சிரிக்க, கணவன் மனைவி மனம் முழுவதும் அத்தனை மகிழ்ச்சியிலும் பூரிப்பிலும் நிம்மதியிலும் நிரம்பி வழிந்திருந்தது...

ஒரு வழியாக உணவு அருந்திவிட்டு வெளியேற, வேலட் காரை எடுத்துக் கொண்டு வருவதற்குள் ஹோட்டலின் முன்வாயிலின் தாழ்வாரத்திற்கு கீழ் நிற்காமல் காரில் ஏறுவதற்கு வசசியாக சற்று தள்ளி இருவரும் நிற்க, திடீரென்று தூறிய மழையின் சாரலில் கர்ப்பிணிப் பெண்ணால் சட்டென்று நடக்க முடியாததால் அன்றைய நாளை போல் இன்றும் நனைந்துவிட்டாள்...

"ம்ப்ச்.. திவி... ரொம்ப வெட்டாயிருக்க... வேற ஏதாவது ட்ரெஸ் வாங்கலாமா?""

"ஐயோ! வேற ட்ரெஸா? அதெல்லாம் ஒன்னும் வேணாம்... வீட்டுக்குப் போகலாம்"

"ஏய்...என்ன விளையாடுறியா? எவ்வளவு நேரம் இப்படி ஈரத்தோட இருப்ப.... சலிப் பிடிச்சுக்கப் போகுது"

"பரவாயில்லைங்க... லேசாத் தான நனைஞ்சிருக்கேன்... நீங்க கூட நனைஞ்சிட்டீங்க... சே.... எப்பவும் காரில் ஒரு மாத்து ட்ரெஸ் வச்சிருப்பீங்க... அது இப்ப அந்த காருல மாட்டிருச்சுல்ல" என்றவள் அவனை நெருங்கி நிற்க,

கர்ப்பினியான தான் மழையில் நனைந்ததைப் பற்றிக் கூட கவலைப் படாமல் தன்னிலைப் பார்த்து கலங்கும் மனைவயைத் தன் கையணைவுக்குள் கொண்டு வரவும், அவர்களின் கார் வரவும் நேரம் சரியாக இருக்க, காரில் ஏறியதும் அவளைத் திரும்பிப் பார்த்தவன்...

"திவி... அதே ஸீன் ரீக்ரியேட் ஆகிற மாதிரி இருக்குடி"

என்றான் கிசுகிசுப்பான குரலில்...

அவனின் ஆங்கிலத்தில் ஒன்றும் புரியாமல் திருதிருவென விழித்திருக்க, புன்னகைத்தவன் காரை செலுத்திக் கொண்டே...

"நாம் இரண்டு பேரு மட்டும் கார்ல தனியா, நீ அதே பிங்க் ஸாரில (Sari) , அன்னைக்கு போல இன்னைக்கும் மழை, மழையில் நனைஞ்ச செம்ம கிக்கா என்னோட வைஃப் எனக்கு பக்கத்தில..." என்று தாபம் வழியும் குரலில் கூற,

அன்றைய நாளை மனதில் நினைத்தவள் நாணத்தில் தலை கவிழ, அவளின் கரத்தைப் பற்றி மென்மையாக முத்தம் பதித்தவன்...

"ஆனால் அன்னைக்கு மாதிரி இன்னைக்கு இந்த ஸீன் முடியாது... இட்ஸ் மை டேர்ன் டுனைட் [Its my turn tonight]... ஸோ இந்த ஸீன் எப்படி முடியும்னு நான் தான் டிசைட் பண்ணுவேன்" என்று கள்ளத்தனமான புன் சிரிப்புடன் கண் சிமிட்ட, கணவனின் பேச்சின் அர்த்தம் புரிந்தவளுக்குக் கூச்சத்தில் உடல் சிலிர்க்க, விரைவாகக் காரை செலுத்திக் கொண்டு வீட்டிற்கு வந்தவன் தங்களின் அறையை அடைந்ததும் நொடி நேரம் கூடத் தாமதிக்காமல் அவளை இறுக்கி அணைத்தவனின் புத்தியில் தன் மனையாளின் கர்ப்பம் சட்டென்று உரைக்க, அவளை விட்டு தள்ளி நின்றவன்...

"சாரி... திவி... அப்பப்ப நீ ப்ரெக்னென்டா இருக்கறது மறந்து போது... போ... போய் முதல்ல ட்ரெஸ்ஸ மாத்து" என்றவாறே அவளை விட்டு விலக முயற்சித்தவனால் விலக முடியாதபடி அணைத்தவள்...

"அப்ப இன்னைக்கும் ஸீனோட முடிவ நானே மாத்துறேன்" என்றவள் அவனை மேலும் இறுக்கி அணைக்க, மனைவியின் அணைப்பில், இணக்கத்தில் தடுமாறியவனால் அதற்கு மேலும் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் போக...

அன்றைய மழை நாள் இவர்கள் இருவரின் இரவையும் மனம் கசந்த, வெறுப்பும், சீற்றமும், அச்சமும் நிரம்பிய, தூங்கா நீண்ட இரவாக மாற்றியது என்றால் இன்றைய மழை நாள் உணர்ச்சிகள் தத்தளித்து எழுந்த, காதலும் தாபமும் நிரம்பிய மனதாலும், கணவனின் கிசுகிசுப்பான குரலில் வழிந்த தாம்பத்யத்தின் இரகசியங்களினாலேயும், அதற்கு இணையாக அவனின் மனையாளின் கீதம் போன்ற முனகல்களாலேயும் நிறைந்து வழிந்த அழகிய இரவாக மாற்றியிருந்தது.....

Last edited: Apr 6, 2018

Likes:Priayamadhavan, sabeenaibu, shanbagavalli and 65 others

Jelineusa
JB

Apr 6, 2018
#52

அர்ஜூன் அவன் இதயத்தை மூழ்கடித்திருந்த காதலால் தன் மனைவியைத் திக்குமுக்காடச் செய்ய, மாமானாரும், மாமியாரும் பெற்ற மகளைப் போல் அக்கரையுடனும், அனுசரணையுடனும் அவளைக் கவனித்துக் கொள்ள, திவ்யாவின் கர்ப்பக் காலம் முழுவதும் சொர்க்கமாகவே இருந்தது என்றே சொல்லலாம்...

அவளின் பாதம் தரையில் படாமல் புகுந்த வீட்டினர் அனைவரும் அவளைக் கண்ணின் மணி போல் பார்த்துக் கொள்ள, அவ்வப் பொழுது காண வந்து சென்ற அவளின் பிறந்த வீட்டாரும் அவளைத் தாங்கு தாங்கென்று தாங்க, உள்ளம் முழுவதும் மகிழ்ச்சியில் திளைத்துப் பூரித்துப் போயிருந்தாலும்,

பிரசவத்திற்கு இன்னும் இரண்டு வாரங்களே இருக்க வழக்கமாக எல்லாப் பெண்களுக்கும் பேறு காலத்தின் போது பிரசவத்தின் முடிவைப் பற்றிய அச்சமும், அதனால் ஏற்படப் போகிற வலியை நினைத்து திகிலும், ஒரு வேளை தனக்கு ஏதாவது ஆகிவிட்டால் தன் கணவர் நானில்லாமல் என்ன செய்வார் என்ற அதீத கவலையும் தோன்ற, மனமுழுவதும் கலங்கிப் போயிருந்தவளுக்கு ஏனோ அன்று கோவிலுக்குச் செல்ல வேண்டும் போல் தோன்றியது...

தன் அறையில் இருந்த ஸ்ரீயிடம் வந்தவள்......

"அத்தை... எனக்குக் கோவிலுக்குப் போகனும் போல் இருக்கு அத்த... இன்னும் இரண்டு வாரத்துல பிரசவம் ஆயிடுச்சுன்னா அப்புறம் எப்போ கோவிலுக்குப் போக முடியும்னு தெரியலை... அதனால ஒரு ஆறு மணி போல் போயிட்டு வரட்டுமா?" என்று தயங்கியவாறே கேட்க...

பிரசவத்திற்கு இன்னும் இரண்டு வாரங்கள் இருந்தாலும் முதல் நாள் காலையில் மருத்துவரிடம் பரிசோதனை செய்யச் சென்றிருந்தவர்களிடம் குழந்தை இருக்கும் நிலையைப் பார்த்தால் எந்த நேரமும் பிரசவம் ஆக வாய்ப்பிருக்கிறது என்று அறிவுறுத்தி இருந்ததால் அவளை வீட்டை விட்டு

எங்கும் செல்லக் கூடாது என்று அர்ஜூன் எச்சரித்து இருந்தான்...

ஆனால் அதே சமயம் அவள் கேட்கும் விதத்திலேயே தெரிந்தது அவள் பிரசவத்தை நினைத்து எவ்வளவு பயந்துப் போயிருக்கிறாள் என்று...

ஆதலால் அவளின் ஆசையை மறுக்க முடியாமல்...

"சரிடா... நீ அர்ஜூன் கிட்ட ஃபோன் போட்டு எப்போ வர முடியும்னு கேளு... கூட மஹாவையும் கூட்டிட்டுப் போ... இப்பத் தான் உங்க மாமா ஃபோன் பண்ணி தலை வலிக்குது, அதனால சீக்கிரம் வரேன்னு சொல்லிருக்கிறார்... இல்லைன்னா நானே உன் கூட வந்துவிடுவேன்" என்றார்...

சரி என்றவள் அர்ஜூனின் அலை பேசிக்கு அழைக்க, அவள் கோவிலுக்குப் போக வேண்டும் என்று சொன்னதைக் கேட்டதுமே எதிர்முனையில் காட்டுக் கத்தல் கத்தினான் அவள் கணவன்...

"என்ன திவி? டெலிவரி டைம் நெருங்கிக்கிட்டு இருக்கு... நேத்து தான டாக்டர் எப்ப வேணாலும் குழந்தைப் பிறக்கும்னு சொன்னாங்க... இப்ப அவசியம் கோவிலுக்குப் போகனுமா? ஏன், வீட்டில் இருந்தே சாமி கும்பிடக் கூடாதா?"

கணவனின் காட்டுக் கூச்சலில் அடங்கிப் போனவள்...

"அதான, யார்கிட்ட போய்க் கேட்கிறேன் பாரு? இவருக்கும் கடவுளுக்கும் ஏற்கனவே காத தூரம்..... இதுல இப்ப நான் இருக்கிற நிலையில நிச்சயம் வேண்டாம் தான சொல்லுவாங்க" என்று

நினைத்தவள் ஏண்டா கேட்டோம் என்பது போல் அமைதியாக இருக்க,

அவளின் அமைதி அவன் மனதை குடைய,

"சரி... எனக்கு இன்னைக்கு ஆஃப்டெர்னூன் சில முக்கிய மீட்டிங்க்ஸ் இருக்கு... அது முடிஞ்சவுடனே கூட்டிட்டு போறேன்" என்றான்...

பாலா தலை வலிக் காரணமாக வீட்டிற்கு வரவும், ஸ்ரீ அவருடனே இருக்க வேண்டி மஹாவைத் திவ்யாவுடன் போகச் சொல்ல, இருவரும் கிளம்பி அர்ஜூனிற்காகக் காத்திருக்க, ஆனால் மணி ஆறாகியும் அவன் வருவது போல் தெரியவில்லை....

பார்த்த விழிகள் பூத்திருக்க, கணவனை அழைத்தவளிடம்...

"ஸாரி திவி.... சுத்தமா மறந்துட்டேன்... இப்போ என்னால வர முடியாது... நாளைக்கு வேண்டுமானால் போகலாமா?" என்றான்...

ஆனால் திவ்யாவிற்கு என்னவோ கோவிலுக்குக் கிளம்பிவிட்டுப் போகாமல் இருப்பது சரியில்லை என்று மனதிற்குள் பட, தான் கேட்கப் போகும் கேள்வியில் நிச்சயம் தன் கணவன் தாம் தூமென்று குதிப்பான் என்று தெரிந்தும் வேறு வழியில்லாமல் தயங்கியவாறே...

"ஏங்க, இங்க இருக்கிற கோயில் தானே... நானும் மஹா அண்ணியும் போய்ட்டு வந்திடறோமே... ஏற்கனவே கிளம்பிட்டோம்" என்க...

அவள் எதிர்பார்த்தது போலவே அவனின் கோபம் அதிகரித்ததில் அவனின் சத்தமும் அதிகரிக்க அவளுக்குத் தான் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

கர்ப்பமாக இருக்கும் பெண்கள் எல்லாம் வெளியே போவதே இல்லையா என்று மனதிற்குள்ளே உழன்றுக் கொண்டிருந்தவள் அவன் அலை பேசி அணைப்பைத் துண்டிக்கவும், புடவையைக் கூட மாற்ற மனமில்லாமல் சோர்வாக ஹாலில் அமர்ந்திருக்க,

விதி தன் கரங்களை மீண்டும் அர்ஜூன் திவ்யாவின் வாழ்க்கையில் விளையாட நீட்டியது போல் மனைவியின் வருத்தத்தைப் புரிந்து அவளை மீண்டும் அழைத்துக் கோவிலுக்குச் செல்ல அரை மனதோடு அனுமதி வழங்கினான் அர்ஜூன்...

என்ன தான் அவளின் நிலைப் புரிந்து கர்ப்பமாக இருக்கும் தன் மனைவி மனம் கலங்கக் கூடாதென்று அவளைச் செல்ல அனுமதித்து இருந்தாலும் ஏனோ அர்ஜூனின் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது...

தனக்குப் பிடித்த ஏதோ ஒன்று தன்னை விட்டு வெகு தூரம் போவது போல் ஒரு உணர்வு தோன்ற, பற்பல எண்ணங்களினால் ஏற்பட்ட அலைகளினால் இதயத்தின் துடிப்பு கூட அதிகரித்தது போல் இருக்கக் கதிரை அழைத்தவன் மீதம் இருக்கும் அலுவல்களை உடனே தன் மேஜைக்குக் கொண்டு வரப் பணித்தவன் விரைவாக முடித்துத் தானும் கோவிலுக்குச் சென்று திவ்யாவை சந்திக்க வேண்டும் என்று முடிவெடுத்தான்...

ஆனால் நமது எண்ணங்களின் வேகத்தை விட விதியின் கோரத்தின் வேகம் அதிகமானது என்பது புரிய அர்ஜூனிற்குச் சில மணி நேரங்கள் ஆனது…

புரிந்தபொழுது அவனின் பாதங்களுக்குக் கீழ் பூமி பிளந்து அவனை அதளப் பாதாளத்திற்கு இழுத்துச் சென்றது!!!!!

Last edited: Apr 6, 2018

Likes:Priayamadhavan, sabeenaibu, shanbagavalli and 52 others

Jelineusa

JB

Apr 6, 2018

#53

சிறிது நேரத்திற்கு முன் கோவிலுக்குப் போகவே கூடாது என்று கத்திய கணவன் ஏனோ திடீரென்று மனம் மாறி அவள் போவதற்கு அனுமதி வழங்க, அவன் சரி என்றதே பெரிது என்று நினைத்து விரைவாகக் கிளம்பிய மஹாவும் திவ்யாவும் கோவிலுக்குச் செல்ல, கோவில் வாயிலில் அவர்களுக்காக நெடு நேரம் காத்திருந்த மூவர்களில் ஒருவன் யாரோ ஒருவனுக்கு அலை பேசியில் அழைத்தான்…

கோவிலுக்குள் நுழைந்தவர்கள் அம்பாளின் சந்நிதானதிற்குச் சென்று அர்ஜூனின் பேரில் அர்ச்சனை செய்ய, தன் கணவனிற்க்காகவும், பிறக்கப் போகும் தங்களின் வாரிசிற்காகவும் மனம் உருக திவ்யா பிராத்தனை செய்தாள் என்றால், தன் மனம் கவர்ந்தவனின் முகத்தைக் கண் முன் கொண்டு வந்து விழிகளில் நீர் தளும்பத் தங்கள் காதலின் பாதையை நினைத்து கலங்கிப் போய் மஹா வேண்டிக் கொண்டாள்…

அர்ச்சனை முடிந்ததும் அர்ச்சகரிடம் திருநீறும் குங்குமும் பெற்றுக் கொண்டு வெளிப் பிரகாரத்திற்கு வந்தவர்கள் அருகில் ஒரு இடம் பார்த்து அமரவும் திவ்யாவின் இடுப்பில் சுளீர் என்று வலிக்கவும் நேரம் சரியாக இருந்தது..

இடுப்பைப் பிடித்துக் கொண்டே மெல்ல அமர்ந்தவளின் முகத்தில் தெரிந்த மாற்றத்தை கவனித்து அதிர்ந்த மஹா...

"அண்ணி என்னாச்சு? வலிக்குதா?" என்று பதற,

"ஆமாம் அண்ணி" என்றாள் பல்லைக் கடித்துக் கொண்டு...

திவ்யாவின் கரம் பற்றி மெல்ல எழுப்பியவள் அவளைத் தன் கரங்களுக்குள் வைத்துக் கொண்டு கோவிலின் வாயிலை நோக்கி நடக்க, சரியாக மஹாவின் அலை பேசிக்கு கலா அழைக்கவும் அலை பேசியில் ஒளிர்ந்த அவரின் எண்ணைப் பார்த்துத் திவ்யாவிடம் கொடுக்க..

"திவ்யா, இப்ப தான் ஸ்ரீயிடம் பேசினேன்... நீ உன் ஃபோன வீட்டில் வச்சிட்டு வந்ததா சொன்னாங்க... ஆனால் ஏம்மா இந்த நேரத்தில் இப்படி வெளியில வர்ற?"

"இல்லம்மா... எனக்கு என்னமோ கோவிலுக்கு வரனும்னு தோனுச்சு... அவங்களும் கூட வரதா தான் சொன்னாங்க... அப்புறம் அவங்களுக்கு முடியலை... அதனால நானும் மஹா அண்ணியும் கோவிலுக்கு வந்தோம்..." என்றவளுக்கு மீண்டும் இடுப்பில் சுளீர்

என்று வலியெடுக்கத் தன்னையும் அறியாமல் "ஷ்" என்றவளின் குரலை எதிர்முனையில் கேட்ட கலாவிற்குப் பகீறென்றது...

"திவ்யா... என்னம்மா... வலிக்குதா?" என்ற அவரின் பதற்றத்தைக் கண்டவளுக்கு அவரின் கலக்கம் புரிய, தன் அன்னையைச் சமாதனப் படுத்தும் விதமாக....

"ஆமாம்மா, ஆனா ரொம்ப இல்ல... லேசாத்தான் வலிக்குது" என்று பொய்யுரைத்தவள்...

"அம்மா... நாங்க இரண்டு பேரும் இதோ வீட்டுக்கு கிளம்பிட்டோம்" என்க...

"பிரசவத்திற்கு இன்னும் ரெண்டு வாரம் இருக்கு திவ்யா... பொய் வலியா கூட இருக்கும்... ஆனால் இதுக்குத் தான் சொல்றது... இந்த மாதிரி நேரத்தில் இப்படி வெளியில் வரக் கூடாதுன்னு.. முதல்ல உடனே வீட்டிற்குப் போங்க... ரொம்ப வலிச்சா ஸ்ரீக்கிட்ட சொல்லும்மா.. என்னையும் கூப்பிடு... என்ன?" என்றார்...

திவ்யாவிற்கு மீண்டும் வலி எடுத்ததில் அதிர்ந்து கலங்கித் தவித்துப் போயிருந்த மஹா அவள் அலை பேசியில் பேசுவதைக் கவனித்துக் கொண்டே வர, இரண்டு முறை சுளீரென்று வலியெடுத்ததில் துடித்துக் கொண்டிருந்த திவ்யாவும் மெல்ல நடந்து கோவிலை விட்டு வெளியே வர, இருவரும் தங்களின் காரை நோக்கி நடக்கவும்,

அவர்கள் கோவிலில் இருந்து வெளியே வந்த அந்த நிமிடத்தில் இருந்து மறைந்திருந்தவாறே அவர்களைப்

பின் தொடர்ந்து வந்த அந்த மூவரையும் இருவருமே கவனிக்கத் தவறினார்கள்....

இதற்கு மேலும் தன் அன்னையைக் கலங்கடிக்க மனமில்லாமல் அலை பேசி அணைப்பைத் துண்டிப்பதற்காகத் திவ்யா...

"சரிம்மா, நான் அப்புறமா............" என்று கூறி முடிக்கும் முன்னரே,

அந்த மூவரில் ஒருவன் அவளின் வாய் பொத்தி தங்களுடைய வேனில் ஏற்றினான், கூடவே மஹாவையும்...

திடீரென்று இருவரின் வாய்களும் ஒரே நொடியில் சேர்ந்தது போல் மூடப் படவும், அதே நேரத்தில் இருவரையும் மல்லுக் கட்டி அந்த மூவரும் அவர்களை வேனில் ஏற்றவும், ஏற்கனவே பிரசவ வலியின் துவக்கத்தில் இருந்த திவ்யா தடுமாறியதில் தனது கையில் இருந்த அலை பேஸியையும் தவற விட, இருவரும் என்ன நடந்தது என்று சுதாரிக்கும் முன் அவர்களை ஏற்றி இருந்த வேன் காற்றை விட அதிக வேகமெடுத்துப் பறந்தது...

திவ்யாவுடன் பேசிக் கொண்டிருந்த கலாவிற்குத் திடீரென்று அவள் பேச்சு தடைப்பட்டதும், பின் ஏதேதோ சத்தங்கள் கேட்கவும் பெற்ற வயிறு கலங்க "திவ்யா திவ்யா" என்று கத்தினாலும் அவள் பதில் பேசாததில் இருந்து அங்கு ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்கிறது என்று உணர்ந்தவரின் மனதிற்குள் திகில் சூழ்ந்ததினால் மயக்கமே வரும் போல் இருக்க, தடுமாறியவர் சட்டென்று சுதாரித்து ஸ்ரீக்கு

அழைத்தவர் விஷயத்தைச் சொல்ல,

"ஐயோ! ஒரு வேளை வலி வந்துவிட்டதோ... இந்தப் பொண்ணு சொல்ற பேச்சைக் கேட்டால் தானே... " என்று நினைத்தவர் பதற்றத்துடன் மஹாவின் அலை பேசிக்கு மீண்டும் மீண்டும் அழைக்க, கோவிலின் வாயிலில் அனாதையாகக் கிடந்த அலை பேஸியால் பயனில்லாமல் போனது....

திவ்யாவும் மஹாவும் கோவில் வாசலுக்கு வந்த பொழுதே அவர்களைக் கவனித்து விட்ட ட்ரைவர் முருகன் அவர்களுக்காகக் காரின் கதவை திறந்து வைத்து நின்றவர் திடீரென்று மூவர் அவர்களின் வாயை மூடி வேனிற்க்குள் தூக்கிப் போட்டு செல்வதைப் பார்த்தவர் அரண்டு அடித்து ஓடி வர, அதற்குள் வேன் மின்னல் வேகத்தில் அவரின் கண்களில் இருந்து மறைந்து இருந்தது...

அனைத்தும் சடுதியில் கிட்டத்தட்ட இரு நிமிடங்களுக்குள் நடந்து முடிந்தது என்றே சொல்லலாம்....

ஒரு நிமிடம் அதிர்ந்து, திகைத்து, நிலைக் குலைந்து ஒன்றும் செய்யத் தெரியாது உடல் நடுங்க நின்றிருந்தவர் பின் தன்னைச் சுதாரித்து வெளிப்படையாக நடுங்கும் விரல்களுடன் அர்ஜுனின் அலை பேசிக்கு அழைக்க,

திவ்யாவைக் அவள் கர்ப்பம் தரித்த விஷயம் அறிந்த நாளன்று கோவிலில் சந்தித்தை நினைத்து, அப்பொழுது அவள் அதிசயித்துக் கண்களை அகல விரித்துப் பூரித்துப் போய்த் தன்னைப் பார்த்திருந்ததை

நினைத்த அர்ஜூன் இன்றும் அதனைப் போலவே அவளுக்கு இன்ப அதிர்ச்சிக் கொடுக்கும் ஆர்வத்துடன் கோவிலுக்குக் கிளம்ப நினைத்த அதே நேரத்தில் ட்ரைவர் முருகன் அர்ஜூனின் அலை பேசியில் அழைக்க...

வழக்கமாக அர்ஜூனின் வீட்டில் வேலைப் பார்க்கும் எவரும் ஸ்ரீயிடம் தான் தங்களின் தேவைகளைச் சொல்லுவார்கள்... அப்படியே அதில் அர்ஜூன் சம்பந்தப்பட வேண்டும் என்றால் அது ஸ்ரீயின் முலமாகத் தான் அவன் காதுகளுக்கே சென்றடையும்.

அவனிடம் நேருக்கு நேருக்கு நின்று பேசுவதற்கோ அல்லது இவ்வாறு அலை பேசியில் அழைப்பதற்கோ ஒருவருக்கும் அங்குத் தைரியம் இருந்ததில்லை... தன் உடன் பிறந்தவர்களே அவ்வாறு அஞ்சியிருக்கும் பொழுது வேலையாட்களைப் பற்றியும் சொல்லவும் வேண்டுமா என்ன?

அப்படி இருக்க இன்று தன் அலை பேசியில் ட்ரைவர் முருகனின் எண் ஒளிரவும் திவ்யா அவரோடு தான் காரில் கோவிலுக்குப் போயிருக்கிறாள் என்று ஏற்கனவே அர்ஜூனிற்குத் தெரியும்.... இதில் அவன் உள் மனம் வேறு காலையில் இருந்தே எதுவோ சரியில்லை என்று உணர்த்திக் கொண்டே இருந்ததால் அவரின் எண்ணை பார்த்ததும் சில நொடிகளுக்குள் இவை அனைத்தையும் தன் புருவங்களைச் சுருக்கி யோசித்தவனின் மனம் சடுதியில் அங்கும் இங்கும் அலைபாய, அழைப்பை எடுத்தவன் ஹலோ என்று சொல்லும் முன்பே...

"ஸா.... ஸார்... நம்ம திவ்யா அம்மாவையும், மஹா

அம்மாவையும் மூனு பேரு ஒரு வேன்ல தூ... தூ... தூக்கிட்டு போயிட்டாங்க ஸார்...." என்று முருகன் பட்டென்று விஷயத்தைப் போட்டு உடைத்துச் சத்தமாக அலற....

தான் திவ்யாவை காண்பதற்கு விரைவில் கிளம்ப வேண்டியிருந்ததால் கதிரிடம் அன்றைய மீதி அலுவல்களை ஒப்படைப்பதற்குக் கலந்து ஆலோசித்துக் கொண்டிருக்க, அலை பேசியில் ஒளிர்ந்த எண்ணை பார்த்ததும் தன் MD சில விநாடிகள் புருவங்களைச் சுருக்கி யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே ஏதோ விவகாரமான அழைப்பாக இருக்குமோ என்று கதிர் சிந்தித்துக் கொண்டிருக்க, ட்ரைவர் முருகன் சொன்ன விஷயத்தைக் கேள்விப்பட்ட அந்த விநாடி அர்ஜூன்....

"வாஆஆட் {WHAT} " என்று கத்தி எழுந்த வேகத்தில் அவன் அமர்ந்திருந்த நாற்காலி வெகு தூரம் போய்த் தெறித்து விழ, தன் MD யின் குரலின் கர்ஜனையில், அவனின் முகத்தில் தெரிந்த அதிர்வில், அவன் கண்களில் தெரிந்த ரௌத்திரத்தில் கதி கலங்கி போய் நின்றான் கதிர்....

மலரினும் மெல்லியவள்!

தொடரும்!

Likes:Priayamadhavan, ManjuKarthik, sabeenaibu and 124 others

Jelineusa
JB

Apr 9, 2018

#54
மலரினும் மெல்லியவள்!

பாகம் - 32

அர்ஜூனின் கர்ஜனை ஒலி அவன் ஏஸி அறையையும் தாண்டி, மாலையானதும் அலுவலக வேலை முடிந்து வீட்டிற்குச் சென்றிருந்தவர்கள் போக மீதம் இருந்த ஊழியற்களின் செவிகளிலும் கேட்க, கேட்ட அந்த விநாடியே தாங்கள் அமர்ந்திர்ந்த நாற்காலிகளை விட்டு அவர்கள் அதிர்ந்து விருட்டென்று எழ, ஆனால் தங்கள் MD யின் அறைக்குள் அவன் அனுமதி இல்லாமல் செல்ல ஒருவருக்கும் துணிவில்லாததால் ஒருவர் முகத்தை ஒருவர் கலக்கத்தோடும் அச்சத்தோடும் பார்த்திருக்க,

அறைக்கு வெளியே இருந்தவர்களின் நிலைமையே இதுவென்றால் அர்ஜூனின் அறைக்குள்ளே அவன் அருகில் நின்றிருந்த கதிரின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது....

"முருகன்.... நீங்க என்ன சொல்றீங்க?" என்று மீண்டும் தன்னைத் தெளிவுப்படுத்திக் கொள்ளவும், தான் தன் காதுகளில் கேட்டது உண்மையாக இருக்கக் கூடாது என்று மனம் தவித்துத் துடித்ததினாலேயும் அர்ஜூன் கேட்க,

"ஸார்... திவ்யா அம்மாவும் மஹா அம்மாவும் கோவில்ல இருந்து வெளிய வந்ததப் பார்த்ததும் நான் அவங்களுக்காக நம்ம கார் கதவைத் திறந்துவச்சிட்டுக் காத்திட்டிருந்தேன்.... ஆனால் அதற்குள்ள இப்படி நடந்திடுச்சு ஸார்" என்று பதறி துடிக்கவும்...

நடந்திருக்கும் அசம்பாவிதத்தின் நிலைமையின் வீரியமும் அதன் விபரீதமும் புரிந்து போனது அர்ஜூனிற்கு...

சட்டென்று கதிரைத் திரும்பி பார்க்க, அர்ஜூனின் கூரிய பார்வையும், செக்கச்செவேலென்று சிவந்திருந்த அவனின் அனல் கக்கும் முகமும் கதிருக்கு கிலி உண்டாக்கியதில் அவன் இதயத்தைத் தாறுமாறாகத் துடிக்க வைக்க, கதிரின் மேல் நிலைத்திருந்த தன் பார்வையை மாற்றாமல்...

"முருகன்.. நீங்க அங்கேயே இருங்க.... நான் வந்துட்டேன்" என்ற அர்ஜூனின் முகத்தில் சில நிமிடங்களுக்குள் தெரிந்த பல் வேறு உணர்வுகளைக் கண்டவனுக்கு, எந்த உணர்வுகளையும் வெளிப்படையாகக் காட்டாத தன் MD யின் முகத்தில் முதன் முறையாகத் தெரிந்த கோப அக்கினி ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது என்று உரைக்க அவனிடம் கேள்வி எதுவும் கேட்கும் தைரியம் இல்லாமல் அவனையே பார்த்திருக்க...

"கதிர்.... கால் தி கமிஷனர் நௌ (CALL THE COMMISSIONER NOW) " என்று கர்ஜித்த அர்ஜூன் தன் அலை பேஸியில் அருணுக்கு அழைத்து விஷயத்தைச் சொல்ல, அங்கு அருண் அலறி அடித்து எழுந்ததில் அருணிற்கு அருகில் அவனோடு அமர்ந்திருந்த அவனுடைய நண்பர்கள் கதிகலங்கிப் போனார்கள்...

அருணிடம் தன் வீட்டுப் பெண்கள் இருவரும் கடத்தப்பட்ட விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஸ்ரீயும் அழைக்க, அவரிடம் என்ன சொல்வது என்று குழம்பிய அர்ஜூன் அழைப்பை எடுக்க, அவன் அழைப்பை எடுத்ததும் என்றும் இல்லாமல் இன்று அர்ஜூனின் குரலில் தெரிந்த பதட்டத்தை உணர்ந்தவர் அவனை விடாப் பிடியாகக் கேட்க, உண்மையைச் சொன்னவன்,

"மாம்... டோண்ட் வொர்ரி.... தே வில் பி ஹியர் சூன்.... (Mom, Don't worry.... They will be here soon)" என்றவன் அலை பேஸியை துண்டிக்க முற்பட,

அடுத்து அவன் அன்னை சொன்ன....

"அர்ஜூன்... கோவில்ல இருக்கும் போது திவ்யா கலாவிடம் பேசிருக்கா... பேசிட்டு இருக்கும் போதே

வலி வந்துச்சுன்னு சொன்னாளாம்பா... எனக்கு ரொம்பப் பயமா இருக்கு அர்ஜூன்" என்ற வார்த்தைகளில் பல ஆயிரம் மடங்கு தெறிக்கும் இடியை தன் தலையில் தூக்கி போட்டது போன்று உணர்ந்து துடித்த அர்ஜூன்....

"கதிர்.... கமிஷனரைப் பிடிச்சீங்களா?" என்று கத்தியதில் சகலமும் நடுங்கி ஒடுங்க....

"சார்... கமிஷனர் லைனில் இருக்கார்" என்று தன் அலை பேசியை அவனிடம் கொடுத்தான் கதிர்...

அர்ஜூனின் வீட்டைக் கடந்த சில நாட்களாகக் கண்காணித்துக் கொண்டிருந்தவர்கள் திவ்யாவும், மஹாவும் தனித்துக் காரில் வெளியே கிளம்பியதும் யாருக்கோ துப்புக் கொடுக்க, அவர்களின் காரைத் தொடர்ந்து வந்த மற்றொரு கார் அவர்கள் செல்லும் வழியைக் கணித்துத் தகவல் அனுப்ப, அந்த மூவரும், திவ்யாவும் மஹாவும் கோவிலைச் சென்றடைவதற்கு முன்னரே தாங்கள் கோவிலை அடைந்து இவர்களுக்காகக் காத்திருக்க, இருவரும் கோவிலுக்குள் சென்றதும் யாருக்கோ அழைத்து விவரத்தைச் சொன்னவர்கள் அவர்கள் இருவரையும் தூக்க தயாராகக் காத்திருந்தனர்....

திவ்யாவும், மஹாவும் கோவிலை விட்டு வெளியில்

வந்த நிமிடமே அவர்களைத் தொடர்ந்து வந்த அந்த மூவரும் சகலத்தையும் இரண்டே நிமிடங்களில் முடித்துவிட்டிருந்ததாலும், அவர்கள் கடத்தப்படும் பொழுது இருட்டாக இருந்ததாலும், அன்று விஷேச நாளோ அல்லது வெள்ளிக்கிழமையோ எதுவும் இல்லாததால் கோவிலில் கூட்டமும் அவ்வளவாக இல்லாததாலும், ஒருவருக்கும் கடத்தலைப் பற்றிய விஷயம் தெரிந்திருக்கவில்லை....

இதில் திவ்யா மஹாவின் வாயைப் பொத்தி வேனில் ஏற்றுவதைக் கண்டு ஓடி வருவதற்குள் அவர்களின் வேன் பறந்துவிட்டிருந்தால் பதற்றத்தில் ட்ரைவர் முருகனோ வேனின் அடையாளைங்களைக் கூடச் சரியாகக் கவனிக்கவில்லை என்றால் வேனின் எண் தகட்டை [Number plate] அவரால் அவ்வளவு தூரத்தில் இருந்து எப்படிப் பார்த்திருக்க முடியும்?

கமிஷனிரிடம் விஷயத்தைச் சொன்ன அர்ஜூன் மின்னல் வேகத்தில் தன் அறையை விட்டு வெளியேற, அவனின் வேகமும், அவன் முகத்தில் தெரிந்த ரௌத்திரமும் அவன் அறையின் அருகில் கூடியிருந்த அனைத்து ஊழியற்களையும் தன்னிச்சையாக அவன் பாதையை விட்டு விருட்டென்று விலகச் செய்ய, அவன் ஓடிய வேகத்தில் ரிஷப்ஷனிஸ்டுகள் முதல் வரவேற்பறையில் அமர்ந்திருந்த அனைவரும் அலறி அடித்து என்னவென்று பார்க்க, அதற்குள் அவன் கார் அசுர வேகத்தில் கோவிலை நோக்கி பறந்திருந்தது....

Last edited: Apr 9, 2018

Likes:Priayamadhavan, sabeenaibu, shanbagavalli and 51 others

Jelineusa
JB

Apr 9, 2018
#55

காரை செலுத்திக் கொண்டிருந்தவன் தன் தலையை அழுந்த கோதிக் கொண்டே "ஷிட்... ஷிட்.... ஷிட்...." என்று கத்திக் கொண்டு ஸ்டியரிங்கில் அடித்தவாறே காரை செலுத்திக் கொண்டு வர, அவனின் வேகத்திற்குச் சென்னையின் சாலைகளில் ஊர்ந்து கொண்டிருந்த வாகனங்கள் கூட அரண்டடித்து வழி விட,

சில நிமிடங்களிலேயே கோவிலை அடைந்தவன், காரை செலுத்திக் கொண்டு வந்த அதே வேகத்திலேயே கோவிலுக்குப் பக்கத்தில் கிரீச்சென்று ப்ரேக்கை அழுத்தி காரை நிறுத்தியதை பார்த்த ட்ரைவர் முருகனுக்குப் புரிந்து போனது தனது பரிதாப நிலைமை...

காரை நிறுத்திய வேகத்தில் புயல் போல் முருகனின் அருகில் வந்தவன் அவரின் சட்டையின் காலைரை இரு கரங்களாலும் இறுக்கிக் கோர்த்துப் பிடித்து...

"அவங்கள கடத்துற வரைக்கும் நீங்க வேடிக்கை பார்த்துட்டு இருந்தீங்களா?" என்று தன் ஒட்டு மொத்த கோபத்தையும் அவர் மீது காட்டி காட்டுக் கத்தல் கத்த, அர்ஜூன் வருவதற்குள் கோவிலை வந்தடைந்திருந்த

கமிஷனர் அவனின் வெடிக்கும் கோபத்தைப் கண்டு சட்டென்று அவர்கள் அருகில் வந்தவர் அர்ஜூனின் தோள் பற்றி.....

"அர்ஜூன்.. இவரை ப்ளேம் பண்ணி பிரயோஜனமில்லை.... இங்க ஒருத்தரும் அவங்களைக் கடத்துனதைப் பார்க்கலை...." என்க...

அவரைச் சட்டென்று திரும்பி தீப் பார்வைப் பார்த்தவன்...

"எப்படி ஸார்? ஹவ் இஸ் தெட் பாஸிபிள்? [How is that possible?] ... பப்ளிக்ல அதுவும் இவ்வளவு பிஸியாக இருக்கிற இடத்தில் இருந்து இரெண்டு பொண்ணுங்க, அதுவும் ஒருத்தி ப்ரெக்னென்ட்...." இதனைச் சொல்லும் பொழுது வாழ்நாளின் முதல் முறை அர்ஜூனின் குரல் கூடத் தடுமாறியதோ என்றே நினைக்கத் தோன்றியது ட்ரைவர் முருகனிற்கு...

தன்னைச் சடுதியில் சமன் படுத்தியவன்...

"ஒருத்தி ப்ரெக்னென்ட் வேறு... எப்படி யாரு கண்ணிலேயும் படாமல் இவங்களைக் கடத்தி இருக்க முடியும்?"

அர்ஜூனின் கேள்வியில் இருக்கும் நியாயம் கமிஷனருக்கும் புரிந்து தான் இருந்தது... ஆனால் இது தான் நம் நாட்டின் நிலைமையே... வீதியில் நடக்கும் குற்றங்களில் தாங்களோ தங்கள் குடும்பத்தாரோ அல்லது வேண்டப்பட்டவர்களோ சம்பந்தப்பட்டிருந்தால் மட்டுமே அடித்துப் பிடித்து முன் வருவார்கள் நம் மக்கள்... இல்லை என்றால் வேடிக்கைப் பார்ப்பதற்குக் கூடும் கூட்டத்தில் ஒரு கால் சதவிகிதம் கூட நடக்கும் அநியாயத்தைக் தட்டிக் கேட்கவோ அல்லது காவல் துறையினருக்கு உதவி புரியவோ முன் வருவதில்லை...

ஆனால் அதே சமயம் ஒட்டு மொத்த பழியையும் பொது மக்களின் மீது போடுவதும் அபத்தம் தான்... உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் உயிர், அவன் உயிரின் பாதுகாப்பு முக்கியமில்லையா?????

"அர்ஜூன்... யாரும் பார்க்காமல் இருந்திருக்க முடியாது... பட் ஒருவரும் முன் வர மாட்டேங்கறாங்க" என்றவருக்கு அர்ஜூனின் நிலைமையும் நன்றாகப் புரிய, அவனின் தோளைத் தொட்டு அழுத்தியவர் அவன் முகத்தைக் கூர்ந்துப் பார்த்தவாறே...

"உங்களுக்கு யார் மேலேயும் சந்தேகம் இருக்கா அர்ஜூன்???... பெர்ஸ்னலா அல்லது பிஸினஸில்?" என்றார்...

அவன் யாரென்று சொல்வான்… தொழில் என்று வந்தாலே போட்டியாளர்களும், எதிரிகளும் இருக்கத் தானே செய்வார்கள்….

அதிலும் தன் அன்னையின் வயிற்றில் கருவாக உருவாகி இருந்த முதல் நாளில் இருந்தே "பயம்" என்ற ஒரு வார்த்தையையே தன் அகராதியில் இருந்து அகற்றியிருந்த, தொழில் வட்டாரத்தில் எதற்கும் யாருக்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்தவன் என்று பேரெடுத்திருந்த,

இந்த இளம் வயதிலேயே தன்னுடைய அதிரடி ஆட்டங்களாலேயும், தொழிலில் நேர்மையாகத் தன்னை எதிர்க்காமல் முதுகில் குத்த முயற்சி செய்பவர்களையும், தன்னுடன் நேரிடையாக மோதாமல் கோழைத்தனமாகப் பின்னால் இருந்து மோதுபவர்களையும் தன்னுடைய ஈவு இரக்கமற்ற, அச்சமென்பதே துளி அளவும் இல்லாத அசுரத்தனமான நடவடிக்கைகளால் அவர்களைத் துவம்சம் செய்யும் அரக்கன் என்று பேரெடுத்து இருந்தவனிற்கா எதிரிகள் இருக்க மாட்டார்கள்?

ஆனால் அதே சமயம் அவனின் ஆங்காரமும், கோபமும், அதிகாரமும் தெரிந்தவர்கள் ஒருவரும் அவன் தங்கையையம், மனைவியையுமே கடத்தும் அளவிற்கு நிச்சயம் துணிய மாட்டார்கள்…

அப்படித் துணிந்திருந்தால் அவர்களின் வாழ்வை மட்டும் அல்ல, அவர்களின் அடிக் கிளைவரை ஒருவரையும் விடாது அவன் வெட்டி வீழ்த்திவிடுவான் என்று அவனைப் பற்றித் தெரிந்த யாவருக்கும் தெரியுமே...

கமிஷனரின் கேள்விக்கு யோசிக்கத் துவங்கியவனின் மூளை சூடாகி ஏற்கனவே அக்கினி மலைப் போல் கொதித்துக் கொண்டிருந்த உள்ளம் மேலும் வெடித்துச் சிதறும் நிலைக்கு வர, அவனை அமைதிப்படுத்திய கமிஷனர் தன்னுடன் இருந்த காவலர்கள் அனைவரையும் அழைத்தவர் கோவிலைச் சுற்றியும், அதன் சுற்றுவட்டாரத்திலேயும் ட்ரைவர் முருகன் சொன்ன அடையாளங்களுடன் ஏதாவது வேன் சென்றிருந்தா, அல்லது யாராவது ஒருவர் கண்ணிலாவது வேனில் இருந்தவர்களில் ஒருவராவது பட்டிருந்தார்களா என்று விசாரிக்கச் சொன்னவர் அர்ஜூனை அழைத்துக் கொண்டு அவன் அலுவலகத்திற்குக் கிளம்ப....

அதற்குள் திவ்யாவின் நிலைமை பற்றி விசாரிக்க மீண்டும் ஸ்ரீயை அழைத்த கலாவிடம் மறைக்க முடியாமல் ஸ்ரீ நடந்த அனைத்தையும் சொல்ல அரண்டு அடித்துக் கொண்டு வாடகை டேக்ஸி பிடித்துச் சென்னை கிளம்பினார் கலா... தன் கணவனுடனும், வினோத்துடனும்...

ஒரே குடும்பத்தில் இரண்டு பெண்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள்.... அதிலும் ஒருத்தி நிறை மாத கர்ப்பிணி...

அந்தக் குடும்பத்தினரின் பதட்டமும், கலக்கமும், அச்சமும் சொல்வதற்கு வார்த்தையில்லை... ஒரு தடயமும், துப்பும் கிடைக்காமல் காவல் துறையும் முடியைப் பிய்த்துக் கொள்ள நேரம் ஆகிக் கொண்டே இருந்தது...

Last edited: Apr 9, 2018

Likes:Priayamadhavan, sabeenaibu, shanbagavalli and 46 others

Jelineusa

JB

Apr 9, 2018

#56

அர்ஜூனின் கார் அவனுடைய அலுவலகத்தை நோக்கி பறக்க, அவனைத் தொடர்ந்து கமிஷனரின் காரும் விரையவும், அவர்கள் அலுவலகத்தை அடையும் முன் அருணும் வந்து சேர்ந்திருக்க, அர்ஜூன் காரில் இருந்து இறங்கியதும் அவனை நோக்கி ஓடிய அருணையும், கதிரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு சீறும் சிங்கம் போல் அதி வேக நடை வைத்து தன் அறைக்கு வந்தவனைக் கண்ட, அங்குமிங்கும் கூட்டம் கூட்டமாக நின்று கிசுகிசுத்த ஊழியர்கள் சிதறி ஓடி தங்களின் இருக்கைகளில் அமர,

தன் அறைக்குள் நுழைந்தவன் அருணையும்,

கதிரையும் தன்னருகில் அழைத்தவன் தனது ஆட்களில் பெரிய தலைகள் அத்தனை பேருக்கும் இந்த விஷயத்தைச் சொல்லி சென்னை மற்றும் சுற்றுவட்டாரத்திலும் ஒரு மூலை இண்டு இடுக்கு விடாமல் அலச சொன்னவன், வேறு சில கட்டளைகளையும் பிறப்பிக்க..

அவன் பேச்சைக் குறுக்கிட பயந்த கதிர் இருந்ததும் தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு...

"சார்... அந்த ராம் இண்டஸ்ட்ரீஸ்" என்று கூட முடிக்கவில்லை...

கதிரை சட்டென்று திரும்பிப் பார்த்த அர்ஜூன்...

"கதிர்... ராம் இண்டஸ்ட்ரீஸுக்கு அப்புறம் நாம் எத்தனையோ எதிரிகளைச் சந்திச்சிட்டோம்.. ராமச்சந்திரன விட அவனுங்க எல்லாம் பெரிய கேடிங்க... நீங்க அந்த ஆங்கில்ல இருந்து திங்க் பண்ணுங்க..." என்றவன் அருணிடம் திரும்பி...

"அருண்... நாம ராம் இண்டஸ்ட்ரீஸை அழிச்சதற்குப் பிறகு சம்பத் இந்த நாட்டை விட்டே போயிட்டதாகக் கேள்வி... அவனுக்கு என்னை எதிர்க்க இனி தைரியம் இருக்காது... பட் அட் தி சேம் டைம் [But at the same time]

அவன் வேற எங்கிருந்தாவது இத ஆப்பரேட் பண்யிருக்கானான்னும் தெரியனும்… அத நீ என்கொயர் பண்ணு" என்றவன் தன் தலையை அழுந்த பிடித்துக் கொண்டு தொப்பென்று நாற்காலியின் சாய்ந்தான்…

அங்குத் திவ்யாவையும் மஹாவையும் வாய் பொத்தி தங்களின் வேனில் ஏற்றியவர்கள் அதி வேகமாகச் செலுத்திக் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ஆள் அரவமற்ற ஒரு பெரிய பங்களாவின் போர்டிக்கோவில் வேனை நிறுத்தினர்…

ஒரு மயான அமைதியோடு இருந்த அந்த இடத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில வீடுகளே இருந்தாலும் அனைத்துமே பங்களாக்கள்…

அந்த இடத்தையும், பங்களாக்களையும், இருளடைந்து அமைதி படர்ந்த வீதியையும் பார்த்தாலே எத்தகைய துணிவுள்ள மனிதனுக்கும் அடி மனதில் இரு சிறு கிலியாவது தோன்றும்…

வேனில் வரும் பொழுது திவ்யாவும் மஹாவும் சப்தம் போடாமல் இருக்க அவர்கள் இருவரின் வாயும் கட்டப்பட்டிருக்க, கோவிலில் துவங்கியிருந்த பிரசவ வலி விட்டு விட்டு சுளீர் சுளீரென்று இன்னும் வலித்துக் கொண்டிருந்ததில் அது திவ்யாவை கிட்டதட்ட மயக்க நிலைக்கே கொண்டு சென்று இருக்க,

அவர்கள் இருவரையும் கீழே இறக்கிய அந்த மூவரும் திமிறிக் கொண்டிருந்த மஹாவின் கரத்தையும், வலியால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாமல் தடுமாறி தவித்துக் கொண்டிருந்த திவ்யாவின் தோள் பற்றியும் வீட்டிற்குள் தள்ளி செல்ல, உள்ளே இழுத்து வரபட்டவர்களை வரவேற்றது கணீரென்ற அந்த ஆர்ப்பாட்டமான குரல்...

"வெல்கம் டு மை பேலஸ் டியர்...."

Last edited: Apr 9, 2018

Likes:Priayamadhavan, ManjuKarthik, sabeenaibu and 49 others

Jelineusa

JB

Apr 9, 2018

#57

குரல் கேட்டு மஹாவும், திவ்யாவும் திடுக்கிட்டு அதிர்ச்சியுடன் சத்தம் வந்த திசையை நோக்கி திரும்ப, அங்குச் சோஃபாவில் கால் மேல் கால் போட்டு ஒய்யாரமாக அமர்ந்திருந்தான் கோகுல்...

மஹா அன்று ஹோட்டலில் நிருபமாவுடன் சேர்ந்து அவனை அறைந்த பிறகு மறு நாளில் இருந்து ஒவ்வொரு நிமிடமும் அவன் தன்னைப் பழிவாங்க எந்த எல்லைக்கும் போகத் தயங்க மாட்டான் என்று அஞ்சி நடுநடுங்கி, தன்னுடையை இக்கட்டான சூழ்நிலையை வீட்டினருக்கும் தெரியப்படுத்த

முடியாமல்,

ஒவ்வொரு நாளும் அருணோடு காரில் கல்லூரிக்கு போகும் பொழுதும், வீட்டிற்குத் திரும்பி வரும் பொழுதும் நடந்த அனைத்தையும் அவனிடம் சொல்லிவிடலாமா என்று மனமும் நாவும் துடிக்கும் பொழுதெல்லாம், தன் மனதில் தைரியம் எழாமல் மறைத்து அரண்டுப் போயிருந்தவளுக்கு அதற்குப் பின் கோகுல் தன் கண்களிலே படவேயில்லை என்பது விசித்திரமாகவும், அதே சமயம் கலக்கமாகவும் இருந்து வந்தது...

அவனைப் பற்றித் தன் தோழிகளிடமும், சில கல்லூரி மாணவர்களிடமும் மஹா ரகசியமாக விசாரிக்க, அவன் வழக்கம் போல் கல்லூரிக்கு வருவதும் போவதுமாகத் தான் இருக்கிறான் என்று கேள்விப் பட்டு "ஏன் இத்தனை நடந்தும் அவன் ஒன்றும் நடவாதது போல் அமைதியாக இருக்கிறான்??" என்று குழம்பியவள், நாள் ஆக ஆக அவன் அவளுக்கு எந்தத் தொந்தரவும் செய்வது போல் தெரியவில்லை ஆதலால்,

"ஒரு வேளை அன்று நடந்தது அர்ஜூன் அண்ணாவிற்குத் தெரிந்தால் என்ன ஆவது என்று நான் பயந்தது போல் இவனின் அட்டூழியம் இவன் வீட்டிற்குத் தெரிந்து அதனால் கண்டிக்கப்பட்டு அமைதியாக இருக்கிறானோ" என்று நினைத்து நிம்மதி

பெருமூச்சுவிட்ட தன் முட்டாள் தனத்தை நினைத்து இன்று கதி கலங்கி நின்றாள் மஹா...

ஆனால் அவளின் வழிக்கு வராமல், அவளுக்கு எந்தத் தொல்லையும் கொடுக்காமல், அவளின் பாதையில் குறுக்கிடாமல், ஏன் அவளின் கண்ணில் கூடப் படாமல் அவன் காத்திருந்தது இதனைப் போன்ற பழிவாங்கும் நாளுக்குத் தான் என்று அவளுக்குத் தெரியாமல் போனது அவளது விதி மட்டும் அல்ல...

அதில் ஒன்றுமே தெரியாத, தனது வயிற்றில் தங்களின் முதல் வாரிசை, தனது கணவனின் உயிரை தாங்கியிருக்கும், இதோ எந்த நிமிடமும் பிரசவம் நடந்துவிடும் சூழ்நிலையில் பிரசவ வலியில் துடிதுடித்து நிற்கும் அப்பாவியான திவ்யாவையும் அல்லவா விதி தன் கோரக்கரங்களை நீட்டி வளைத்திருக்கிறது...

தனக்குத் தெரியாமல் தன்னை வேட்டை ஆடுவதற்குக் காத்திருக்கிறது இந்த ஓநாய் என்று தெரியாமல் தானே அவன் வலையில் சிக்கியதும் அல்லாமல் இப்பொழுது தனது அண்ணனின் ஊண், உயிர், உடல் அனைத்துமான அவனது மனைவியையும், பிறக்கப் போகும் அவனது குழந்தையையும் அல்லவா சிக்க வைத்திருக்கிறாள் தன்னுடைய அறியாமையால்...

திவ்யாவையும், மஹாவையும் கடத்திய அந்த மூவரையும் பார்த்து...

"அவங்க வாய் கட்டை ரிமூவ் பண்ணுங்க" என்று கோகுல் தன்னுடைய அழுத்தமான குரலில் கூற...

அவனைப் பார்த்தவுடன் உச்சக்கட்ட அதிர்ச்சி அடைந்திருந்த மஹா "கோகுல்" எனத் தன்னையும் அறியாமல் மெதுவாகக் கூறவும்...

"ஆமாண்டி.... கோகுலே தான்.. இப்ப தான் இந்தக் கோகுல் உன் கண்ணுக்குத் தெரியறான் இல்லை"... என்றான் ஒவ்வொரு வார்த்தையாக ஆனால் கண்களிலும் அவன் வார்த்தைகளும் கோபமும் வெறியும் தொனிக்க...

சட்டென்று தன்னையும் அறியாமல் திவ்யாவைப் பார்த்த மஹா திவ்யாவின் முகத்தில் அதிர்ச்சியையும் மீறி வலியின் வேதனை தெரிய, நிற்க கூட முடியாமல் துவண்டு இடுப்பைப் பிடித்தவாறே கண்களில் நீர் ஆறாகப் பெருக்கெடுக்க நின்று இருந்தவளைப் பார்த்தவள் கண்களாலேயே என்னை மன்னிச்சுடுங்க அண்ணி என்பது போல் இறைஞ்சியவள் வேறு வழியின்றிக் கோகுலின் பக்கம் திரும்பி திவ்யாவிற்காக...

"ப்ளீஸ் கோகுல், அன்னைக்கு நடந்ததுக்கு நான் உன் கால்ல வேணா விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... ஆனால் தயவு செஞ்சு எங்கள விட்டுடு... அண்ணிக்கு லேபர் பெயின் வந்திருச்சு... ப்ளீஸ் கோகுல்... அவங்க ரொம்ப நேரமா வலியில் துடிச்சிட்டு இருக்காங்க.... எங்களைப் போக விடு..." என்று அவள் கதற

இதழ் பிரித்துச் சிரித்தவன் மானை வேட்டையாடும் வேடனின் முகத்தோடும், வெற்றிப் புன்னகையோடும் அவள் அருகில் வந்தவன்,

"எனக்கு நீதாண்டி வேணும்... உன் அண்ணி இல்ல... ஆனால் இந்த இடியட்ஸ் அவளையும் சேர்த்து தூக்கிட்டு வந்திட்டாங்க... பட்... சும்மா சொல்லக் கூடாது... ப்ரெக்னன்ட்டா இருந்தாலும் உன் அண்ணியும் செம்ம கட்டை தான்" என்றவன் திவ்யாவை நிதானமாக உச்சி முதல் உள்ளங்கால் வரை விரசத்தனமான ஒரு பார்வை பார்க்க,

அவனின் பார்வையில் அதிர்ந்த மஹா திவ்யாவைப் பார்க்கவும், கோகுலின் அசிங்கமான வார்த்தைகளாலும், அருவருக்கத்தக்க காமம் வழியும் பார்வையாலும், அவன் இதழ்கள் பிரித்துச் சிரித்திருந்தாலும், அதில் தெரிந்த நரித்தனமான விஷத்தைப் போன்ற புன்னைகையிலும் அவனின் கேடுகெட்டத் தனம் தெரிய, மஹாவைத் திரும்பி பார்த்த திவ்யாவின் கண்களில் தெரிந்த பயத்தைப்

பார்த்த மஹாவின் உள்ளம் குற்ற உணர்வில் சுருண்டது...

இவர்களின் பார்வை பறிமாற்றத்தை ரசித்துக் கொண்டே மஹாவின் அருகில் வந்த கோகுல் அவள் உடலின் ஒவ்வொரு பாகத்தையும், அணு அணுவாகத் தன் வேட்கை வழியும் கண்களால் ரசிக்கவும், அவன் தன் பார்வையாலேயே தன்னை நிர்வாணமாக்கியது போல் உணர்ந்த மஹா கூனிக்குறுகிப் போய்ச் சகலமும் நடுங்கிப் போய் நிற்க,

கோகுல் அடுத்து சொன்ன வார்த்தைகளில் மஹாவின் நெஞ்சுக் கூட்டில் எடுத்த குளிரில் அவளின் உடல் முழுவதும் வெளிப்படையாக உதறெலுடுத்து நடுங்கியது...

தனது மூச்சுக் காற்று மஹாவின் முகத்தில் படும் அளவிற்கு அவளை நெருங்கி நின்றவன் அவள் முகம் நோக்கி குனிந்து...

"மஹா... எனக்குத் தேவை நீ தான்... உன் அண்ணி இல்ல... நீ எனக்குக் கொஞ்சம் கோப்ரேட் பண்ணு... என் வேலை முடிஞ்சதும் சீக்கிரம் உன் அண்ணிய விட்டுடுறேன்... என்ன டீல்?" என்றான்...

உடலில் உள்ள ஒவ்வொரு நரம்பிலும் பயம் என்ற உணர்வு மின்சாரத்தின் வேகத்தில் பாய்ந்தது போல் பரவி இருக்க, தனக்கு வெகு அருகில் தனது முகத்தை நோக்கி அவன் குனிந்து நிற்கவும், அவன் மேல் இருந்து வந்த மதுவின் வாடை வேறு மஹாவிற்குக் கிலியை ஏற்படுத்த,

ஆனாலும் தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுத் தன் தைரியம் அனைத்தையும் திரட்டி...

"நோ கோகுல்... யூ ஆர் மேகிங் எ ஹூயூஜ் மிஸ்டேக் [No Gokul... You are making a huge mistake] என் அண்ணாவப் பத்தி உனக்கு நல்லா தெரியும்... அதனால தான் நீ இத்தனை நாளா அடக்கி வாசிச்சுக்கிட்டு இருந்தன்னும் எனக்குத் தெரியும்... என்னைத் தொட்டாலே அண்ணா உன்ன உண்டு இல்லைன்னு பண்ணிடுவாங்க... இப்போ அவங்க வைஃப்ப வேற கடத்தியிருக்க... அவங்க எங்க அண்ணாவோட உயிர்... அதுவும் ஷி இஸ் இன் பெயின் நௌ... [She is in pain now] அவங்களுக்கோ இல்லை குழந்தைக்கோ எதுவும் ஆச்சு அப்புறம் நீ காணாம போய்டுவ" என்றாள்...

அவளின் மிரட்டலில் வாய் விட்டுச் சத்தமாகச் சிரித்தவன்...

"என்னடி? மிரட்டுறியா?.... நீயா எனக்குக் கோப்ரேட்

பண்ணுவன்னு பார்த்தேன்... ஆனால் அது நடக்கலை... சரி... உன் வழிக்கு நான் வரேன்... படுத்துட்டு போர்த்தினா என்ன? போர்த்திட்டு படுத்தா என்ன?" என்றவனை என்ன சொல்ல வருகிறான் என்று புரியாமல் குழப்பத்தோடு அவனேயே அண்ணாந்து பார்த்திருக்க....

அவளின் கண்களை ஆழ்ந்துப் பார்த்தவாறே தன் சட்டை பாக்கெட்டில் கை விட்டவன் உதட்டில் நெளிந்த ஏளனப் புன்னைகையுடன் அதில் இருந்து தாலி கயிறை எடுக்க, திவ்யாவிற்குச் சடுதியில் எல்லாம் புரிந்து போனது...

அவன் மஹா அண்ணியைக் கல்யாணம் பண்ண ஆசைப் பட்டிருக்கான்... ஆனால் இவர் ஒத்துக்கலை... அதுக்குத் தான் இந்தக் கடத்தல் வேலை.. யாருக்கும் தெரியாமல் கடத்தி வந்து மஹா அண்ணி கழுத்தில் தாலி கட்டிவிட்டால் அவங்களைத் தன் மனைவியாக ஆக்கிக் கொள்ளலாம் என்று குரூர நினைப்பு...

"சே... இப்படியும் ஒருத்தன் இருப்பானா??" என்று மனதிற்குள் நினைத்தவள் உடலின் ஒவ்வொரு நரம்பிலும் உணர்ந்து கொண்டிருந்த வலியை உதடு கடித்து அடக்கிக் கொண்டு மெல்ல மூச்சு வாங்க...

"அவங்களுக்குத் தான் உங்கள பிடிக்கலை

இல்லையா… அப்புறம் ஏன் இப்படிப் பண்றீங்க?" என்று பரிதாபமாகக் கேட்க,

அவளை ஒரு முறை திரும்பி பார்த்தவன்,

"ஹ… இங்க பாருடா… "என்றவன் திவ்யாவைப் பார்த்துக் கண் சிமிட்டி…

"நீ ப்ரெக்னன்டா இருக்கிறதனால தப்பிச்ச… இல்லை இவள ****** கையோட உன்னையும் ******* " என்று அருவருக்கத் தகுந்த வார்தைகளைக் கூற…

இவ்வளவு குரூரமானவனா இவன் என்று நினைத்து கதிகலங்கிய திவ்யா அதிர்ந்து மஹாவைப் பார்க்க, கோகுலின் அசிங்கமான பேச்சைக் கேட்ட மஹாவிற்கு இவன் நம்மை விட மாட்டான் என்பது போல் திக்கென்று இருந்தது…

Likes:Priayamadhavan, sabeenaibu, shanbagavalli and 52 others

Jelineusa
JB

Apr 9, 2018
#58

மீண்டும் மஹாவைத் திரும்பிப் பார்த்தவன் மஹாவின் கழுத்திற்கு அருகில் தாலிக் கயிறைக் கொண்டு செல்ல, மஹா திமிறவும் அந்த மூவரையும் பார்த்து…

"நீங்க என்ன இங்க ..... வந்திருக்கீங்களா" என்று தகாத வார்த்தைகளால் கத்தி திட்டியவன் மஹாவை இறுக்கப் பிடித்துக் கொள்ளச் சொல்ல,

திமிறத் திமிற அந்த மூவரும் மஹாவைக் கொஞ்சம் கூட அசைய முடியாத அளவிற்கு இறுக்கப் பற்ற, அடுத்து நடக்கவிருப்பது புரிந்து...

உயிர் போகும் வலியை தாங்கிக் கொண்டு நிற்க முடியாமல் நின்று இருந்த திவ்யா தன் மனதினை திடப்படுத்தி, தன் திடத்தையும், சக்தியையும் கால்களுக்குக் கொடுத்து கோகுலின் அருகில் வந்தவள் தன் பலம் கொண்ட மட்டும் அவனைப் பிடித்துத் தள்ள முயற்சிக்க,

நிறை மாதக் கர்ப்பிணி என்று கூடப் பார்க்காமல் அவளை முரட்டுத் தனமாக இறுக்கிப் பிடித்துத் தரையில் தள்ளிவிட்டான் அந்த அரக்கன்... கொடூரன்.... காமுகன்....

அவன் தள்ளிய வேகத்தில் ஏற்கனவே வலியால் துவண்டுப் போய் இருந்த திவ்யா நிலை தடுமாறி கீழே விழுந்தவள் "அம்மா" என்று வீலென்று அலற, மஹாவிற்குச் சப்த நாடியும் அடங்கி ஒடுங்கிப் போனது.....

ஒரு கர்ப்பிணி பெண்ணிடமே இந்த அளவிற்கு மனிதாபிமானம் இல்லாமல் மிருகத்தனமாக நடந்து கொள்கிறான் என்றால், எப்பேற்பட்ட கொடியவனாக இவன் இருக்கக் கூடும்... ஐயோ! இவனைப் போய்ச் சர்வ சாதரணமாக எடைப் போட்டு விட்டேனே என்று உள்ளுக்குள் கதறி துடித்தவளுக்கு இனி இவனிடம் சண்டையிட்டு பயனில்லை என்றே தோன்ற...

இதில் வலியால் கதறிக் கொண்டு கீழே தரையில் துடித்துக் கொண்டிருக்கும் திவ்யாவின் நிலை வேறு அவளின் இதயத் துடிப்பை பல மடங்கு அதிகரிக்க, திவ்யா அண்ணி இருக்கும் இந்தச் சூழ்நிலையில் இப்படிப் பட்ட மிருகத்திடம் எதிர்த்து போராடுவதை விடப் பணிந்து போவதே மேல் என்று நினைத்தவள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு...

"ஓகே கோகுல்.... உனக்கு நான் தான வேண்டும்... சரி தாலிய கட்டு.... பட் அதற்கப்புறம் இமீடியெட்டா என் அண்ணிய பக்கதில் இருக்கிற ஏதாவது ஒரு ஹாஸ்பிட்டல்ல சேர்க்க சொல்லு" என்றாள் விழிகள் திவ்யாவையே நோக்கியிருந்தவாறே...

ஏற்கனவே ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் பிரசவ வலி திவ்யாவை உயிரோடு கொன்று கொண்டிருந்தது... இதில் சடாரென்று தள்ளப்பட்டதால் கீழே தரையில் மல்லாக்க விழுந்ததில் புட்டத்திலும், முதுகிலும் பட்ட

அடி பிரசவ வலியை உச்சஸ்தாயிக்குக் கொண்டு செல்ல உயிரைக் கொல்லும் வலியுடன்...

"வேண்டாம் அண்ணி, இதுக்கச் சம்மதிக்காதீங்க" என்று முனகினாள் அந்தச் சின்னப் பெண்...

அர்ஜூனின் இதயத்தில், ஆத்மாவில், உயிரில், ஈருடல் ஓருயிராகக் கலந்திருந்த அவனின் மனம் கவர்ந்த மனையாள்...

திவ்யாவின் முனகலில், அவளின் கூற்றில் அவளைப் பரிதாபமாகத் திரும்பி பார்த்த மஹாவிற்கு அவளின் நிலை எண்ணி கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது..

"எப்படி அண்ணா இவங்களைப் பார்த்துக்கிட்டாங்க? இவங்க பாதம் தரையில் படறதுக்குக் கூட அவங்க விடலை... ஆனால் இப்ப இப்படித் தரையில், அதுவும் பிரசவ வலியோடு கதறி துடித்துக் கொண்டு இருக்கிறத அவர் பார்த்தால் என்ன ஆகும்??" என்று யோசித்தவள் இவை அனைத்துக்குமே காரணம் தானும், தன்னுடைய முட்டாள் தனமும் தான்... தன்னால் இதற்கு மேலும் திவ்யா அண்ணி கஷ்டப்படக்கூடாது... அவங்களும், அவங்க குழந்தையோட உயிரும் மட்டும் தான் இப்போ முக்கியம் என்று முடிவெடுத்தவள் தன் கண்களில் ஊற்றாக வழிந்து கொண்டிருந்த விழி நீரை அழுந்த

துடைத்துக் கொண்டு நிமிர்ந்து நின்றவள்...

"சரி கோகுல்... கட்டு தாலிய" என்றாள்...

மஹாவின் பேச்சில் அதிர்ச்சியின் எல்லைக்கே சென்ற திவ்யா தன்னுடைய உயிர் போகும் வலி கிட்டதட்ட உச்சக்கட்டத்தை அடைந்து இருந்தாலும் மனித ரூபத்தில் இருக்கும் இந்தக் கொடிய மிருகம் தன் நாத்தனாரின் கழுத்தில் தாலிக் கட்டி அவர் வாழ்க்கையை நாசம் பண்ண விடக்கூடாது என்று நினைத்தவள் முடிந்த மட்டும் வேகமாக எழுந்து மஹாவை நெருங்கியிருந்த கோகுலை மீண்டும் தள்ள முயற்சிக்க மறுபடியும் சுளீர் என்று வலி ஒன்று அவளின் உயிரின் வேர் வரை சென்று அவளைச் சாய்க்க...

தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் "அம்மா" என்று அலறியபடியே மெதுவாகத் தரையில் படுக்க, கோகுலுக்கு அருகில் இருந்த அவனின் கல்லூரி நண்பன், அந்த மூவரில் ஒருவன் அதிர்ந்தவன்..

"கோகுல் நாம பெரிய தப்பு பண்றோம்... ஜஸ்ட் திங், ஒரு வேளை இவங்களுக்கோ இல்லை இவங்க குழந்தைக்கோ எதுவோ ஆகிட்டா அந்த அர்ஜுன் நம்மள கொண்ணு புதைக்காம விடமாட்டான்... மஹா கழுத்துல தாலிய கட்டிட்டு அவள கெடுத்துட்டா

அவனால ஒன்னும் செய்ய முடியாதுன்னு தான் நீ இந்த ப்ளானே போட்ட.... பட், இத நாம எதிர் பார்க்கல... இப்ப நீ இவ கழுத்துல தாலிய கட்டினாலும், அவன் வைஃப்பிற்கு ஏதாவது ஆச்சு.... நிச்சயம் நம்ம உயிர் நமக்கு இல்லை... அது மட்டும் இல்லை... உனக்கு என்ன இவள விட்டா வேற பொண்ணே கிடைக்காதா?? கமான் லெட்ஸ் கோ [Come on let's go]... இதுக்கு மேல இங்கிருக்கிறது ஆபத்து" என்றான் கலக்கத்துடன்...

என்ன தான் ரௌடியாக இருந்தாலும் கடத்தல் தொழில் செய்பவனாக இருந்தாலும் திவ்யா தரையில் கிடந்து பிரசவ வலியில் துடிப்பதை பார்த்த அந்த மூவரில் மற்றொருவனுக்கும் மனம் இறங்க...

"ச... சார்... உங்க ஃப்ரெண்ட் சொல்றது சரி தான் சார்... எங்க இந்தப் பொண்ண மட்டும் தூக்கினா எங்களை அடையாளம் தெரிஞ்ச இவங்க எங்களைக் காட்டிக் கொடுத்துடுவாங்களோன்னு பயந்து தான் சார் இவங்களையும் சேர்த்துக் தூக்கினோம்... ஆனால் இப்ப இவங்க இருக்கிற நிலையைப் பார்த்தா இவங்களுக்கு எப்போ வேணுமானாலும் குழந்தை பிறக்கும் போல இருக்கு சார்... இங்க இருந்தோம் நிச்சயம் இது பெரிய பிரச்சனையில் போய் முடியும்... வா... வாங்க சார் போகலாம்"... என்றான் கண்களில் அச்சத்தையும் கலக்கத்தையும் ஒருங்கே சுமந்து குரலில் தடுமாறியவாறே....

அவர்கள் இருவரையும் விருட்டென்று திரும்பி பார்த்த கோகுல் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்ற ஏமாற்றத்தில் விளைந்த கோபத்தில் வெடிக்கும் நிலையில் இருந்தவன் தன் ஒட்டு மொத்த கோபத்தையும் அவர்களிடம் காட்டி...

"இடியட்ஸ்.... நான் சொன்ன படி இவள மட்டும் தூக்கியிருந்தா நான் நினைச்சது இந்நேரம் நடந்து முடிஞ்சிருக்கும்.... போயும் போயும் உங்களைப் போய் அனுப்பினேன் பாருங்க... என்னைத் தான் செருப்பால அடிச்சுக்கனும்" என்றவன் அதற்கு மேல் எதுவும் யோசிக்க முடியாமல், மஹா மட்டும் கோவிலுக்கு வரவில்லை, அவளுடன் அவள் அண்ணியும் வந்திருக்கிறாள் என்று தன் ஆள் துப்புக் கொடுத்தும், மஹாவைக் கடத்தச் சொன்ன தானும் ஒரு மிகப் பெரிய முட்டாள் தான் என்பதை நிருபிக்கும் வகையில் அங்கிருந்து விருட்டென்று கிளம்பினான்...

ஒரு வேளை திவ்யாவை அவர்கள் கடத்தாமல் மஹாவை மட்டும் கடத்தி அவள் கழுத்தில் தாலி கட்டியிருந்தாலோ, அல்லது அவள் கற்பிற்கு ஏதாவது பங்கம் விளைவித்து இருந்தாலோ, அப்பொழுதும் அர்ஜூன் அவர்களைச் சும்மா விட்டுவிடுவானா?

அவர்கள் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும் கண்டுப்பிடித்து அவர்களைச் சிதைத்து உருக்குலைத்து காணாத பிணமாக ஆக்கியிருப்பான் என்பது அந்த

முட்டாளுக்குத் தெரியவில்லையா என்ன???.

மஹாவைப் பின் தொடர துவங்கிய காலத்திலேயே அவனுக்கு அர்ஜூனைப் பற்றியும் அவனின் செல்வாக்கைப் பற்றியும் தெரிந்திருந்ததினால் தான் மஹா சொன்னது போல் அவன் கொஞ்சம் அடக்கி வாசித்தது... ஆனால் அன்றொரு நாள் என்றும் இல்லாத திருநாளாக மஹா புடவை அணிந்து கல்லூரிக்கு செல்ல, அவளின் உடல் அழகில் மதி மயங்கியவன் அவளைத் தன் நண்பனை விட்டு கீழே விழச் செய்ய, கீழே விழுந்தவளை தூக்கும் சாக்கில் அவளின் இடைப் பிடிக்க அவளின் ஸ்பரிஸமும், வெகு அருகில் அவளின் முகத்தைப் பார்த்ததினால் எழுந்த தாபமும் அது வரை அடங்கியிருந்த மஹாவின் மீதான அவன் மோகத்தைக் கொளுந்துவிட்டு எரிய செய்ய, அன்றிலிருந்து காம இச்சை அவன் மூளையை மழுங்கடிக்கச் செய்திருந்தது...

மஹாவை என்ன விலைக் கொடுத்தாவது அடைய வேண்டும் என்று எண்ணிய அந்த முட்டாளுக்கு மஹாவிற்கு ஒன்று என்றால் அவளின் அரண் போன்ற அண்ணன்களான அர்ஜூனும், அருணும் அவன் உயிரைத் தான் விலையாகக் கேட்பார்கள் என்று தெரியாமல், மஹாவை எப்படியாவது அடைந்து விட வேண்டும் என்று தான் இத்தகையை மதிகெட்ட செயலை அவன் செய்தான்...

ஆனால் அவனின் கெட்ட நேரத்திலும் கெட்ட நேரம் மஹாாவைக் கடத்தியது மட்டும் இல்லாமல் அர்ஜூனின் உயிர் மூச்சான அவன் மனைவிக்கும், அவள் வயிற்றில் சுமந்திருக்கும் அர்ஜூனின் உயிருக்கும் இன்று இப்படி ஒரு ஆபத்தை விளைவித்துவிட்டான்...

பெண் மோகம் யாரை விட்டது!! பலசாலியை கோழையாகவும், அதிபுத்திசாலியை முட்டாளாகவும், கோடீஸ்வரனை பரம ஏழையாகவும் மாற்றிவிடும் அபார சக்தி அதற்கு உண்டு!!!!

எத்தனை அரசர்கள் பெண் மோகத்தினால் இருந்த சுவடே தெரியாமல் அழிந்திருக்கிறார்கள்!! எத்தனை அரசுகள், அரசாங்கங்கள் பெண்களின் மேல் உள்ள இச்சையினால் வீழ்ந்திருக்கிறது!!

Last edited: Apr 9, 2018

Likes:Priayamadhavan, sabeenaibu, shanbagavalli and 54 others

Jelineusa
JB

Apr 9, 2018
#59

கோகுலும் அவன் ஆட்களும், தரையில் வீழ்ந்து கதறிக் கொண்டு துடிதுடித்துக் கொண்டிருந்த திவ்யாவை கொஞ்சம் கூட ஈவு இரக்கமின்றி அனாதையாக விட்டு செல்ல, திவ்யாவின் அருகில் அலறி அடித்துக் கொண்டு மஹா வர, அத்தனை வலியிலும் பல்லை இறுக்கக் கடித்துக் கொண்டு....

"அண்ணி.... போய் முதல்ல கதவச் சாத்துங்க... அவனுங்க திரும்பவும் வந்துடப் போறாங்க" என்க...

வேகமாக ஓடிச் சென்று கதவை சாத்திய மஹா அந்தப் பங்களாவில் தொலை பேசி எதுவும் இருக்கிறதா என்று ஒவ்வொரு அறையாகத் தேடிப் பார்க்கச் செல்ல,

யாருமற்ற அனாதைப் போலக் கட்டாந்தரையில், உயிர் போகும் வலியோடு, தன்னந்தனியாகக் கதறித் துடித்துக் கொண்டிருக்கும் தன் மனைவியை இந்த நிமிடம் அர்ஜூன் பார்த்திருந்தால், அவனின் காதல் கொண்ட இதயம் பல ஆயிரம் துகள்களாகச் சுக்குசுக்காக வெடித்துச் சிதறியிருக்கும் என்பதில் ஐயமே இல்லை...

வீடு முழுவதும் ஒரு அறை விடாமல் தொலை பேசியை மஹா தேடிப் பார்க்க, அவர்களின் கெட்ட நேரம் அந்த வீட்டில் தொலை பேசி எதுவும் அவர்களின் கண்ணுக்கு தென்படவில்லை... அலை பேசி வந்ததற்குப் பிறகு வீடுகளில் தொலைப் பேசிக்கு வேலையில்லையே...

நிமிடத்திற்கு நிமிடம் திவ்யாவின் வலி அதிகமாக அவளின் கதறலில் மனம் துடித்துப் பதறிய மஹா வேகமாக ஓடி வந்தவள் அவளின் அருகில்

மண்டியிட்டு திவ்யாவின் கரம் பற்றி....

"அண்ணி, கொஞ்சம் பொறுத்துக்கங்க அண்ணி... நான் மெதுவா வெளியில போய் யாரையாவது ஹெல்ப்புக்கு கூப்புட முடியுமான்னு பார்க்கறேன்..." என்று எழுந்திருக்க எத்தனிக்க....

சட்டென்று மஹாவின் கரத்தைப் பற்றி இழுத்த திவ்யா...

"ஐயோ! என்ன அண்ணி? வெளியில் போனவன் திரும்பவும் வர மாட்டான்னு என்ன நிச்சயம்? உங்க அண்ணன் எப்படியும் நாம இருக்கிற இடத்த கண்டு பிடிச்சிடுவாங்க... எனக்கு அவங்க முகத்தைப் பார்க்குற வரைக்கும் எதுவும் ஆகாது.... தயவு செய்து நீங்க வெளியில் மட்டும் போகாதீங்க" என்று பல்லைக் கடித்துக் கொண்டு கூற, நேரம் ஆகிக் கொண்டே இருந்ததே ஒழிய அர்ஜுனோ அல்லது வேறு யாருமோ வரும் வழியை மட்டும் காணோம்...

அங்கு அலுவலகத்தில் அர்ஜூனை சுற்றி பாலாவும், அருணும், கதிரும், காவல் துறை உயர் அதிகாரிகளும் நின்று இருக்க, முதல் முறை வாழ்க்கையில் தன்னால் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் தான் இருப்பதைப் போன்று உணர்ந்துக் கதி கலங்கி இருந்தவன் தனது சேரில் அமர்ந்து தலையை இரு கரங்களாலும் இறுக்கி

பிடித்திருக்க, அவனுக்கு இப்பொழுது நடந்து கொண்டிருப்பது கனவா அல்லது நினைவா என்றே இருந்தது....

ஒரு வேனில் மூன்று பேர் சேர்ந்து இரு பெண்களைக் கடத்துவது என்பது எளிதான காரியம் அல்ல... அதுவும் அவ்வளவு பொது மக்கள் கூடியிருக்கும் ஒரு கோவிலின் வாயிலில்..

ஆனால் உண்மையில் திவ்யாவின் நேரமோ மஹாவின் நேரமோ அங்கு வீதியிலோ அல்லது கோவிலை சுற்றி இருந்த கடைகளிலோ இருந்த எந்த ஒரு சி.சி.டி.வி கேமராக்களும் கோவிலின் வாயிலை நேர் பார்த்து அமைத்திருக்கப் படவில்லை...

திடீரென்று இருவரும் மேகக் கூட்டங்களிடையே மறைந்ததுப் போலவே இருந்தது அர்ஜூனிற்கு... தொழில் சாம்ராஜ்யத்தில் அவன் முடி சூடா மன்னனாக இருந்தாலும், அவனுக்குக் கீழ் பல அடியாட்கள் அவன் இடும் கட்டளையை நிறைவேற்றக் காத்துக் கிடந்தாலும் அவனே அதிர்ந்து வியக்கும் அளவிற்குக் கடத்தியது யார் என்று ஒரு மெல்லிய நூல் அளவிற்குக் கூடத் தடயம் கிடைக்கவில்லை...

இது கடத்தியவர்களின் சாமர்த்தியமோ அல்லது கடத்த சொன்ன அந்த முட்டாள் கோகுலின் சாமர்த்தியமோ

அல்ல... உண்மையில் திவ்யாவின் கெட்ட நேரமோ அல்லது மஹாவின் கெட்ட நேரமோ தான் ஒருவருக்கும் ஒரு தடயமோ அல்லது துப்போ கிடைக்காமல் தடுத்திருந்தது....

தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தவனின் முகத்தைக் கூடப் பார்க்க அங்குக் கூடியிருந்த அனைவருக்கும் துணிவில்லாமல் அவர்களும் கைகளைப் பிசைந்து கொண்டிருக்க, கதிரும் காவல் துறை அதிகாரிகளும் அலை பேசியும் கையுமாக யாரிடமாவது பேசிக் கொண்டே இருக்க, சட்டென்று அர்ஜூனிற்கு நேற்று இரவு அவனுக்கும் திவ்யாவிற்கும் இடையில் நடந்த நிகழ்ச்சி மனக்கண்களின் முன் வந்தது....

Likes:Priayamadhavan, sabeenaibu, shanbagavalli and 51 others

Jelineusa
JB

Apr 9, 2018
#60

நேற்றைய இரவு படுக்கையில் படுத்திருந்த அர்ஜூன் வழக்கம் போல் தன் மடி கணினியில் அலுவலக வேலையாக மூழ்கி இருக்க, நிறை மாத வயிற்றுடன் ஒவ்வொரு படிகளாக நின்று நிதானித்து மூச்சு வாங்க படியேறி வந்த திவ்யா அறைக்குள் நுழைந்ததும்,

அவள் படிகளில் அசைந்து அசைந்து மெல்ல ஏறி வரும் பொழுதே அவள் நடந்த விதத்தில், அவளின் அழகிய கொலுசுகளின் ஒலியில் அவள் வரவை எதிர்பார்த்து அறை வாயிலைப் பார்த்திருந்தவன், அவள் உள்ளே

வந்ததும் கணினியை மூடி வைத்தவன் அவள் கட்டிலில் ஏறுவதற்கு உதவி செய்ய, கணவனின் முகம் பார்த்து புன்னகைத்தவள் அவனை நெருங்கி அவன் மார்பில் தலை சாய்க்க....

கணவன் மனைவி இருவரின் மனதிலும் என்னென்னவோ எண்ண ஓட்டங்களும், நினைவுகளும், சிந்தனைகளும் அலைமோதியவாறு இருந்தது...

பிரசவத்திற்கு இன்னும் இரு வாரங்கள் இருந்தாலும் இன்று காலை கணவனுடன் சேர்ந்து மருத்துவப் பரிசோதனைக்குச் சென்றவளிடம் குழந்தை இருக்கும் நிலையில் [Position] எந்த நேரத்திலும் குழந்தை பிறக்க வாய்ப்பிருக்கிறது என்று மருத்துவர் தெரிவித்து இருக்க, வழக்கமாகப் பெண்களுக்கு வரும் பிரசவத்தைப் பற்றிய அச்சத்தில் மனம் வேறு உறைந்திருந்ததால் தனக்கு அசம்பாவிதமாக எதுவும் நேர்ந்துவிடுமோ? தன் கணவனைத் தனித்து இந்த உலகத்தில் விட்டு தான் மட்டும் சென்றுவிடுவோமோ? என்ற கேள்விகளால் எழுந்த கவலைகள் அவள் மனதையும் அரித்துக் கொண்டு இருக்க, மெல்ல நிமிர்ந்து அர்ஜூனின் முகத்தைப் பார்த்தவள் சன்னமான குரலில்...

"என்னங்க... உங்கக்கிட்ட ஒன்னு கேட்கட்டுமா?" என்றாள்..

அறைக்கு வந்ததில் இருந்து மௌனமாக அவள் தன் நெஞ்சில் சாய்ந்துப் படுத்ததில் இருந்தே அவளின் கலக்கத்தை உணர்ந்து இருந்தவன், இப்பொழுது அவனை அண்ணாந்து பார்த்திருந்த விதத்தில் அவளின் கண்களில் தெரிந்த சஞ்சலத்தைக் கண்டு அவளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் தன்னவளின் நெற்றியில் தன் கன்னத்தைத் தேய்த்தவாறே அவளின் கேள்விக்கு....

"ம்ம்ம்" என்று பதில் அளிக்க...

அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தவள் தயங்கியவாறே...

"தப்பா நெனைக்கக் கூடாது.... கோபப்படவும் கூடாது" என்ற மனைவியின் கண்களை ஆழ்ந்துப் பார்த்தவன்...

"கேளு" என்று மட்டும் கூற...

ஆனால் அவள் மீண்டும் தன் நெஞ்சில் சாய்ந்து ஒன்றும் பேசாமல் அமைதியாகி விட அவள் தலையில் தன் தாடையை அழுந்த பதித்தவன்...

"திவி… என்ன கேட்கனுமோ கேளு" என்றான்…

"இல்ல… ஒரு வேளை" என்று தயங்கியவள் ஒரு பெருமூச்சுவிட்டு மீண்டும் தொடர்ந்தாள்…

"ஒரு வேளை, எனக்குப் பிரசவத்தில் ஏதாவது ஆச்சுனா…." என்று கூட முடிக்கவில்லை அவளின் தாடையை மென்மையாகப் பற்றியவன் தன்னை நோக்கி அவள் முகத்தை உயர்த்தி…

"திவி… உனக்கு ஒன்னும் ஆகாது… ப்ளீஸ் இது மாதிரி எல்லாம் திங் பண்ணாம ரிலேக்ஸா [Relax] இருக்கப் பாரு… உன் டெலிவரி டைம்ல நான் உன் கூடத் தான் இருப்பேன்…. குழந்தைப் பிறக்குற வரைக்கும் நான் உன்னை விட்டு ஒரு நிமிஷம் கூட நகர மாட்டேன்" என்றவன் அவளின் நெற்றியில் மென்மையாக முத்தம் பதித்தான்…

எதற்குமே கலங்காத, எந்தச் சூழ்நிலைக்கும் அஞ்சாத, எவரையும் அச்சமென்பதே சிறிதும் இல்லாது எதிர்த்து நிற்கும் அர்ஜூனே அந்த நிமிடம் தன் மனையாளை நினைத்து, அவளின் பிரசவத்தை நினைத்து, உள்ளுக்குள் கலங்கி போய்த் தான் இருந்தான்… ஆனால் அவன் தன் கலக்கத்தைக் கொஞ்சமும் வெளிக்காட்டவில்லை…

தன் கணவனை இறுக்கி அணைத்துக் கொண்டவள் மேலும் அவனின் மார்பில் ஆழப் புதைந்து...

"ஒரு பொண்ணுக்குப் பிரசவம்கிறது மறுபிறப்புன்னு சொல்லிக் கேள்விப்பட்டிருக்கேன்... அதான் கேட்டேன்" என்று மீண்டும் அதனைப் பற்றியே பேச.

"ம்ப்ச்... திவி... நீ போறது ஒன் ஆஃப் தி பெஸ்ட் ஹாஸ்பிட்டல்ஸ் இன் இண்டிய **[One of the best hospitals in India]** உனக்கு டெலிவரிப் பார்க்கப் போறது வெரி எக்ஸ்பீரியன்ஸ்ட் டாக்டர் **[Very experienced doctor]...** அப்புறம் ஏன் இந்தப் பயம்? அது மட்டும் இல்லாமல் இன்னைக்குப் பார்த்த செக்கப்பில் கூடப் பேபியோட ஹார்ட் பீட்ஸ், மூவ்மெண்ட்ஸ் எல்லாம் நல்லா இருக்கு... தென் எதுக்குப் பயம்?" என்று மேலும் ஆறுதல் படுத்த,

சில நிமிடங்கள் வரை பேசாமல் இருந்தவள் மீண்டும்....

"என்னங்க, இன்னொன்னு கேட்கட்டுமா?" என்க....

சலித்துக் கொண்டவன்....

"அடியே... கேட்கறதுன்னா கேளு... ஆனால் அது மாதிரி அபத்தமா கேட்காம வேற ஏதாவது நல்லதா கேளு" என்று சிரிக்க....

"சரி... இப்ப நான் கேட்கப் போறது உங்களுக்கு எப்பவும் ரொம்பப் பிடிச்ச விஷயம் தான்.... ஆனால் இப்போ உங்களுக்குப் பிடிக்காத விஷயம்" என்று இழுத்தாள்.....

அவள் முகத்தைத் தன்னை நோக்கி நிமிர்த்தியவன் அவளின் விழிகளை ஆழ்ந்துப் பார்த்தவாறே என்ன என்பது புருவங்களை ஏற்றி இறக்க,

மெல்ல எம்பி அவன் காதுகளில் ஏதோ கிசுகிசுத்தவளைக் கண்டு இதழ் பிரித்துச் சிரித்தவன்....

"திவி... இன்னும் டு வீக்ஸ்ல குழுந்தை பிறக்க போகுது..... இன்ஃபாக்ட் டாக்டர் ஆன்டி எப்ப வேணாலும் குழந்தை பிறக்கும்னு சொல்லியிருக்காங்க இல்ல... ப்ளீஸ்டி... கொஞ்சம் தூங்கு" என்று அவள் தலையில் மீண்டும் தன் கன்னம் பதிக்க,

திவ்யாவிற்கோ மனதிற்குள் இருந்த அலைபுறுதல் இன்னும் தீர்ந்த பாடில்லை.... மனம் முழுவதும் ஏதோ படபடப்பாக இருக்க, இதயத்தில் யாரோ பல மடங்கு

அதிகமான கனமான பாறாங்கல்லை தூக்கி வைத்தது போல் தாங்க முடியாத பாரமாக இருக்க, வெகு சீக்கிரம் ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப் போவது என்று உள்ளுணர்வு உணர்த்தியதால் உள்ளம் துடித்திருக்க,

ஒரு வேளை ஏதாவது நடக்கக்கூடாதது நடந்துவிட்டால் என்று அஞ்சி கலங்கித்தான் அவள் தனது உடலையும், தான் இருக்கும் இந்த நிலையையும் கூட யோசிக்காமல் கணவனை, கணவனின் நெருக்கத்தை, அவனின் தாம்பத்யத்தை வேண்டியது...

கணவனின் தவிர்ப்பில் மனம் தவித்ததில் சிறிதே கோபம் வரவும், அவன் நெஞ்சில் மேலும் ஆழ முகம் புதைத்தவள் அவன் சட்டையின் மேல் பட்டன்களைக் கழற்றி அவனின் வெற்று மார்பில் அழுத்தி முத்தமிட, தன் மனையாளின் செய்கைகளில் அவளின் மனதில் இருந்த ஏக்கமும், எதிர்பார்ப்பும் ஒரு கணவனாகப் புரிந்தாலும் அவளின் தற்போதைய உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவன் அமைதியாகப் படுத்திருக்க,

கணவனின் மௌனத்தில், அவனின் ஒதுக்கத்தில் அவளின் மலர் போன்ற மனம் அடிபட்டுப் போனது...

விழிகளில் நீர் ஊற்றெடுக்க, குரல் நடுங்க அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தவள்...

"உங்களுக்கு வேணும் போதெல்லாம் நான் வந்தேன்ல? உங்கள சந்தோஷப்படுத்தினேன்ல? இப்ப எனக்கு என்னவோ மனசு சரியில்லைன்னு தானே கேக்குறேன்... அது கூட உங்களால புரிஞ்சுக்க முடியலையா?" என்று உதடுகள் துடிக்க அவள் கேட்கவும்....

தன் கணவன் தனக்கு வேண்டும், அதுவும் இப்பொழுதே என்று சின்னப் பெண் போல் அடம் பிடிக்கும் மனையாளின் பிடிவாதத்தில் அவன் மனது இளகினாலும், தன்னிலையைப் இழுத்துப் பிடித்து வைத்தவன் அவளை இறுக்க அணைத்துக் கொண்டு தூங்க வைக்க முயற்சி செய்ய,

சீற்றத்துடன் அவன் நெஞ்சில் இருந்து எழுந்தவள் தள்ளி நகர்ந்து அமர்ந்து அழுது கலங்கிய விழிகளுடன் தொண்டை அடைக்க...

"எனக்கு நீங்க வேணும்னு நான் கேட்கும் போது நீங்க வரமாட்டேங்கிறீங்கல்ல.... பாருங்க... உங்களுக்கு நான் வேணும் போது அப்ப நான் உங்க கூட இருக்கமாட்டேன்" என்று வார்த்தைகளை அள்ளி தெளித்து விட்டாள் அர்ஜூனின் காதல் மனையாள்....

அவளின் பேச்சில் தேள் கொட்டியது போல்

வெடுக்கென்று உணர்ந்த அர்ஜூன் அவளைத் தன்னை நோக்கி இழுத்து அணைத்துக் கொண்டு தன் கலங்கிய மனதை சரி படுத்த போராட.....

தன் கணவனுக்குத் தன் உள்ளத்தின் சஞ்சலம் புரியவில்லையே என்ற கவலையில் அவளும் அழுது கொண்டே இருக்க, அவளை ஆறுதல் படுத்தும் வழி தெரியாமல்...

"திவி... ப்ளீஸ்டி.. தூங்குடி" என்க,

இதற்கு மேல் தன் கணவனிடம் எவ்வாறு தன் மனதை விளக்குவது என்று புரியாமல் கண்களில் வழியும் நீருடனே அவளும் தூங்கிப் போனாள்..

திவ்யாவின் வார்த்தைகள் அவளின் கலக்கத்தின் வெளிப்பாடே... உணர்ச்சிகளின் உந்துதல்களாலேயே அவள் அவ்வாறு பேசியிருக்க, ஆனால் அந்த உணர்ச்சிக்கோ, அதன் வேகத்திற்கோ காரணம் அவளுக்குத் தெரியவில்லை....

ஆனால் அது தன் மனையாளின் வார்த்தைகள் அல்ல... விதி உகுத்த சொற்கள் என்பதனை இன்று நடந்தேறிய சம்பவம் அர்ஜூனிற்குத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியது...

இரு கரங்களையும் தலைக்குக் கொடுத்து தலை குனிந்து அமர்ந்திருந்தவனின் காதுகளில் மீண்டும் மீண்டும் "உங்களுக்கு நான் வேணும் போது அப்ப நான் உங்க கூட இருக்கமாட்டேன்" என்ற வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டே இருக்க...

"அவள் கேட்டும் நான் அவளின் ஆசையை நிறைவேற்றவில்லை... ஒரு வேளை அவளுக்கு எதுவும் ஆகிவிட்டால்... அவள் சொன்னது போல் அவள் இனி என் பக்கத்தில் இல்லை என்றால்" என்று மனதில் அலைஅலையாகக் கசப்பான சிந்தனைகள் தோன்ற,

திடீரென்று அமர்ந்திருந்த சேரில் இருந்து வேகமாக எழுந்தவன் ஆங்காரமாகத் தான் அமர்ந்திருந்த சேரை தூக்கி வீச, அது அர்ஜுனின் அறையின் ஒரு பக்க கண்ணாடி சுவற்றில் போய் விழுந்ததில், கண்ணாடி சுவர் முழுவதுமாக உடைந்து சில்லு சில்லாக அறை முழுவதும் தெறித்துச் சிதறியது....

அலை பேசியில் பேசிக் கொண்டிருந்த கதிரும், கமிஷனரும், காவல் துறை அதிகாரிகளும், அருணும், பாலாவும், அதே நேரத்தில் அர்ஜுனின் அறைக்குள் நுழைந்த சிவ சுப்ரமணியமும், வினோத்தும் அதிர்ச்சியில் உறைந்துப் போக, அர்ஜுனின் செக்கச்சிவந்த சீற்றத்தில் கன்னிப் போயிருந்த முகத்தைக் கண்ட ஒருவருக்கும் அவனை நெருங்கும் துணிவு கடுகளவுக் கூட இல்லை....

தன் தலையை அழுந்த கோதிக் கொண்டவன் மேஜையை ஓங்கிக் குத்தி இன்னமும் தனியாத தன் கோபத்தைத் தணிக்க முயல, அர்ஜூனின் நிலைக் கண்ட கதிருக்கு ஒருவருமே அண்ட முடியாத பிம்பமாக இருக்கும் இவரிடம் கூட வாலாட்ட துணிந்தவன் யாராக இருக்கும்... இந்த நிமிடம் மட்டும் அவன் இவர் கையில் கிடைத்தான் இவர் அவனைச் சிதைக்கும் விதத்தில் அவனுக்கு ஏற்படும் அந்தச் சித்திரவதையின், படுவேதனையின் வலியை அவன் இந்த ஜென்மம் மட்டும் அல்ல, இனி எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மறக்க முடியாது என்றே தோன்றியது...

அத்தனை ஆங்காரமும், ஆத்திரமும், ஆவேசமும் ஒருங்கிணைந்த ருத்ரமூர்த்தியாகவே உருமாறியிருந்தான் அர்ஜூன்...

அவனை அமைதிப்படுத்தும் திடம் ஒருவருக்கும் இல்லாததால் அனைவரும் அவனை விட்டு சற்று இடைவெளிவிட்டு தள்ளியே நின்றிருக்க, அவன் அருகில் நெருங்கி வந்த பாலா அவன் தோளைத் தொட்டுச் சன்னமான குரலில்...

"அர்ஜூன்... எப்படியும் அவங்களைக் கண்டுப்பிடிச்சிடலாம்... ப்ளீஸ்.. கண்ட்ரோல் யுவர் செல்ஃப்.." என்க,

ஒரு வலி மிகுந்த பார்வையை அவர் மீது செலுத்தியவன் முதல் முறை தன் வாழ்க்கையில் மனதால் கூட நினைத்திராத அந்த வார்த்தைகளை உகுத்தான்...

"டாட்.. ஐ ஆம் ஸ்கேர்ட் டாட் [Dad.. I am scared dad]"

தன் மகனின் வார்த்தைகளில் உடைந்த பாலா அவன் தோளில் பற்றியிருந்த தன் கரத்தில் அழுத்தத்தைக் கொடுக்க,

"டாட்... சின்னப் பொண்ணு டாட் மஹா.. இவ்வளவு நேரமா எங்க இருக்காளோ? எப்படி இருக்காளோ? திவ்யா... அவளால இரண்டு அடி கூட எடுத்து வைக்க முடியலை டாட்... அவளைப் போய்க் கடத்தி??" என்றவன் தன் அறைக்குள் நுழைந்திருந்த வினோத்தையும் தன் மாமனாரையும் பார்த்து...

"அவங்க அம்மாக்கிட்ட வலி வேற வந்திருச்சுன்னு சொன்னாளாம்... வலியில எங்க துடிச்சுக்கிட்டு இருக்காளோ? ஒரு வேளை அவனுங்க அவகிட்ட முரட்டுத்தனமா நடந்துக்கிட்டா" என்று சொல்லும் பொழுதே அவனின் ஆக்ரோஷம் எல்லையைக் கடக்க, அடி பட்ட சிங்கம் போல் நிமிர்ந்துக் காவல் துறை அதிகாரிகளையும் கதிரையும் பார்த்தவன் ஏதோ சொல்ல வாயை திறக்க..

சரியாகக் கமிஷனருக்கு ஒரு ஒரு அழைப்பு வந்தது...

எதிர் முனையில் "சார், வேன் நம்பர் நோட் பண்ணிங்கங்க... சீக்கிரம் ட்ரேஸ் பண்ண சொல்லுங்க" என்று வேனின் எண் கூறப்பட,

உடனே அதனைக் குறித்துக் கொண்டவர் அதனை ட்ரேஸ் பண்ண சொல்லிவிட்டு அலை பேசியின் ஒலிப்பெருக்கியை [Speaker] உயிர்ப்பித்தார்...

"எப்படிக் கண்டுப்பிடுச்சீங்க?"...

"சார், அந்த வேன் கோவில் வாசலில் தான் நின்னுட்டு இருந்திருக்கு.... இங்க பூ விக்கிற அம்மாவோட பையன் பார்த்திருக்கான்... சாரோடு வைப்பையும், ஸிஸ்டரையும் கடத்துனத அவன் பாத்துட்டு அவங்க அம்மாகிட்ட சொல்ல, அவங்க பயந்துக்கிட்டு அவன வீட்டுக்கு கூட்டிட்டுப் போயிட்டாங்க... ஆனால் இப்போ மனசு கேட்காம அவங்களே அவங்க பையனக் கூட்டிட்டு இங்க வந்திருக்காங்க... அந்தப் பையன் சொன்ன வேனோட நம்பரையும், வேனோட பானட்டில் ஏதோ ஆக்ஸிடண்ட் ஆனதினால் பட்டிருந்த அடையாளத்தை வச்சும் அக்கம் பக்கத்தில விசாரிச்சோம்.... கோவிலுக்கு வரதுக்கு முன்னாடி

இங்க இருந்து கொஞ்ச தூரத்தில் இருக்கிற ஒரு காம்பௌக்ஸில் அவனுங்க ஏதோ வாங்கியிருக்காங்க.... ஸி ஸி டி வி கேமரால பதிவாகி இருந்த வீடியோவில் தெரிஞ்ச முகத்தைப் பார்த்தப்போ அதிலே இருந்த இரண்டு பேர் ஏற்கனவே பெட்டி கேஸஸ்ஸில அரெஸ்ட் ஆகியிருக்காங்க... அதனால அவனுங்கள அடையாளம் தெரிஞ்சுக்க முடிந்தது சார்" என்று முடித்தார்...

அவரின் ஒவ்வொரு வார்த்தையையும் கூர்ந்துக் கேட்டுக் கொண்டிருந்த அர்ஜூனிற்கு ஒவ்வொரு நிமிடமும் பொங்கிக் கக்கும் எரிமலையின் உச்சியில், நெருப்பின் உலையின் மீது நிற்பது போல் உடல் முழுவதும் தகித்து இருந்தது...

ஒரு பக்கம் தங்கை, மறு பக்கம் நிறைமாத கர்ப்பிணி ஆன தன் மனைவி... எப்பொழுது தன் காதலை அவன் தன்னவளுக்கு உணர்த்தியிருந்தானோ அந்த நிமிடத்தில் இருந்து அவனது கனவு, உயிர், மூச்சு என்று அனைத்துமாக மாறியிருந்தாள் அவன் மனையாள்...

எந்நேரமும் புன்னைகையுடன் இருக்கும் அவள் முகமும், கண்களை அகல விரித்து அச்சத்துடன் அவனைப் பார்க்கும் அவளின் மருண்ட விழிகளும், தனித்து இருக்கும் பொழுதெல்லாம் மெதுவாக நகர்ந்து வந்து அவனின் மார்பில் படுத்துக் கொள்ளும் அவளின் தோற்றமும் அர்ஜூனின் கண் முன் வந்து இம்சித்தது...

மனதில் தன் தொழில் எதிரிகளின் பட்டியலை கணக்கிட்டவாறே "யாராக இருக்கும்?... எப்படி? எங்கே சறுக்கினோம்??? அதுவும் கடத்தல் வரை செல்வதற்கு??" என்று குழம்ப, திவ்யாவும் மஹாவும் கடத்தப்பட்டுக் கிட்டதட்ட நான்கு மணி நேரங்கள் ஆகியிருந்தது...

கமிஷனர் சொன்ன ஒரு சில நிமிடங்களிலேயே வேனை அடையாளம் கண்டு பிடித்து ட்ரேஸ் செய்யத் துவங்க...

"சார்... வேன் இருக்கும் இடத்தைக் கண்டுப்பிடிச்சாச்சு சார்" என்று கத்தினார் ஒரு காவலர்...

அவரின் கூற்றில் சடாரென்று நிமிர்ந்த அர்ஜூன் தன் அறையை விட்டு மின்னல் வேகத்தில் வெளியில் சென்றவன் வினோத்தையும் அருணையும் தங்களுடன் வரச் சொல்லி, தன் தந்தையையும், மாமனாரையும் தன் அலுவலகத்திலேயே தாங்கள் திரும்பி வரும் வரை காத்திருக்கச் சொன்னவன் அசுர வேகத்தில் காரை செலுத்த, அவனுக்கு முன்னால் அர்ஜூனின் வேகத்திற்கு இனையாகக் கமிஷனரின் காரும் பறந்தது...

Likes:Priayamadhavan, sabeenaibu, Vasanthisakthivel and 56 others

Jelineusa

Apr 9, 2018
#62
காவலர் கொடுத்த விலாசத்தைக் கமிஷனர் காரும், அர்ஜூனின் காரும் அடைவதற்குக் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆகியிருக்க, கோகுலின் கெஸ்ட் ஹவுஸ் இருந்த வீதியை அவர்கள் அடையும் பொழுது கிட்டத்தட்ட மணி விடியற்காலை ஒன்றாகியிருக்க அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில பங்களாக்களே இருந்த அந்த வீதி முழுவதும் மயான அமைதி சூழ்ந்திருக்க,

காரை நிறுத்திய அர்ஜூன் அதே வேகத்தில் காரை விட்டு இறங்கி வீட்டை நோக்கி ஓடவும், அவனின் தவிப்பும், கலக்கமும், அச்சமும் நன்கு புரிந்து இருந்தாலும் வீட்டிற்குள் யார் யார் இருக்கிறார்கள், எத்தனை பேர், எந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்று அவர்கள் ஒருவருக்கும் தெரியாததால் அர்ஜூனைத் தடுத்த கமிஷனர்...

"அர்ஜூன்... வெயிட் பண்ணுங்க... வேன் எதுவும் வெளியில் பார்க் செய்யப்படலை... ஆனால் அதுக்காக உள்ளே ஆள் யாரும் இல்லைன்னு அர்த்தம் இல்லை... ஃபர்ஸ்ட் வீட்டுக்குள்ளே என்ன ஸ்டேஸ்ன்னு தெரியனும்" என்றவர் அவர்களுடன் வந்திருந்த காவலர்கள் ஒருவரிடம் வீட்டின் உள்ளே பார்ப்பதற்கு வழி இருக்கிறதா என்று தேடச் சொன்னார்...

இனி ஒரு நொடி கூடத் தன்னால் தாமதிக்க முடியாது என்று அர்ஜூனிற்குத் தோன்றினாலும் கமிஷனர் சொல்லுவதும் சரி என்பதால் தன் உயிரை கையில் பிடித்துக் கொண்டு அவன் வீட்டின் வாயிலையே பார்த்திருக்க, கமிஷனர் சொன்னது போல் வீட்டைச் சுற்றி பார்த்த காவலர்களில் ஒருவர்...

"சார்... ஜன்னல் திறந்து இருக்கு சார்... பொண்ணுங்க இரண்டு பேரும் மட்டும் தான் இருக்கிற மாதிரி தெரியுது....." என்றவர் அர்ஜூனின் முகத்தைப் பார்த்தவாறே அதிர்ச்சியுடனும், அச்சத்துடனும்...

"சார்.... ப்ளீஸ் சீக்கிரம் கதவை திறங்க.... சாரோட வைஃப்பு பிரசவ வலில கீழ கிடந்து துடிச்சிட்டு இருக்காங்க" என்று ஏற்கனவே பலமடங்கு அதிகமாகப் படபடத்துத் துடித்துக் கொண்டிருந்த அர்ஜூனின் இதயத் துடிப்பை அவர் ஆயிரம் மடங்கு அதிகமாகத் துடிக்கச் செய்தார்....

மலரினும் மெல்லியவள்!

தொடரும்...

Likes:Priayamadhavan, ManjuKarthik, sabeenaibu and 145 others

Jelineusa

மலரினும் மெல்லியவள்!

பாகம் - 33

ஏற்கனவே அர்ஜூனின் மனம் முழுவதும் திகில் மண்டியிருக்க இதில் காவலர் வேறு பிரசவ வலியில் திவ்யா துடிப்பதைப் பற்றிக் கூறவும் உடல் முழுவதும் மின்னல் போன்று ஒரு அதிர்ச்சி உணர்வு ஒவ்வொரு நரம்பிலும் ஓட, அவர் விஷயத்தைச் சொல்லி முடிப்பதற்குள் வீட்டின் முன் பக்கம் கதவை அடைந்திருந்த அர்ஜூன் கதவை உடைக்க முயற்சிக்க, கதவு பலமாக உடைக்கப் படும் சத்தத்தில் உறைந்து போனாள் மஹா....

கீழே உயிர் போகும் வலியில் தரையில் துடித்துக் கிடந்த திவ்யாவிற்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுரணை தப்பவும், அவளின் கண்கள் சொறுகுவதைக் கண்ட மஹாவிற்கு இனியும் வேறு வழி தோன்றாமல் நடப்பது நடக்கட்டும் என்று மனதிற்குள் தைரியத்தை வர வழைத்துக் கொண்டவள் கதவை திறக்க எழவும், அர்ஜூனின் குரல் கேட்கவும் சரியாக இருக்க, வந்திருப்பது தன் அண்ணன் தான் என்று அறிந்த மகிழ்ச்சியில் அலறி அடித்துக் கொண்டு ஓடியவள் கதவை திறக்க,

கதவை திறந்த தன் தங்கையைக் கண்ட அர்ஜூன் பதற்றத்தோடு அவளை இறுக்கக் கட்டி அணைத்தவனின் கண்கள் மஹாவிற்குப் பின்னால் தரையில் துடித்துக் கொண்டிருந்த தன் மனையாளின் மீது பதிந்தது....

பதிந்த கண்களும், தன் மனைவியின் நிலையை உணர்ந்த மூளையும், அவளின் கதறலைக் கேட்டுக் கொண்டிருந்த இதயமும் ஒரு சில விநாடிகள் இரத்த ஓட்டம் தடைப் பட்டதுப் போல் ஒரே சமயத்தில் உறைய....

மீண்டும் திவ்யாவின் "அம்மா" என்று கதறலில் தன்னிலை இழுத்துப் பிடித்தவன் திவீஈஈஈஈஈ" என்று அலறிக் கொண்டு அவள் அருகில் ஓடியவன் அவளின் அருகில் மண்டியிட்டு அமர்ந்து அவள் தலையைத் தன் கைகளில் ஏந்த, உயிர் போகும் வலியில் இருந்தவளுக்குத் தன் கணவனின் குரல் கேட்கவும் அந்த வலியிலும் நிம்மதி பெரு மூச்சு வந்தது...

தன்னந்தனியாகக் கட்டாந்தரையில் வயிற்றைப் பிடித்துக் கொண்டு வலியின் வேதனையில் துடித்துக் கொண்டிருந்தவளின் பரிதாப நிலைமை அர்ஜூனின் இதயத்தை வாள் கொண்டு இரண்டாக அறுத்துப் பிளந்தது போல் வலித்தது என்றால்...

"என்னஙக.........." என்று ஏதோ சொல்ல வந்தவளை தன் இரு கைகளாலும் தூக்க முயற்சித்தவனின் உடலும் உள்ளமும் சகலமும் அடங்க விரைத்துப் போனான் அவளின் புடவை முழுவதும் நனைந்து ஈரமாக இருப்பதை உணர்ந்ததும்...

அதற்குள் அருணும், வினோத்தும், மற்ற காவலர்களுடன் கமிஷனரும் வீட்டிற்குள் நுழைந்திருக்க, காவலர்கள் ஒவ்வொரு அறையாக நுழைந்து வேறு எவராவது எங்கேயாவது பதுங்கி இருக்கிறார்களா என்று தேட, அருணை நோக்கிய அர்ஜூனின் மனம் முழுவதும் விவரிக்க இயலாத நிலையில் கலங்கித் தவித்து இருக்க, அவனின் கலக்கத்தையும் தவிப்பையும் அப்பட்டமாக வெளிப்படுத்திய, சொல்ல முடியாத அளவிற்கு வலிகளைச் சுமந்த முகத்தோடும், குரலோடும்...

"அருண்... வாட்டர் ப்ரேக் ஆகிடுச்சு... கால் தி டாக்டர் [Call the doctor]" என்று அலறினான்....

கோகுல் திவ்யாவை கீழே தள்ளியதில் நிலைத் தடுமாறி அவள் தரையில் விழுந்த நிமிடமே அவளுக்குப் பிரசவத்தின் நேரம் துவங்கியிருந்தது... தன் நாத்தனாரைக் காப்பாற்றும் நோக்கில் தான் அவள் தன் வலியைக் கூட மறந்து மீண்டும் அவனிடம் போராடச் சென்றாள்... ஆனால் வலியின் உச்சியைக்

கிட்டத்தட்ட அப்பொழுதே அடைந்துவிட்டிருந்தவளால் அதற்கு மேல் ஒரு நொடி கூட நிற்க முடியாமல் தான் மீண்டும் தரையில் சரிந்தது....

பிரசவத்தை, பேறு காலத்தின் வலியை அனுபவித்த பெண்களுக்குத் தான் தெரியும் அந்த இணையில்லாத வலியின் வேதனையும், அதன் கொடுமையும்....

மருத்துவருக்கு அழைத்த அருண் விஷயத்தைச் சொல்ல,

"ஆண்டி, திடீர்னு திவ்யா அண்ணிக்கு லேபர் பெயின் வந்திருச்சு... பட் நாங்க இப்போ வீட்டில் இல்லை... இந்த நிலைமையில இவங்களை உங்க ஹாஸ்பிட்டலுக்குக் கொண்டு வர முடியும்னு தோனலை... வாட்டர் வேறு ப்ரேக் ஆகிடுச்சு" என்க...

அவனின் பதட்டத்தில் இருந்து ஏதோ நடக்கக்கூடாத அசம்பாவிதம் நடந்திருப்பதைப் புரிந்துக் கொண்டவர்...

"வாட்டர் ப்ரேக் ஆனாலும் பரவாயில்லை அருண்... நீங்க எங்க இருக்கீங்கன்னு சொல்லுங்க ஆம்புலன்ஸை அனுப்பி விடுறேன்...." என்க...

தாங்கள் இருக்கும் இடத்தை அருண் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே மீண்டும் திவ்யாவை தன் கரங்களால் தூக்க முயற்சித்த அர்ஜூனின் கரம் பற்றியவள் பல்லைக் கடித்துக் கொண்டு வேண்டாம் என்று தலை அசைக்க, மனைவியின் செய்கையில் குழம்பியவன்...

"திவி... ஆம்புலன்ஸ் வர வரைக்கும் வெய்ட் பண்ண முடியாது... நம்ம காரில் ஹாஸ்பிட்டல் போவோம்... வர வழியில் ஆம்புலன்ஸில் உன்னை ட்ரான்ஸ்ஃபர் பண்ணலாம்" என்க,

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மெல்ல தலை அசைத்து தன் கணவனைத் தன் அருகில் வரச் சொன்னவள் அவனின் காதில் ஏதோ சொல்ல, அவள் சொன்ன செய்தியைக் கேட்டு அதிர்ந்த அர்ஜூனிற்கு இதயம் தன் துடிப்பை சில நொடிகள் நிறுத்தியது போன்று இருந்தது...

அருணையும் கமிஷனரையும் திரும்பி பார்த்தவன்...

"ஐ தின்க் தி பேபி இஸ் ரெடி டு கம் [I think the baby is ready to come] " என்றவன் அதிர்ந்து கலங்கிய முகத்துடன் தன் மனையாளைப் பார்த்தது ஒரு சில விநாடிகள் தான்...

ஆழ்ந்த பெருமூச்சு விட்டவன் தன்னைச் சமன் படுத்திக் கொண்டு அருணிடம் அலை பேசியைக் கேட்டுக் கரத்தை நீட்டவும், அவனிடம் அலைப் பேசியைக் கொடுத்த அருண் நெஞ்சம் முழுவதும் திகில் சூழ்ந்திருக்க மஹாவையும் வினோத்தையும் திரும்பி பார்க்க, அதற்குள் அர்ஜூன் மருத்துவரிடம் பேசத் துவங்கி இருந்தான்....

"ஆண்டி... ஐ டோண்ட் திங் வி ஹாவ் இனாஃப் டைம்... **[Aunty, I don't think we have enough time]**" என்றவன் திவ்யாவின் மீது தன் அதிர்ந்த விழிகளைப் பதித்தவாறே அவளின் நிலைமையை எடுத்துரைக்க,

"சரி அர்ஜூன்... ஜஸ்ட் டோண்ட் பேனிக் **[Just dont panic]** நான் சொல்ல சொல்ல செய்... அது போதும்" என்றவர் பேசத் துவங்க...

அங்கு மருத்துவரோ, செவிலியர்களோ, மருத்துவ உபகரணங்களோ, மருத்துவ அனுபவமோ இல்லாத ஒரு பிரசவத்திற்குத் தயாரானான் அர்ஜூன்...

Likes:Priayamadhavan, sabeenaibu, Vasanthisakthivel and 57 others

Jelineusa
JB

Apr 10, 2018
#64

"அர்ஜூன்... வலியில் பாவம் சின்னப் பொண்ணு ரொம்பக் கத்துவா... பட் அவளுக்குப் பிரசவத்தைத் தாங்குற சக்தி வேணும்... இதில டாக்டர்ஸ் யாரும் இல்லாமல் டெலிவரி பார்க்கறதுல நிச்சயம் இன்னும் பயந்துப் போவா... அவளுக்கு முதல்ல ஆறுதல் சொல்லு... ஹான்.. அப்புறம் உன்கூட லேடிஸ் யாராவது இருக்காங்களா?"

"யெஸ் ஆண்டி... மஹா இஸ் ஹியர்..."

"ஓகே அர்ஜூன்... பேஸ் டைம் பண்ணு சொல்லு... நான் திவ்யாவைப் பார்க்கனும்... இங்க இருந்தே கைட் பண்ணுறேன்..." என்றவர்...

"அர்ஜூன்... சில திங்க்ஸ் வேணும்... உங்களால ரெடி பண்ண முடியுமா?" என்க...

"யெஸ் ஆண்டி..." என்றவன் மஹாவிடம் அலைப் பேசியைக் கொடுத்துவிட்டு திரும்பிப் பார்க்க,

தன் தங்கையின் அலறலிலும், அருண் மஹாவின் வெளிறிய முகத்தைப் பார்த்தும் அரண்டு போயிருந்த வினோத்தின் தோற்றத்தில் தெரிந்த கலவரத்தைக் கண்ட அர்ஜூன் தானும் ஒரு அண்ணனாக...

"வினோத்... உங்களுக்குப் பார்க்க கஷ்டமா இருக்கும்... வேணா வெளியில் இருங்க... தேவைப்பட்டா உங்களைக் கூப்புடுறேன்" என்றவனின் முகத்தைக் கண்களில் நீர் தளும்பப் பார்த்திருந்த வினோத்திற்குத் தன் செல்லத் தங்கையின் கதறல் உடல் முழுவதும் துடிக்க வைக்க, இருந்தும் அர்ஜூனின் தைரியத்தில், அவனின் புத்திக் கூர்மையில், எந்தச் சூழ்நிலையிலும் தன் நிதானத்தைக் சிதறவிடாத அவனின் சாமர்த்தியத்தில் நம்பிக்கை வைத்து திவ்யாவை திரும்பி திரும்பிப் பார்த்தவாறே வெளியில் செல்ல முனைந்தவன் அறையின் வாயிலை அடையும் முன் மீண்டும் திவ்யாவின் "அம்மா" என்ற அலறல் சத்தத்தில் தடுமாற,

பிறந்ததில் இருந்து தன் பெற்றோரிடம் கூடத் தன் மனம் விட்டு பேசாதவள், தன் காலையே சுற்றி சுற்றி வந்த தன் செல்ல தங்கையை இந்த நிலையில் விட்டு செல்ல மனம் இல்லாது திரும்பி வந்தவன்...

"இல்ல அத்தான்... நானும் இங்கேயே இருக்கேன்" என்றான்...

"சரி வினோத்... நீங்க டாக்டர் ஆண்டி சொல்ற திங்க்ஸ் எல்லாம் வீட்டில் எங்கேயாவது, எஸ்பெஷலி கிச்சனில் இருக்கான்னு பாருங்க" என்று தேடச் சொன்னவன் மற்ற காவலர்களை வெளியில் போகச் சொல்ல,

மருத்துவர் கேட்ட பொருட்களைத் தேடிச் சென்ற வினோத்திற்கு நல்ல நேரம் அனைத்தும் அந்தக் கெஸ்ட் ஹவுஸின் சமையல் அறையில் இருந்தது...

வினோத்திடம் இருந்து பொருட்களை வாங்கிய அர்ஜூன் திரும்பி அருணைப் பார்க்கவும், அவனின் அதிர்ந்து கலங்கிய முகத்தை வைத்து அவனின் எண்ண ஓட்டங்களைக் கணித்தவன்...

"அருண்... இவ உனக்கு இப்ப அண்ணி இல்ல... அம்மாவா நெனச்சுக்க... தயங்காம எனக்கு ஹெல் பண்ணு.... பட் உனக்குக் கஷ்டமா இருந்தா நீ வெளியில் வெயிட் பண்ணு... அவசியம்னா கூப்புடுறேன்" என்ற அண்ணனின் கூற்றில் திவ்யாவைத் திரும்பி பார்த்த அருணிற்கு அங்குத் தன் அண்ணியின் முகத்தில் தன் அன்னையே தெரிய, ஒரு மகனாகத் தன் அண்ணிக்குச் செய்ய வேண்டிய கடமைக்குத் தயாரானான் அந்த இளம் கல்லூரி மாணவன்....

மனித நேயம் இன்னும் உயிரோடு தான் இருக்கிறது என்பதனை அந்த இல்லத்தில் இருந்த அனைவரும் வெளிப்படுத்தி இருந்தார்கள் அவர்களின் குணாதிசயங்களில், செய்கைகளில்.....

"அர்ஜூன்... முதல்ல நீ ஸோப் இருந்தால் வெந்நீரில உன் கைகள முழங்கை வரை சுத்தம் பண்ணு... அப்புறம் நிறையச் சுத்தமான துணிகள் வேண்டும்... அதையும் ரெடிப் பண்ணு... " என்க...

சரி என்ற அர்ஜூன் சுற்றும் முற்றும் பார்த்தவன் அங்குத் துணி மணிகள் ஒன்றும் இல்லாததைக் கண்டு...

"அருண்... இங்க ஏதாவது ரூமில் கொஞ்சம் துணி இருக்கான்னு பாரு... பட் க்ளீன் க்ளோத்ஸா இருக்கனும்" என்க..

ஒவ்வொரு அறையாகச் சென்று தேடியவன் ஒரு வழியாகச் சில துணிகளை எடுத்து வர,

தன் சட்டையைக் கை முட்டி வரை மடித்து மருத்துவர் சொன்னது போல் குளியல் அறையில் வெந்நீரில் தன் கரங்களை முழுவதும் தேய்த்து கழுவிய அர்ஜூன், அருண் கொடுத்த துணிகளைத் திவ்யாவின் கீழ் போட்டவன் தன் மனைவியின் பிரசவத்திற்குத் தயாராக,

தன் அன்னையை அச்சத்தின், அதிர்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு சென்றிருக்கும், வாழ்நாளில்

எதற்கும் கலங்காத கடினமான இதயத்தைக் கொண்டிருக்கும் தன் தந்தையைப் பிறக்கும் பொழுதே கதி கலங்க அடித்திருக்கும், அர்ஜூன் திவ்யாவின் வாரிசு இந்தப் பூமியில் உதிக்கத் தன் முதல் முயற்சியைத் துவங்கினான்....

Likes:Priayamadhavan, sabeenaibu, Vasanthisakthivel and 66 others

Jelineusa
JB

Apr 10, 2018
#65

தங்களின் மகவு இந்தப் பூவுலகத்தில் அவதரிக்க எடுக்கும் முனைப்பில் திவ்யாவின் வலி உச்சக்கட்டத்தை அடைய, தன் மனையாளின் அலறல் சத்தம் அர்ஜூனின் உயிரின் வேர் வரை சென்று அவனை அச்சத்தில் நடுங்க வைக்கப் பிறந்ததில் இருந்து பயம் என்பதனையே அறியாதவன், எளிதில் ஒருவராலும் அசைக்க முடியாதவன், அஞ்சா நெஞ்சன் என்ற பெயர் எடுத்த அர்ஜூன் முதன் முறை பயம் என்ற வார்த்தையின் அர்த்தத்தை முழுமையாக உணர்ந்தவன் மனைவியின் கதறலில் முகம் வெளிரிப் போக அவள் கையை இன்னும் இறுக பற்றியவாறே....

"திவி, கொஞ்சம் பொறுத்துக்கோடி" என்றான் தவிப்புடன்...

மருத்துவர் அற்ற, மருத்துவமனையில் அல்லாத அதுவும் முதல் பிரசவம்.... உடலில் உள்ள அத்தனை எலும்புகளையும் ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாக

நொறுக்கியது போல் வலி.... இதில் தன் குழந்தை எந்த ஆபத்தும் இல்லாமல் பிறக்க வேண்டுமே என்ற தாய்மையின் கலக்கம்....

வலியில் தன் கணவனின் கரத்தை இறுக பற்றித் தன்னருகில் இழுத்தவள் பற்களைக் கடித்துக் கொண்டு...

"என்னால முடியலைங்க.. செத்து போயிருவேன் போல இருக்கு..... " என்று கதற,

அவளிடம் இருந்து தன் கரத்தை விடுவித்துக் கொள்ள முயற்சித்தவனால் அவளின் இறுக்கத்தைத் தளர்த்த இயலாமல் தன்னருகில் நின்றிருந்த அருணை நிமிர்ந்துப் பார்த்தவன் திவ்யாவின் கரத்தை தன் தமையனிடம் நீட்ட,

திவ்யாவின் தலைப் பக்கம் சென்ற அருண், தன் அண்ணியின் தலையை ஒரு அன்னையாக மடி ஏந்தியவன் அவளின் கரத்தை இறுக்கப் பற்றிக் கொள்ள,

அந்த நேரத்திலும் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க, உயிர் போகும் வலியில் துடித்துக் கொண்டிருந்தவள் மெல்ல நிமிர்ந்து தன்னை மடி தாங்கிய

கொழுந்தனையும், மனம் முழுவதும் அச்சமும் அதிர்ச்சியும் சூழ்ந்திருந்தாலும் தன் காலடியில் அழுத விழிகளுடனும் தவிக்கும் முகத்துடனும் தன் அண்ணனுக்கும் மருத்துவருக்கும் பாலமாக இருக்கும் நாத்தனாரையும், இந்தப் பூமியில் தான் உதித்த நேரத்தில் தன் பெற்றோரிடம் இருந்து தன்னை வாங்கித் தன் தோளில் சுமந்து தனக்கு அன்னைக்கு அன்னையாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருந்து, இன்று தன் காலுக்கருகில் தன் தமக்கையின் மகவையும் கரங்களில் சுமக்க ஏக்கத்தோடும் பரிதவிப்புடன் நிற்கும் தன் தமையனையும்...

விதி வசத்தால் ஒரே இடத்தில் சந்திக்க நேர்ந்திருந்தாலும், திருமணம் என்று பந்தத்தில் மனம் ஒவ்வாமல் இணைந்திருந்தாலும், தன் இதயத்தைக் காதல் என்று நுண்ணுர்வு என்று ஊடுறுவி நுழைந்ததோ அன்றில் இருந்து தன் ஆணவம், அகம்பாவம், கர்வம், திமிர் என்ற அனைத்தையும் தன் மனையாளின் பாதத்தில் சமர்ப்பித்துவிட்ட தன் கணவன் இதோ பூமியில் இன்னும் சில நிமிடங்களில் அவதரிக்கப் போகும் தன் வாரிசை தன் கரங்களில் ஏந்த தன் காலடியில் தைரியத்துடனும் அதே சமயம் தவிப்புடன் முழங்கால் இட்டு மண்டியிட்டு இருப்பதைக் கண்டவளுக்கு...

"என்ன தவம் செய்தேன் இவர்கள் என் வாழ்வில் தோன்ற!!!!!" என்றே இருந்தது.....

"அர்ஜூன்... இட்ஸ் டைம் [It's time].... திவ்யாவை புஷ் பண்ணச் சொல்லு... நீயும் ரெடியா இரு... பேபி ஸ்லிப் ஆகாம இருக்கனும்..." என்று மருத்துவர் கூற...

அவர் பேசுவதைக் கேட்ட திவ்யா...

"இல்லங்க... என்னால முடியல" என்று கதற...

"திவி... ஐ கேன் ஸி தி பேபிஸ் ஹெட் [I can see the baby's head]... எனக்குக் குழந்தையைப் பார்க்க முடியுது... ப்ளீஸ்... கொஞ்சம் ட்ரைப் பண்ணுடி..." என்று ஆறுதல் படுத்தியவனின் மனம் முழுவதும் திகில் உச்சஸ்தாயியை அடைந்திருந்தாலும், தன்னவளின் கதறல் தன் ஆத்மாவையே துளைத்து ஊடுறுவுவதைப் போல் வலியெடுக்கச் செய்திருந்தாலும், தங்கள் காதலின், ஆத்மார்த்தமான தாம்பத்தியத்தின் பரிசாகத் தன்னவளின் வயிற்றில் உதித்திருக்கும் தன் முதல் வாரிசு இந்தப் பிரபஞ்சத்திற்குள் பாதுகாப்பாக அடியெடுத்து வைக்க ஒரு தந்தையாக அவனைக் கரங்களில் ஏந்தத் தயாராகக் காத்திருக்க,

மீண்டும் மீண்டும் மருத்துவரும் தன் கணவனும் கூறுவதைப் போல் முயற்சி செய்தவள், வலி தாங்கும் அடி எல்லையைக் கடந்தவள் கிட்டத்தட்ட மயக்க நிலைக்குச் செல்ல,

"திவி" என்ற தன் கணவனின் குரலில் தன்னிலை இழுத்துப் பிடித்தவள் இறுதியில் தன் உயிரை இறுக பிடித்துக் கொண்டு, அருணின் கரத்தை உடையும் அளவிற்கு பற்றிக் கொண்டு கடைசி முயற்சியாகத் தன் குழந்தையை வெளிக் கொணர முனைந்ததில் தன் அன்னையை உடலாலும், தன் தந்தையை மனதாலும் தன்னால் இயன்ற மட்டும் கலங்கடித்து, ஊருக்கே ராஜாவாக, தன்னை சுற்றியிருக்கும் அனைவரையும் தன் உள்ளங்கைக்குள் வைத்து ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் தன் தந்தையை விட, எதிர் காலத்தில் எதிராளிகளைக் கதி கலங்கடிக்கப் போகும் சிங்கமாக, அனைவருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்க போகும் குட்டி அர்ஜூன் அதிரடியாக அவதரித்தான் இந்தப் பூமியில்...

Likes:Priayamadhavan, Kasthuriarumugams, sabeenaibu and 67 others

Jelineusa
JB

Apr 10, 2018
#66

தந்தையின் கரங்களில் விழுந்த அர்ஜூனின் மகவு வெளியே வந்ததும் வீறிட்டு அழ, எங்குக் குழந்தையைக் கீழே போட்டு விடுவோமோ என்று பயந்தவன் குழந்தையை நெஞ்சோடு அணைத்துப் புதிதாகத் துளிர்த்திருக்கும் தளிரின், தன்னவளின் ரத்தத்தில் தோய்ந்திருந்த, கர்ப்ப பையின் கசடுகளைப் பூசியிருந்த தலை உச்சியில் கொஞ்சமும் அருவருக்காமல் தன் முதல் முத்தத்தை மென்மையாகப் பதிக்க, தன் குழந்தையின் அழுகை சத்தமும், அவனின் மென்மையான ஸ்பரிசமும் இந்தப் பூ உலகத்தையே தன் காலடிகளுக்குள் கொண்டு

வந்தது போல் இருந்தது அர்ஜூனிற்கு...

திருமணம் ஆன அன்றே தன் வாழ்க்கையில் இருந்து அவளை அகற்ற வேண்டும், தன் வாழ்க்கைப் பாதையில் அவளுடன் ஒருங்கே பயணிக்க முடியாது என்று உறுதியாக அவளை விவாகரத்துச் செய்ய வேண்டும், அவளின் முகம் கூடத் தன் மனதில் பதியக்கூடாது என்று வெறுத்து அவளைத் துடிக்க வைத்துத் தூரம் சென்றவன், தன்னவளின் இதயத்தில் ரண வேதனை உண்டாக்கியவன் இன்று தன் மனையாளுக்குத் தானே பிரசவம் பார்த்து, பூப் பொதியை கைகளில் ஏந்துவது போல் தன் கரங்களில் ஏந்திய தன் குழந்தையின் பிஞ்சு முகத்தைப் பார்த்தவனின் மனதில் சொல்ல முடியாத உணர்வுகளின் தாக்கம் வர, உடல் முழுவதும் சிலிர்த்தவன் முதன் முறை தன்னில் அந்த வித்தியாசத்தை உணர்ந்தான்....

தன் விழிகளில் ஈரம் படர்ந்திருப்பதை....

இதயத்தில், வார்த்தைகளில் சொல்ல முடியாத கிளர்ச்சி படப்படப்புடன் பரவி இருக்க, தன் நாடி நரம்புகளில் எல்லாம் உணர்வலைகள் சில்லிட்டு துடிப்புடன் படர்ந்திருக்க, ரோமங்கள் சிலிர்க்க உணர்ச்சிகளின் பேரொலியில் சிக்கியிருந்த அர்ஜூனின் விழிகளில் நீர் கோத்திருந்ததில் அதிசயம் இல்லையே...

"அர்ஜூன்... கொஞ்சம் நேரம் வெயிட் பண்ணுங்க... லெட் தி ப்ளெஸண்டா கம் அவுட் ஃப்புல்லி... அதே போல் அம்பிளிக்கல் கார்ட (umbilical cord / தொப்புள் கொடியை) நீ கட் பண்ணாம இருக்கிறது தான் நல்லது... பட் நீங்க இருக்கிற தூரத்தைப் பார்த்தால் நிச்சயம் நீங்க ஹாஸ்பிட்டல் வருவதற்கோ அல்லது ஆம்புலன்ஸ் உங்க இடத்திற்கு வருவதுக்கோ ரொம்ப நேரம் ஆகும் போல தெரியுது... ஸோ ஒரு டூ டு வைஃப் மினிட்ஸ் வெயிட் பண்ணிட்டு தென் அம்பிளிக்கல் கார்டின் இரண்டு முனைகளையும் க்ளீன் க்ளோத் இருந்தால் க்ளாம்ப் போடுவது போல இறுக்கி கட்டிட்டு தென் ஸ்டெரிலைஸ் பண்ணின நைஃப் ஆர் சிஸர்ஸ் வைத்து நடுவில் கட் பண்ணு..... உடனே கட் பண்ணிடாத, அதே போல் ரொம்ப நேரமும் விட்டுறாத...." என்ற மருத்துவர் குழந்தையைச் சுத்த படுத்தும் முறைகளையும் சொன்னவர் திவ்யாவை சிறிது நேரம் அசைக்காமல் இருக்கச் சொல்லி, பின் ஆம்புலன்ஸில் அவளை ஏற்றி மருத்துவமனைக்கு வரப் பணித்தார்...

குழந்தையைக் கரங்களில் ஏந்தியவன் அவர் சொன்னது போல் தொப்புள் கொடியையும் வெட்டி விட்டு சுற்றும் முற்றும் பார்க்க, தங்கையின் வீரிடலில் உடல் முழுவதும் நடுங்கித் துடித்து நின்றிருந்தாலும், அவளின் மகவின் அழுகையில் சிலிர்த்துப் போன வினோத் தன் இரு கரங்களையும் நீட்ட, வினோத்தின் அருகிலேயே நின்றிருந்த மஹா தன் சுடிதாரின் துப்பட்டாவை வினோத்தின் கரங்களில் போட, தன்

மச்சினனும் தங்கையும் நின்றிருந்த தோற்றத்தில் அவர்களின் செய்கைகளில் மனம் கிளர்ந்த அர்ஜூன் பஞ்சுப் பொதி போல் குழந்தையைக் கொடுக்க,

தமக்கையை ஏந்திய கரங்களில் அவளின் வாரிசையும் ஏந்திய வினோத்தின் உடலில் மயிற்கால்கள் கூச்செறிந்தது என்றால்.....

வாழ்க்கையில் முதன் முதலாக, இரும்பு மனம் படைத்தவன், அதிகாரம், ஆணவம், கர்வம் என்று அனைத்தையும் ஒருங்கே கொண்ட தன் அண்ணனின் கண்களில் நீர் தளும்பி இருந்ததைப் பார்த்த மஹாவிற்குத் தாய்மையின் பூரிப்பு குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்க்கு மட்டும் சொந்தமல்ல... அந்தக் குழந்தைக்குத் தன் உயிரைக் கொடுத்து வாழ்நாள் முழுவதும் அதனைத் தன் மனதில் சுமந்து கொண்டிருக்கும் தந்தைக்கும் சொந்தமே என்றே தோன்றியது....

பிரசவத்தில் அதிகமாக இரத்தப் போக்கு ஏற்பட்டதில் அந்த நொடியே திவ்யாவின் கண்களை இருட்டச் செய்ய, ஆனால் அதற்குள் தன் குழந்தையைப் பற்றி அறிந்துவிட வேண்டும் என்ற உந்துதலில் தன் உடம்பில் உள்ள ஒட்டுமொத்த வலுவையும் சேர்த்து தலையை மெல்ல தூக்க முடியாமல் தூக்கியவள் தன் கணவனைப் பார்க்கவும், அவளின் எண்ணங்களையும் எதிர்பார்ப்பையும் புரிந்துக் கொண்டவன்....

"ஆண் குழந்தை திவி.... பேபி இஸ் ஃபைன் [Baby is fine]" என்று இதழ் விரித்துப் புன்னகைத்தவாறே கூற...

கணவனின் கூற்றில், போன உயிர் மீண்டு வந்தது போல் ஆழ பெருமூச்சுவிட்டவள் அதிகப்பட்ச வலியினால் தவித்து இருந்ததினால் உடல் முழுவதும் மரத்துப் போனது போல் இருக்க அதுவரை தன் கணவனிற்காகவும், தான் பெற்றெடுக்க வேண்டிய தங்களின் மகவிற்காகவும் உச்சியில் இருந்து உயிர் நாடி வரை சுண்டி இழுத்துக் கொண்டிருந்த வலியைப் பற்களைக் கடித்துப் பொறுத்துக் கொண்டவள் தன் கடமை முடிந்தது என்பது போல் மீண்டும் தன் கொழுந்தனின் மடியில் தலை சாய்த்தவள் மெல்ல விழிகளை மூட...

மஹாவுடனும், வினோத்துடனும் சேர்ந்து குழந்தையைச் சுத்த படுத்திய அர்ஜூன் மீண்டும் வினோத்திடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு திவ்யாவிற்கு அருகில் அமர, வலியில் கிட்டத்தட்ட தன் சுய நினைவை இழந்துக் கொண்டிருந்தவளைக் கண்டவனிற்குத் தன் மனையாளின் நிலைக் கண்டு பகீரென்று இருந்தது...

அப்பொழுது தான் அதிகமான அவளின் இரத்தப் போக்கு அர்ஜூனின் நினைவிற்கு வர, அது வரை குழந்தையை வெளிக் கொணறுவதில் மட்டுமே மனம்

நிலைத்து இருந்ததினால் தன்னவளின் நிலையைப் புரிந்துக்கொள்ளாமல் தடுமாறியிருந்தவன்....

அருணின் மடியில் இருந்த தன்னவளின் தலையைத் தன் மடிக்கு மாற்றித் தன் இரு கரங்களாலும் தாங்கி பிடித்திருந்தவனின் முகம் முழுவதும் திகில் அப்பியிருக்க, குரலும் தன் கரங்களும் வெளிப்படையாக நடுங்க...

"திவி.. கண்ணை முழிச்சிப் பாருடி...ப்ளீஸ்" என்று குரல் நடுங்க இறைஞ்ச....

இருபது வயதே ஆன சிறு பெண், நிறை மாதக் கர்ப்பினி என்றும் பாராமல் அவளைக் கடத்தி, ஈவு இரக்கம் அற்ற ஒரு மிருகத்தின் கரங்களில் சிக்கி, கீழே தள்ளப்பட்டுப் பல மணி நேரங்களாகப் பேறு கால வலியில் துடித்து, ஒரு அசந்தர்ப்பமான சூழ்நிலையில் மருத்துவ வசதி எதுவுமே இல்லாமல் தன் கணவனாலேயே பிரசவம் பார்க்கப் பட்டு, இறுதியில் வலியினால் ஏற்பட்ட மயக்கத்தினால் கண்கள் மூட,

என்ன தான் அந்த நிமிடம் வரை அர்ஜூன் தன் தைரியத்தையும், தன்னம்பிக்கையும் இழக்காமல் அவளுக்குப் பிரசவம் பார்த்திருந்தாலும் தன் மனைவி தன் கண்களை மூடிய அந்த நிமிடம் அச்சத்தின், அதிர்ச்சியின் உச்சிக்கே சென்றவன் பதற்றத்துடன்....

"அருண்... ஆம்புலன்ஸ் எங்க வந்திட்டு இருக்குன்னு செக் பண்ணு.... இல்லைன்னா திவ்யாவை காரில் தூக்கிட்டு போகலாம்..." என்று கலக்கத்துடன் சொல்லவும் ஆம்புலன்ஸ் வரவும் சரியாக இருக்க, வினோத் குழந்தையைச் சுமந்திருக்க,

தன் இரு கைகளாலும் திவ்யாவை தூக்கிய அர்ஜூன் ஆம்புலன்ஸில் இருந்த ஸ்ட்ரெச்சரில் அவளைப் படுக்க வைத்தவன், மஹாவைத் திவ்யாவின் தலைமாட்டில் அமர செய்து, வினோத்திடம் இருந்த தன் குழந்தையைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டான்...

அருணும் வினோத்தும் அர்ஜூனின் காரில் வர, கமிஷனரின் கார் அவர்களைப் பின் தொடர, அசுர வேகத்தில் மருத்துவமனையை நோக்கி பறந்தது ஆம்புலன்ஸ்.....

Likes:Priayamadhavan, sabeenaibu, Vasanthisakthivel and 65 others

Jelineusa

JB

Apr 10, 2018

#67

திவ்யா வழக்கமாகப் பரிசோதனை செய்யும் மருத்துவமனை அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து வெகுத் தொலைவில் இருந்ததால் அவளின் மருத்துவர் சொன்னது போல் அவர்களுக்கு சிறிது தூரத்தில் இருந்த ஒரு மருத்துவமனையை ஆம்புலன்ஸ்

அடைந்ததும், வேகமாக இறங்கிய அர்ஜூன் தங்களுக்குப் பின்னால் காரில் இருந்து இறங்கிய வினோத்தையும், அருணையும் பார்த்து....

"அருண், நீ போய் டாக்டர்ஸ கூப்பிடு" என்று தன் ஒட்டு மொத்த சத்தத்தையும் சேர்த்து கத்த.....

சில நிமிடங்களில் மருத்துவக் குழு வரவும் திவ்யாவையும், குழந்தையையும் அவசரப் பிரிவுக்குள் எடுத்துச் சென்றவர்கள் அர்ஜூனை வெளியே நிற்க சொல்ல, தன் உடல், பொருள், ஆவி என்று அனைத்துமாக ஆகிப் போன தன் மனைவியின் கரத்தை இறுக்கப் பற்றியவாறே நின்று இருந்தவனைக் கண்ட அங்கு வந்த முதன்மை நர்ஸ் அவனின் தோளை தொட்டவர்...

"டாக்டர் தேவி எல்லாத்தையும் சொன்னாங்க... நீங்க பயப்படாதீங்க.... எங்க டாக்டர் இப்போ வந்திடுவாங்க... இஃப் யூ வாண்ட் யூ கேன் கம் இன் [If you want you can come in]" என்றார்...

விழிகளில் நீர் தளும்பி நிற்க, அவருக்கு நன்றி சொன்னவன் திவ்யாவுடன் அறைக்குள் நுழைய, அதே சமயம் மருத்துவரும் வர, திவ்யாவை பரிசோத்தித்தவர் குழந்தைப் பிறந்த அசதியிலும் அதிகப்படியான ரத்தப் போக்கினாலும் அவள் மயக்கத்தில் இருக்கிறாள்

என்றும், பிரசவத்திற்குப் பிறகு மருத்துவர் செய்ய வேண்டிய பணிகளையும் எடுத்துக் கூறியவர் அவனை வெளியே நிற்கச் சொல்லி தன் மருத்துவ குழுவுடன் சேர்ந்து திவ்யாவிற்கான சிகிச்சையைத் துவங்கினார்....

ஐசியுவிற்கு வெளியே நிற்கும் ஒவ்வொரு நிமிடமும் அர்ஜூனிற்கு நெருப்பில் நிற்பது போல் இருக்க, அவனை சமாதனப்படுத்தும் வழி தெரியாமல் அருணும், மஹாவும், வினோத்தும் மௌனமாக நிற்க, திவ்யாவின் சிகிச்சை முடிந்து ஐசியுவை விட்டு வெளியே வந்த மருத்துவர்....

"ட்ரீட்மெண்ட் முடிஞ்சுடுச்சு... சூச்சஸ் போட்டுருக்கோம்... ஆண்ட் பல்ஸ் ரேட்டும் நார்மலாகிடுச்சு... இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்க வைஃப் கண்ணு முழுச்சிருவாங்க... " என்க...

ஆழ்ந்த பெருமூச்சுவிட்டு அர்ஜூன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கும் பொழுதே குழந்தைகள் மருத்துவர் குழந்தையின் பரிசோதனையும் முடிந்தது எனவும்,

மருத்துவர் சொற்படி அர்ஜூன் குழந்தை பிறந்தவுடனேயே சுத்த படுத்திவிட்டதாலும், குழந்தையும் தன் தந்தையின் அவஸ்தையின் வலியை மேலும் அதிகரிக்காமல் பிறந்தவுடனே அழுததால்

சுவாசிப்பதிலும் எந்தப் பிரச்சனையும் இல்லாமலும் ஆரோக்கியமாக இருக்க, இன்னும் சட்டை முழுவதும் தன்னவளின் உதிரத்தை சுமந்து நின்று இருந்தவனை வேறு சட்டை அணியச் சொல்லவும், தன் காரில் எப்பொழுதும் வைத்திருக்கும் மாற்று சட்டையை அருணை விட்டு எடுத்து வரச் சொன்னவன் அணிந்த பிறகு தன் மகவை தன் கரங்களில் மீண்டும் ஏந்தினான்....

மறுபடியும் தன் தந்தையின் கரங்களில் ஏந்தப் பட்டதால் தன் தந்தையின் ஸ்பரிசத்தை உணர்ந்ததாலோ என்னவோ குட்டி அர்ஜூன் தனது சிறிய உடலை சிலிர்த்து முறிக்க, அஞ்சிய அர்ஜூன் தன் மகவை மென்மையாக அணைக்கவும் குழந்தையின் வாசம் அர்ஜூனின் மனதை ஊடுறுவி செல்ல, சிலிர்த்தவன் இளம் முறுவலுடன் தன்னைப் போன்றே உரித்து வைத்துப் பிறந்திருந்த தன் குழந்தையின் தலையில் மீண்டும் முத்தத்தைப் பதித்தான்...

வினோத், மஹா, அருண் என்று சிறியவர்கள் அனைவரும் தங்கள் உதவியால் இந்தப் பூமியில் அவதரித்த அந்தச் சின்னத் தளிரை பேருவகையுடனும், பெருத்த நிம்மதியுடனும் பார்த்துக் கொண்டிருக்க, பல மணி நேரங்களாக அடித்துக் கொண்டு இருந்த அலை பேசியை அது வரை இருந்திருந்த மன நிலையில் கவனிக்க இயலாத சின்னவர்கள் அப்பொழுது தான் கவனித்தார்கள்...

அலை பேசியில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்த அருண் அழைத்தது தன் தந்தை தான் என்றும், அவர் ஏற்கனவே பல முறை அழைத்தும் திவ்யாவின் பிரசவ பதட்டத்தில் அலை பேசியை கவனிக்கவில்லை என்பது புரிந்ததும், தந்தையின் அழைப்பை எடுத்தவன் நடந்த அனைத்தையும் சொல்லாமல் திவ்யாவிற்கு ஆண் குழந்தைப் பிறந்திருப்பதை மட்டும் சொன்னவன், மஹாவும் திவ்யாவும் பத்திரமாக இருப்பதையும், தாங்கள் அனைவரும் இப்பொழுது இருப்பது மருத்துவமனையில் தான் என்றும், அவருக்கு மருத்துவமனையின் விலாசத்தையும் சொல்ல,

அருண் தங்கள் இருப்பிடத்தைத் தெரியப்படுத்திய அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் மருத்துவமனையை அடைந்திருந்தார்கள் திவ்யாவின் பெற்றோரும், அர்ஜூனின் பெற்றோரும்...

அர்ஜூனும், அருணும், வினோத்தும் கமிஷனருடன் சென்றதில் இருந்து அவர்களை அழைத்துக் களைத்துப் போன பாலா கமிஷனருக்கு அழைத்திருக்க, திவ்யாவின் பிரசவ அலறல் சத்தம் வீட்டிற்கு வெளியேயும் கேட்டிருந்ததால் அவரும் பாலாவின் அழைப்பை எடுக்காதிருக்க, பதற்றமடைந்திருந்த பாலா மருத்துவமனையை அடைந்தவர் ஓட்டமும் நடையுமாக ஸ்ரீயுடனும், கலா, சிவசுப்ரமணியத்துடனும் அலறி அடித்து வர,

மஹாவின் அருகில் வந்த ஸ்ரீ அவளைக் கட்டி அணைத்துக் கொண்டவர்....

"மஹா... ஆர் யூ ஆல்ரைட்? (Are you alright?) " என்றவரின் கண்கள் ஒரு அன்னையாகக் கடத்தப்பட்டிருந்த தங்களின் மகளை ஆராய்ச்சியுடன் பார்க்கவும் அவரின் மனதில் ஓடிக் கொண்டிருந்த எண்னங்களைப் புரிந்துக் கொண்டவள்...

"மாம்... எனக்கு ஒன்னும் இல்லை... நீங்க பயப்படாதீங்க... ஆனால் அண்ணி தான் ரொம்பக் கஷ்டப்பட்டுட்டாங்க" என்க...

ஐ. சி. யுவின் வாயிலில் தன் குழந்தையை அணைவாகக் கரங்களில் ஏந்தியிருந்த தங்களின் மூத்த மகனின் களைத்த முகத்தையும், கலங்கிய கண்களையும் பார்த்த ஸ்ரீக்கு, திவ்யாவும் மஹாவும் கடத்தப்பட்டத்தில் இருந்து இந்த நிமிடம் நடந்தது வரை அனைத்தையும் தன் கணவரின் மூலமாகத் தெரிந்துக் கொண்டவருக்கு, மனைவியின் பிரசவத்தின் போது அருகில் இருந்து அவள் மறு ஜென்மம் எடுப்பதைப் பார்ப்பது என்பது எத்தனை துணிவுள்ள ஆண் பிள்ளையானாலும் அவனையும் கலங்கடித்து விடும் என்று உணர்த்த....

கனிவுடன் அவனைப் பார்த்தவருக்குத் தெரியாது

அவன் தன் மனைவியின் பிரசவத்தை அருகில் நின்று மட்டும் பார்க்கவில்லை...

எந்த நிமிடம் தன்னவளிடம் " உன் டெலிவரி டைம்ல நான் உன் கூடத் தான் இருப்பேன்.... குழந்தைப் பிறக்குற வரைக்கும் நான் உன்னை விட்டு ஒரு நிமிஷம் கூட நகர மாட்டேன்" என்று சொன்னானோ அவன் வாக்குப் பலிப்பது போல், அவள் அருகில் அவன் இருந்தது மட்டுமல்லவே...

மலரினும் மெல்லிய அவன் மனையாள் ஈண்றெடுத்த அவர்களின் மகவு இந்தப் பிரபஞ்சத்திற்குள் தனது முதல் சுவடை எடுத்து வைக்க விழுந்ததே அவனது கரங்களில் தானே....

அவன் அருகில் வந்தவர் பேரக்குழந்தையின் பிறப்பை அறிந்த பூரிப்பில், உள்ளம் முழுவதும் அக்களிப்பில் துள்ள, தங்களின் அடுத்தத் தலைமுறையின் முதல் வாரிசை, தலைச்சன் பேரனைத் தூக்க ஆசையுடன் கைகளை நீட்ட, தன் குழந்தையின் மீதே பார்வையைப் பதித்த படியே தன் அன்னையிடம் குழந்தையை அணைத்தவாறே மெல்லக் கொடுத்த அர்ஜூன் அவனையும் அறியாமல்..

"மாம், கேர்ஃபுல் (careful) " என்றான்...

மகனின் பதட்டத்தையும், அவன் தன் குழந்தையின் மீது வைத்திருக்கும் விழிகளை வேறு எங்கும் திருப்பாமல் பார்த்திருப்பதையும் கண்டு தானும் ஒரு அன்னையாகத் தன் மகனை ரசித்துப் பார்த்து சிரித்தவர்....

"எனக்கும் குழந்தையைத் தூக்கத் தெரியும் அர்ஜூன்" என்க,

"ஸாரி மாம், ஹி இஸ் வெரி டைனி... ஐ ஆம் ஜஸ்ட் ஸ்கேர்ட் **[Sorry mom, he is very tiny.. I am just scared]"** என்றான் ஒரு தந்தையாக முகம் கொள்ளாத பெருமிதத்துடனும், மனம் முழுவதும் நிறைந்திருந்த பூரிப்புடனும்...

மூன்று கிலோ மலர் பந்தை கரங்களில் சுமந்திருப்பதைப் போன்று உணர்ந்த ஸ்ரீ குழந்தையைப் பார்க்க, குறைந்தது ஆறடிக்கு மேல் வளருவான் என்பது போல் நீளமான குழந்தை...

பிரமிக்க வைக்கும் வகையில் அழகிய, களையான, செக்கச்செவேலென்ற முகம், கருகருவென்று மென்மையான முடி, கூர்மையான மூக்கு, சிவந்த அதரங்கள்.... வழக்கமாகக் கன்னத்தில் குழியோடு பிறக்கும் குழந்தைகளுக்கு முகத்தில் சதைப் பற்று அதிகமாகும் பொழுது தான் குழிகள் தெரிய

ஆரம்பிக்கும்… ஆனால் வெகு சில குழந்தைகளுக்கே பிறந்த அன்றே குழிகள் ஆழமாக தென்படும்…. அதில் நம் குட்டி அர்ஜூனும் ஒருவன்…

ஜனித்த அன்றே அழகிய கன்னக் குழிகள் தோன்றியதில் அவன் சிறிதே புன்னகைத்தாலும் யாரையும் வசீகரிக்கும் தன்மை பெறுவான் என்பது ஊர்ஜிதமாவது போல் தன் பாட்டி தூக்கியதும் முறுவலிக்க, குழந்தையின் அழகு பேரழகாகப் பல மடங்கு அதிகரித்து, பார்ப்பவர் எவரின் மனதையும் குடைந்து உள்ளே சென்று வீற்றிருக்கும் வகையில் அத்தனை அழகாயிருந்தான் நமது மனதைக் கவர்ந்துவிட்ட அர்ஜூன் திவ்யா தம்பதியரின் குட்டி வாரிசு….

Likes:Priayamadhavan, Renuravi, sabeenaibu and 69 others

Jelineusa
JB

Apr 10, 2018
#68

ஸ்ரீ குழந்தையின் பேரழகை ரசித்துக் கொண்டிருக்கும் பொழுதே கலாவும் அவர்களின் அருகில் வர, அவரிடம் ஸ்ரீ குழந்தையைக் கொடுக்கவும் அர்ஜூன் தன்னிச்சையாக அவர் அருகில் போய் நிற்க மருமகனின் பதற்றத்தை பார்த்த கலா புன்னகைத்தவர்…

"மாப்பிள்ளை… கொஞ்ச நேரம் என் பேரனைக்

கொஞ்சிட்டு அப்புறம் உங்கக்கிட்டேயே கொடுத்துடுறேன்" என்க...

தன் மாமியாரிடம் முதன் முறையாகத் தன் இதழ்கள் பிரித்துச் சிரித்தவனின் முகத்தில் நாணம் படற, இருந்தும் அவன் தன் குழந்தையை விட்டு வேறு பக்கம் நகர்ந்தான் இல்லை....

சிவ சுப்ரமணியம், பாலா என்று ஒவ்வொருவராகக் குழந்தையைக் கொஞ்ச, அதற்குள் திவ்யாவின் மகப்பேறு மருத்துவரான தேவியும் வந்து சேர, வேக நடை வைத்து அர்ஜூனின் அருகில் வந்தவர் அவனைக் கட்டி அணைத்தவர், மஹாவையும், அருணையும், வினோத்தையும் அழைத்து அவர்களின் கரங்களையும் பற்றிக் கொண்டவர்...

"ஐ ஆம் ஸோ ப்ரவுட் ஆஃப் யூ ஆல் [I am so proud you all] .... இந்தச் சின்ன வயசில... வாவ்!!! எத்தனை நிதானம், தெளிவு, தைரியம்..." என்றவர் மீண்டும் அர்ஜூனின் கரம் பற்றி...

"அர்ஜூன்... மை ஆல்ஃபா மேல்! [My Alpha Male] யூ நெவர் ஸீஸ் டு அமேஸ் மி! [You never cease to amaze me!] " என்று வியந்தவரை திருதிருவென்று விழித்துப் பார்த்திருந்த பெரியவர்களைக் கண்டவருக்குப் புரிந்து போனது அவர்களுக்கு நடந்தவற்றை இளையவர்கள்

இன்னும் தெரியப்படுத்தவில்லை என்று...

பின் அனைத்தையும் தெளிவாக அவர்களுக்கு விளக்கியவர், அர்ஜூன் எவ்வாறு துணிவுடனும், தெளிவுடனும், அதே சமயம் அந்தக் கொடிய இக்கட்டான மனம் பதைபதைத்து திகைத்து தவித்து இருக்கும் சூழ்நிலையில் கூடத் தன் மனைவியைத் தைரியப்படுத்திக் கொண்டு, குழந்தையையும் அவள் வெளிக் கொணற பிரமிக்க வைக்கும் வகையில் வெகு நிதானமாகவும், ஸ்திரமாகவும் போராடியதைக் விவரித்தவர், வினோத்தும், மஹாவும், அருணும் எவ்வாறு இந்தச் சின்ன உயிரையும் பெரிய உயிரையும் காப்பாற்ற அர்ஜூனிற்கு உறுதுணையாக இருந்து உதவிப் புரிந்தார்கள் என்று விளக்கமாக எடுத்துரைக்க,

கேட்டுக் கொண்டிருந்த பெற்றோர்களின் பார்வை தங்களின் பிள்ளைகள் மேல் நிலைத்தது நிலைத்த படியே இருந்தது...

கலா தன் விழிகளில் வழிந்த நீரைத் துடைக்கக் கூட மறந்து சிலையாக நின்றார் என்றால்,

அர்ஜூனை நிமிர்ந்து பார்த்த ஸ்ரீ சில விநாடிகள் அவனை உற்று நோக்கியவரின் மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் கரை புரண்டோட, அவரின் கண்களில் தெரிந்தது தன் மகனைப் பற்றிய பெருமையா? அல்லது

தன் மகனின் ஜனனத்தையும் தனது மனையாளின் மறு ஜனனத்தையும், அவன் கரங்களில் ஏந்தி தாங்கியிருந்ததை நினைத்து பிரமிப்பா? தெரியவில்லை..

"மாப்பிள்ளை... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை... சொல்லப் போனா பேச கூட வாய் வரலை" என்று அர்ஜூனின் கரத்தைப் பற்றிய சிவசுப்ரமணியம் கண்களில் நீர் தளும்ப கூற,

"அன்கில்... திவ்யா என்னோட வைஃப்... இது என்னோட குழந்தை... " என்று மட்டும் சொன்னவன் வழக்கம் போல் தான் செய்ததை இதற்கு மேலும் பெருமை படப் பேச வேண்டாம், இதனோடு இந்தப் பேச்சை முடித்துக் கொள்ளலாம் என்பது போல் மருத்துவரிடம் திரும்பியவன்...

"ஆண்டி... இன்னும் திவ்யா கண்ணு முழிக்கலை..." என்றான் கவலைத் தோய்ந்த குரலில்...

"கமான் அர்ஜூன்... வா திவ்யாவைப் பார்க்கலாம்" என்று அழைத்தவர் முன்னே நடக்க, அவரைத் தொடர்ந்து அவர் பின்னே சென்றவன், அடி எடுத்து வைக்கும் முன் குழந்தையை ஒரு முறை திரும்பி பார்க்க,

சில நிமிடங்களுக்கு முன் அவன் தன் அருகில் நின்று அவன் குழந்தையைப் பார்த்திருக்கும் பொழுது இருந்த ஸ்ரீயின் மனநிலைக்கும், இப்பொழுது அவன் மீண்டும் திரும்பி தன் குழந்தையைப் பார்க்கும் பொழுது அவருக்கு இருந்த மனநிலையிக்கும் அநேக வித்தியாசங்கள் இருந்தது...

மருத்துவர் சொன்னது போல் உண்மையில் தங்களின் மகன் ஒரு "ஆல்ஃபா மேல்" [Alpha Male] என்றே தோன்றியதில் பெற்றவர்களின் கண்களில் கர்வமும், பிரிமிப்பும் வழிந்தது...

ஐசியுவிற்குள் மருத்துவருடன் நுழைந்த அர்ஜுன் அங்கு இன்னும் கண் விழிக்காத தொய்ந்துப் போன தோற்றத்துடன் விழிகள் மூடி படுத்திருக்கும் தன் மனைவியைக் கண்டவனின் இதயம் மீண்டும் தளற துவங்க,

"ஆண்டி, இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் திவ்யா முழிப்பதற்கு??" என்றான் தவிப்புடன்....

"அர்ஜுன்.... டெலிவரி ஆனவுடனே சிலருக்கு இந்த மாதிரி மயக்கம் வரது காமன் ... ப்ளஸ் திவ்யா ப்ளட் வேற ரொம்ப லூஸ் பண்ணிருக்கா... அண்ட் ஆஸ் யு நோ ஷி ஹேட் அ டெரிபிள் எக்ஸ்பீரியன்ஸ்... [And as you know she had a terrible experience]... ரொம்ப நேரமா பெயின்ல

இருந்திருக்கா... அதனால தான் இந்த மயக்கம்... சீக்கிரம் நார்மலா ஆகிடுவா... அவளுக்கு நாமளும் கொஞ்சம் டைம் கொடுக்கனும்... " என்றவர் அங்கு இருந்த மருத்துவரிடம் திவ்யாவிற்கு அவர்கள் செய்திருந்த சிகிச்சைகளைப் பற்றிக் கேட்க, சிகிச்சைகள் அனைத்தும் முடிந்து இன்னும் சிறிது நேரத்தில் அவளை "ரெகுலர் ரூமிற்கு" மாற்றப் போகிறோம் என்று கூற, அவர்களின் சொற்களிற்குக் கூர்ந்து செவிமடுத்திருந்தாலும்....

"ஓகே ஆண்டி" என்றவனின் விழிகள் மட்டும் யோசனையுடனும் கவலையுடனும் தன் மனைவியையே பார்த்திருந்தது...

சில நிமிடங்களில் திவ்யாவை சாதாரண அறைக்கு மாற்ற, அவளைக் கண்ட கலாவிற்கும், சிவ சுப்ரமணியத்திற்கும் பெற்ற மனம் துடித்தது என்றால், ஸ்ரீக்கும் பாலாவிற்கும் மனம் தவியாய்த் தவித்தது சின்னப் பெண் என்ன பாடுபட்டிருக்கிறாள் என்று...

அவர்கள் அனைவரும் திவ்யாவை சுற்றி நின்றிருக்க, தன் மனையாளின் மீதே கண்களைப் பதித்திருந்தவன்...

"நான் கொஞ்ச நேரம் திவ்யாவோடு தனியா இருக்கனும்... ஐ ஜஸ்ட் வாண்டு பி வித் ஹெர் அலோன் **[I just want to be with her alone]**... என்றதும் அவனைத்

திரும்பி பார்த்த ஸ்ரீ தன் மகனின் கொந்தளித்துக் கொண்டிருந்த உள்ளுணர்வுகளைப் புரிந்துக் கொண்டவராக "சரி அர்ஜூன்" என்றவர் மற்றவர்களைப் பார்த்து தலை அசைக்க, அவர்கள் அனைவரும் வெளியே சென்றதும், ஸ்ரீ தானும் வெளியேறி அவர் கதவை சாத்தியதும்,

தன் மனையாளின் கட்டிலிற்கு அருகில் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு நெருங்கி அமர்ந்து அவளின் வலதுக் கரத்தை, தன் வலது கரத்திற்குள் மென்மையாக பற்றிக் கொண்ட அர்ஜூன் தன் இடது கரத்தால் அவளின் களைத்து, தொய்ந்துப் போன முகத்தில் படர்ந்திருந்த முடிக் கற்றைகளை மெல்ல ஒதுக்கி அவள் முகத்தையே மௌனமாகப் பார்த்திருந்தவனின் மனதில் பல நூறு சிந்தனைகள்....

அவளைத் திருமணம் முடித்த அன்றிலிருந்து சில மணி நேரங்களுக்கு முன் தரையில் தன்னந்தனியாகப் பிரசவ வலியில் கதறித் துடித்துக் கொண்டிருந்தவளைக் கண்ட நிமிடங்கள் வரை சடுதியில் அவன் மனதில் ஓட, அர்ஜூனின் உணர்ச்சிகளின் மையப்புள்ளியாக அவளின் துடிப்பும், கதறலும், அலறொலியும் அவனின் உள்ளத்தை இன்னும் அதிரச் செய்ய, அவன் உடலில் நடுக்கம் ஒன்று ஒரு கணம் ஊடுருவி பாய்ந்தது...

நினைவுகள் நிலைகுலைந்து எங்கேங்கோ ஓடிக்

கொண்டிருக்க, நடுக்கத்தைக் கண்மூடிக் கண்திறக்கும் நேரத்தில் உதறிவிட்டவன் அவளின் கரத்தைப் பற்றியிருந்த தன் கரத்தில் தன்னையும் அறியாமல் அழுத்தத்தைக் கூட்டியவனின் சித்தத்தில் மெல்ல சினம் தலைத்தூக்க துவங்க, முகத்தில் கனிவு இருந்த இடத்தில் இப்பொழுது ருத்ரம் ஆக்கிரமித்துக் கொண்டது...

தலையை அழுந்த கோதி தன் முகத்தில் இருந்த உணர்வுகளைத் துடைத்தெறிந்தவன், அறையை விட்டு வெளியே வரவும், உணர்ச்சிகள் சிறிதுமற்ற ஆனால் எதிரில் இருப்பவர்களை வதம் செய்யும், ஊடுறுவும் கூர்மையைச் சுமந்திருந்த அவனின் கண்களைப் பார்த்திருந்த அவன் குடும்பத்தினருக்கு அர்ஜூனின் இந்த முகம் சொல்லும் அர்த்தம் புரிந்ததால் தன்னிச்சையாக அவன் பாதையில் இருந்து நகர்ந்தார்கள்...

அவர்களிடம் இருந்த தன் பார்வையைத் திருப்பியவன் வெளியே செல்ல எத்தனிக்க, அவன் கரத்தை சட்டென்று இழுத்த ஸ்ரீ....

"அர்ஜூன்... உன் கோபம் எனக்குப் புரியுது... இத யாரு செஞ்சதுன்னும் நீ கண்டு பிடிச்சிடுச்சிடுவ... பட் பி கேர்ஃபுல் அர்ஜூன்... எதுவும் பெரிசா பண்ணிறாத" என்று அவனின் குணம் தெரிந்த அன்னையாகக் கூற,

வழக்கமாக மனிதர்களுக்கு அதீத கோபத்தில் முகம் சிவக்கும், உதடுகள் கூடத் துடிக்கும்... அவர்களின் ஒவ்வொரு செயலும் அவர்கள் உள்ளத்தில் இருக்கும் சினத்தை வெளிப்படுத்தும்.... அவர்களை எதிர்த்து எதிரில் இருப்பவர்களுக்குத் தங்களின் நிலை புரிந்துவிடும்...

ஆனால் மிருகத்திற்கும் கீழாக நடந்திருந்த, இந்த நிமிடம் யாரென்றே தெரியாத தன் கண்ணெதிரில் இல்லாத கொடியவனை நினைத்து மனம் முழுவதும் அக்னி மலையாக கொதித்திருந்தும், சீற்றம் எல்லையைக் கடந்து தன்னை மீறித் திமிறிக் கொண்டிருந்தும், கோபவெறிக்கு ஆளான அர்ஜூனின் முகத்தில் சினத்திற்குப் பதில் அளப்பரிய அமைதியும், நிதானத்தை இழக்காத தோற்றமும், உதடுகளின் இடது கடை ஓரத்தில் நெளிந்த சிறிய புன்னகையும் ஸ்ரீயின் நெஞ்சத்தைத் திகிலால் அதிரச் செய்ய, அவனின் இந்தப் புதிய முகத்தைப் பார்த்தவர் விருட்டென்று இரண்டு அடிகள் எடுத்து பின்னால் நகர்ந்தார்....

மலரினும் மெல்லியவள்!

தொடரும்....

Likes: umahera, Priayamadhavan, sabeenaibu and 130 others

Jelineusa

JB

Wednesday at 5:57 AM
#69
மலரினும் மெல்லியவள்!

பாகம் 34

மனிதர்களின் சிரிப்பில் முகத்தின் இடது பக்கம் உதடுகளை லேசாகச் சாய்த்து சிரிக்கும் விதம் அவர்களின் உள்ளத்தில் இருக்கும் தவறான உணர்வுகளையும், மனதில் ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியுடன் கலந்த துன்பத்தின் வலியையும் அதனால விளைந்த வன்மத்தையும் ஒருங்கே குறிக்கும் வஞ்சத்தின் புன்னகை... (malicious smile)

தனது மகனின் முகத்தில் அப்படிப்பட்ட ஒரு சிரிப்பை இன்று கண்ட ஸ்ரீ தன்னையும் அறியாமல் தன் கணவரைத் திரும்பி பார்க்க, அர்ஜூனின் முகத்தையே பார்த்திருந்த மஹாவிற்கு மரணித்ததைப் போன்று உடல் சில்லிட்டுப் போனது...

ஸ்ரீயின் கேள்விக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் அர்ஜூன் மருத்துவமனை வாயிலை நோக்கி நடக்கத் துவங்க, சட்டென்று வினோத்தின் கரத்தைப் பற்றிய மஹா...

"வினோத் என்னோடு கொஞ்சம் வாங்க" என்றவள்

அருணையும் திரும்பிப் பார்த்து...

"அண்ணா நீங்களும் வாங்களேன்" என்றவள் இருவரையும் தன்னோடு இழுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக அர்ஜூனைப் பின் தொடர்வதற்குள் அவன் தன் காரை அடைந்திருக்க, "அண்ணா" என்று கத்தியவளின் குரலில் திரும்பியவன் அவர்கள் மூவரும் தன்னை நோக்கி ஓடி வருவதை யோசனையுடன் புருவங்களைச் சுழித்துப் பார்த்திருந்தான்....

மஹாவிற்கு அர்ஜூனை இப்பொழுது நெருங்கி உண்மையைச் சொல்வது என்பது எரியும் நெருப்பில் தானே குதிப்பது போல் என்று தெரியும்... இருந்தும் இனியும் அவனிடம் இருந்து உண்மையை மறைக்க விரும்பாமல் அவனை நெருங்கி நின்றவள்...

"அ.... அண்ணா உங்கக்கிட்ட கொஞ்சம் பேசனும்" என்றாள்..."

இந்த ஒரு வரியைச் சொல்வதற்குள்ளாகவே அவளின் நாக்கு மேலெண்ணத்தில் ஒட்டிக் கொள்ள, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உள்ளங்கை வேர்க்க விறுவிறுக்க, வெளிப்படையாக நடுங்கும் உடலுடன் அர்ஜூனின் கூரிய கண்களையும், சுழித்த புருவங்களையும் கண்டு திகில் சூழ்ந்த மனதுடன்...

"அண்ணா, எங்கள கடத்துனது என்னோட காலேஜ் ஸீனியர் கோகுல்"... என்று பட்டென்று போட்டு உடைத்தாள்...

அவள் சொன்ன அந்த விநாடி அர்ஜூனின் முகத்தில் மின்னல் கீற்று போல் தெரிந்து விருட்டென்று மறைந்த முகப் பாவத்தையும், அவன் கண்களில் அலைபாயும் கொலை வெறியையும் கண்டவள் தண்டுவடம் சிலிர்க்க, தன்னையும் அறியாமல் அருணிடம் ஒட்டிக் கொண்டு நிற்க...

"வாட்?" என்றான் அர்ஜூன்...

அவன் குரல் என்னவோ சாதாரணமாகத் தான் இருந்தது....

ஆனால் அந்த ஒற்றை வார்த்தையில்... அதனைக் கேட்கும் பொழுது அவனின் கண்கள் கக்கிய கனலை கண்டவளின் உடல் திடுக்கென்று தூக்கி வாரிப்போட அவளை ஒட்டி நின்ற அருண் கூடச் சட்டென்று அவளை விட்டு இரு அடிகள் தள்ளி நின்றவன் மஹாவை நோக்கி அதிர்ந்த பார்வை வீச, இரு அண்ணன்களின் முகத்தில் தெரிந்த மாற்றமும், அவர்களின் பார்வையும் மஹாவை பெரிதும் அதிர செய்ய, அவளின் இதயம் தாறுமாறாகத் தன் துடிப்பை

அதிகரித்து இருந்தது...

கல்லூரியில் கோகுலைப் பார்த்த அன்று நடந்ததில் துவங்கி ஹோட்டலில் அவனை அறைந்தது முதல், அதனால் அவன் வெறிக் கொண்டு "உன்னைய தூக்குறேண்டி" என்று கத்தியது வரை தலை குனிந்தவாறே கண்களில் நீர் ஆறாகப் பெருக்கெடுத்து வழிய, அவ்வப்பொழுது அழும் விழிகளைத் துடைத்துக் கொண்டே கூறி முடித்து நிமிர்ந்தப் பார்த்தவளுக்கு அங்கு நின்று கொண்டிருப்பது தனது அண்ணன் அர்ஜூனாகவே தெரியவில்லை...

தொழிலில் தன்னை ஒழிக்க நினைத்து தன் முதுகில் குத்தும் எதிரிகளை அவன் அரக்கத்தனமாக அழிக்கும் நேரத்தில் அர்ஜூனின் முகத்தில் தோன்றும் ஒரு வித உணர்வே இன்று மஹா நடந்த அனைத்தையும் ஒருவரிடமும் சொல்லாமல் மறைத்து, அது அவளின் கற்பிற்கே பங்கம் வரவழைக்க இருந்தது மட்டும் அல்லாமல் தனது மனைவியின் உயிரோடு சேர்ந்து தன் மகனின் உயிரையும் அழிக்க முனைந்திருந்ததை நினைத்துக் கோபம் தெறிக்க, ஆனால் ஒரு வார்த்தைக் கூட உதிர்க்காமல் மௌனமாக அவன் தன்னையே கூர்ந்து பார்த்திருந்த விதத்தில் கலங்கியவள் அவன் அருகில் வந்து அவன் கரத்தைப் பற்றித் தன் கரத்திற்குள் வைத்து....

"உங்களைப் பத்தி தெரிஞ்சு பயந்துட்டு தான் அவன்

பேசாம இருக்கிறதா தான் நினைச்சேன்... ஆனால் அந்த ராஸ்கல் இவ்வளவு தூரம் போவான்னு நான் கொஞ்சம் கூட நினக்கலைன்னா..." என்று கதற,

மட்டுமடங்கா ஆத்திரத்தில் இருந்தவன் விருட்டென்று அவளின் கரத்தை உதறி ஒரு அடி பின்னால் எடுத்து வைத்து தன் தங்கையை விட்டு நகர்ந்தான்...

Likes:Priayamadhavan, Vasanthisakthivel, sabeenaibu and 52 others

Jelineusa
JB

Wednesday at 5:58 AM
#70

அவன் தன்னை விட்டு அகன்றதும் திடுக்கிட்டவள் அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் தலை கவிந்தவளின் கண்களில் அவன் தன் வலது கை முட்டியை மடக்கி தனது உள்ளத்திற்குள் வெடித்துச் சிதறும் சீற்றத்தை அடக்குவதைக் கண்டவளிற்குத் தன் நிலைப் புரிந்து போக, அதற்குள் அருண்...

"வாட் இஸ் திஸ் மஹா? [What is this Maha?].... ஹோட்டலுக்கு, அதுவும் பாருக்கும் டான்ஸிற்கும் போற அளவுக்கு உனக்கு எங்கிருந்து துணிச்சல் வந்தது?? அதுவும் ஒருத்தன் இத்தனை தூரம் கேவலமா நடந்திருக்கான்.... எங்க யாரிடமும் சொல்லனும் உனக்குத் தோனவே இல்லையா?" என்று கோபத்தை அடக்கமாட்டாமல் பற்களைக் கடித்துக் கொண்டு வெடித்துக் கூற....

அர்ஜூனின் அருகில் மீண்டும் நெருங்கி வந்தவள் அவன் கரத்தை பற்ற முயற்சிக்க, அவள் கையை மீண்டும் உதறியவன் கோபம் தெறிக்க அவளையே பார்த்திருக்க, அர்ஜூனின் ஒதுக்கத்தில், அவன் தன் கையைத் தொடக்கூடப் பிடிக்காது உதறியதில் இதயம் சுக்கு நூறாக உடைந்து சிதறிப் போனதைப் போன்று உணர்ந்தவள் மருத்துவமனை என்று கூடப் பார்க்காமல் அவன் கால்களுக்கு அருகில் அமர்ந்து உதடுகள் துடிக்கக் கதறி கரைந்தாள் அழுகையால்....

"ஐ ஆம் ஸோ ஸாரிண்ணா... உங்கக்கிட்ட எப்படியும் சொல்லிடனும்னு ஒவ்வொரு தடவையும் நினைக்கும் போதெல்லாம் எனக்கு ரொம்பப் பயமா இருந்துச்சு... அதனால சொல்லாம மறைச்சுட்டேன்... ஆனால் அது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்ப உணர்ந்திட்டேண்ணா... என்ன மன்னிச்சுடுங்கன்னு கேட்கறதுக்குக் கூட எனக்கு அருகதையில்லைன்னு தெரியும்.... ஏன்னா என்னோட முட்டாள்தனத்தால் அண்ணியோட உயிருக்கே ஆபத்து வரவழைக்க இருந்தேனே..." என்று தேம்பித்தேம்பி அழும் தங்கையைப் பார்த்தவனுக்கு அதிர்ச்சியும் சினமும் அதிகரித்ததே தவிர அவள் மேல் பரிதாபம் வரவில்லை... மாறாக....

"திவிக்கு மட்டுமா? அப்ப உனக்கு வர இருந்த ஆபத்து????" என்று மட்டும் சொன்ன அர்ஜூனை அண்ணாந்துப் பார்த்தவள் அவன் என்ன சொல்ல

வருகிறான் என்று புரிந்து அவமானத்தில் தலை குனிய, அவளைக் குனிந்து தூக்கிவிட்ட அருணை அணைத்துக் கொண்டு கதறி அழும் தன் காதலியை பார்த்த வினோத்தின் உள்ளமும் உடைந்து நொறுங்கியது…

ஆனால் அதே சமயம் அவள் செய்ததும் தவறு தானே…

பெண்கள் இரவு நேரங்களில் பழகிய இடங்களிற்க்கு தனியாகச் சென்றாலே இது போன்ற ஆபத்துக்கள் நடக்கக் கூடிய இந்தக் காலத்தில், கல்லூரியில் படிக்கும் பெண்ணிற்குத் தெரிய வேண்டாமா இது போல் ஹோட்டலிற்கும், பார், டான்ஸ் என்று கூத்தடிக்கும் இடங்களுக்கும் செல்வதினால் வரும் பேராபத்துக்களும் அதனால் விளையும் விபரீதங்களும்…

இதில் வெளியில் நடக்கும் விஷயங்களை இளம் பெண்கள் வீட்டில் இருக்கும் பெரியவர்களுக்கும், ஆண்களுக்கும் சொல்லாமல் மறைப்பதினால் என்னேன்னவோ அபாயங்களும் பிரச்சனைகளும் வர தானே செய்யும்…

தன் தங்கை அவ்வளவு அழுது கதறியும் ஒன்றும் பேசாமல் அவளையே பார்த்திருந்த அர்ஜூன் சட்டென்று காரில் ஏறி மின்னல் வேகத்தில் கிளம்ப,

மஹாவின் அதிர்ந்து, கலங்கிய, பயந்த முகமும், அருணின் அணைப்பில் இன்னமும் உடல் முழுவதும் நடுங்கிக் கொண்டே அவள் நிற்கும் தோற்றமும் வினோத்தின் மனதின் வேதனையை அதிகரிக்க, ஒரு முறையாவது தன்னவளை அணைத்து ஆறுதல் கூற மாட்டோமா என்றே இருந்தது அவனின் காதல் கொண்ட இதயத்திற்கு...

மஹாவின் உடலின் நடுக்கம் இன்னும் குறையாது இருக்க, அவளின் தேம்பலும் நிற்காதிருக்க, வினோத்தின் முகத்தில் தோன்றி இருந்த பதற்றத்தையும், தவிப்பையும், அவன் விழிகளில் தெரிந்திருந்த ஏக்கத்தையும் கண்ட அருண், வினோத்தைப் பார்த்துத் தன்னருகில் வருமாறு தலை அசைத்தவன் தன்னிடம் இருந்து மஹாவைப் பிரித்து அவனிடம் கொடுத்தவன் அவர்களுக்குத் தனிமை கொடுக்க நினைத்து மருத்துவமனைக்குள் செல்ல,

அருண் உள்ளே செல்லும் வரை காத்திருந்த வினோத் அவன் தலை மறைந்ததும், தாங்கள் இருப்பது மருத்துவமனை வளாகம் என்று கூடக் கண்டு கொள்ளாமல் மஹாவை இழுத்து அணைத்துக் கொண்டவன்...

"ம்ப்ச்... மஹா.... அழறத நிறுத்து... அதான் யாருக்கும் ஒன்னும் ஆகலை இல்ல... போதும் அழாத..." என்று என்ன ஆறுதல் கூறியும் அவளின் அழுகை மட்டும்

நிற்கவில்லை.....

தன்னவளின் கதறல் அவனின் நேசம் கொண்ட மனதையும் வலிக்கச் செய்யவும் அவனையும் அறியாமல் அவன் கண்களில் நீர் தளும்பி நிற்க, ஆனால் தான் கலங்கியிருப்பதைப் பார்த்தாள் மஹா தாங்கமாட்டாள் என்று அவளுக்குத் தெரியாமல் விழி நீரை துடைத்தவன் அவளின் தலையைக் கோதிவிட்டு அவளை மேலும் ஆறுதல் படுத்த முயன்றான்....

"மஹா... ப்ளீஸ்... சொல்றத கேளு.... திவ்யாவும் குழந்தையும் இப்போ நல்லா இருக்காங்க.... அழாத."

"இல்ல வினோத்... உங்களுக்குத் தெரியாது.... அந்தப் பொறுக்கி கிட்டதட்ட என் கழுத்தில் தாலி கட்டவே வந்துட்டான்... திவ்யா அண்ணிக்கு மட்டும் அந்த நேரத்தில் வலி வரலைன்னா, அவன் என்னை என்ன வேண்டுமானாலும் செய்திருப்பான்... ஒரு வேளை அப்படி அவன் மட்டும் என்ன தொட்டிருந்தானா?" என்றவள் இன்னமும் கோகுல் தன் எதிரில் நிற்பது போன்ற ஒரு பிரம்மையில், அதனால் ஏற்பட்ட திகிலில் திடுக்கென்று உடல்முழுவதும் ஒரு நடுக்கம் பரவ, அச்சத்தைத் தேக்கியிருந்த கண்களோடு, தொண்டை அடைக்கத் தழுதழுத்தவள்...

"நிச்சயம்... நிச்சயம் நான் இந்நேரம் உயிரோடவே

இருந்திருக்க மாட்டேன் வினோத்" எனறு அவன் நெஞ்சில் அழுந்த முகம் புதைத்து மேலும் வெடித்துக் கதற....

அவளின் கதறலில் உடைந்தவன் காற்றுக் கூடப் புக முடியாத அளவிற்கு அவளை இன்னும் இறுக்கக் கட்டிப் பிடித்தவன் அவளின் நெற்றியில் மென்மையாக இதழ் பதித்தான்....

அந்த நேரத்தில் அவனின் மென்மையான முத்தம் அவளுக்குத் தேவையாக இருந்தாலும் தாங்கள் இருப்பது மருத்துவமனை, அதிலும் அருண் அண்ணா எந்நேரம் வேண்டுமானாலும் வெளியில் வரக் கூடும் என்றும் நினைத்தவள் அவனை விட்டு மெதுவாக விலக, அவளைச் சட்டென்று இழுத்தவன்....

"இப்ப எதுக்கு விலகுற? என்றவன் அவளைத் தன் கை அணைவுக்குள்ளே வைத்துக் கொண்டான்...

எத்தனை நேரம் இறுக்க அணைத்த நிலையிலேயே இருந்தார்களோ, மஹா மீண்டும் அவனை விலக, அவளின் உணர்வுகள் புரிந்து அவனும் தன் அணைப்பில் இருந்து அவளை விடுவிக்க,

"வினோத்... அண்ணி இன்னும் கண்ணு முழிக்கலை...

அதுக்குள்ள அண்ணா இப்படி வெளிய கிளம்பறாங்கன்னா? எனக்கு என்னமோ ரொம்பப் பயமா இருக்கு... "

"மஹா... உங்க இரண்டு பேரையும் கடத்திட்டாங்கன்னு எங்க அம்மா சொன்னப்போ எனக்கு இந்த உலகமே இருண்ட மாதிரி இருந்துச்சு... அடிச்சிப்பிடிச்சு இங்க வந்தா நாங்க உங்க அண்ணாவோடு ஆ்ஃபீஸுக்குள்ள நுழைஞ்ச நேரம் அவரு இருந்த நிலைமையை நீ பார்த்திருந்தீன்னா இப்படிக் கேட்கமாட்ட... கிட்டத்தட்ட ஒரு ராட்ஷஷனைப் பார்க்குற மாதிரியே இருந்துச்சு.... அவ்வளவு ஆவேசம், ஆங்காரம் அவரு முகத்தில... உன்னை நினைச்சும், திவ்யாவை நினைச்சும், அவரோட குழந்தையை நினைச்சும் அவரு எவ்வளவு பதறித்துடிச்சாரு தெரியுமா? எங்களுக்கும் பதட்டம் இருந்துச்சு... ஆனால் எங்க எல்லாருக்கும் அதோட சேர்ந்து பயமும் தான் இருந்துச்சு... ஆனால் அவரு மனசில பதட்டமும், பயமும் மட்டும் இல்ல... ஒரு ஆக்ரோஷம் இருந்துச்சு... ஆனால் இதை எல்லாத்தையும் அவர் தனக்குள்ள கண்ட்ரோல் பண்ணிக்கிட்டு திவ்யாவுக்கு டெலிவரியும் பார்த்துட்டு இதோ இவ்வளவு நேரம் பொறுமையாவும் இருந்துட்டு, இப்ப அம்மா, அத்தை எல்லாரும் திவ்யா பக்கத்தில இருக்காங்க அப்படிங்கற தைரியத்தில் தான் அவரு போறாரு... " என்றவன் மஹாவின் கண்களை ஆழ பார்த்தவாறே....

"மஹா.. உங்க அண்ணாவுக்கு எப்ப பாசத்தைக்

காட்டுறதுன்னும் தெரியும்... அதே சமயம் அவர எதிர்க்கறவங்களுக்கு எப்ப பயத்தைக் காட்டுறதுன்னும் தெரியும்... வா.... " என்றவன் அவளைத் தன் தோள் வளைவுக்குள் இழுத்தவாறே மருத்துவமனையை நோக்கி நடக்க,

மனம் முழுவதும் "அண்ணா நிச்சயம் அந்தக் கோகுலை சும்மா விடமாட்டாங்க" என்ற தைரியம் இருந்தாலும், அவனால் அவருக்கும் எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாதே என்று அச்சமும் சூழ்ந்திருக்க, அர்ஜூனின் கார் சென்ற வழியே திரும்பி திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றவளின் குற்ற உணர்வு அவளைக் குடைந்து எடுத்தவாறே இருந்தது....
காரை செலுத்திக் கொண்டு அலுவலகம் நோக்கி சென்று கொண்டிருந்த அர்ஜூனின் மனதிலோ, தன்னால் ஏதும் செய்ய இயலாத நிலைமையை உருவாக்கிய ஒரு கல்லூரி மாணவனின் கொடூரமும், ஒரு வேளை திவ்யாவை சரியான நேரத்தில் மீட்காமல் இருந்திருந்தால் அவளது மற்றும் தங்களின் குழந்தையின் நிலைமையும், இதற்கெல்லாம் காரணம் அவனது தங்கை மறைத்த அந்த ஒற்றை விஷயமே என்ற மிதமிஞ்சிய கடுமையும், அவனது உள்ளத்தைத் தவிடு பொடியாக்க, உணர்ச்சிகள் சீறிக் கொண்டு பாய்ந்துக் கொண்டிருந்ததால்....

"ஒரு பொடிப் பயல் என்ன காரியம் செய்திருக்கிறான்? அதுவும் என் தங்கையையும் மனைவியையுமே கடத்தும் அளவிற்கு?" என்று கொந்தளித்தவன் அந்த

நிமிடமே தனது வேட்டையைத் துவங்க, அரசியலிலும், தொழில் வட்டாரத்திலும், தனது ஒரு விரல் அசைவிற்காகக் காத்துக் கொண்டிருக்கும் நிழல் உலகத்திலும் இருக்கும் முக்கியப் புள்ளிகளை அழைக்கத் துவங்கியவன் தனது கட்டளைகளையும், திட்டங்களையும் ஆணையிட துவங்க, இறுதியில் தனது திட்டங்களின் மையப்புள்ளியான கோகுலிற்கு "செக்" [Check] வைக்கக் கதிரை அழைத்தான்...

அதுவரை நடந்திருந்த அனைத்தையும் கமிஷனர் மூலம் தெரிந்து கொண்டிருந்த கதிர் தன் MD யின் துணிச்சலை, தன் மனைவிக்கு அவரே இக்கட்டான சூழ்நிலையில் பிரசவம் பார்த்திருந்ததை அறிந்த அந்த நிமிடத்தில் இருந்து அவன் அவனாக இல்லை...

அர்ஜூனின் மன உரத்தை, தைரியத்தை, சாமார்த்தியத்தை, ஒரு வேங்கைப் போல் தனது எதிராளிகளை அவன் வேட்டையாடுவதையும், தோழிற்களில் தனது போட்டியாளர்களைச் சாணக்கியத்தனமான தந்திரத்தாலேயும், அதி புத்திசாலித் தனத்தாலேயும் பல நேரங்களில், பல சூழ்நிலைகளில் அவன் வெற்றிக் கொள்வதையும் தன் கண்கூடாகவே பார்த்திருக்கிறான்...

ஆனால் இன்று அவர் செய்தது? இந்த உலகத்தில் எத்தனை பேருக்கு இந்தத் தைரியமும் சமயோசித புத்தியும் இருக்கும் என்று யோசித்திருந்தவனிற்கு

உடலில் மயிற்கூச்செரிய சிலிர்க்க வைத்ததில் உறைந்து போயிருந்தான்…

மனையாளிற்கு எதிர்பாராதவிதமாக மருத்துவமனை அல்லாத இடங்களில் கண்வன்மார்கள் பிரசவம் பார்த்திருப்பது ஒன்றும் புதிதல்ல… ஆனால் அவன் மனைவி கடத்தப்பட்டுப் பல மணி நேரங்களாக எங்கு இருக்கிறாள் என்று கூடத் தெரியாமல், ஒன்றும் செய்ய முடியாமல் அவன் தவித்துக் கலங்கிப் போய், ஆத்திரமும், அச்சமும் கலந்து துடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அவன் மனைவி கடத்தப்பட்டிருக்கும் இடம் தெரிந்து, புயல் போல் அவளிடம் சென்று, அங்கு இருந்த சூழ்நிலையில் தன் மனதைக் கட்டுப் படுத்தி, தன்னிலையை ஒருங்கிணைத்து, தனது கலக்கத்தை ஒதுக்கி வைத்து, நிதானமாகத் தன் கரங்களாலேயே தன் மனைவிக்குப் பிரசவம் பார்ப்பது என்பது பல கோடி ஆண்களில் ஒருவரால் தான் முடியும்…

அதுவும் தன் MD யால் மட்டுமே முடியும் என்பதே கதிரின் பிரமிப்பு…

அர்ஜூனின் எண்ணை தன் அலை பேசியில் பார்த்தவன் மறுவிநாடியே அழைப்பை எடுக்க ..

"கதிர்… எங்க இருக்கீங்க?"

"சார்... இன்னும் ஆ:ஃபிஸில் தான் இருக்கேன் சார்"

இப்பொழுது கிட்டதட்ட மணி விடியற்காலை ஐந்தை தாண்டியிருந்தாலும், இந்தச் சூழ்நிலையில் தனது MDக்கு எந்த நேரத்திலும் தனது உதவி தேவைப்படும் என்ற எண்ணத்தில் தான் அவன் இன்னும் அலுவலகத்திலேயே தங்கி இருந்தான்...

"ஓகே. கதிர்... ஐ ஆம் ஆன் தி வே [I am on the way]" என்ற அர்ஜுன் சிறிது நேரத்திலேயே அலுவலகத்தை அடைய, அர்ஜுனிற்க்காக அலுவலக வாயிலிலேயே காத்திருந்த கதிர் அவனைக் கண்டதும் ஓடி வந்தான்...

"சார்... கமிஷனர் ஸார் எல்லாத்தையும் சொன்னார் சார்... " என்றவனிற்கு அதற்கு மேல் பேச நாவெழவில்லை...

ஆனால் அவற்றை எல்லாம் கவனிக்கும் மனப் போக்கில் அர்ஜுன் இருந்தால் தானே???

வழி முழுவதும் சில மணி நேரங்களாகவேனும் தன்னைக் கையாளாகாதவனாக, ஒன்றும் செய்ய இயலாமல் கலங்கடித்து, திணறடித்து, தவிக்கவிட்டிருந்த, தன் உயிரினும் மேலான

திவ்யாவை துடிதுடிக்க வைத்திருந்த, தன் பாசத் தங்கையை அதிர்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு சென்றிருந்த கோகுலை துவம்சம் செய்யும் நேரத்தையும், அவனைச் சித்திரவதை செய்து அழிக்கும் விதத்தைப் பற்றிய எண்ணங்களே அவன் மூளையையும், மனதையும் ஆக்கிரமித்து இருந்ததால், தன்னைச் சுற்றி இருப்பவர்களையோ அல்லது சூழ்நிலைகளையோ ஆராய்ந்துப் பார்ப்பதற்கு அர்ஜுனிற்கு நேரமும் இல்லை... அந்த மனநிலையிலும் அவன் இல்லை...

கதிருடன் தன் அறையை அடைந்தவன் ஒன்றும் பேசாமல் மௌனமாகத் தனது சேரில் அமர்ந்தவன், வலது கையைச் சேரின் கைப்பிடியில் ஊன்றி, தன் நெற்றியை தேய்த்துக் கொண்டிருக்க, அர்ஜுனையே கண்கள் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த கதிருக்கு தெரிந்து போனது....

இத்தனை அதிர்ச்சிகரமான சம்பவங்கள் நடந்தும் அர்ஜுனின் இந்தப் பொறுமை, தன்னிடம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி அலை பேசியில் பேசாமல் இந்த நேரத்திலும், அதுவும் அவன் மனைவி மருத்துவமனையில் இருக்கும் நிலையிலும் கூட நேரடியாக அலுவலகத்தில் வந்து, இதோ இன்னும் எந்தக் கட்டளையும் இடாமல் யோசித்துக் கொண்டிருக்கும் அவனின் மனதில் ஓடிக் கொண்டிருக்கும் சிந்தனையின் வீரியம் என்னவென்று...

சில நிமிடங்கள் வரை கதிர் தன்னையே பார்த்திருக்கிறான் என்று தெரிந்தும் ஏதுவும் பேச முனையாமல், சுழித்திருந்த புருவங்களையும் விரிக்காமல், மௌனமாகத் தீவிர யோசனையில் இருந்த அர்ஜூன் நிமிர்ந்தவன்....

"கதிர்... திவ்யாவையும் மஹாவையும் கடத்தியது யாராக இருக்கும்னு நினைக்கிறீங்க?

"ஸார்... நைட் கமிஷனரிடம் பேசினப் போது அவரு உங்க வைஃப் டெலிவரி பத்தி மட்டும் தான் சொன்னாரு... யாரு கடத்தினதுன்னு இனி தான் கண்டு பிடிக்கனும் அப்படின்னாரு சார்.... ஆனால்..." என்று கதிர் முடிக்கவில்லை....

அவன் பேச்சில் அவனையே உறுத்துப் பார்த்திருந்த அர்ஜூன் சட்டென்று....

"மஹாவோட காலேஜ் சீனியர்... கோகுல்..." என்றான்...

அதிர்ந்த கதிரால் "சார்" என்று மட்டும் தான் கூற முடிந்தது....

ஏனெனில் கதிரும், அர்ஜூனும், அருணும் கடத்தியது யாராக இருக்கும் என்று நேற்று மாலையில் இருந்து பல கோணங்களில் ஆராய்ந்து இருந்தாலும், தன் தொழில் வட்டாரத்திலேயோ அல்லது அரசியல் வட்டத்திற்குள்ளோதான், தன்னைப் பற்றித் தெரிந்திருந்தும் இந்தக் கொடும் செயலை செய்திருப்பார்கள் என்றே நினைத்திருக்க, ஒரு கல்லூரி மாணவனின் ஆட்டம் தான் இது என்று தெரிந்த நிமிடம் அது கதிரைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது...

ஒரு குட்டி ஆடு, மலை அளவிற்கு உயர்ந்து நிற்கும், அசுரனைப் போன்று கம்பீரமாக எழுந்து தலைத்தூக்கி நிற்கும் வேட்டைப் புலியிடம், தன்னுடைய ஆடு புலி ஆட்டத்தைத் துவங்கி, அந்த அசுரப் புலியையே முற்றுகையிட்டு, அசையவிடாமல் அடைத்து, சிறைப்படுத்தி விழுங்க முயற்சி செய்தது தெரிந்ததும், அதிர்ச்சியின் உச்சத்திற்கே சென்று இருந்த கதிருக்கு,

இத்தனை நடந்தும், இந்தக் கொடூரமான செயலுக்குக் காரணகர்த்தா யாரென்று தெரிந்தும், மனதையும், தன உள்ளத்தில் வெடித்துக் கொண்டிருக்கும் சீற்றத்தையும் கட்டுப்படுத்தி, மிகுந்த நிதானத்தில் இருக்கும் அர்ஜூனின் எண்ணம் புரிந்தது.....

அது புலி தனது வேட்டையைத் துவங்கும் முன் அமைக்கும் வியூகத்தைப் பற்றிய திட்டமிடும் நேரம்...

புலி தனது இறையை வேகமாகப் பிடிக்க முயற்சி செய்யாது... ஏனெனில் அதன் இறை, புலியின் வருகையை மோப்பம் பிடித்து, தன்னைச் சுற்றி இருக்கும் அபாயத்தைக் கண்டு கொண்டு தப்பித்துக் கொள்வதற்கு வழி வகுக்காமல், தன் பசியைப் பொறுத்து, தன் வேட்கையைப் பொறுத்து, தனது தாக்குதலைத் தொடர தந்திரமான நடத்தையைத் தான் பயன்படுத்தும்...

அதுவே தனது MDயின் வழியும் என்பது புரிந்து போனது கதிருக்கு...

சற்று நேரம் அமைதியாக இருந்தவன் தயங்கியவாறே...

"சார்... நான் என்ன பண்ணனும்னு மட்டும் சொல்லுங்க சா..."

அவன் சொல்லி முடிக்கவில்லை, விருட்டென்று எழுந்த அர்ஜூனைக் கண்டு கதிருக்கு தூக்கிவாரிப்போட...

"கதிர்... நான் இங்க வரும் போதே அவனப் பத்தி விசாரிச்சிட்டேன்.... அவன் அப்பன் ஏதோ ஒரு இரெண்டு மூனு படங்கள் எடுத்து அது கொஞ்சம் ஹிட்

ஆனதுனால வந்தது தான் அவனோடு இந்த வசதியும், திமிரும்... ஏற்கனவே பல பெண்களை அவன் நாசம் பண்ணிருக்கான்... ஆனால் இதுவரை எப்படியோ தப்பிச்சிருக்கான்... பட் அவன் கெட்ட நேரம் துவங்கிடுச்சு... நான் திவ்யாவை தூக்கி வந்ததற்கப்புறமே அந்தக் கெஸ்ட் ஹவுஸை வாட்ச் பண்ண சொல்லியிருந்தேன்... அவனோட ஆளு ஒருத்தன் கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி அங்கு வந்திருக்கான்... அவனும் திவ்யா, மஹாவைக் கடத்துனதுல ஒரு ஆளு... ஏதோ மனசு கேட்காம கோகுலுக்கே தெரியாம திவ்யாவோட நிலைமையைப் பார்க்க வந்திருக்கான்... ரூமில் நெறைய ப்ளட் இருந்ததைப் பார்த்துட்டு பயந்து ஓடியவனைப் பிடிச்சு விசாரிச்சதில் இப்ப கோகுல் எங்க இருக்கான்னு கண்டு பிடிச்சாச்சு..." என்றவன் தொடர்ந்த வார்த்தைகளைக் கூறும் பொழுது அர்ஜூனின் எதிராளியை துளையிடும் பார்வையில் தெரிந்த கோரத்தில் கோகுலின் எமலோகத்திற்கான பாதைத் தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது...

"கதிர்... அவன் எனக்கு உயிரோட வேணும்... என் திவி துடிச்ச துடிப்பவிட அவன் துடிப்பு பல மடங்கு அதிகமாயிருக்கனும்... அத நான் பார்க்கனும்... நீங்க அவனை நம்ம லெதர் ஃபேக்டரி கோடௌனிற்குக் கொண்டு வந்திடுங்க... பட் அண்டில் ஐ ஸே [But until I say] அவன டச் பண்ணாதீங்க" என்றவன் சில நிமிடங்கள் தன் பேச்சை நிறுத்தி யோசனையில் ஆழ்ந்தவன் மீண்டும் தொடர்ந்தான்...

"கதிர்... சாதாரணக் காலேஜ் ஸ்டூடண்ட் தானேன்னு இந்த விஷயத்தை ஈஸியாக எடுத்துடக் கூடாது... அவங்க அப்பனுக்குச் சினி ஃபீல்டுல கொஞ்சம் பேரு இருக்கிறதனால இத வேற வழியில் திருப்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை... ஆல்ரெடி நான் அவன் அப்பன் இப்போ ப்ரொடியூஸ் பண்ணிட்டு இருக்கிற படங்களை வெளியில் வராம என்ன பண்ணனுமோ அத பண்ணிட்டேன்... ஸோ நமக்கு அந்தப் பக்கமும் இருந்தும் எதிர்ப்பு வரக்கூடாது... இருந்தாலும் நீங்க கொஞ்சம் கேர்ஃபுல்லா டீல் பண்ணுங்க... ப்ளஸ் காலேஜ் ஸ்டூடண்ட் அப்படிங்கறதால ஸ்டூடண்ட்ஸை வச்சுக் கூட அவங்க நமக்குப் பின்னால தொல்லைக் கொடுக்கலாம்... எல்லா வழியையும் ப்ளாக் [block] பண்ணிடுங்க... அவனுக்கு மருந்துக்குக் கூட எந்த இடத்திலேயும் இருந்து ஒரு உதவி கூடக் கிடைக்கக் கூடாது... அண்ட், இதில் மஹாவின் பேர் எங்கேயும், எந்த நேரத்திலேயும் வெளி வராமல் பாத்துக்கோங்க.. " என்றவனின் ஒவ்வொரு வார்த்தைகளையும் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்த கதிருக்கு இப்பொழுது நன்கு புரிந்து போனது...

இவர் ஏன் எப்பொழுதும் தன்னைத் தானே எதிர்த்து தனியே சதுரங்க விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறார் என்று...

ஒரு ராஜாவிற்குச் செக் [check] வைக்க, அதனைச் சுற்றியுள்ள காய்களை வெட்டி வீழ்த்துவதற்கே சிறிதும் அஞ்சாதவர், ஒரு பொடிப் பையனையா அழிக்க

முடியாது??

இருந்தும் எதிரியைக் குறைத்து மதிப்பிடாதே என்பது போல் தனது பழிவாங்கும் படலத்தைக் கூடச் சாமர்த்தியமான சிற்பி போல் செதுக்கும் தன் MD - யைப் பார்த்த கதிர் பிரமித்துப் போயிருந்தான் என்றால் இன்னும் வேறு சில நடவடிக்கைகளையும் பற்றி அர்ஜூன் கூறும் பொழுது அவனது நிதானமான குரலிற்கு அடியில் மறைந்திருந்த குரோதத்தைக், கொடூரத்தைக் கண்ட கதிருக்கே திகிலில் உடல் முழுவதும் வேர்த்தது...

"ஓகே கதிர்... திவ்யா இன்னும் கண் முழிக்கலை... நான் இப்ப ஹாஸ்பிட்டல் போறேன்... நீங்க அவனைப் பிடிச்ச நிமிஷமே எனக்கு ஃபோன் பண்ணுங்க" என்றவன் தன் அறையை விட்டு வெளியில் செல்ல எத்தனிக்க...

"சார்... அவன என்ன பண்ணப் போறோம்னு சொல்லவே இல்லையே" என்ற கதிரை நோக்கி திரும்பிய அர்ஜூனின் முகத்தில், இதழின் இடது பக்கக் கடையோரம் அதே புன்னகை... வஞ்சத்தின் சிரிப்பு!!

கதிரின் கேள்விக்குப் பதிலொன்றும் கூறாமல் அடி எடுத்து வைத்தவன், அறையின் வாயிலை அடையும் முன், நின்று, திரும்பியவன்...

"கதிர்... ஸ்ட்ரப்படொ மெத்தட் பனிஷ்மென்ட்னா [strappado method punishment] என்னன்னு தெரியுமா?" என்க,

கதிர் தெரியாது என்பது போல் தலை அசைக்க...

"தெரிஞ்சுக்கங்க" என்று மட்டும் சொன்னவன் வந்த வேகத்தில் வெளியேறினான்....

Likes:umahera, Priayamadhavan, Vasanthisakthivel and 52 others

Jelineusa
JB

Wednesday at 6:01 AM
#72

சிறிது நேரத்திலேயே மருத்துவமனையை அடைந்த அர்ஜூன் திவ்யாவின் அறைக்குள் நுழைய முற்படும் முன்னர் அவள் அறைக்கு வெளியில் அமர்ந்திருந்த மஹாவின் மீது ஒரு கூர்மையான பார்வையை வீசியவன், தன்னைக் கண்டதும் அவள் தலை கவிழவும், ஒன்றும் பேசாமல் அறைக்குள் நுழைய, தன் மனைவி இன்னும் கண் விழிக்காதைக் கண்டவனின் இதயம் தளர்ந்ததில் மனதில் மீண்டும் பயம் படர, அவள் முகத்தைப் பார்த்தவாறே நின்ற தங்கள் மகனின் தவிப்பைக் கண்ட ஸ்ரீ கரிசனத்துடன்...

"அர்ஜூன், சின்னப் பொண்ணுப்பா.... ரொம்ப நேரம் வேற வலில கஷ்டப்பட்டுட்டா... இன்னும் கொஞ்ச நேரத்தில் கண் திறந்திடுவா... வா... வெளியில் வந்து

உட்கார்" என்றார்...

அவருக்கு இன்னும் கோகுலைப் பற்றியோ, அல்லது மஹா தங்களிடம் மறைத்திருந்த விஷயங்களைப் பற்றியோ தெரியாது... அருணும் அவரிடம் அதனைப் பற்றிப் பேசியிருக்கவில்லை...

ஸ்ரீயின் குரலில் அவரைத் திரும்பி பார்த்தவனின் கண்களில் தெரிந்த வலியை கண்டவரின் மனமும் பதைபதைக்க, அவன் கரத்தை பற்றி அறைக்கு வெளியே அழைத்து வந்தவர் அவனை வெளியில் போடப்பட்டிருந்த சேரில் அமரச் செய்ய, திவ்யா கண் விழிப்பதற்காகக் காத்திருந்தவனிற்கு நேரம் செல்ல செல்ல அவள் இன்னும் சுயநினைவிற்கு வராமல் இருப்பதைப் பார்த்தவனுக்குக் கலக்கம் அதிகரித்தது...

அவன் மனதிற்குள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் திகிலும், ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் பயங்கற சிந்தனைகளும், அவனின் இதயத்தைச் சுக்கு நூறாக உடைத்தெரிய, மனதிற்குள் அன்று...

"நான் எப்ப்ப்ப்ப்பவும் உங்களோடே இருப்பேன்" என்று திவ்யா சொன்ன வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருக்க,

"ப்ளீஸ் டி... திரும்ப வந்துறுடி... எனக்கு நீ வேணும்... ஐ மிஸ் யூ டி திவி.... " என்று உள்ளத்திற்குள் ஆயிரமாவது தடவையாகச் சொல்லிக் கொண்டிருந்தாலும் தனது உணர்வுகளை வெளிக்காட்டப் பிடிக்காமல், தலையைத் தனது வலது கரத்தால் தாங்கி, விழிகளை மூடி அவன் குனிந்து அமர்ந்திருந்த தோற்றம் அவன் எவ்வளவு மன உளைச்சலிலும் கலக்கத்திலும் இருக்கிறான் என்பதை அங்குக் கூடியிருந்த அனைவருக்கும் உணர வைத்தது...

எப்பொழுதும் கம்பீரமாக, இரும்பு மனதுடனும், அதிகாரத்துடனும், ஆளுமையுடனும் இருக்கும் தங்கள் மருமகனின் இப்பொழுதைய தோற்றத்தில் மனம் கலங்கி வேதனையுற்ற கலா, அவன் அருகில் நெருங்க அஞ்சினாலும், இருந்தும் தன் மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் அவனுக்கு ஆறுதல் அளிக்கும் நோக்கத்துடன் சன்னமான குரலில்...

"சீக்கிரத்தில் கண்ணு முழிச்சிடுவா மாப்பிள்ள... நீங்க பயப்படாதீங்க... நிச்சயம் அவளுக்கு எதுவும் ஆகாது... " என்றார்...

அவரின் குரலில் நிமிர்ந்து பார்த்தவன் வலி கலந்த ஒரு சிறு புன்னகையை மட்டும் உதிர்த்து விட்டு மீண்டும் தலையைத் தனது கரத்தால் தாங்கியவறே குனிய, அதற்கு மேல் அவனுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று அவருக்குப் புரியவில்லை...

அதே நேரம் திவ்யாவின் அறையில் இருந்து வெளியே வந்த நர்ஸ்,

"சார்... உங்க வைஃப் கண்ணு முழிச்சிட்டாங்க... நீங்..." என்று சொல்லி முடிப்பதற்குள் வெடுக்கென்று நிமிர்ந்தவன் எழுந்த வேகத்தில் தன் அருகில் நின்று இருந்த தன் மாமியாரைக் கிட்டத்தட்டத் தள்ளி விடுவான் போல் அவருக்குத் தோன்றியதில் சட்டென்று அவனுக்கு வழிவிட்டு நகரவும், மின்னல் வேகத்தில் தன் மனைவியின் அறைக்குள் நுழைந்தவனைப் பார்த்த ஸ்ரீக்கும் கலாவிற்குமே விழிகளில் நீர் கோர்த்தது...

அவன் தன் அலுவலகத்தில் இருந்து வந்ததில் இருந்து தன் குழந்தையைக் கூடப் பார்க்கவில்லை... திவ்யா இன்னும் கண் விழிக்கவில்லை என்பதை அறிந்ததும் இடிந்து போய் அமர்ந்தவன் தான்... அதற்குப் பின் அவனிடம் எந்த ஒரு அசைவும் இல்லை... அதில் இருந்தே அனைவருக்கும் தெரிந்து போனது அவன் தன் மனைவியின் நிலை எண்ணி எவ்வளவு உடைந்திருக்கிறான் என்று...

வேகமாக அறைக்குள் நுழைந்தவன் கட்டிலில் தொய்ந்துப் போய், பிய்த்துப் போட்ட நாறைப் போன்று களைந்துக் கிடந்த மனைவியைப் பார்த்தவனின் உள்ளம், ஆர்ப்பரிக்கும் அருவிப் போன்று

பேரிரைச்சலோடு அலறிக் கொண்டு இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவளின் அருகில் சென்று மௌனமாக நிற்க, பிள்ளைப் பேறு அசதியில் உடல் முழுவதும் அடித்துப் போட்டது போன்று ஒவ்வொரு பாகமும் வலித்துக் கொண்டிருக்க, இன்னமும் கண் மூடிப் படுத்திருந்தவள் தன் கணவன் அழைக்காமலே அவன் வந்ததை உணர்ந்து மெல்ல கண் விழித்தாள்...

நேற்று மாலை ஏழு மணி அளவில் நிறைமாதக் கர்ப்பிணியான தன் மனைவி கடத்தப்பட்டதை அறிந்த அந்த நிமிடத்தில் இருந்து, கிட்டத்தட்ட பதினொரு மணி நேரங்கள், ஒரு கணவனாய் தவியாய் தவித்து, நரகத்தில் இருப்பது போல உள்ளம் கலங்கி, இதயமே வெடித்துவிடும் அளவிற்குத் திக்பிரமையின் வசப்பட்டு, துடித்திருந்தவனின் அலைமோதிக் கொண்டு இருக்கும் மனம் இளைப்பாறும் வகையில், விழிகளைத் திறக்க முடியாமல் திறந்து தன்னைப் பார்த்த தன் மனையாளைக் கண்ட அர்ஜூனின் உள்ளத்தில், உணர்வுகளின் பிடியில் சிக்கியிருந்தவனின் இதயத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் உணர்ச்சிகளை வார்த்தைகளில் வடிக்க இயலாது...

தன் அருகே மௌனமாக, தன் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருக்கும் கணவனைக் கண்டவள் தன்னருகில் வருமாறு தலை அசைக்க, கட்டிலில் அவளுக்கு அருகில் அமர்ந்தவனின் கண்களில் முதன் முறையாக அந்த வித்தியாசத்தை

உணர்ந்தவளின் உடலும் உள்ளமும் அதிர, நீர் திரையிட்டு இருந்த அவன் விழிகளைக் கூர்ந்துப் பார்த்தவள் பதறித் துடித்து...

"ம்ப்ச்... என்னங்க இது??" என்றவாறே விழி நீரைத் துடைத்து விட்டாள்...

தன் கண்களைத் துடைத்த அவளின் பஞ்சுக் கரத்தை தனது கரத்தால் அழுந்த பற்றியவன்....

"என்னைய ரொம்பப் பயமுறுத்திட்டடி... செத்து பிழைச்சுட்டேண்டி" என்று மென்மையாக முத்தமிட்டவாறே கூற...

அவன் கண்ணீரை இன்னமும் தன் கரத்தில் உணர்ந்து பதறியவள் துடிதுடித்துப் போய்...

"ஐயோ! என்னங்க..." என்றவள் மீண்டும் அவன் விழி நீரைத் துடைக்கத் தன் கரத்தை அவன் முகத்தை நோக்கிக் கொண்டு செல்ல,

அவளை மென்மையாக இழுத்து தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டான்.....

கட்டாந்தரையில் தன்னந்தனியாக வலியில் கதறித் துடித்துக் கொண்டு இருந்த அவளைத் தன் கண்களில் கண்ட அந்த விநாடியே செத்துப் பிழைத்தவன்… பிள்ளை பேரின் பொழுது அவள் துடித்துக் கதறிய கதறலில் தானும் அவள் வலியை அனுபவித்துத் தவித்து இருந்தாலும், தன் குழந்தையைத் தன் கரங்களில் ஏந்தும் வரை, தன்னவளுக்காக, தன் அச்சத்தை, தவிப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தனக்குள் அடக்கி வைத்திருந்தவன்..

இப்பொழுது கண் விழித்துத் தன் நெஞ்சம் சாய்ந்திருக்கும் தன் மனையாளை இறுக்கி அணைத்து கொண்டவன் ஆழ்ந்து அனுபவித்தான் அந்த நிம்மதியை…

கணவனின் மார்பில், அவனின் இறுக்கிய அணைப்பில் ஆழ்ந்து அவன் வாசனையைத் தனக்குள் வாங்கிக் கொண்டிருந்தவளின் தாய்மை சட்டென்று விழித்துக்கொள்ள, அவன் முகம் நோக்கி அண்ணாந்துப் பார்த்தவள் "குழந்தை" என்று சொல்ல, மெல்லிய புன்முறுவல் சிந்தியவன், அறைக்கு வெளியில் கணவன் மனைவி இருவருக்கும் தனிமை கொடுத்து நின்று இருந்த ஸ்ரீயிடம் இருந்து தங்களது குழந்தையை வாங்கிச் சென்றவனின் முகத்தில் படர்ந்திருந்த அமைதியில் ஒரு அன்னையாக ஸ்ரீயின் மனமும் சிலிர்த்தது….

ஒரு கையால் தங்களின் குட்டிச் செல்வத்தைப் ஏந்தியவன், மறு கையால் தன் மனைவி மெல்ல எழ உதவி செய்தவன், அவளை நன்கு வசதியாக அமரச் செய்து குழந்தையை அவளிடம் கொடுக்க, எவ்வளவு வலி, எவ்வளவு வேதனை, எத்தனை போராட்டம், எத்தகைய திகில்...

அத்தனையும் சடுதியில் மறைந்து போனது போல் இருந்தது திவ்யாவிற்குத் தங்களது அழகிய மகவை, தங்களின் காதலுக்கு, இனிமையான நேசத்தில் மூழ்கியிருந்த தாம்பத்தியத்திற்குச் சாட்சியாகக் கிடைத்த பொக்கிஷத்தை, தங்களின் வாரிசை தன் கரங்கில் ஏந்திய பொழுது...

விழிகளில் நீர் தளும்பி நிற்க, ஒரு அன்னையாகத் தனது குழந்தையை முதல் முறை ஏந்தும் பொழுது ஏற்படும் கிளர்ச்சியில் தத்தளித்தவளின் உடல் முழுவதும் மகிழ்ச்சியின் சிலிர்ப்பு படர, குழந்தையின் நெற்றி, பட்டுக் கன்னங்கள் என்று மென்மையாக முத்தமிட்டவளைப் பார்த்திருந்தவன், அவளின் தலைக் கோத, கணவனை நிமிர்ந்துப் பார்த்தவளின் பார்வையில் இருந்தது என்ன?

எங்கிருந்தோ வந்து, மனம் முழுவதும் வெறுப்புடன் மாங்கல்யத்தை அணிவித்து, பின் இதயம் முழுவதும் நிறைந்திருந்த தன் காதலால் பெண்ணவளைத் திக்குமுக்காடச் செய்து, காதலை மட்டும் கொடுப்பது

திருமணம் அல்ல, காதலோடு சேர்ந்து என் உயிர் இருக்கும் வரை, என் உயிரையும், உணர்வுகளையும் உனக்குக் கொடுப்பேன் என்பது போல் தன் உயிரோடு கலந்து, விதியின் வசத்தால் ஒரு கொடூரமானவனால் தன்னவள் கடத்தப்பட்டிருந்த நேரத்திலும், தன்னை நிலைப்படுத்தி, தன் மனதில் இருந்த கலக்கத்தை ஒதுக்கி வைத்து, தனது உயிரில் உருவான தனது மகவை இந்தப் பூவுலகத்திற்குக் கொண்டு வந்த கணவனை என் சொல்வது?

அவளின் பார்வையில் வழக்கம் போல் மதி மயங்கியவன்...

"என்னடி அப்படிப் பார்க்குற?" என்க...

அர்ஜூனின் கேள்விக்கு ஒன்றும் இல்லை என்பது போல் தலை அசைத்தவளை மீண்டும் தன் நெஞ்சோடு அணைத்துக் கொள்ள, அது வரை வெளியில் திவ்யாவைப் பார்ப்பதற்குத் தவியாய் தவித்துக் கொண்டிருந்த கலா, மெல்ல அறையின் கதவைத் தட்ட...

"வாங்க" என்று மட்டும் சொன்னவன் அவர்கள் அனைவரும் உள்ளே நுழைந்தும் தன்னவளை விட்டு விலகினான் இல்லை....

உள்ளே வந்த மஹா கலங்கி தவித்துப் போய் விழிகள் கலங்க, உதடுகள் துடிக்க மன்னிப்பு இறைஞ்சுவது போல் அர்ஜூனைப் பார்த்திருக்க...

"வா" என்பது போல் தலை அசைத்தவனைக் கண்டவள் வேகமாக ஓடிப் போய்ச் சிறு பிள்ளைப் போல் அவன் அருகில் ஒண்டி நிற்க, தன் வலது கரத்தால் அவளைத் தன்னருகில் இழுத்துக் கொண்டவனின் செய்கையில் மனதிற்குள் கதறித் துடித்து மன்னிப்பு இறைஞ்சினாள் அந்தச் சின்னப் பெண்....

"திவ்யா... எப்படிடா இருக்க?" என்ற ஸ்ரீயின் கேள்வியில் மாமியாரைத் திரும்பிப் பார்த்த திவ்யா இதழ் பிரித்து மெல்ல சிரிக்க,

அண்ணனின் செய்கையில், தன்னை மன்னித்துவிட்டார் என்ற திருப்தியில், பழைய மஹாவாக மாறியவள்....

"அண்ணி, குழந்தை அப்படியே அண்ணாவ உரிச்சு வச்சிருக்கான்... ஏற்கனவே ஒரு அர்ஜூன் எங்கள எல்லாம் பயமுறுத்துவது பத்தாது... இப்பொ இன்னொரு அர்ஜூன் வேறயா?" என்று கூற, அந்த அறை முழுவதுமே மகிழ்ச்சியில், பூரிப்பில், சந்தோசத்தில் திளைத்து இருந்தது...

ஒவ்வொருவர் உள்ளத்தில் ஒவ்வொரு விதமான உணர்வுகள்...

திவ்யாவிற்கு அந்த அசதியிலும், தன் கணவனின் அணைப்பில் நிம்மதியும், தனது கரங்களில் ஏந்தியிருக்கும் தனது குழந்தையின் ஸ்பரிசத்தில் பூரிப்பும் இருந்ததென்றால், மஹாவிற்குத் தன் அண்ணன் தன்னை ஏற்றுக் கொண்டான் என்ற நிம்மதியும், தன்னவளின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியில், நிம்மதியில் வினோத்தின் மனமும் நிறைந்திருக்க, தன் அண்ணனோடு சேர்ந்து போர் களத்தில் போரிட்டு வெற்றி வாகை சூடியிருந்த தம்பியின் மனநிலையில் அருணும், பெரியவர்களின் மனதில் தங்களின் பிள்ளைகள் நால்வரும் சேர்ந்து தாயின் உயிரையும் சேயின் உயிரையும் காத்திருந்ததில் கர்வமும் தோன்ற, அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுதே அலறியது அர்ஜூனின் அலை பேசி...

மனைவியை விடாமல் இறுக்கி அணைத்து தன் கைவளைவிற்குள்ளே வைத்திருந்தவன் அலை பேசியை எடுத்து அதில் ஒளிர்ந்த எண்ணைப் பார்க்க, பார்த்தவனின் முகத்தில் இது வரை இருந்த சுணக்கமும், மகிழ்ச்சியும், நிம்மதியும் ஒரே நொடியில் மறைந்து வேறு உணர்வுகள் ஆக்கிரமித்துக் கொள்ளத் துவங்கிய அந்த விநாடியே தன் உணர்ச்சிகளை

முகத்தில் இருந்து துடைத்தெறிந்து எழுந்தவன் மெல்ல வெளியே வந்தான்....

"யெஸ் கதிர்"

"சார்... கோகுலை நம்ம கோடௌனிற்கு கொண்டு வந்திட்டோம்"

மலரினும் மெல்லியவள்!

தொடரும்!

Likes:umahera, Priayamadhavan, ManjuKarthik and 92 others

Jelineusa

JB

Saturday at 8:30 PM

#73

Likes:Sabeetha, Shanmugapriya, Aurushya and 31 others

Jelineusa

Saturday at 8:35 PM
#74

மலரினும் மெல்லியவள்!

பாகம் - 35

கதிரின் கூற்றில் அர்ஜூனின் கண்களில் சரேலெனத் தோன்றி உறைந்த குரோதம், சற்று முன் தன் மனையாள் தங்களது குழந்தையை அவள் கரங்களில் ஏந்தியவாறு தனது அணைப்பில் கட்டுண்டு கிடந்த பொழுது அவனது முகத்தில் படிந்திருந்த மென்மையையும், இதழ்களில் தவழ்ந்திருந்த புன்சிரிப்பையும் சடுதியில் துடைத்தெறிய,

ஆனால் தனது எண்ணங்களில் ஊர்ந்து கொண்டிருந்த கொடூரத்தையும், தனது உணர்ச்சிகளை அள்ளி சிதறடித்துக் கொண்டிருந்த வஞ்சகத்தையும் கவனமாகத் தனது முகத்தில் கொண்டு வராமல் சலனமில்லாத குரலில்...

"ஒகே.... கதிர்... ஆஸ் ஐ செட் [As i said] அவனை யாரும் டச் பண்ணாதீங்க... எனக்கு அவன் முழுசா வேணும்...." என்றவன் மீண்டும் திவ்யாவின் அறைக்குள் நுழைந்தான்...

அங்குப் பிரசவத்தின் வலியால் ஏற்பட்டிருந்த அசதியாலும், இரத்தப் போக்கினாலும் முகம் களைத்து, உதடுகளும் சற்று வெளுத்துப் போய், ஆயாசத்துடன் அமர்ந்திருந்தாலும், தனது அழகிய மகவை கரங்களில் சுமந்திருந்ததால் மகிழ்ச்சியும், மிதமிதஞ்சிய பெருமையும் ததும்பி வழிந்திருந்ததில் தாய்மையின் பூரிப்பு இணையற்றது என்பது போல் தன்னை அயர வைத்த தன் மனையாளை ரசித்துப் பார்த்திருந்தவன்...

"திவி... எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு... நான் சீக்கிரம் வந்திடுறேன்" என்று திடுதிடுப்பென்று சொல்ல...

அவனைச் சட்டென்று நிமிர்ந்துப் பார்த்த திவ்யாவிற்கு அவனின் முகபாவத்தில் இருந்து எதனையும் கண்டு பிடிக்க முடியாவிட்டாலும், மரணத்தின் வாயில் வரை சென்று, விவரிக்க இயலாத துன்பங்களையும், வலியையும் அனுபவித்து இப்பொழுது தான், தான் கண் விழித்தது தெரிந்திருந்தும், இந்த நிமிடம் கணவனுடனான தனிமையை, அவனின் அரவணைப்பை, அவன் ஸ்பரிசத்தின் சுகத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவளின் தவிப்பு புரிந்தும், தன்னருகில் இருக்காமல் தன்னை விட்டு அவசர வேலையாகச் செல்லும் கணவனின் விபரீத சிந்தனைகள் புரிந்திருந்திருந்ததால், விழிகளில் சட்டென்று அவளையும் அறியாமல் நீர் கோர்த்துக் கொண்டது...

தன் மனையாளின் மனதில் ஓடிக் கொண்டிருந்த எண்ணங்களை அவன் உணர்ந்திருந்தாலும், தனது முகத்தில் கனிவை வெளிக்கொணறாமல் அவனின் அடி மனதில் வியாபித்து இருந்த பழிவாங்கும் உணர்ச்சிகளில் கட்டுண்டு வன்மத்தை மட்டுமே இந்த நிமிடம் சிந்தித்துக் கொண்டிருந்தவன், தன்னைச் சுற்றி இருப்பவர்களைப் பற்றிக் கவலைக் கொள்ளாமல் அவளின் அருகில் வந்து அவளின் தலையைத் தடவியவன்...

"திவி... ஐ ஹாவ் டு கோ நௌ [I have to go now].... கொஞ்ச நேரத்திலேயே வந்துடுறேன்" என்று மட்டும் சொன்னவன் குனிந்து தனது மகவின் நெற்றியில் முத்தமிட்டு திரும்ப,

தனது அதிகாரம், அந்தஸ்து, ஆளுமை அனைத்தையும் பற்றித் தெரிந்திருந்தும் தன்னை எதிர்த்தவனை, தன்னவளை தன் கண்கள் எதிரிலேயே துடிதுடிக்க வைத்திருந்தவனை, தனது செல்ல தங்கையின் மீதே கை வைக்கத் துணிந்தவனை, தனக்குப் பயம் என்றால் என்ன என்று ஒரு சில மணி நேரங்களாவது காட்டியிருந்திருந்தவனை, சூரசம்ஹாரம் செய்யச் செல்கிறான் என்று புரிந்திருந்த அனைவரும் அவனுக்கு வழி விட்டு விலக,

தனது இறையை வேட்டையாடும் வேகத்துடன் விருட்டென்று வெளியேறினான் அர்ஜூன்.

அடுத்து சில மணித் துளிகளிலேயே தங்களது கோடௌனிற்குச் சென்றவன், தனக்காக அங்குக் கதிர் காத்திருக்கவும், அவனை நோக்கி நடக்க, அர்ஜூனைக் கண்டதும் வேகமாக நடந்து வந்த கதிர்...

"சார்... மேடம் எப்படி இருக்காங்க?" என்க...

"ஷி இஸ் ஃபைன் கதிர் [She is fine Kathir] " என்று மட்டும் சொன்னவன் தான் வந்த காரியத்தில் மட்டும் தான் தனது குறிக்கோள் என்பது போல் அத்துடன் தனது தனிப்பட்ட விஷயங்களைப் பேச விரும்பாமல்...

"கதிர்.... அவனைப் பிடிக்கிறதுல எந்தப் பிரச்சனையும் இல்லையே?" என்றான்...

"நீங்க சொன்ன மாதிரி எல்லாச் சைடும் ப்ளாக் பண்ணியிருந்ததுனால அவனால எங்கேயும் போக முடியலை சார்" என்ற கதிர், நேற்று இரவு தனது தங்கையும், மனைவியும் கடத்தப்பட்டதில் இருந்து

அவர்களைக் காப்பாற்றும் வரை, அச்சம், சீற்றம், தவிப்பு, கொந்தளிப்பு, வேதனை என்று பல வகை உணர்வுகளில் சிக்கியிருந்தாலும் தன் எதிராளியைப் பிடிக்க அந்தச் சொற்ப நேரத்திலும் இவ்வளவு நேர்த்தியாகப் பல முனைகளையும் அலசி ஆராய்ந்துப் பார்த்துத் திட்டம் போட்டிருந்த அர்ஜூனை நினைத்துப் பிரமித்துப் போனான்...

இருவரும் கோடௌனிற்குள் செல்ல முனைய, சட்டென்று அர்ஜூனைத் திரும்பிப் பார்த்த கதிர்...

"சார்... சர்ப்ரைஸிங்க்லி [Surprisingly] அவன் கண்ணுல கொஞ்சம் கூடப் பயம் தெரியலை சார்" என்க,

கதிரைப் பார்த்து இளம் முறுவலித்த அர்ஜூன்...

"தெரியவச்சுருவோம்...." என்று மட்டும் சொன்னவன் உள்ளே நுழைய,

அங்குச் சேரில் அமர்த்தப்பட்டுக் கைகள் இரண்டையும் பின்னுக்கு இழுத்துக் கட்டப்பட்டிருந்த நிலையிலும், ஒய்யாரமாகச் சேரில் சாய்ந்தவாறே அமர்ந்திருந்த கோகுலைக் கண்ட அர்ஜூனின் முகத்தில் சடுதியில் தோன்றி மறைந்த உணர்ச்சிகளை மட்டும் பார்த்திருந்தால், கோகுல், தனது தலைவிதி இன்றோடு

மாற்றப்படப் போகிறது என்பது அறிந்து நிச்சயம் அந்த நிமிடமே கதிகலங்கிப் போயிருப்பான்…

வழக்கம் போல் தனது முக உணர்வுகளை மறைத்த அர்ஜூன் நிதானமாக நடந்து கோகுலிடம் செல்ல, அவனை முந்திச் சென்ற கதிர், கோகுலிற்கு எதிரில் அர்ஜூன் அமர்வதற்கு ஏதுவாகச் சேரை இழுத்துப் போட, சத்தமில்லாமல், வார்த்தைகள் ஒன்றையும் உதிர்க்காமல் தன் எதிரே வந்து நின்ற அர்ஜூனை நிமிர்ந்துப் பார்த்த கோகுலிற்கு அன்று மஹாவை அர்ஜூன் கல்லூரிக்கு வந்து அழைத்துச் சென்ற நாள் ஞாபகத்தில் வந்தது…

அன்று காரில் அமர்ந்திருந்தவாறே காரின் கதவை மட்டும் திறந்து மஹாவை ஏற்றிக் கொள்ள, அர்ஜூனின் முகத்தை மட்டுமே பார்த்து அசந்திருந்த கோகுல், அதற்குப் பிறகு அர்ஜூனின் செல்வாக்கும், அதிகாரமும், ஆளுமையும் தெரிந்து அவனைப் பற்றி விசாரித்து அவன் புகைப்படங்களையும் பார்த்திருந்தாலும், நேரில் ஆறடி மூன்று அங்குலத்திற்கு நெடு நெடுவென உயரமாக, தினந்தோறும் நாள் தவறாமல் செய்த உடற்பயிற்சியால் தன் உயரத்திற்கு ஏற்ற முறுக்கேறிய உடல்வாகுடன், ஆண்மையின் சுயரூபமாக நின்றிருந்தவனை விழி விரிய, இமைகள் மூடாமல் பார்த்திருக்க,

முகத்தில் சிறு கீற்று போல் ஒரு புன்னகையுடன் கோகுலையும், அவன் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்த விதத்தையும் கண்ட அர்ஜூன்...

"கோகுலுக்குப் பொண்ணுங்கள மட்டும் தான் பிடிக்கும் நினைச்சேன்... பசங்களையும் பிடிக்கும் போல" என்றான் நக்கலாக.

அவனின் கேள்வியின் அர்த்தம் புரிந்த கோகுல், இருந்தும் தன் கிண்டலை விடாமல் உதடுகள் பிரித்துச் சிரித்தவாறே...

"உங்க வீட்டில் பொண்ணுங்க மட்டும் தான் அழகா இருக்காங்கன்னு நினைச்சேன்.... உங்க வைஃப்பையும் சேர்த்து தான் சொல்றேன்... பட் பரவாயில்லை நீங்க கூட அழகாதான் இருக்கீங்க!" என்க,

கடத்திவரப்பட்டு, கைகள் கட்டப்பட்டிருக்கும் இந்த நிலையிலும் திவ்யாவைப் பற்றி அவனது நக்கல் பேச்சையும், அதில் தொனித்த இகழ்ச்சியையும் கண்ட அர்ஜூனின் உள்ளூர உணர்வுகள் ஆக்ரோஷமாக மேலெழும்பி வர திமிறினாலும், அந்த நொடியே கோகுலை அணுஅணுவாகச் சிதைத்து உருக்குலைக்கத் துடித்திருந்தாலும், மாறாக அகத்திலிருந்த உணர்ச்சிகளைப் புறத்திற்குக் கொண்டு

வராமல், எதிர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்துபவன் போல் வாய்விட்டு சிரித்தவாறே அவன் எதிரில் போடப்பட்டிருந்த சேரில் தன் கால்களை நீட்டி, கரங்கள் இரண்டையும் தன் தலைக்குப் பின் கோர்த்து, சாவகாசமாக அமர்ந்தான் அர்ஜூன்....

தொழிற்கள் சம்பந்தப்பட்ட மீட்டிங்களுக்கோ, அல்லது அரசியல் சம்பந்தமான கூட்டங்களுக்கோ அல்லது தனிப்பட்ட பார்டிகளுக்கோ சென்றால், கால் மேல் கால் போட்டு அர்ஜூன் அமரும் தோரணையே அத்தனை அம்சமாகவும், கம்பீரமாகவும் இருக்கும்.

அவன் வந்து அமர்ந்ததுமே எதிரில் அமர்ந்திருப்போர் தங்களையும் அறியாமல் தாங்கள் அமர்ந்திருக்கும் விதத்தை மாற்றி, பவ்யமாக, எந்தச் சலனமும் இல்லாமல், அசைவற்று அமர்வார்கள்...

ஆனால் அவன் இவ்வாறு கால்களை நீட்டி, கரங்களைத் தன் தலைக்குப் பின் கோர்த்து, முகத்தில் எந்நேரமும் புன்னகையைத் தவழவிட்டு அமர்ந்தால், அர்ஜூனின் மனதில் ஓடிக் கொண்டிருக்கும் சிந்தனைகளும், அவன் மூளையில் அலைப் பாய்ந்து கொண்டிருக்கும் திட்டங்களும், அவன் அதனை வெளிப்படுத்தும் பொழுது விளையும் விபரீதங்களும் கதிருக்கு மட்டுமே தெரியும்....

தன் MD யின் முகப் பாவனை, சிரிப்பு, ஆசுவாசமாகச் சாய்ந்து அமர்ந்திருக்கும் அவன் தோரணை என்று ஒவ்வொன்றையும் ஆழ்ந்து பார்த்திருந்த கதிரை நிமிர்ந்துப் பார்த்த அர்ஜூனிற்குக் கதிரின் மனதில் அலைப்புறும் எண்ணங்கள் புரிய, மேலும் இதழ் விரித்து அழகாகச் சிரித்தவன்...

"கதிர்... ஐ நோ வாட்ஸ் கோயிங் ஆன் இன் யுவர் மைண்ட் [Kathir... I know what's going on your mind]... செஸ்ஸில் [Chess] லாஸ்ட் ரூல் [last rule] என்னன்னு தெரியுமா?" என்க,

அர்ஜூனின் புன் சிரிப்போடு தனது முறுவலையும் கலக்கவிட்ட கதிர்...

"எஞ்சாய் யுவர் செல்ஃப்...[Enjoy yourself] " என்றான்....

"யெஸ்... ஐ டு எஞ்சாய் திஸ் மொமெண்ட் [Yes, i do enjoy this moment] " என்றவன் மீண்டும் தன் பார்வையைக் கோகுலை நோக்கித் திருப்ப,

அர்ஜூனும் கதிரும் பேசிக் கொண்டிருப்பதே தன்னைப் பற்றித் தான் என்பது புரியாமல் தனது முகத்தில் தைரியத்தையும், அசிரத்தையும் படறவிட்டு தளர்வாக அமர்ந்திருப்பது போல் இருந்தாலும்...

அர்ஜூன் வந்ததில் இருந்து அவன் முகத்தில் தவழவிட்டிருந்த சிரிப்பு, சாய்வாக, ஆசுவாசமாக, அலட்சியமாக அவன் அமர்ந்திருந்த தோரணை, தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் திடீரென்று சதுரங்க ஆட்டத்தைப் பற்றிய பேச்சு என்று கோகுலையும் அறியாமல் அர்ஜூன் அவனின் ஆழ் மனதில் திகிலை விளைவிக்க,

சட்டென்று அவன் கண்களில் மின்னல் போல் தோன்றி மறைந்த அச்சத்தை, கலக்கத்தை, திகிலை சடுதியில் கண்டு கொண்டான் அர்ஜூன்...

ஒருவனுக்கு அவனின் உடலை நோகச் செய்து அதனால் ஏற்படும் வலியின் அவஸ்தையை விட, அடுத்த நிமிடம் தனக்கு என்ன நடக்கப் போகிறதோ என்ற திகைப்பில், மனதின் ஏதோ ஒரு மூலையில் தன்னுடைய வலியை, வேதனையை நினைத்து கலங்கி ஸ்தம்பித்து, இறுதியில் விழிகளில் மரணப் பயத்தைக் கொண்டு வந்து தன்னுடைய விடுதலைக்கு யாசித்து, இறைஞ்சி தவித்து நிற்கும் பொழுது,

அவனை உடல் நோக அடித்தாலும் அவன் வலியால் வாய்விட்டு கதறி அழும் அலறொலியை விட, அவன் உள்ளத்தின் கதறலின் சத்தம், அவன் ஆத்மாவின் கூவல் பேரிரைச்சலாகக் கேட்கும்....

தனது காதல் மனைவியை நிறைமாத கர்ப்பிணி என்று கூடப் பார்க்காமல் அவளைக் கடத்தி, பின் கீழே தரையில் தள்ளி அவள் துடிதுடிப்பதை ரசித்து, ஆதரவற்ற அனாதையாகத் தவிக்க விட்டு சென்றவன் முதன் முதலில் அவள் தனது கெஸ்ட் ஹவுஸிற்குள் நுழைந்த அந்த நிமிடத்தில் அவளின் கண்களில் இதே தவிப்பைத் தானே கண்டிருப்பான்??

தனது விருப்பத்திற்கு இணங்கவில்லை என்ற ஒரே காரணத்தால், ஒரு இளம் பெண்ணைக் கடத்தி, அவளின் கற்பை விலைப் பேசி, இறுதியில் அவளின் கழுத்தில் தாலிக்கட்ட முயற்சித்த நிமிடங்களில் தனது தங்கையின் கண்களிலும் இதே வலியைத் தானே கண்டிருப்பான்...

அந்தப் பயத்தை, அதிர்வை, பீதியை கோகுலின் கண்களில், தான் காண வேண்டும் என்று தான் காத்திருந்தான் அர்ஜூன்...

"திஸ் இஸ் வாட் ஐ வாஸ் எக்ஸ்பெக்டிங் ஃப்ரம் யூ கோகுல்... [This is what i was expecting from you Gokul].... இதத் தான் நான் எதிர்பார்த்தேன்... உன் கண்கள் உன்னையும் அறியாம உன் மனசுக்குள்ள இருக்கிற பயத்தைக் காட்டிக் கொடுத்துடுச்சு.... என் திவி கண்ணுலயும், மஹா கண்ணுலயும் இதே பயத்த தான பார்த்திருப்ப..." என்றவன் கதிரை நோக்கி திரும்பி...

"லெட்ஸ் பிகின் [Let's begin]" என்றான்....

அதுவரை அர்ஜூனின் அழகிய தோற்றத்தைக் கண்டு அவனால் தனக்குப் பெரிய ஆபத்து எதுவும் வராது என்றும், அப்படி என்ன நம்மைச் செய்துவிடப் போகிறான், அதுவும் சினிமாவட்டாரத்திலேயே பெரும் புள்ளி என் அப்பா என்றும், ஒரு குருட்டுத் தைரியத்தில் அமர்ந்திருந்த கோகுலிற்குத் தெரியாது அர்ஜூனின் இன்னொரு முகம்...

கதிர் திரும்பி தலை அசைத்து தன் ஆட்களைத் தன்னருகில் அழைத்தவன் ஏற்கனவே அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரிவாக எடுத்துரைத்திருந்ததால்,

"வாயை ஃபர்ஸ்ட் கட்டிருங்க' என்க,

அவனை நிமிர்ந்தும் பார்க்காமல் கடுகளவும் கூடக் கடுமையோ, சினமோ, அல்லது வஞ்சினமோ இல்லாத தன் மென்மையான பார்வையைக் கோகுலின் மீதே வீசியிருந்த அர்ஜூன்....

"நோ... அவன் கதறலை நான் கேட்கனும்..." என்றவன்

மேலும் புன்னகை பூக்க,

கதிரையும், அவர்களின் அடியாட்களையும் கண்களில் மரணப் பயத்தைத் தேக்கி கலங்கிப் போய்ப் பார்த்திருந்த கோகுல் அர்ஜூனின் பேச்சில் சட்டென்று அவனைத் திரும்பி பார்க்க,

மென்னகை மாறாமல் அதே தோரணையில் அமர்ந்திருந்த அர்ஜூனைக் கண்டு, கண்களில் சீற்றத்தைக் வெளிப்படுத்தாமல், இதழ்களில் முறுவலைப் படரவிட்டு, புறத்தில் சிரிப்பது போன்று தெரிந்திருந்தாலும், மரணத்திற்கு ஏதுவான தண்டனையைப் பிறப்பிக்கும் கொடூர உள்ளத்தைக் கொண்டிருந்தவனைக் வாழ்க்கையில் முதல் முறையாகக் கண்டதினால் கோகுலின் அடி வயிறு கலங்கியதில், இதயத்தில் பெரும் பீதி பரவியதில், உடலில் உள்ள ஒவ்வொரு நரம்பிலும் திகில் படரத் துவங்கியது....

அர்ஜூனின் ஆட்கள் கோகுலை நெருங்கவும்...

"அர்ஜூன் வேண்டாம்... எங்க அப்பாவுக்கு மட்டும் இது தெரிஞ்சுச்சுனா அடுத்த நிமிஷத்தில நீ இந்த உலகத்தில இருக்க மாட்ட" என்று மிரட்ட...

அவனின் காட்டுக் கத்தலிற்கு எந்தப் பதிலும் கூறாமல் கதிரைத் திரும்பிப் பார்த்த அர்ஜூன் "துவங்கு" என்பது போல் தலை அசைக்க,

இருபது வயதே ஆன ஒரு சின்னப் பெண், குழந்தையைத் தன் வயிற்றில் சுமந்திருக்கிறாள் என்று கூடப் பாராமல், அவளின் அழகை அறுவறுக்கத்தக்க வகையில் வர்ணித்து, அவளைப் பிடித்து இரக்கமில்லாத அரக்கன் போல் கொடூரமாகக் கீழே தள்ளி, பிரசவ வேதனையில் யாருமற்ற அனாதையாய் தன்னந்தனியாய் பல மணி நேரங்கள் உயிர் போகும் வலியில் கதறித் துடிதுடிக்க வைத்து, பின் மருத்துவமனை இல்லாத இடத்தில் குழந்தையையும் ஈன்ற வைத்திருந்த கோகுலின் தண்டனை துவங்கியது.....

Likes:Priayamadhavan, bhuvana, Vasanthisakthivel and 19 others

Jelineusa
JB

Saturday at 8:36 PM
#75

ஸ்ட்ராப்படொ **[Strappado medieval punishment]** என்பது தவறு செய்பவர்களுக்கு இடைக்காலத்தில் கொடுக்கப்பட்ட தண்டனைகளில் ஒரு வகை... தவறு செய்தவரின் கைகள் இரண்டும் அவர்களின் பின் கட்டப்பட்டு, பின் தலைக்கு மேலே முதுகு வழியாகவே தூக்கப் பட்டு, அவர்களின் மணிக்கட்டுகளோடு இணைக்கப்பட்ட ஒரு கயிறு மூலம் கட்டி தொங்கவிடப்பட, இதில் அவர்களின் தோள்பட்டை நெகிழ்ந்து இடம் பிரண்டு இதற்கு மரணமே தேவலாம்

என்பது போல் உயிரின் வேர் வரை சுண்டி இழுக்கும் அளவிற்கு வலி இருக்குமாம்...

ஏற்கனவே வேதனையில், துன்பத்தில், நோவில் துடிதுடித்துக் கொண்டிருப்பவர்களின் வலியை அசுர வேகத்தில் அதிகரிக்க, கனமான பொருளை (இரும்போ அல்லது கல்லோ) காலில் கட்டினால், அவர்களின் கனத்திற்கு ஏற்ப உடல் கீழ் நோக்கி இழுக்கப் படும் போது உயிர் போகும் வலியில் துடிப்பதற்குப் பதில், அந்த நிமிடமே தன் உயிரை மாய்த்துக்கொள்ள முடியாதா என்பது போன்ற வேதனையும் தோன்றுமாம்....

கோகுலிற்கு இந்தத் தண்டனையைத் தேர்ந்தெடுத்துத் தன்னிடம் அர்ஜூன் தெரியப்படுத்திய அந்த நிமிடமே அதன் ஏற்பாட்டைக் கவனிக்கத் துவங்கியிருந்த கதிர் தனது ஆட்களிடமும் விரிவாக விளக்கியிருக்க, கோகுலின் தண்டனை துவங்க, அப்பொழுதும், அந்த நிமிடமும் தான் அமர்ந்திருந்த சேரில் இருந்த எழுந்தான் இல்லை அர்ஜூன்...

அதே போல் சாவகசமாகக் கால் நீட்டி அமர்ந்திருந்தவன் கோகுலின் விழிகளில் தெரிந்த மரணப் பயத்தைக் கண்டோ, அல்லது அவனின் அடிவயிற்றில் இருந்த எழுந்த அலறொலியைக் கண்டோ, தனது முகத்தில் எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல், சிரித்திருந்த உதடுகளை

இறுக்கமாக வைத்திருந்தவனின் கண்கள் கூட உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருந்த சினத்தின் சீற்றத்தையோ, பழிவாங்கும் வன்மத்தையோ, உள்ளத்திற்குள் துடித்துக் கொண்டிருந்த குரோதத்தையோ எள்ளளவும் வெளிப்படுத்தவில்லை...

கோகுலின் கதறல் சத்தத்தில் தன் உயிரினும் மேலான தன் மனைவியின் பேறுகால நேர கதறல் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைவது போன்று உணர்ந்தவன், ஒரு வழியாகக் கோகுல் அதிகப்பட்ச வலியால் சுயநினைவு இழந்து மயக்கமுறத் துவங்க, தனது சேரில் இருந்து எழுந்தவன்...

"கதிர்... ரொம்ப நேரம் தொங்கவிடாதீங்க... அவன் சாகக் கூடாது..." என்று அழுத்தமான குரலில் கூறியவன், வாயிலை நோக்கி நடக்கச் சில அடிகள் எடுத்து வைத்தவன் மீண்டும் கதிரை நோக்கி திரும்பி...

"இந்த விஷயத்தில் நம்ம பேர் வராம என்ன பண்ணனும்னு தெரியும்ல?" என்றான்...

கதிர்... "யெஸ் சார்... எல்லாத்தையும் பக்காவா பண்ணியாச்சு" எனவும்..

சரி என்பது போல் தலை ஆட்டிய அர்ஜூன் வாயிலை

அடைந்தவன் சற்று நிதானித்து மீண்டும் கதிரை திரும்பிப் பார்க்க...

அர்ஜூன் தன்னை நோக்கி திரும்பியதும் அவனிடம் ஓட்டமும் நடையுமாகச் சென்ற கதிர் என்ன என்பது போல் பார்த்திருக்க,

கோகுலின் தோற்றத்தை, அவன் கயிற்றில் தொங்கிக் கொண்டிருக்கும் விதத்தை, வலியால் மயக்கமடையும் நேரத்திலும் கதறிக் கொண்டிருக்கும் உருவத்தைத் தனது விழிகளின் வழியாக உள் வாங்கிக் கொண்ட அர்ஜூன்...

"ஸ்பைன்ல [Spine/Spinal cord - vertebrae] தட்டிருங்க கதிர்..." என்றவன் விருட்டென்று வெளியேற....

கதிரின் இதழ்களும் புன்னகையில் விரிந்தது...

தன் MDயின் மனைவிக்குக் கோகுல் செய்திருந்த அநியாயத்திற்கு, கருவுற்றிருக்கும் பெண்ணை மரணத்தின் விளிம்பிற்கே கொண்டு சென்ற அரக்கனிற்கு, அவரின் தங்கையையே கடத்திச் சென்று கற்பழிக்கத் துணிந்தவனிற்கு, இந்தத் தண்டனை போதுமா என்று யோசனையில் இருந்த கதிருக்கு, இப்பொழுது அர்ஜூன் கோகுலின் முதுகெலும்பை

உடைக்கச் சொன்னதே சரியான தீர்ப்பாகப் பட்டது...

இனி வாழ்நாள் முழுவதும் கோகுல் உயிரோடு இருந்தாலும் ஒரு பிணம் தான் என்பது போல் அவனின் கழுத்திற்குக் கீழ் உடலின் எந்தப் பாகமும் உபயோகப்படாத அளவிற்கு, இயற்கையாக மரணிக்கும் வரையில் தன் ஆயுள் முழுவதும் ஒன்றுக்கும் உதவாமல், படுக்கையிலேயே கழிக்க, இந்த வயதிற்குள்ளேயே பல அப்பாவி பெண்களின் கற்பை அழித்து, அவர்களின் இளம் தளிரைப் போன்ற வாழ்க்கையை நாசம் பண்ணி, அவர்களை அருவருக்கத்தக்க வகையில் புகைப்படங்களும், வீடியோவும் எடுத்து மிரட்டி பல முறைப் பாலியல் வன்கொடுமை செய்து, அவர்களின் கண்ணீரில் குளிர்காய்ந்திருந்த கொடூரனிற்கு அன்று, அந்தக் கோடௌனில் அவனின் தவறுகளுக்கு, தண்டனை நிறைவேற்றப்பட்டது...

நேற்றில் இருந்து எத்தனை போராட்டங்கள்! எவ்வளவு தவிப்பு! எவ்வளவு வலி!

ஒரே நாளில் தன் குடும்பத்தினர் அனைவரையும் அச்சம், சீற்றம், வேதனை, வலி என்று எத்தனை வகை உணர்வுகளில் மூழ்கடித்துக் கலங்கடித்து இருந்தவன், வாழ்நாளில் பயம் என்ற ஒரு உணர்வையே அறிந்திராதவனிற்கே பயத்தைக் காட்டிய அயோக்கியனின் அலறல் சத்தம் செவிகளில் கேட்க

கேட்க, மீண்டும் அர்ஜூனின் முகத்தில் ஒரு இளம் முறுவல் படற, காரை சீறிக் கிளப்பியவன் உள்ளத்தில் படிந்திருந்த மரண அவஸ்தையில் இருந்து, இதயம் முழுவதும் கனமான பாரத்தைச் சுமந்திருந்ததைப் போன்ற வேதனையில் இருந்து, ஆழ் மனதில் அலறித் துடித்துக் கொண்டிருந்த ஆங்காரத்தில் இருந்து விடுதலைக் கிடைத்தது போன்று ஒரு மெல்லிய சிலிர்ப்பு தோன்ற, நேரே தன் வீட்டிற்குச் சென்றவன் தன் உடலில், மனதில், புத்தியில் இருந்த சூடு தணியும் வரை குளிர்ந்த நீரில் குளித்தான்...

எவ்வளவு நேரம் ஷவரின் கீழ் நின்றிருந்தானோ, சட்டென்று திவ்யாவின் களைத்த முகமும், பிறந்த அன்றே உலகில் உள்ள அத்தனை எழிலின் உச்சியையும் தொட்டிருந்த தன் குழந்தையின் முகமும் நினைவில் படர, முகத்தில் பூரிப்பினால் முறுவல் தவழ, விரைவாகக் குளித்து முடித்து வெளியில் வந்தவனின் கண்களில் அவன் மனையாளின் அலை பேசிப் பட்டது...

ஈரத் தலையைக் கூடத் துவட்டாமல், அலை பேசியை எடுத்துப் பார்த்தவனிற்கு, தன்னவளுக்கு அந்த அலை பேசியை வாங்கிக் கொடுத்த மழை நாளும், முதன் முறையாகக் கணவன் மனைவி இருவரும் சங்கமித்த நாளிற்கு மறுநாள் தன் அன்னையைச் சந்திக்கச் சென்றவளிடம் அலை பேசியைக் கொடுக்க, அவள் விழி விரித்து வியந்து தன்னையே பார்த்திருந்ததை நினைத்தவனிற்கு, அந்த நிமிடமே தன் மனையாளைக்

காண வேண்டும் என்று உள்ளம் துடிக்க, விறுவிறுவென்று கிளம்பியவன் நேரே மருத்துவமனைக்குத் தன் காரை செலுத்தினான்...

குடும்பத்தினர் அனைவரும் இன்னும் மருத்துவமனையில் திவ்யாவுடனும், குழந்தையுடனுமே இருக்க, மருத்துவமனைக்குள் நுழைந்த அர்ஜூன், திவ்யாவின் அறையை நோக்கி நடக்க, முகத்தில் எந்தச் சலனமும் இல்லாமல், ஒன்றுமே நடவாதது போல் நடந்து வந்து கொண்டிருந்த மகனைக் கண்ட ஸ்ரீயின் கண்களில் தெரிந்த பதற்றத்தைக் கண்டு கொள்ளாமல் தன் மனைவியின் அறைக்குள் நுழைந்தவன் அவளுக்கு அருகில் நின்று தன்னையே பார்த்திருந்த அருணைப் பார்த்துக் கண் சிமிட்டியவன், திவ்யாவின் அருகில் அமர்ந்தான்...

குழந்தையை மடியில் ஏந்தியவாறே உள்ளம் முழுவதும் தனது கணவனைக் கண்டதும் "என்ன செய்துட்டு வந்திருக்காரோ?" என்று நினைத்துத் திகில் சூழ்ந்து கலங்கியிருக்க, தன் கணவனின் முகத்தில் இருந்த புன்னகையும், கண்களில் தெரிந்த மென்மையும், அவனை நல்லவனாகக் காட்டியிருந்தாலும், தன் தமையனைப் பார்த்து அவன் கண்சிமிட்டியது சொல்லாமல் சொல்லியது அவன் செய்து முடித்திருந்த காரியத்தை...

அவள் அருகில் அமர்ந்ததும் குழந்தையைத் திவ்யாவிடம் இருந்து வாங்கியவன், தனது கரங்களில் ஏந்த, அவர்களுக்குத் தனிமைக் கொடுக்க நினைத்த கலா ஸ்ரீயைப் பார்த்தவர்,

"ஸ்ரீ... அவங்க எல்லாம் வேணா வீட்டுக்கு போய்ட்டு நாளைக்கு வரட்டுமே? நேத்துல இருந்து யாரும் சாப்பாடு வேறு சாப்பிடலை... மஹாவுக்கும் கொஞ்சம் ரெஸ்ட் தேவை... நாம இரண்டு பேரும் வேனா இங்க திவ்யாவோடு இருக்கலாம்.... எதுக்கு இத்தனை பேரு?" என்றார்...

"சரி" என்றவர் மஹாவையும், வினோத்தையும், அருணையும் பார்த்துக் கண்களில் கனிவோடு,

"நீங்கள் வீட்டுக்கு போங்கப்பா... பாவம் நேத்துச் சாய்ந்தரத்தில் இருந்து எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கீங்க... விடிய விடிய தூங்கலை வேற... கிளம்புங்க... நானும் கலாவும் இங்க நைட் தங்கிக்கிறோம்" என்றார்...

நேற்று மாலையில் இருந்து ஒரே பதட்டத்தில் இருந்த அந்தக் குடும்பத்தினர் அனைவருக்குமே ஓய்வு தேவைப்பட்டிருந்ததால் இளையவர்களுடன் பாலாவும், சிவ சுப்ரமணியமும் வீட்டிற்குக் கிளம்ப, அர்ஜூன் திவ்யாவிற்குத் தனிமைக் கொடுத்துத்

தோழிகள் இருவரும் வெளியேற, அர்ஜூன் எதிர்பார்த்திருந்த தன் மனையாளுடனான தனிமை ஒரு வழியாகக் கிடைத்தது...

"திவி... சாப்பிட்டியா?"

"ம்ம்.. நீங்க?"

"ம்ப்ச்... எனக்குப் பசிக்கலை"

அவன் பசிக்கவில்லை என்று சொல்லும் பொழுதே தெரிந்தது அவனது பசி அடங்கி வெகு நேரம் ஆகிவிட்டது என்று... ஆனால் அது நிச்சயம் வயிற்றுப் பசி அல்ல... குரோதமும், வஞ்சமும், சினமும் உள்ளத்திலும், புத்தியிலும் சூழ்ந்து மூடியிருந்த பழிவாங்கும் பசி அது என்று...

கணவனையைக் கண் இமைக்காமல் பார்த்திருந்தவளிற்கு அவனிடம் இந்த நேரத்தில் அதைப் பற்றிக் கேள்விக் கேட்கும் தைரியம் வரவில்லை... ஆனால் ஒரு மனைவியாகத் தன் கணவனின் நலனை மட்டுமே கருத்தில் தாங்கியிருந்தவளிற்குக் கேட்காமலும் இருக்க முடியவில்லை...

தனது ஒட்டுமொத்த தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டு தயங்கியவாறே...

"எ... என்னங்க... நீங்க அவசரமா போ....." என்று கூட முடிக்கவில்லை... அவளைத் திரும்பியும் பார்க்காது குழந்தையிடம் இருந்த தனது பார்வையையும் எடுக்காமலே, குழந்தையின் பிஞ்சு விரல்களைப் மென்மையாகப் பிடித்து முத்தமிட்டவாறே...

"திவி... பதில் இல்லாத கேள்வியக் கேட்காத?" என்றான்....

அவன் சாதாரனமாகத் தான் சொன்னான்... ஆனால் நேற்றில் இருந்து நடந்திருந்த அசம்பாவிதங்களினால் உறைந்திருந்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் வெளிவராதவளிற்கு, கணவனின் வார்த்தைகளில் கடுமையும், அழுத்தமும் இருந்ததோ என்று நினைத்தவளிற்கு அவனின் பதிலிலும் அதை சொன்ன தோரனையிலும் திக்கென்று இருந்தது....

சட்டென்று மௌனியான தன் மனையாளைத் திரும்பிப் பார்க்க, தலை குனிந்து அமர்ந்திருந்தவளைக் கண்டவன், வலது கரத்தில் தனது குழந்தையை மாற்றி, இடது கரத்தால் அவளின் தோள் பற்றித் தன்னருகில் இழுத்தவன்...

"திவி... நான் ஏற்கனவே பல தடவை உனக்குச் சொல்லியிருக்கேன்... நீ உன்னைப் பத்தி, என்னைப் பத்தி, நம்ம குழந்தையைப் பத்தி மட்டும் தான் கவலைப் படனும்னு... குழந்தைக்குக் கொஞ்ச நாள் ஆனோட நாம ஏற்கனவே பேசினது போல் காலேஜிற்குப் போ... படி... வேற எதப் பத்தியும் என் வைஃப் கவலைப் படறது எனக்குப் பிடிக்காது" என்றான் ஒவ்வொரு வார்த்தையாக நிதானமாக, ஆனால் இதனைப் பற்றிப் பேசுவது இதுவே கடைசி முறை என்பது போல் கடினமாக....

கணவனின் பார்வையில் தெரிந்த கூர்மையில், அவனின் குரலில் தெரிந்த அழுத்தத்தில் இதற்கு மேல் பேசுவதற்கில்லை என்று புரிந்தாலும், கோகுல் தன்னிடமும், மஹாவிடமும் நடந்து கொண்ட முறையும், தான் அவனால் பட்ட கொடிய வேதனையும், அதனால் தனது குழந்தையின் உயிருக்கும் ஆபத்து நேர இருந்ததை அத்தனை சீக்கிரத்தில் அவளால் மறந்துவிட முடியுமா என்ன?

கோகுலை நினைத்ததுமே உடல் முழுவதும் ஒரு நடுக்கம் படர வெளிப்படையாக நடுங்கிய உடலைக் கட்டுப்படுத்த ஆதரவைத் தேடி தனது கணவனின் தோள் சாய்ந்தவள் ...

"எ... எனக்கு இன்னும் அவன நினைச்சா பயம்

போகலைங்க... நினைச்சாலே உடம்பெல்லாம் உதறுது... அதான் அவன் எங்..." என்று முடிப்பதற்குள்...

"திவி... டு யூ பிலீவ் மி? [Do you believe me?] உனக்கு என் மேல் நம்பிக்கை இருக்கா?" என்ற கணவனின் முகத்தை அவன் தோளில் சாய்ந்தவாறே அண்ணாந்துப் பார்த்தவள் சில நொடிகள் அவனையே பார்த்திருந்து, பின்...

"உங்க மேல வச்ச நம்பிக்கையால மட்டும் தான் நேத்து போக இருந்த என் உயிரைக் கையில் பிடிச்சுட்டு இருந்தேன்" என்ற மனையாளின் வார்த்தைகளில் அர்ஜூனின் காதல் கொண்ட இதயம் உருகி மருக, சில நொடிகள் அவளின் விழிகளைக் ஆழ்ந்துப் பார்த்தவன்...

"திவி... குழந்தை தூங்கிட்டான்... தொட்டில்ல போடட்டுமா?" என்றான்...

"ம்ம்ம்" என்றவள் கட்டிலில் இருந்து எழப் போக, வேண்டாம் என்றவன் தானே குழந்தையை மெல்ல தொட்டிலில் கிடத்தியவன் தங்களின் அறைக் கதவை சாத்த....

பழைய அர்ஜூன் திரும்பிவிட்டதாகவே தோன்றியதில் அவனின் மனையாளின் உள்ளத்தில் நாணமும்,

கூச்சமும் போட்டிப் போட்டதில் களை இழந்திருந்த அவளின் முகத்தில் களையும், வெட்கமும் மீண்டும் பூக்க துவங்கியது...

"ஐயோ! இப்ப எதுக்குக் கதவை சாத்துறீங்க... டாக்டர், நர்ஸ் யாராவது வரப் போறாங்க" என்று மெல்லிய குரலிலும் சொன்னாலும் தன்னையும் அறியாமல் தன் கணவனிற்கு இடம் விட்டுக் கட்டிலில் நகர்ந்து அமர்ந்தவளைக் கண்டு வாய் விட்டு சிரித்தவன், அவளை நெருங்கி அமர்ந்த நொடியே அவளைத் தன்னருகில் இழுத்து அவளின் கழுத்தில் ஆழ முகம் புதைக்க,

பிறந்த குழந்தைக்கு ஒரு வாசனை, பருவப் பெண்ணிற்கு ஒரு வாசனை, மனப்பெண்ணிற்கு ஒரு வாசனை என்பது போல் குழந்தையை ஈன்றெடுத்த தாய்க்கும் ஒரு வாசனை!!!

தனது மனைவியின் மீது புதிதாகத் தோன்றியிருக்கும் இந்தத் தாய்மையின் வாசனையை ஆழ்ந்து சுவாசித்தவன், மெல்ல அவளின் இதழோரம் தனது இதழைக் கொண்டு செல்ல, சட்டென்று முகத்தைத் திருப்பினாள்...

அவளின் செய்கையில் புன்னகைத்தவன் அவள் முகத்தைத் தன்னை நோக்கித் திருப்பி.....

"உண்மையச் சொல்லு... உனக்கு வேண்டாம்?" என்க,

நாணத்தின் உச்சிக்கே சென்றவள் தலை கவிழ முயற்சிக்க, மீண்டும் அவளின் முகத்தைத் தன்னை நோக்கி ஏந்தியவன் அவளின் வெட்கம் கலந்த விழிகளோடு தனது விஷமம் கலந்த விழிகளைக் கலக்கவிட்டவன்...

"நீ வேண்டாம்னு சொன்னாலும் உன் கண்ணு காட்டிக் கொடுக்குது" என்றவன் அவளின் நெற்றியில் முத்தம் பதிக்க...

"வேண்டாங்க" என்றாள் தனக்கே கேட்காத மெல்லிய குரலில்...

"என்ன வேண்டாம்?" என்று வார்த்தைகளை மெல்ல உதித்தவன் அவளின் இரு கன்னங்களிலும் அழுத்தமாகத் தனது முத்தங்களைப் பதிக்க,

"அம்மாவும், அத்தையும் வந்துருவாங்க இப்போ" என்றவளை குனிந்து பார்த்தவன்.....

"இத எங்கேயோ எப்பவோ கேட்ட மாதிரி இருக்கே"

என்று இதழ் விரித்து வாய் விட்டு சிரித்தவன்..

"திவி... இப்போ நமக்குக் குழந்தைக் கூட இருக்கு... ஞாபகம் இருக்கா" என்க...

"அது வந்து...." என்று இழுத்தவளின் முகத்தைத் தன் மூச்சுக் காத்துப் படும் அளவிற்குத் தன் முகத்தின் அருகில் கொண்டு வந்தவன்...

"திவி கிஸ் பண்றதுனால ஒன்னும் ஆகிடாது" என்றவன் அவள் மறுபேச்சு பேசும் முன் அவளின் பட்டு இதழ்களைச் சிறைப் பிடித்து இருந்தான்...

பிரசவத்தில் மறுபிறப்பு என்பது உடலும் உயிரும் மட்டும் சார்ந்தது அல்ல, உணர்வுகளுக்கும் மறுபிறப்போ என்பது போல் இருந்தது மரணத்தின் வாயில் வரை சென்றுவிட்டுத் தன்னால் மீட்கப்பட்ட தன் மனையாளின் ஸ்பரிசமும், இதழின் சுவையும்....

பல நிமிடங்கள் நீடித்த அந்த முத்தத்தில் மூழ்கியிருந்தவன், தன்னவளை விட்டு சிறிதே விலகி அவளின் முகம் நோக்க, கணவனின் விலகலில் கண் விழித்தவள் அவன் தன்னைப் பார்த்திருப்பதைக் கண்டு வெட்கமடைய,

"திவி... ஐ தாட் ஐ வாஸ் கோயிங் டு லூஸ் யூ [Dhivi, I thought i was going to lose you].... உன்னைய இழந்துடுவேனோன்னு ரொம்பப் பயந்துட்டேண்டி... ஐ மிஸ்ட் யூ ஸொ மச் [I missed you so much] " என்றவன் அவளின் முகத்தை இழுத்து, அவளது இதழ்களைத் தனது இதழ்களுக்குள் ஆழப் புதைத்துக் கொள்ள, அவனை விட்டு மென்மை தூரம் போய் வன்மை ஆக்கிரமித்துக் கொண்டது...

நீடிய அந்த இதழொற்றலில் காமம் இல்லை, தாபம் இல்லை, விரசம் இல்லை... அதில் கலந்திருந்தது காதல்! காதல்! காதல் மட்டுமே!

கணவன் மனைவி இருவரும் மனமுழுவதும் காதலில் திளைத்து, ஆழ்ந்த முத்தத்தில் மூழ்கியிருக்க, பிறந்த அன்றே தன் தந்தையானாலும் தனக்குப் போட்டி என்று ஒருவர் கூட இவ்வுலகத்தில் இருக்கக் கூடாது என்பது போல் தன் அன்னையை அணைத்திருந்த தன் தந்தையின் எண்ணங்களையும், செய்கைகளையும் திசை திருப்புவது போல் குட்டி அர்ஜூன் செல்லமாய்ச் சினுங்கினான்....

கணவனின் முத்தத்தில் மெய் சிலிர்த்து அவனுக்குள் அடங்கியிருந்தவளைக் குழந்தையின் குரல் நினைவுலகத்திற்குக் கொண்டு வர, சட்டென்று தன் மனையாளை விடுத்து குழந்தையைத் தூக்க சென்ற தன் கணவனைக் கண்டவளின் மனமுழுவதும்

மகிழ்ச்சியும், பூரிப்பும் துலங்க....

"உங்களோடேயே போட்டி போட ஒருத்தன் வந்துட்டான்" என்று சிரித்த தன் மனையாளைத் திரும்பிப் பார்த்தவனின் முகத்தில் ஒரு தந்தையாகப் பெருமையும், கர்வமும் நிறைந்திருந்தது....

Likes:Priayamadhavan, bhuvana, Vasanthisakthivel and 30 others

Jelineusa
JB

Saturday at 8:37 PM
#76

மருத்துவமனையில் இருந்து திவ்யாவையும், குழந்தையையும் வீட்டிற்கு அழைத்து வந்து இதனுடன் கிட்டதட்ட ஒரு வாரம் ஆகியிருந்தது...

திவ்யாவின் குழந்தைப் பேறில் இருந்து அலுவலக வேலைகளை அருணும், பாலாவும் கதிரோட சேர்ந்துப் பார்த்துக் கொண்டாலும், அர்ஜூன் நேரடியாகப் பார்க்க வேண்டிய அலுவல்கள் குவிந்துக் கிடந்ததால் இரவு வெகு நேரம் சென்றே வீட்டிற்குத் திரும்பியவனுக்குத் தன் குழந்தையுடன் கூட அதிக நேரம் செலவழிக்க இயலவில்லை...

அதே போல் இன்றும் தன் கணினியில் மூழ்கியிருந்தவனிடம் அனுமதிக் கேட்டு அறைக்குள் நுழைந்த கதிர் மற்ற அலுவல்களைப் பற்றிப்

பேசியவன் இறுதியாக...

"சார்... கோகுல் கோமாவில் இருந்து எழுந்திட்டான்..." என்க...

இன்னமும் கணினியில் மூழ்கியிருந்த அர்ஜூன் கதிரை ஏறெடுத்தும் பார்க்காமல், தன் கண்களைக் கணினியின் திரையினிலேயே பதித்தவாறு...

"கதிர்... ஐ வாண்ட் டு ஸீ கோகுல் [I want to see Gokul]... எனக்கு அவனைப் பார்க்கனும்... ஜஸ்ட் ஒரு டெண் மினிட்ஸ் [Just ... ten minutes]... ஆனால் நான் அவனப் பார்க்க வரும் போது அவனோட பேரண்ட்ஸோ ஆர் ரிலேட்டிவ்ஸோ ஒருவரும் அங்க இருக்கக் கூடாது... ஈவன் டாக்ர்ஸ் ஆர் நர்ஸஸ்... ஏற்பாடு பண்ணிட்டு சொல்லுங்க"

"ஓகே சார்... "

"கதிர்... அவன் அது வரை வாய் திறக்காத மாதிரி பண்ணியிருக்கீங்கள்ள?"

"யெஸ் சார்... நீங்க சொன்ன மாதிரி இப்ப மட்டும் இல்ல... அவன் எப்பவுமே நம்ம பத்தி பேசாத மாதிரி

மிரட்டியிருக்கோம்" என்றவன் அறையை விட்டு வெளியே செல்ல எத்தனிக்க..

"கதிர்... இப்ப தான் கோமாவில் இருந்து வந்திருக்கான்... ஸோ ஒரு டு டேய்ஸ் டைம் கொடுங்க.... ஏனா அவன் நம்மைப் பத்தி சொல்லாட்டாலும் அவன் ரூமை வாட்ச் பண்ண அவன் அப்பா ஏற்பாடு பண்ணினாலும் பண்ணிருப்பான்... ஒரு டு டேய்ஸ் கழிச்சே நான் அவனைப் பார்க்கிறேன்... அதுக்கு முன்னாடி அந்த எண்டையர் [Entire] ஹாஸ்பிட்டல் கேமரா ஸிஸ்டத்தையும் கட் பண்ணிடுங்க... நான் அங்க வரதும் தெரியக் கூடாது... போறதும் தெரியக் கூடாது..."

அர்ஜூனின் கூற்றை நன்கு கவனித்துக் குறித்துக் கொண்ட கதிர் தயங்கியவாறே...

"சார்... இவ்வளவு ரிஸ்க் எடுத்து அவனைப் போய்ப் பார்க்கனுமா?" என்க..

சட்டென்று நிமிர்ந்து கதிரைப் பார்த்தவன்...

"கதிர்... இந்தப் பிரிகாஷன்ஸெல்லாம் ரிஸ்க் இருக்குங்கறதனால நான் எடுக்கலை... என்ன தான் நமக்குப் பயம் இல்லைன்னாலும், அப்படியே பிரச்சனைகள் வந்தா சமாளிக்க நம்மால

முடியும்னாலும், காஷியஸா [Cautious] இருக்கிறதுல தப்பே இல்லை" என்றவன் நீங்க போகலாம் என்பது போல் தன் வேலையில் மூழ்க,

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் தன்னைப் பிரமிக்க வைக்கும் தன் MDயை நினைத்து வியந்து கொண்டே அர்ஜூன் கோகுலை சந்திப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கத் துவங்கினான் கதிர்...

அர்ஜூன் கோகுலை சந்திக்க வேண்டும் என்று சொன்ன நாளில் இருந்து சரியாக இரண்டாவது நாள் அர்ஜூனை அழைத்த கதிர்...

"சார்... ஆல் செட்... " என்க,

சட்டென்று எழுந்த அர்ஜூனின் முகத்தில் அன்றைப் போல் இன்றும் கனிவு என்பது துளியும் அல்லாது, அந்தக் கொடூரனைப் பார்க்கப் போகும் வஞ்சத்தில் அடி மனதில் இறந்து போனது போல் அடங்கி இருந்த சீற்றம் மீண்டும் தலைத் தூக்க, அதி விரைவாகக் காரை செலுத்தியவன் மருத்துவமனையை அடைந்த பொழுது கோகுலின் அறையிருந்த அந்தத் தளம் முழுவதும் ஊசி விழுந்தால் சத்தம் கேட்கும் அளவிற்கு அத்தனை அமைதியாக இருந்தது...

அர்ஜூனின் ஆட்கள் கோகுலின் முதுகெலும்பை உடைத்த நிமிடமே மயக்கம் அடைந்திருந்தவனை அவன் வீட்டிற்கு அருகிலேயே தூக்கி எறிய, அவனைக் கண்டதும் துடித்துப் போன அவன் பெற்றோர் மருத்துவமனையில் சேர்க்க, அர்ஜூனின் தண்டனையாலும், உடம்பில் பட்டிருந்த அடியாலும், முதுகெலும்பு உடைந்திருந்ததாலும் அவன் அந்நேரமே கோமாவிற்குச் சென்றுவிட்டதாக மருத்துவர்கள் கூற,

அன்றில் இருந்து சினிமாவட்டாரத்திலும், தான் எடுத்துக் கொண்டிருந்த படங்கள் அனைத்தும் ஒரே இரவில் முடக்கப்பட்டிருந்ததாலும், கோகுலின் தந்தைக்குத் தெரிந்து போனது...

தங்கள் மகன் ஏதோ ஒரு பெரிய இடத்தில் கை வைத்திருக்கிறான் என்று...

தீவிர சிகிச்சையில் அனுமதிக்கப் பட்டிருந்த கோகுல் கிட்டதட்ட ஒரு வாரத்திற்கும் மேலாகக் கோமாவில் கிடந்திருக்க, காவல் துறையினர் எத்தனையோ கேள்விகள் கேட்டும், மகன் செய்த ஏதோ ஒரு பெரிய தவறினால் தான் இத்தகைய கொடியத் தண்டனையை அவனுக்குக் கொடுத்திருக்கிறார்கள்...

எங்குச் சென்றாலும், எந்தக் கதவைத் தட்டினாலும் மருந்துக்குக் கூட உதவி கிடைக்காத அளவில் அத்தனை கதவுகளையும், எப்படி, யாரால் ஒரே இரவில் இவ்வளவு சாமார்த்தியமாக மூட முடியும்?? அதுவும்

சினிமாவட்டாரத்தில் தனக்கு இருக்கும் பேருக்கு, பிரபலத்திற்கு, தன்னையே எதிர்த்தது மட்டும் அல்லாமல், தன் மகனை குற்றுயிரும் குலை உயிருமாக வீதியில் தூக்கியெறிந்துவிட்டு, தன்னுடைய அனைத்து படங்களையும் முடக்கி தன்னைக் கையாளாகாதவன் போல் செய்தவன் யார்?

அவனுக்கு எங்கு இருந்து இவ்வளவு நெஞ்சு உரமும், தைரியமும், சினமும் வந்தது? அந்த அளவிற்கு அந்தஸ்தும், அதிகாரமும், ஆளுமையும் உள்ளவனை எங்குத் தீண்டினான் என் மகன்?

என்று இத்தனை குழப்பத்தில் இருந்திருந்தவருக்கு இதற்கு மேல் அந்தக் கண்ணிற்கு தெரியாத ஆளுமைப் படைத்த எதிரியை சீண்டாமல் இருப்பதே நல்லது என்ற முடிவுக்கு வந்தவர் மேற்கொண்டு காவல்துறையினரிடம் ஒரு வார்த்தை கூட உதிர்க்கவில்லை...

கோகுலை அனுமதித்திருந்த மருத்துவமனையை அடைந்த அர்ஜூன் கதிருக்கு அழைத்தவன்...

"கதிர்... எந்த ஃப்ளோர்? என்க..

"சார்... ஃபோர்த் ப்ளோர்... " என்றவுடன் காரில் இருந்து

இறங்கியவன் நேரே கோகுல் இருந்த அறையை நோக்கி சென்றவன் அறைக்குள் நுழைய, அங்கு உடல் முழுவதும் கட்டுப் போட்டு, சுயநினைவை இழந்து உயிரற்ற உடலை மட்டும் கொண்டு படுத்திருந்தது போல் படுத்திருந்த கோகுலைக் கண்டவன், அவன் கட்டிலுக்கு அருகில் சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தான்...

சேர் இழுக்கப் பட்ட சத்ததில் மெதுவாகக் கண் விழித்த கோகுல் அங்கு, தன் அறையில், தனிமையில், தனக்கு வெகு அருகில் கால் மேல் கால் போட்டுக் கம்பீரமாக அமர்ந்திருந்த அர்ஜூனைக் கண்டவனிற்கு, மரணப் பயத்தில் உள்ளுக்குள் உதறல் எடுக்க, நடுங்கும் மனதுடனும், அதிர்ந்த கண்களுடனும் உடலை ஒரு இஞ்ச் கூட அசைக்க முடியாததால் கலங்கிப் போய் அர்ஜூனைப் பார்த்தவன் தலையை மட்டும் வேண்டாம் என்பது போல் அசைக்க,

"பரவாயில்லை கோகுல்... என்னைப் பார்த்தவுடன் அடையாளம் தெரியற அளவிற்குத் தெளிவாயிட்ட போலருக்கு..." என்றான் அர்ஜூன்... கண்களுக்கு எட்டாத இளம் புன்முறுவலுடன் ஆனால் உள்ளத்தில் இன்னமும் கொழுந்து விட்டு எரியும் நெருப்புடன்....

"அ... அ... அர்ஜூன்... எ... என்னையை ஒன்னும் பண்ணிடாத... " என்று கண்களில் பீதியுடன் கோகுல் கதற,

"வாவ்... இதுக்கு மேலயும் உனக்கு உயிர் வாழ ஆசையிருக்கா என்ன?" என்று வாய் விட்டு சிரித்த அர்ஜூனின் முகத்தையே திகிழ் சூழ்ந்து உள்ளத்துடன் பார்த்திருக்க...

"கொட்டும்னு தெரிஞ்சே தேளுடன் விளையாடனும்னு நினைச்ச, அதன் கொடுக்கையே பிடிச்ச உன்னை என்ன செஞ்சாலும் தகும்... ஆனால் இனி உன்னைச் செய்றதுக்கு ஒன்னுமே இல்லன்னு தெரியுது... நீ வாழ்க்கை முழுசும் இனி உன் தலையை மட்டும் தான் அசைக்க முடியும்... வேற எத்த்த்தையும் அசைக்க முடியாது" என்று சொன்ன அர்ஜூனின் கூற்றில், அதுவும் "எதையும்" என்ற வார்த்தையில் அவன் கொடுத்த அழுத்தத்தில் இருந்த அர்த்தம் புரிந்ததும் கோகுலிற்கு அந்த நிமிடமே தன் உயிர் போய்விடாதா என்று கூடத் தோன்றியது...

மெல்ல எழுந்த அர்ஜூன் கோகுலின் கட்டிலில் அவனுக்கு இரு பக்கமும் கைகளை ஊன்றி அவன் முகம் நோக்கி குனிந்தவன்...

"உனக்கும் ஒரு தங்கை இருப்பதா கேள்விப்பட்டேன்... ரொம்ப அழகா வேற இருப்பாளாமே???" என்று ஒரு சிறு இள நகையுடன் கூற,

அதிர்ச்சியில் உறைந்த முகத்துடன் கோகுல் அவனைப் பார்த்திருக்க, சட்டென்று தன் முகப் பாவத்தை மாற்றிய அர்ஜூன்...

"நீயாவது மஹா கழுத்தில் தாலி கட்டிட்டு அவளைத் தொடனும்னு நினைச்ச... ஆனால் என்னோட ஆளுங்களுக்கு அந்த அளவுக்கெல்லாம் பொறுமை இல்லை... புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்" என்றவனின் விழிகளில் தெரிந்தது வன்மமா? சினமா? ஆங்காரமா? குரோதமா? அல்ல இவை அனைத்தையும் கலந்திருந்த உணர்வா?

ஆனால் அன்று கோடௌனில் புன்னைகை முகத்துடன், இலகுவாக அமர்ந்து தான் பட்டுக் கொண்டிருந்த கொடுமைகளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த அர்ஜூன் இவன் இல்லை...

"இவன் சிரிச்சாலே எனக்குக் குலை நடுங்கும்... இப்ப கோபமா வேரப் போறான்... அவன் ஒரு விரல் அசைச்சா இந்த அரசாங்கமே நடுங்குது.... நம்மல ஏதாவது பண்ணிர போறான்..... முதல்ல அவன் வேலைய முடி" என்று அன்று அந்த எம்.எல் ஏ சங்கரலிங்கம் நடுங்கியது போல் இன்று கோகுலும் நடுநடுங்கிப் போயிருந்தான்...

அர்ஜூனின் முகத்தில் இருந்த ரௌத்திரத்தைக் கண்ட

கோகுலிற்குப் புரிந்து போனது... இவனைப் பற்றி நான் ஒரு வார்த்தை சொல்வதற்கு வாய் திறக்கும் முன்பே தன் தங்கையின் கதி அதோகதி தான் என்று...

கண்களில் நீர் பெருக நாக்கு ஒட்டிக் கொள்ளச் சரி என்பது போல் தலை அசைத்த கோகுலைவிட்டு அகன்ற அர்ஜூன் அவன் அறை வாயிலைத் தாண்டும் பொழுது மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்த்து அன்றைப் போல் அதே இளமுறுவலுடன், கனிவை சுமந்திருந்த கண்களுடன் மென்மையான முகபாவனையுடன்...

"டேக் கேர் கோகுல் [Take care Gokul]" என்றவன் சிரித்த முகத்துடன் வெளியேற...

ரௌத்திரத்தில் இருந்து கனிவான முகத்திற்குச் சடுதி நேரத்தில் தனது உணர்வுகளை மாற்றிய அர்ஜூனை இனி வாழ்நாளில் ஒரு முறைக் கூடப் பார்க்கக் கூடாது என்று வாழ்கையில் முதன் முறை கடவுளை வேண்டிய கோகுலிற்கு, அர்ஜூன் தனது தங்கையைத் தூக்குவேன் என்று சொன்னது தன்னை மிரட்டுவதற்காகத் தான் என்று தெரியாமல் அர்ஜூனைப் பற்றியோ, மஹாவைப் பற்றியோ ஒரு வார்த்தைக் கூடக் கூறாமல் மௌனமாக இருந்துவிட, அதற்குப் பிறகு மஹாவிற்கும், தன் மனையாளிற்கும் "கோகுல்" என்றே பெயரே ஞாபகம் வராமல் பார்த்துக் கொண்டான் அர்ஜூன்...

Likes:Priayamadhavan, bhuvana, Vasanthisakthivel and 26 others

Jelineusa
JB

Saturday at 8:38 PM
#77

மருத்துவமனையை விட்டு வெளியே வந்தவன் கதிருக்கு அழைத்து எதற்கும் கோகுலின் மேல் ஒரு கண்ணை வைத்திருக்கச் சொன்னவன் நேரே வீட்டிற்குச் செல்ல, வீட்டின் முன் அறையில் ஸ்ரீயின் குடும்பத்தாரும், கலாவின் குடும்பத்தாரும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, வீட்டிற்குள் அயர்வுடன் நுழைந்த கணவனைப் பார்த்த திவ்யாவிற்கு மனம் சுணங்கியது…

குழந்தைப் பிறந்ததில் இருந்து பச்சை உடம்புக்காரி என்று திவ்யாவை கீழே உள்ள அறையில் கலாவுடன் படுத்துக் கொள்ளச் சொல்லவும், கணவன் மனைவிக்கான தனிமை கிடைக்காதிருந்ததால் அவளால் தன் கணவனைக் கவனித்துக் கொள்ளவும் முடியாமல், அவனுக்கென்று தனியாக நேரமும் செலவிட முடியாமல், ஏனோ தன் கணவன் தன்னை விட்டுத் தூரம் சென்றுவிட்டது போல் மனமுழுவதும் அழுந்திப் பாரமாக இருந்தது….

இதில் இன்று அவன் என்றும் இல்லாதது போல் களைத்த முகத்துடனும், சோர்வான நடையுடனும் வீட்டிற்குள் நுழைய, கணவனின் களைப்பைக் கண்டவள் கலங்கிப் போய் அவனை நோக்கி ஓட…

"குழந்தை பிறந்து டு வீக்ஸ் கூட ஆகலை... அதுக்குள்ள ஏன் இப்படி ரெஸ்ட் எடுக்காம நடந்துட்டு இருக்க??" என்று கடிந்து கொண்ட கணவனைக் கண்டு முறுவலித்தவள் அவன் அருகாமையை விரும்பியவள் போல் அவனை நெருங்கி நிற்க, அவளின் தேவை புரிந்தவன் அவளின் தோள் மீது கைப் போட்டு அணைத்துப் பின் விடுவித்து...

"திவி... குளிச்சிட்டு வந்துடறேன்" என்றவன் சிறிது நேரத்திலேயே குளித்து முடித்துக் கீழ் இறங்கி வந்தான்...

அவன் வருகையை அறிந்து கலா தன் மடியில் இருந்த குழந்தையைத் திவ்யாவிடம் கொடுக்க, அர்ஜூனிடம் குழந்தையைக் கொடுத்தவள் நகரப் போக, அவளையும் கைப் பிடித்துத் தன் அருகில் அமர சொன்னவன் தன் மனையாளைத் தன் கைவளைவுக்குள்ளேயே வைத்துக் கொள்ள, இரு குடும்பத்தார் முன்னிலும் தன் கணவனின் செயலில் திவ்யாவிற்குத் தான் வெட்கம் பிடுங்கி தின்றது... ஆனால் அதற்கெல்லாம் என்று கவலைப்பட்டிருக்கிறான் அவள் கணவன்....

"அர்ஜூன்... குழந்தைக்குப் புண்ணியதானம் பண்றது பத்திதான்பா பேசிக்கிட்டு இருந்தோம்... கலாவும் சிவா அண்ணனும், வினோத்தும் எல்லாரும் இங்க இருக்கறப்பவே வச்சுடலாம்னு நினைக்கிறேன்... நீ என்னப்ப சொல்ற?"

"ஒகே... மாம்.... " என்றவன் மஹாவை ஒரு நொடித் திரும்பிப் பார்த்தவன்...

"அன்னைக்கே வினோத் மஹா எங்கேஜ்மெண்ட் [engagement] வச்சுக்குவோம்" என்றான்...

அர்ஜூன் திடுதிடுப்பென்று இவ்வாறு கூறவும், தான் நல்ல வேலையில் சேர்ந்து, மூன்று வருடங்களாவது உழைத்து, பின் செட்டிலாகி நல்ல நிலைமைக்கு வரும் வரை நிச்சயம் தங்களது திருமணத்தைப் பற்றி அவன் பேசப் போவதில்லை என்று நினைத்திருந்த வினோத்திற்கு இப்பொழுது அவன் நிச்சயதார்த்தத்தின் தேதியைக் குறிக்கச் சொன்னது ஆச்சரியத்தின் எல்லைக்கே கொண்டு சென்றது என்றால், அது மஹாவை மகிழ்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு சென்றது...

அது வரையிலும் இதனைப் பற்றி நினைத்திராத பெரியவர்களுக்கு அவன் திடீரென்று இவ்வாறு சொன்னது வியப்பாக இருக்க, அனைவரும் அர்ஜூன் முகத்தையே பார்த்திருக்க, மஹாவை திரும்பி பார்த்தவன் இள நகை நகைக்கவும், இன்னும் ஆச்சர்யத்தில் இருந்து வெளி வர முடியாமல் தவித்தவள் சட்டென்று எழுந்து அவன் அருகில் பூனைக் குட்டி போல் ஒட்டி அமர்ந்துக் கொண்டாள்...

அவளின் செய்கையில் சிரித்த அனைவரும், புண்ணியதானத்திற்கும் நிச்சயதார்த்தத்திற்கும் அழைக்க வேண்டிய விருந்தினர் பட்டியல், எடுக்க வேண்டிய துணி மணிகள், என்னென்ன உணவு பதார்த்தங்கள் செய்வது, எங்குச் சமையலிற்கு ஆர்டர் கொடுப்பது என்று தீவிர கலந்தாலாசோனையில் இறங்க,

குழந்தைப் பிறந்ததில் இருந்து தன் மனையாளுடனான தனிமை கிடைக்காமல் உள்ளுக்குள் புழுங்கித் தவித்திருந்தவன், அவளின் நெருக்கத்தை, ஸ்பரிசத்தை, அணைப்பை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தவன், அனைவரும் மிகத் தீவிரமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு, தங்களை ஒருவரும் கவனிக்கவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு, அவளின் தோளை அழுத்தி தன்னை நோக்கி இழுத்தவன், யாரும் அறியாத வண்ணம் அவள் காதிற்கருகில் குனிந்து,

"திவி... இன்னைக்குக் கொஞ்ச நேரம் நம் ரூமிற்கு வந்துவிட்டு போ" என்றான்...

தன் தோளைப் பற்றித் தன் கணவன் தன்னை இழுத்ததுமே அவனை நோக்கி திரும்பியிருந்தவள், அவன் தன் காதிற்கருகில் குனிந்து "ரூமிற்கு வா" என்றதும், நாணத்தில் முகம் செந்தனலாய் சிவக்க, தங்களை எவரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்களா

என்று சுற்றும் முற்றும் பார்த்தவள் மீண்டும் அண்ணாந்து தன் கணவனைப் பார்க்க..

"ப்ளீஸ்" என்பது போல் கண்களைச் சுருக்கி அவன் கெஞ்சிய விதத்தில் பெண்ணவளின் மனம் மயங்கவும் தன்னையும் அறியாமல் "ம்ம்" என்று நாணத்துடன் தலை அசைத்தாள்...

இரவு உணவு அருந்த அனைவரும் டைனிங் டேபிளில் அமர, தன் கணவனிற்கு அருகில் நின்று திவ்யா பரிமாற, அர்ஜூனிற்கு எதிரில் அமர்ந்திருந்த வினோத்தின் உள்ளம் முழுவதும் தங்களின் நிச்சயதார்த்தத்தைப் பற்றிச் சிந்தித்திருந்தாலும், அதே சமயம் அன்று அவ்வளவு கடுமையாகப் பேசி கட்டளைகளை விதித்த அர்ஜூன் இன்று திடிரென்று சம்மதம் தெரிவித்ததை நினைத்து வியப்பில் ஆழ்ந்திருந்தாலும், அவன் கட்டளைகளை இன்னும் மனதில் நிறுத்தியிருந்தவன் தன் அருகில் வந்த மஹா தனக்குப் பரிமாறத் துவங்கியும் அவளை நிமிர்ந்தும் பார்த்தான் இல்லை...

அதில் உடைந்துப் போன அவளின் காதல் கொண்ட மலர் மனம் தவித்து இருக்க, கண்களில் நீர் கோர்த்திருக்க, விருட்டென்று தன் அறைக்குச் சென்றவளைக் கண்டவன் நிமிர்ந்துப் பார்க்க, இவர்களின் கண்ணாமூச்சி ஆட்டத்தைக் கண்டு தலை கவிழ்ந்து புன்னகைத்துக் கொண்ட அர்ஜூன் பின்

நிமிர்ந்துப் பார்க்க, அவன் மனையாளின் பார்வை தன் அண்ணனின் மீது கோபமாகப் படிந்திருந்ததையும், அதிலும் அவளின் குழந்தைத்தனமே தெரிவதைக் கண்டவன் தன்னையும் அறியாமல் வாய்விட்டுச் சிரித்தான்...

அவனின் திடீர் சிரிப்பில் அனைவரும் அவனைத் திரும்பிப் பார்க்க, அவர்களைக் கண்டவன் இன்னும் தனது புன்னகையை மாற்றாமல்...

"சாரி... ஐ குடுண்ட் ரெஸிஸ்ட் **[Sorry, I couldn't resist]** " என்று மட்டும் சொன்னவன் உணவு அருந்தி முடித்துவிட்டு அவளின் அருகில் குனிந்து...

"சீக்கிரம் வா... வெயிட் பண்ணிட்டு இருப்பேன்" எனவும்,

அர்ஜூனின் சிரிப்பைக் கண்ட ஸ்ரீக்கும் பாலாவிற்கும், அவன் தன் மனையாளிடம் ஏதோ கிசுகிசுவென்று ரகசியம் பேசவும், அதற்கு நாணத்துடன் அவள் தலைக் குனிவதும் கண் கொள்ளாக்காட்சியாக இருக்க, ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டவர்களின் மனதில் வார்த்தைகளில் வடிக்க இயலாத சமாதானமும், அபரிதமான நிம்மதியும் தோன்றியதில் உள்ளம் சந்தோஷத்தில் நிறைந்திருந்தது...

ஒரு வழியாக அனைவரும் அவரவர் அறைக்கு உறங்க செல்ல, தன் அன்னையுடன் படுக்கச் சென்ற திவ்யாவின் மனமுழுவதும் தன் கணவன் தனக்காகக் காத்திருப்பானே என்ற சிந்தனையில் இருக்க, ஏற்கனவே அவன் அசந்து சோர்ந்துப் போயிருந்ததைக் கண்டவளின் பூ மனம் பரிதவித்து இருக்க, இதில் தானும் அவனை அதிக நேரம் காக்க வைக்கக்கூடாது என்று நினைத்தவள் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள் தன் அன்னையிடம்....

"மா... அவங்க ஏதோ என்கிட்ட பேசனுமாம்... கொஞ்ச நேரத்தில் வந்துடுவேன்... குழந்தையையும் தூக்கிட்டு போறேன்.... "

திவ்யாவைத் திரும்பிப் பார்த்தவர் ஒன்றும் பேசாமல் அமைதியாக இருக்க அவரின் மனதில் ஓடிக் கொண்டிருக்கும் எண்ணம் புரிந்து...

"மா... உடனே வந்துடுவேன் மா... " என்க...

"திவ்யா, குழந்தை பிறந்த பிறகு கொஞ்ச நாளைக்குப் புருஷன் பொண்டாட்டியைப் பிரிச்சு வைக்கிறது எதுக்குன்னு ஏற்கனவே உனக்குச் சொல்லியிருக்கேன்... அதனால் பார்த்துக்கம்மா, சீக்கிரம் வந்துவிடு"

தலை குனிந்தவாறே சரி என்பது போல் தலை அசைத்தவள் குழந்தையையும் தூக்கிக் கொண்டு தங்களின் அறைக்குச் செல்ல,

அங்குக் கட்டிலில் அமர்ந்தவாக்கில் யாருடனோ அலை பேசியில் பேசிக் கொண்டிருந்தவன் தன் மனைவியின் வரவை எதிர்பார்க்காததால் வியப்பில் புருவத்தை உயர்த்தியவன்....

"அதிசயமா இருக்கு.... கூப்பிட்டவுடனேயே வந்துட்ட" என்றான் இதழ்கள் விரித்துப் புன்னகைத்தவாறே...

கோகுல் தன்னையும் மஹாவையும் கடத்தியதற்கு முதல் நாள் தங்களின் அறையில் தன் கணவனோடு தங்கியிருந்தவள் தான்...

அதற்குப் பிறகு மருத்துவமனையில் இருந்து வந்த நாள் முதல் அர்ஜூனும் இரவு வெகு நேரம் சென்று வருவதால் அவனுடன் இங்குத் தனிமையில் கழிக்கத் தோதான தருணமோ, சந்தர்ப்பமோ கிடைக்காததால், இன்று பல நாட்களுக்குப் பிறகு அவன் இருக்கும் சமயம் அறைக்குள் நுழைந்தவளிற்கு அவனின் புன்சிரிப்போடு கூடிய குறும்பு வரவேற்பில் கூச்சமும், உவகையும் தோன்ற, அகமகிழ்ந்தவள் குழந்தையை

அணைத்தவாறே கட்டிலில் ஏற,

அலை பேசியை அனைத்து தன் அருகில் இருந்த மேஜையில் வைத்தவன் குழந்தையைக் கைகளில் வாங்கவும், அவன் அருகில் நெருங்கி அமர்ந்தவள் அவன் தோளில் தலை சாய்த்தாள்...."

இந்த இரு வாரங்களுக்குள் என்னென்ன நடந்துவிட்டிருந்தது... மேலும் அவனை நெருங்கி அமர்ந்தவள் அவன் நெஞ்சில் தனது முகத்தை ஆழப் பதித்தவாறே குழந்தையின் விரல்களைப் பிடித்து வருடிக் கொண்டு மௌனமாக இருக்க, அவளின் அமைதியின் அர்த்தம் புரிந்தவன்...

"திவி... என்ன ஆச்சு?" என்றான்....

கணவனின் கேள்வியில் அவனை நிமிர்ந்துப் பார்த்தவள் ஒன்றும் இல்லை என்பது போலத் தலை அசைக்க மனைவியின் அடி மனதிற்குள் நிழல் போல் ஓடிக் கொண்டிருக்கும் எண்ணங்களையும் சிந்தனைகளையும் புரிந்துக் கொண்டவனாகப் பட்டு போன்ற மென்மையான குழந்தையின் பாதத்தைத் தடவிப் பார்த்தவாறே.......

"திவி... எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு

தெரியுமா? இந்த இருபத்தெட்டு வயசுக்குள்ள எத்தனையோ விஷயங்களில் சாதிச்சு இருக்கிறேன்... பிஸ்னஸ்களிலும் சரி, என்னோட பெர்ஸ்னல் லைஃப்பிலையும் சரி எத்தனையோ சக்ஸஸஸ் பார்த்திருக்கேன்... ஆனால் இந்தக் குட்டி பையன பார்க்கும் போது, அதுவும் இவன் பிறந்த விதத்தை நினைக்கும் போது, இந்த உலகத்தில இவன் அடி எடுத்து வச்சதே என்னோட கையில தான் நினைக்கும் போது, அதை எல்லாம் விடப் பெரிசா சாதிச்சுட்ட மாதிரி கர்வமா இருக்கு... " என்றவன் தன்னை அழகாக விழிகள் விரித்து அண்ணாந்து பார்த்திருந்த தன் மனையாளின் நெற்றியில் அழுந்த முத்தம் பதித்து,

"இதுக்கு நான் உனக்குத் தான் தேங்ஸ் சொல்லனும் திவி" என்றான்...

ஒரு தந்தையாக அர்ஜூனின் வார்த்தைகளில் அத்தனை பூரிப்பும், உற்சாகமும் தவழ்ந்தது...

கணவனின் காந்த கண்களில் இன்று தென்பட்டிருந்த கர்வத்தையும், மகிழ்ச்சியையும், பூரிப்பையும் கண்டவள், அவனின் கரத்தை எடுத்து தன் கழுத்தில் போட்டுக் கொண்டு அவன் கை அணைவுக்குள் வந்தவள் எதுவும் பேசாமல் அமைதியாக இருக்க, அவன் விரும்பிய மனைவியுடனான தனிமை இத்தனை நாட்களுக்குப் பிறகு கிடைக்க, மனைவியின் அருகாமையும், அவளின் இணக்கமான நெருக்கமும்

அர்ஜூனிற்குள் அடங்கியிருந்த தாபத்தை, ஆண்மைக்குறிய வேட்கையைத் தூண்ட அவளின் முகம் நோக்கி குனிந்தவன் இதழ் ஒற்றப் போக அவன் கையில் இருந்து அவன் மகவு "என் அம்மா எனக்கு மட்டும் தான்" என்பது போல் அழ ஆரம்பித்தது...

சிரித்தவள், "உங்க பையனுக்கு நீங்க என் கிட்ட வரது கூடப் பிடிக்கலைப் போல இருக்கு... அப்பா மாதிரி பையன்" என்று குழந்தையை வாங்க, குழந்தை பசியில் அழுவதைத் தாயாக உணர்ந்தவள் பசியாற்ற நினைத்து பாலூட்ட தன் கணவனுக்கு முதுகைக் காட்டி திரும்ப, அவளின் செய்கையில் சலித்துக் கொண்டவன்...

"ம்ப்ச்... இப்போ ஏன் திரும்புற? இப்படித் திரும்பு" என்றான்...

என்ன தான் கணவனாக இருந்தாலும் அவனுக்கு முன்பாகவா என்று நாணத்துடனும் கூச்சத்துடனும் தயங்கியவள் தன் உள்ளத்தின் தோன்றியிருந்த உணர்வுகளைத் தன் முகத்திலும் கொண்டு வந்தவள் அவனையே பார்த்திருக்க, குழந்தையின் அழுகை சத்தம் பொறுக்கமாட்டாமல் அவளின் தோள் பற்றித் தன்னை நோக்கித் திருப்பியவன்...

இதழ் பிரித்துச் சிரித்து, கண் சிமிட்டியவாறே...

"குழந்தை அழறான் பாரு..." என்றான்...

கணவனின் சேட்டையில், குறும்புத்தனத்தில், அவனின் விஷமம் வழியும் கண்களைப் பார்த்தவளின் நாணம் எல்லையைக் கடக்க, தலை கவிந்தவாறே குழந்தைக்குப் பசியாற்றத் துவங்க...

அவள் அருகில் வந்தவன் குனிந்து குழந்தையின் விரல்களைத் தன் கரத்தில் பற்றி மென்மையாக முத்தம் கொடுத்தவனின் கன்னத்தில் தன் மனையாளின் பட்டு மேனியின் ஸ்பரிசம் பட, மனம் தடுமாறி தவித்துத் தத்தளித்துப் போனான் அர்ஜூன்....

திவ்யாவின் பேறுகாலம் நெருங்க நெருங்க அவளின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு, அவளின் கர்ப்பத்தில் இருந்த தங்களின் குழந்தையின் நலத்தை மனதில் நிறுத்தி, அவளிடம் தாம்பத்தியத்தை எதிர்பார்க்காமல் அவளை விட்டு தள்ளி இருந்தவன்...

ஒரே அறையில் இருவரும் தங்கியிருந்தாலும், தன் அருகே தன் அணைப்பில், நெருக்கத்தில் மனையாள் இருந்திருந்தாலும், அவளே வாய் விட்டு தன்னுடனான கூடலை கேட்டிருந்தாலும் தன்னைச் சுற்றி கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு, தன் மனதை அடக்கிக் கொண்டு தள்ளி இருந்தவனின் கட்டுப்பாடு இன்று தன்னையும் அறியாமல் தகர்ந்துப் போனது....

கட்டுங்கடங்காத தாபத்துடனும் வேட்கையுடனும் அவள் கழுத்தில் முகம் புதைக்க, கணவனின் ஸ்பரிசத்தில், அவனது முகம் ஆழ்ந்து தனது கழுத்தில் பதித்திருந்ததில் அவளின் பெண்மையும் தன்னவனுடனான சங்கமத்தைத் தேட, அவன் தலையின் பின் பகுதியின் முடிகளுக்குள் தன் விரல்களை நுழைத்தவள் தன்னை நோக்கி இழுக்க, திவ்யாவின் பெண்மை உணர்வுடன் போட்டியிட்ட தாய்மை உணர்வு சிலிர்த்து விழித்தெழுந்தது…

உடலும் மனமும் தன் கணவனை விட்டு விலக ஒத்துழைக்காவிட்டாலும், அவனின் முரட்டுத் தனமான முத்தங்களும், அவன் கரங்களின் அத்துமீறல்களும் தன்னவனிற்குள் கொந்தளித்துக் கொண்டிருந்த தாபத்தையும், வேட்கையையும் வெளிப்படுத்த, அவனை விலக்க முயற்சித்தவாறே….

"வேண்டாங்க, அம்மா சீக்கிரமே வரச் சொல்லியிருக்காங்க… நான் போகனும்" என்றாள் மெல்லிய குரலில்…

பல நாட்களாகக் காத்திருந்தவனிற்கு இப்பொழுதைக்கு எட்டாது என்று நினைத்திருந்த தன் மனைவியுடனான தனிமை, அவளின் தீண்டல், சுகம் கிடைக்கவும், அதனை இந்த நிமிடம் இழக்க

விரும்பாதவன் அவள் கழுத்தில் பதிந்திருந்த முகத்தை அகற்றாமலே...

"திவி... ஐ நீட் யூ... ஐ நீட் யூ நௌ [Dhivi, I need you...I need you now] நீ இப்பவே எனக்கு வேணும்டி" என்றான் கரகரப்பான மோகம் தொய்ந்திருந்த குரலில் ......

தன் கணவன் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டிருக்கிறான் என்பதை அவனின் வேகத்தில், அத்துமீறல்களில், அழுத்தத்தில் இருந்தே புரிந்து கொண்டவள் அவனுக்கு இருக்கும் தாபத்தில் அவனை இப்பொழுது கட்டுப்படுத்துவது கடினம் என்று மனதிற்கு உரைக்க, இருந்தும் தன் உடல் நிலைக் கருதி....

"ப்ளீஸ்ங்க... குழந்தை பிறந்து இரண்டு வாரம் கூட ஆகலை" என்றாள் தன் கணவன் என்ன சொல்லப் போகிறானோ என்ற அச்சத்துடனும், தயக்கத்துடனும்...

அவளின் அச்சமும், கலக்கமும் அவளின் குரலிலேயே வெளிப்பட, அவளின் விலகலிற்கும் அர்த்தம் புரிந்துக் கொண்டவன், சடுதி நேரத்தில் தன் மனதை, ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த தனது உடல் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தவன், அவளை விட்டு விலகிக் கட்டிலில் சாய்ந்து அமர,

குழந்தைக்குப் பசியாற்றி முடித்ததும் கீழே போக எத்தனித்தவள் தங்களின் அறை வாயில் வரை சென்று திரும்பி பார்க்க, "போ" என்பது போல் புன்னகையுடன் தலை அசைத்துச் சைகை செய்தான் அந்தக் காதல் கணவன்..

மலரினும் மெல்லியவள்!

தொடரும்...

Likes:umahera, Priayamadhavan, ManjuKarthik and 79 others

Jelineusa
JB

Yesterday at 6:13 AM
#78

மலரினும் மெல்லியவள்!

பாகம் 36 - (இறுதி பாகம்)

புண்ணியதானமும், வினோத் மஹாவின் நிச்சயதார்த்தமும் ஒரே நாளில் நடத்துவது என்று முடிவானதும் விஷேஷங்களின் ஏற்பாட்டைக் கவனிக்கும் பரப்பரப்பில் இருந்த இரு குடும்பங்களின் உறுப்பினர்களும் ஒவ்வொரு வேலையைத் தங்களின் கையில் எடுத்துச் செய்ய, பிள்ளைப்பேறின் வலி எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றிய பெரிய கருத்துக்கள் ஒன்றும் அர்ஜூனிற்கு அதற்கு முன்

இருந்ததில்லை என்றாலும், தன் மனையாள் துடிதுடித்ததைப் பார்த்ததில் இருந்து, அவளின் உடல் நலம் முன்னைப் போல் தேறிவரும் வரை திவ்யாவிற்கு மட்டும் இந்த முறை முழு ஓய்வு கொடுக்கச் சொல்லி உத்தரவு இட்டிருந்தான் அவளின் அன்புக் கணவன்...

அவன் கட்டளைகளை மீற என்றைக்கு, எவருக்குத் தைரியம் இருந்திருக்கிறது? இன்று மீறுவதற்கு...

வினோத் மஹாவின் நிச்சயதார்த்திற்குத் தேதியே குறிக்கப் பட்டிருந்தாலும் அன்று அர்ஜூனின் அலுவலகத்தில் தன்னிடம் அர்ஜூன் பேசிய முறையையும், அவன் இட்டிருந்த நிபந்தனைகளையும் இன்னும் வினோத் மறக்கவில்லை... தன்னைக் கானும் ஒவ்வொரு நிமிடமும் தனது பாராமுகத்தால் தன்னவளின் துடிப்பைக் கண்டு உள்ளம் மருங்கி உருகியிருந்தாலும், அவன்

தனது இடத்தையும், நிலையையும் மனதில் கொண்டு, அர்ஜூனின் கட்டளைகளில் இருந்த நியாயத்தையும் உள்ளத்தில் நிறுத்தி தனது மனம் கவர்ந்தவளிடம் இருந்து தள்ளியே இருந்தான்...

ஆக ஒருவருக்கும் அர்ஜூனை எதிர்க்கும் தைரியம் இன்னும் வரவில்லையாதலால் திவ்யா எவ்வளவோ கேட்டும், அவளுக்குத் தன் குழந்தையைப் பார்த்துக்கொள்வதைத் தவிர வேறு வேலைகள்

எதுவும் வழங்கப்படவில்லை....

புண்ணியதானத்திற்கு முதல் நாள் இரவு குடும்பத்தினர் அனைவரும் இரண்டு விஷேஷங்களிற்கான ஏற்பாடுகளைப் பற்றி விவாத்தித்துச் சரி பார்த்துக் கொண்டிருக்க, மாலை வீட்டிற்கு வந்தததில் இருந்து தன் அறையில் அலுவலக வேலைகளில் மூழ்கியிருந்த அர்ஜூன் ஒரு வழியாக அன்று செய்ய வேண்டிய அலுவல்களை முடித்தவன் கீழே இறங்கி வர,

குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு தன் அருகில் அமர்ந்திருந்த மஹாவுடன் நாளைய நிச்சயத்தார்த்தைப் பற்றி, குழந்தைத்தனம் மாறாத முகத்துடனும், கைகள் இரண்டையும் ஆட்டி, முகமெல்லாம் தவழ்ந்திடும் புன்னகையோடும், தாய்மையின் பூரிப்புடனும் அரட்டை அடித்துக் கொண்டிருந்த மனையாளைத் தன் பார்வையாலே விழுங்கிவிடுபவன் போல் கண்களை அவள் மேல் பதித்தவாறே வந்த கணவனின் அழுத்தமான காலடியோசைகளில் திரும்பிப் பார்த்தவளுக்கு அவன் பார்வையின் அர்த்தம் புரிந்ததில் அந்திவானமாய்ச் சிவந்து ஜொலித்தது முகம்....

அன்று தங்களின் அறையை விட்டு கீழே சென்றவள் தான், தனது அன்னையுடனும் அவர்கள் தங்களின் ஊருக்கு சென்ற பின் ஸ்ரீயுடனும் மற்ற இரவுகளைக் கழிக்க, தனது மனையாளின் அருகாமையைத் தேடி

மனம் தவித்து இருந்தாலும் அவளின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவளை நெருங்காமல் இருந்தாலும், அவளுடனான தனிமையை, சங்கமத்தை எதிர்பார்த்து காத்துக் கிடந்தது அவனின் ஆண்மை.

ஹாலிற்கு வந்தவன் அவள் தரையில் குழந்தையோடு அமர்ந்திருக்க, அவளின் அருகில் ஷோஃபாவில் அமர்ந்தவன், அமைதியாக மற்றவர்களின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருக்க, கணவனின் மௌனத்தைக் கண்டவள் தன் முதுகுப் புறம் முழுவதும் அவனது கால்களில் படுமாறு அவனை நெருங்கி அமர்ந்து, அவனை நோக்கி திரும்பி, அண்ணாந்துப் பார்த்து...

"ரொம்ப டையர்டா இருக்கற மாதிரி இருக்கீங்க... சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா... சாப்பிட்டுட்டுச் சீக்கிரம் தூங்குங்க" என்றாள்...

தனக்கு அருகில் அமருமாறு ஷோஃபாவை தட்டி காட்டியவன் தலை அசைத்து வா என்பது போல் சைகை செய்ய, குழந்தையை அவனிடம் கொடுத்தவள் அவன் அருகில் அமர, குழந்தைக்கு அர்ஜூனும் திவ்யாவும் சேர்ந்து முடிவு செய்திருந்த பெயரைப் பற்றியச் சிறு சலசலப்பு எழுந்தது...

முதன் முறை தன் மருமகனிடம் நேரிடையாகப் பேசத்

துவங்கிய சிவசுப்ரமணியம்...

"மாப்பிள்ளை... நீங்க தேர்ந்தெடுத்திருக்கிற பேரு நல்லாதான் இருக்கு... ஆனால்..." என்று தயங்கியவர் திவ்யாவைப் பார்க்க, தன் கணவனின் அருகில் அமர்ந்திருந்தவளுக்குத் தன் தந்தை கேட்கப் போகும் கேள்வி புரிந்ததால்...

"அப்பா... இவங்களுக்கும் எனக்கும் பிடிச்சிருக்குப்பா அந்தப் பேரு... அதனால் அதையே வச்சுடுவோம் பா" என்க,

தன் மனையாளின் தோள் மீது இருந்த தன் கரத்தில் அழுத்தம் கொடுத்த அர்ஜூன்..

"அவங்க என்ன கேட்கனுமோ கேட்கட்டும் திவி... இவன் அவங்களுக்கும் பேரன்..." என்றவன் திரும்பி தன் மாமனாரைப் பார்த்தவன்...

"என்ன கேட்கனுமோ தயங்காமல் கேளுங்க" என்றான்...

அவன் என்னவோ சாதாரனமாகத் தான் இருந்தான்... ஆனால் சுற்றியிருந்தவர்களுக்குத் தான் திவ்யாவின்

தந்தை கேட்கப் போவது கிட்டத்தட்ட புரிந்திருந்ததனாலேயும், அதே கேள்வி அவர்கள் மனதையும் குடைந்துக் கொண்டிருந்ததனாலேயும் , இப்பொழுது அமைதியாக, புன்னகைத் தவழும் முகத்துடன் அமர்ந்திருக்கும் அர்ஜூன் கேள்வியைக் கேட்டப் பின் என்ன அவதாரம் எடுக்கப் போகிறானோ என்று கலக்கமாக இருந்தது...

மீண்டும் சன்னமான குரலில்...

"இல்ல மாப்பிள்ளை... அபிமன்யு பேரு ரொம்ப நல்லா இருக்கு... இல்லைன்னு சொல்லல்லை... ஆனால் அபிமன்யு..." என்று முடிக்கவில்லை...

திவ்யா சட்டென்று... "அப்பா..." என்க...

தன் மனையாளைப் திரும்பிப் பார்த்தவன்...

"திவி..." என்ற ஒற்றை வார்த்தையில் அவளை அடக்கியவன் பேசுங்கள் என்பது போல் தன் மாமனாரிடம் தலை அசைக்க...

ஏதோ தைரியத்தில் பேச்சை துவங்கிவிட்டோம்... பேசி முடித்துவிடுவோம் என்பது போல்...

"அதான் மாப்பிள்ளை... வேற பேரு வைக்கலாமேன்னு தான்..." என்று ஒரு வழியாக, இழுத்து, தயங்கி, தடுமாறி முடித்தார்...

ஆனால் அவர், தான் கேட்க வந்ததைக் கேட்டு முடித்து அடுத்து மூச்சுக் கூட விடவில்லை... சட்டென்று...

"வேற பேரு வச்சா குழந்தைக்கு ஆயுசு எத்தனைன்னு இப்போ உங்களால கரெக்ட்டா சொல்ல முடியுமா?" என்று எதிர் கேள்விக் கேட்ட தன் மருமகனைப் பார்த்தவர் விதிர்த்துப் போய், விட்ட மூச்சை மீண்டும் உள்வாங்கி இழுத்து பிடித்தவருக்கு அவன் கேட்ட கேள்விக்குப் பதில் மட்டும் சொல்லத் தெரியவில்லை....

அமர்ந்திருந்த தோரணையைச் சற்று மாற்றி மேலும் ஷோஃபாவில் சாய்ந்து அமர்ந்த அர்ஜூன்,

"அன்கில்... எனக்கும் மஹாபாரதம் தெரியும்..." என்றவன் புன்னகைத்தவாறே தன் மாமனாரின் விழிகளை ஊடுறுவுவது போல் பார்த்தவாறே பேச,

அவனின் பார்வையில் எப்பொழுதுமே ஒரு கூரிய சக்தி இருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தாலும்,

அதில் தெரிவது உறுதியா? கடினமா? நிதானமா? மென்மையா? என்று எவராலும் புரிந்து கொள்ள முடியாது என்று தெரிந்திருந்தாலும், இன்று நேருக்கு நேர் அவனுக்கு வெகு அருகில் அமர்ந்து கேள்விக் கேட்டுவிட்டு அடி மனதில் ஒரு கலத்தோடு அமர்ந்திருந்தவரைப் பார்த்த கலாவிற்கு இவருக்கு ஏன் இந்த வேலை என்றே தோன்றியது...

வழக்கமாக அவனிடம் கேள்விக் கேட்கும் தைரியம் ஒருவருக்கும் இருந்ததில்லை... அப்படியே கேட்டாலும் ஒற்றை வார்த்தையில் பதிலறுத்துவிட்டு அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்பது போல் தனது வேலையில் மூழ்கிவிடுவான்...

இது அவனைச் சுற்றியுள்ள அனைவருக்கும் தெரியும்... ஆனால் முதன் முறையாகத் தனது மாமனாரின் கேள்விக்கு விளக்கம் அளிக்க விரும்புவன் போல் தன்னை நெருங்கி அமர்ந்து தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கும் தன் மனைவியைப் பார்த்தவன் பேசத் துவங்கினான்...

"அபிமன்யு கிருஷ்ணா... " என்று வாய் விட்டு சிரித்தவன் "என்ன ஒரு ஐரனிப் [irony] பார்த்தீங்களா?.... மஹாபாரதத்தில் அந்தக் கிருஷ்ணா அபிமன்யுவைக் காப்பாத்தாம விட்டுட்டுதாலத் தானோ என்னவோ இப்ப இந்த அபிமன்யு பேரில் கூடத் துணையா இருக்க முடிவுப் பண்ணிட்டாருப் போல..." என்று கூறும்

அர்ஜூனை அனைவரும் வியந்துப் பார்த்தார்கள் என்றால், ஆச்சரியத்தில் வாயை பிளந்து கொண்டு தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கும் மனையாளைப் பார்த்தவன்...

"கோவிலுக்கே போகாதவன் கிருஷ்ணர் என் பையனைப் பார்த்துக்குவார்ன்னு சொல்றானேன்னு நினைக்கிறியா... ஸ்டில் ஐ டோண்ட் பிலிவ் இன் காட்... பட் திஸ் இஸ் அன் எபிக் [Still i don't believe in God, but this is an epic]" என்றவன் அவள் இன்னும் கண் இமைக்காமல் தன்னையே பார்த்திருப்பதைக் கண்டு என்ன என்பது போல் புருவத்தை ஏற்றி இறக்க, தன் கணவனின் பேச்சில் அவள் மதி மயங்கி இருந்தாள் என்றால் அவனின் செய்கையில், அதன் அழகில் சொக்கிப் போனவள் ஒன்றும் இல்லை என்பது போல் தலை அசைத்துப் புன்னகைக்கத் தொடர்ந்தான் அர்ஜூன்....

"அந்த அர்ஜூனோட மகன் சக்ரவியூகத்தை உடைக்கும் சூத்திரத்தை முழுசா கத்துக்காததினால் தன் உயிரை இழந்தான்... ஆனால் இந்த அர்ஜூனோட மகன் நிச்சயம் அப்படி இருக்கமாட்டான்... அப்படி இருக்கவும் விட மாட்டேன்... அவன் அடி எடுத்து வைக்கற வியூகம், அது எந்த வியூகமாக இருந்தாலும் சரி, அது உடைக்காமல் திரும்பி வரமாட்டான்... அது மட்டுமில்ல... எந்தத் துரோனாச்சார்யாவாலேயும் என்னை என் மகன் கிட்ட இருந்து பிரிக்க முடியாது.... எந்த ஜெயத்ரதனாலேயும் என் மகன் காலடி எடுத்து வச்ச பாதையை அடைக்க முடியாது...." என்று அவன் சொல்லும் பொழுது

தங்களையும் அறியாமல் அங்கு இருந்த அனைவருக்கும் கோகுலின் நியாபகம் வந்தது....

அவன் என்னென்னவோ கொடூரமான, கொடிய காரியங்களைச் செய்திருந்தாலும், திவ்யாவின் குழந்தைப் பேற்றை அவன் மூலம் விதி மாற்றி எழுத நினைத்திருந்தாலும், இந்த அபிமன்யு உலகத்திற்குள் நுழையும் பாதையை முழுக்க அடைத்திருந்தாலும், இந்த அர்ஜூன் அத்தனைப் சோதனைகளையும் உடைத்து தனது மகனை பிரபஞ்சத்திற்குள் கொண்டு வரவில்லையா என்ன?

அர்ஜூனின் பேச்சில் மூச்சுக் கூட விட மறந்து அனைவரும் அவனையே பார்த்திருக்க, மேலும் தொடர்ந்தவன்...

"அந்த அர்ஜூனோட மகன் அபிமன்யு, தன்னோட மரணத்தினால கௌரவர்களுக்குப் பெரிய கேட்டை விளைவிச்சான்... ஆனால் என் மகன் யாரையும் அழிக்க மரணிக்க வேண்டிய அவசியம் இல்லை... ஏனா அவனுக்குக் குருவா இருக்கப் போறது இந்த அர்ஜூன்... இந்த அர்ஜூன் இருக்கறவரைக்கும் மட்டுமல்ல, எப்போதுமே என் அபிமன்யு மேல யாராலயும் கை வக்க முடியாது... " என்று முடித்த தன் கணவனைப் பார்த்தவளின் விழிகளில் நீர் தளும்ப,

முதன் முறை தங்களைச் சுற்றிலும் அனைவரும் அமர்ந்திருப்பதைக் கண்டு கொள்ளாமல் தானாகத் தன் கணவனின் தோளில் தலை சாய்ந்தாள்...

மனையாளின் உரிமையான செய்கையில், அவள் தன் தோள் சாய்ந்ததில் சிலிர்த்துப் போனவன் அவளைத் தன்னுடன் இறுக்க அணைத்து தன் மாமனாரை மட்டும் அல்ல, அனைவரையும் பார்த்தவன்...

"ஸோ... நாங்க டிஸைட் பண்ணிட்டோம்... எங்க மகன் பேரு.... அபிமன்யு.... அபிமன்யு கிருஷ்ணா...."

Likes:Priayamadhavan, Sabeetha, selviesan and 55 others

Jelineusa

JB

Yesterday at 6:14 AM

#79

புண்ணியதானம் அன்று அதி காலையிலேயே எழுந்த திவ்யா குளித்து முடித்துப் பட்டு புடவைக் கட்டி கீழே வந்தவள் தன் அன்னையோடு சேர்ந்து மகனையும் குளிக்க வைத்து உடை உடுத்த, அர்ஜூன் அழைக்கும் சத்தம் கேட்டது...

ஸ்ரீயிடம் குழந்தையைக் கொடுத்தவள்...

"அத்தை அவங்க கூப்புடறாங்க... நீங்க கொஞ்சம் குழந்தையைப் பாத்துக்கிறீங்களா? அம்மா குளிச்சுட்டு

ரெடியாகனும்னு சொன்னாங்க" என்று கூறி வேகமாக மாடி ஏறுவதற்குள் அர்ஜூன் அவளை மூன்று முறை அழைத்திருந்தான்...

வேகமாக அறைக்குள் நுழைந்தவளின் கொலுசு சத்தம் கேட்டு திரும்பி பார்க்க, வெங்காயச் சருகு நிறத்தில் பட்டு புடவை உடுத்தி அதே நிறத்தில் கற்கள் பதித்த ஆபரணங்கள் அணிந்திருந்தவள், எளிமையான அலங்காரத்தில் வழக்கத்திற்கு மாறாகப் பெரிதாகப் பொட்டு வைத்து, சிகப்புக் கல்லில் மூக்குத்திப் அணிந்து, பெண்மையின் அழகோடு தாய்மையின் அழகும் போட்டிப் போட்டதில் தேவதைப் போல் இதயத்தைக் கலங்க வைக்கும் எழிலுடன், மயக்கம் தரும் விழிகளுடன் நின்றவளை, இமைக்க மறந்து ரசித்த அர்ஜூன், இதயத்திற்குள் பிரவாகிக்கும் உணர்வுகளோடு அவளை நோக்கி அடி எடுத்து வைத்தான்....

கணவனின் பார்வையும், அவனின் விஷம விழிகளில் வழியும் தாபமும், தன்னை நோக்கி அவன் நடந்து வரும் வேகமும் அவனின் உணர்வுகளை அப்பட்டமாக வெளிப்படுத்த, அவன் அடுத்துச் செய்யவிருப்பது புரிந்தவள் தன்னையும் அறியாமல் இரு அடிகள் எடுத்துப் பின்னால் நகர, தன்னவளின் அருகாமையைத் தேடி ஏங்கிருந்த மனதில் படிந்திருந்த வேட்கை சிலிர்த்து எழுந்ததில் எட்டி அவள் இடையைப் பிடித்து இழுத்து அவளின் முகம் நோக்கி குனிந்தான்....

"என்னங்க.... கீழ அவ்வளவு வேலை இருக்கு... அத்தைய வேற குழந்தையைப் பார்த்துக்கச் சொல்லிட்டு வந்திருக்கேன்... நீங்க என்னன்னா நேரம் காலம் தெரியாம?" என்று அவன் மார்பில் கை வைத்து அவள் தள்ள...

இத்தனை நாள் தன்னவளைப் பிரிந்திருந்ததில் தனக்கு இருக்கும் அதே ஏக்கமும், எதிர்ப்பார்ப்பும் அவளுக்கும் இருக்கும் தானே என்று எண்ணி அவளை அணைத்திருந்தவனிற்கு அவளின் புறக்கணிப்பும், அவள் தன்னை ஒதுக்கி தள்ளிவிட்டதும் சுள்ளென்று கோபத்தைக் கிளறிவிட்டது....

அவளைச் சட்டென்று விட்டவன் ஒன்றும் பேசாமல் நகர, வழக்கமாகத் தான், எவ்வளவு வேண்டாம் என்று சொன்னாலும், அவனைத் தள்ளிவிட்டு ஓடினாலும், பிடிவாதமாகத் தன்னைத் துரத்திப் பிடித்து வலுக்கட்டாயமாகத் தன் எண்ணங்களை, எதிர்பார்ப்புகளைத் தீர்த்துக் கொள்ளும் தன் கணவனின் இந்த அமைதி அவளுக்கு அவனின் கோபத்தின் உச்சியை நன்கு உணர்த்த, சடுதியில் மனம் கலங்கியவள் அவன் அருகில் வந்து இறுக்கி அணைத்தவள் நெஞ்சில் சாய்ந்து,

"சாரிங்க... கீழ நிறைய வேலை இருக்கு... குழந்தைய வேற ரெடி பண்ணனும்... அதான் சட்டுன்னு அப்படிச் சொல்லிட்டேன்" என்று உள்ளம் தவித்துப் போய்க்

கூறினாள்...

தன்னவளின் கலக்கத்தை உணர்ந்திருந்தும், அவளின் தவிப்புப் புரிந்திருந்தும் தன் நெஞ்சில் சாய்ந்திருந்தவளை மெல்ல தன்னை விட்டு தள்ளி நிறுத்தியவன் ஒன்றும் பேசாமால் மௌனமாகத் தன் பீரோவை திறந்து தன் துண்டை எடுக்க, மீண்டும் அவன் அருகில் சென்றவள் அவனின் தோள் தொட்டு....

"கோபமா?" என்றாள் மெல்லிய குரலில் மலரினும் மெல்லிய அர்ஜூனின் மனையாள்...

அவளின் கேள்விக்குத் திரும்பி அவளை ஆழ்ந்து ஒரு நொடியே பார்த்தவன் பதில் ஒன்றும் சொல்லாமல், குளியல் அறைக்குள் சென்று கதவை சாத்திக் கொள்ள,

தன் கணவனின் இந்த மௌனமும், தன்னைத் தள்ளி நிறுத்தியதில் தெரிந்த அவனது கோபமும், விவரிக்க இயலாத சஞ்சலத்தில் மனதைப் போட்டு பிசைந்தெடுக்க, வழக்கம் போல் தனக்குத் தானே வாய்விட்டு.....

"சே! என்ன திவ்யா? நல்ல நாளும் அதுவும் இப்படி அவரைக் கோபப்படுத்திட்ட... இப்ப அவர எப்படிச் சமாளிக்கப் போற" என்று கூறிக் கொண்டே கட்டிலில்

அமர்ந்தவளிற்குத் தன் கணவனைச் சமாதானப்படுத்தாமல் தங்களின் அறையை விட்டு செல்ல மனம் வரவில்லை...

குளித்து முடித்து வெளியில் வந்தவன் ஏதோ தீவிர யோசனையுடன் தனது கைவிரல்களைக் கோர்த்து அதனையே பார்த்துக் கட்டிலில் அமர்ந்திருந்தவளைக் கணடவனிற்கு அவளின் கலக்கம் புரிய, இருந்தும் மலை ஏறியிருந்த தன் கோபத்தில் இருந்து விடாப்பிடியாகக் கீழே இறங்க மாட்டேன் என்பது போல் முகத்திலும் இன்னும் கடுமையைப் படறவிட்டுக் கொண்டவன்,

"இன்னும் இங்க என்ன பன்ற? குழந்தை அழப் போறான்... கீழே போ" என்றான்...

தன் கணவனின் கோபம் அவளின் பூ மனதை வாள் கொண்டு அறுத்தது போல் வலியில் வாட்டியது.. அவனை நிமிர்ந்துப் பார்த்தவளைக் கண்டு கொள்ளாமல் அவன் விஷேஷங்களிற்குக் கிளம்ப ஆயத்தமாக, விழிகளில் நீர் தளும்ப,

"இல்லை... அத்தையும் அம்மாவும் பாத்துக்குவாங்க... நீங்க எதுக்குக் கூப்பிட்டீங்கன்னு சொல்லவே இல்லையே? " எனவும்....

அவளின் வார்த்தைகளில் தெரிந்த தவிப்பும், மெல்லிய குரலில் தெரிந்த தடுமாற்றமும் புரிந்து அவளைத் திரும்பிப் பார்த்தவன், ஒன்றும் பேசாமல் அமைதியாக மீண்டும் கண்ணாடி முன் நின்று தலை துவட்ட, அவனின் கோபமும், மௌனமும் மனதிற்குள் வலியை ஏற்படுத்த, அவனை நெருங்கி வந்தவள் வெற்று ஈர உடம்புடன் வெறும் துண்டை மட்டும் இடுப்பில் கட்டிக் கொண்டு இருந்தவனின் முதுகுக்குப் பின்னால் இருந்து அவனை இறுக்கக் கட்டி பிடித்து....

"சாரிங்க.... இன்னும் கோபமா?" என்றாள்...

தனது கோபம் தன் மனையாளைப் பாதிப்பதைக் தெரிந்துக் கொள்வதில் ஆண்களுக்குக் எப்பொழுதும் ஒரு கர்வம் தான் போலும்... கண்ணாடி வழியாகவே அவளைப் பார்த்திருந்தவன் இப்பொழுது அவளின் இறுக்கிய அணைப்பில் சிலிர்த்தாலும், மேலும் முறுக்கேற்றிக் கொண்டு அவளின் கேள்விக்குப் பதிலறுகாமல்....

"உடம்பு எல்லாம் ஈரமா இருக்கு... புடவை நனைய போகுது பாரு" என்றான்...

"பரவாயில்லை" என்றவள் தன் தலையை அவன் முதுகில் சாய்க்க, மௌனமாகத் தலை துவட்டியவன் அவள் தன்னை விட்டு நகரப் போவதில்லை என்று

தெரிந்து....

"திவி... நான் கிளம்பனும்...... நீ கீழே போ" என்றான்...

தன் கணவனின் குணம் தெரிந்தும் அவனைத் தள்ளியதில் வந்த வினை தான் இது... ஆனால் இப்பொழுது எப்படி அவனைச் சமாதானப் படுத்துவது என்று குழம்பியவள் கண்ணாடிக்கும், அவனிற்கும் இருந்த அந்தச் சின்ன இடைவெளிக்குள் நுழைந்து நின்றவள் விழிகளில் நீர் சொரிய, அவன் கன்னத்தை வருடி....

"நான் வேணும்னு உங்களைத் தள்ளலை... நிறைய வேலை இருக்கு, அதான்..." என்று கெஞ்சியும் அவன் இறங்கி வருவதாய்த் தெரியவில்லை ஆதலால் என்ன செய்து அவனைத் தணிப்பது என்று ஒரு நொடி யோசித்தவள் மெல்ல அவன் பாதங்களின் மீது தன் இரு பாதங்களையும் வைத்து எம்பி, இன்னும் அவனுடைய உயரத்திற்கு வர முடியாததால் முடிந்த வரை எக்கியவள் அவன் கழுத்தில் கைக் கொடுத்து தலையின் பின் பகுதியில் ஈர முடிகளுக்குள் விரல்கள் நுழைத்து, முகத்தைத் தன் உயரத்திற்குக் கீழ் இழுத்து, முதன் முறை தன் கணவனின் இதழ்களைத் தன் இதழ்களுக்குள் ஆழ புதைத்துக் கொண்டாள்...

அர்ஜூனிற்கும் தன் மனையாளின் கண்ணீர் கசந்தது

தான்... அவளின் மெல்லிய குரலின் இறைஞ்சுதல் அவன் உள்ளத்தை வலிக்கச் செய்தது தான்.... ஆனாலும் இளக மனம் வராமல் தனது கோபத்தை இறுக்கிப் பிடித்திருந்தவனிற்கு (காதலில் ஊடலும் ஒரு அழகிய சுகம் தானே!) தன்னவளின் இந்தத் திடீர் முத்தம்.... அதுவும் திருமணம் நடந்து கிட்டத்தட்ட இந்த ஒன்றரை வருடங்களில் இதழ் முத்தமாகட்டும், அணைப்பாகட்டும், இல்லை கூடலாகட்டும், அனைத்துமே அவன் விருப்பப்பட்டுத் தான் நடந்திருக்கிறது...

முதன் முறை தன் மனம் கவர்ந்த மனையாள் அவளாகத் தன் வெட்கத்தை விட்டு தன் இதழில் மென்மையைக் கைவிட்டு வன்மையாக இதழ் பதித்திருக்கிறாள்... அவளின் கூச்சமற்ற கடுமையான இதழொற்றல் மயிற்சிலிர்ப்பில் ஆழ்த்தியதில், மனதிற்குள் மகிழ்ச்சியையும் உடலில் கிளர்ச்சியையும் உண்டு பண்ணியிருந்தாலும் அந்த இன்பத்தை இன்னும் அனுபவிக்க நினைத்தவன் அவளைத் தொடாமல் அவளின் இதழ் ஒற்றலில் சுகமாய் நனைந்திருந்திருக்க....

தான் இத்தனை இறங்கி வந்தும், தனது வெட்கத்தை விட்டு இவ்வளவு ஆழமாக அவன் இதழ்களைத் தனக்குள் சிறை செய்தும், தன் கணவனின் ஒத்துழையாமையை உணர்ந்த அந்தப் பேதை அவன் விரல்கள் கூடத் தன்னைத் தொடாதது கண்டு மனம் சுணங்கியவள், இதற்கு மேல் என்ன செய்வது என்று

கலங்கி அவனின் இதழை விடுவித்து, விழிகளில் திரையிட்டிருந்த நீர் பெருக அவன் முகத்தைப் பார்க்காமல் தலை குனிந்து அவன் பாதங்களில் இருந்து இறங்க எத்தனிக்க, சட்டென்று தனது இடது கரத்தால் அவளின் இடைப் பற்றியவன், வலதுக் கரத்தை அவளின் கழுத்தில் கொடுத்துத் தன்னை நோக்கி இழுத்தவன் தன்னவள் துவங்கிய இதழொற்றலை தான் தொடர்ந்தான்...

கணவனின் முத்தத்தில் சிலிர்த்தவள், அவன் கோபம் தணிந்ததில் மனம் உருகியவள், அவனின் இறுக்கிய அணைப்பில் நெகிழ்ந்து அவனின் வன்மையான முத்தத்திற்குத் துணைப் போக எத்தனை நேரம் தான் அவ்வாறு கட்டுண்டு இருந்தார்களோ...
தெரியவில்லை....

நெடு நேரம் நடந்த அந்த இதழொற்றலில் கணவன் மனைவி இருவரும் உலகை மறந்திருக்க, முதலில் அவன் தான் தன்னிலை இழுத்துப் பிடித்துத் தன் மனையாளை விடுவிக்க, இன்னும் அவன் பதங்களில் மீது இருந்த தன் பாதங்களை எடுக்காமல், அவன் பார்வைக்குள் தன் விழிகளைக் கலக்க விட்டவள் தளும்பிய நீர் மேலும் சொரிய...

"ம்ப்ச்... சாரிடி.." என்றவாறே அவளின் விழிகளில் வழியும் நீரைத் தன் விரல்களால் துடைக்க,

"ஏங்க இவ்வளவு கோபம்? சரி... என்கிட்ட கோபப் படுங்க... வேண்டாம்னு சொல்லலை... திட்டுங்க.... என்ன வேனா சொல்லுங்க... ஆனால் ப்ளீஸ்... பேசாம மட்டும் இருக்காதீங்க... என்னால தாங்க முடியலைங்க..." என்றாள்...

அவளின் அழுகையில் கரைந்து மனம் உருகியவன்...

·"திவி... உண்மையிலுமே ஐ மிஸ் யூ டி... நான் உன்னை ரொம்ப மிஸ் பண்றேன்.. " என்றவன் அவளைப் பிடித்திருந்த கரத்தில் இறுக்கத்தைக் கூட்டி...

"என்ன பத்தி உனக்கு நல்லா தெரியும்.... நான் ரொம்பச் சந்தோஷமா இருக்கிறது இந்த ரூமில் இருக்கிற வரை தான்... அதுவும் நீ என் கூட இருக்கும் போது தான்... நான் இந்த ரூம விட்டு வெளியில் போய்ட்டா என்னையும் அறியாம நான் ரொம்பக் கடுமையா மாறிடுவேன்... பட் தெட்ஸ் மை கேரக்டர் [But that's my character]..... பிஸ்னஸ் வேர்ல்டுலயும் அப்படித் தான் இருக்கனும்.... ஆனால் இப்போ எல்லாம் நீயும் நம்ம ரூமிற்கு வருவதே இல்லை... ஐ அண்டர்ஸ்டாண்ட்... நம்ம குழந்தையைப் பார்த்துக்கறதுலேயே உன் நேரம் போயிடுது... பட் அட் தி ஸேம் டைம் ஐ ஃபீல் வெரி லோன்லி திவி [But at the same time I feel very lonely Dhivi] ... என்னமோ ரொம்பத் தனியா இருக்கிற மாதிரி இருக்கு... நான் உன்னை இந்த ரூமிற்குக் கூப்பிடுவது நிச்சயமா வேற எந்த எண்ணத்திலேயும் இல்லை... எனக்கு உன் கூடவே

இருக்கனும்... அது தான், அது மட்டும் தான்.. ஐ மிஸ் யூ ஸோ மச் டி [I miss you so much di] " என்றான் அத்தனை தவிப்புகளையும் தன் வார்த்தைகளில் தேக்கி வைத்து....

எவன் தன்னுடனான திருமணத்தை ஆழமாக வெறுத்தானோ..... எவன் தன் நிழல் கூடத் தன் மேல் விழக்கூடாது என்று கூறினானோ... எவன் தன்னை விட்டுத் தூரம் போகத் துடித்தானோ... எவன் தன்னை வேலைகாரியாகக் கூட வைத்துக் கொள்ளத் தகுதியற்றவள் என்று கடிந்தானோ.... அவனே தான் இல்லாமல் இனி வாழ்க்கை இல்லை என்பதை எவ்வளவு அழகாக, ஆழமாக எடுத்துக் கூறிவிட்டான் என்று நினைத்தவளுக்குத் தன்னவனது தவிப்பு, அவனுக்குத் தன் மேல் உள்ள அடங்காத காதலை மனதில் சாரலாய் வீசி உடலையும் உள்ளத்தையும் சிலிர்க்க வைத்தது...

அவனின் கலக்கம், தவிப்பு, ஏக்கம் என்று அத்தனை உணர்வுகளையும் தன் உணர்வாக உணர்ந்துக் கொண்டவள் அவன் முகத்தைத் தன் இரு கைகளாலும் தாங்கி...

"நான் உங்களை விட்டு எங்கேயும் போக மாட்டேன்... இன்னக்கு நைட்ல இருந்து நான் நம்ம ரூமில் தான் இருப்பேன்... யார் என்ன சொன்னாலும் நான் கேட்கப் போறதில்லை... எனக்கு நீங்களும் நம் குழந்தையும் தான் முக்கியம்" என்றவள் அப்பொழுது தான்

உணர்ந்தாள் தான் இன்னும் அவன் பாதங்களின் மீது நிற்பதை...

"அய்யய்யோ! எவ்வளவு நேரமா இப்படியே நிக்கிறேன்... சே... உங்க காலு வலிச்சிருக்கும்... " என்றவள் கீழ் இறங்க...

"யாரு? நீ? நீ நிக்கிறது எனக்கு வலிக்குது? ம்ம்ம்... " என்று புன்னகைத்தவன்.

"ஆமாம்... அதென்ன? சட்டுன்னு அப்படி இழுத்து பிடிச்சு வச்சுக் கிஸ் பண்ணிட்டா.... செம்ம கிஸ்டி.... ஆனால் கோபப்பட்டா தான் இதெல்லாம் கிடைக்கும் போல.... ம்ம்ம்...." என்றவனின் குறும்பு சிரிப்பை வெட்கம் தாளாமல் கண் கொண்டு பார்க்க முடியாமல் சட்டென்று அவனை விட்டு விலகி தங்களின் அறையை விட்டு செல்ல எத்தனித்தவளுக்கு அப்பொழுது தான் ஞாபகத்தில் வந்தது தன் கணவன் தன்னை அழைத்துத் தான், தங்களின் அறைக்குத் தான் வந்தது என்று... அவனைத் திரும்பிப் பார்த்தவள்...

"இன்னும் நீங்க எதுக்குக் கூப்பிட்டீங்கன்னு சொல்லலையே..." என்க

"பரவாயில்லையே... அது கூட ஞாபகம் இருக்கு போல...

நான் கூட உனக்கு ஹஸ்பண்டுன்னு ஒருத்தன் இங்க இருக்கிறது மறந்திருச்சோன்னு நினைச்சேன்" என்றவன்,

"நீ என்ன புடவை கட்டியிருக்கன்னு பார்த்து அதற்கு மேட்சா ஷெர்ட் போடலாம்னு பார்க்க தான் கூப்பிட்டேன்... ஆனால் உன்னைப் பார்த்ததும் என்னால கண்ட்ரோல் பண்ண முடியலை... அதான் ஒரு சின்னக் கிஸ் பண்ணலாம்னா அதுக்குள்ள அம்மணிக்கு அவ்வளவு கோபம் வந்துடுச்சு..." என்றான் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டே...

அவனின் அழகான, ஆண்மைக் கலந்த சிரிப்பை ரசித்துக் கொண்டே தங்களின் பீரோவைத் திறந்தவள் அடர் பச்சை நிறத்தில் இருந்த பட்டு சட்டையை எடுத்தவள்...

"இது நானும் மஹா அண்ணியும் அன்னைக்குக் கடைக்குப் போனப்ப உங்களுக்கு எடுத்தது... உங்கக்கிட்ட சொல்ல மறந்துட்டேன்... என்னுடைய புடவை கிட்டத்தட்ட பிங் கலர்... உங்களுடைய ஷெர்ட் பச்சையா இருந்தால், தாமரைப் பூவும் இலையோட சேர்ந்து இருக்கிற மாதிரி சூப்பரா இருக்கும்" என்று குழந்தைத் தனமான சிரிப்புடன் கூறியவள் அவனிடம் சட்டையை எடுத்துக் கொடுக்க,

"அப்போ! நான் என்ன இலையா?" என்றான்....

"ஐயோ! நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை" என்று கீழுதடு கடித்துக் கெஞ்ச...

அவளின் உதட்டின் மடிப்பில் கன்னத்தில் இருக்கும் குழி ஆழமாகத் தெரிய....

அவளை நெருங்கியவன் கன்னத்துக் குழியை வருடியவன்

"இந்தக் குழியப் பார்த்தாலே திரும்பி கிஸ் பண்ணனும் போல இருக்கே" எனவும்..

முகம் வெட்கத்தில் அந்தி வானமாய்ச் சிவக்க, களுக்கென்று சிரித்துக் கொண்டே அவனை விட்டு விலகி வெளியில் ஓடினாள்...

Likes:Priayamadhavan, Sabeetha, selviesan and 61 others

Jelineusa
JB

Yesterday at 6:15 AM
#80

அர்ஜூனின் ஸ்டையிலிற்குப் பச்சை நிறத்தில் சட்டையெல்லாம் ஒத்து வராத ஒன்று... ஆனால் தன் மனைவி தானாகக் கடைக்குச் சென்று எடுத்துக்

கொடுத்திருக்கிறாள்...

அதுவும் இன்று தான் அதனை அணிவதற்கு அவளின் குழந்தைத் தனமான விளக்கத்தில் மனம் மயங்கியவன் தன்னவளிற்காக, அதனை அணிந்தவன், அதனோடு பட்டு வேஷ்டியும் அணிந்து கீழே வர, அங்குக் குழந்தையை விஷேஷத்திற்குத் தயார் செய்து கொண்டிருந்தவள் கணவனின் படி இறங்கும் சத்தத்தில் திரும்பி பார்க்க, கணவனின் கம்பீர அழகில் வழக்கம் போல் காதல் கொண்ட அவளின் மலர் மனம் உருகி கரைய, கையில் குழந்தையை வைத்துக் கொண்டு வைத்த கண் எடுக்காமல் தன்னையே பார்க்கும் மனைவியைப் பார்த்தவன் அவள் அருகில் வந்து...

"ஒரு குழந்தையைப் பெத்து எடுத்த பிறகும் என்னைய சைட் அடிக்கறத நீ விடலைடி..." என்று கிண்டல் செய்ய,

தன் சுய நினைவிற்க்கு வந்தவள் "இந்த ட்ரெஸ் உங்களுக்கு ரொம்ப நல்லா இருக்குங்க" என்றாள் முகமெல்லாம் பூரிப்புடனும், உள்ளம் முழுவதும் "இவன் என் கணவன்" என்ற கர்வத்துடனும்...

புரோகிதர் குறித்துக் கொடுத்திருந்த நேரத்தில் குழந்தையைத் தொட்டிலில் போட்டவர்கள் சொந்தங்கள் சுற்றிலும் நிற்க, குழந்தையின் தந்தை

வழி அத்தை என்பதால் மஹா குனிந்து குழந்தையின் காதில் "அபிமன்யூ கிருஷ்ணா... அபிமன்யூ கிருஷ்ணா... அபிமன்யூ கிருஷ்ணா..." என்று மூன்று முறைக் கூற,

அர்ஜூனின் புதல்வன் அபிமன்யூ.... ஆளுமையும், கம்பீரமும், அலாதியான புத்திக் கூர்மையும், சாணக்கியத்தனமும், அஞ்சா நெஞ்சமும் கொண்ட தன் தந்தை அர்ஜூனையே குருவாகக் கொண்டு, தான் எடுத்து வைக்கப் போகும் ஒவ்வொரு அடியிலும், தான் இறங்கப் போகும் அத்தனை களத்திலும் அதிரடியான, ஆர்ப்பாட்டமான வெற்றிவாகை சூடப்போகும் அபிமன்யூ மீண்டும் இந்தப் பிரபஞ்சத்தில் அவதரித்திருந்தவன், கன்னக் குழிகள் ஆழமாக விழ, தனது தந்தை தனக்குத் தேர்ந்தெடுத்திருந்த பெயரை தானும் ஏற்றுக் கொள்வது போல் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதத்தில் அழகாய் புன்னகைத்தான்....

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் குழந்தையின் பெயர் அறிவிக்கப்பட, மற்ற சடங்குகளும் நிறை வேற்றப்பட, கூடியிருந்த சொந்தபந்தங்கள் அனைவரின் ஆசிர்வாதத்துடன் தொட்டிலில் கிடத்தப்பட்டிருந்த அபிமன்யூவைத் தனது கரங்களில் ஏந்திய அர்ஜூன், மனமெல்லாம் பூரிப்புடன், உடல் சிலிர்க்க குழந்தையின் முன்னுச்சியில் முத்தம் பதித்தவன், குழந்தையின் காதில் ஏதோ கிசுகிசுக்க, தன் கணவனையே கண்கள் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த திவ்யாவிற்கு, தன் குழந்தைக்குக்

குருவான அர்ஜூனின் முதல் பாடம் துவங்கியதாகவே தோன்றியது....

அர்ஜூன் கூறியிருந்தபடியே குழந்தையின் புண்ணியதானம் முடிந்ததும் தங்களின் வீட்டிலேயே எளிமையாக வினோத்திற்கும் மஹாவிற்கும் நிச்சயதார்த்தை செய்வது என்று முடிவெடுத்திருந்தது போல், நிச்சய சடங்கையும் துவங்க பெரியவர்கள் அனைவரும் ஒன்று கூட, நிச்சயதார்த்ததிற்குத் தயாராகத் தன் அறைக்குச் சென்றிருந்த மஹாவை திவ்யா அழைத்து வர....

அடர்ந்த அரக்கு நிறத்தில் தங்க சரிகையால் புடவை முழுவதும் கொடி போல் வடிவமைக்கப்பட்டு நெய்திருந்த பட்டு புடவையும், அதற்கேற்றார் போல் அழகிய ஆபரணங்களும் அணிந்து பேரழகியாகப் படி இறங்கி வந்தவள் வினோத்தின் அருகில் நிற்க, ஆனால் அவள் மறந்தும் அவனை நிமிர்ந்துப் பார்த்தாள் இல்லை...

அவளின் பாராமுகத்தில் இருந்தே அவளின் கோபம் புரிய, மனதிற்குள் சிரித்துக் கொண்ட வினோத் கண்களின் வழியாகவே தன்னவளை ஊடுறுவி உள்ளிழுத்துக் கொண்டவனிற்கு இந்தப் பூமியில் உள்ள அனைத்து சந்தோஷங்களும் தன் பாதத்தின் கீழ் வந்து சேர்ந்தது போல் இருந்தது.

தன்னவளின் எழிலில், அவளின் சந்தன மேனி அரக்கு நிறப் பட்டுபுடவையில் பளிங்காகப் பளபளக்க, வெண்மதி போன்ற முகத்துடனும், செக்கச்சிவந்திருந்த நிறத்துடனும், ஏற்கனவே சிவந்திருந்த இதழ்களில் இன்று லேசாக உதட்டுச் சாயம் பூசியிருந்ததில் மேலும் சிவந்திருந்த செவ்விதழ்களுடனும், வசீகரித்த தன்னவளைப் பார்த்திருந்தவனின் இதயம் "இத்தனை பேரழகி என் மனைவியாகப் போகிறவளா? இவள் எனக்கு மட்டுமே சொந்தமா?" என்று காதலில் தடுமாறச் சிந்திக்கும் சக்தியை அறவே இழந்தவன் போல் சுற்றி இருக்கும் அனைவரையும் மறந்தவன் பார்வையாலே அவளைக் கபளீகரம் செய்தான்....

தலை குனிந்து நின்றிருந்தாலும் தன்னவனின் பார்வை அம்புகளின் வீரியத்தில், அவனின் விழிகள் தன் மீது தான் நிலைத்திருக்கிறது என்பதை உணர்ந்தவள் போல் மெல்ல தலை நிமிர, வெள்ளையில் கரு நீலக் கோடு போட்ட சட்டையும், அடர்ந்த நீல நிறப் பேண்டும் அணிந்து உயரமாகவும், கம்பீரமாகவும், நல்ல களையான முகத்துடனும், அழகான புன்னகையுடனும் இருந்தவனைப் பார்த்தவள் கண்ணிமைக்க மறந்தாள்....

நலுங்கு செய்து, நிச்சயதார்த்த பத்திரிக்கையைப் படித்தவர்கள் வினோத்திடம் மோதிரத்தை கொடுக்க, மனமெல்லாம் பூரிப்புமாக, தனது காதலின் வெற்றியை

சுமந்து தத்தளித்த இதயத்தின் சிலிர்ப்புமாக, தன்னவளின் மலர் போன்ற பட்டுக் கரத்தை மென்மையாகப் பற்றியவன் மோதிரம் அணிந்ததும், பிடித்திருந்த கரத்தில் இறுக்கத்தைக் கூட்ட, கூடியிருந்தவர்களின் சிரிப்பு அவளின் சிவந்த முகத்தை மேலும் செம்மையாக்க, தன் கையை அவனிடம் இருந்து பிடுங்கியவள் திவ்யாவின் அருகில் ஓடிச் சென்று நின்றுக் கொண்டாள்...

பாலாவின் தங்கை பாக்கியத்தைத் தவிறக் கூடியிருந்த அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி குடியிருக்க, விருந்தினர்களை விருந்து உண்ண அழைக்கவும் ஒரு வழியாக வினோத்திற்குத் தன்னவளுடனான தான் எதிர்பார்த்திருந்த தனிமை கிடைத்தது...

தன்னை ஒருவரும் கவனிக்கவில்லை என்று உறுதி படுத்திக் கொண்டவன் தனியாக நின்று ஏதோ அலை பேசியில் நோண்டிக் கொண்டிருந்தவளின் பின் புறம் வந்தவன் கிசுகிசுப்பான குரலில்...

"என்ன திவ்யாக்கிட்ட போய் நின்னுக்கிட்டா நான் விட்டுவிடுவேன்னு நினைச்சியா" என்க,

அவனின் குரல் தனக்கு வெகு அருகில், காதில் மீசை ரோமங்கள் உரச கிசுகிசுப்பாகக் கேட்டதில் சிலிர்த்து, பின்னர் அரண்டதில்,

'ஐயோ! அண்ணா பார்த்துடப் போறாங்க" என்று நழுவ பார்க்க,

அவள் கையைப் பற்றியவன் தன் அருகில் இழுத்து,

"செம்ம அழகா இருக்கடி.... இதுக்காகவே சீக்கிரம் ஒரு நல்ல வேலையப் பார்த்துச் செட்டில் ஆகிட்டு, அத்தான் முன்னாடி வந்து உங்க தங்கையை எனக்கு இப்பவே கட்டி வைங்கன்னு கேட்கனும்னு தோனுது" என்றான்...

அவனின் பேச்சில் கிளர்ந்தெழுந்த காதலில் திளைத்தவள் சுற்றம் அறிந்து மெல்லிய குரலில்....

"முதல்ல அதைச் செய்யுங்க" என்று சிரித்தவள் அவனைத் தள்ளிவிட்டு செல்ல முயற்சிக்கவும், அவளின் வெற்றிடையில் பதிந்திருந்த கரத்தால் அவளை மேலும் தன்னை நோக்கி வெகு அருகில் இழுத்தவன், அவளின் கழுத்தைப் பற்றி சட்டென்று இழுத்து, மென் கன்னத்தில் முரட்டுத்தனமாக, அழுத்தமாக முத்தம் பதித்தவன்...

"இது நம்ம எங்கேஜ்மெண்ட் கிஃப்ட் உனக்கு" என்று சொல்ல, அவனின் மார்பில் கரம் வைத்துத் தள்ளியவளின் முகமும் அவன் இறுக்கப் பற்றியிருந்த

வெற்றிடையும் செக்கச் சிவந்தது…

அவளின் வெட்கத்தையும், தன்னவன் முத்தமிடும் பொழுது யார் கண்ணிலாவது தாங்கள் பட்டுவிட்டால் என்று சுற்றி அச்சத்தில் அலைப் பாய்ந்த அவள் கண்களின் அழகையும் கண்ட வினோத்தின் காதல் கொண்ட மனம் தன்னவளை, முழு உரிமையுடன் முழுமையாகத் தன்னவளாக எடுத்துக் கொள்ளப் போகும் அந்த அழகிய பொன்னாளிற்காகக் காத்திருக்கத் துவங்கியது….

விருந்திற்குப் பிறகு வீட்டில் சொந்தபந்தங்கள் ஒருவர் பின் ஒருவராகக் கலைந்து செல்ல, குடும்பத்தினர் மட்டும் அமர்ந்து கலகலப்பாகப் பேசிக் கொண்டிருக்க அர்ஜூன், திவ்யா, வினோத், அருண் மற்றும் மஹாவை அழைத்த ஸ்ரீ, குழந்தை அபிமன்யுவுடன் அனைவரையும் ஒன்றாக அமரச் சொல்லி திருஷ்டி கழிக்க,

"எனக்கு எதுக்கு மாம் திருஷ்டிக் கழிக்கிறீங்க? இன்னைக்குச் சீஃப் கெஸ்ட் லிஸ்ட்டிலேயே நான் இல்லையே" என்று அருண் சிரிக்க,

"ஆஹா… வந்திருந்த என் ஃப்ரெண்ட்ஸ் கண்ணெல்லாம் உங்கள் மேல தாண்ணா இருந்தது…. அதனால் உங்களுக்குத் தான் முதல்ல திருஷ்டி

கழிக்கனும்" என்று மஹா கிண்டல் செய்ய மகிழ்ச்சியும் பூரிப்பும் நிறைந்திருந்த அந்த இல்லமே சிரிப்பில் அலை மோதியது...

அர்ஜூனின் அருகில் அமர்ந்திருந்த வினோத் அர்ஜூனை நோக்கித் திரும்பியவன்...

"ரொம்பத் தேங்ஸ் அத்தான்" என்று கூற...

"ஆமாண்ணா... இவ்வளவு சீக்கிரம் நீங்க எங்கேஜ்மெண்ட் வைப்பீங்கன்னு நாங்க எதிர்பார்க்கலை" என்று மஹாவும் புன்னகைக்க...

வழக்கம் போல் தனது கூரிய பார்வையை அவர்கள் இருவர் மேலும் செலுத்தியவன்....

"நீங்க இரண்டு பேரும் நான் சொன்ன கண்டிஷனை கிட்டத்தட்ட செவன் மன்த்ஸ் கடைப் பிடிச்சிருக்கீங்க... அதாவது, ஒருத்தொருத்தருக்கு பார்க்காமலும் பேசிக்காமலும் இருந்திருக்கீங்க... அது உங்க மேல் எனக்கு நம்பிக்கையைக் கொண்டு வந்தது... அது மட்டுமல்ல.... " என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவன் அதனைச் சொல்லாமல் சில நொடிகள் தாமதித்தவன் சொல்ல வந்ததை விட்டு...

"அதுக்காகத் தான் வினோத்திற்கு நீ தான் மனைவின்னு உறுதி படுத்தினேன்... ஆனால் நிச்சயம் ஆகிடுச்சுன்னு நீங்க இரண்டு பேரும் என்னோட இன்னொரு கண்டிஷனை மீறக் கூடாது... ஸ்டில் மை அதர் கண்டிஷன் இஸ் தேர் [Still my other condition is there]... நீங்க பேசிக்கலாம், பட் வினோத் செட்டில் ஆனதுக்கு அப்புறம் தான் கல்யாணம்... அது வரை நீங்க உங்க லிமிட்ட தாண்டாம இருக்கனும்... ஐ ஹோப் யூ போத் அண்டர்ஸ்டாண்ட வாட் ஐ மீன் [I hope you understand what i mean]" என்றான்...

"கண்டிப்பா அத்தான்" என்று வினோத் கூற, "நிச்சயமா அண்ணா" என்று மஹா கூற இளம் முறுவலித்த அர்ஜூன் எழுந்தவன் தன் அறைக்குச் செல்ல,

"அப்பாடி!!! அண்ணாவும் அண்ணியும் பேசறதுக்காவது இவர் சரின்னாரே" என்று இருந்தது திவ்யாவிற்கு....

அன்று இரவே கலா தன் குடும்பத்தாருடன் கடலூருக்கு கிளம்ப, தன் கணவனிடம் சொன்னது போல் குழந்தையைத் தூக்கிக் கொண்டு தங்களின் அறைக்குச் செல்ல, பால்கணியில் நின்று அலைபேசியில் பேசிக் கொண்டிருந்தவன் குழந்தையில் சிணுங்களில் அழைப்பைத் துண்டித்துவிட்டு உள்ளே வர,

குழந்தைப் பிறந்து கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு தங்களின் அறைக்குத் திரும்பியிருந்த தன் மனையாளைக் கண்ட அர்ஜூனின் மனமும் மலர்ந்ததும் அவன் முகத்தில் புன்னகையும் மலர்ந்தது...

அவளிடம் இருந்து குழந்தையை வாங்கிக் கொண்டவன் கட்டிலில் சாய்வாக அமர, அவன் மார்பில் சாய்ந்து அமர்ந்தவள் சில நிமிடங்கள் பேசாமல் இருந்து பின் மெல்ல...

"ஏங்க உங்கள ஒன்னு கேட்கட்டுமா?" என்றாள்...

குழந்தைப் பிறந்த தினத்திற்கு (கடத்தப் பட்ட நாளிற்கு முன்) முன் இரவு இதே போன்றைய கேள்வியை அவள் கேட்டதை நினைத்து "போச்சுடா?" என்று அர்ஜூன் சொல்லி சிரிக்க...

"ம்ப்ச்... கேட்கட்டுமா? வேண்டாமா? சொல்லுங்க" என்று அவள் சலித்துக் கொள்ள...

"எது கேட்கறதுன்னாலும் கேளுடி... " என்ற கணவனின் முகம் நோக்கி அண்ணாந்துப் பார்த்தவள்...

"அன்னைக்கே கேட்கனும்னு நினைச்சேன்... எப்படிங்க திடீர்னு அண்ணாவுக்கும் மஹா அண்ணிக்கும் நிச்சயம் பண்ணலாம்னு சம்மதிச்சீங்க? நீங்க அவங்கக்கிட்ட அண்ணாவும் அண்ணியும் ஒருத்தொருக்கொருத்தர் பார்க்காம, பேசிக்காம இருந்ததுனால தான் இந்த நிச்சயதார்த்ததுக்கே சம்மதிச்சீங்கன்னு சொன்னீங்க... ஆனால் இடையில நீங்க ஏதோ சொல்ல வந்து அப்புறம் நிறுத்திட்டீங்க... என்னங்க சொல்ல வந்தீங்க?" என்று கேட்கும் தன் மனையாளை இறுக்கி அணைத்து...

"பரவாயில்லையே... ஒரு வழியா நான் என்ன நினைக்கிறேன் புரிஞ்சுக்க ஆரம்பிச்சுட்ட..." என்று வாய் விட்டுச் சிரித்தான் அவளின் அன்புக் கணவன்...

"ம்ப்ச்... சொல்ல்ல்ல்லுங்க... ஏன் சம்மதிச்சீங்க?"

"திவி.... ஒவ்வொரு மனுஷனோட லைஃப்பிலேயும் எதாவது ஒரு விஷயம், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில

நடந்தது அவனைப் பாதிக்கும்.... அவனோட வாழ்க்கையையே அது புரட்டிப் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை... அதே மாதிரி என்னோட லைப்பில் நம்ம மேரேஜ்.... கொஞ்சம் கூட எதிர்பார்க்காம, வாழ்கையில் அதற்கு முன் பார்த்தே இல்லாத ஒரு பொண்ணுக் கழுத்தில தாலிக் கட்டுன்னு மாம் சொன்னதும் அவங்க மேல உள்ள மரியாதைன்னால மட்டும் தான், அவங்களை அந்த இடத்தில அதுவும் அவங்களோட வெரி க்ளோஸ் [Very close] ப்ரெண்டுக்கு முன்னாடி அவமானப்படுத்திடக் கூடாதுங்கற ஒரே காரணத்திற்காக மட்டும் தான் உன் கழுத்தில நான் தாலியைக் கட்டினேன்... ஆனால் அதே சமயம் நான் ஒரு பக்கா பிஸ்னஸ்மேன்.... எடுக்கிற எல்லாக் காரியத்தையும் பிஸ்னஸ் மைண்டோடத்தான் டீல் பண்ணுவேன்... மண்டபத்தில மாம்க்காக உன் கழுத்தில் தாலியைக் கட்டிட்டு, அதற்கு அப்புறம் வெளிய வந்ததும் உன்னை டிவோர்ஸ் பண்ணிடம்னு தான் நினைச்சேன்" என்று சொல்லும் போது தன் மனையாளின் கண்களில் தெரிந்த கலக்கத்தையும், முகத்தில் தெரிந்த சுணக்கத்தையும் கண்டவன்...

"திவி... நான் அப்ப என்ன மனநிலையில் இருந்தேன்னு தான் சொல்றேன்... ஐ ஜஸ்ட் வாண்ட் டு பி ஹானஸ்ட் வித் யூ [I just want to be honest with you] உண்மையச் சொல்றேன்... அவ்வளவு தான்... பட் என்ன தான் நம்ம

கல்யாணம் நம்ம இரண்டு பேரோட லைஃப்பையும் டோட்டலா சேஞ்ச் பண்ணியிருந்தாலும் என் மனசை மாத்தினது, என்னையவே மாத்திக்க வச்சது நீ நம்ம வீட்ட விட்டு போகும் போது எழுதிவச்சுட்டுப் போன லெட்டர் தான்... ஏன்னா நான் அதுக்கு முன்னயே உன்னை லவ் பண்ண ஆரம்பிச்சிட்டேன்... ஆனால் என்னோட லவ்வை ப்ரப்போஸ் பண்ண எனக்குத் தெரியலை... பட் அதுக்குள்ள என்னென்னவே நடந்து நீயும் வெளியப் போய்ட்ட... நான் உண்மையில கோபத்தில தான் வேலைக்காரி அப்படி இப்படின்னு திட்டினேன்... பட் ப்ராமிஸா, எப்ப நான் உன்னை மனசார லவ் பண்ண ஆரம்பிச்சேனோ அதுக்கு அப்புறம் அப்படி ஒரு எண்ணம் எனக்குக் கொஞ்சம் கூடக் கிடையாது... உன் லெட்டர் படிச்சப்பத் தான் நான் உன்னையை அன்னைக்குச் சொன்ன வார்த்தைகளோட அர்த்தம், அதனால் உனக்கு ஏற்பட்டிருக்கும் வலி எனக்குப் புரிஞ்சுது... உன் லெட்டர படிக்கப் படிக்க என் மனசு துடிச்சது எனக்கு மட்டும் தாண்டித் தெரியும்... அது தான் என்னோட லைஃப்பிலே என்னைய மாத்தின ஃப்ர்ஸ்ட் இன்சிடண்ட் [First incident].... தென் உன் டெலிவரி...." என்றவன் அன்றைய நிமிடங்களை, அதன் கொடூரத்தை இன்றும் உணர்ந்தானோ என்னவோ, ஒரு கையால் தனது மனைவியை இறுக்கி அணைத்தவன் மறு கையால் குழந்தையைத் தன் நெஞ்சில் புதைத்துக் கொண்டான்...

சில நொடிகளில் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டவன் தன் மனதில் இருந்த அனைத்தையும் தன் மனம் கவர்ந்தவளிடம் மீண்டும் கொட்டத் துவங்கினான்....

"உன் டெலிவரி என்னைய ரொம்பப் பாதிச்சுடுச்சுடி... அப்ப குழந்தையை வெளியில எடுத்தவுடனே யார்கிட்ட குழந்தையைக் கொடுக்கறதுன்னு நினைச்சுட்டு திரும்பறப்ப வினோத் தன்னோட கையை நீட்டவும், அவர் கைல மஹா அவளோட துப்பட்டாவ போட்டதும், அந்தச் செக்கண்ட்ல அவங்க இரண்டு பேரும் நின்னிட்டு இருந்த தோற்றம் என் மனச கரைச்சுடுச்சு... அதுக்கப்புறம் அடிக்கடி உன் டெலிவரி பத்தி நான் நினைக்கிறப்ப எல்லாம் அவங்க நின்ன விதம் எனக்கு ஞாபகம் வரும்... ஸோ, என்னோட குழந்தையை எனக்குப் பிறகு, கையில் ஏந்தின இவங்க இரண்டு பேருக்கும் ஏதாவது செய்யனும்னு நினைச்சேன்... அதான் அவங்க சந்தோஷப் படுற மாதிரி அவங்க எங்கேஸ்மெண்ட ஃபிக்ஸ் பண்ணினேன்... இத ஏன் நான் கீழ அவங்கக்கிட்ட சொல்லலைன்னு நீ நினைக்கலாம்... பட் என் மனசில இருக்கிறத தெரிஞ்சுக்கிற உரிமை உனக்கு மட்டும் தான் இருக்கு திவி... " என்ற கணவனைக் கண்டவள் உடல் சிலிர்க்க, மயிற்கால்கள் கூச்செறிய எட்டி கண்ணத்தில் வெகு அழுத்தமாக முத்தம் பதிக்க...

குழந்தை அபிமன்யூவை நோக்கியவன்....

"ஆஹா... இன்னைக்கு உங்க அம்மா செம்ம மூட்ல இருக்காடா... " என்று சிரித்தவனின் இதயத்தில் பெருத்த அமைதி நிலவ, மனமெல்லாம் உவகையால் பூரித்து இருக்க, காதலும், காலமும் ஒன்று சேர்ந்தால் எத்தகைய கடினமானவனையும் அது இளக வைக்கும் என்பதை உணர்ந்தவன் போல் தன் மனையாளின் தலையில் தன் தலை சாய்த்துக் கொண்டான் அந்த காதல் கணவன்...

"திவி..."

"ம்ம்"

"குழந்தை தூங்கிட்டான்... தொட்டில்ல போடட்டுமா..."

"ம்ம்"

"ஒன் மன்த் தான் ஆகுது... ஓகேவா?"

கணவனின் கேள்வியில் சட்டென்று நிமிர்ந்துப் பார்த்தவளைக் குறும்பு நகையுடன் கண்டிருந்தவன் கண் சிமிட்டி, உதடுகள் குவித்து முத்தமிடுவதுப் போல் சைகை செய்ய,,,

"நீ அடங்கமாட்டடா அர்ஜூனா...." என்று சொன்னவளிற்கு, சொன்னவுடன் தான் புரிந்தது... தான் தனது கணவனை முதல் முறை பெயர் சொல்லி அழைத்ததும், அது மட்டுமல்லாமல் ஏதோ ஒரு வேகத்தில் அவனை "டா" என்றதும்....

கீழுதடு கடித்து மன்னிப்பு இறைஞ்சும் முக பாவனையோடு...

"ஐயோ! சாரிங்க... தெரியாம வந்துடுச்சு"

"இது கூட க்யூட்டா தான் இருக்கு [Cute]... பட் அது பரவாயில்லை... ஆனால் நான் காலையிலேயே என்ன சொன்னேன்? இப்படி உதட கடிக்காதன்னு... இப்ப

சேதாரத்திற்கு நான் பொறுப்பல்ல..." என்று விஷமத்துடன் கூறிச் சிரித்த கணவனைக் கண்டவள் நாணத்துடன் உள்ளம் சிலிர்த்ததில், அவனின் மார்பில் ஆழ முகம் புதைத்துக் கொண்டாள் அர்ஜீனின் மலரினும் மெல்லிய அவன் மனையாள் ...

உன்னைக் கண்ட நாள் முதல்

என் தூக்கம் போனது

தூங்கினாலும் உன் முகம்

என்னென்று சொல்வது

விழுந்தாய் என் விழியில்

கலந்தாய் என் உயிரில்

நொடியில்

எனது தோளில் தலையைச் சாய்த்து

நெருங்கி நீ வாழ வேண்டும்

பிரிந்து நீயும் நடக்கும் போது
என் இதயம் காயம் படும்

விழிகள் பார்த்து விரல்கள் கோர்த்து
மடியில் நான் தூங்க வேண்டும்
உனது அன்பில் கரையும்போது
உதட்டில் பூ பூத்திடும்

உலகமே..மறக்கிறேன்
சிறகில்லை ..பறக்கிறேன்
மழை இல்லை ..நனைகிறேன்
உன்னில் கரைகிறேன்

சிரித்துப் பேசும் உனது வார்த்தை
தினமும் நான் கேட்கவேண்டும்
என் உலகம் நீ ஆகிடும்

இதயம் தன்னில் அறைகள் நான்கில்

எனக்கு நீ மட்டும் வேண்டும்

தரையின் மேலே நிழலை போலே

இணைந்து நாம் வாழனும்

உதடுகள் சிரிக்கிறேன்

உலகினை ரசிக்கிறேன்

உனக்கென்ன இருக்கிறேன்

நெஞ்சில் சுமக்கிறேன்

உன்னைக் கண்ட நாள் முதல்

என் தூக்கம் போனது

தூங்கினாலும் உன் முகம்

என்னென்று சொல்வது

விழுந்தாய் என் விழியில்

கலந்தாய் என் உயிரில்

நொடியில்

*************************மீண்டும்
சந்திப்போம்*************************